# கண்ணன் திருக்கோயில்கள்



பேராசிரியர்
முனைவர் ந.க.மங்களமுருகேசன்

# கண்ணன் திருக்கோவில்கள்

## (KANNAN THIRUKKOVILKAL)

பேராசிரியர் முனைவர் **ந.க. மங்கள முருகேசன்**

*எம்.ஏ., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி., (வரலாறு) பி.எச்.டி.*

*(கல்வியியல்) வடமொழிப் பெருஞ்சான்றிதழ்*

வரலாற்றுப் பேராசிரியர், அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம்

சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை - 600 005

**தென்றல் பதிப்பகம்**

13/3, பீட்டர்ஸ் சாலை குடியிருப்பு

இராயப்பேட்டை, சென்னை - 600 014.

தொலைபேசி : 852 4346

# கண்ணன் திருக்கோவில்கள்
**(KANNAN THIRUKKOVILKAL)**

*பதிப்பு ஆண்டு : 2002*

*பதிப்புரிமை : **திருமதி. ம. இராஜம்**,* எம்.ஏ ., எம்.பில்., பி.எட்
13/3, பீட்டர் சாலை குடியிருப்பு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 852 4346

**விலை : ரூ. 90/-**

**நூல் கிடைக்குமிடங்கள் :**

***தென்றல் பதிப்பகம்***
13/3, பீட்டர் சாலை குடியிருப்பு
முதல் மாடி, (புதுக் கல்லூரி எதிரில்)
இராயப்பேட்டை, சென்னை - 14

***கிரி டிரேடிங் கம்பெனி***
மயிலாப்பூர், சென்னை - 4

***அமுத நிலையம்***
சென்னை - 14.

| | | |
|---|---|---|
| அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 352 |
| அச்சு | : | பதினொரு புள்ளி |
| தாள் | : | மேப்லித்தோ |

*கணினி அச்சு:*

**எஸ்.ஆர். கிராபிக்ஸ்**
75/29, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
தொலை பேசி : 820 7951

*ஒளி அச்சு :*

**ஜெய்பாணிக்கா பிரிண்டிங் மீடியா**
சென்னை - 600 014.

*Thanks to*

**THIRUMALA THIRUPATHI DEVASTHANAM**

*For its*

**FINANCIAL ASSISTANCE ON THE PUBLICATION OF THIS BOOK**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | அவதார புருடன் | 7 |
| 2. | கண்ணன் அவதாரம் | 22 |
| 3. | திருவட மதுரை | 38 |
| 4. | திரு ஆய்ப்பாடி | 52 |
| 5. | திருப்பிருதி (ஜோஷிமடம்) | 61 |
| 6. | திருத்துவாரகை | 65 |
| 7. | திருச்சாளக்கிராமம் | 81 |
| 8. | திருப்பதி | 90 |
| 9. | திருக்கண்ணங்குடி | 123 |
| 10. | திருக்கண்ண மங்கை | 135 |
| 11. | திருக்கண்ணபுரம் | 149 |
| 12. | திருக்கவித்தலம் | 163 |
| 13. | திருக்கோவலூர் | 166 |
| 14. | திருவழுந்தூர் | 177 |
| 15. | திரு அரிமேய விண்ணகரம் | 185 |
| 16. | திருவெள்ளக்குளம் | 192 |
| 17. | திருக்காவளம்பாடி | 195 |
| 18. | திருப்பார்த்தன்பள்ளி | 204 |
| 19. | திருப்பாடகம் | 208 |
| 20. | திருஅல்லிக்கேணி | 215 |
| 21. | திருத்தொலைவில்லி மங்கலம் | 227 |
| 22. | திருவில்லிப்புத்தூர் | 231 |
| 23. | மன்னார்குடி | 247 |
| 24. | காட்டு மன்னார் கோயில் | 256 |
| 25. | மதனகோபால் சுவாமி (மதுரை) | 274 |
| 26. | உடுப்பி | 286 |
| 27. | குருவாயூர் | 299 |
| 28. | கேரள மாநிலக் கண்ணன் கோயில்கள் | 317 |
| 29. | பூரி ஜெகந்நாதர் (பூரி) | 328 |
| 30. | கோபாலபுரம் ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி (சென்னை) | 335 |
| 31. | கண்ணன் கோவில் (பெங்களூர்) | 339 |
| 32. | பேளூர் | 342 |
| 33. | பண்டரிபுரம் | 349 |

# முன்னுரை

திருமாலின் திருஅவதாரங்கள் பத்தில் மக்கள் மனத்தில் நிலை பெற்றவை இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் ஆகும். திருமாலின் திரு அவதாரங்களில் இராமனையும், கண்ணனையும் வழிபடுவோரே அதிகமானவர் ஆவர். இவ்விரண்டுமே முழுமை பெற்றவை.

இராமனைப் போற்றும் அதே வேளையில் கண்ணனையே அதிகமாகப் போற்றித் துதிப்பவர்கள் அதிக அளவில் இருக்கக் காண்கிறோம். இரண்டு அவதாரங்களும் மானிட அவதாரங்கள். இரண்டிலும் மானிடனாகப் பெருமாள் சாதனை புரிந்தார்.

கண்ணன் அவதாரம் உயர்ந்ததா? இராமன் அவதாரம் உயர்ந்ததா? எனப் பட்டிமன்றம் நடத்துவது சிறுபிள்ளைத் தனமானது என்று கூறலாம். பெருமாள் இவ்விரு அவதாரங்களையும் வடபுலத்திலேதான் நிகழ்த்தினாலும், இவ்விருவருடைய வாழ்வில் இராமபிரான் வாழ்விலே தென்னகம் மிகுந்த இடத்தைப் பெறுகிறது.

ஆனால் அர்ச்சாவதாரத் திருத்தலங்களில் கண்ணன் அவதாரத் தலங்கள் பழமையானவை அவதார புருடர்களின் குறிப்பாக ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்விக்கப் பெற்றவையும் மிகுந்து காணப்பெறுவன தென்னகத்தில் தான் திருத்தலங்கள் பலவற்றில் வேணுகோபாலனாய், நவநீத கிருட்டிணனாய், கிருஷ்ணனாய்க் கோயில் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

திருவரங்கத்துப் பள்ளி கொண்ட பெருமாள் திருக்கோயிலினுள்ளேயே குழலூதும் இப்பிள்ளையின் மூன்று திருச் சந்நிதிகள் அமைந்துள்ளன. சமுதாய அடிப்படையில் பார்க்கிலும் இந்தியாவின் எப்பகுதி தனில் வாழ்வராயினும், ஆயர் குலத்தவராயின் பெருமானைக் கண்ணனாக வழிபட்டுக் கண்ணன் திருக்கோயில் அமைத்திருப்பதையும், கண்ணன் பெயரினைப் பிள்ளைகளுக்குச் சூட்டியிருப்பதும் கண்ணன் மேல் அவர்கள் கொண்ட மிகுந்த ஈடுபாட்டினைக் காட்டும்

''பிருந்தாவனமும் நந்தகுமாரனும் யாவருக்கும் பொது செல்வமன்றோ'' என்று ஒரு கவிஞர் பாட, ''கண்ணனின் உன்னத லீலையை நினைத்தால் உள்ளமே ஜில்லெனத் துள்ளாதா?'' ''கங்கைக் கரைத் தோட்டம் கன்னிப் பெண்கள் கூட்டம்'' ''கண்ணா கருமை நிறக் கண்ணா'' ''புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே'' ''நீல வண்ணக் கண்ணனே உன் எண்ணமெல்லாம்

நானறிவேன்'' எனப்பாடல் பலவற்றில் நாமும் சில துளிகள் காட்டலாம். 'அலைபாயுதே கண்ணா' என்று பாடி ஆனந்தித்த ஊத்துக்காடு வெங்கட சுப்பையரின் பாடல்கள் பல.

கண்ணனின் திருக்கோவில்களைப் பற்றிய, கண்ணனின் திருத்தலங்கள் பற்றிய முதல் முயற்சி இந்நூல். புகழ்பெற்ற கண்ணனின் ஆலயங்கள் பலவற்றைக் குறித்த தகவல் களஞ்சியம் இது. தனிச்சிறப்புடைய நூல் இது. உயர் சிறப்புடைய நூல் இது என்று கூறலாம்.

கேரள மாநிலத்தில் இன்றும் குழந்தைகளின் கழுத்தணியில் ஆலிலைக் கண்ணன் அழகுற விளங்குகிறான்.

பெருமாளின் ஒவ்வோர் அவதாரத்திற்கும் ஒரு குறை உண்டு என்பர். அதுபோல் கண்ணன் எடுத்த கிருஷ்ணாவதாரத்தில் துகிலிரியப்பட்ட திரௌபதிக்கு உடனடியாகத் ஓடோடி வந்து காக்காமல் தாமதித்து வந்ததும் ஒரு குறை என்றும் கூறுவர். ஆனாலும் காப்பாற்றி விட்டானல்லவா? அதனால் 'குறையொன்றும் இல்லாத கோவிந்தா' என்று புகழந்தாலும் குறைதான். குறையொன்றும் இல்லாதவன், கொஞ்ச நேரமேனும் வரத் தாமதித்துப் பாஞ்சாலியைப் பயம் கொள்ள வைத்து விட்டான்.

நேரில் பார்த்தும், பல்வேறு நூல்களைப் படித்தும் அரிய தகவல்களைத் திரட்டி வெளியாகும் இந்நூல் அனைவரும் விரும்பி ஏற்கும் நூலாத அமையும்.

ஒவ்வொரு திருத்தலங்களிலும் அத்திருக்கோயில்கள் பற்றிய அரிய, தகவல்கள், குறிப்புகளை ஆலய நிர்வாகிகள், பட்டாச்சாரியார்கள் வழங்கி உதவினர். காட்டுமன்னார் கோயில் சென்ற போது அவ்லூர் பட்டாச்சாரியார் அண்ணா பட்டாச்சாரியார், மதுரை மதனகோபால சுவாமி நிருவாகி ஆகியோர் அளித்த தகவல்கள் குறிப்பிடத்தக்கன முதலில் அவர்களுக்கு என் நன்றி.

இந்நூலைச் சிறந்த முறையில் கணினி வடிவமைத்த திரு. ***டி.சீனிவாசன்*** அட்டைப்படம் வடிவமைத்த திரு. ***ஜீவானந்தம்***, நூலை அச்சிடும் அச்சக உரிமையாளர் திருமதி ***கல்யாணி***, அவருடைய துணைவர் திரு. ***வீரபாகு சுப்பிரமணியன்***, என் மனைவி திருமதி ***இராஜம்***, மகன் ***இராஜேஷ் கந்தன்***, மகள் ***டாக்டர் தென்றல்*** ஆகியோருடைய உதவியும் துணையும் நூலாக்கத்திற்கு உரிய துணையாக அமைந்தன.

***இந்நூலினை வெளியிட நிதியுதவி நல்கிய அருளாளன் திருவேங்கடத்தான் திருக்கோயில் திருவாகத்திற்கு என் இதய நன்றி.***

**- ந.க. மங்களமுருகேசன்**

ஒன்று

# அவதார புருடன்

### பத்து அவதாரங்கள்

திருமாலின் திருஅவதாரங்களான இந்தப் பத்து அவதாரங்கள் குறித்து உள்ள தசாவதார ஸ்தோத்திரம் இது.

*ராமவதார ஸுர்யஸ்ய*
*சந்தாஸ்ய யது நாயக*
*ந்ருஸிம் ஹோ பூமி புத்ரஸ்ய*
*ஸௌம்ய ஸோம ஸுதஸ்ய*
*வாமநோ விபு தேந்தரஸ்ய*
*பார்கவோ பார்க்கவஸ்ய*
*கூர்மோ பாஸ்கர புத்ரஸ்ய*
*ஸை ம்ஹ கேயஸ்ய*
*ஸுகர கேதுர் மத்ஸ்யா வதாரஸ்ய*
*யோகா சாந் யேபி கேசரா*

| | | |
|---|---|---|
| ஸ்ரீ ராமா வதாரம | - | சூரயன |
| ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் | - | சந்திரன் |
| ஸ்ரீ நரசிம்மாவதாரம் | - | செவ்வாய் |
| ஸ்ரீ கல்கி அவதாரம் | - | புதன் |
| ஸ்ரீ வாமனாவதாரம் | - | வியாழன் |
| ஸ்ரீ பரசுராமாவதாரம் | - | சுக்கிரன் |
| ஸ்ரீ கூர்மாவதாரம் | - | சனி |
| ஸ்ரீ வாரஹாவதாரம் | - | இராகு |
| ஸ்ரீ மத்ஸ்யவதாரம் | - | கேது |
| ஸ்ரீ பலராமாவதாரம் | - | குளிகன் (சனியின் மகன்) |

## பாஞ்சராத்திர ஆகமம்

பாஞ்சராத்திர ஆகமம் திருமாலின் அவதாரங்கள் முப்பத்தொன்பது என்று கூறும். கபிலர், பரசுராமர் முதலானவர்கள் அவதாரங்களாகக் குறிக்கப் பெறினும் அவர்களை முழுமை உடைய அவதாரங்களாக வைணவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. வடமொழி பாகவதம் திருமால் அவதாரங்கள் பதினேழு எனக் கூறுகின்றது. விசுவக் சேந சம்கிதை அவதாரங்களை முப்பத்தாறாகக் கூறுகிறது. அகிர்புத்யயை சம்கிதை முப்பத்தொன்பது என்றே கூறும்.

## திருமாலின் திருக்குணங்கள்

திருமாலுக்குரிய குணங்களாகக் கூறப்பெறுவனவற்றுள் நான்கு குணங்கள் மிகச் சிறப்பாகப் போற்றப் பெறுபவை. அவை 1. ***வாத்சல்யம்*** (வாஞ்சை) 2. ***சுவாமித்துவம்*** (தலைமை) 3. ***சௌசில்யம்*** (செம்மை) 4. ***சௌலப்பியம்*** (எளிய இயல்பு) ஆகும்.

### வாத்சல்யம்

இந்த நான்குமே கண்ணனிடத்துப் பொருந்தியிருக்கக் காண்கிறோம். ***வாத்சல்யம்*** என்பது கன்றிடம் தாய்ப் பசு கொள்கிற அன்பாகும். திருமாலுக்குரிய இக்குணம் கண்ணன் அவதாரத்திலே மிகுதியாக வெளிப்படுகிறது. அருச்சுணனுக்குப் போர்க்களத்தில் அவனுடைய குற்றம் நோக்காது உண்மைப் பொருளின் சிறப்பை உணர்த்திய திறத்தால் அவனுடைய வாத்சல்ய குணம் விளங்குகிறது.

### சுவாமித்துவம்

***சுவாமித்துவம்*** என்பது கடவுளர்க்கெல்லாம் தலைமைத் தன்மை உடையவனாகும் சிறப்பைக் கூறுவது. இச்சிறப்பு அனைத்து அவதாரங்களிலும் வெளிப்பட்ட போதிலும் கண்ணன் அவதாரமே அத்தகைய சிறப்புக்கு உறைவிடமாக இருக்கிறது. பகவத் கீதையை உரைக்கையில் தன்னுடைய கடவுள் தன்மையை உணரும் பொருட்டாக அருச்சுணனுக்குப் பரத்துவத்தை விளக்கியமையால் இக்குணத்தின் சிறப்பு விளங்குகிறது.

### சௌசில்யம்

***சௌசில்யம்*** என்பது உயர்ந்தவன் தாழ்ந்தவனுடன் கொண்டிருக்கும் நட்பைக் குறிப்பது. இக்குணமும் கண்ணனுக்குரியது.

## சௌலப்பியம்

***சௌலப்பியம்*** எனும் குணம். இறைவனின் எளிமை நிலையைக் குறிப்பது. உலக மாயைக்குக் கட்டுண்ணாத திருமால் மனித வடிவில் வந்து தன் உடலை மக்களின் கண்களுக்கு இலக்காக்கிய நிலையே எளிமைக்கு எடுத்துக்காட்டு.

## அகநானூறு

கண்ணன் ஆயர்குடிப் பிறப்பாளன். ஆயர் மகளிரோடு நீராடும் போது அவர்களுடைய உடைகளை எடுத்துக் குருந்தம் ஏறியதை ஆழ்வார்கள் பாடுகின்றனர். இந்நிகழ்ச்சி அக நானூற்றில் இடம் பெற்றுள்ளது. புல்லாங்குழலின் சிறப்பைப் பெரியாழ்வார் எடுத்துரைக்கிறார். வில்லிபுத்தூரார் பாரதமும் பாரதப்போருக்குக் கண்ணனே காரணம் என்று கூறுகின்றது. பாண்டவர்களுக்கு உதவியாகக் கண்ணன் தூது நடந்த செய்தி சிலம்பில் இடம் பெற்றுள்ளது. பாரதப் போருக்குப் பின் துவராபதி நகர் அடைந்து அரசாண்டதைப் பாகவதம் கூறுகிறது. கண்ணனைத் 'துவராபதிக்' காவலன் என்று ஆழ்வார்கள் உரைக்கின்றனர்.

## பரிபாடல்

இறைவனின் தசாவதாரங்களை வடமொழி இலக்கியங்கள் மட்டுமல்லாமல் சங்க இலக்கியமான பரிபாடலும் குறிப்பிடக் காண்கிறோம்.

வராக அவதாரத்தை இரண்டாம் பரிபாடல் ''கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய ஊழி ஒரு வினை உணர்த்தலின்'' என்று குறிப்பிடுகிறது. பலராம அவதாரத்தை ''நீயே வளையொரு புரையும் வாலியோற்கு அவன் இளையன் என்போர்க்கு இளையை'' எனக் குறிப்பிடக் காண்கிறோம்.

திரிவிக்ரம அவதாரத்தை 'அவற்றுள் கீழ் ஏழுலகமும் உற்ற அடியினை' என்று குறிப்பிடுகிறது பரிபாடலின் மூன்றாம் பாடல். நான்காம் பரிபாடல்,

*''நின்புகழ புகைந்த நெஞ்சின் புலர்ந்த*
*சாந்தின் பிடுங்கலாதன் பல பல பிணி வட*
*வலந்துழி...உறு வரை மார்பின் படிமதன்*

*சாம்ப ஒதுங்கு...வெடிபடா ஒடிதூண்*
*தடியொரு...வகிர் வாய்த்த உகிரினை''*

என்று நரசிம்மவதாரத்தைப் பேசுகின்றது.

## ஆழ்வார்கள்

ஆழ்வார்களின் பாடல்களிலிருந்து கண்ணனின் மூன்று தேவியரைக் குறித்து அறியமுடிகிறது. ருக்மிணி, சத்தியபாமா, நப்பின்னை ஆகிய மூவரைப் பற்றிய செய்திகளையே ஆழ்வார்களின் பாடல்கள் வழி அறிந்தாலும் நப்பின்னை பற்றிய குறிப்புகளே சிலம்பு, மேகலை, சிந்தாமணி ஆகியவற்றில் காணப்படுகின்றன. தமிழில் சங்க கால முல்லைப் பாட்டு வாமனவதாரச் செயலையும், அகநானூறு கண்ணன் லீலைகளைக் கூறுவதிலிருந்து திருமாலின் அவதாரங்கள் பற்றிய கொள்கையை உணரலாம். பிள்ளை லோகாசாரியர் நப்பின்னையை நீளாதேவியின் அவதாரமாகக் கொள்கிறார்.

## இரு அவதாரங்கள்

இந்தியத் திருநாடு முழுமையிலும் மக்கள் பெரிதும் போற்றி வழிபடும் திருமாலின் இரு அவதாரங்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமாயின் அவை இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் ஆகும். இராமபிரானைப் பாடுகையில் ஆண்டாள் 'மனத்துக் கினியன்' என்று கூறுவார். கண்ணன் கண்ணுக்கு இனியவன். மக்களின் கருத்தைக் கவர்ந்தவன்.

## கிருஷ்ணாவதராம்

இன்றைக்கு உலகம் முழுவதும் போற்றிப் பெருமை கொள்ளும் அவதாரமாக விளங்கும் ஒரே அவதாரம் கிருஷ்ணாவதாரமாகும். இந்திய மண் கடந்தும் எந்நாட்டு மக்களுக்கும் பிடித்த, இதயத்தை ஈர்த்த திரு உருவம் கண்ணனின் திரு உருவம். அயல் நாடுகளிலும் புகழ்பெற்று விளங்குவது, மேலை நாட்டவர்களையும் ஈர்த்துள்ளது கிருஷ்ணாவதாரமே. கண்ணன் வழிபாட்டை ஆங்கிலத்தில் "Sri Krishna Cult" என்பர்.

## தர்மம்

ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் ஒப்பற்ற ஈடு இணையற்ற அவதாரம். அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட ஸ்ரீ மந் நாராயணன்

எடுத்த அவதாரம் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் ஆகும். கண்ணனின் அவதாரம் ஒரு புரட்சியான அவதாரம் என்பர்.

### கீதை

தேரோட்டியாய் விளங்கி அருச்சுனனுக்கு வழிகாட்டி 'ஸ்ரீ மத்பகவத் கீதை' எனும் அமுத ஊற்றைப் பெருக்கி ஓங்கி உலகளந்தவன் உருவத்தை அருச்சுணனுக்குக் காட்டி உயர்ந்த அவதாரம் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்.

### ஒவ்வொரு வகையின

பாலகிருஷ்ண அவதாரம் முதல் ஓங்கி உலகளந்த உத்தமனாய் நின்றவரை கண்ணன் பல்வேறு வடிவங் காட்டியவன். மற்ற அவதாரங்களில் கண்ணனுக்கு ஒரு வடிவம் தான். பலராமன் எனில் பலராமன் மட்டும் தான். இராமன் எனில் சீதாராமன் தான். வாமனன் எனில் வாமனன் மட்டும் தான். ஆனால் கண்ணன் மாயக் கண்ணனல்லவா? திருத்தலங்கள் தோறும் ஒவ்வொரு திருக் கோலங்கள் காட்டுகிறான்.

ஆயர்பாடிக் கண்ணன், துவாரகை மன்னன், பாண்டவதூதன், பார்த்தசாரதி, ஆமருவியப்பன் அரவிந்தலோசனன், ஆண்டாள் மணாளன் என இப்படிப் பல தோற்றங்கள் காட்டுகிறான்.

### அர்ச்சாவதாரம்

ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த கண்ணனின் திருத்தலங்களிலும் பல வடிவங் காட்டுகிறான். கண்ணன் வாழ்வின் விளையாடல்களை திரு அர்ச்சாவதாரமாக அன்பர் மகிழ ஆலயங்கள் தோறும் காண்கிறோம். ஆம்! சிலை வடிவில் உயிரோட்டமாய் விளங்குகிறான்.

பால கிருஷ்ணன் முதல் மீசை வைத்த பார்த்த சாரதி - தேரோட்டி மகன் வரை திருத்தோற்றங்கள்தாம் எத்தனை? எத்தனை? என்று வியக்கிறோம்.

### திசைகள்

அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட, துஷ்ட நிக்ரஹ, சிஷ்ட பரிபாலனத்திற்காக, மகா அவதாரத்தை மேற்கொண்ட

கண்ணபெருமான், நூற்றி எட்டுத் திவ்யதேசங்களிலும் வடதிசை, தென்திசைகளை நோக்கி நின்று சேவை சாதிக்காமல், சூரியன் தோன்றும், மறையும் கிழக்கு, மேற்குத் திசைகளை நோக்கியவாறு, தர்மத்தின் தோற்றம், அதர்மத்தின் வீழ்ச்சி ஆகியவைகளை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் தரிசனம் வழங்குகிறார். கண்ணன் அவதாரமே திருமால் எடுத்த அவதாரங்களில் இறுதியில் அமைவது எனவும் கூறுவர்.

நூற்றியெட்டுத் திவ்ய தேசங்களிலும் பதினெட்டுத் திவ்ய தேசங்களில் கிழக்கு நோக்கி நின்றும், ஏழு திருத்தலங்களில் மேற்கு நோக்கி நின்றும் சேவை அளிக்கிறார். தர்மத்தின் வாழ்வினையும், தோற்றத்தினையும் பதினெட்டுத் திருத்தலங்களிலும் நினைவுபடுத்தும் கிழக்குத் திசையை நோக்கிச் சேவை சாதிக்கிறார். ஏழு திருத்தலங்களிலும் அதர்ம அழிவை நினைவுபடுத்தும் மேற்குத் திசையிலும் சேவை சாதிக்கக் காண்கிறோம்.

கண்ணபெருமான் தேவகி மைந்தனாய் அவள் திருவயிற்று உதித்துச் சிறைக்கூடத்திலுள்ளே ஒன்பதாவது அவதாரமாக அவதரித்தார்.

## *அஷ்டாத்யாயி*

கண்ணனின் வழிபாடு மிகப் பழமையானது. வடமொழிக்கு இலக்கணம் வகுத்திட்ட பாணினியின் ***அஷ்டாத்யாயி*** எனும் நூல் கண்ணன் வழிபாட்டைக் குறிப்பிடுகிறது. உபநிடதங்களில் சாந்தோக்கிய உபநிடதம், 'தேவகியின் புதல்வன் கிருஷ்ணன்' எனவும் சிறப்பித்துக் கூறுகிறது.

வேதகாலம் முதல் வண்டமிழ்த் தூப்புல் வேங்கடவன் தேசிக சுவாமிகள், வரை - அவருடைய யாதவாப்யுதயம் வரை கண்ணனைப் போற்றாத இலக்கியங்களே குறைவு. ஜெயதேவர் பஜகோவிந்தம் பாடினார். மீரா உளம் உருகப்பாடினார். ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் 'அலைபாயுதே' என அழியாப்புகழ் பாடல் பாடினார். இப்படிப் பாடியவர் பட்டியல் நீளமானது. ஜெயதேவர், ஆண்டாள், மீரா, நாராயண தீர்த்தர், சைதன்ய மகான், முதல் பாரதி, கண்ணதாசன் வரை பலராவர்.

## கல்வெட்டுகள்

கி.மு. முதல் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் கண்ணபிரானுக்குத் திருக்கோயில் இருந்ததையும், தினம், தினம் தவறாது வழிபாடு நடைபெற்றதையும் எடுத்தியம்புகின்றன. இந்தியத் திருநாட்டில் மட்டுமல்லாது இந்துச் சமய வேர் ஓடிய எல்லா மண்களிலும் பாரதக் கதை புகழ் பெற்று விளங்கியது. கடல் கடந்து ஜாவா முதலிய தீவுகளிலும் பெருமை பரவி விரிந்து, கி.பி. 605 ஆம் ஆண்டில் ***'கிருஷ்ணாயனம்'*** எனும் நூலும் எழுந்தது.

## கட்டியவன்

கண்ணன் கோபியரைக் கட்டிய போது அவர்கள் 'எங்களை விட்டு விடு' எனக் கெஞ்சிய போது, 'என் தாய் எனக்குக் கட்டிப்போடத்தான் கற்றுக் கொடுத்தாள்' என்றானாம். கண்ணனின் திவ்யரூபத்தில் லயித்தவர்களுக்கெல்லாம் கோபியராய்ப் பிறக்க வேண்டும் எனப் பேரவாக் கொள்ளச் செய்யுமாம். சிலரைப் பைத்தியமாகவும் ஆக்கியிருக்கிறது. இடுப்புக் கோவணத்தையும் உதறிய சுகப்பிரம்ம ரிஷியும் அப்பிரேமையில் சிக்கிய ஒரு பகவத் பைத்தியம்தான். பகவானின் ஒவ்வோர் அவதாரமும் பகவானுடைய ஓர் அம்சத்தைத் தான் வெளிக்காட்டும். ஆனால் கண்ணனோ போகி, யோகி எனும் இரண்டு தத்துவங்களையும் புரிய வைப்பான்.

## நால்வகை

ஆலயங்களில், இவ்வகைத் திருக்கோலங்களில் அமைக்கப்படும் திருமால், வடிவங்கள் ***யோகம், போகம், வீரம், ஆவிசாரிகம்*** எனும் வகைப்படும்.

கண்ணபிரான் யோக, போக, வீர மூர்த்தியாக விளங்குகிறார். கண்ணபிரானாக அவதாரம் செய்த மாயவன் நின்ற, வீற்றிருந்த, கிடந்த கோலத்தவராகச் சேவை சாதிக்கிறார். பெரும்பாலான திருத்தலங்களில் கண்ணபிரான் அவதாரத்தில் நின்ற கோலத்தில் தான் சேவை சாதிக்கிறார். திருவில்லிபுத்தூரில் கிடந்த கோலத்திலும் திரு நாங்கூர் அரிமேய விண்ணகரத்திலும், இரட்டைத் தொலை வில்லி மங்கலத்திலும், திருப்பாடகத்திலும் வீற்றிருந்த கோலத்திலும் சேவை சாதிக்கிறார்.

## அவதாரத் திருத்தலங்கள்

கண்ணபிரான் அவதாரத் தலங்களான திருவல்லிக்கேணி திருப்பாடகம், திருநாங்கூர் - அரிமேய விண்ணகரம், திருவழுந்தூர், திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ண மங்கை, திருக்காவளம்பாடி, திருக்குளந்தை, இரட்டைத் தொலை வில்லி மங்கலம், திருப்பரிதி, திருவாய்ப்பாடி, திருவடமதுரை, திருவேங்கடம், திருவெள்ளக்குளம், திருவில்லிப்புத்தூர் ஆகிய திருத்தலங்களில் கிழக்கு நோக்கிச் சேவை சாதிக்கிறார்.

திருத்துவாரகை, திருப்பார்த்தன் பள்ளி, திருப்பேர் நகர் ஆகிய திருத்தலங்களில் மேற்கு நோக்கிக் கண்ணபிரான் சேவை சாதிக்கிறார்.

திருவடமதுரை, திருவாய்ப்பாடி, திருத்துவாரகை, திருச்சாளக்கிராமம், திருக்கண்ண மங்கை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கவித்தலம், திருக்கோவலூர், திருநாங்கூர், அரிமேய விண்ணகரம், திருவழுந்தூர், திருக்காவளம் பாடி திருவெள்ளக்குளம், திருப்பார்த்தன் பள்ளி, திருப்பாடகம், ஆகியன திருவேங்கடம், திருத்தொலைவில்லிமங்கலம், திருவில்லிபுத்தூர் கிருஷ்ணாவதாரம் காட்டும் திவ்ய தேசங்கள் ஆகும். இப்பதினெட்டிலும் அர்ச்சாவதாரத் தோற்றம் காணலாம். சிலை வடிவில் ஜீவனுள்ள இறைவன் உலக அமைதியினை நிலை நாட்டப் பெருமாள் எடுத்த ஸ்ரீ கிருஷ்ணாவதாரக் கூறு கொண்ட எம்பெருமான் குடி கொண்ட திருத்தலங்கள் எனில் இப் பதினெட்டுத் திருத்தலங்களை மட்டுமே கூறவேண்டும். அவையே கிருஷ் ணாவதார அம்சத்தினை முழுமையாகக் கொண்டவை என்பதுடன் அவதாரச் சிறப்பு ஒவ்வொன்றினையும் வெளிப்படுத்துபவை.

## பெயரில் ஊர்கள்

**கண்ணன் வடபுலத்தில் பிறந்து வளர்ந்த போதிலும் அவன் பிறந்த வடமதுரை, மன்னனாக விளங்கிய துவாரகாபுரி ஆகியவற்றிற்கும் கூடக் கண்ணன் பெயர் இல்லை. ஆனால் தமிழகத்தில் சமயபுரத்தின் பழைய பெயர் கண்ணனூர்தான். கிருஷ்ணன் கோயில், கிருஷ்ணாபுரம், கோபாலபுரம், கோவிந்தபுரி என்று கண்ணன் பெயர் கொண்ட ஊர்களும் கண்ணனூர் கொப்பம், கண்ணம்பாடி, எனும் பெயருடைய ஊர்களும் பல உள்ளன.**

### நிறைவு

கேரளத்தில் ஒரு கண்ணனூர் உள்ளது. ஊர்ப் பெயர்கள் மட்டுமல்லாது கண்ணனின் பெயர்களும், அவதாரப் பெயர்களும் நம் மண்ணில் ஏராளம், கண்ணனாகப் பிறந்த அவதார புருடன் கோகுலத்தில் பிறந்த நீலமேக சியாமள மேனியன், கண்ணன் வேடன் உலுபதன் என்பவனின் நஞ்சு கலந்த அம்பினால் திருப்பாதத்தில் தாக்கப் பெற்றுப் பரமபதப் பெருவாழ்வில் சங்கமிக்கக் கிருஷ்ணாவதாரம் மானுட வாழ்வு போல முடிவுற்றது. திருத்துவார்ரகையில் தான், கிருஷ்ணாவதாரம் நிறைவுற்றது.

பேரன், பேத்தி பிள்ளைகுட்டிகளுடன் வாழ்ந்து மறைந்த கண்ணனின் மானிட அவதாரம் நிறைவுற்றது.

### பராசரரின் விளக்கம்

''ஆழ்வார்கள் யாவரும் கிருஷ்ணாவதாரத்தின் பால் அதிக ஈடுபாடு கொண்டது ஏன்?'' என்று நஞ்சீயர் - பராசரரிடம் கேட்க அவர் அதற்கான விளக்கம் அளித்தார்.

''ஒருவனுக்கு உண்டான துக்கம் சில நாட்கள் கழிந்தால் பொறுக்கலாம், அணித்தானால் ஆறியிருக்கப் போகாதே அன்றோ? அப்படியே அல்லாத அவுதாரங்களைப் போல் அன்றிக்கே சமகால மாகையாலே' ஒரு செவ்வாய் கிழமை முற்படப் பெற்றி லோம் பாவியேம்! பல்லிலே பட்டுத் தெறிப்பது! என்னும் முடிவாலே வயிறு எரிதலாலேயாயிருக்கும்'' என்றார்.

மேலும் அவர் ''இராமாவதாரத்தில் தகப்பன் சம்பரனைக் கொன்றவனாய் ஏகவீரனாய் இருப்பான். ஒருவன் பிள்ளைகளோ அன்புலிகள். குடிதானே குறும்பரான பகைவர்களை அறுதிருப்ப தொருகுடி, இவையெல்லாம் மிகையாம் படிக்குணத்தாலே நாடுகளையெல்லாம் அடிமையாக்கிக் கொண்டிருப்பார்கள். ஆகையால் அத்தலையில் எதிரிகள் என்ற சொல்லும் இல்லை. இத்தலையில் அஸ்வன் அன்றிக்கே ஏமப்பன் ஒரு சாது விருத்தன், பிறந்தது கம்சனின் சிறைக்கூடத்திலே. வளர்ந்தது அவனகத்து அருகே பிருந்தாவனத்திலே எழும் பூண்டுகளகப்பட்ட அசுரமாமாயிருக்கு. இரட்சகரானவர்கள் (நம்பி மூத்தபிரான்) ஓர் அடி தாழ நிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று. இவன்தன் படிகள் இருப்பன். அப்படியானால் வயிறு எரியாதே செய்வது என் இவர்கள்'' என்று அருளிச் செய்தார்.

### எளியன்

கர்மயோகியாகவும், ஞானயோகியாகவும் விளங்கியவனான கண்ணனின் வாழ்வின் ஒவ்வோர் அசைவும், ஒவ்வொர் இயக்கமும் எந்த விதப் பலனையும் கருதாமல் நிறைவேறியுள்ளன. கண்ணன் காட்சிக்கு எளியன், மாட்சியில் உயர்ந்தவன், எளியவருக்கு இனியன்.

கோபியர்களிடம் குழந்தையாகக் கொஞ்சித், தோழனாகத் தழுவிப் பழகிய போதும் முக்தி நெறியைக் காட்டும் மூவா முதல்வனாக ஞான உபதேசம் செய்தான்.

### பற்றற்றவன்

தன் தலைவன் தனக்கு மட்டுமே சொந்தம் என ராதை எண்ணினாள். ஆனால் ஆட்டுவித்தவர் ஆட்டுதலுக்கு ஆடிய பம்பரம் அவன். அவன் இராதைக்கு மட்டுமா? இராதையின் உள்ளம் மட்டுமேதான் கண்ணனுக்குச் சொந்தம். தன் அவதாரத்திற்குத் தனக்கு விதிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு செயல்களையும் பற்றற்ற நிலையில்தான் கண்ணன் நடந்து காட்டி இருக்கிறான். ஆனால் அதே கண்ணன் ஒரு பிரமச்சாரியாக, இல்லற தர்மத்தவனாக, முழுத்தவ ஞானியோகியாக விளங்கினான்.

***''கிருஷ்ணனின் பேச்சைக்கேள்! இராமனைப் போல் நட! கிருஷ்ணனைப் போல நடக்காதே!*** எனும் பழமொழியும் உலக நடப்பில் வழங்கி வருகிறது.

### அதர்ம வீழ்ச்சி

அதர்மத்தை, அதர்மங்களால் அறுத்துக் கௌரவர்கள் பாண்டவர்களைச் சேர்ந்தவர்கள், தன்னைச் சேர்ந்தவர்கள் என்ற பாரபட்சமில்லாமல் அனைவரையுமே அழித்து ஒழித்து - கர்மம், கடமை, கடவுள், ஆத்மா, தர்மம், அதர்மம், ஆகியவைகளை அணுஅணுவாகச் செயல் முறைகளால் நிருபணம் செய்து காட்டிய அற்புதமான அவதாரம் ஸ்ரீ கிருஷ்ண அவதாரம்! என்பர்.

''தர்மங்களுக்குத் தானே வாதியாகி, தனக்குத்தானே பிரதிவாதியாகி, தானே தனக்குச் சாட்சியாகி, தானே நீதிபதியாகி, தானே தர்மமாகி, தானே தர்மத் தராசும், தர்மப் பகவும் ஆகி-பிரதி பலன்களை எந்தச் சூழ்நிலைகளிலும் கருதாது, கடமையைச் செய்து

தன்னைத் தானே வென்று, தன்னையும் உலகத்தையும் உணர்ந்த கர்ம ஞான யோகங்களின் ஆதி அந்தமற்ற எம்பெருமானின் அவதாரம் தான் கண்ணன்!'' என்றும் கூறுவர்.

## திவ்ய தேசங்களில்

அந்தக் கண்ணனை இன்று பல்வேறு திருத்தலங்களில் திருக்கோயில்களில் காண்கிறோம். இதில் குறிப்பிடத் தகுந்த கூறு ஒன்றினை இங்கே சுட்டிக் காட்டிடலாம். 108 திவ்ய தேசங்களில் கண்ணனின் திருஅவதாரத் தோற்றத்தில் 'பரசுராம சேஷத்திரம்' என்று கேரள மாநிலமே கூறப்பெற்ற போதிலும், கேரள மாநிலத் திவ்யதேசம் எதிலும் கண்ணபிரானின் திருத்தோற்றத் திவ்ய தேசம் இல்லை. வடமதுரையில் பிறந்த அந்த மாயக்கண்ணன் குருவாயூர் திருத்தலத்தில் குழந்தைக் கண்ணனாக விளங்கினாலும், ஆழ்வார் களினால் மங்களாசாசனம் செய்யப்படாத திருத்தலம் அது.

கேரளமாநிலத்தில்தான் எத்தனை வகையான கண்ணன் திருக்கோயில்கள்? கருநாடகத்திலும் பல திருக்கோயில்கள் அமைந்துள்ளன. கேரளமாநிலத்தில் குருவாயூரப்பன் திருக்கோயில் அந்த மண்ணின் மைந்தர்களின் பேரன்பிற்கும், பக்திச் சிறப்பிற்கும் புகழ் பெற்று விளங்கக் காண்பது போலவே, கருநாடக மாநிலத்தில் மேற்குக் கரையில் உடுப்பியில் கிருஷ்ணன் திருக்கோவில் தினமும் திருவிழாக் கோலம் கொண்டு விளங்குகிறது. தமிழகத்தில் பெரிய கோயில் வரிசையில் வைத்து எண்ணத்தக்கதாக விளங்கும் கண்ணன் கோயில்கள் இராஜ மன்னார்குடி இராஜகோபால சுவாமி திருக்கோயில், காட்டு மன்னார்குடி இராஜ கோபாலன் திருக்கோயில் முதலியன ஆகும்.

இவை ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்படாதவை.

## மூன்று நிலை

108 திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் திருமால் மூன்று நிலைகளில் பக்தர்களுக்குச் சேவை சாதிக்கிறார். அவைகள் நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்கள் ஆகும்.

அதாவது பரம்பொருளான எம்பெருமான் ***அமர்ந்த திருக்கோலத்தில்*** அனைத்து உலகங்களையும், அவ்வுலக இயக்கக்

காரணிகளான தேவர்களையும், அதிதேவதைகளையும் படைக்க எண்ணிய உடனே எழுந்து ***நின்றார்***. அவ்வளவிலே அனைத்தும் படைக்கப் பெற்றுவிட்டன. இவ்வியக்கமானது தொடர்ந்து முறை வழுவாது செயல்படவே ***நீடுதுயில்*** கொண்டு, அத்துயிலும் அறிதுயிலாகக் கொண்டுள்ளார்.

## ஐந்து வகை

திருமாலின் ஐந்து வகையான பிரதிட்டைகளைப் பற்றி பாஞ்சராத்ர ஆகமத்தில் கீழ்க்கண்டவாறு காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்தாபனா | - | திருமாலை நின்ற திருக் கோலத்தில் அமைத்துத் தொழுவது |
| 2. | அஸ்தாபனா | - | அமர்ந்த திருக்கோலத்தில் அமைப்பது |
| 3. | ஸமஸ்தாபனா | - | பள்ளி கொண்ட வடிவில் அமைப்பது |
| 4. | பரஸ்தாபனா | - | வாகனங்களில் பற்பல வடிவில் அமைப்பது |
| 5. | பிரதிஷ்டானா | - | சன்மார்ச்சையுடன் அமைப்பது |

## அந்தமிலா உதவி

திருமகள் கேள்வனான திருமால், மானிடரை நல்வழிப் படுத்தச் செய்யும் உதவிகள் எண்ணிலடங்கா என்பதனை ***''அறியாத அருளாழிப் பெருமாள் செய்யும் அந்தமிலா உதவி எல்லாம் அளப்பார் ஆரே''*** என்று கூறி ஆழ்வார் வியக்கிறார்.

## கீதை விளக்கம்

> ''தான் எடுக்கும் அவதாரங்களின் தத்துவத்தைக் கண்ணனே கீதையில் விளக்கக் காண்கிறோம். தன் அவதாரங்கள் எல்லாம் சத்யம், அவை மெய்யாகவே நடந்தனவேயன்றி மாயையல்ல. அவதாரங்களிலும் தன் இயற்கைத் தன்மையுடனேயே விளங்குகின்றான். எடுக்கும் அவதாரங்கள் தேவர்கள், மனிதர்களைப் போல் கர்மத்தால்-வினைப்பயனால் ஏற்படு பவையன்று; அவருடைய திவ்ய சங்கல்பத்தாலேயே ஏற்படுபவை.

அவதாரத் திருமேனியும் நம்மைப் போன்று பஞ்ச பூதங்களால் ஏற்படுவதன்று; சுத்த சத்வமயமானது. எப்பொழுது அதர்மம் மேலோங்குகின்றதோ, அப்பொழுதெல்லாம் அவதாரம் எடுக்கிறான். பெருமான் சாதுக்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலை நிறுத்தவும் யுகந்தோறும் அவதரிக்கிறான்''

என்கிறார், ஒப்பிலியப்பன் சந்நிதி உபயவேதாந்தி வ.ந. கோபால தேசிகாசார்யர்.

## வேதக் கூற்று

இறைவன் எடுக்கும் அவதாரங்களைப் பற்றி வேதமும் பல இடங்களில் குறிப்பிடுகிறது. ***''பிறப்பிலியாய் இருந்த போதிலும் பலபடியாகப் பிறக்கிறான்''*** என்கிறது வேதம். இதனை ***'அஜாயமா நோ பஹு¬தா விஜாயதே'*** எனப் புருஷசுக்தம் வடமொழியில் உரைக்கிறது. வேதம் ***'பிதா வுத்ரேந பித்ருமாந் யோனியோ நௌ*** 'அதாவது எல்லாருக்கும் தந்தையான அரசன் தன் மகன்களில் ஒருவனைத் தந்தையாகக் கொண்டு பல பிறப்புகளும் எடுக்கிறான்' என்று குறிப்பிடக் காண்கிறோம். அவன் அவதாரங்களை எடுத்து விளங்குகின்றான் என்பதை ***'ஸ உத்ரேயாந் பவதி ஜாய மாநா'*** என்கிறது.

## தேவகி மகன்

சாந்தோக்ய உபநிஷத் கண்ணனுடைய அவதாரத்தையே தெளிவாகக் கூறுகின்றது. தேவகியின் மகன் கிருஷ்ணன் என்பதனை, 'க்ருஷ்ணாய தேவகீ புத்ராய உக்த்வா' என்கிறது.

## நம்மாழ்வார்

''நாம் கர்மத்தின் பயனாகப் பிறவிகள் பல எடுக்கின்றோம், பக்தவச்சலனான எம்பெருமானோ நம்மைக் காப்பதற்காகப் பல பிறப்புகள் எடுக்கின்றான்'' என்கிறார் நம்மாழ்வார்.

## முழுமை

திருமாலின் அவதராங்களில் முழுமையான அவுதாரம் கண்ணன் அவதாரமே என்பதனை அவ்வவதாரத்தின் வாழ்வும் செயலும் அதனை வலியுறுத்துகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை கண்ணன்

வாழ்வு கூறப் பெறுவதும் அதற்குக் காரணமாக அமையும். அதனால்தான் இந்த அவதாரம் உணர்த்தும் உட்பொருளும் நல்லுரைகளும் பெரிதும் மதிக்கப் பெறுகின்றன. இராமன், கண்ணன் அவதாரங்களை ஒப்பிடும்போது அவை ஒன்றின் ஒன்று உயர்ந்து விளங்குகின்றன.

திருமாலின் பத்து அவதாரங்களில் இராமன், கண்ணன் ஆகிய இரு அவதாரங்களையே ஆழ்வார்கள் மிகுதியாகப் பாடியுள்ளா கள். மனித இயல்புகளை இராமாவதாரமும், இறை இயல்புகளைக் கண்ணன் அவதாரம் எடுத்துரைக்கின்றன.

## பட்டி மன்றம்

இராமனுடைய பெருமை சிறந்ததா அல்லது கிருஷ்ணனுடைய பெருமை சிறந்ததா என்று பட்டி மன்றம் நிகழ்ந்ததாகப் பெரியாழ்வார் கூறுகின்றார். இராமன் பெருமையையும் கண்ணன் பெருமையையும் மாறி மாறிப் பெண்கள் பாடினர் என்பதையும் பெரியாழ்வார் திருமொழி கூறுகிறது.

பெரியாழ்வார் கண்ணபிரானின் திருநீராடலுக்கு அருளிய பாடல்தாம் திருமஞ்சனைக் காலத்தில் அனுசந்திக்கப் படுகிறது. சுவையான பால் இது. பெருமாள் திருமஞ்சனைக் காலத்தில் இப்பாடல் இசை கேட்டுப் பெருமானின் திருமஞ்சனம் காண்பது இனிய அனுபவம்.

*வெண்ணையளந்த குணுங்கும் விளையாடும் புழுதியும் கொண்டு*
*திண்ணென இவ்விரா உன்னைத் தேய்த்துக் கிடக்கநாள் ஒட்டேல்*
*எண்ணெய்ப் புளிப்பழங் கொண்டு இங்கு எத்தனை போது மிருந்தேன*
*நண்ணரியபிரானே! நாரணா! நீராட வாராய்.*

*கன்றுகளோடச் செவியில் கட்டெறும்பு பிடித்தால்*
*தென்றிக் கெடுமாகில் வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன்*
*நின்றமாமரம் சாய்த்தாய்! நீ பிறந்த திருவோணம்*
*இன்று நீ நீராடவேண்டும் எம்பிரோனோ டாதே வாராய்*

*பேய்ச்சி முலையுண்ணக்கண்டு பிள்ளையும் நில்லாது என்னெஞ்சும்*
*ஆய்ச்சியரெல்லாரும் கூடி அழைக்கவும் நாள் முலை தந்தேன்*
*காய்சின நீரோடி நெல்லி கடாரத்தில் பூரித்து வைத்தேன்*
*வாய்த்த புகழ் மணிவண்ணா! மஞ்சனமாட நீ வாராய்*

கஞ்சன் புணப்பினில் வந்த கடிய சகடம் உதைத்து
வஞ்சப் பேய்மகள் துஞ்ச வாய்முலை வைத்த பிரானே!
மஞ்சளும் செங்கழு நீரின் வாசிகையும் நாறு சாந்தும்
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் அழகனே! நீராடவாராய்

அப்பன் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து
சொப்பட நாள் சுட்டுவைத்தேன் தின்னறுதியேல் நம்பி
செப்பின மென் முலையார்கள் சிறுபுறம் பேசிச் சிரிப்பர்
சொல்பட நீராடவேண்டும் சோத்தம் பிராளிங்கே வாராய்



இரண்டு

# 2. கண்ணன் அவதாரம்

**ம**னிதர்கள் மண்ணுலகில் தோன்றுவதைப் ***பிறப்பு*** என்பர்.

இறைவன் மண்ணுலகில் தோன்றுவதை ***அவதாரம்*** என்பர்.

நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டவும் அறச்சினம் கொண்டு அவதரிப்பின் நோக்கத்தை நிறைவேற்றுபவன் ஆண்டவன். இதற்கு ஆதாரம் கீதையில் கண்ணன் உரைத்த

*பரித்ராணாய சாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்*
*தர்ம ஸமஸ்தாப நார்தாய ஸம்பவாமி யுகே யுகே!!*

எனும் வாசகங்கள் சான்றாகும்.

கண்ணன் அவதாரத் திருத்தலங்களின் பெருமையினை அறியும் முன்னர் கண்ணன் மானுடனாய் அவதரித்துப் புரிந்த லீலா வினோதங்களை இவ்வியலில் காண்போம்.

### பூரணம்

கிருஷ்ணாவதாரம் முழுமையானது என்பதனைச் சுகர்பாகவதம் ***'பூரணம் பிரும்ம சதாதனம்'*** என்கிறது. அதனாலேயே ***'கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்'*** என்றனர்.

இராமாவதாரத்திற்கும், கிருஷ்ணாவதாரத்திற்கும் என்ன வேறுபாடு? இராமாவதாரம், ஆஞ்சநேயர், இலக்குவன், குகன், சபரி என அடியவர்களின் சேவையைப் பெற எடுத்த அவதாரம். கிருஷ்ணாவதாரமோ பகவான் தன் அடியவர்களுக்குத் தன் சேவையை அளிக்க எடுத்த அவதாரம். இதனையே நம் பாரதி, நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே சேவகனாய் என்று குறிப்பிட்டார்.

'கிருஷ்ணா, முகுந்தா, முராரி, கோகுலவாசா, கோபிகா ஸ்மரணா, முரளீதரா, மோகனக் கிருஷ்ணா' என்று அழைப்பதிலும் 'கண்ணா, கண்ணா' என்று அழைப்பதிலும், பொருள் உண்டு.

## பொருள்

கண்ணன் எனும் சொல்லுக்கு அன்றலர்ந்த செந்தாமரை இதழ் ஒத்த ஒளி பொருந்தியவன் என்பதே பொருள். கண்ணின் கருமணி என்பது பொருள். நம் ஒளிவிளக்கு என்பது பொருள். ***'ஸ்ரீ கிருஷ்ண'*** என்றால், கரிய நிறமுடையவனே என்பது மட்டும்தான். கண்ணன் என்றால் எத்தனை எத்தனையோ விளக்கங்கள் கூறலாம்.

குழந்தையாய்த் தோற்றமளிப்பவன் குருவாய் உயர்ந்தவன் கண்ணன். 'உலகம் ஆனந்தமயமானது, வாழ்க்கை வாழ்வதற்கு' எனும் தத்துவங்களைக் காட்டியவன். அவனைச் சரண் புகுந்தவரை அவன் கைவிட்டதில்லை. அவன் குழலெடுத்து ஊதியபோது குவலயமே மயங்கி நின்றது. அவன் நித்திய ஆனந்த மூர்த்தி.

ஜெயதேவர் கீதகோவிந்தத்தில்

> ''பக்தர்களுக்குப் பரமானந்தத்தை அளிக்கும் பகவான் கிருஷ்ணனுடைய சுந்தர லீலைகளையும், புண்ணிய வரலாற்றையும் வருணிப்பதைவிட மேலான பணி ஏதும் இல்லை''

என்கிறார்.

## *கண்ணன் அவதரித்தான்*

பூமிதேவியால் பூ பாரம் தாங்க இயலாது பிரம்மனிடத்துத் துயர் நீங்கப் பிரார்த்திக்கப் பக்தர்களின் பிரார்த்தனையால் மகிழ்ந்த திருமகள் கணவன், பூமாதேவிக்கு விமோசனம் அளிக்க மண்ணுலகில் கண்ணனாய் மானுட வடிவில் அவதரித்தார் என்பர்.

வடமதுரையை ஆண்டவன் உக்கிரசேனன். அவனுடைய மகன் கம்சன். உக்கிரசேனனின் தம்பி தேவகன். தேவகனின் மகள் தேவகி. யதுகுல சூரசேன மன்னரின் மகன் வசுதேவரை தேவகி மணந்தாள். கம்சன் தேவகியிடம் மிகுந்த அன்புடையவன். தன் தங்கையின் திருமண ஊர்வலத்தைச் சிறப்பாக நடத்தினான்.

எந்தத் தங்கையின் மணவிழாவை மாண்புற நடத்தினனோ, அந்தத் தங்கையின் வயிற்றிலே பிறக்கும் எட்டாவது பிள்ளையே

அவனுக்கு எமன் என அசரீரி ஒலித்தது. அந்தத் தங்கையையே கொன்றுவிட்டால், தனக்கு எதிரி எப்படி வயிற்றில் உதிக்க முடியும்? என எண்ணிய கம்சன், உடைவாளால் தன் தங்கையை வெட்ட ஓங்கினான். பிறக்கும் பிள்ளைகளையெல்லாம் ஒப்படைப்பதாகவும், தன் மனைவி தேவகியைக் கொல்ல வேண்டாம் எனவும், தங்கை கணவர் வசுதேவர் அளித்த உறுதிமொழியால், தங்கையைக் கொல்லாமல் விட்டான்.

அவ்வாறே பிறந்த ஆறு பிள்ளைகளைக் கொன்றான். வசுதேவருக்கு மூத்த மனைவியின் பெயர் ரோகிணி, கம்சனின் ஆணவத்தை அடக்கி அவனைச் சம்ஹரிக்கத் திருவுள்ளம் கொண்ட நாராயணமூர்த்தியாம் திருமால் ரோகிணி வழி ஒரு மாயத்தைச் செய்தார்.

வசுதேவரின் முதல் மனைவி ரோகிணியும் கருவுற்றிருந்தாள். தேவகியும் கருவுற்றிருந்தாள். தேவகியின் வயிற்றில் ஏழாவது குழந்தையாக ஸ்ரீமந் நாராயணன் தம் அம்சமான ஆதிசேடனை அவதரிக்கச் செய்தார்.

## *சக்தி உடன் பிறப்பு*

மாயாசக்தியானவள் ரோகிணியின் கருவைக் கலைத்தாள். கலைத்த கருவை தேவகியின் வயிற்றில் வைத்துத் தேவகியின் வயிற்றில் வளர்ந்த ஆதிசேஷனை ரோகிணியின் வயிற்றில் சேர்த்தாள். இதனால் கம்சனைப் பொருத்தமட்டில் ஏழாவது சிசு கலைந்து விட்டது. ஏழாவது குழந்தை கலைந்து விட்டது எனக் கம்சன் எண்ணிக் கொண்டான். எட்டாவது குழந்தைக்காகக் கம்சன் காத்திருக்கத் தேவகியின் வயிற்றில் உதித்த கண்ண பெருமான் ஆவணியில் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தார்.

அவர் பிறந்த இடமோ சிறைக்கோட்டம். வசுதேவர் குழந்தையை ஒருவரும் அறியாமல் ஆயர் பாடியில் கொணர்ந்து சேர்த்து, அங்கு யசோதை வயிற்றில் உதித்த மாயா சக்தியான குழந்தையைத் தேவகி அருகில் கிடத்தினார். கம்சன் எட்டாவது குழந்தையென எண்ணி மாயா சக்தியைக் கொல்ல முயன்றபோது அக்குழந்தை எட்டாத உயரம் சென்று காளி வடிவமாயிற்று. அஞ்சிய கம்சன் வசுதேவரையும், தேவகியையும் விடுவித்தான். இதனால் பெருமாள் காளியை உடன்பிறந்தாளாக ஏற்றார். இவ்வாறே சக்தி பெருமாளின் தங்கை ஆனாள்.

## ஆயர்பாடி லீலைகள் - பூதனை

ஆயர் பாடியில் யசோதையும், அவள் கணவர் நந்தகோபனும் கண்ணன் பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாடினர். கண்ணனைக் கொல்லக் கம்சன் **பூதனை** எனும் அரக்கியை ஏவினான். பூதனை கண்ணனுக்குப் பாலூட்டுவதுபோல் மார்பினில் வைத்த நஞ்சூட்ட எண்ண அவளையே உறிஞ்சி உயிரெடுத்தான். இதனை ஆண்டாள் ‘பேய்முலை நஞ்சுண்டு’ எனப்பாடுவாள்.

### *சகடாசுரன்*

அடுத்துக் கொலை முயற்சியாகச் ***சகடாசுரனைக்*** கம்சன் ஏவினான். அவன் சகட வடிவம் கொண்டு குழந்தை அருகே கொல்லக் காத்திருந்த வேளையில், காலால் உதைத்துச் ***சகடாசுரனை*** மாயச் செய்தார். இதனைப் ‘பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி’ ‘கள்ளச்சகடம் கலக்கழியக் கால் ஓய்ச்சி’ என ஆண்டாள் புகழ்கிறாள்.

### *திருணாவர்த்தனன்*

அதன் பின்னும் கண்ணன் பெருமை உணராத கம்சன் ***திருணாவர்த்தனன்*** என்றும் அரக்கனைக் கோகுலத்திற்கு அனுப்பினான். அவன் சூறைக்காற்றாக உருமாறிக் கண்ணனை யசோதை கைகளிலிருந்து அடித்துக்கொண்டு விண்ணில் மறைந்தான். கண்ணன் மேலே செல்லச் செல்ல எட்ட கூடியவனாகக் கற்பாறையாகக் கனத்தான். கண்ணன் அவன் கழுத்தை இறுகப் பற்றினான். அசுரன் விழி பிதுங்கி நிலத்தில் வீழ்ந்து இறந்தான்.

### *திருப்பெயரிடல்*

ஓர் ஆண்டு நிறைந்தபோது தேவகி மைந்தனுக்குக் ***கிருஷ்ணன்*** எனவும், ரோகிணி மைந்தனுக்குப் ***பலராமன்*** எனவும் திருநாமங்களை, யதுகுலத்தவரின் குருதேவர் ***கர்கர்*** எனும் முனிவர் சூட்டினார்.

### *நிறங்களுடையான்*

முதல் யுகத்தில் வெண்மை நிறத்துடனும், இரண்டாவது யுகத்தில் சிவப்பு நிறத்துடனும் மூன்றாவது யுகத்தில் மஞ்சள் நிறத்துடனும், நான்காவது யுகத்தில் கருமை நிறத்துடனும் தோன்றியவன் கண்ணன் என்பர். இதனாலே தான் நீலமேகசியாமள வண்ணன் என்றழைத்தனர்.

## அகிலம் காட்டினான்

கண்ணனின் குறும்புகளுக்காக யசோதையிடம் அடி பெற்றான். ஒரு நாள் யசோதை, கண்ணன் மண்ணைத் தின்றதற்காகக் கோலெடுத்து மிரட்டி வாய் திறந்து காட்டச் சொன்னாள். கண்ணனின் வாயில் அப்போது மண்ணைக் காணாது அகிலத்தைக் கண்டாள் அன்னை யசோதா.

## பிள்ளைக் குறும்புகள்

ஆயர்பாடியில் கண்ணனின் பிள்ளைக் குறும்புகள் ஏராளம். பால் கறக்கும் முன் கன்றுகளை அவிழ்த்துவிட்டு அவற்றைப் பால் பருகச் செய்வான். தாழிகளை உடைப்பான். வெண்ணெய் உண்பான். தன் வீட்டிலும், கோபியர் இல்லங்களிலும் வெண்ணெய் திருடி உண்டான். வெண்ணெய் உண்டதால் ***நவநீதகிருஷ்ணன்*** எனப் பெயர் பெற்றான். (நவநீதம் = வெண்ணெய்).

## தாமோதரன்

கண்ணனை உரலில் கட்டி வாய் பொத்திக் கெஞ்ச வைத்தாள் யசோதை. குபேர குமாரர்களான ***கூபரன், மணிக்ரீவன்*** ஆகியோர் யசோதையின் தோட்டத்தில் மரங்களாக நின்றனர். அவர்களுடைய சாப விமோசனத்தின் பொருட்டு, உரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து இரு மரங்களின் நடுவில் புகுந்து கொண்டு தவழ்ந்து மரங்களைச் சாய்த்துக் குபேர குமாரர் சாபம் ஒழித்தார். வயிற்றில் கயிற்றால் கட்டப்பட்டதால் ***தாமோதரன்*** (தாம் = கயிறு, உதரம் = வயிறு) என்னும் திருநாமம் ஏற்பட்டது.

## பிருந்தாவனம்

யசோதையும், நந்தகோபரும் யமுனா நதிக்கரையில் பிருந்தாவனம் எனும் இடத்திற்குச் சென்று வாழ்ந்தனர். கண்ணனும், பலராமனும் மாடுகளை மேய்க்கும் பருவ வயதினை எட்டினர். இருவரும் பசுக்களையும், கன்றுகளையும் மேய்க்க வேய்ங்குழலை இடுப்பிலே கட்டிக்கொண்டு சென்றனர். மாலையில் பசுக்களை மேய்த்துத் திரும்பினர்.

### *வத்சாசுரன்*

பிருந்தாவனத்திலும் கண்ணனைக் கொல்ல ***வத்சாசுரன்*** எனும் அரக்கனை அனுப்பினான். அவ்வசுரன் கன்றுருக் கொண்டு மந்தையிலுள்ள ஆவினங்களுடன் கலந்தான். கண்ணன் அவ்வரக்கனின் பின்னங் கால்களைப் பற்றித் தூக்கி விளா மரத்தின் மீது அறைந்து கொன்றான். இதைத்தான் ஆண்டாள், 'கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி' என்று பாடுகிறாள்.

### *மாவாய்ப் பிளந்தான்*

மற்றொரு நாள் கம்சனால் ஏவப்பட்ட, நாரை வடிவெடுத்த அரக்கனின் அலகினைப் பிளந்து கொன்றான். இதையே 'மாவாய்ப் பிளந்தானை' என்பாள் ஆண்டாள். கம்சனால் ஏவப்பட்ட ***அகாசுரன்*** எனும் அரக்கன் மலைப்பாம்பு வடிவெடுத்தபோது, பாம்பின் வயிற்றினுள் சென்று கண்ணன் தமது தோற்றத்தைப் பெரிதாக்க அவ்வசுரனும் மாண்டான்.

### *தேனுகாசுரன்*

ஒரு நாள் பிரம்ம தேவர் மாடு கன்றுகளையும், கோபாலர்களையும் மாயமாக மறையச் செய்தார். கண்ணன் தன் திருவுள்ள மகிமையால் காணாமற் போன கன்றுகளாகவும், கோபாலர்களாகவும் தோன்றச் செய்தார். ***தேனுகாசுரன்*** எனும் அசுரத் தலைவனின் தலைமையில் கழுதை வடிவில் மனிதர்களைக் கொன்ற அசுரர்களை அழித்தான்.

### *காளிங்கன்*

யாதவர்க்கு அச்சத்தைக் கொடுத்த காளிங்கனின் ஆணவத்தை அடக்க, நாக வடிவுடைய ***காளிங்கனின்*** ஆயிரம் தலைமீது ஏறி நர்த்தனம் ஆடினார். காளிங்கன் அடங்கி ஒடுங்கினான். காளிங்கனின் கொடிய நஞ்சிலிருந்து கண்ணன் மக்களைக் காத்தருளினார்.

### *பிரலம்பன்*

***பிரலம்பன்*** எனும் அரக்கன் ஆயர்ச்சிறுவர்களைப் போல் உருமாறி இவர்கள் கூட்டத்தோடு கலந்து கொண்டு விளையாடினான். பிரலம்பன் பலராமனைத் தூக்கிக் கொண்டு செல்ல, கண்ணன் பிரலம்பனைச் சம்காரம் செய்யப் பலராமனுக்கு ஆணையிட்டார்.

## கோபியர்

கண்ணன் கோபியர் உறவு என்பது பரமாத்மா ஜீவாத்மா தத்துவத்தை உணர்த்தும் ஓர் ஒப்பற்ற உண்மையாகும். கோபியர் துகில்களைக் களைந்து யமுனையில் நீராடியபோது அவர்கள் ஆடைகளை எடுத்துக்கொண்டு கடம்ப மரத்தில் ஏறி அமர்ந்தது 'ஆடையின்றிப் புண்ணிய நதிகளில் நீராடல் பாவம் எனும் உண்மை உணர்த்த' என்றும் விளக்கமளிப்பர். கோபியரின் அகக் கண்களைத் திறந்து ஞான ஒளி ஏற்றினார் என்பர்.

## சம்வர்த்தம்

ஆயர்கள் மழைக் கடவுளுக்கு விழா எடுப்பர். இதனால் அக்கடவுளின் செருக்கினை அடக்கி ஆயர் குலத்தவர்க்கு உணர்த்தினர். பசுக்களையும், மலைகளையும் ப்ரிதி செய்தால் மழை கிட்டும் என்று கூறக் கோவர்த்தனகிரி சென்று மலை வழிபாடும், பசு வழிபாடும் செய்தனர். இதனால் கோபம் கொண்ட இந்திரன் **சம்வர்த்தம்** எனும் மேகக் கூட்டத்திடம், பெருமழை பெய்து ஆயர்பாடியை அழிக்க ஆணை பிறப்பித்தான். எங்கும் மழை வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துயருற்றனர். பேய் மழையிலிருந்து காக்கக் கண்ணன் ஆயர்பாடி மக்களுக்கு அடைக்கலம் அளித்து இந்திரன் ஆணவமடக்கினார். இதனால் கோவர்த்தனன் எனும் திருப் பெயரும் ஏற்பட்டது.

## கேசி

அடுத்தடுத்துத் தன்னால் அனுப்பப் பெற்றவர்கள் கண்ணனால் மாய்க்கப் பெற்றது கண்ட கம்சன், தன் நண்பனான கேசி எனும் அரக்கனை அனுப்பிப் பலராமனையும், கண்ணனையும் கொல்லச் சதி செய்தான். கேசி மாபெரும் குதிரை வடிவு கொண்டு கொல்ல முயலக் கண்ணன் தன் திருக்கரத்தைப் பெரிதாகச் செய்து கேசியின் வாய் வழியாக வயிற்றுள் செலுத்தி அவனைத் திணறடித்து இரண்டாகப் பிளந்து கொன்றான்.

## அக்ரூரர்

கம்சனை எப்போது கண்ணன் அழித்து அவன் கதையை முடிக்கப் போகிறான் என நல்லோர் எதிர்நோக்கிய வேளை வந்தது. கம்சன் தன் தலைமை அமைச்சர் அக்ரூரரைப் பிருந்தாவனத்திற்கு அனுப்பிக்

கண்ணனையும், பலராமரையும் தன் அரண்மனைக்கு அழைத்து வரச் செய்து தந்திரமாக அழிக்க முடிவு செய்தான். ஆம்! அவன் தன் முடிவிற்கு நாள் குறித்தான்.

### அதர்மன்

அக்ரூரர் தாம் வந்த காரணத்தை கூறினார். அக்ரூரர் சாரதியாக அமரப் பார்த்தனுக்குச் சாரதியாகப் போகின்றவர். பலராமனுடன் தேரில் புறப்பட்டார். கண்ணன் மதுரா புரியில் யாகத்தில் தாம் பங்குகொள்ளச் செல்வதாகவும் சென்று வருவதாகவும், தம்மை வழி மறித்த கோபியரைத் தேற்றினார். தேர் மதுராபுரி வந்தது. வழியில் ***சுதர்மன்*** எனும் மலர் தொடுப்போனை மகிழ்வித்தனர். ***நைவக்கிரை*** எனும் சந்தனம் பூசும் பெண்ணின் கூனை நிமிர்த்தி அருளினார்.

### குவலயாபீடம்

கம்சனின் ஆயுதச் சாலையில் புகுந்து நாணேற்றி வில் ஒன்றை முறித்தனர். கம்சன் ***குவலயாபீடம்*** என்னும் மத யானையைச் சபா மண்டபத்துள் நிறுத்திக் கண்ணனும், பலராமனும் நுழைகையில் அதனைக் கொண்டு கொல்ல முயன்றான். கம்சனின் ஆணைப்படி யானைப் பாகன் அம் மத யானையை ஏவிடக் கண்ணன் யானையின் துதிக்கையைப் பற்றி இழுத்துச் சுழற்ற யானை கீழே விழுந்து மடிந்தது.

### மல்லர்கள்

மல்லர்களை அடுத்து ஏவினான். கண்ணனை எதிர்த்த ***முட்டிகாசுரன், சாணுரன்*** எனும் இரு மல்லர்களும் மாண்டனர். மல்லரை மாட்டினான் தேவாதி தேவன். இதனையே ஆண்டாள் பெருமாட்டி ***'மல்லரை மாட்டிய தேவாதி தேவனை'*** என்று பாடினாள். அடுத்து வந்த தோசவகன் என்பவனையும் கண்ணன் வீழ்த்தினான்.

### கம்சன் மாண்டான்

ஆத்திரம் தொடர்ந்து கம்சனின் கண்ணை மறைத்தது. கண்ணனின் பெருமைகளை அறிய விடாமல் மறைத்தது. போர் வீரர்களை ஏவ அவர்களைத் தள்ளிச் சிம்மாசனத்தில் இருந்த கம்சனைக் கீழே உருட்டித் தள்ளி அவன்மீது இருந்து கம்சன் உயிரை இழக்கச் செய்தார்.

கம்சன் மாண்டதும் அவனுடைய உடன்பிறப்பு ***சுநாமா*** என்பவன் எதிர்க்கப் பலராமர் அவனைப் போர் புரிந்து கொன்றார். கம்சன் வீழ்ந்தான், மக்கள் கவலைகள் மாய்ந்தன. வசுதேவர், தேவகியைச் சிறையிலிருந்து மீட்டார். பாட்டனார் உக்கிரசேனரைச் சிறையில் இருந்து விடுதலை செய்து அவருக்கு மதுராபுரியில் மணிமகுடம் சூட்டினார். இந்திரனிடமிருந்து வாயு வழி பெற்ற ***சுதர்மை*** எனும் மண்டபத்தை உக்கிரசேனருக்கு அளித்தார்.

## *பஞ்சகன்*

மதுராபுரியில் கண்ணன் குருவிடமிருந்து கல்வி கற்றுத் திரும்புகையில் நீரில் மூழ்கி மறைந்த தம் மகனை மீட்டுத் தரும்படி குரு வேண்ட, சங்கு உருவிலே இருந்த ***பஞ்சகன்*** எனும் அரக்கனிடமிருந்து மீட்கப் புறப்பட்டபோது, பஞ்சகன் போர் தொடுக்க வந்தான். பலராமனை அழைத்துக்கொண்டு ***பாஞ்ச ஜன்யம்*** எனும் சங்கினை ஊதினார். எமதர்மன் வந்து பணிந்து எமலோகத்தில் இறவாமல் துன்பப்பட்டுக் கொண்டிருந்த முனி குமாரனைக் கொண்டு வந்து நிறுத்த அவனை முனிவருக்குக் குரு தட்சிணையாக வழங்கினார்.

மதுராபுரியில் எழுந்தருளிய கண்ணன் தமது தந்தையின் சகோதரியான குந்தி தேவியும், அவள் புதல்வர்களான பஞ்ச பாண்டவர்களும், பாண்டுவின் இறப்பிற்குப் பின் ஆதரவற்ற நிலையில் அல்லல்படுவதையும், கௌரவர்களால் தொல்லைகள் பல அடைவதையும் கேள்விப்பட்டு மனம் வருந்தினார். அக்ரூரரை அனுப்பி அஸ்தினாபுரியின் நிலையை அறிந்து வரச் செய்தார்.

## *ஜராசந்தன்*

கம்சன் மகத தேசத்து மன்னன் ஜராசந்தனின் புதல்வியர் ***அஸ்தி, பிராப்தை*** எனும் இரு பெண்களை மணம் செய்திருந்தான். தன் மருமகனைக் கொன்ற கண்ணன் மீது கோபம் கொண்ட ஜராசந்தன் 'யாதவ வம்சத்தையே அடியோடு அழிப்பேன்' என வீர சபதம் செய்தான். பல்லாயிரக்கணக்கான படை திரட்டி மதுராபுரியினைச் சுற்றி வளைத்த போது உக்கிரசேனர் திகைத்தார். கண்ணன் பலராமனுடன் போருக்குச் சென்று ஜராசந்தனைத் தவிர அவனுடைய சேனைகள் அத்தனையையும் அழித்தொழித்துப் பூமியின் சுமையைக் குறைத்தார்.

### காலயவனன்

கண்ணனால் மன்னிக்கப் பெற்று மகததேசம் சென்ற ஜராசந்தன் கண்ணனின் பெருமையை உணராது எப்படியும் கொல்வது என உறுதி பூண்டு பதினேழு முறை படையெடுத்துத் தோற்று, யவன மன்னன் **காலயவனன்** என்பவனைப் பதினெட்டாவது முறையாகக் கண்ணனுக்கு எதிராக அனுப்பினான்.

### துவாரகை

இக்கட்டான இவ்வேளையில் தேவ சிற்பியான விசுவகர்மாவின் உதவியால் பன்னிரண்டு யோசனைகள் அளவுள்ள அதி அற்புதமான நகரை, மாட மாளிகை, கூட கோபுரங்களுடன் கண்ணன் உருவாக்கிக் காட்டினார். அந்நகருக்குத் துவாரகாபுரி எனும் பெயர் சூட்டிய கண்ணன் மதுராபுரியில் வாழ்ந்த பெற்றோர்களையும், யாதவர்களையும் துவாரகாபுரியில் கொண்டு சேர்த்தார்.

### முசுகுந்தன்

கண்ணன் மட்டும் தனியே ஆயுதமேதுமின்றி துவாரகை நோக்கித் திருப்பாதங்கள் தேயப் புறப்பட்டார். இதுவே கண்ணனைக் கொல்லத் தக்க வேளையென்று காலயவனன் பின் தொடர்ந்தான். கண்ணன் ஒரு குகைக்குள் நுழைந்தபோது காலயவனனும் பின் தொடர்ந்தான். அங்குக் குகையினுள் முசுகுந்தன் எனும் அரசன் மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருக்கக் குகைக்குள் நுழைந்த காலயவனன் மஞ்சத்தில் படுத்து உறங்கும் முசுகுந்தனைக் கண்ணன் என்று எண்ணிக் காலால் உதைத்தான். முசுகுந்தன் கோபத்தோடு நோக்கிடக் காலயவனன் எரிந்து சாம்பலானான். கண்ணன் முசுகுந்தனுக்குப் பேரருள் வழங்கினார். மதுராபுரியில் முற்றுகையிட்டிருந்த காலயவனனுடைய படைகளை அழித்தார்.

ஜராசநதன எதாததுவரக கணணன காடடினுள சென்று மறைந்தான். அவர்களைக் காணாது காட்டுக்குத் தீ வைத்தான் பலராமனும், கண்ணனும் தீயில் மாண்டனர் எனத் தவறாக எண்ணினான் ஜராசந்தன்.

### கண்ணன் திருமணம்

பலராமன் ஆனர்த்த தேசத்து மன்னன் **ரைவதன்** மகளை மணந்து திரிதன், உல்முகன் எனும் இரு புதல்வர்களைப் பெற்றான்.

பலராமனின் திருமணத்தின் பின்பு கண்ணன் - ருக்மணி திருமணம் நடைபெற்றது. விதர்ப்ப நாட்டு மன்னன் ***பீஷ்மகன்*** என்பவனின் மகள் ***ருக்மணி***. ருக்மணியின் உடன் பிறந்த ***ருக்மீ*** அவளைச் சேதி நாட்டு மன்னன் சிசுபாலனுக்கு மணம் முடித்துக் கொடுக்க எண்ணினான். மேலும் கம்சனைக் கண்ணன் அழித்ததால், கண்ணன் மீது பகை கொண்டான். ருக்மீ சிசுபாலனுக்கு ருக்மணியைத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்த போது அவளுடைய பெற்றோர்களுக்கு அதனைத் தடுத்து நிறுத்தத் துணிவில்லை. ருக்மணியோ கண்ணன் மீது காதல் கொண்டாள்.

### ருக்மணி

கண்ணன் நான்கு குதிரைகள் பூட்டப் பெற்ற பொன் வண்ணத்தேரில் குண்டினபுரம் வந்து ருக்மணியைத் தேரில் ஏற்றிக் கொண்டு சென்றான். ருக்மீ பெரும் படை திரட்டிச் சிசுபாலன், ஜராசந்தன் ஆகியோரைத் துணைக் கொண்டு கண்ணனை எதிர்த்தான். யாதவப்படையும், ருக்மீயின் படையும் மோதின. ஜராசந்தன், சிசுபாலன் தோற்று ஓடினர். ருக்மீ மட்டும் போரிட்டுக் கொண்டிருந்தான். ருக்மணியைத் தேரில் அழைத்துத் துவாரகை வந்தார். விதர்ப்ப நாட்டை விட்டு ருக்மீ வெளியேறினான். ருக்மணியைக் கண்ணன் கைத்தலம் பற்றினார். இருவருக்கும் ***பிரத்தியும்னன்*** எனும் மகன் பிறந்தான். சம்பாசுரன் எனும் அசுரன் அக்குழந்தையை லவண சமுத்திரத்தில் வீசக் குழந்தையை மீன் விழுங்கியது. விழுங்கிய மீன் செம்படவனின் வலையில் சிக்கியது. செம்படவன் அந்த மீனைச் ***சம்பாசுரனின்*** மாளிகையில் விற்க, மீனை அறுக்கையில் அக்குழந்தையைக் கண்டு சம்பாசுரனின் மனைவி மாயாவதியிடம் அளித்தனர். மன்மதனுடைய கூறாய், பகவானுடைய கருவில் உதித்ததால் குழந்தை நலமாகவே இருந்தது. மாயாவதியே ரதி தேவி என்பதையும், விருத்யும்னன் மன்மதன் என்பதனையும் நாரதர் வழி அறிந்தனர். சம்பாசுரனைப் பிரத்யும்னன் கொன்றார்.

### சந்திரஜித்

சந்திரஜித் எனும் மன்னனின் பக்தியைப் புகழ்ந்து அவனுக்குச் சூரியன் தான் அணிந்திருந்த ***சியமந்தகமணி*** எனும் மாலையை அளித்தார். சந்திரஜித் அம்மாலையை தன் உடன் பிறப்பு ***பிரசனன்*** என்பவனுக்கு அளித்தார். காட்டில் பிரசனனைச் சிங்கம் கொல்ல

ஜாம்பவான் எனும் அரசன் பிரசனன் கழுத்தில் இருந்த மணியை எடுத்துத் தன் குழந்தையின் தொட்டிலில் கட்டிக் கொண்டான். வேட்டைக்குச் சென்ற பிரசனன் திரும்பி வராததால் மணியைக் கவர பிரசனனைக் கண்ணன் கொன்றிருப்பார் எனச் சந்திராஜித் பழி சுமத்தினார்.

## ஜாம்பவான்

காட்டிலே அவன் சிங்கத்தினால் கொல்லப்பட்டதைக் கண்ணன் உணரச் செய்தார். ஜாம்பவானின் முன் இராமபிரானாகக் காட்சி அளித்து மணியைப் பெற்றார். ஜாம்பவான் கண்ணனைத் தன் மாளிகையைக் கொடுத்துத் தன் மகள் ஜாம்பவதியைக் கன்னிகாதானம் செய்தார். சந்திராஜித்திடம் மணியைக் கொடுத்தபோது, சந்திராஜித் கண்ணனுக்குத் தன் மகள் சத்தியபாமாவைத் திருமணம் செய்து வைத்தார்.

## சந்தனு

ஆனால் ***கிருதவர்மா, சந்தனுவா*** முதலிய யாதவர்கள் கண்ணனின் பகைவர்கள் ஆகினர். சத்தியபாமாவைத் தங்களுக்கு மணம் முடித்துத்தராத சந்திராஜித்தைப் பழிவாங்க வாய்ப்பை எதிர் நோக்கினர்.

## சியமந்தகமணி

கண்ணன் பாண்டவர்களைக் காண ***வாரணாவதபுரம்*** சென்றிருந்த வேளையில் சந்திராஜித்துவைக் கொன்று சந்தனுவா சியமந்தக மணியைக் கைப்பற்றிக் கொண்டான். சத்தியபாமா தன் தந்தைக்கு நேரிட்ட கொடுமையைத் தன் கணவனிடம் அறிவிக்கப் பலராமன், பலமான சேனையுடன் சந்தனுவாவின் மீது படையெடுத்தார். சந்தனுவா சியமந்தகமணியை அக்ரூரரிடம் கொடுத்து விட்டுக் குதிரை மீது ஏறி வந்தான். அவனுடைய குதிரை களைப்பு மேலிட்டு இறந்தது. கண்ணன் சந்தனுவாவைப் பின் தொடர்ந்து சென்றார். சியமந்தக மணியைத் தேடிப்பார்த்து இல்லையென்பதைப் பலராமனிடம் கூறக் கண்ணன் பொய் சொல்லுவதாக எண்ணினார்.

அக்ரூரன் சியமந்தக மணியைக் கண்ணனிடம் சமர்ப்பித்தார். பலராமர் சியமந்தகமணியை எடுத்துக் கொள்ள விழைந்தார்.

ருக்மணியோ இந்த மணி தனக்குத்தான் சொந்தம் என்று கருதினாள். சியமந்தகமணி அக்ரூரரிடமே இருக்கும் என்று கண்ணன் அறிவித்து விட்டார். யாதவர்கள் அவரிடம்அம்மணியிருக்கிறது என்று ஐயம் கொண்டதை நீக்கி உண்மையைப் புரிய வைத்தார்.

## ***கண்ணனின் மனைவியர்***

அவதாரத்தின் பொருட்டுப் பல பெண்களை மணந்தார். சூரியனின் மகளான ***காளிந்தி***, சிவந்தி தேசத்து இளவரசி ***விக்ரவிந்தை,*** அயோத்தியை ஆண்ட நக்னஜித்து மன்னனின் மகள் ***சத்தியவதி***, கேகயநாட்டு மன்னன் மகள் ***பத்திரையை,*** மந்திர தேசத்து மன்னன் மகள் ***வஷ்மணையை*** ஆகியோரை மணந்து கொண்டார். கண்ணன் எட்டு அரசகுமாரிகளை மணந்தார்.

## ***நரகாசுரன்***

நரகாசுரனின் அக்கிரமங்கள் பொறாது விண்ணப்பித்த அமரேந்திரனின் வேண்டுகோளை ஏற்று, நரகாசுரனின் மகன் முரள், அமைச்சர்கள் அயக்ரீவன் , பஞ்சனன் ஆகியோரை அழித்தார். நரகாசுரன் ஆயிரக்கணக்கான படைகளுடன் தேரில் அமர்ந்து எதிர்க்க வந்தான். கண்ணபிரான் அவனுடைய அத்தனை படைக்கலங்களையும் தன் சக்ராயுதத்தால் அழித்தார். சக்ராயுதம் நரகாசுரனின் உடலை இரு கூறாக்கியது. நரகாசுரனால் சிறைப்பெற்றோர் விடுதலையாயினர். மீட்டு வந்த பதினாயிரம் அரச குமாரிகளை மணந்தார். ஒவ்வொரு மங்கையோடும் தனித்தனியே மகிழும் வண்ணம் மாயத்தோற்றம் எடுத்தார். அத்தனைக் கன்னியர் மாளிகைகளிலும் ஏக காலத்தில் சேவை சாதித்தார்.

## ***பாரிஜாதம்***

கண்ணபெருமானும், சத்திய பாமாவும் தேவலோகம் எழுந்தருளித் தேவலோகத்து நந்தவனத்தைக் கண்டு வந்தபோது அங்கு வளர்ந்திருந்த வாசமிகும் பாரிஜாத மலரைக் கண்டு பாமா மோகித்து அதன் மரத்தைப் பெயர்த்து எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். பாரிஜாத மலரைத் தன்னைத் தவிர வேறு யாரும் சூடக்கூடாது என்று கர்வம் கொண்ட சதி தேவியான தேவேந்திர பத்தினி மானிடப் பெண்ணான பாமா மகிமை பொருந்திய பாரிஜாத மரத்தைக் கொண்டு

செல்வதா என ஆணவத்தால் கொக்கரித்தாள். இந்திரனிடம் அம்மரத்தை மீட்டுத்தர வேண்டினாள்.

தேவேந்திரன் சசிதேவியின் கர்வத்தைக் குறைக்கக் கண்ணனுடன் போரிட்டுத் தோற்றான். சசிதேவி சத்யபாமாவின் காலில் விழுந்து தன் கணவனுக்காக உயிர்ப்பிச்சை கேட்டாள். தேவகன்னியர் அனைவரும் பாரிஜாத மலரைச் சூடச் செய்தாள். பாரிஜாத மலரைத் துவாரகைக்கு எடுத்துச் செல்லும் படி சசி வேண்ட அவ்வாறே செய்தனர்.

### *பாணாசுரன்*

சோணித புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ***பாணாசுரன்,*** சிவபக்தியுடையவர். தனக்குச் சமமான வலிமையுடையவனோடு பெரும் போர் செய்ய வரமளிக்க வேண்டினார். பாணாசுரனின் மகள் உஷை தன் கனவில் கண்ட அழகனை மணக்க வரம் பெற்றாள். கண்ணனின் பேரனான பிருத்யும்னனின் மகன் அநிருந்தனையே அவள் கனவில் கண்டாள். அவள் தோழி சித்ரலேகை துவராகையை அடைந்து யோக சித்தியால் மாயத்தோற்றம் கொண்டு அநிருத்தனைக் கடத்திவந்து உஷையிடம் சேர்ப்பித்தாள். அநிருத்தன் உஷையுடன் தங்கினான். இச்செய்தி கிட்டிய பாணாசுரன் அவனுடன் மாயப் போர் புரிந்து நாகாஸ்திரத்தால் அவனைக் கட்டுவித்தான். நாரதர் மூலம் அநிருத்தன் சிறைப்பட்டது அறிந்த கண்ணன் பாணாசுரனின் மாயையைச் சிதைத்தார். சிவபெருமான் பாணாசுரனுக்கு அபயம் அளிக்க வேண்டவே அவனுடைய பிழை பொறுத்தார். துவாரகையில் தன் பெயரன் அநிருத்தனுக்கும் உஷைக்கும் மணம் முடித்தார்.

### *சிசுபாலன்*

பின்னர் தர்மபுத்திரரின் இராஜ சூய யாகத்தைத் தாமே முன்னின்று நடத்தும் வேளையில் தர்மபுத்திரர் கண்ணனுக்கு முதலில் பாத பூஜை செய்த போது சிசுபாலன் சினம் கொண்டான். சகாதேவன் சிசுபாலனைக் கண்டித்தான். சிசுபாலன் கௌரவர்களைத் தூண்டி விட்டான். சிசுபாலனின் நூறு அபச்சாரங்களைப் பொறுப்பதாக அவனுடைய அன்னையிடம் உறுதி மொழி கொடுத்திருந்தார் சிசுபாலன் கிருஷ்ணனுடன் மாயப் போர் புரிந்தான். சிசுபாலன் நிலத்தில் வீழ்ந்து மாண்டான்.

## இராவணன்

முதல் பிறவியில் இரணியன், இரண்டாவது பிறவியில் இராவணன், மூன்றாவது பிறவியில் சிசுபாலன் என முப்பிறவி எடுத்துச் சாபம் நீங்கப் பெற்றான் சிசுபாலன். அதன்பிறகு இராஜசூயயாகம் நடைபெற்றது. கண்ணன் துவாரகாபுரியில் எழுந்தருளி திரிலோக பரிபாலனம் செய்தார். ஜராசந்தனைப் பீம சேனன் வழி அழிக்க வழி காட்டியவரும் கண்ணனே. ஜராசந்தன் உடல் மீண்டும் மீண்டும் உயிர்பெறத் தர்ப்பைப்புல்லை எடுத்துத் தலைபாகம் நுனிபாகம் இரண்டையும் தலைகீழாகச் சேர்த்து அவ்வாறே செய்யும் படி காட்டப் பீமசேனன் ஜராசந்தனின் உடலைக் கிழித்துத் தலை கால் மாற்றி எறிய உடல் ஒன்று சேர முடியாமல் போனது.

## சுதாமன்

சுதாமன் கண்ணனின் தோழன். ஏழை அந்தணன் சுதாமனே கண்ணனுக்கு அவல் அளித்த குசேலன். குசேலனுடைய குச்சுவீட்டை மாடிவீடாய்ச் செல்வம் கொழிக்கச் செய்தவன் கண்ணன். கண்ணனுக்கு வாசுதேவன் எனும் பெயரும் உண்டு.

## மாலிகன்

கண்ணன் துவாரகையில் ***மாலிகன்*** என்னும் யாதவகுலத் தோழனுக்குப் பற்பல படைக்கலங்களைப் பயன்படுத்திப் போர் செய்யும் முறையை ஆசானாக இருந்து முறையோடு கற்பித்துக் கொடுத்தார். மாலிகனுக்கு ஆணவம் விளைந்தது. பலருக்கும் தொல்லைகள் கொடுத்தான். மாலிகன் கண்ணனின் அறிவுரையை ஏற்க வில்லை. சக்ராயுதத்தைச் சுழற்ற முயன்று சிரசிழந்தான். கண்ணன் அவனை அனுக்கிர ஹித்துச் சக்ராயுதத்தைத் திரும்பவும் தம் திருக்கரங்களிலே தாங்கினார். மாலிகன் வாழ்க்கை வாயிலாக ஆண்டவனையும், குருவையும் அடிபணிந்து வாழ வேண்டும் எனும் உண்மையை உலகிற்கு உணர்த்தினார்.

## பஞ்ச பாண்டவர்

பஞ்ச பாண்டவர்க்குக் கண்ணன் உற்ற துணைவராய் விளங்கினார். பஞ்ச பாண்டவர்களை அவர்களுடைய வனவாழ்விலும், மறைந்து வாழ்ந்த போதும் காத்தார். பஞ்சபாண்டவர் பொருட்டுத் தூது

சென்றார். பாண்டவர்களுக்காகத் தூது வந்த கண்ணன், துரியோதனனின் முடிவிற்கு நாள் குறித்தார். பாஞ்சாலியின் சபதம் முடிக்கத் துணை புரிந்தார்.

போர்க்களத்தில் வீரன் அருச்சுனன், கடவுள், பிராப்தம், விதி தலையெழுத்து என்று தடுமாறிய போது, அவனுடைய மனநிலையை மாற்றி உபதேசித்தவையே கீதோபதேசம். கண்ணனின் பாஞ்ச சன்யம் முழங்கப் போர் தொடங்கிப் பாண்டவர்களுக்குக் குரு சேத்ரத்தில் வெற்றி கிட்டியது. போர்க்களத்தில் கர்ணனிடம் அவனுடைய கொடையைக் கவச குண்டலங்களை யாசித்துப் பெற்றுப் பாண்டவர் வெற்றிக்கு வழி கோலினார்.

கண்ணன் ருக்மணி, சத்தியபாமா சமேதராய்த் துவாரகையில் எழுந்தருளினார். யாதவகுலத்தை அழித்துத் துவாரகையைச் சமுத்திர ராஜனிடம் ஒப்படைத்துவிட்டு வைகுண்டம் எழுந்தருளும் நாள் வந்தது. ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோரைப்புற்களை ஆயுதமாகக் கொண்டு பிரித்யும்னன், சாம்பன், கிருதவர்மா, சாத்யாகி, அநிருத்தன் முதலானவர்களையும், யாதவ குமாரர்களையும் சம்ஹாரம் செய்தார்.

## உலுபதன்

கண்ணன் திருவடிக்கமலங்களை உலுபதன் எனும் வேடன் அம்பினால் எய்யக் கண்ணனின் அவதாரம் முடிவுற்றது. துவாரகை கடலில் மூழ்கியது. கண்ணனின் திருமாளிகை மட்டும் மிதந்தது. கிருஷ்ணாவதாரம் முடிவுற்றது. பூவுலகின் பாரம்குறைக்க அவதரித்த எம்பெருமான் துவாரகையையும் மானிடத் தோற்றத்தையும் நீங்கினார்.

இவ்வாறு அவதார புருடனாக விளங்கிய கண்ணன் பிறந்த திருத்தலம் முதலாகக் கிருஷ்ணாவதாரத்தின் சிறப்பினை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் எழுந்துள்ள கண்ணன் திருக்கோயில்கள் பற்றிய விளக்கங்களை இனிவரும் இயல்களில் காண்போம்.



மூன்று

# 3. திருவட மதுரை

## ''கண்ணன் பிறந்த பூமி

திருவடமதுரை, திரு ஆய்ப்பாடி, திருத்துவாரகை ஆகிய மூன்று திவ்ய தேசங்களும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத் தோடு முழுமையாகத் தொடர்புடையவை. வடமதுரை கண்ணன் பிறந்த பூமி. பிஞ்சுக்கால்கள் அடி எடுத்து வைத்த பூமி. மண்ணையும் விண்ணையும் அளந்த மாயவன் இந்த மண்ணிலேதான் ஆயர்குலத்தில் அணிவிளக்காய் அவதரித்தான்.

ஆண்டாள் நம் கண்ணனைக் ***'கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன், ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்'*** எனவும், ***'மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத் தூய பெருநீர் யமுனைத்துறைவனை, ஆயர்குலத்தினில் தோன்று அணிவிளக்கை, தாயைக்குடல் விளக்கம் செய்த தாமோதரனை'*** எனவும், ***'மாவாய்ப் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதிதேவனை' 'மாமாயன் மாதவன்'*** எனவும் ***'புள்ளின் வாய்க் கீண்டானை, பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை'*** எனவும் ***'மாயன், மணிவண்ணன்'*** எனவும் ***'மலர் மார்பன்' உலகினில் தோற்றமாய் நின்ற சுடர்' 'குன்று குடையாய் எடுத்தவன்' 'கன்று குணிலா எறிந்தவன்' 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்தவன்' 'கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமால்'*** எனவும் குறிப்பிடக் காண்கிறோம். கண்ணனின் இத்திருவிளையாடல்களின் நிலைக்களங்கள் வடமதுரையும் ஆய்ப்பாடியும். ஒன்று பிறந்து தவழ்ந்த மண். மற்றொன்று வளர்ந்து ஆநிரை மேய்த்து மாயங்கள் பல செய்த மண்.

## தலவரலாறு

வடநாட்டில் திருவடமதுரையில் கண்ணனுக்குத் தனிக்கோயில் அமைந்துள்ளது. வடமதுரையிலிருந்து தான் துவாரகை சென்றார் கண்ணபிரான். அதுவரையில் நடைபெற்ற நிகழ்வுகள் தலபுராணமாகக் கூறப்படுகின்றன. மதுரா, கோவர்த்தனம், பிருந்தாவனத்தின் பெருமைகளை ஸ்ரீ மத் பாகவதம் எடுத்துக் கூறுகிறது. கண்ணபிரான் பிறப்பதற்கு முன் வசுதேவர் சிறைப்பட்டது, தேவகியின் வயிற்றில் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒளிந்து வளர்ந்தது, சிறையில் பிறந்து அன்றிரவே ஆயர்பாடிக்குக் கொண்டு செல்லப்பெற்று, நந்தகோபன், யசோதையின் மகனாய் வளர்ந்து, ***'கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் நெருப்பென நின்ற'*** வரலாறுகளுடன் துவாரகையில் புதிய மாளிகை கட்டிச் செல்லும்வரை ஸ்ரீ கிருஷ்ண வரலாற்று நிகழ்ச்சிகள் இந்த மதுராவின் தலவரலாறாகப் பேசப்படுகின்றன.

## யமுனை நதி

டெல்லி செல்லும் வழியில் மதுரா. புகைவண்டி நிலையத்திலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் மதுரா உள்ளது. யமுனை நதி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடுகிறது. யமுனை நதியை அடையப் பல தெருக்கள் வழியாக உட்புகுந்து செல்ல வேண்டும். யமுனை நதியின் தென்கரையில் திருத்தலப் பணிகள் நீராடுவதற்கு வசதியாக நல்ல படித்துறையொன்று அமைக்கப் பெற்றுள்ளது. யமுனையில் நீராட விரும்பினால் நீராடலாம். மதுரா வழியே டெல்லி செல்லும் புகைவண்டிகள் செல்கின்றன. சில நிற்காது.

மதுராவிற்கும் டெல்லிக்கும் 170 கிலோ மீட்டர் தொலைவில், புகைவண்டி நிலையத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் மதுரா உள்ளது.

இராமாவதாரத்தின் சிறப்பிடமாக அயோத்தி விளங்குவது போல கிருஷ்ணாவதாரத்தின் தலையாய சிறப்பிடமாக மதுரா விளங்குகிறது.

## மங்களாசாசனம்

பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஐந்து ஆழ்வார்களால் 50 பாசுரங்களில் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம் இது.

கோவர்த்தனத்தைப் பற்றிப் பெரியாழ்வார் 10 பாசுரங்களும், பிருந்தாவனத்தில் கண்ணன் செய்த லீலைகளில் மயங்கி ஆண்டாள் 10 பாசுரங்களும் அளித்துள்ளனர்.

### வடமதுரை

வடமதுரை மூன்று பிரிவுகளைக் கண்ணனுடன் தொடர்புடைய பகுதிகளைக் கொண்டது. மற்றையத் திருத்தலங்களைப் போல் நேரே திருக்கோவில் சென்றோம், தரிசித்தோம், திரும்பினோம் என்று வரக்கூடியது அன்று. அந்த மூன்று பகுதிகளும் கண்ணபெருமானுடன் தொடர்புடையன.

அவை கண்ணன் பிறந்த ***மதுரா***, கண்ணன் ஆடியும் பாடியும் ஆநிரை மேய்த்தும், கன்றுகள் பின் திரிந்தும், திருவினைகள் நிகழ்த்திய ***பிருந்தாவனம்***, 'குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி' என ஆண்டாள் பாடிய குன்றைக்குடையாய்ப் பிடித்தானே அந்த ***கோவர்த்தனகிரி*** ஆகிய மூன்றும் சேர்ந்தது.

டெல்லியிலிருந்து சுற்றுலாவாக ஆக்ரா செல்லும் பேருந்தில் சென்றால் மதுராவை மட்டும் காண்பித்துக் கூட்டிச் சென்று விடுவார்கள். மதுரையில் தங்கிக் கொண்டு மூன்று இடங்களையும் தரிசித்துத் திரும்புவதாயின் இரண்டு நாட்களாவது வேண்டும். ஒவ்வோர் இடத்திலும் ஒரு நாள் தங்கலாம்.

இந்த மூன்று இடங்களும் முக்கோண வடிவில் அமைந்துள்ளன. மதுராவைத் தரிசித்து விட்டுப் பிருந்தாவனம் சென்று கண்டு விட்டுக் கோவர்த்தனகிரியைத் தரிசித்துத் திரும்பலாம். அல்லது மதுரா சென்று பின் கோவர்த்தனம் சென்று பிருந்தாவனம் சென்றும் திரும்பலாம். கிருஷ்ண ஜென்மபூமியில் விடுதிகள், தங்குமிடங்கள், சத்திரங்கள், பெரிய, பெரிய மண்டபங்கள், வளாகங்கள் அமைந்துள்ளன. எனவே மதுராவில் தங்குவதில் சிரமமிராது.

முதலில் பிருந்தாவனம், பிறகு மதுரா, கோவர்த்தனம் என்று தரிசித்து வரவும் செய்யலாம். 'மதுரா புகைவண்டி' நிலையத்திலிருந்து மதுரா மூன்று மைல் அதாவது ஏழுகிலோ மீட்டர். அதே புகைவண்டி நிலையத்திலிருந்து பிருந்தாவனமும் ஏழு கிலோமீட்டர். கோவர்த்தனமும் ஏழு கிலோ மீட்டர். மூன்றும் முக்கோணவடிவில்

இருப்பதால் அவரவர் விருப்பம் என்றாலும் முதலில் கண்ணன் பிறந்த பூமியான புண்ணிய பூமி மதுராவில் கால் பதித்துக் கண்ணன் நடந்த பிருந்தாவனத்திலும், பின் காலூன்றி நின்று கோலம் காட்டிய கோவர்த்தனத்திலும் நாம் சென்று வழிபடுதலே நன்று.

## மதுரா எனும் பெயர்

கண்ணிற்கு மதுரமான இடமாக, மனதிற்கு மகிழ்ச்சிப் பிரவாகமாகப் பெருகச் செய்யும் இனிமையான திருத்தலம் ஆதலால் மதுரை என்று அழைக்கப்பெறுகிறது. மற்றமொரு பெயர்க்காரணம் மது எனும் அரக்கனை அழித்ததால் ஏற்பட்டது என்பதாகும்.

## லவணாசுரன்

மது எனும் நகரத்தை ஆண்டு வந்த லவணாசுரன் எனும் அரக்கன் முனிவர்களின் தவயாகங்களுக்கு தொல்லைகள் அளித்தான். முனிவர்கள் இராமபிரானிடம் சென்று முறையிட, இராமபிரான் தம் இளவல் சத்ருக்கணரை அந்த லவணாசுரனை அழித்திட அனுப்பினார் மது. கைடபர்களை ஒழிக்கப் பயன்கொண்ட பாணத்தையும் கொடுத்து அனுப்பினார்.

சத்ருக்கணன் அப்பாணத்தால் அசுரரை அழித்து விட்டு யமுனை நதிக்கரையில் அரை நிலா வடிவில் மாளிகைகள், மண்டபங்கள், திருச்சுற்றுகள், தெருக்கள், குளங்கள் ஆகியவற்றுடன் இந்த மதுரா நகரினையும் உருவாக்கினான்.

இவ்வாறு சத்ருக்கணன் உருவாக்கிய மதுராவைச் சத்ருக்கணனின் மரபினர் ஆண்டு வந்த பின், யாதவர்களின் ஆட்சிக்குப்பட்டு, வசுதேவரின் மரபினர் ஆண்டு வந்தனர் என்பர். இவ்வாறு இராமாயண, பாரத புராணங்களுடன், காவியங்களுடன் தொடர்புடைய புண்ணிய பூமி மதுரா.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற மதுராவில் இருந்த கோவில் அயலவர் படையெடுப்பினால் அழிக்கப் பெற்று விட்ட அவலத்திற்கு ஆளாகிவிட்டது. கண்ணனுக்குரிய கேசவமந்திர் இருந்த இடத்தில் இப்பொழுது பெரிய மசூதி உள்ளது. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருக்கோயில்கள் இன்றில்லை. பிற்காலத்தில் எழுந்த கட்டடங்களும் பாழடைந்து கிடக்கின்றன. கண்ணனுக்குரிய

கேசவதேவ்மந்திர் இன்று இல்லை. நான்கு முறை கோயில் கட்டி இடிக்கப்பட்டு இன்று இறுதியில் பிர்லாவால் ஒரு பெரிய கட்டடம் பலகோடி ரூபாயில் பளிங்கினால் எழுந்துள்ளது.

## *கண்ணன் அவதாரபூமி*

மதுராவில் பிர்லா மாடக் கோயிலைப்போல் வெள்ளைச் சலவைக்கல்லில் கண்ணபெருமானுக்குத் திருக்கோவில் ஒன்று அமைத்துள்ளார். இக்கோயிலில் பாலகிருஷ்ணனைக் காண்கிறோம். கம்சன் வசுதேவரையும், தேவகியையும் சிறைவைத்த சிறைக்கூடம் இக்கோவில் அருகில் உள்ளது. தேவகியின் வயிற்றில் சிறையிலிருந்து வெளியே வந்த கண்ணன், வெளியில் வந்த பொழுது கண்ட இடம் கம்சனின் சிறைக்கூடமே. இச்சிறைக்கூடம் பக்தர்கள் தொழும் புனித பூமியாய் சலவைக்கல்லால் அமைக்கப் பெற்றப் புனித இடமாய் விளங்குகிறது.

மதுராவில் கண்ணன் கம்சனை வதம் செய்த இடம், குவலயா என்ற யானையின் கொம்பினை முறித்த இடம், கண்ணன் ஓய்வெடுத்த யமுனைத்துறை ஆகியன காணத்தக்கன. இந்த ஓய்வெடுத்த இடத்தினை ***விச்ராந்தி கட்டம்*** என்பர் இங்கு மாலையில் மக்கள் கண்ணபெருமானை எண்ணி, நினைந்து போற்றிப் பக்திப் பாடல்களை ஒன்றாகக் கூடி முழங்குவதைக் காண்பதும் கேட்பதும் சுகமான அனுபவம்.

கோகுலாஷ்டமி காலத்தில் எங்கும் விழாக்கோலம்தான் பக்திப் பாடல்கள். பஜனைகள். அந்த நேரத்தில் சென்று கண்டால் புதுமையான பேறு பெறுவோம்.

## இரு கோவில்கள்

மதுராவில் கண்ணனின் நினைவாகப் பிற்காலத்தில் கட்டப்பெற்ற இரண்டு கோவில்கள் உள்ளன. இங்குள்ள கண்ணனுக்கு ***துவாரக நாத்ஜி, மதுரா நாத்ஜி*** என்னும் இரண்டு திருக்கோயில்கள் உள்ளன. துவாரகை சென்று மன்னனாக மகுடம் சூட்டிக் கொண்டதன் நினைவாக எழுப்பப் பெற்ற திருக்கோயில்தான் துவாரகநாதர் திருக்கோயில். இந்தத் துவாரக நாதர் பச்சைத் திருமேனியர். வல்லபாச்சாரியரின் மரபில் வந்த ***இலட்சுமி சந்த்*** எனும் வள்ளல் இதனை எழுப்பியுள்ளார்.

துவாரகைத் திருக்கோயிலில் கண்ணபிரான் ருக்மிணியோ, இராதையோ இல்லாது தனியே நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். அவர்கள் அருகிலும் இல்லை, தனிக்கோயிலிலும் இல்லை. முற்பகல் நான்கு முறையும், பிற்பகல் நான்குமுறையும் இத்திருக்கோவிலில் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இப்பகுதியில் மதுராவைச் சுற்றிய 200 கி.மீ. சுற்றளவில் அமைக்கப்பெற்ற திருக்கோயில்களில் துவாரகநாதர் திருக்கோயிலே செல்வச் செழிப்பில் திகழும் கோவிலாகும். திருப்பதிக்கு அடுத்து அதிகச் செல்வத் செழிப்புடைய திருக்கோயிலாக இக்கோயில் விளங்குகிறது என்பர். ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி முதல் ஒரு வாரம், ஸ்ரீ கிருஷ்ண வரலாற்றை நாடகமாக இங்கே நடத்திக் காட்டி மக்களை மகிழ்விக்கின்றனர். ஒரே சமயத்தில் பல இலட்சம் பக்தர்கள் தங்கிச் சேவிக்க வசதியுள்ள திருக்கோயில் இக்கோயில்.

## கோவர்தனம்

மதுராவிலிருந்து இருபது கி.மீ. தொலைவில் கண்ணன் ஆநிரைகளை மேய்த்து வந்த கோவர்த்தன கிரி உள்ளது. கோவர்த்தனம் அழகிய நீளமான சிறு குன்றாகக் காணப்படுகிறது.

ஆயர்பாடியில் ஆண்டுதோறும் யாதவர்கள் இந்திரபூஜை நடத்தி ஆடல் பாடல் புரிந்து மழைவேண்டி ஆடல், பாடல் நிகழ்ச்சி நிகழ்த்திடுவர். ஆயர் பாடியில் கண்ணபிரான் வளர்ந்து வரும் சமயம் ஒருநாள் இந்திர பூஜைக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கவே இவைகளெல்லாம் என்ன வென்று கேட்டான். இந்திரபூஜைக்காக இந்திரனுக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் செய்து கொண்டுள்ளோம். என்று சொன்னவுடன், ‘இந்த உணவு வகைகள் எனக்குப் பிடித்தவைகள் தான், இவைகளை எனக்கே படையுங்கள்’ என்று கூறிக் கோவர்த்தன மலையில் அவ்வுணவுவகைகளை இடச்சொல்லித் தானே கோவர்த்தன மலையாக இருந்து முழுவதும் உண்டு தீர்த்தான் உலகுண்ட வாயன்.

இதனால் சீற்றம் கொண்ட இந்திரன் கடும் மழையை உண்டாக்கி ஆநிரைகளையும், ஆயர்களையும் அப்பாலும் இப்பாலும் அலைக்கழிக்க எல்லோரும் ஒன்றாகக் கண்ணன் உண்டு கொண்டிருக்கும் கோவர்த்தன மலையருகே ஓடிவந்தனர். இவர்கள் வருவதைக் கண்டவுடன் கண்ணன் அந்த மலையைப் பெயர்த்தெடுத்துத் தலைக்குமேல் குடைபோல் எடுத்தார்.

அக்குடையினுள் ஆயர்களும், ஆநிரைகளும் அடைக்கல மாயினர். பலத்த மழை கொட்டியும் பயனின்றிப் போகவே இந்திரன் இறுதியில் கண்ணனிடம் மன்னிப்பை வேண்டினான்.

இந்திரன் ஆணையிட்டவுடன் மேகங்கள் வாயைத் திறந்து கொண்டு சென்று கடல் நீரை அப்படியே கபளீகரம் செய்து பானையிலிருந்து கொட்டிக் கவிழ்த்ததைப் போலக் கொட்டியதாம்.

*கடல் வாய்ச் சென்று மேகங்கவிழ்ந்திறங்கி*
*கதுவாய்ப் படநீர் முகந்தேறி யெங்கும்*
*குடவாய்ப்பட நின்று கொட்டும் மழை.*

இவ்வாறு கொட்டு கொட்டு என்று கொட்டிய மழையையே கண்ணன் தடுத்தானாம். பெரியாழ்வார் தம் பாசுரத்தில், தன் ஐந்து விரல்களையும் தாமரை மொட்டுப் போல் குவித்து வைத்து மலையைத் தூக்கி அந்தக் கைவிரல்கள் தாங்குவதற்குத் தமது நெடுந்தோள்களைக் காம்பு போல் வளைந்து கொடுத்துத் தூக்கிய காட்சியை இவ்வாறு காட்டுகிறார்.

*''செப்பாருடைய திருமாலவன் தன்*
*செந்தாமரைக் கைவிரலைந்தினையும்*
*கப்பாக மடுத்து மணி நெடுந்தோர்*
*காம்பாகக் கொடுத்துக் கவித்தமலை*
*எப்பாடும் பரந்திழி தெள்ளருவி*
*இலங்கு மணிமுத்து வடம் பிறழ*
*குப்பாய மென நின்று காட்சி தரும்*
*கோவர்த்தன மென்னுங் கொற்றக்குடையே''*

'குப்பாயம்' என அவர் குறிப்பிடுவது குடையை. அதனை விரித்துத் தரையில் விரித்தது போல. கோவர்த்தனத்தைப் பெரியாழ்வார் மட்டுமன்றி, ஆண்டாள், நம்வாழ்வார் ஆகியோரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

கண்ணபிரான் பசுக்களுக்குப் புல்லும் நீரும் அளித்து வளர்த்ததனால் அவனுக்குக் **கோவர்த்தனன்** என்னும் திருப்பெயரும் உண்டு. இத்திருப்பெயரை இம்மலைக்கு இட்டு வழங்கினான். இதை நினைத்துப் பெரியாழ்வார் ''தன்பேர் இட்டுக் கொண்டு தரணி தன்னில் தாமோதரன் தாங்கு தடவரை'' என்று பாடினார்.

இம்மலை வடமதுரையிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த மலையும் கண்ணன் மாடுகள் மேய்த்த இடமாகும். இது மிக உயர்ந்த மலையன்று; அழகிய ஒரு சிறு நீளக்குன்றே; குன்று மரங்கள் நிறைந்ததாக விளங்குகிறது. இதனால்தான் பெரியாழ்வார்.

*''குரவிற் கொடி முல்லைகள் நின்று உறங்கும்*
*கோவர்த்தனம்''*

என்று இம்மலையை வருணித்தார் போலும். சுமார் 15 கி.மீ. சுற்றளவு இருக்கும் என இம்மலை கருதப்பெறுகிறது. மலையின் இருபுறங்களிலும் சிற்றூர்களிலும், வரப்பெடுத்த சிறு வயல்களும், வாய்க்கால்களும் காணலாம்.

வல்லபர் இந்தக் குன்றின் மீது ஸ்ரீ நாதர் கோயிலை எழுப்பினார் எனவும், இசுலாமியரிடமிருந்து பாதுகாத்தற் பொருட்டு இதிலிருந்த இறைவன் திருமேனியை உதயப்பூர் அரசு எடுத்துச் சென்றதாகவும் கூறுவர். ஏராளமான பயணிகள் வந்து செல்லும் செல்வச்செழிப்புள்ள திருத்தலமாக விளங்குகிறது. காணிக்கைகள் கணக்கின்றிக் குவிக்கின்றன. குன்றினைப் பக்தர்கள் வலம் வருகின்றனர். வல்லபர் இத்திருக்குன்றினையே கண்ணனாய் வழிபட்டார் என்பர்.

மலையடி வாரத்தில் உள்ள இலக்குமி நாராயணன் இத்திருக்கோயிலில் இராமானுசர் வகுத்த சம்பிரதாயப்படி வழிபாடு நடைபெறுகிறது. இதனைத் தவிர அரிதேவர் கோவில் ஒன்று உள்ளது. இப்பகுதியிலுள்ள திருக்கோயில்களில் இது மிகப் பழமையான ஒன்று.

இத்திருக்கோயில் அருகில் திருக்குளம் ஒன்று நான்கு புறமும் படிக்கட்டுகளுடன் ஆறுபோல் நீண்டு விளங்குகிறது. மிகவும் ஆழமான இத்திருக்குளத்தில் எப்போதும் நீர் நிறைந்துள்ளது.

ஆழ்வாரின் திருமொழிகளில் மலையின் வருணனையும், கண்ணன் மலை எடுத்த எளிமையும் கலந்து காண்கிறோம். கோவர்த்தன மலையைக் குடையாகக் பிடித்த நிகழ்ச்சியை நம்மாழ்வார்,

***உண்ண வானவர் கோனுக்கு ஆயர் ஒருப்படுத்த அடிசில் உண்டதும்***
***வண்ண மால் வரையை எடுத்து மலை காத்ததும்***

எனப் போற்றுகிறார். திருவரங்கப் பெருமாள் மீது மோகித்த நிலையில்.

*''கொழுந்து வானவர் கட்டு, என்னும், குன்று*
*ஏந்தி கோநிரை காத்தவன் என்னும்''*

என்று அவர் திருமகள் அனுபவமாகவும் அது வெளிப்படுகிறது.

ஆண்டாள் நாச்சியார் திருமொழியில்

*''கற்றன பேசி வசவு உணாதே*
*காலிகள் உய்யமழை தடுத்துக்*
*கொற்றக் குடையாக ஏந்தி நின்ற*
*கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின்*

என்று வேண்டுகிறாள்.

பெரியாழ்வார்

*'குன்று எடுத்து அநிரை காத்த ஆயா, என்னை நமன்-தமர்கள் வந்து பற்றும்போது நீ வந்து காக்க வேண்டும்''*

என்று வேண்டுகிறார்.

கோவர்த்தன கிரியை அந்தக் கோபாலன் தூக்கித் தாங்கிய நிலையை ஆழ்வார் வருணிக்கும் நேர்த்தி, நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. ஏழுநாள் பொழிந்த கல்மாரியைத் தாங்காமல் அம்மைத் தடங்கண் மடவாய்ச்சியரும் ஆனாயரும் ஆநிரையும் அலரிக் கண்ணனிடம் சரண்புக அவன் யானைக்குச் சோற்றுத் திரளைக் கொடுக்கும் யானைப்பாகனைப் போல், ஒரு கையினை மலையில் வேர்ப்பற்றிலே செலுத்தி மற்றொரு கையினால் மலையின் மேலே பிடித்துத் தூக்கினான். கண்ணன் தன் திருத் தோள்களைக் குடையின் காம்பாகவும் தன்னுடைய செந்தாமரை மலர் போன்ற திருக்கையி னுள்ள ஐந்து விரல்களைக் குடைக் காம்படியிலுண்டாகின்ற கிளைக் கொம்புகளாகவும் கொண்டு மலையைக் குடைந்து குடையாகக் கவித்தான் கண்ணன் ஏழு நாட்களையும் தனியாக மலையைத் தாங்கியிருந்தும் அவனுடைய இயற்கையழகும் மாறவில்லை; அவன் வாட்டமும் அடையவில்லை. இந்நிகழ்ச்சி ஓர் இந்திர ஜாலம் போல் நடைபெற்றது.

## நந்த கிராமம்

நந்தன், யசோதை இருவரும் கண்ணனின் வளர்ப்புப் பெற்றோர்கள். கண்ணன் புகழால் இவர்கள் புகழ் சிறந்தது. இவர்கள்

பெயரை நிலை நிறுத்தும் வகையில் கோவர்த்தனத்திலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் நந்தகிராமம். இங்குப் பாலகிருஷ்ணனுக்குத் திருக்கோயில் ஒன்றுள்ளது.

### *பர்சானா*

நந்த கிராமத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவிலுள்ள இச்சிற்றூரில் குன்றின்மீது இராதைக்கு ஒரு திருக்கோயில் உள்ளது. இராதையின் பெயரால் இராதைக் கோயில் என வழங்கி வருகிறது.

### *சங்கேதபீகாரி*

பர்சானாவின் அருகில் இரண்டு சிற்றூர்களுக்கு நடுவில் சங்கேதபீகாரி எனும் கோவில் உள்ளது. இங்குத்தான் இராதையை வரச்சொல்லிச் சங்கேதம் (சமிக்ஞை) செய்து கண்ணன் கூடிமகிழ்ந்தான். பீகாரி என்றால் கண்ணன் என்பது பொருளாகும். இந்த இடம் இருவரும் சந்தித்த இடம் என்பதன் நினைவாகக் கோயில் எழுப்பப் பெற்ற இடமாகும்.

### *பிருந்தாவனம்*

''பிருந்தாவனமும் நந்தகுமரானும் யாவருக்கும் பொதுவன்றோ?'' எனவே பிருந்தாவனம் பற்றி நாம் அறிந்து தெளிய வேண்டும். பிருந்தாவனம் என்பதற்கு நெருஞ்சிக்காடு என்பது பொருள். கண்ணன் பிறந்தபின் நெருஞ்சிக்காடு 'விரஜபூமியாக' அதாவது மேய்ச்சல் நிலமாக மாறிவிட்டது. வட இந்தியாவில் சந்திரப்பிரதேசத்திலுள்ள இந்த விரஜபூமி 108 சதுர மைல் பரப்புடையது. இதில் பல புண்ணியத் தலங்களும் தீர்த்தங்களும் உள்ளன. இதன் நடுவில் தூய யமுனைப் பெருநீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்துப் பாய்ந்து வளம் சேர்க்கிறது. இப்பிருந்தாவனத்தில் கண்ணன் ஆநிரைகளை மேய்த்தவாரே திருவிளையாடல் ப்ல புரிந்து காலம் போக்கினான்.

மதுராவிற்கும் பிருந்தாவனத்திற்கும் பத்துக் கிலோ மீட்டர் தொலைவுள்ளது. மதுராவிலிருந்து பிருந்தாவனத்திற்குப் பேருந்து வசதி உள்ளது. சந்து பொந்துகள் பல நிரம்பிய பகுதியாக விளங்குகிறது. இப்பிருந்தாவனம் கோபியர் கொஞ்சும் ரமணனாகக் குழலாதிக் குரவைக் கூத்து நிகழ்த்திய இடமாகும்.

பிருந்தாவனத்தில் ***காளியன் மடு, கோபியரின் துகிலுரித்த கட்டம், கேசிகட்டம், அக்ரூரர் அழுதுபுரண்ட இடம், பான்சிவனம், சேவாகுஞ்சம், பக்தவிலோசன்*** முதலான இடங்கள் உள்ளன. கேசிக் கட்டம் தான் கேசி எனும் அசுரனைக் கொன்ற இடமாகும். கோபியரின் உள்ளத்தைக் கவர்ந்த வனம்தான் பான்சிவனம். காளிங்கன் மீது நின்ற கண்ணன் நின்று ஆடிய இடம்தான் காளியன்மேடு.

பிருந்தாவனத்தில் நள்ளிரவில் இன்னும் கண்ணனின் குழலோசையைக் கேட்பதாக அங்கு வாழும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

பிருந்தாவனத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பழைய, புதிய கோயில்கள் உள்ளன. இக்கோயில்களெல்லாம் சைதன்ய மார்க்கத்தினராலும், நிம் பார்க்க மார்க்கத்தினராலும் கட்டப் பெற்றவையாகும். இத்திருக்கோவில்கள் யாவை என்பதைக் காண்போம்.

## ***கோவிந்த தேவர் கோயில்***

சிவப்பு நிறக் கற்களால் கோவிந்த தேவருக்குக் கட்டிய கோயில் பழமையான கோயில். மதன் மோகருக்குள்ள கோயில், இராஜா மான் சிங்கின் காலத்தில் கட்டப்பெற்றது.

## ***இராதா ரமணர் கோயில்***

இக்கோயிலைக் கோபால்பட் கட்டியவர் ஆவார். 1542 இல் கட்டப்பெற்ற இக்கோயில் சாளக்கிராமம் கொண்டு உருவாக்கப்பெற்றது. 1542இல் கட்டப் பெற்ற இக்கோயில் சாளக்கிராம மூலவருக்குக் கைகள் தோன்றின என்று கூறுவர்.

## ***ஷாஜி கோயில்***

இக்கோயிலை அமைத்தவர் ஷா பெஹரிலால் எனவும் அவருடைய பெயராலேயே ஷாஜிகோயில் என வழங்கப் பெறுவதாகவும் கூறப் பெறுகிறது. இது பளிங்குக்கல் கோயிலாகும். அழகிய தூண்கள் வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன.

## பங்கே பீகாரி கோயில்

பங்கே பீகாரி என்பது கண்ணனின் பெயர். நிம்பார்க்கரின் இயக்கத்தின் ஒரு கிளையை ஹரிதாஸ் முனிவர் என்னும் இசைக் கலைஞர் நிறுவினார். ஹரிதாஸ் முனிவர் அக்பரின் அரசவைப் பாடகராகிய தான்சென் என்பாரின் குருநாதர். ஹரிதாசருக்கும் இங்கு ஒரு கோயில் உண்டு பங்கே பீகாரி கோயில் பிருந்தாவனத்தில் மிகவும் பெயர் பெற்றது.

## காளிங்கன் மடு

இங்குக் கண்ணன் தான் வென்று அடக்கிய காளிங்கன் மீது நின்று ஆடிய கோலத்துடன் பாம்பின் மீது காட்சி தருகிறார்.

## புன்னை மரம்

கோபாலன் கோபியரின் ஆடைகளை எடுத்துக் கொண்டு நின்று விளையாடிய புன்னை மரம் என அங்குள்ள புன்னைமரம் ஒன்று கூறப்படுகிறது. இப்புன்னை மரத்தில் அன்பர்கள் கட்டி வைத்துள்ள துணித்துண்டுகள் தொங்குகின்றன. அங்கு வேண்டிக் கொண்டு கட்டி வைக்க அவற்றை விற்பனை செய்கின்றனர். பலராமன் கோவில் ஒன்று இங்குள்ளது.

பிருந்தாவனத்தில் கண்ணன் படுத்துறங்கிய தொட்டில் ஒன்று உள்ளது. இத்தொட்டிலில் கயிறு ஒன்று கட்டடப்பட்டுள்ளது. அதற்கு ஒரு கட்டணம் வைத்துள்ளனர். அத் தொட்டிலை ஆட்டினால் பிள்ளைபேறு கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

பிருந்தாவனத்திலிருந்து மதுரா போகும் வழியில் உள்ள பிர்லாவால் கட்டப் பெற்ற கோயில் **கீதாமந்திர்** என்று அழைக்கப்பெறுகிறது. இங்குத் திருமகள், திருமாலுடன் காட்சி அளிக்கிறார். கண்ணன் திருவிளையாடல்கள் இங்கு வெள்ளைக் கல்லில் வடிக்கப் பெற்றுள்ளதைக் காணலாம். கருங்கல்தேர் உள்ளது. கீதைச் சொற்பொழிவிற்குக் கூடம் உள்ளது. மற்றொரு புரம் சிவன் கோயிலும் இக்கீதா மந்திரில் உள்ளது.

## அரங்கமந்திர் (ஸ்ரீ ரெங்காஜி மந்திர்)

அரங்க மந்திர் எனவும ஸ்ரீ ரெங்காஜி மந்திர எனவும அழைககப பெறும் திருக்கோவில் எம்பெருமான் நம் திருவரங்கத்து அரங்கநாதப்

பெருமான் திருக்கோவில் ஆகும். வடபுலத்தில் நம் தமிழ் மண்ணின் தமிழ் மணம் கமழ அரங்கநாதருக்கு அற்புதமான திருக்கோவில் அதுவும் தமிழ் முறையில் வழிபாட்டுடன் அமைந்திருப்பது நெஞ்சில் ஒரு நிறைவை ஏற்படுத்துகிறது. இத்திருக்கோவிலைப் பார்த்ததும் காஞ்சியைப் போலவும், திருவரங்கத்தைப் போலவுமான ஒரு திருக்கோயில் கண்ணில் படுகிறது. இக்கோயில் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுப்பிய திருக்கோவில் இத்திருக் கோவிலைத் தமிழர் ஒருவர் அமைத்துள்ளார். அவருடைய பெயர் கோவர்த்தனம் அரங்காச்சாரியார்.

அரங்க மந்திரில் ஐந்து திருச்சுற்றுகள், ஐந்து கோபுரங்கள், ஐந்து மதில்கள் உள்ளன. திருக்கோயிலின் கடைசி வெளிச் சுற்றினுள் இத்திருக்கோயில் பணிக்காகச் சுமார் 30 வைணவக் குடும்பங்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்து குடியேறியுள்ளனர்.

1849 ஆம் ஆண்டு இத்திருக்கோவில் பிரதிட்டை செய்யப்பெற்றது. இத்திருக்கோவிலில் பாஞ்சராத்ர ஆகம விதிப்படி ஆறுகாலத் திருவாராதனமும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. கருவறையில் ஆண்டாள் அரங்க மன்னார் சந்நிதியும், உள்திருச்சுற்றில் திருவேங்கடவன், இராமபிரான், திருவரங்கன் சந்நிதிகளும், ஆழ்வார் ஆசாரியர்களின் சந்நிதிகளும் உள்ளன. இங்குப் பெருமாளுக்குரிய வாகனங்கள், அழகிய திருத்தேர் ஆகியன உள்ளன. சைத்ர கிருஷ்ண திருதியை முதல் பத்து நாட்கள் பெருந் திருவிழாவாகப் பெருஞ்சிறப்புடன் கொண்டாடுகின்றனர். காலை மாலையில் பக்திப் பாடல்கள் முழக்கம் கேட்டு நம் செவி குளிரும்.

இத்திருக்கோயிலை அமைத்த கோவர்த்தனம் அரங்காச்சாரியார், அகரம் என்னும் சிற்றூரில் 1809 இல் ஐப்பசி மாதத்தில் பிறந்தார். காஞ்சியிலும், திருப்பெரும்புதூரிலும் தென்மொழி, வடமொழி, வல்லவராய் விளங்கினார். வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு கண்ணன் பிறந்து விளையாடின விரஜ பூமிக்கு வந்து, அங்குள்ள புனிதமான இடங்களைச் சேவித்துக் கோவர்த்தனத்தை அடைந்தார்.

ஆசாரியராக விளங்கிய சீனிவாச்சாரியரைப் பணிந்து அங்கேயே தங்கி அவரிடம் இரகசிய கிரந்தங்கள், ஸ்ரீ பாஷ்யம், பகவத் விஷயம் ஆகியவற்றைக் கற்றார். கோவர்த்தன பீடாதிபதி வயது முதிர்ந்து உடல்

தளர்ந்த நிலையிலிருந்தவர் வாரணாசியில் கற்றுக் கொண்டிருந்த அரங்காசாரியாரை அழைத்து வரச் செய்து அவரைப் பீடாதிபதியாக்கிச் சில காலமிருந்து பின் வைகுண்ட பதவி பெற்றார்.

கோவர்த்தனன், ***அரங்கதேசிகன்*** ஆகிய திருநாமம் பெற்ற இவருக்குச் சீடர்கள் பலராவர். வடநாட்டில் வைணவ சமய மறைகளை வளர்க்க வழிகண்டவர் அரங்காச்சாரியார். வடமொழிப்புலவர்கள் தமிழ் வைணவ நூல்களில் ஞானம் பெற வகை செய்தவர் இவர். வைணவ சமய நூல்கள் திருவாய் மொழி, திருப்பாவை, திருப்பல்லாண்டு முதலாகப் பல நூல்களை வியாக்யானங்களுடன் மொழி பெயர்த்தார்.

இவருக்கு இராதாகிருஷ்ணன் சேட்கி என்பவர் குடும்பத்தினர் அரங்காச்சாரியார் விருப்பப்படி 1844 இல் திருக்கோயில் கட்டும் திருப்பணியைத் தொடங்கி 1849 இல் நிறைவு செய்தனர். இத்திருப்பணிக்காக இவரை வானமாமலை ஜீயர் சுவாமிகள் 'தேவரீர் மணவாள மாமுனியோ?' எனச் சொல்லிப் பாராட்டினாராம்.

1874இல் இவர் திருநாடு அலங்கரித்தும் அவருடைய சிலை செய்யப்பெற்றது. அரங்காச்சாரிய சுவாமிகள் காலத்தில் கோவர்த்தன ஆசாரிய பீடம் ஏற்பட்டது. அவருக்குப்பின் அரங்காச்சாரியாரின் திருக்குமாரர் சீனிவாச்சாரியார் பத்தாண்டுக் காலம் வாரிசாக அமர்ந்தார். இவருக்குப்பின் இவருடைய திருமகனார் இரண்டாவது கோவர்த்தனம் அரங்காசாரியார் பீடாதிபதியானார். கோவர்த்தன பீடாதிபதியே அறங்காவலர் குழுவின் தலைவராக விளங்கி வருகிறார்.

மதுராவிலிருந்து அடுத்துச் செல்ல வேண்டிய இடம் திரு ஆய்ப்பாடி.



நான்கு

# 4. திரு ஆய்ப்பாடி (கோகுலம்)

## கண்ணன் தவழ்ந்த பூமி

திருஆய்ப்பாடி கண்ணனின் பிள்ளைப் பருவ விளையாட்டுக்கள் நடந்த இடமாகும். கண்ணன் சின்னஞ்சிறு பாலகனாய் ஆயர் பாடியில் செய்த லீலைகளை எண்ணற்ற நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. வீடுகளில் வெண்ணெய் திருடி உண்டது, வேணுகானம் இசைத்தது. இளங்கன்னிப் பெண்களை ஏய்த்தது, இளங்கன்றுகளைக் கோபாலனாய் மேய்த்தது முதலாய பல்வேறு விளையாடல்கள் நிகழ்த்திய களமே இந்தக் கோகுலமான திருஆயப்பாடி.

ஆழ்வார்களில் பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், ஆகிய மூவரும் 22 பாசுரங்களில் இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். ஆனால் இன்று ஆழ்வார்களால் ஆராதிக்கப் பெற்ற திருக்கோவில்களும் திருமூர்த்தங்களும் இப்போது இல்லை. இன்று இருப்பன வெல்லாம் பிற்காலத்தியன.

ஆயினும் ஒரு திருக்கோவிலுக்கு மட்டுமே ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தனர் என்று கொள்ளாது ஆயர் பாடி முழுமைக்குமே மங்களாசாசனம் பொருந்தும் என்று கொள்ள வேண்டும் என்பர் சான்றோர்.

அயோத்தியினைப் போலத் துவாரகைபோல, மதுராபுரி போல ஆரவாரமும், பரபரப்பும் இங்குக் காண இயலாதெனினும் அமைதி தவமும் ஆரண்யம் போல் திகழ்கிறது கோகுலம்.

கண்ணன் துவாபரயுகத்தில் பாலகுமாரனாக ஓடியாடி விளையாடி லீலைகள் செய்தான். கோகுலம் என இப்போது அழைக்கப் பெறும் இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடமே

உண்மையான கோகுலம் என்பர். எல்லாமே கோகுலம் எனினும் இந்த இடம் மட்டுமே கண்ணனின் ஸாந்நித்யம் பொங்கிப் பெருக்கெடுத்துப் பேரருவியாய்ப் பாய்ந்த இடம்.

## இருப்பிடம்

திருவாய்ப்பாடி ஒருத்தி மகனாய் நந்தகோபன் வீட்டில் வளர்ந்த இடமாகும். இத்திருத்தலம் யமுனையின் வடகரையில் உள்ளது. சுமார் இரண்டு கிலோமீட்டர் அகலமுள்ள ஆற்றைக் கடந்து சென்றே கோகுலம் சேரவேண்டும். இவ்வாறு செல்லின் ஆறுகிலோ மீட்டர் தொலைவு. பாலத்தின் வழியாகச் செல்லின் சுமார் 9 கிலோ மீட்டர். கோகுலம் செல்வதற்கு மதுராவிலிருந்து பேருந்து வசதிகள் உண்டு.

ஆயர்பாடி மிகச் சிறிய ஊர். மதுரையின் தென் கிழக்கில் உள்ள ஊர் இவ்வூரைப் பார்த்தால் கண்ணன் தன் பிள்ளைப் பிராயத்திலே பெரிய பெயர் பெற்றவனான கண்ணன் அப்பிராயத்தைக் கழித்த இடம் என்று சொல்லும்படியான எவ்வித அறிகுறியும் இங்கு இல்லை.

## நவமோகனன்

கோகுலத்திற்கும் கோவில்கள் பல உள்ளன. அவையெல்லாம் வல்லபர்கள் என்னும் பிரிவினரால் நவநீத கிருஷ்ணனுக்காக ஆங்காங்கே கட்டப்பெற்றவை.

திரு ஆய்ப்பாடியில் மூலவரான கண்ணனின் திருநாமம் **நவமோகன கிருஷ்ணன்**. இவர் நின்ற வடிவில் கிழக்கு நோக்கிக் கோகுலத்தில் சேவை சாதிக்கிறார். இங்குள்ள தாயார்களின் திருநாமங்கள் ருக்மிணிப் பிராட்டி, சத்தியபாமா பிராட்டி ஆகும். இருதேவியருடன் எம்பெருமான் இங்கே எழிற் கோலம் காட்டுகிறார்.

இத்திருத்தல விமானம் ஹேம கூட விமானம் ஆகும். இத்திருத்தல வரலாற்றில் நாம் ருக்மிணிப் பிராட்டியின் பூர்வோத்ரம் அறிகிறோம். சத்ய பாமையின் சரித்திரம் அறிகிறோம்.

## உபய நாச்சியார்

ருக்மிணிப் பிராட்டி சத்ய பாமையுடன் உபயநாச்சியாராக விளங்குகிறார்.

இத்திருத்தலம் ஒருவனுடைய வாழ்க்கையில் தாயும், தாரமும் சமமானவர்கள் என்பதைக் காட்டுகிறது. கண்ணன், தாரங்கள் இருவருடன் தாயையும் தாரத்தையும் சமப்படுத்தும் தத்துவம் உணர்த்திய திருத்தலம் இத்திருத்தலம்.

## சூர்தாஸ்

இத்திருத்தலத்துடன்' தொடர்புடைய வரலாறு மகாகவி சூர்தாஸ் என்பவரின் வரலாறு. இக்கவிப் பெருமான் ஸ்ரீ வல்லபரின் சீடர். இவருடைய கண்கள் உலகைக் காண இயலாத கண்கள். விழியில்லாத இம்மகாக்கவியை நவநீத கிருஷ்ணன் திருக்கோயில் திருமுன் அழைத்துச் செல்லப் பெற்றபோது தான் இவருடைய முதற்கவிதை பிறந்தது. அதனைத் தொடர்ந்து பாடிப்,பாடிக் கவிஞரான சூர்தாஸ் மகாக்கவிஞரானார்.

சூர்தாஸ் தம் முற்பிறவியில் ஸ்ரீ கிருஷ்ணனின் அவதார காலத்தில் வாழ்ந்தவர். சத்தியபாமாவிற்கு உதவி செய்ததால் கண்ணனால் சபிக்கப்பெற்றதால் இப்பிறவியில் பார்வையற்றவராய்ப் பிறந்தார். சூர்தாசராகப் பிறந்த காலத்தில் கண்ணனின் சாபத்திற்கு ஆளான சத்தியபாமையும் குற்றவேல் செய்யும் பணிப்பெண்ணாய் உதித்திருந்தார்.

இவ்வாறு சூர்தாஸ், சத்தியபாமா இருவரும் சபிக்கப் பெற்ற வரலாற்றில் ஒரு மாபெரும் பரமாத்ம தத்துவமே அடங்கியுள்ளது. அதனைக் காண்போம்.

## அக்ரூரர்

அக்ரூரர் என்பவர் யதுவம்சத்தில் சுலபல்கனுக்கு காந்தினிக்கும் மகனாகப் பிறந்து கம்சனின் அமைச்சராக விளங்கினாலும் கண்ணனிடம் அளவற்ற பக்தி உடையவராயிருந்தார். கம்சன் இவரைக் கண்ணனைக் கொல்ல ஒரு தனுர்யாகம் செய்வதாகப் பொய்யான ஒரு காரணத்தைச் சொல்லி அவரையும் அவருடன் பலராமனையும் அழைத்து வருமாறு அனுப்பினான்.

ஆனால் கண்ணன் மீது பக்தி கொண்ட அக்ரூரர், பரமாத்மாவிற்குப் பாதகம் செய்தவதா என்று மனங் கசிந்தார். தனக்கு இடப்பட்ட அரச ஆணையை நிறைவேற்றக் கண்ணனையே நாடினார். யமுனையில் மூழ்கி எழுந்தபோது கண்ணனும் பலராமனும் யமுனை நதியின் மீது

தேரைச் செலுத்திக் காட்சி தந்த அற்புதம் கண்டார். அக்ரூரர். பின்னர் அவருக்குத் திருப்பாற்கடலில் பையத்துயின்ற கோலத்தையும் காட்டுதல் செய்து அவருடைய கடமையை நிறைவேற்றக் கூறினார்.

அவ்வாறே அவர்களைக் கம்சனிடம் அழைத்துச் சென்றார். கம்சன் கண்ணன் கையால் வதை செய்யப் பெற்று மறைந்தார். அக்ரூரர் துவாரகாபுரி அரசனாகக் கண்ணன் விளங்கிய வேளையில், கண்ணனைக் காணச் சென்றார். ஆனால் அங்கே கண்ணனைக் காணாமல் தவித்த சத்தியபாமையைக் கண்டார்.

கண்ணனுக்கு நெருக்கமான அக்ரூரரைக் கண்டதும் கோபம் கொண்ட சத்தியபாமை, அக்ரூரரிடம், ஒரு நாழிகைக்குள், கண்ணன் வந்து சேராவிடில் உயிரை விட்டுப் விடப் போவதாகக் கூறிச் சத்தியம் செய்தாள். அக்ரூரர் கண்ணனைத் தேடி அலைந்தார். ஒரு நாழிகை நேரமோ நெருங்கியும் கண்ணனைக் காணவில்லை. சத்தியபாமாவின் உயிரைக் காக்க வழியொன்றும் அறியாது தாமே கண்ணன் வடிவெடுத்துச் சத்தியபாமை முன்நின்று அமைதிப்படுத்தினார். சத்தியபாமாவும் அக்ரூரைக் கண்ணன் என்று கண்டு மகிழ்ந்தார்.

அக்ரூரர் கண்ணனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினார். கண்ணனோ அவர் கூறியது கேட்டுச் சீறி எழுந்து, அவர் செய்த செயல் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம் என எடுத்துக் கூறிச் சபித்தார். அவர் செய்த செயல் துரோகம் எனவும் அஞ்ஞானம் எனவும் எடுத்துரைத்தார்.

அவர் கண்ணனாக மாறிச் சத்திய பாமையிடம் தோன்றியது பரமாத்மவிரோதச் செயல். எப்படியெனில் ஆத்மா பரமாத்ம சொரூபத்தை அடைய இயலாது. அடையவும் கூடாது. உலகமெல்லாம், அணுக்களுள் எல்லாம் வியாபித்திருக்கும் பரமாத்மாவாகிய கண்ணன், ஆன்மாவாகிய அக்ரூரரின் உள்ளேயே இருக்கையில் அவரைத் தேடி அக்ரூரர் அலைந்தது அஞ்ஞானம்.

சத்யபாமாவும், அக்ரூரரும் தங்களுக்குள் இருக்கும் பரமாத்மாவான தன்னை ஒரு நாழிகை நேரமும் உணராமல் அஞ்ஞானச் சேற்றிற்குள் ஆழ்ந்து கிடந்து எங்கெங்கேயோ தேடிய தவறைச் செய்தனர். அக்ரூரர் தம் விழிக்குள் தம் தாயாரைப் பிராட்டியாரைப் பெருமானாக நம்ப வைத்த நாடகம் மன்னிக்கவியலாப் பிழை. அதுபோல் அவருடைய விழிக்குள்

சத்தியபாமையின் நம்பிக்கை சத்தியம் தவறிய மோசடியாக, நாயகத் துரோகமாக விளங்கியது. எனவே அஞ்ஞான அறியாமைச் சேற்றில் ஆழ்ந்தமைக்காக இருவரும் தண்டிக்கப் பெறவேண்டுமெனச் சபித்தார்.

அவ்வாறே சத்யபாமா பணிப் பெண்ணாகவும், அக்ரூரர் சூர்தாசராகவும் பிறந்தனர். சூர்தாசனின் ஊனக் கண்கள் தாம் குருடே ஒழிய ஞானக்கண்கள் திறந்திருந்தன. சூர்தாசர் தம்ஞானக் கண்ணால் கண்ட கண்ணனைப் பக்தியால் உருகிப்பாடிய பாடல்கள் ஒப்பற்ற கவிதைகள். சூர்தாசரின் சீடரான தான்சேன் அவந்தி அரசவையில் சூர்தாசரின் பக்தி வெள்ளம் பெருகச் செய்ய ஏற்பாடு செய்தார்.

அவந்தி அரசரின் அவையிலே பணிப்பெண்ணாக மறுபிறப்பில் பாமா அவதரித்திருந்தார். அந்தப்புரத்தில் சூர்தாசரின் இசைக் கருவி கொட்டியது. சூர்தாசரின் கண்முன்பு அடிமைப் பெண்ணாக விளங்கிய சத்யபாமை தென்பட்டார். சூர்தாசருக்கும், சத்திய பாமைக்கும் கண்ணனால் சபிக்கப் பெற்ற நினைவுகள் தோன்றி மறைந்தன.

அன்னைப் பிராட்டியாரின் அடிமைக் கோலம் கண்டு அக்ரூரர் அழுது ஆற்றினார். எம்பெருமான் பிரசன்னமாகி உலகிற்கு உண்மையை விளக்கினார். ஆத்மா தனி, பரமாத்மா தனி, பிறப்பிற்கும் இறப்பிற்கும் ஆளான எந்தப் புனித ஆத்மாவும் இறைவனாகி விட முடியாது. தெய்வம் மனிதனாகலாம், மனிதன் தெய்வமாகி விட முடியாது எனும் தத்துவத்தை எம்பெருமான் எடுத்துக் காட்டினார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த ஆயர்பாடியைச் சேவித்தவர் கட்குச் செல்வம் சேருமென்பது நம்பிக்கை.

## கோகுல லீலைகள்

ஆழ்வார்கள் தம்பாடல்களில் கண்ணன் வெண்ணெய் உண்ட வரலாறு, யசோதை உரலில் கட்டிய வரலாறு, ததிபாண்டனுக்கும் தாழிக்கும் முக்தியளித்த வரலாறு, மருதமரங்கள் குறித்த வரலாறு, வையம் ஏழும் கண்ட வரலாறு, பூதனை அழித்த வரலாறு, பகாசுரன் வரலாறு, சகடாசுரன் வரலாறு முதலிய கோகுலத்தில் நடைபெற்ற வரலாறுகளைச் சுவைபடச் சொல்லுகின்றனர்.

ஆழ்வார்களுக்கெல்லாம் முற்பட்டவரான இளங்கோ அடிகளார், தம் சிலம்பில் கண்ணன் சேட்டை பொறுக்காத யசோதை ஒருநாள்

கண்ணனை உரலில் கட்டி வாய் பொத்தி நிற்க வைத்த நிகழ்ச்சியை ஆய்ச்சியர் குரவையில் அழகுபடக் காட்டுகிறார்.

*வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி*
*கடல்வண்ணன் பண் டொருநாள் கடல்வறிய கலக்கினையே*
*கலக்கிய கை அசோதையார் கடை கயிற்றால் கட்டுண்ணகை*
*மலர்க்கமல உந்தியாய் மாயமோ? மருட்கைத்தே.*

நம்மாழ்வாரோ உன்னை உன் கைகளை உரலினோடு இணைத்துக் கட்டிப் போட்டாளே அதனை ஏற்றுக் கொண்டு அந்த உரலுடன் எப்படித்தான் இணைந்திருந்தாயோ? என்று ஏங்குகிறார்.

*மத்துறு கடை வெண்ணெய் களவினில்*
*உரலிடை யாப்புண்டு*
*எத்திறம் உரலினோடு இணைந்திருந்து*
*எங்கிய எளியே.*

கண்ணன் கோகுலம் வந்துற்ற செய்தி கேட்ட அவ்வூரார் ஆராவாரத்துடன் வரவேற்றதைப் பெரியாழ்வார்

*ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார்*
*நாடுவார் நம்பி நாரணனெங்குற்றா னென்பார்*
*பாடுவார்க்கும் பல்பறை கொட்ட நின்று*
*ஆடுவார்களு மாயிற்றாய் பாடியே.*

திருமங்கையாழ்வார் வெண்ணெய் உண்ட நிகழ்ச்சியைத் தம் பாசுரத்தில்,

*உறி ஆர்ந்த நறு வெண்ணெய் ஒளியாற் சென்றங்கு*
*உண்டானைக் கண்டு, ஆய்ச்சி உரலோடு ஆர்க்க*
*தறி ஆர்ந்த கடுங்களிறே போல நின்று*
*தடங்கண்கள் பனிமல்கும் தன்மையானை*

எனப்பாடி மகிழ்கிறார்.

''வெண்ணெய், தயிர் இவற்றைக் களவாயுண்ட நிகழ்ச்சி பல்வேறு விதமாகச் சித்தரிக்கப் பெறுகின்றது. ''தாரார் தடந் தோள்கள் உள்ளளவும் கைநீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கிய'' கண்ணன் பிடிபடுகின்றான். ''தாயெடுத்த சிறு கோலுக்கு உளைந்தோடித் தயிருண்ட வாய் துடைத்த மைந்தன்'' அந்தத் தயிரை மறைப்பதாகத் துடைத்துக் கொள்ளத் தொடங்கி வாய் நிறையச் சுற்றிலும் பூசிக் கொள்வான்; பிறகு யசோதையால் அடிபட்டு அழுவான்;

அஞ்சினாற்போல் நோக்குவன்; வாய் துடிக்கும்படி விக்கி விக்கி அழுவான்; இறுதியாக அஞ்சலி பண்ணுவன். குலசேகராழ்வார் தேவகி புலம்பலாகக் காட்டுவன இவை.

*''முழுதும் வெண்ணெய் அளைந்தொட்டுண்ணும்*
*முகில் இளஞ்சிறு தாமரைக் கையும்*
*எழில்கொள் தாம்பு கொண்டிருப்பதற்கு என்கும்*
*நிலையும், வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்*
*அழுகையும் அஞ்சி நோக்கு மந் நோக்கும்*
*அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதும்*
*தொழுகையும் இவை கண்ட அயோதை*
*தொல்லையின் பத்திறுதி கண்டாளே''*

உரலில் பிணிக்கப்பெற்ற கண்ணன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து அங்கு இருந்த இரட்டை மருத மரத்தின் நடுவே எழுந்தருள, அம்மரங்கள் இரண்டும் முறிந்துவிழ, முன் ஒரு கால் முனிவர் நாரதரால் சாபவிமோசனம் பெற்ற குபேர புதல்வர்கள் சாபம் தீர்ந்ததைத் திருமங்கை யாழ்வார் ***''இருங்கைமா கரி முனிந்து''*** எனும் பாசுரத்தில் பல நிகழ்ச்சிகளுடன் அனுசந்திக்கிறார்.

*''கையும் காலும் நிமிர்த்திக் கடாரா நீர்*
*பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்*
*ஐய நாவழித் தாளுக்கு அங்காந்தி-*
*வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே''*

என, யசோதை கண்ணன் திருவாயில் வையம் ஏழும் கண்ட வரலாறு காட்டுகிறார் பெரியாழ்வார். யசோதைக்குத் தெய்வத் தன்மை காட்டிய வரலாறு இது.

கண்ணனுக்கு நஞ்சு தீட்டிய முலையூட்டிய பூதகியைச் சாய்த்தான் ***'பேய்முலை நஞ்சுண்டு'*** என்று பாடினாள் ஆண்டாள். இந்நிகழ்ச்சியைப் பெரியாழ்வார்,

*கஞ்சன் கனுக் கொண்டு நின்மேல்*
*கருநிற செம்மயிர்ப் பேயை*
*வஞ்சிப்பதற்கு விடுத்தான்*

என்பார். திருமங்கை யாழ்வார், ***''பேய்த்தாயை முலைஉண்ட பிள்ளை தன்னை''*** எனவும், ***'இழை ஆடு கொள்கைத் தலைநஞ்சம் உண்டிட்டு'*** எனவும், ***'வஞ்சம் மேவி வந்த பேயின் உயிரை உண்டமாயன்'*** எனவும் பாடி மகிழ்கிறார். நம்மாழ்வார் ***''பெய்யும்***

**பூங்குழல் பேய்முலை உண்டபிள்ளைத் தோற்றமும்"** **"வஞ்சப்பெண்ணைச் சாவப் பால் உண்டதும்"** என்று பாடியுள்ளார்.

புள் வடிவில் பகாசுரன் எனும் அரக்கனை அறுத்தழித்ததை ஆண்டாள் **"புள்ளியின் வாய்க்கீண்டானைப் பொல்லா அரக்கனை"** என்பார். திருமங்கையாழ்வார் ***'புள்வாய்ப்பிளந்த புனிதா'*** என விளித்தார். நம்மாழ்வார், **'இகல்கொள்புள்ளைப் பிளந்ததும்'** என்றார்.

*"பள்ளத்தில் மேயும் பறவை உருக்கொண்டு*
*கள்ள அசுரன் வருவானைத் தான் கண்டு*
*புள்இது என்று பொதுக் கோவாய்கீண்டிட்ட*
*பிள்ளை"*

என்று பெரியாழ்வார் பாடி மகிழ்ந்தார்.

***'கள்ளச்சகடம் கலக்கழியக்கால் ஓய்ச்சிட'*** எனக் குறிப்பிட்ட சகடாசுரன் வரலாற்றை வேறு சில நிகழ்ச்சிகளுடன் சேர்த்துத் திருமங்சை யாழ்வார்.

*'இருங்கை மாகரிமுனிந்து பரியைக் கீறி*
*இனிவிடைகள் ஏழ் அடர்த்து மருதம் சாய்த்து*
*வருசகடம் இற உதைத்து மல்லை அட்டு*
*வஞ்சகம் செய்க நஞ்சு ஆளானை"*

எனவும், பொய்கையாழ்வார் ***"சகடுதைத்த ஒண் மலர் சேவடி"***

எனவும் போற்றி மகிழக் காண்கிறோம்.

திருமங்கையின் பாடலில் ஐந்து நிகழ்ச்சிகள் சேர்த்துக் கூறப்பெற்றதைக் காண்கிறோம்.

எம்பெருமானை ***"ரஸோ வைஸா"*** என்று வேதம் வர்ணித்தது, அதாவது, நீதான் சிறந்த ரஸம் என்று, பகவானை விடச் சிறந்த ரஸனை உள்ளவன் இல்லை, என்று வேதம் வருணித்து கிருஷ்ணாவதாரத்திற்கு அதிலும் குறிப்பாகக் கோகுல வாசத்திற்கே பொருந்தும் என்பர். ***'கிருஷ்ண ரஸாயணம் விப'*** என்றார் குலசேகரர்.

## பழைய கோகுலம்

யமுனை நதிக்கரையில் பழைய கோகுலத்தில் உள்ள திருத்தலத்தில் நந்தகோபர், யசோதை, ப்லராமர், தொட்டில் கிருஷ்ணன் ஆகியோர்

எழுந்தருளியுள்ளனர். இங்கு ஒரு சிறப்பு என்று கூறவேண்டுமாயின் இத்திரு உருவங்கள் கல்லிலோ, வெள்ளியிலோ, செம்பிலோ, வடிக்கப் பெறாமல் மரத்தினால் செய்யப்பெற்றவை. இவை பேரெழில் பொருந்தியனவாகும்.

சிறையில் பிறந்த கண்ணன்-தேவகி மைந்தன் ஆயர்பாடியில் நந்தகோபர் வீட்டிற்குக் கொண்டுவரப் பெற்ற போது கோகுலமே மகிழ்ந்தது. ஆண்டு தோறும் இந்த நாள் வந்தவுடன் கோகுலம் விழாக்கோலம் கட்டுகிறது. இந்த நிகழ்ச்சியை **நந்தோற்சவம்** எனும் பெயரில் இன்றும் கொண்டாடுகின்றனர்.

இன்றும் கோகுலாஷ்டமியின் மறுநாள் நந்தோற்சவம் வடநாட்டிலும், பிறமுதன்மையான திருத்தலங்களிலும் கொண்டாடப்பெறுகிறது.

தன்னைத் தாயாகப் பாவித்துக் கொண்டு கண்ணனைக் குழந்தையாக பாவித்துக் கண்ணனுக்குப் பால் கொடுக்க ஒரு தாயின் மனநிலையில் பெரியாழ்வார் அழைக்கிறார். அவர் வழியில் நாமும் இந்த கோகுலகிருஷ்ணனை அழைப்போம்.

*தாய்மார் மோர் விற்கப் போவார் தகப்பன் மார்*
*கற்றானிரைப் பின்போவார்*
*நீயாய்ப்பாடி யிளங்கன்னி மார்களை*
*நேர்படவே கொண்டு போதி*
*காய்வார்க் கென்று முகப்பனவே செய்து*
*கண்டார் கழறந்திரியும்*
*ஆயா, உன்னையறிந்து கொண்டே உனக்*
*கஞ்சு வளம்மம் தரவே*



ஐந்து

# 5. திருப்பிருதி - ஜோஷி மடம் நந்தப் பிரயாகை

## கண்ணன் நின்ற பூமி (பரமபுருஷன்)

திருமங்கையாழ்வார் முதன் முதலில் மங்களாசாசனம் செய்த திருத்தலம் திருப்பிருதி. இங்கிருந்துதான் தனது மங்களாசாசனத்தைத் தொடங்கித் வடநாட்டிலிருந்து தென்னாடு வரும் வழியில் உள்ள திருத்தலங்களில் சிலவற்றை மங்களாசாசனம் செய்துகொண்டு தென்னாடு வந்தார். திருமங்கையாழ்வார் திருப்பிருதிக்கு 10 பாசுரங்கள் வழங்கியுள்ளார்.

### திருப்பிரிதி

இப்போது 'திரிப்பிருதி' என்று அழைக்கப்படும் திருத்தலம் பத்ரிகாசிரமம் செல்லும் வழியில் கடல் மட்டத்திலிருந்து 6150 அடி உயரத்தில் உள்ளது. அரித்துவாரத்திலிருந்து ரிஷிகேசம் வழியாக பத்ரிநாத் செல்லும் வழியில் 310-ஆவது கி.மீ. தொலைவில் உள்ளது. ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ள ஜோஷி மடம் எனும் இடம்தான் திருப்பிரிதி என்கின்றனர். இவ்விடத்தில் இப்போது கோயில்களும், மூர்த்திகளும் உள்ளன. எனினும், நந்தப் பிரயாகையே திருப்பிரிதி எனவும், அதுவுமன்று இமய மலைக்கு உட்புறம் அமைந்துள்ளது. எனவும் கூறுவர். திருப்பிரிதி எது என்பது முடிந்த முடிவாக இல்லை.

**இத்திருத்தலம் கண்ணன் திருத்தலம் என்று கருதப்படுவதேன்? இத்திருத்தலத்து விமானம் கோவர்த்தன விமானம் எனப் பெயர் பெற்றுள்ளது. கோவர்த்தன கிரியைக் கண்ணன் குடையாய்ப் பிடித்துக்**

காத்ததுபோல் இத்திருத்தலத்தில் கோவர்த்தன குடை பிடித்த கண்ணன்போல் காத்து நிற்கிறான் என்பதால் இத்திருப்பெயர்.

இங்குள்ள புஷ்கரணி கோவர்த்தன தீர்த்தம் எனப் பெயர் பெற்றுள்ளது.

திருப்பிரிதியை மங்களாசாசனம் செய்த திருமங்கை ஆழ்வார் இத்தலத்துப் பெருமாளை, இராமனாகவும், கண்ணனாகவும், நரசிம்மராகவும் உருவகித்து மூன்று பாசுரங்கள் பாடியுள்ளமையால் இத்தலத்திற்கும் கிருஷ்ண சேத்திர நிலை கிடைக்கப் பெறுகிறது.

## *பரமபுருஷன்*

இத்தலத்து எம் பெருமான் திருப்பெயர் ***பரமபுருஷன்*** என்பதாகும். கிழக்கு நோக்கிய திருமுகத்துடன் புஜங்க சயனமாகக் காட்சி தரும் இவருடைய திருத்தலப் பிராட்டியார், தாயார் பெயர் பரிமளவல்லி நாச்சியார். திருப்பிரிதி மூலவர் சந்நிதி எனத் தனியாக ஏதுமில்லை. இத்தலத்தில் இருக்கும் சாளக்கிராம நரசிம்மரையே பரம புருஷனாய் எண்ணி அடியார்கள் சேவித்து ஆனந்தம் பெறுகின்றனர். இத்திருக்கோயில் விமானம் வாசுதேவ விமானம் ஆகும்.

நந்த மரபு மன்னர்கள் இங்குப் பல வேள்விகள் நிகழ்த்தியதால் இதற்கு நந்தப்பிரயாகை எனப் பெயர். கன்வ மகரிஷி இங்கே வாழ்ந்தார் என்பதும், விசுவாமித்திரருக்கும், மேனகைக்கும் பிறந்த சகுந்தலையைக் கன்வ மகரிஷி இங்குதான் வளர்த்தார் எனவும், துஷ்யந்தன் காதல் கொண்டு சகுந்தலையைக் கூந்தர்வ மணம் கொண்டதும் இங்கேதான் எனவும் கூறுவர்.

பத்ரிநாத் பயணம் செய்பவர்கள் திருப்பிரிதியைக் கண்டவுடன் இன்னும் பத்தொன்பது கல் தொலைவில் பத்ரிநாத் இருப்பதை எண்ணி மகிழ்வர் என்பர். குளிர்காலத்தில் பத்ரிநாத் மூடப்படும்போது பத்ரிநாத்தின் உற்சவர் இத்தலத்தில் எழுந்தருளி ஆறு மாதங்களிலும் பத்ரி நாராயணனாகப் பக்தர்களின் வழிபாடுகளை ஏற்றுக் கொள்கிறார்.

## *தனக்குத்தானே*

பெருமாள் தனக்குத்தானே சேவை புரிந்த திருத்தலம் என்னும் சிறப்பும் இதற்கு உண்டு. எம்பெருமான் இத்தலத்துப் பெருமாள்

பரமபுருஷன் தன் கூறாக விளங்கும் வைஷ்ணவிக்குச் 'சக்தியின் வடிவமான பரமசிவனின் பத்தினியும் இமவான் புதல்வியுமான பார்வதிக்குப்' பிரத்யட்சமாகிச் சேவை தந்தவர். இதைப் போலவே இதன் தொடர்ச்சியான பத்ரிநாத் தமக்குத்தானே ஞானமொழி வழங்கிய திருத்தலமாய்த் தொடர்கிறது.

***108 திவ்ய தேசங்களில் மனித உடலுடன் திருப்பாற்கடல், பரமபதம் ஆகிய இரு திவ்ய தேசங்களைத் தரிசிக்க இயலாதோ அதுபோன்றே பள்ளி கொண்ட பரம புருஷனையும், பத்ரி நாராயணனையும் மனத்தினால் மட்டுமே எண்ணி வழி படவியலுமேயல்லால் கண்ணால் காண இயலாது.***

***திருப்பிரிதி*** என்ற திருநாமம் பத்ரி கண்டம் முதலான வடநாட்டுத் திருப்பதித் திருநாமங்களைப் போல இதை வடமொழிப் பெயராகக் கொண்டு பிரீதி என அழைத்துக் காலப்போக்கில் பிரிதியாக மருவியுள்ளது என்பர். பெரியவாச்சான் பிள்ளை 'உகந்தருளின நிலங்களுக்கு எல்லை' எனக் குறிப்பிடுகிறார்.

நூற்றியெட்டுத் திருத்தல விளக்க நூல்களில், திருப்பிரிதி பற்றிக் கூறியுள்ள செய்திகள் ஆழ்வார் பாசுரங்களுடனும், பெரியவாச்சான் பிள்ளை உரையுடனும் ஒத்துச் செல்வதால் இயமத்திலுள்ள மானசரோவர் தீர்த்தத்திலே உள்ளதொரு அடர்ந்த காடே திருப்பிரிதி எனப் பெயர் பெற்றிருக்கவேண்டும் என்பர்.

வடநாட்டுத் திருத்தலங்கள் பல 108 திவ்ய தேசங்கள், திருக்கோயில்கள், விமானங்கள்பற்றித் திருப்பிரபந்த பழைய படிகளில் காணப்பெறும் குறிப்புகளுடன் ஒத்திருப்பதில்லை. இசுலாமியர் படையெடுப்புகளின் போது அவை அழிக்கப் பெற்றுப் பின் புதிதாக எழுந்தன என்பர். ஆனால், அத்தகையப் படையெடுப்புகள் ஏதும் இல்லை. திருப்பிரிதியைப் பாடிய திருமங்கை திருபிரிதிக்குக் கங்கையின் தொடர்பைச் சொல்லவில்லையாதலால் திருப்பிரிதி கங்கை தோன்றுமிடங்களை யெல்லாம் கடந்து மிகவும் வடக்கே இருந்திருக்க வேண்டும் என்பர். இவ்விறைவனைத் திருப்பிரிதியில் உள்ளவனென்றும் இமயத்தில் இருப்பவனென்றும் காட்டுகிறார். கங்கைக் கரையிலுள்ள ஜோஷி மடமன்று திருப்பிரிதியே என நிறுவ முயல்வோரின் கூற்றே மேலே குறிப்பிட்டது.

எது எப்படியிருப்பினும் ஆழ்வார் அடிச்சுவட்டில் நடைபோடுவோர், கண்ணபிரானை மனத்தில் எண்ணியவாறு இமயத்திற்குச் செல்லுகையில் திருப்பிரிதியை வழிபட்டுத் திரும்பலாம். அல்லது மனத்தாலே இங்கிருந்தவாறே எண்ணி மகிழலாம்.

## *ஆதிசங்கரர்*

ஆதிசங்கரர் திருப்பிரிதியில் பீடம் ஒன்றை நிறுவி ஒரு முசுக்கட்டை மரத்தடியில் தவம் செய்து, ஞான ஒளி பெற்றுச் சங்கர பாஷ்யத்தைப் படைத்தார் என்பர். திருப்பிரிதியின் பரமபுருஷனின் சர்வசக்தி களுடன் பத்ரி நாராயணனின் சர்வ சக்திகளும் சங்கமமாகின்றன. இது நதிகளின் சங்கமம் போன்ற சங்கமம்.



ஆறு

# 6. திருத்துவாரகை

## கண்ணன் ஆண்ட பூமி

## (துவாரகா நாத்ஜி)

இந்தியத் திருநாட்டின் வடபுலத்தில் பிறந்து வளர்ந்த கண்ணபெருமான் ஆட்சி புரிந்த திருத்தலம் திருத்துவாரகை. குஜராத் மாநிலத்தில் உள்ள இத்திருத்தலம் கண்ணபிரானின் வரலாற்றோடும், பாரத விடுதலைப் போரினோடும் பின்னிப் பிணைந்து கிடக்கும் நம் அண்ணல் காந்தியடிகள் பிறந்த மண்.

குஜராத்தின் தலைநகரமான அகமதாபாத்திலிருந்து வீராம்காம், ராஜ்கோட், ஜாம் நகர் வழியாகச் செல்லும் புகைவண்டி ஓகா என்னும் இடம் செல்கிறது. ஓகா துறைமுகத்திற்கு அருகில் சுமார் இருபது மைல் தொலைவில் புகைவண்டி நிலையம் உள்ளது. இந்தப் புகைவண்டி நிலையத்திலிருந்து கோயில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. துவாரகை ஓகா துறைமுகத்திற்கு அருகில் கபிலா என்னும் புண்ணியநதிக் கரையில் உள்ளது.

### முக்தித் தலங்கள்

முக்தி தரும் ஏழு திருத்தலங்களுள் இதுவும் ஒன்று. கண்ணன் தன்னை நாடிவரும் பக்தர்கட்கு இங்கிருந்து கொண்டு மோட்சம் கொடுப்பதால் மோட்சத்திற்குத் துவாரமாக இந்தத் தலம் கருதப்படுகிறது. இதனாலும் ***துவாரகை*** என்று பெயர் வந்தது என்பர்.

### ஆழ்வார்கள்

பெரியாழ்வார் ஐந்து பாசுரங்களாலும், ஆண்டாள் நான்கு பாசுரங்களாலும், திருமங்கை ஆழ்வார் இரண்டு பாசுரங்களாலும்,

திருமழிசை ஆழ்வார் ஒரு பாசுரத்தாலும், நம்மாழ்வார் ஒரு பாசுரத்தாலும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

## துவாரகை எது?

துவாரகை எது என்பதிலே பெருத்த விவாதம் நீண்ட நாளாக இருந்து வருகிறது. குஜராத்தில் ராஜ்கோட்டிற்குத் தென்பக்கம் உள்ள ஜுனாகாத் என்பது தான் என ஓர் ஆராய்ச்சியாளர் கூறுகிறார். ரைவத கூட மலையருகே இருந்தது அந்தத் துவாரகை என்பனே இதற்கு அடிப்படையாகக் கொள்வர்.

ஆனால் பழைய புராணங்கள் எல்லாம் துவாரகை கடற்கரைப்பட்டினம் என்றே கூறுகின்றன வாதலால் ஜுனாகாத் என்பது சரியன்று. இதுபோலக் கோடினாருக்கு அருகில் மூலத் துவாரகை என ஓர் இடம் உள்ளது. போர்பந்தருக்கும் மியாளிக்கும் அருகேயுள்ள மத்வபூர் எனும் ஸ்ரீ நகர் தான் துவாரகை என்று சிலர் கூறுகின்றனர்.

இவ்வாறு பலர் பல்வேறு விதமாகக் கூறியபோதிலும் கோமதி நதிக்கரை ஓரம் உள்ள துவாரகையே எனப் பொதுவாக ஏற்றுக்கொண்டு விட்டனர். அகமதா பாத்திலிருந்து ராஜ்காட், ஜாம் நகர் வழியாகத் துவாரகையைத் தொடர் வண்டி வழியாக அடையலாம். ராஜ்காட்டிலிருந்து துவாரகைக்குச் சுமார் பத்து மணி நேரமாவது தொடர் வண்டியில் பயணம் செய்ய வேண்டும்.

## இருப்பிடம்

'துவாரகை' தொடர் வண்டி நிலையத்திற்கும் 'துவாரகை' திருத்தலத்திற்கும் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் உள்ளது. கோவிலுக்குச் செல்லும் முன் கோமதி கடலுடன் சங்கமமாகும் துறையில் சென்று நீராட வேண்டும் என்பது நியதி. ரங்கம் காட், நாராயணஃ காட், பிரம்ம காட் பாண்டவர் காட், வாசுதேவ காட், காலு காட், பார்வதி காட், காட்சுதரன் காட், சர்க்காரி காட், கங்கா காட், அனுமான் காட், நாராயண் பலிகாட் எனப்பன்னிரண்டு துறைகள் உள்ளன. இங்கேயே ரிஷயா குண்டம் என்னும் ஓர் இடம் இரு:ககிறது. இங்கும் குளியல் செய்தபிறகே கோயில் செல்ல வேண்டும். கோமதி நதியிலிருந்து 56 படிகள் ஏறினால் கோயிலை அடையலாம். துவாரகையில் உள்ள கண்ணன் திருக்கோயிலை ஜகத் மந்திர் என

அழைக்கின்றனர். பளிங்குக் கல்லால் கட்டப்பெற்ற திருக்கோயில் இது. ஐந்து மாடங்கள் கொண்டது. கோமுகி நதித்துறையிலிருந்து ஐந்தாவது மாடம் நூறடி. இதன் மேல் உள்ள குவி மாடத்தை அறுபது தூண்கள் தாங்கி நிற்கின்றன. கோயிலின் விமானத்தின் நீளம் 175 அடி உயரம். அதன் மேல் வெள்ளை நிறக் கொடி பறக்கிறது.

## கருவறையில் திருஉரு

கருவறையில் உள்ள கண்ணபெருமான் நான்கு கைகளுடன் வெள்ளி மஞ்சத்தில் மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். கண்ணன் நம் கற்பனைக் கேற்ற அழகிய தோற்றம் கொண்டவர் எனக் கூறவியலாது. கருமையான வடிவத்தில் உள்ள இப்பெருமானின் உடல் முழுமையிலும் நவரத்தினங்களால் இழைக்கப்பெற்று ஜொலிக்கிறார்.

## கொடிக் கம்பம்

இத்திருக்கோயிலில் துவஜஸ்தம்பம் எனும் கொடிக்கம்பம் கிடையாது. இப்பெருமானைத் துளசியால் நாமே அர்ச்சனை செய்து வழிபடலாம். தினசரி 11 தடவை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

## பிரசாதம்

கண்ணனுக்குப் பிடித்தது வெண்ணெய். இத்திருக்கோவில் ஒவ்வொரு முறையும் வெண்ணெய்ப் பிரசாதம் இவருக்கு வழங்குகிறார்கள்.

## பிராட்டி

இத்திருக்கோயிலின் மேல் அடுக்கில் அப்பாஜி என்னும் பிராட்டியார் இருக்கிறார்.

## விழாக்கள்

இத்திருக்கோாவிலில் ஐந்து திருவிழாக்கள் குறிப்பிடத்தக்கவை. அவை கண்ணன் பிறந்த ஜன்மாஷ்டமி விழா, தீபாவளி, குஜராத்தியரின் வருடப் பிறப்பான ஆம்கட், ரதயாத்திரை, ஹோலி எனப்படும் வசந்த விழா ஆகியன. இத்திருக்கோயில் கண்ணபிரானின் பேரன் வஜ்ரநாபன் கட்டினான் என்று கூறுவர்.

## மூலவர் பெயர்கள்

மூலவரின் பெயர் ***கல்யாண நாராயணன்*** என்பதாகும். ***துவாரகாதீசன், துவாரக நாத்ஜி*** என்னும் பெயர்களும் உள்ளன. மேற்கு நோக்கிய திருமூர்த்தத்துடன் சேவை சாதிக்கும் இம்மூர்த்தி இன்று நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார் பெரியாழ்வார் ''வண்துவராபதி மன்னன்'' என்று குறிப்பிட்ட இவர் ஒரு காலத்தில் 'இருந்த கோலத்தில்' சேவை சாதித்ததாகக் கூறுவர்.

## தாயார்

இத்திருத்தலத்துத் தாயார் பெயர் ***கல்யாண நாச்சியார்*** அல்லது. ***லட்சுமிஸ்ரீ*** என்பது ஆகும். இவருடன் ருக்மிணி பிராட்டியார், அஷ்டமகிஷிகள் ஆகியவர்களும் பிராட்டியர்களாக விளங்கு கின்றனர்.

இங்குச் செங்கோல் செலுத்தி மன்னாதி மன்னனாகத் தங்களை ஆள்வோனாகவே இன்றும் கருதுகின்றனர். தங்களைத் துவாரகா நாத்ஜியின் குடிமக்களாக இன்றும் எண்ணிப் பெருமிதம் கொள்கின்றனர்.

இத்தலத்தின் தீர்த்தம் கோமதி நதி. சமுத்திர சங்கமம் ஆகும்.

## தலபுராணம்

இத்துவாரகை, கண்ணன் தன் தேவியர்களுடன் ஆட்சி செய்த திருத்தலம். அவதார லட்சிய நிறைவுத் தலம் துவாரகை. இங்கு ருக்மிணி, சத்தியபாமா, ஜாம்பவதி அட்ட மகிஷிகள், நண்பர்கள், புதல்வர்கள், உறவினர்கள், ஆயர்கள் ஆகிய ஒவ்வொருவரும் கண்ணபெருமானைத் தங்கள், தங்களுக்கே உரியவனாகக் கற்பனை செய்து கொண்டு அதே பாவனையில் இயங்கினர்.

## தர்ம ஸ்தாபிதம்

ஆனால் கண்ணனோ யாருக்கும் சொந்தமாகாமல் தர்மத்தை நிலை நிறுத்தும் அவதார நோக்க நிறைவிலேயே தன்னை ஆட்படுத்திக் கொண்டு வாழ்ந்தார். தர்மத்தை நிலை நிறுத்தலே நோக்கமாகக் கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில், எம்பெருமானின் பிராட்டியாரும், தாரமாகிய பரமாத்ம நாயகி, எம்பெருமான்

கண்ணனுக்குத் தங்கை உறவு பூண்டு திரௌபதியாகப் பிறந்து, வைஷ்ணவியின் சக்தி பெற்று, அக்னியில் பிறந்து ஐவருக்குப் பத்தினியாக விளங்கினார்.

எம்பெருமான் கண்ணனின் பிராட்டி பாஞ்சாலி அவதாரத்தில் சகோதர முறையாக அமைந்திருந்ததிலும் ஒரு தத்துவம் உள்ளது என்பர். 'தர்மப்பசு-பாஞ்சாலி' தர்மத்தின் மேய்ப்பன் கண்ணன்! பசுவைக் காத்து வளர்த்து, மேய்த்துப் பாதுகாக்கும் ஆயர் பசுவிற்குச் சகோதரனே; நாயகனாக முடியாது. இதுதான் பாஞ்சாலி கண்ணனின் சகோதர ரகசியம் பாஞ்சாலியின் கூந்தல் முடிக்கப்பெற்றபோது தர்மஸ்தாபித லட்சியம் நிறைவேறியது.

எம்பெருமான் கண்ணன், தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகப் பரம புருஷனுக்குத் தங்கை முறையில் துணையாக வந்த திரௌபதிக்குத் துவாரகைத் தலத்தில் பரமாத்மா பிரத்யட்சத் தரிசனம் தந்துள்ளனர்.

### *பக்தமீரா*

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் நாச்சியார் அண்ணலுடன் திருவரங்கத்தில் கலந்தது போல் பக்தை மீரா இங்கே நாதனாக இவரை வரித்தாள். பக்தமீரா அன்ன ஆகாரமின்றிக் கொளுத்தும் வெயிலில் நடந்து வந்து கண்ணனை ஆரத்தழுவி அவனோடு இரண்டறக் கலக்கும் பேறு பெற்றதும் இத்துவாரகையில் தான். மீராவின் கானம் கண்ணனின் வேணுகானத்துடன் இணைந்தது. தூணுக்குத்தூண் அடியவளின் அமுத இசை எதிரொலிக்க அவர் புளகாங்கிதம் பெற்றதும் இங்கேதான்.

மேவார் நகரில் மீராவிற்கு நஞ்சு தர ஏற்பாடு செய்யப்பட்டதும் தாமாக மூடிக்கொண்ட கதவுகள், 'எங்கே என் துவாரகை நாதன்? எங்கே என் துவாரகை நாதன்?' என்று கூறியவாறு அடியவள் மீரா அத்திருச்சன்னதியின் வாயிலை அடைந்தவுடன் தானாகத் திறந்ததும் இங்கே தான்.

### *குசேலர்*

பக்தனின் நட்பிற்கும், பக்திக்கும், பாசத்திற்கும் உருகித் தன்னையே அர்ப்பணிக்கும் எம்பெருமான் தன்னுடன் பள்ளித் தோழனாக வறுமையில் உழல்வோனாக விளங்கித் தன்னைக் காண வந்த குசேலனை வரவேற்று, அடிபணிந்து, அவனுடைய அடிகளை

வழிபட்டு-அடியார் எல்லாம் இவனுடைய அடி காணத் தவிக்கையில் தன் அன்பனின் அடிகளை அன்புடன் வருடி இந்தப் பாதங்கள் என்னைக் காண நினைத்து நொந்தனவோ? என்று உருகியது இத்தலத்தில் தான்.

அது மட்டுமா கோரிக்கை ஏதும் வைத்திடாது குசேலன் வெறும் அவலைக் கொடுத்தபோது அவனுக்குக் கூடகோபுரங்கள், கோடி கோடிகள் என்று அள்ளி, அள்ளி அளித்திட்ட வள்ளல் - துவாரகை நாதன் வாழ்வதும் இங்கே.

## கோமுகி துவாரகை

தர்மதேவன் ஆட்சி செய்யும் இத்துவாரகை கோமுகி துவாரகை எனப்படுகிறது. பழைய துவாரகை கடலில் மூழ்கி அழிந்து விட்டதாகவும் புதிய துவாரகை கண்ணன் நினைவைப் போற்றும் வகையில் எழுந்ததாகவும் கூறுகின்றனர். துவாரகையில் ஐந்து நாள்கள் தங்கி எம்பெருமானை வழிபாட்டுச் செல்பவர்களின் எலும்புக் கூடுகள் திருமாலின் திருச்சங்கத்தின்-வெள்ளை விளிசங்கின் பதத்தை அடையும் என்பது காசி மகாத்மியம் தரும் தகவல்.

திருப்பதியில் வகுளமாலிகைத் தாய் தன் மகன் சீனிவாசனுக்கு உணவு ஆக்கும் பொறுப்பில் இருப்பதைப் போல இத்திருத்தலத்தில் கவனித்துக் கொண்டிருப்பவள் கண்ணனின் தாய் தேவகி.

## கோமுகி

துவாரகையின் தென் மேற்குத் திசையில் கோமுகி ஆறு கங்கை என்னும் நதியாகப் பாவிக்கப்பட்டு தீர்த்தக் கட்டம் கடல் நீரோட்டம் கொண்டதாக விளங்குகிறது. இங்கு நீராடக் கட்டணம் செலுத்தி ஒப்புதல் பெறவேண்டும்.

துவாரகைத் திருத்தலம் உயரமான மணல் மேட்டில் மணற்கரையில் அமைந்துள்ளது. உரிய இசைவுச் சீட்டுப் பெற்றால் இத்துவாரகை நாதனைத் தொட்டுத் தழுவி வழிபடலாம்.

முதலில் நாம் கண்டு அனுபவித்த கோமுகி துவாரகையிலிருந்து முப்பத்தியிரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருப்பது பேட்துவாரகை எனப்படும், கண்ணன் தன் தேவியர்களுடன் வாழ்ந்த இடமாகக் கருதப்படும் நீர் சூழ்ந்த தீவு உள்ளது. ஐந்துமைல் சுற்றளவில்

அமைந்துள்ள பேட்துவாரகைக்குப் படகுகளில் செல்ல வேண்டும். கோபிதலாப் என்னுமிடத்தில் திருக்கு ம் ஒன்று அமைந்துள்ளது.

இங்குக் கண்ணன், ருக்மிணி, சத்தியபாமா இல்லம் எனத் தனித்தனி அறைகளில் தனித்தனி வழிபாடுகள் நிகழ்த்துகின்றனர்.

## அரண்மனை

துவாரகைக் கண்ணபெருமான் திருக்கோயில் மிகப் பெரிய அரண்மனை போல அமைந்துள்ளது. அரண்மனையில் எவ்வாறு ஆரவாரங்கள், ஆர்ப்பரிப்புகள், ஆடல் பாடல்களுடன் களை கட்டி நிற்குமோ அதுபோவே கலகலப்புடன் காணப்பெறுகிறது. இங்குக் காணப்பெறும் ஆநிரைகளைக் கண்ணனின் ஆநிரைகளாகப் பூச்சூட்டிப் பொட்டிட்டு வழிபடுகின்றனர்.

## போஜனப் பிரியர்

இங்குள்ள கண்ணபெருமான் சரியான போஜனப் பிரியர். ஆடை அலங்கார அற்புத விரும்பி. இடைவிடாமல் உணவும், உடையும் மாற்றிக் கொண்டே இருக்கின்றனர். ஒரு நாளில் 17 முறை பிரசாதம் படைத்து, மணிக்கொருமுறை ஆடை மாற்றுகிறார்கள். இவ்வாறு தொடர்ந்து செய்யும் முறைகளுக்கு **போக்** என்று பெயர். காலையில் **உடோபன்** எனப்படும் திருப்பள்ளியெழுச்சியில் தொடங்கிச் சயனம் வரை இவ்வாறு நடைபெறுகிறது.

## லேகியமும் பிரசாதம்

அர்ச்சாவதாரக் கண்ணனை, அருச்சுனனுக்குத் கீதை அருளுரை வழங்கிய கண்ணனின் திரு உருவை, இன்றும் தம்முடன் கூடிக்குலவி மகிழும் குவலயத்தவனாகவே கருதுகின்றனர். அதனால்தான் தங்கப் பல் குச்சியால் பல் துலக்கச் செய்கிறார்கள். பல் துலக்கியதும் லட்டும், ஜிலேபியும் அளிக்கின்றனர். அதன் பின் 7 1/2 மணிக்குள் தீர்த்தமும் பிரசாதமும் படைக்கின்றனர். உண்ட களைப்புத் தீரும்முன் மீண்டும் எட்டு மணிக்குள் சர்க்கரை, பால், தயிர் என்று படைக்கின்றனர். பிறகு அப்பம் பாலிற்கலந்து சிற்றுண்டியுடன் திருஅமுது படைக்கின்றனர். அதன்பின் கனிவகைகள், சாப்பாட்டிலேயே எம்பெருமானைத் திக்குமுக்காடச் செய்துவிடும் அற்புதம் இங்கேதான் கா கிறோம். இப்படிச் சாப்பிட்டால் என்ன ஆவது? உணவு செரிக்க வேண்டுமல்லவா? அதற்கும் லேகியமும் கொடுக்கிறார்கள்.

### விமானம்

இத்திருத்தல விமானம் ஹேம கூடவிமானம் ஆகும். இங்குக் கண்ணனை நேரில் காணும் பேறு பெற்றவர்கள் துவாரகையில் அவருடைய குடிமக்கள், ஐவருக்கும் பத்தினியான தர்மத்தை நிலை நாட்டத் திரௌபதியாக அவதரித்த திருமகள் ஆவர்.

### திருக்குளம்

*'கசோரிய தலாப்'* எனப்படும் திருக்குளம் உள்ளது. இக்குளக்கரையில் எம்பெருமானுக்குச் சங்க நாராயணன் என்னும் சந்நிதி உள்ளது. இக்குளத்தின் எதிரில் எம்பெருமான் சங்காசுரனைக் கொன்றதாகவும் அதன் நினைவாகச் சங்க நாராயணன் சந்நிதி தோன்றியதாகவும் கூறுவர்.

### பேட் துவாரகை

பேட்துவாரகையில் உள்ள கண்ணபெருமானின் திருப்பெயரும் துவாரகா நாத்ஜிதான். இம்மூலவர் சங்கு, சக்ரதாரியாக நின்ற கோலத்தில் அருள்பாலிக்க, அவர்தம் திருமார்பில் ஸ்ரீ லட்சுமி விளங்குகிறார். இதனைக் கிருஷ்ணனின் திருமாளிகையாகவும் கூறுவர். இங்குத் தினந்தோறும் கண்ணனைக் குழந்தையாகவும், அரசனைப் போலவும், ஞானக்கனியாகவும் அலங்கரிக்கும் காட்சியை நாம் எதிரே நின்று கண்குளிரக் காணலாம். இங்கு ருக்மிணி தேவிதான் உற்சவர்.

### சந்நிதிகள்

கல்யாண ராயர் கிருஷ்ணன், திரிவிக்கிர மூர்த்தி, ஸ்ரீ இலட்சுமி நாராயணன், தேவகி, ஜாம்பவதி, ருக்மிணி ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

### அழகு செய்தல்

காலை 5 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையிலும், பிறகு 4 மணி முதல் இரவு எட்டுமணி வரை திரையிட்டு மறைத்து ஒப்பனை எல்லாம் செய்யாது அன்பர் எதிரிலேயே அழகு செய்யக் கண்டு ஆனந்திக்கலாம்.

## ருக்மிணி கோவில்

பேட் துவாரகையிலிருந்து ஒகா துறைமுகத்திற்குச் செல்லும் வழியில் சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் ருக்மிணி தேவிக்குத் தனிச்சந்நிதி உள்ளது. இச்சந்நிதியில் தான் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ருக்மிணி தேவியை மணம் செய்து கொண்டதாக நம்பிக்கை. இத்திருத்தலம் அமைந்தது ஒரு தனி வரலாறு.

இதுவும் கண்ணனின் திருவிளையாடலே. தன் தேவிக்கு என்று தனிக்கோயில் ஏற்படுத்திப் பெருமை சேர்த்த வரலாறு.

கண்ணபெருமானுக்கும் ருக்மிணிக்கும் திருமணம் முடிவாயிற்று. துர்வாசமுனிவரை இருவரும் சந்தித்து விருந்துக்கு அழைத்து ஆசிவழங்கும்படி கேட்டனர். இவருடைய அழைப்பை ஏற்று வர ஒப்புக் கொண்ட துர்வாசர் ஒரு விதிமுறையை வெளியிட்டார். இருவரும் தன்னைத் தேரில் வைத்து இழுத்துச் செல்ல வேண்டும் என்பதே அவருடைய கட்டளை. அதற்கு இருவரும் ஒப்புக் கொண்டு துவாரகைக்கு இழுத்துவர உடன் பட்டார்கள்.

இதிலும் கண்ணனின் திருவிளையாடல் இருந்தது. இருவரும் தோளில் வைத்து வண்டியை இழுத்துக் கொண்டு வந்தனர். வரும் வழியில் கடுமையான வெயிலில் இழுத்து வந்ததால் கடும் நாவறட்சி ஏற்பட்டு விட்டது. நாவறட்சியால் மேலும் இழுத்துச் செல்லவியலாமையால் ஓரமாக நிறுத்தித் தன் நாவறட்சிக்காகத் தண்ணீர் அருந்தி விட்டு ருக்மிணி வந்தாள்.

துர்வாச முனிவருக்கோ கோபம் மூக்கின் நுனியில். ருக்மிணியைக் கோபித்துக் கொண்டார். ''அதிதி சாப்பிடும் முன்னர் தண்ணீர் அருந்தி விட்ட தவறைச் செய்து விட்டதால் பன்னிரண்டு ஆண்டுகள் உன் கணவரை விட்டுப் பிரிந்து வாழவேண்டும்'' என்று சபித்தார். அதனால் ருக்மிணி தனியே பிரிந்து இருப்பதால் தனிச்சந்நிதி உள்ளது. வண்ணமலர்களால் ருக்மிணியை அலங்கரித்துக் கோவிலைக் கற்களால் மெருகிட்டு வைத்துள்ளனர்.

## துவாரகை வருகை ஏன்?

மதுராவில் அவதரித்த கண்ணன், கோகுலத்தில் குழலூதித் திரிந்த கண்ணன், பிருந்தாவனத்தில் ஆநிரைகளை மேய்த்தவன் மேற்குத்

திசையில் தொலைவில் துவாரகையில் ஆட்சியாளனாக மாற்றம் பெற்றது எவ்வாறு என வினா எழலாம். இதற்கும் விடை உள்ளது. இங்கு வந்ததில் எம்பெருமானின் யோக மாயையின் தத்துவம் புதைந்துள்ளது.

காலயவனன் பெரும் படைகளுடன் மதுராவை முற்றுகையிட்டதால், காலயவனனால் யாதவர்களுக்கு இன்னல்கள் ஏற்படக்கூடாது என்பதன் பொருட்டு. மதுராவை விட்டு நீங்கிக் கடல் நடுவில் துவாரகையை ஏற்படுத்திக் கொண்டு, கண்ணன் ஆட்சி செய்ததாக ஒரு வரலாற்றுச் செய்தி.

மகத நாட்டை ஆண்ட ஜராசந்தன், பதினெட்டு முறைகள் கண்ணனுடன் சண்டையிட்டுத் தன் கதாயுதத்தைச் சுழற்றிக் கண்ணனின் மீது எறிந்து கண்ணன் நாட்டில் பாதியைக் கைப்பற்றிக் கொண்டான். இந்நகரத்தை உருவாக்கக் கண்ணனுக்குத் துணை புரிந்தவர் விசுவகர்மா. இவ்வுலகைக் காப்போன் கண்ணன், காலயவனனிடமும், ஜராசந்தனிடமும் அஞ்சி வாழ்ந்ததாகக் கூறப்படும் செய்திகளில்தான் எம்பெருமானின் யோக மாயைத் தத்துவம் புதைத்துள்ளது என்பர்.

காலயவனன் முசுகுந்தனாலும், ஜராசந்தன் வீமனாலும் அழிக்கப்பட வேண்டும் என்பது விதியாக அமைந்திருந்தமையாலும், கண்ணன் காலயவனனையும், ஜராசந்தனையும் அழித்துவிடாமல் அஞ்சுவதைப் போலவும், தோற்று ஓடுவதைப் போலவும், தெரிந்தும் தெரியாது இருப்பதைப்போல, அறிந்தும் அறியாது இருப்பதைப் போல யோக மாயையின் பாவனையில் நாடகம் நடத்தினார்-நடித்தார் என்பர்.

அதைப்போலவேதான் பாண்டவர்களால் கௌரவர்களின் விதி முடியப் புதிய தர்மம் ஈடேறக் கண்ணன் சண்டை செய்யாமல் தேரோட்டியாய் விளங்கினார்.

## இராதையின் இதயம்

இராதையின் இதயச் சிறப்பை ருக்மிணிப் பிராட்டிக்கு எம்பெருமான் உணரச்செய்த திருத்தலம் இது என்றும் கூறலாம். ஒரு

நாள் இராதை துவாரகை வந்தபோது ருக்மிணி வரவேற்றுப் பாலும், தேனும் அளித்தாள். அன்றிரவு கண்ணனுக்கு ருக்மிணி பாதபூஜை செய்தபோது கண்ணனின் பாதங்களில் சூடுபட்டதனால் ஆன சிறு கொப்பளங்கள் காணப்பட்டதைக் கண்டாள். ருக்மிணி அவை எப்படி. ஏற்பட்டன எனக் கண்ணனிடம் கேட்டாள். அதற்குப் பதில் சொன்ன எம்பெருமான் ருக்மிணி இராதைக்குப்பால் அளித்ததால் ஏற்பட்டவை என்றும், அவள் கொடுத்த பால் சூடாக இருந்த போதும் இராதை அதைப்பருகியதால் எப்போதும் அவள் இதயத்தில் குடிகொண்டிருக்கும் தமது பாதங்களில் சூடு பொறாது கொப்புளங்கள் ஏற்பட்டதாகவும் கூறினாராம். பால் சூடாக இருந்ததை இராதை கூறவில்லையே? என்று ருக்மிணி கேட்டபோது, நீ பற்றுடன் வழங்கியதால் சொல் லாமல் குடித்து விட்டாள், என்று கூறியதும், கோமளமான உன் பாதங்களைவிடக் கோமளமானவை அன்றோ இராதையின் இதயம், என்று ருக்மிணி போற்றிய நிகழ்ச்சியும் நடைபெற்ற திருத்தலம் துவாரகை.

## கிருஷ்ணாவதார முடிவு

கண்ணன் துவாரகை மன்னனாய்த் தோன்றித் தம் அவதார முடிவை அமைத்துக் கொண்டதும் இத்திருத்தலத்தில். கண்ணன் எங்களுக்கே சொந்தம், எங்களுக்கே உரிமை என்று ஆயர்கள், மகரிஷிகளைக்கூட மதிக்காத பொழுது சாபத்திற்கு ஆளாகி அனைவரும் ஒருவரோடொருவர் அடித்துக் கொண்டு மாண்ட பொழுது, அதே சாபத்தால் எம்பெருமானும் உலுபதன் எனும் ஒரு வேடனின் நஞ்சு தோய்த்த அம்புக்கு இரையாகித் தன் அவதார முடிவை அமைத்துக் கொண்டதும் இத்துவாரகையில் தான்.

எம்பெருமான் காட்டில் அமர்ந்திருந்த வேளையில் எம்பெருமானின் அழகிய பாதங்கள் மானின் தோற்றத்தில் விளங்கின எனவும், உலுபதன் மானென மயங்கி நஞ்சு தோய்த்த அம்பினை எய்ய எம்பெருமான் பரமபதப் பெரு வாழ்வில் சங்கமமானார். கண்ணனின் திரு அவதாரம் ஆலிலையில் தோன்றி அரசமரத்தடியில் நிறைவுற்றது.

## ஒரு வார காலம்

இத்துவாரகைத் திருத்தலப் பயணத்திற்குக் குறைந்தது ஒரு வார காலமேனும் நாள் ஒதுக்கீடு செய்தல் வேண்டும். சென்றோம்,

கண்டோம், மீண்டோம் எனத் திரும்பி வரக்கூடிய திருத்தலமன்று. எம்பெருமானை அலங்கரிப்பதை, ஆராதிப்பதை ஆர அமரக் கண்குளிரக் காணுதல் வேண்டும்.

பேட்துவாரகையைத் தரிசித்து விட்டுத் திரும்புகையில் விராவல் என்னும் புகைவண்டி நிலையத்தில் இறங்கினால் கஜினி மாமூதுவின் படையெடுப்பிற்கு ஆளான புகழ்பெற்ற சோமநாதர் திருக்கோயில் காணலாம். இதற்கு அண்மையில் அமைந்துள்ள பாலகா எனும் இடத்தில் ஒரு கிருஷ்ணன் இங்குள்ள அரச மரத்தடியில் சயனத்திருக்கோலத்தில் இருந்ததாக நம்பப் பெறுகிறது. இன்றும் இங்கே சயனத்திருக்கோலத்தில் கண்ணபிரானைக் காணலாம்.

## *கண்ணனின் சயனத்திருக்கோலம்*

108 திவ்ய தேசங்களிலே கிருஷ்ணபகவான் சயனத்திருக்கோலம் கொண்ட ஒரே திருத்தலம் இதுதான். பஞ்சஸ் ரோதா, ஹிரண்யா கடல் சங்கமத் தீர்த்தக்கரைகள் குறிப்பிடத்தக்கன. ஜுனாகாத் புகைவண்டி நிலையத்தில் இறங்கி நூறு மைல்கள் சென்றால் கிர்நார்-'கிர்நார்' எனும் ரைவத மலையையும், திருக்கோவில்கள் பலவற்றையும் தரிசிக்கலாம். 5000 ஆண்டுப் பழமை மிக்க இத்திருத்தலத்தில் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோவிலையே ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

## *மங்களாசாசனம்*

நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் பெருமாட்டி,

*'காலையெழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்*
*மாலின் வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்மை கொலோ*
*சோலைமலைப் பெருமாள் துவராபதியெம் பெருமாள்*
*ஆலினிலைப் பெருமாள் அவன் வார்த்தையுரைக்கின்றதே'*

என்று குறிப்பிடுகிறார்.

திருத்துவாரகை மூர்த்தியைத் திருமழிசையாழ்வார்

*''சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்*
*ஆயன் துவரைக் கோனாய் நின்றமாயன் அன்று*
*ஓதிய வாக்கதனைக் கல்லார் உலகத்தில்*
*ஏதிலராம் மெய்ஞ்ஞானம் இல்*

எனப் பாடினார்.

நம்மாழ்வார் ***'வண்துவராபதி மன்னன்'*** எனக்குறிப்பிட்ட துவாரகைப் பதியானை

*''பல்லாயிரம் பெருந்தேவிமாரோடு*
*பௌவம் கூறு துவரை*
*எல்லாரும் சூழச்சிங்காதனத்தே*
*இருந்தான்''*

எனவும்,

*''பதினாராம் ஆயிரவர் தேவிமார்*
*பணி செய்யத் துவரை என்னும்*
*மதில் நாயகராகி வீற்றிருந்த*
*மணவாளர்''*

எனவும் புகழ்ந்தார்.

பெரியாழ்வார் பாரதப் போருக்குக் ***''கள்ளப் படைத் துணையாக்கை செய்த வித்தகர்''*** என்று சிறப்பித்தவுடன்.

*''நாழிகை கூறிட்டுக் காத்து நின்ற அரசர்கள் தம் முகப்பே*
*நாழிகை போகப் படைபொருதவன் தேவகி தன் சிறுவன்*
*ஆழி கொண்டன்றிரவி மறைப்பச் சயத்திரதன் தலையை*
*பாழில் உருளப் படை பொருதவன் பக்கமேகண்டாருளர்''*

என்பார். இராமானுஜர் இத்திருத்தலத்திற்கு வருகை புரிந்து பாஞ்சராத்ர ஆகமப்படி வழிபாடு ஏற்பாடுகள் செய்துள்ளார். 1440இல் மத்வர் வருகை புரிந்திருக்கிறார். ஞானேசுவரர், வல்லபர், சைதன்யர், ஆதிசங்கரர் எனப்பல ஞானிகள் பாதங்கள் பதிந்த திருத்தலம் இது. இங்குச் சாரதா பீடம் ஏற்படுத்தினார்.

## திருத்தலச் சிறப்பு

துவாரகை அடியவன் ஆண்டவனிடத்துக் கொண்ட பக்தி, ஆண்டவன் அடியவனிடத்துக் கொண்ட அளப்பரிய ஈடுபாடு, ஆண்டவனான இறைவன் தன்மனையாட்டியான நாச்சியார் பால் கொண்ட காதல் மெய்யுணர்வு, காதல் மனையாட்டியிடம் உள்ள மென்மை வெளிப்பாடு, தீமையை அழித்திட எடுத்த அவதார நிறைவு அத்தனைக்கும் களமாகத் திருத்தலம் இது விளங்குகிறது.

## கற்பகத்தரு

இந்திரனின் தோட்டத்தில் தேவலோகத்திலிருந்த கற்பக மரத்தை எம்பெருமான் மண்ணுலகு கொண்டு வந்ததும் இந்தத்

துவாரகாபுரியில்தான். இராமாவதாரத்தில் மாயமானைக் கேட்டு எம்பெருமானின் காதல் திறத்தைச் சோதித்த பிராட்டியார், கிருஷ்ணாவதாரத்தில் கற்பகத் தருவைக் கேட்டுச் சோதித்தாள் போலும்.

சத்தியபாமா, தன் மணவாளனிடம் தேவலோகத்து இந்திரலோகத்துக் கற்பகத் தருவேண்டுமெனக் கேட்டாள். கண்ணன் கேட்டதற்கு இந்திரன் கொடுக்க மறுத்தான். இமைப்பொழுதில் இந்திரலோகம் சென்று எம்பெருமான் கற்பக மரத்தை இங்குக் கொணர்ந்தார்.

இதனையே பெரியாழ்வார்,

*''கற்பக காவு கருதிய காதலிக்கு*
*இப்பொழுதீவனென்றிந்திரன் காவினில்*
*நிற்பன செய்து நிலாத் திகழ் முற்றத்துள்*
*உய்த்தவனென்னைப் புறம் புல்குவான்*
*உம்பர் கோனென்னைப் புறம் புல்குவான்''*

என்கிறார்.

''சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும் துவாரபதி' யை அடைந்து,

''சோலைமலைப் பெருமாள் துவராபதியெம்மானைத்'' தரிசித்து வருதல் ஒரு புதிய அனுபவமாகும்.

### டங்கபுரம்-ரண்சோட்ராய்

துவாரகபுரியிலுள்ள கண்ணனுக்கு ரண்சோட்ராய் என்று பெயர். இப்பெயர் வந்த காரணம் இதுதான். அதுமட்டுமல்ல ஒரு நாளில் ஐந்து நாழிகை மட்டும்தான் துவாரகையில் துவராகநாதர் இருப்பாராம். அது ஒரு சுவையான வரலாறு.

தக்கோர் எனும் டங்கபுரத்தில் கோவில் கொண்டு இருப்பவர் துவாரகையில் உள்ள கண்ணனே என்கின்றனர். இது எவ்வாறு நேரிட்டது. கண்ணன் மீது பக்தி கொண்ட விஜயசிம்மன் என்பவரும் அவர் மனைவி கங்காபாய் என்பவரும் துவாரகையில் வாழ்ந்தனர். இராமபக்தரான விஜய சிம்மன் ஆண்டுக்கொருமுறை துவாரகை சென்று கண்ணனை வழிபடத் தவற மாட்டார். எண்பது வயது அடைந்த போதிலும் விஜயசிம்மர் இந்த நியமத்தை விடவில்லை.

அவருடைய கனவில் துவாரகநாதன் தோன்றித் தன்னை அழைத்துச் செல்லக் கூறினார். இரவில் விஜயசிம்மர் துவாரகை சென்றபோது கருவறைக் கதவு திறந்தது அவர் கண்ணனை எடுத்துக் கொண்டு டங்கபுரம் சென்றார். தம் வீட்டிலேயே எழுந்தருச் செய்தார்.

துவாரகையில் கண்ணனைக் காணவில்லை என்றதும் பரபரப்பு ஏற்பட்டது. டங்கபுரத்திலிருந்து வந்த விஜயசிம்மர்தாம் எடுத்துச் சென்றார் எனச் செய்தி அறிந்து விஜயசிம்மரைப் பிடிக்க அரசர் ஆட்களை அனுப்பினார்.

கண்ணனிடம் தமக்கு ஏற்பட்ட துன்பத்தை அவர் கூறத் 'தம்மைப் புஷ்கரணியில் போட்டு விட்டு அங்கு வரும் வீரர்களுடன் வைகுண்டம் வரச் செய்தாராம்' துவாரகை நாதன். ஆனால், விஜயசிம்மரைத் துவாரகைப் படைவீரர்கள் குத்திக்கொலை செய்தனர். விஜய சிம்மரின் மனைவி தம் கணவருக்கு ஈமக்கடன் செய்தாள். புஷ்கரணியில் போடப் பெற்ற துவாரகநாதன் வெளியே கிளம்ப மறுத்தார். விஜய சிம்மரின் மனைவி கங்காபாயே வெளிக்கொணர்ந்தார்.

வெளிவந்த துவாரகை நாதனைப் பார்த்தால் அவர் திருமேனியெல்லாம் இரத்தக் காயமாக இருந்தது. விஜயசிம்மரைக் குத்திய காயங்களெல்லாம் துவாரகைநாதன் உடம்பில் இருந்தன. துவாரகைநாதனின் எடைக்குத் தங்கம் தரச் சொல்லி எல்லோரும் கங்காபாயை வற்புறுத்த மூக்குத்தியைத் தவிர வேறு எதுவுமில்லாமல் போனதால் துலாக்கோலில் ஒரு தட்டில் மூக்குத்தியை வைத்து மற்றொரு தட்டில் துவாரகைநாதனை வைக்க மூக்குத்தித் தட்டே உயர்ந்தது. எல்லாரும் பெருமானை வேண்டினர். இதனால், 'ஒரு நாளில் ஐந்து நாழிகை மட்டுத் துவாரகையில் இருப்பேன். மற்ற நேரமெல்லாம் டங்கபுரத்தில் இருப்பேன்' என்றார். இதனால் அவருக்கு ரண்சோட்ராய் எனும் பெயர் ஏற்பட்டது.

## காசு வீசுதல்

குஷஷ்தலை ஆற்றில் மலரிட்டு நாணயத்தை வீசி வழிபடுகின்றனர். அந்த நாணயங்களை யாரும் எடுப்பதில்லை. ஆற்றில் மூழ்கி வழிபடுகின்ற போது 'ஜெய்துவாரகநாத்' 'ஜெய் கோமதி மையா' 'ஜெய்சமுத்திர கேசனாக' என்று கூறியவாறு வழிபடுகின்றனர்.

## துலாபாரம்

56 படிகள் வழியாகப் பேட்துவாரகையில் ஏறிச்சென்று பெருமையுடன் வழிபடுகின்றனர். இத்திருக்கோயிலில் துலாபாரம் சிறப்பு வாய்ந்தது. இக்கண்ணன் துலாபாரக் கண்ணனாக விளங்குகிறார். நோய் நொடியின்றி வாழ இத்துலாபாரம் வழி வகுக்கின்றது. வடக்கில் துவாரகையில் துலாபாரம். தெற்கே குருவாயூரில் துலாபாரம். எவ்வளவு சிறப்பான ஒற்றுமை.

இடப்புறம் கோமாதா திருக்கோயில் அமைந்துள்ளது. பேட்துவாரகையை 'ஸ்வர்க்கத்துவாரகை' 'மோட்சத்துவாரகை' என்றும் கூறுவர்.

## வண்ணக்கொடி

துவாரகை என்றவுடன் கண்ணன் நினைவுடன் நம் நினைவை விட்டு அகலாத ஒன்று இத்திருக்கோயில் வண்ணக் கொடிதான். இத்திருக்கோயில் கோபுரம் ஐந்தடுக்கு உடையது. அதன் சிகரம் 157 அடி உயரம் அச்சிகரத்தின் மீது பட்டு வண்ணக்கொடி பறக்க விடுதலும் இத்திருக்கோயில் வேண்டுதலாகும். ஒன்றரை மணி நேரம் பூஜை செய்த பிறகுதான் இந்தக் கொடி உயரே பறக்க விடப்படுகிறது. ஒரு நாளைக்கு இரண்டு முறை கூடக் கொடியேற்றுதல் நடைபெறும். இக்கொடியேற்றத்திற்குப் பயன்படும் துணியின் அளவு 42 மீட்டர்.

ஒவ்வொருமுறை கொடியேற்றம் நடைபெற்ற பிறகும் ஆலயம் வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கலும் நடைபெறும். அவ்வாறு வழங்குதல் கட்டாயமான ஒன்று. ஒவ்வொருமுறை கொடியேற்றிய பின்னும் அவ்வாறு வழங்குகின்றனர். இந்தத் திருக்கோயிலில் இக்கொடியேற்றத்தை நிகழ்த்தி வைப்பவர்கள் 'அப்போட்டி' வகுப்புப் பிராமணர்கள்.

இத்திருக்கோயிலில் பச்சை, சிவப்பு, ஆரஞ்சு பட்டாடை அணிந்து திருக்கோயில் பணியாளர்கள் உலா வரும் காட்சி கண்ணுக்கு விருந்து. இது சந்திரன் வழிபட்ட திருத்தலங்களில் ஒன்று. இங்குச் சங்கரரின் துவாரகா பீடம் உள்ளது. நாகேசுவர மகா தேவர் கோயிலும் துவாரகையில் உள்ளது.

ஏழு

# 7. திருச்சாளக்கிராமம்

## கண்ணன் உருமாறிய பூமி

## -ஸ்ரீ மூர்த்தி

கண்ணபிரான் வழிபாடு கடல் கடந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் 'கிருஷ்ணர் வழிபாட்டு' இயக்கமாக மாறியுள்ளது. ஆயினும் ஆழ்வார்கள் காலத்திலேயே கண்ணன் திருப்புகழ் இமயத்துக்கு அப்பால் அயல் நாடாக உலகின் ஒரே இந்து நாடாக விளங்கும் நேபாளத்தில் சிறந்து விளங்கியது.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற கண்ணன் புகழ்பாடும் திருத்தலங்களில் சாளக்கிராமத் திருத்கோயிலும் ஒன்று.

### *திருச்சாளக் கிராமம் எது?*

நேபாளத்தின் தலை நகரான காத்மாணடுவிலிருந்து 270 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முக்திநாத் என்னும் முக்தி நாராயண க்ஷேத்திரம் செல்லும் வழியில் உள்ள கண்டகி நதியின் கரையில் உள்ளதே சாளக்கிராமம் என்னும் கருத்தும் ***'முக்திநாத்'*** என்னும் திருத்தலமே சாளக்கிராமம் என்னும் கருத்தும் உள்ளன.

இதைத்தவிர கண்டகி நதியின் கரையில், காத்மாண்டுவிலிருந்து சுமார் 105 கி.மீ. தொலைவில் உள் ***தாமோதரகுண்ட்*** என்னும் இடமே சாளக்கிராமம் என்னும் மூன்றாவது கருத்தும் உண்டு.

இருப்பினும் சாளக்கிராமக் கற்கள் தோன்றுகின்ற கண்டகி நதியின் கரை எல்லாமே சாளக்கிராமத் தலம்தான் என்று கூறுவர்.

இப்போது அமைந்துள்ள சாளக்கிராமத் திருக்கோயில் காத்மாண்டிற்கு 96 கி.மீ. தெற்கில் கண்டகி நதியின் கரையில் முக்தி

நாத்திற்குச் செல்லும் வழியில் நெடுஞ்சாலைக்கு நூறு கல் தொலைவில் உள்ளது.

பண்டைய இந்தியாவில் சிறப்புடன் விளங்கிய அவந்தி தேசமே இன்றைய நேபாளம். இங்கு இமயத்தின் அடிவாரத்தை ஒட்டினாற்போல அரிபர்வதம் என்னும் மலை உள்ளது. இங்குச் சக்கர தீர்த்தம் என்னும் பகுதியில் கண்டகி உற்பத்தியாகின்றது. இந்தப்பகுதி தான் சாளக்கிராமம் என அழைக்கப்பெறுகிறது.

## சாளக்கிராமம்

சாளக்கிராமம் என்பது கண்டகி நதியில் உருவாகும் ஒருவகையான அழகிய தெய்வீகம் நிறைந்த கற்களாகும். இவைகள் நத்தைக்கூடு, சங்கு முதலாய பல வடிவங்களில் பல வண்ணங்களில் கிடைக்கின்றன. திருமால் தாமாகவே தங்கமயமான ஒளியுடன் திகழும் வஜ்ரகிரீடம் எனும் பூச்சியின் வடிவெடுத்துச் சாளக்கிராமத்தைக் குடைந்து அதன் கர்ப்பத்தை அடைந்து அங்கு ரீங்காரமான வடிவில் இருந்து கொண்டே தன்முகத்தினால் பல விதமான சுருள் ரேகையுடன் கூடின பல சக்கரங்களை வரைந்து பலவித வடிவுகளில் பலவித மூர்த்திகளைப் பெருமாளின் பல்வேறு அவதாரங்களை பல வடிவங்களில் விளையாட்டாக வரைந்து அங்கேயே இருந்து பின் மறைந்து விடுவதாகக் கூறுவர். இப்பேர்ப்பட்ட வடிவங்கள் தாம் வணங்கிட உகந்தவையாகும். இவைகளின் எம்பெருமானின் ஜீவரூபம் கலந்திருப்பதாக நம்பப்பெறுகிறது.

## வடிவங்கள்

சாளக்கிராமங்கள் உருண்டையான வடிவத்திலும், தட்டையான வடிவத்திலும் முக்கோணத்தில் பாதிக்கூறான அரைமுக்கோண வடிவிலும் சங்கு நத்தைக் கூடு வடிவிலும், சுருள் சுருளான ரேகைகளுடன் கூடினதாகவும் துளைகளுடன் கூடினதாகவும், இன்னும் என்ன வடிவு எனச் சொல்ல வியலாத வடிவங்கள் சிலவற்றிலும் தோன்றுகின்றன. இதனை இங்குள்ளவர்கள் சாளக்கிராமங்கள் என அழைக்கின்றனர்.

## சிறப்பு

சாளக்கிராமத்தின் தெய்வீக அருள் இருப்பது மட்டுமல்லாமல் அவற்றில் 14 உலோக சக்திகள் இருப்பதாகக் கூறப்பெறுகிறது.

வழிபடப்பெற்ற சாளக்கிராமங்களை சாத்திர ஞானம் பெற்றவர்களிடமிருந்து பெறவேண்டும் என்பது நியதி. இதனைப் பால் அல்லது அரிசி மீது வைத்திருந்து பின் எடுத்துப் பார்த்தால் அதன் எடை முன்பு இருந்ததை விடக் கூடுதலாக இருக்கும். சாளக்கிராமம் உடைந்து இருந்தாலும் அதில் சக்கர ரேகைகள் இருந்தால் சிறப்பாகும்.

நேபாள நாட்டில் கடை வீதிகளில் சாளக்கிராமத்தைக் குவித்து வைத்து விற்கிறார்கள். பெரியவர்களிடமிருந்ததோ அல்லது பூஜிக்கப் பெற்ற சாளக்கிராமங்களைப் பெறுதலோ நன்று என்பர். சாளக்கிராமத்தின் தனித்தன்மையை அறிந்தவர்களிடம் அதன் வண்ணம், அதில் அமைந்துள்ள ரேகைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவர்களுடைய கருத்துரையின் பேரில் வாங்குவது சிறப்பு.

## எம்பெருமான்

சேவை தரும் எம்பெருமான் ஸ்ரீ மூர்த்தி, கேசவன், நாராயணன், மாதவன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், ரிஷிகேசன், பத்மநாபன், தாமோதரர் ஆகிய பன்னிரண்டு கூறுகளாகச் சாளக்கிராமக் கற்கள் வடிவத்தில் விளங்கி, செல்வத்தை வழங்கும் அதிபதியாகக் குபேரன் திசை நோக்கி எழுந்தருளியுள்ளார்.

## ஸ்வயம் வியக்தம்

சாளக்கிராமத்தலம் தானாகச் சுயம்புவாகதத் தோன்றிய காரணத்தால் 'ஸ்வயம் வியக்தம்' என்னும் சிறப்பினைக் கொண்டு விளங்குகிறது. இங்கு எப்பொழுதும் எம்பெருமான் நிரந்தரமான நிலையில் 'நித்ய சாந்நித்யமாக' எழுந்தருளியிருக்கிறார் என்பர். சாளக்கிராமத்தலம் மலை மீது அமைந்துள்ளது என்பதோடு புலிகளின் நடமாட்டமும் அங்கு உள்ளது. குறுகிய மலை இடுக்குகளிலுள்ள மிகக் குறுகலான ஒற்றையடிப் பாதையில் நடந்து சாளக்கிராமத்தை அடைய வேண்டும்.

## விசா

சாளக்கிராமம் செல்வதற்கு நேப்பாள அரசின் இசைவினைப் பெற வேண்டும். அயல்நாடு ஆகையால் இத்தகைய ஏற்பாடு இன்றியமையாதது. பக்தர்களின் உயிர்ப்பாதுகாப்பை அடிப்

படையாகக் கொண்டு ஐம்பது பேர்கள் சேர்ந்த பிறகு ஒரு குழுவாகச் செல்ல நேப்பாள அரசு இசைவு வழங்குகிறது.

## செல்லும் வழி

கல்கத்தாவிலிருந்து காத்மாண்டுவிற்கு விமானம் வழியாகவும் செல்லலாம். அல்லது புகைவண்டி வாயிலாகவும் செல்லலாம்.

இந்திய நாட்டுப் புகைவண்டிப் பாதையின் இறுதி எல்லை ரெச்சூல் ஆகும். அங்கிருந்து காத்மாண்டு சுமார் 90 கிலோ மீட்டர். தொலைவிலுள்ளது. இரச்சூலிலிருந்து அம்பலா கஞ்ச் வரையிலும் 32 கிலோ மீட்டர் தொலைவிற்குக் குறுகிய பாதையான குறுகிய புகைவண்டித் தடம் உள்ளது. புகைவண்டியில் சென்று இறங்கி சுமார் 40 கிலோ மீட்டர் மலைப்பாதைகளில் லாரிகளில் செல்லலாம். மீதியுள்ள வழிக்கு நடைபாதை தான். நடந்து தான் செல்ல வேண்டும். ஒற்றையடிப்பாதை. மலைப்பாதையாகையால் பல விதத் தடைகளால் செல்வது தடைப்படுகின்றது.

சாளக்கிராமம் புனிதம் வாய்ந்த கண்டகி நதியில் விளைவதால் தோஷம் இல்லாதது. யாரும் தொட்டு வழிபடலாம்.

சாளக்கிராம வரலாறு கண்டகி நதி, துளசியுடன் தொடர்புடையது. கிருஷ்ணாவதாரக்கால இராதாபிராட்டியாருடன் தொடர்புடையது.

## துளசி

தர்மதுவசன் எனும் மநுகுல மன்னனைக் கூடிய அவனுடைய மனைவி மாதவி நூறு வருடங்கள் கருவைத் தன் வயிற்றில் தாங்கித் துளசி என்னும் மகளைப் பெற்றாள் 'துள' என்பதற்கு ஒப்பு உவமை என்பது பொருள். '*சி*' என்பதற்கு இல்லாதவள் என்பது பொருளாகும். துளசி பத்ரிநாத்திற்குச் சென்று தனக்கு நாராயணனே மணவாளனாக அமைய வேண்டும் எனக் கடுமையான தவமியற்றினாள்.

துளசி முன் தோன்றிய பிரம்மதேவன் அவளிடம் "கிருஷ்ணனுக்குச் சகோதர முறையுள்ள, கிருஷ்ணனின் அம்சத்தைக் கொண்ட சுதர்மன் எனும் இடையர் குல இளைஞன் உன் அழகில் மோகித்து அலைந்தான். கிருஷ்ணனரின் மனதுக்குகந்த இராதை சுதர்மனின் மீது கோபம் கொண்டு பூவுலகில் பிறக்கும்படி சபித்து விட்டாள். எம்பெருமானுக்கு உரிமை ஆக முயல்பவளை,

எம்பெருமானின் அம்சம் கொண்டவனாகவே இருந்தாலும் சுதர்மன் மோகித்தது தவறு என்பதும் இராதையின் கருத்து. தான் மட்டுமல்லாமல்-இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் பரமாத்மாவிற்கே பாத்தியம் எனும் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவள் ராதை. ***ராதையின் கண்ணன்! ராதையே கண்ணன். கண்ணனுக்கு ராதை! கண்ணனின் இராதை. ராதை-கண்ணன் ஆத்ம-பரமாத்ம தத்துவத்தின் வெளிப்பாடு.***

''அத்தகைய ராதையின் சாபப்படி சுதர்மன் இந்த உலகத்தில் சங்க சூடனாகப் பிறந்துள்ளான். நீ அவனை மணந்து வாழ்வாய். பிறகு மரமாக வடிவம் கொண்டு-பிருந்தாவனத்தில் கண்ணனுடன் பிருந்தாவணி என்னும் பெயருடன் கண்ணனின் குழலிசையையும், கண்ணனின் பரமாத்ம லீலைகளையும் அனுபவித்து மகிழ்வாய்!!'' என்றார்.

பிரம்மனின் வாக்குப்படியே சங்க சூடன் துளசியை நாடி வந்து துளசியை மணந்து கொண்டான். சங்க சூடனுக்கும்-சங்கரர்களுக்கு நடந்த போரில் சங்க சூடன் இறந்தான் சங்க சூடனின் வடிவத்தை எடுத்து எம்பெருமான் துளசியைப் புணர்ந்தார்.

சங்க சூடனின் வடிவத்தில் யாரோ வந்து தன்னைக் கூடிக் கலந்து தன் உடலில் இன்பம் அனுபவித்து விட்டதைத் துளசி தனக்குள்ளே உணர்ந்து பதை பதைத்தாள். தன்னோடு சங்கமித்தவர் எம்பெருமான் என்பது உணராமல், என் கற்பை அழித்தவனே! நீ கல்லாக மாறக் கடவாய்!' என்று சபித்தாள்.

உடனே எம்பெருமான் தம்மை யாரென்று காட்டித் துளசிக்குத் தரிசனம் அளித்தார். அத்துடன் 'துளசி! உன் ஜீவன் கண்டகி நதியாகப் பெருகி ஓடட்டும். நான் உனக்குள் சாளக்கிராமக் கல்லாகப் பிறந்து கொண்டே இருப்பேன். உன் உடல் துளசி மரமாகட்டும்'' என்று எம்பெருமான் துளசிக்கு வரமளித்துக் கண்டகியாகிய துளசிக்குள் சாளக்கிராமமாகக் கலந்தார்.

துளசி வைகுண்டம் சென்ற போது படைப்பிற்கு மூலமுதலான ஐந்து பிரகிருதிகளில் ஒருத்தி (துர்க்கை, ராதை, லட்சுமி, சரசுவதி, சாவித்திரி) துளசியின் மீது சினம் கொண்டு சீறினாள். பிறகு துளசி மீண்டும் பூவுலகிற்கு வந்து துளசி வனமாக மாறினாள். துளசியை மாலையாக அணிந்து மகிழ்ந்த நாராயணன் துளசிக்கு மகிழ்வை

ஏற்படுத்தத் தானே தன்னுடன் வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றார். இச்செய்திகள் துளசியைப் பற்றிய புராணச் செய்திகள்.

### *மங்களா சாசனம்*

இத்திருத்தலத்தைப் பெரியாழ்வார் இரண்டு பாசுரங்களாலும், திருமங்கையாழ்வார் பத்துப் பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்துள்ளார்கள்.

### *மூலவர்*

இத்திருத்தலத்து மூலவரின் பெயர் ஸ்ரீ மூர்த்தி என்பதும் தாயாரின் பெயர் ஸ்ரீ தேவி நாச்சியார் என்பதும் ஆகும். இத்தலத்தீர்த்தத்தின் பெயர் சக்ர தீர்த்தம், கண்டகி நதியாகும். இத்தல விமானம் கனக விமானம் ஆகும்.

### *சாளக்கிராம வகைகள்*

சாளக்கிராம வடிவங்களின் விளக்கங்களைக் காண்போம்.

★ ஒரு துளையில் நான்கு சக்கரங்களைக் கொண்டு வன மாலையை அணிந்த வடிவமுடையது ***லட்சுமி நாராயண சாளக்கிராமம்***

★ நான்கு சக்கரங்களுடன் வனமாலை இல்லாமல் இருப்பது லட்சு ***ஜனார்த்தன சாளக்கிராமம்***

★ இரண்டு துளைகளுக்குள் நான்கு சக்கரங்களையும் கொண்டு ரதாகாரமாக இருப்பது ***ரகுநாத சாளக்கிராமம்.***

★ இரண்டு சக்கரங்களை மாத்திரம் கொண்டிருப்பது ***வாமன சாளக்கிராமம்.***

★ வனமாலையுடன் இரண்டு சக்கரங்களை மட்டும் கொண்டிருப்பது ***ஸ்ரீ தர சாளக்கிராமம்.***

★ விருத்தாகரமாக இரண்டு சக்கரங்களை மட்டும் கொண்டது ***தாமோதர சாளக்கிராமம்.***

★ மிகப்பெரிதும் இல்லாமல், மிகச் சிறியதும் இல்லாமல் ஏழு சக்கரங்களையும் சரத்பூஷணமும் கொண்டிருப்பது ***ராஜ ராஜேஸ்வர சாளக்கிராமம்.***

★ விருத்தாகரமாக இரண்டு சக்கரங்களும் அம்பறாத் துணியும், பாணத்தின் அடியும் கொண்டது ***ரணராக சாளக்கிராமம்.***

★ பதினான்கு சக்கரங்களும் கொண்டது ***ஆதிசேட சாளக்கிராமம்.***

★ சக்கர காரமாக, இரண்டு சக்கரங்களைக் கொண்டது ***மது சூதன சாளக்கிராமம்.***

★ ஒரே சக்கரத்தைக் கொண்டிருப்பது ***சுதர்சன சாளக்கிராமம்.***

★ மறைபட்ட சக்கரகாரமாகத் தோன்றுவது ***கதாதர சாளக்கிராமம்.***

★ இரண்டு சக்கரங்களுடன், ஹயக்கிரீவ குதிரை உருவமாகக் காணப்படுவது ***ஹயக்ரீவ சாளக்கிராமம்.***

★ இரண்டு சக்கரங்களையும், பெரிய வாயையும் வனமாலையையும் கொண்டது லட்சுமி ***நரசிம்ம சாளக்கிராமம்.***

★ துவரக முகத்தில் இரண்டு சக்கரங்களையும் கொண்டு சமாகாரமாக உள்ளது ***வாசுதேவ சாளக்கிராமம்.***

★ சூட்சமமான சக்கரமும் ஒரு ரந்திரத்திற்குள் பல ரந்திரங்களைக் கொண்டிருப்பது ***பிர்த்யும்ன சாளக்கிராமம்.***

★ விருத்தாகரமாகவும், செம்பட்டு நிறம் கொண்டதாகவும் இருப்பது ***அநிருத்த சாளக்கிராமம்.***

இவ்வாறு சாளக்கிராமக் கற்கள் உள்ள இடத்தில் எம்பெருமானும் சகல இறை சக்திகளும் நித்திய வாசம் செய்வார்கள். சகல செல்வங்களும் பரிபூரண விருத்தியாகும்.

பன்னிரண்டு அல்லது அதற்குமேல் சாளக்கிராமங்களை வைத்து வழிபட்டு வரக்கூடிய வீடுகளை நூற்றெட்டுத் திவ்யதேசத் தகுதியில் வைத்துப் பாவிக்க வேண்டுமென்பர். பன்னிரண்டு சாளக்கிராமங்களும் ஒரு குடும்பத்தின் குலதனச் சொத்தாகக் கருதுவர்.

## ***சாளக்கிராமதாசன்***

சாளக்கிராமத்தை இருமுறை வழிபடுதல் வேண்டும். திவ்ய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ***சாளக்கிராமதாசன்*** என்று பாராட்டப் பெற்றார்.

சாளக்கிராமம் எம்பெருமான் அடியார்களிடம் வேறுபாடே இல்லாமல் தானே எழுந்தருள்வதும் உண்டு. பக்த மீராவிற்கு ஞானோபதேசம் செய்த மகானான ஸ்ரீ ரோகிதாசர் செருப்புத் தைக்கும் சக்கிலிய குலத்தவர். இவருடைய கையில் தண்ணீர் பாய்ச்சும் நேரத்தில், தானே வந்து வலிய அமர்ந்தவர் சாளக்கிராம எம்பெருமான்.

★ ரோகிதாசர் தோலாலேயே சாளக்கிராம எம்பெருமானுக்கு பஞ்ச பாத்திர உத்திரணி, வட்டில்கள், பூக்குடலை ஆகியவற்றைச் செய்து ஒரு தோலால் ஆன பீடத்தில் சாளக்கிராமத்தை வைத்து வழிபட்டார். ரோகிதாசரின் வழிபாட்டைச் சாளக்கிராம மூர்த்தி ஏற்றார்.

★ மாமிசத்தை வெட்டி விற்ற பூரி ஜெகந்நாதத்தை அடுத்த ஊரில் வாழ்ந்த பக்தர் சஜ்ஜைகை சாருகர், மாமிசத்தை வெட்டி விற்கக் கைகளால் வணங்கிய வழிபாட்டையும் சாளக்கிராமப் பெருமாள் ஏற்றுத் திருவருள் செய்தார்.

திருமங்கை ஆழ்வார் தன் பாசுரங்களில், ஒன்பது பாசுரங்களின் முடிவிலும் 'சாளக்கிராமம் அடை நெஞ்சே' என உருகிப் பாடியுள்ளார். உடையவர் இராமானுஜரும் இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளார்.

எம்பெருமானே கல்லாகி, பேசாத தெய்வமாகி, கண்டகிக்குள் அடக்கமாகி-உலகத்தை வாழவைக்கும் வரங்களை வாரி வழங்கும் சாளக்கிராம வள்ளலாகமாறி, உலகைக் காக்கின்றார். துளசியே சாளக்கிராமம்.

சாளக்கிராமங்கள் எந்தவிதமான வண்ணத்தில் அமைந்துள்ளனவோ அந்த வடிவங்கொண்ட திருமால் வாழும் திருத்தலங்களாகவே அவைகள் கருதப் பெறுகின்றன.

சாளக்கிராமங்கள் எந்தவிதமான வண்ணத்தில் அமைந்துள்ளனவோ அந்த வடிவங்கொண்ட திருமால் வாழும் திருத்தலங்களாகவே அவைகள் கருதப் பெறுகின்றன.

★ வெண்மை நிற சாளக்கிராமம் ***வாசுதேவ சேத்திரம்.***

★ கருமை நிற சாளக்கிராமம் ***விஷ்ணு சேத்திரம்***

★ பச்சை நிற சாளக்கிராமம் ***ஸ்ரீ நாராயண சேத்திரம்***

★ பசும்பொன் அல்லது மஞ்சள் சந்து மஞ்சள் கலந்து சிவப்பு நிற சாளக்கிராமம் ***ஸ்ரீ நரசிம்ம சேத்திரம்***

★ மஞ்சள் நிற சாளக்கிராமம் ***ஸ்ரீ கிருஷ்ண சேத்திரம்***

இந்த வண்ணங்களுக்கேற்ப அவற்றின் பூஜாபலன்களும் மாறுபடுகினறனவாம்.

நீலநிறம் செல்வத்தையும், சகத்தையும் தரும்

பச்சை நிறம் பலம், வலிமையும் தரும் கருப்பு புகழ், பெருமை சேரும்

புகை நிறம் துக்கம், தரித்திரம்

## *வழிபாட்டு முறை*

சாளக்கிராம வழிபாட்டைச் செய்யும்போது பன்னிரெண்டு கூறுகளையும் குறிப்பிட்டு வழிபடவேண்டும். அவ்வாறு பலமுறை வழிபட வேண்டும். இறைவனை விட இறைவனின் நாமங்களுக்கு வலிமை ஆதிகம். எந்த நாமாக்கள் சொல்லி வழிபட்டாலும் அவை நம்மைக் காக்கும்



எட்டு

# 8. திருப்பதி

## வேங்கட கிருஷ்ணன்

**வி**வேக சிந்தாமணியில் ஒரு பாடல்.

*''திருப்பதி மிதியாப் பாதம்*
*சிவனடிவணங்காச் சென்னி*
*இரப்பவர்க்கு ஈயாக்கைகள்*
*இனியசொற்கேளாக் காது*
*புரப்பவர்கள் தங்கள் கண்ணீர்*
*பொழிதரச் சாகாத் தேகம்*
*இருப்பினும் பயன்னென்? காட்டில்*
*எரிப்பினும் இல்லைதானே.*

திருப்பதியை மிதியாத பாதங்கள் இருந்தும் பயனில்லை என்று புலவர் கூறும் திருப்பதி ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருப்பதிகளுள் ஒன்று. **கோயில், திருமலை, பெருமாள் கோயில்** என்று வைணவர்களால் போற்றப் பெறும் மூன்று திருத்தலங்களுள் நடுவில் திழ்வது.

நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் திருவேங்கடமாம் திருப்பதியைப் பற்றி 213 பாசுரங்கள் உள்ளன. பத்து ஆழ்வார்கள் இத்திருத்தலத்தை இன்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னரே மங்களாசாசனம் செய்துள்ளனர். திருப்பதிப் பாசுரங்கள் 213 யும் அந்தகக்கவி வீரராகவ முதலியார் 'பதின்மர் செந்தமிழ்' என்று போற்றுகிறார். பொய்கையாழ்வார் பத்து பாசுரங்கள், பூதத்தாழ்வார் பத்து பாசுரங்கள், பேயாழ்வார் பத்தொன்பது பாசுரங்கள், திருமழிசையாழ்வார் பதினைந்து பாசுரங்கள், திருப்பாணாழ்வார் இரண்டு பாசுரங்கள், குலசேகராழ்வார் பதினொரு பாசுரங்கள்,

பெரியாழ்வார் ஏழு பாசுரங்கள், ஆண்டாள், பதினாறு பாசுரங்கள் திருமங்கையாழ்வார் 62 பாசுரங்கள், நம்மாழ்வார் அறுபத்தியிரண்டு பாசுரங்கள் என மொத்தம் 213 பாசுரங்கள் பாடியருளியுள்ளனர்.

இத்திருத்தலம் பதினொன்றாம் நூற்றாண்டிற்குப் பின்தான் பெரும் புகழ் பெறத் தொடங்கியுள்ளது. திருமலைக்கு மூன்று முறை இராமானுஜர் முழுந்தாளிட்டே வந்ததாக அவர் வரலாறு கூறுகிறது. அவருடைய வருகை சிறப்பு மிக்க-வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகை. ஏனெனில் இன்று திருமலையில் நடைபெறும் பகவத் கைங்கரியங்களனைத்தும் இராமானுஜர் வகுத்தவை என்பதனைத் திருமலை யொழுகு நூல் காட்டும். தன் தாய்மாமனாகிய திருமலை நம்பியை மேலாளராக நியமித்துத் தம் கைங்கர்யங்களைக் குறைவின்றித் தொடரச் செய்தார்.

மணவாள மாமுனிகள் இத்திருத்தலத்தில் பலகாலம் தங்கி இருந்து மங்களாசாசனம் செய்துள்ளார்.

திருப்பதிப் பெருமாள் ஆந்திர மாநிலத்தில் இருந்த போதிலும் தமிழர்கள் பலரின் இட்ட தெய்வமாக விளங்கி வருகிறார். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்து பேருந்துகள் திருப்பதி செல்கின்றன. சென்னையிலிருந்து அடிக்கடி பேருந்துகள் திருப்பதிக்குச் செல்கின்றன. ஆந்திர மாநிலப் பேருந்துகள் ஊத்துக்கோட்டை, புத்தூர், வழியாகத் திருப்பதி செல்கின்றன. தமிழக அரசுப் பேருந்துகள் திருவள்ளூர் திருத்தணி தடா வழியாகச் செல்கின்றன.

சென்னையிலிருந்து திருக்கோவில் உள்ள திருமலைக்கே நேரடியாகப் பேருந்துகள் செல்கின்றன. திருமலைக்கே பயணச்சீட்டுகள் பேருந்து நிலையத்திலும், தொடர்வண்டி நிலையத்திலும் பெற்றுக் கொண்டு விட்டால் திருப்பதியில் வரிசையில் நிற்காமலேயே பேருந்தில் ஏறிச் சென்று விடலாம். அல்லது நேரடிச் சீட்டுப் பெற்றவர்களுக்கு என உள்ள வரிசையில் எளிதாகச் செல்லலாம். நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதில்லை. மலை மீது இருந்து திரும்புவதற்கும் கூடப் பயணச் சீட்டு முன்னதாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னையிலிருந்து விரைவுத் தொடர்வண்டியில் திருப்பதி செல்லலாம். இது போல மதுரை முதலான வேறு தென் மாவட்டப்

பகுதிகளிலிருந்து தொடர் வண்டிகள் உள்ளன. திருப்பதியில், திருமலையில் தங்குவதற்கும் சென்னையிலேயே முன்பதிவு செய்து கொள்ளும் வசதியுண்டு. திருப்பதியில் திருமலையில் சிருங்கேரி மடம், அகோபில மடம் முதலான மடத்தின் தங்குமிடங்கள் உள்ளன. திருப்பதி செல்பவர்கள் ஆறுமாதத்திற்கு முன்பே பணம் செலுத்தி சேவைச் சீட்டுகள் பெற்றுக் கொண்டு விட்டால் திருப்பதி தரிசனம் சிரமமாக இராது.

உடல் ஊனமுற்றவர்கள் தரிசனம் செய்ய வரிசையில் நிற்காமலேயே ஒருவர் துணையுடன் முன் இசைவு பெற்றுச் செல்லலாம். அங்கப் பிரதட்சணம் செய்பவர்கள் குளித்து ஈர ஆடையுடன் வரிசையில் நின்று விட்டால் அதிகாலையில் அங்கப் பிரதட்சணம் செய்யலாம்.

எப்போதும் கூட்டமாக இருக்கும் திருப்பதிக்கு விடுமுறைக் காலங்களில், பிரம்மோத்சவ காலங்களில், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் திட்டமிட்டவாறு சென்று திரும்புவது கடினமான ஒன்றுதான். திருப்பதி சென்று கோபுர தரிசனத்துடன் நிறைவு பெற்று வந்துவிடும் சூழலும் உண்டு.

ஏழுமலைகளைக் கடந்து திருமலையில் உறைபவர் பெயர்கள் பாலாஜி, பிரபு, சீனிவாசன், வேங்கடாசலபதி, ஏழுமலையான் திருவேங்கடமுடையான் ஆகியன. ஆந்திர, தமிழக அரசுச் சுற்றுலாப் பேருந்துகளில் சென்றால் தரிசனம் உள்படப் பேருந்துக் கட்டணத்தில் அடங்கிவிடுகிறது. தரிசனமும் கிடைத்து விடுகிறது.

## *ஏழு மலைகளின் வரலாறு*

எருத்துமலை என்று சொல்லப்படும் விருஷாபாத்திரி எனப் பெறும் மலையில் நரசிம்ம பக்தனாக விளங்கிய விருஷாசுரன் என்னும் அரக்கன் உலகிற்குத் தொல்லை விளைத்து வந்தான். எம்பெருமானாலேயே தனக்கு முடிவு ஏற்பட வேண்டும் எனும் வரம் பெற்றிருந்தான். விருஷாசுரனைத் தம் சக்கரப் படையை ஏவிக் கொன்ற போது பெருமாளிடம் தம் பெயரால் ***விருஷாபாத்திரி*** என்றும் ***விருஷாசலம்*** என்றும் விளங்கச் செய்ய வேண்டியதால் அவ்வாறே அழைக்கப் பெறலாயிற்று. இம்மலை சிவனைச் சுமக்கும், காளையை நினைவு படுத்திச் சிவபெருமானின் தத்துவத்தை நினைவுறுத்துகிறது.

எம்பெருமான் நீலவண்ணமேனியன், சியாமளன் ஆதலால் அதனை நினைவு கூறும் வகையில் ***நீலாத்திரி*** என இரண்டாவது மலை நீலமலை அமைந்துள்ளது. நீலவண்ணமேனி பராசக்தியையும் நினைவுபடுத்துகிறது.

ஆஞ்சநேயனைப் பெற்றேடுத்த அன்னை கன்னித்தாய் அஞ்சனா தேவி கடுந்தவம் ஒன்றினை இம்மலையில் செய்ததால் ***அஞ்சனாத்திரி*** எனவும் ***அஞ்சனாசலம்*** எனவும் பெயர் பெற்றது. இம்மலை இராமாவதார ஒழுக்கத்தை நினைவு படுத்துகிறது என்பர்.

ஆதிசேடனே திருமலைத் தொடர் வடிவில் எழுந்தருளி எம்பெருமானைத் தாங்கிக் கொண்டிருப்பதால் ஆதிசேடனின் பெயரில் ***சேஷாத்திரி*** அல்லது ***சேஷாசலம்*** அமைந்துள்ளது. இராமாயணபாரத தர்ம தத்துவத்தின் வெளிப்பாடு என்பர்.

கருடவாகனத்தில் ஏறித் திருமலையில் வந்து இறங்கியதால் ஐந்தாவது மலை ***கருடாத்திரி*** அல்லது ***கருடாசலம்*** என்னும் பெயர் கொண்டது. பரந்தாமனின் அருள் நிலைக்கு எடுத்துக்காட்டு.

ஓம் நாராயண என்னும் ஆறு எழுத்துக்களையும் நினைவு படுத்தும் வகையில் ஆறாவது மலை ***நாராயணாத்ரி*** என்னும் பெயர் பெற்றது. இம்மந்திர எழுத்துகளுள் பிராட்டியாரும் இடம் பெற்றுள்ளார்.

ஏழாவது மலை ஏழுமலை எனப் பெறும். திருவேங்கடத்திற்கு ***வேங்கடாத்திரி*** என்னும் பெயரும் உண்டு. அந்நாள் இருள் அகற்றும், பாவமாகிய ***கடம்வேம்*** என்று வெந்ததால் ***வேங்கடம்*** எனப் பெயர் பெற்றது இம்மலை உலக ரட்சிப்புத் தத்துவச் சின்னம் என்பர்.

## மூன்று கோவில்கள்

**திருப்பதி என்றவுடன் மலை மீது உள்ள எம்பெருமான் திருக்கோயில் ஒன்றை மட்டுமே தரிசித்துத் திரும்புவது என்று எண்ணுகின்றனர். ஆனால் இந்தப் பெருமானின் திவ்யதேசம் மூன்று திருக்கோயில்களை உள்ளடக்கியது. ஆண்டிற்கொரு முறையோ அல்லது வாய்ப்புக்கிடைக்கையிலோ, நேர்த்திக் கடன் செலுத்த வருகையிலோ பாமர மக்கள் தவறாது மூன்று திருக்கோயில்களையும் தரிசித்துச் செல்வதே உயர்ந்த கடமை என்பதனைத் தவறாமல் நிறைவேற்றுகின்றனர்.**

## கோவிந்தராஜன் (திருப்பதி)

மூன்று கோவில்களில் இரண்டு கோவில்கள் கீழே திருப்பதியிலும், ஒரு கோவில் மலைமீது திருமலையிலும் உள்ளன.

மலையின் அடிவாரத்தில் புகைவண்டி நிலையத்திற்கு எதிரே செல்லும் வழியில் பெரிய குளத்தின் எதிரே அமைந்துள்ள திருக்கோவிலில் ***கோவிந்தராஜப்பெருமாள்*** என்னும் திருநாமத்துடன் புஜங்க சயனமாகக் கிடந்த கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுகத்துடன் சேவை சாதிக்கும் திருக்கோவில். இங்குள்ள தாயார் புண்டரீகவல்லி. பெரிய கோவில் இது. திருச்சுற்றுகளுடன் உள்ள இக்கோவிலிலும் இப்போது கூட்டம் நிரம்பிவழிகிறது. கம்பிக்கிராதிகள் வரிசையில் செல்ல ஏற்பாடுகள் உள்ளன. விழாக்காலங்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். மற்றபடி கட்டணதரிசனம் மிக எளிதுதான். இவரைப் பலராமர் என்றும் திருமலை சீனிவாசருக்கு அண்ணன் என்றும் திருச்சித்திரக்கூடத்தில் இருந்து சோழனால் கடலில் எறியப் பெற்ற கோவிந்தராஜரை, உடையவர் இங்கே சேர்த்தார் என்றும் கூறுவர்.

## திருச்சானூர், அலர்மேல் மங்காபுரம்

பத்மாவதித் தாயார் திருக்கோயில் இருப்பிடம் இவ்வூர். தனிக்கோவில். இவ்வூர் சிற்றூர். இங்குச் செல்லத் தனிப் பேருந்துகள் ஏராளமாக உள்ளன. திருப்பதியிலிருந்து சுமார் ஏழுகிலோ மீட்டர் தொலைவு. திருச்சானூரில் மிகப்பெரிய தீர்த்த வாவியுள்ளது. இங்குத்தான் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையின் மீதிருந்து திருமகள் தவமியற்றியதாகக் கூறுவர் இதற்குப் பத்மசரோபர தீர்த்தம் எனும் பெயர் உள்ளது.

## சேவித்தல் முறை

திருப்பதி செல்பவர்கள் முதலில் கீழ்த்திருப்பதியில் உள்ள கோவிந்தராஜப் பெருமாளையும், புண்டரீக வல்லியையும், சேவித்துக்கொண்டு பிறகு திருமலைமேல் சென்று ஏழுமலையில் சுவாமி புஷ்கரணியில் உள்ள ஸ்ரீ ஆதிவராகப் பெருமாளைச் சேவித்துப் பின் திருவேங்கட முடையானைத் தரிசித்து மலையிருந்து கீழே இறங்கி வந்து திருச்சானூர் சென்று பத்மாவதி தாயாரைச் சேவித்து விட்டுப் பிறகுதான் ஊர் திரும்ப வேண்டும் என்பது முறை.

## திருமலை

திருமால் உறையும் திருமலை சிறப்புமிக்க மலை என்பதனை ஆழ்வார்கள் திருவாக்கால் உணரலாம்.

பொய்கை யாழ்வார் திருவேங்கடமலையை

*''வினைச்சுடரை நந்துவிக்கும்*
*வேங்கட வானோர்*
*மனச் சுடரைத் தூண்டுமலை*

என்று கூறுகிறார்.

பேயாழ்வாரின் திருவாக்கு,

*''பண்டு எல்லாம் வேங்கடம்*
*பாற்கடல்*
*கொண்டு அங்கு உறைவார்க்குக்*
*கோயில்போல''*

என்பதாகும். திருமலை மீது தாம் கொண்ட ஈடுபாட்டைக் குலசேகராழ்வார்,

*மாடாக நிழற்று செழு*
*மானாகத் த்வச்சிறிய*
*பூடாகக் குழைத்த நறும்*
*புனலாக பெறுவமெனில்*
*உயிர்காணற் கதிபெறலாம்*
*வீடாகத் திருநெடுமால்*
*வீற்றிருக்கும் வேங்கடத்தே.*

பூதத்தாழ்வார் கண்முன் திருவேங்கடத்தில் தோன்றிய காட்சி இது.

*''பெருகு மத வேழம்*
*மாப்பிடிக்கும் முன் நின்று*
*இருகண் இளமூங்கில்*
*வாங்கி-அருகிருந்த*
*தேன் கலந்து நீட்டும்*
*திருவேங்கடம் கண்டீர்*
*வான் கலந்து வண்ணம்*
*வரை''*

நம்மாழ்வார் வாக்கின்படி நாம் செய்யவேண்டுவது யாது?

"சென்று சேர்திரு வேங்கடமாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே

## யுகச் சிறப்பு

திருமலை வேங்கட கிருஷ்ணன் திருத்தலத்தைப் பற்றி ஏராளமாக எழுதலாம். இத்தலத்தைப் பற்றிப் பிரமாண்ட புராணம், வராக புராணம், ஸ்காந்த புராணம், பத்மபுராணம் என்று புராணங்கள் வாயிலாக அறியலாம். எண்ணற்ற மொழிகளில், எண்ணற்ற நூல்களில் திருத்தலம் இது பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன.

இத்திருத்தலத்திற்கு ஒவ்வொரு யுகத்திலும் ஒரு சிறப்பான நிகழ்ச்சியால் ஒவ்வொரு சிறப்பான பெயர் வழங்கி கிடைக்கின்றன.

கிரேதாயுகத்தில் ***கருடாத்ரி*** அல்லது ***கிரிடாத்திரி,*** திரேதாயுகத்தில் ***விருஷபாத்ரி,*** துவரபரயுகத்தில் ***அஞ்சனாத்ரி,*** கலியுகத்தில் ***வேங்கடாத்ரி*** (வேங்கடாசலம்) என்று பெயர்.

## இருவழிகள்

திருப்பதியிலிருந்து திருமலைக்கு உள்ள தொலைவு 25 கிலோமீட்டர் ஆகும். திருமலைக்கு ஊர்திகள் வழியாகச் செல்ல ஒரு பாதையும், திரும்பி வர ஒரு பாதையும் உள்ளன. ஊர்திகள் மேலே செல்ல அலிப்பிரி என்னுமிடத்தில் கட்டணம் செலுத்திச் சீட்டுப்பெற்று அச்சீட்டைக் கவனமாக வைத்திருக்க வேண்டும். மலைமேலும் அதைத் தணிக்கை செய்வர். திரும்பும் போதும் தணிக்கை செய்வர்.

திருமலையானை நடந்தே சென்று தரிசிப்பவர்களுக்குத் தனிப்பாதை உள்ளது. இந்த நடை பாதைக்குச் சோபன மார்க்கம் என்று பெயர். நடந்து செல்வதாயின் ஊர்தி செல்லும் வழியிலான 25 கிலோ மீட்டர் தூரம் 12 கிலோ மீட்டர் தான் என்று குறைந்து விடுகிறது. ஏனெனில் நடைபாதை சுருக்குவழி. நடைபாதையில் படிக்கட்டுகள் உள்ளன. சேர்ந்து கூட்டமாகவே செல்வது வேண்டும். அப்போதுதான் பாதுகாப்பு.

முதலில் அடிவாரத்தில் எம்பெருமானின் பாதங்கள் உள்ள சந்நிதி உள்ளது. மலை ஏறுபவர்கள் அதனைச் சுற்றி வலம் வந்து மலையேற வேண்டும்.

தனித்தனியாகச் செல்லாது நாலைந்து பேராகச் சேர்ந்து மலை ஏறுவதும் அணிகலன்கள் அணியாமல் செல்வதும் பொதுவான பாதுகாப்பாகக் கருதப்படுகிறது. விழா நாட்களில் புரட்டாசி முதலான சிறப்பு மாதங்களில் நடப்போர் அதிகமாக இருப்பதால் பயமில்லை. மற்றக் காலங்களில் இரவு வேளைகளில் ஏறுதலைத் தவிர்த்தல் நல்லது. வழியில் குடிதண்ணீர் முதல் அமர்வதற்கு இடம் வரை உள்ளது. வெயில் வாட்டமின்றிச் செல்லலாம்.

ஏழுமலைகளைக் கடந்து சென்று நிற்கும் ஏழுமலையானைத் தரிசிக்க, வேங்கடகிருஷ்ணமூர்த்தியைத் தரிசிக்க எருத்துமலை என்னும் விருஷாபாத்திரி, நீலமலை எனப்படும் நீலாத்திரி, அஞ்சனாசலம் எனப்படும் அஞ்சானத்திரி, சேஷாசலம் எனப்படும் சேஷாத்திரி, கருடாசலம் எனப்படும் கருடாத்திரி, நாராயணசலமான நாராயணாத்ரி, திருவேங்கடம் எனப்படும் திருவேங்கடாத்திரி ஆகிய மலைகளைக் கடக்கிறோம்.

நடைபாதையில் மலை ஏறும்போது முதலில் உள்ள மலையின் படிகள் குத்துயரமாய் உள்ளன. இதன் உச்சியில் காளிகோபுரம் எனப்படும் கோபுரம் உள்ளது. இதனைக் கட்டியவர் மத்லி குடும்பத்தைச் சார்ந்த மத்லி ***குமார ஆனந்தராஜா*** என்பவர். **அடுத்துக்** கோபுரத்தை அடுத்து உள்ள அக்ரகோபுரம் என்பதனையும், நடைபாதையும் இதே ஆனந்தராஜாவின் குடும்பத்தினர் கட்டியுள்ளனர்.

முதல் முதலில் திருமலைக்குப் படிக்கட்டுகளை அமைத்தவர் அகோபில மடத்தின் முதலாவது ஜீயர் சுவாமிகளான ஸ்ரீ ஆதி வன் சடகோபதீந்தர மகாதேசிகன் ஆவார்.

இரண்டாவது மலையாக ஏறும் மலை மொகல்லா கொண்டம் ஆகும். இது ஏறுவதற்குச் சிரமமானது. இம்மலை உச்சியில் இளைப்பாற இராமானுஜர் திருக்கோயில் உள்ளது. இங்குள்ள மரத்தடியில்தான் உடையவர் எம்பெருமான் இராமானுஜர் அமர்ந்து தன் குருவும், மாமனுமாகிய திருமலை நம்பியுடன் இராமாயணம் படித்துக் கொண்டிருந்தாராம்.

இப்பாதையின் வழியில் ஒரு மணிமண்டபம் உள்ளது. கி.பி.14 ஆம் நூற்றாண்டில் சந்திரகிரியைச் சேர்ந்த ஸ்ரீ அரங்கநாத யாதவராயர் இம்மண்டபத்தை இங்குக் கட்டி ஒரு பெரிய மணியையும் கட்டி

வைத்திருந்ததாகவும், திருமலைமீது பெருமாளுக்கு மகா நைவேத்தியம் படைக்கப் பெற்றதை இம்மணி ஓசையை எழுப்பித் தெரிவிக்க மன்னர் ஏற்பாடு செய்திருந்தார் எனவும், மணி ஓசை கேட்ட பிறகே வழக்கமான தன் உணவை உண்ணச் செல்வார் எனவும் கூறுவர். திருமலையில் சந்திரிகிரிராயர் கட்டி வைத்த அரண்மனை உள்ளது.

மலை மீது ஏறும் வழியில் இரண்டு கம்பீரமான பெரிய ஆஞ்சநேயர் திருஉருவங்களைச் சுதையால் செய்து வைத்துள்ளனர். மலை மீது ஏறுபவர்கள் மலையில் உள்ள கற்களை எடுத்து ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கின்றனர். இவ்வாறு அடுக்கி வைத்துச் சென்றால் அவர்களுக்கு இவ்வுலகில் வீடு பேறு, அதாவது குடியிருக்கச் சொந்தவீடு கட்டும் வாய்ப்புக் கிடைக்கும் என்பது நம்பிக்கை. யாரோ ஒருவர் அடுக்கப் போக இவ்வழக்கம் பலரையும் தொத்திக் கொண்டுவிட்டது. ஏழுமலையானை மனமாற வேண்டினாலே இங்கே வீடு பேறு-அங்கே வீடு பேறு அளிக்கும் அத்திருமாலவன் வழங்காமலா போய் விடுவான்.?

## *திருமலையில்*

திருமலையை அடைந்தவுடன் தங்குமிடத்திற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். ஏற்கெனவே பதிவு செய்து வைத்திருந்தால் எந்தத் தங்குமிடத்திற்குச் செல்லவேண்டுமோ அங்கே செல்ல வேண்டும். இல்லையெனில் வரிசையாக அமர்ந்து அவ்வசதி பெறச் சீட்டு வாங்க வேண்டும். இதற்குப் பிணையத்தொகை செலுத்த வேண்டும். நாமே பூட்டுசாவி கொண்டு செல்வது நல்லது. விலையுர்ந்த பொருள்கள், பணம் ஆகியவற்றை அறைகளில் வைத்துச் செல்வது பாதுகாப்பானதல்ல. அறைப்பூட்டை உடைத்தும் திருடும் கும்பல் உள்ளது. வாகனங்களில் வருபவர்கள் வாகனங்களின் மீது ஒரு கண் வைத்து கொள்வது இரவில் பாதுகாப்பானது. வாகனங்களில் உள்ள டேப்ரிக்கார்டர், டயர் முதலியவற்றை ஒதுக்குப் புறங்களில் நிறுத்துகிறபோது கவர்ந்து செல்வோர் எண்ணிக்கை அதிகம்தான்.

## *மொட்டை*

**திருப்பதி என்றாலே மொட்டைப் பிராத்தனை, உண்டியல் பிராத்தனை நினைவிற்கு வருகின்றன. கல்யாண கட்டம்**

என்னுமிடத்தில் மொட்டை போட வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனி பிளேடுகள் வழங்கும் ஏற்பாடு உள்ளது. நாமே விரும்பினால் தனி பிளேடு கொண்டு செல்லலாம். இலவசமாக மொட்டை போடப்பெறுகிறது. 'இதற்குப் பணம் பெறக்கூடாது. பெற்றால் நடவடிக்கை' என எழுதி வைத்துள்ளனர். கவனித்துக் கொண்டுவிட்டால் நல் முறையில் முடிஇறக்கும் பணியைச் செய்வார்கள். தங்கியிருக்குமிடத்திற்கு வந்து முடியிறக்கச் செய்பவர்களுக்கும் வசதி உள்ளது.

வைணவக் கோயில்கள் எல்லாவற்றிலும் கருவறை மதில்கள் மேல் கருடப் பதுமைகள் தான் இருக்கும் ஆனால் திருப்பதியில் கருவறை மதில்களில் சிம்மப் பதுமைகள் உள்ளன.

முடிஇறக்கியவுடன் அருகிலேயே குளியல் இடம் உள்ளது. சுடுதண்ணீர் இலவசமாக வழங்கப்பெறுகிறது. அல்லது சிறிய கட்டணம். அதன்பின் ஆலயதரிசனம் செய்ய விரும்புபவர்கள் செல்லவேண்டிய இடம் திருமலையின் கோயிலுக்கு இடது புறம் உள்ள சுவாமி புஷ்கரணி.

## *சுவாமி புஷ்கரணி*

புஷ்கரணியில் ஆதிவராகரின் சிறிய திருக்கோயில் உள்ளது. இந்த ஆதிவராகப் பெருமாள் தான் திரு வேங்கடவனுக்குத் தங்குமிடம் கொடுத்தவர். தன்னைச் சேவிக்காமல் நேராக வருபவர்களுக்கு எம்பெருமான் திருவருள் வழங்கக் கூடாது என ஆதிவராகர் எம்பெருமானை வேண்டினார் எனவும் கூறுவர். பூமிப்பிராட்டியைப் பாதுகாத்த ஞான வடிவம் வராக அவதாரம். பூவுலகத்தில் வராக பிரம்மத்திற்குத்தான் முதல் வழிபாடு, முதல் சிறப்பு என்னும் அவதாரத் தத்துவத்தை விளக்கி அடியவர்களுக்குத் திருவருள் செய்யவே இத்தலத்தில் தன்னை வழிபட்ட பின்னரே ஏழுமலையானைச் சேவிக்க வேண்டும் என்ற விதிமுறையை வகுத்துள்ளார். சுவாமி புஷ்கர்ணியின் வடமேற்கு மூலையில் கோயில் கொண்டுள்ள இப்பெருமாளுக்குத் தளிகை சமர்ப்பித்த பிறகே எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

## வைகுந்தக்கூடம்

புஷ்கர்ணியில் மூழ்கிய பின்னர் பெருமாளை வழிபடச் செல்பவர்கள் **வைகுந்தக் கூடம்** என்னும் கூடத்திற்குச்

செல்லவேண்டும். அக்கூடத்து வழியாக வரவேண்டும். எல்லாச் சேவைக்காரர்களுக்கும் தரிசன நேரம் குறிப்பிட்டுப் பட்டை கட்டி வந்த முறை மாற்றப்பெற்றுச் சிறப்புத் தரிசனக்காரர்கள் இப்போது கையில் பட்டை கட்டிக் கொண்டால் அதில் குறிப்பிடப் பெற்றுள்ள தரிசன நேரத்திற்கு ஆலயம் வந்தால் போதும், அதுவரை கோயிலில் கூடத்தில் காத்திருக்க வேண்டுவதில்லை. இவ்வேறுபாடு கணினி அறிவு வளர்ச்சியின் பயனாய் விளைந்தது. தர்ம தரிசனம் எனில் வைகுந்தக் கூடத்து வழியாக உட் சென்று பகுதி, பகுதியாகப் பிரிக்கப்பட்ட அமைப்புக்குள் வாயில் திறக்கும் வரை இருக்க வேண்டும். அங்கேயே கழிப்பிடம், உணவு விற்பனை முதலியன உள்ளன. எப்போது திறக்கப்பெறும் என்பது உறுதியாயிராது.

## திருக்கோவில் வாயில்

வைகுந்தக் கூடம் வழியாக உள்ளே சென்று கோவில் திருச்சுவரை ஒட்டிய வரிசை வழியாக வந்து திருக்கோயில் வாயிலை அடைகிறோம். வாயிலில் எப்போதும் படிக்கட்டுகளில் கால்களை நனைக்க நீர் வந்து கொண்டிருக்கும். கால்கள் இதனால் தூய்மை பெறுகின்றன.

## திருக்கோவில்

திருமலையாகிய இத்திருப்பதிக் கோவில் 400 அடி நீளமும், 200 அடி அகலமும் கொண்டது. இரண்டு கோபுர வாயில்களையுடையது. வெளிக்கோபுரங்களுக்குள் இரண்டு திருச்சுற்றுக்கள். இரண்டு திருச்சுற்றுக்களுக்கும் நடுவே உள்ள தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் நடந்து வரும் சுற்றுப் பாதைக்கு ***'சம்பங்கி பிரதட்சணம்'*** என்பது பெயர் ஆகும்.

உள் திருச்சுற்றுக்கும், கருவறைக்கும் இடையே உள்ள சுற்றுப்பாதைக்கு ***விமான பிரதட்சணம்*** என்பது பெயர். வெளிக்கோபுர முதல் வாயிலுக்கு ***'முகத்து வாரம்'*** என்பது பெயர். இதன் அகலம் 11 அடி. இக்கோபுரத்தை கி.பி.13 ஆம் நூற்றாண்டில் திரிபுவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீ யாதவராய வீரநரசிம்ம தேவராயர் கட்டினார். இக்கோபுரத்தின் ஒரு சிறப்புக் கூறு அண்ணல் காந்தியடிகளில் திரு உருவம் இடம் பெற்றுள்ளது என்பதே.

வெளிக் கோபுரத்தைக் கடந்து உள்ளே முதலில் இடதுபுறம் உள்ள மண்டபத்திற்கு ***ரங்கநாயகி குல மண்டபம்*** எனும் மிகச் பெரிய மண்டபம் உள்ளது. அடுத்துப் ***பிரதிம மண்டபம்*** உள்ளது.

பிரதிம மண்டபத்தின் வடக்கே விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரின் வெண்கலச்சிலை இருக்கிறது. இவர் ஏழுமலையானை ஏழுமுறை சேவித்துள்ளதாகக் கூறுவர்.

பிரதிம மண்டபத்தின் இடது புறத்தில் உள்ள ***ரங்க மண்டபம்*** 100 அடி வடக்கு தெற்காகவும், 60 அடி கிழக்கு மேற்காகவும் அமைந்துள்ளது. இங்குள்ள சிறு கோவிலுக்குள் ரங்கநாதரின் திருவிக்கிரகம் உள்ளது. திருவரங்கத்தில் உற்சவராக இருந்த இவர் முகலாயர்களின் படையெடுப்பால் இத்தலத்தில் கொண்டு வந்து பாதுகாக்கப்பட்டிருப்பதாக நம்பிக்கை. இம்மண்டபம் கி.பி.14 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ ரங்கநாத யாதவராயரால் கட்டப்பெற்று. அடுத்துத் ***திருமலை ராய மண்டபம்*** உள்ளது. இதன் அமைப்பில் தென்பகுதி உயர்ந்தும், வடபகுதி தாழ்ந்தும் தளம் அமைந்துள்ளது.

கோவிலின் உள்ளே முதலில் பதினாறு அற்புதமான தூண்களைக் கொண்டுள்ள ***திருமாமணி மண்டபம்*** உள்ளது. இத்திருமாமணி மண்டபத்தில் மேற்கே ***'பங்காருவாசல்'*** என்னும் தங்க மயமான கதவுகள் உள்ளன. வாயிலின் இருபுறமும் வைகுண்டத்தின் வாயிற் காவலர்களாகிய ஜெயன், விஜயன் ஆகிய துவார பாலகர்கள். நான்கு கரங்களோடு, இரு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியவர்களாய், ஒரு கையில் கதாயுதத்தைத் தாங்கி, மற்றொரு கையை எம்பெருமானைச் சேவிக்கக் காட்டி நிற்கக் காண்கிறோம்.

பங்காருவாசலின் தங்கக் கதவுகளில் எம்பெருமான் ஐவகை நிலைகளான வியூகம், பரத்துவம், விபாவம், அர்ச்சாவதாரம், அந்தர்யா மித்துவம் ஆகிய நிலைகளை விளக்கும்காட்சிகள் உள்ளன. வியூகம் என்பது கிடந்த கோலம், பரத்துவம் என்பது இருந்த கோலம், விபாவம் என்பது மேலிருந்து கீழ் இறங்கிய கோலம், அர்ச்சாவதாரம் என்பது உருவவழிபாடு, அந்தர்யாமித்துவம் என்பது வியாமா நிலையாகும்.

கி.பி.15 ஆம் நூற்றாண்டில் சாளுவ நரசிம்மன் இம்மண்டபத்தைக் கட்டினார். இம்மண்டபத்தின் நடுவில் இருப்பது நான்கு தூண்கள் கொண்ட ஒரு சிறு மண்டபம் வசந்த விழா மண்டபமாகும். சம்பங்கி

பிரதட்சணத் திருச்சுற்றில் சாளுவ நரசிம்மன் கட்டிய நான்கு சிறு மண்டபங்கள் உள்ளன. சம்பங்கிப் பிரதட்சண வழி மண்டபத்தில் பெருமாளுக்கு இரு தேர்களும் கருடன், ஆதிசேடன் ஆகிய வாகனங்களும் உள்ளன.

கோவிலின் கொடிக்கம்பம் கருங்கல் பீடத்தின் மீது நிறுத்தப்பெற்றுள்ளது. மரத்தாலான கொடிக்கம்பத்தின் மேல் தங்கத் தகடுகள் போர்த்தப்பட்டு எழிலாக உள்ளது.கொடிக்கம்பத்தில் காளிங்கனின் மீது கண்ணன் நின்று நடனமாடும் காட்சி காணப்படுகிறது. பலிபீடமும் கருங்கல்லால் ஆனது. அதன் மீது உலோகத் தகடு மூடப்பெற்றுள்ளது.

விமான பிரதட்சண வழியில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் உள்ள தூண்களைக் கொண்ட மிகப் பெரிய கல்யாண மண்டபம் உள்ளது. விமான பிரதட்சண வழியில் வரதராசப் பெருமாளின் சந்நிதி சிறிய கோவிலாக உள்ளது. விமான பிரதட்சண வழியில்தான் அதிகாலையில் பக்தர்களின் அங்கப் பிரதட்சணங்கள் நடைபெறுகின்றன. இதன் மேற்கில் ஒரு சிறு வழிபாடு பெருமானைக் கொண்ட சிறு மண்டபம் உள்ளது. விமான பிரதட்சண வழியில் திருமாமணி மண்டபத்தின் ஒரு பகுதியில் கருட பகவானின் திருவுருவம் உள்ளது.

இத்திருக்கோயிலின் விமான பிரதட்சண வழியில் கீழ்ப்புறம் திருமடைப் பள்ளி உள்ளது. இதற்குப் **பொட்டு அறை** என்பது பெயர் ஆகும். இங்குப் புதுப்புது மண் பாண்டங்களில் பெருமாளுக்கு நிவேதனப் படையல் பொருள்கள் செய்யப் பெறுகின்றன. இங்கே பெருமானின் வளர்ப்புத் தாயாகிய வகுளா தேவி, சமையலைக் கவனித்து வருவதாக நம்பிக்கை. அதற்கு ஏற்பச் சமையற் கட்டில் வகுளாதேவியின் உருவம் பத்மாசனத்தில் நான்கு கரங்களுடன் அமைந்துள்ளது.

பொட்டு அறையின் முன்பு ***'பங்காரு வாவி'*** எனும் கிணறு நீளவாக்கில் கிழக்கு மேற்காக உள்ளது. இதன் தீர்த்தமே அபிடேக தீர்த்தமாகவும், பிரசாதங்கள் செய்யவும் பயன்படுகிறது.

பன்னெடுங்காலம் முன்பு அபிடேக தீர்த்தத்தைப் 'பாவநாசம்' தீர்த்தத்திலிருந்து திருமலை நம்பி தூக்கிக் கொண்டு வந்து திருமஞ்சனம் செய்வித்து வந்தார். அவருடைய ஞானகுரு

ஆளவந்தார் திருமலைக்கு வந்தபோது, திருமலை நம்பி உடல் நலம் குன்றியிருந்த போது பங்காருவாவியின் தீர்த்த நீரை ஏற்றுக்கொள்ள வேண்டினார். அவ்வாறு திருமுழுக்குச் செய்யப் பெருமாள் அதனை ஏற்றதால் அது முதல் பங்காரு வாவியின் தீர்த்தத்தாலேயே ஏழுமலையான் திருமுழுக்கு நடைபெறுகிறது.

பெருமாளின் கருவறையை ஒட்டி உள்ள மண்டபம் **ஸ்நபன மண்டபம்** ஆகும். அடுத்து உள்ளவை இராமர் மேடை, சயன மண்டபம் ஆகும். ஸ்நபமண்டபத்தின் மேல் பகுதியில்தான் திருக்கோயிலின் உண்டியலும், இரண்டு பெரிய மணிகளும் உள்ளன. இப்பெருமண்டபத்தில் சிற்ப நுணுக்கங்களும், இராமர், கோபாலகிருஷ்ணன், சீனிவாச உருவங்களும் கொண்ட பதினாறு தூண்கள் உள்ளன. இங்குத்தான் ஒவ்வொருநாளும் அதிகாலையில் சுப்ரபாதம் பாடப்பெறுகிறது. இந்த ஸ்நபன மண்டபத்திற்குத் திருவிலன் கோவில் என்பதும் பெயர் ஆகும்.

மூலவர் சந்நிதியைச் சுற்றிக் கருவறையுடன் காணப்படும் பகுதி ***முக்கோடி பிரதட்சணமாகும்*** கி.பி.13 ஆம் நூற்றாண்டில் முக்கோடி பிரதட்சணத்தின் ஒரு பக்கம் இராமர் மேடை கட்டப்பெற்று, ஒரு பக்கம் மறைக்கப்பெற்ற மூன்று பக்கங்களும் திறக்கப்பெற்றன.

முக்கோடி பிரதட்சண மண்டபத்தின் பாதை வைகுண்ட ஏகாதசியில் சொர்க்க வாசலாக அமைந்து திறக்கப்பெறுகிறது. இங்கு வட பகுதியில் சேனை முதலியாரான விசுவக்சேனர், நான்கு கரங்களுடன், சங்கு சக்கரம், அபயகரம், வரதகரம் கொண்டு சுதர்சனக் கோலத்தில் சிறிய சந்நிதியைக் கொண்டு விளங்குகிறார். இவர் இத்தலத்தின் நிதித்துறையைக் கவனிக்கிறார். இப்பிரதட்சணத்தின் தென் பகுதி வழி மிகவும் குறுகியது.

முக்கோடி பிரதட்சணத்தின் முகப்பிலேயே சயன மண்டபம் அமைந்துள்ளது. இச்சயனமண்டபம் 18 அடி நீளமும், 6 அடி அகலமும் கொண்டது. இங்குத்தான் திருவேங்கடவன் துயில்கிறார்.

சயன மண்டபத்தையும், கருவறையையும் பிரிக்கும் படிக்குப் பெயர். **குலசேகரப்படி** குலசேகராழ்வார் அன்று விரும்பிய திருவிருப்பம் இது.

*''செடியாய வல் வினைகள் தீர்க்கும் திருமாலே*
*நெடியானே வேங்கடவா நின் கோவிலின் வாச ு*

*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய்க் கிடந்து நின் பவளவாய்க் காண்பேனோ''*

என்று பக்தி சுகத்தில் உருகிப் பாடினார். அவரைச் சிறப்பிக்கவே 'குலசேகரப் படி' என்று பெயர் அமைந்தது. பக்தர்கள் பாதம் பதிக்கும் படிக்குக் **குலசேகரப் படி** என்று பெயர் அமைந்தது போல் ஏழுமலையான் அளந்து அருள் செய்யும் மரக்கால் எனும் அளவைக்கும் **'குலசேகரப் படி'** என்பதே பெயர்.

சிலம்பு இசைத்த இளங்கோவடிகள்

*''தேனோங்கு நீழற் திருவேங்கடமென்றும்*
*வானோங்கு சோலை மலையென்றும், தானோங்கு*
*தென்னரங்கமென்றுந் திருவத்தியூர் என்றுஞ்*
*சொன்னார்க்கு உண்டோ துயர்*

என்று பாடிய இத்தலத்து எம்பெருமான் எப்படிப் பட்டவர்? அவரை நம்மால் உணரமுடியுமா? பொய்கை யாழ்வார் கேட்கிறார் இக் கேள்வியை.

*உணர் வாரானுன் பெருமை? ஊழிதோறூழி*
*உணர்வாராறுன்னு வந்தன்னை-உணர்வாராய்*
*விண்ணகத்தாய் மண்ணகத்தாய், வேங்கடத்தாய் நால்வேத*
*பண்ணகத்தாய் நீ கிடந்தபால்.*

எம்பெருமான் நின்ற கோலத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இளங்கோவடிகள் கண்டபெருமானை நாம் காணப்போகிறோம்.

## மூலவர்

உயர்ந்த மலை உச்சியிலிருந்து அருவி கொட்டிக் கொண்டிருக்க, சூரியனும் சந்திரனும் எதிரெதிரே எழுந்து நிற்க இடைப்பட்ட இம்மலையில் மின்னலே ஆடையாக ஆணிந்து, ஓடி நீலமேகம் நிற்பது போல் எழுந்தருளிப் பகை வெல்லும் ஆழியும் பால் நிறம் போன்று சங்கும் இருபுறமும் திகழத் தாமரையைக் கரத்தில் ஏந்திக் கிளர்ந்தெழும் ஆரத்தை மார்பில் பூண்டு தூய பட்டாடை உடுத்திச் செங்கண் நெடியோன் நிற்கின்றான் என்றார் இளங்கோவடிகள்.

***வீங்கு நீர் அருவி வேங்கடமென்னும்***
***ஓங்குயர் மலயத்துச் சி மீமிசை***

*விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி*
*இருமருங் கோங்கிய இடைநிலை தாலித்து*
*மின்னக் கோடியுடுத்து விளங்குவிற்பூண்டு*
*நன்னிறமேகம் நின்றதுபோலப்*
*பகையணங் காழியும் பால் வெண் சங்கமும்*
*தகை பெறு தாமரைக் கையில் ஏந்தி*
*நலங்கினர் ஆரம் மார்பிற் பூண்டு*
*பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய*
*செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்.*

கருவறையில் கம்பீரமான தோற்றத்தில் தோளில் சுருண்டமுடி, இருபது அங்குல உயரமுள்ள அழகிய கிரீடம், அருள்பொங்கும் விழிகள், முகத்தாடையில் ஒரு வெள்ளைத் தழும்பு, காதுகளில் குண்டலங்கள், பரந்த எடுப்பான மார்பு, பாஞ்ச சன்யமேந்திய இடதுகை, வலது கையில் சுதர்சன சக்கரம், வலது புறக்கை தன் பாதங்களில் சரணாகதி யாவோர்க்கு எல்லாம் சித்திக்கும் என்று தன் தாமரைத்தாள்களைக் காட்டுகிறது. இதனை அபய ஹஸ்தம் என்பர். இது கையைக் கீழ் நோக்கிய நிலையில் நான்கு விரல்கள் தொடை மீதும், கட்டை விரல் மட்டும் இடுப்பை நோக்கியும் விரித்துக் கம்பீரமான தோற்றம். எவருக்கும் அப்பன் பெருமானை அகலாமல் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்து விடமாட்டோமா என்று எண்ணச் செய்யும் தோற்றம்.

மூலவரின் சிலா வடிவத்தை சாளக்கிராம மாகிய ஒரு வகையான சிவப்புக்கல்லால் அமைந்துப் புனுகால் அபிடேகம் செய்து சிலை கறுப்பாக மாறி விட்டது. மூலவரின் சிலை முதலில் இரண்டு கரங்களுடன் மட்டுமே இருந்தது எனவும் பிறகு உடையவர் இராமானுஜரின் வேண்டுதலின் பேரில் பெருமாள் சங்கு சக்கரங்களை ஏந்திய இருகரங்களுடன் நான்கு கரத்தவராகச் சேவை தந்ததாகவும் கூறுவர்.

இதைக் குறித்த செய்திகள் இவை மட்டுமல்ல, இன்னும் உண்டு அதைக்குறித்துக் கடைசியில் காண்போம். ஏழுமலையானின் வலது புறத்தின் மேலே உள்ள சக்கரம் இம்மையின், மறுமையின் செல்வங்களை உருண்டு வந்து வந்து கொண்டிருக்கும் சுக போகங்களைச் சுழலும் தர்மத்தைக் காட்டுகின்றது. இடது புறத்தின் மேலே உள்ள சங்கு அனைவரும் மரணத்தை எய்திப்பரம

பதவாயிலினுள் நுழையும் போது கேட்கும் சங்கின் முழக்கத்தையும் அதர்மம் அழியும் போது தேவதை எழுப்பும் சங்கின் முழக்கத்தையும் காட்டுகிறது.

பெருமாளின் வலக்கரத்தையும், இடக்கரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், வலக்கரத்தினால் கொடுப்பவனும் நானே, கொடுப்பவற்றைக் கொள்பவனும் நானே என்பது போல் உள்ளது.

ஏழுமலையானின் வலது மார்பில் பெரிய பிராட்டியார் திருமகள் அமர்ந்த கோலம் கொண்டுள்ளார். இடது மார்பில் பத்மாவதித் தாயாரும் அமர்ந்துள்ளனர். இரு தாயார்களும் தாமரை மீது அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன் மேல் நோக்கிய இருகரங்களிலும் இரண்டு தாமரை மொட்டுகளையும் கொண்டு, கீழே உள்ள வது கரமாகவும் மேற்கொண்டு விளங்குகின்றார்கள். உடையவர் இராமானுஜர், பத்மாவதித் தாயாரின் திருவுருவம் பதித்த தங்கப் பதக்கம் செய்து, ஏழுமலையானின் கழுத்தில் அணிவித்தார் என வேங்கடாசல இதிகாச மாலை கூறுகிறது.

உலகத்திலேயே அதிக அணிகலன்கள் அணிந்த இறைவன் இப்பெருமாள் ஒருவராகத்தான் இருக்கமுடியும். அன்பர்கள் தங்க, வைர நகைகளை வாரி, வாரி வழங்கியுள்ளனர். அவற்றைப் பட்டியல் போட்டால் இடம் போதாது, எனினும் குறிப்பிடத்தக்க சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்டுவோம்.

உலகிலேயே மிகப்பெரிய மேரு பச்சை என்னும் மூன்று அங்குல விட்டம் கொண்ட பச்சைக்கல் பதிக்கப் பெற்ற கிரீடம் உள்ளது. வைரமுடி உள்ளது. முதலை வடிவத்தில் காதணிகளும், தோளில் தங்க அணிகலன்களும் வைரம் முதலிய விலைமதிப்பில்லாக் கற்கள் பதித்த மகரகண்டியும், தங்கத்தால் ஆன துளசி மாலையும், நூற்று எட்டு இலக்குமிகள் உருவம் பதித்த தங்கக் காசு மாலையும், வெங்கடேசுவர சகஸ்ரநாமம் வரையப் பெற்ற தங்கக் கவசம் பூணப்பெற்ற சாளக்கிராம மாலையும், வங்கியைப் போன்ற காலணித் தண்டையும், தங்கத்தால் ஆன பாத கவசமும், தசாவதாரம் பொறிக்கப் பெற்ற இடுப்புப் பட்டையும், இடுப்பில் தொங்கும் தங்கத்தால் ஆன ஆயுதமும் ஏழுமலையானுக்கு அணிவிக்கப்பெறுகின்றன. இன்று உலகிலேயே அதிக அளவில் எங்கும் திருஉருவப்படமாய், சிறிய வடிவில், பெரிய வடிவில் காணப்படும் திருஉரு மூலவரின் திரு உருவே எனலாம்.

***ஸ்ரீநிவாசர்***

மூலவரை அடுத்துச் சங்கு சக்ரதாரியாக நின்ற கோலத்தில் சேவை தருபவர் மணவாளப் பெருமாளாகிய போக ஸ்ரீ நிவாசர். இவர் பக்தர்களின் காணிக்கையை ஏற்று வரங்களை வழங்கி வருகிறார். கி.பி. 966இல் பல்லவ அரசி சாமவை என்பவர் இந்த போக ஸ்ரீ நிவாசரை வழங்கினார். இப்பெருமாளுக்குத் தினம் மந்திர உச்சாடனம் செய்வித்துப் பால், சந்தனம் வாசனைப் பொருட்கள், தேன், மஞ்சள் பொடி ஆகியவற்றால் திருமுழுக்குச் செய்கின்றனர். இரவில் ஏகாந்த சேவையின் போது-இப்பெருமாளை இரவில் வெள்ளித் தொட்டிலில்போட்டு, சயனமண்டபத்திற்குக் கொண்டு வந்து பால் நைவேத்தியம் செய்து சந்தனம் பூசி, தாலாட்டுப் பாடல்கள் பாடித் தூங்க வைக்கும் சயனம் நடைபெறுகின்றது. மார்கழி மாதம் தவிர்த்த ஏனைய பதினோரு மாதங்களும் இப் போக ஸ்ரீ நிவாசனுக்கு ஏகாந்த சேவை நடைபெறுகிறது. மார்கழி மாதத்தில் மட்டும் கிருஷ்ணருக்கு இந்த ஏகாந்த சேவை நடைபெறுகிறது.

***உற்சவர்***

உற்சவ மூர்த்தியின் பெயர் ***மலைகுனிய நின்ற பெருமாள்*** என்பதாகும். ஏழுமலையான் இம்மலையின் ஓரத்தில் வந்து நின்ற பொழுது குன்றே வளைந்து தலைகுனிந்து வணங்கியதால் உற்சவருக்கு இப்பெயர் ஏற்பட்டது. இவர் மூன்றடி உயரம் உடையவராக இருபுறமும் ஸ்ரீ தேவி, பூதேவி ஆகியவர்களைக் கொண்டு விளங்குகிறார். இவருக்கும் தங்கம், வைரம் வைடூரியம் போன்றவைகளால் இழைக்கப்பெற்ற அணிகலன்கள் அணிவிக் கின்றனர். கி.பி. 14ம் நூற்றாண்டில் திரிபுவனச் சக்கரவர்த்தி நாயனார் ஸ்ரீ ரங்கநாத யாதவராயர் இத்தலத்திற்கு வழங்கியுள்ளார். இத்தலத்தில் அழிக்கும் உக்கிரத்துடன் உக்கிர ஸ்ரீ நிவாசர் என்னும் மற்றொரு உற்சவமூர்த்தியும் இங்கு உள்ளார். இவருக்கு ***வேங்கடத்து உறைவார்*** எனும் பெயரும் உண்டு.

மூலவருக்கு முன்-மூலவர் உருவாகும் முன் இக்கோவிலில் உருவாகி இருந்தவர் என இந்த வேங்கடத்து உறைவாரைக் கருதுகின்றனர். இவர் ஒன்றை அடி உயரத்தில் ஸ்ரீ தேவி, பூதேவி சமேதராகக் கையில் பிரயோகச் சக்கரத்துடன் நின்ற கோல சேவை தருகிறார்.

இவர் கார்த்திகை மாதம் துவாதசியில் விடியற்காலையில் தம்பதி சமேதராக வீதி உலா வருவார். இவர் மீது சூரியக் கதிர்கள் பட்டால் உலகம் அழிந்து விடுமாம்.

அடுத்துத் ***தர்பார் சீனிவாசர்*** எனப்படும் ***கொலு சீனிவாசர்*** இருக்கிறார். இவருக்கு ரியபணி ஒவ்வொருநாளும் மூலவருக்கு எதிரில் வெளியில் உள்ள திருமாமணிமண்டபத்தில் எழுந்தருளி வழக்குகளை விசாரிப்பது என்பர். இவர் முன்னிலையிலேதான் தினமும் உண்டியல் எண்ணப்படுகிறது. பிறகு அக்கணக்கு வரவினை எவ்வளவு என இவர் முன்வாசித்துக் காட்டுவார்கள்.

அடுத்து ருக்மிணிப்பிராட்டியாருடன், தாமரையில் இடது காலை ஊன்றி, வலது காலைத்தூக்கிய நிலையில் நவநீத கிருஷ்ணன் நாட்டியம் ஆடுவதைப் போன்ற திருஉருவ தரிசனம் உள்ளது. நவநீத கிருஷ்ணன்-வலது கையில் நவநீதமான வெண்ணெயுடன், இடது கையில் நாட்டிய முத்திரை காட்டுகிறார். இவர் 1106இல் இடம் பெற்றவர். மார்கழி மாதத்தில் மட்டும் இவருக்கு ஏகாந்த சேவை நடைபெறும்.

அடுத்து எம்பெருமானாரால் அளிக்கப்பெற்ற இராமபிரான், *சீ*தாப்பிராட்டி, இளையாழ்வார், சுக்ரீவன் ஆகியோர் உள்ளனர். இராமர் தலையில் கிரீடம் அணிந்து இடது கையில் வில், வலதுகையில் அம்புடன் தன் இடதுபுறம் *சீ*தையும் வலதுபுறம் இலக்குவனையும் கொண்டு சுக்ரீவன் வணங்கி அமர்ந்த கோலமீ கொள்ள நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார்.

அடுத்துச் *சக்கரத்தாழ்வாராகிய 'சுதர்சன சக்கரம்'* எனும் உற்சவர் உள்ளார். இவர் உலாப் புறப்படும்போதெல்லாம் கட்டியம் கூறிக் கொண்டு செல்வர். மூலவரின் கருவறையை அடுத்த அந்தால மண்டபத்தில் உள்ள இராமர் மேடையின் வெளியே வாலிமைந்தன் அங்கதனுக்கும் அனுமனுக்கும் சிற்பங்கள் உள்ளன. இருவரின் எதிரில் விசுவக்சேனர், ஆதிசேடன், கருடன் ஆகியோரின் உருவங்கள் உள்ளன.

## விமானம்

**மூலவர் கருவறைமேல் உள்ள விமானம் *ஆனந்த நிலைய விமானம்* என்ற பெயரில் தங்கத் தகடுகளால் மூடப் பெற்று ஒளி வீசுகின்றது. ஆனந்த விமானம் மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது. முதல்**

இரண்டு அடுக்குகள் செவ்வக வடிவும், மேல் அடுக்கு சதுர வடிவும் கொண்டுள்ளன. இவ்விமானம் 38 அடி உயரம் கொண்டதாகும். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் விஜய நகரமன்னன், வீர நரசிம்ம தேவன் முதலில் விமானத்தில் தங்கம் வேய்ந்தான். பின் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் பொற்கலசம் அமைத்தார். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் சாளுவமங்குதேவன் விமானத்திற்குப் பொன்னால் ஆன கூரையை வேய்ந்தார். கி.பி. 15ஆம் நூற்றாண்டின் மத்தியில் இரண்டாம் தேவராயரின் அமைச்சன் சேகர மல்லண்ணன் என்பார் விமானத்தையும் கோவிலையும் புதுப்பித்தார். இவரே திருமாமணி மண்டபத்தையும் கட்டியவர். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணதேவராயர் ஆனந்த நிலைய விமானத்தைச் செப்பனிட்டுப் பொற்பூச்சு அளித்தார். கிருஷ்ணதாசரால் 1900இல் விமானத்தில் உள்ள பொற்கலசம் புதுப்பித்துப் பொருத்தப்பெற்றது. 1958இல் திருப்பதி-திருமலை தேவஸ்தானத்தினர் விமானத்தைப் புதுப்பித்தனர். விமானத்திற்குத் தாமிரத்தகடுகளால் மூடப்பெற்றுத் தங்கமுலாம் பூசப் பெற்றுள்ளது. விமானத்தில் நின்ற கோலத்தில் காட்சி தருபவர் விமான வெங்கடேசர் ஆவார். இவரை மேற்குத் திசையில் ஆலயத்தினுள் குறிப்பிட்ட இடத்தில் நின்றால் தரிசனம் செய்யலாம்.

## திருவேங்கடம்

**'இறைவன் குடிகொண்ட பதி'** என்னும் பொருளில் திருத்தலங்களைத் திருப்பதி என அழைப்பது வழக்கம். ஆனால் எம்பெருமான் வேங்கடகிருஷ்ணன் உறையும் பதியே திருப்பதியாகவும், நின்று அருள் பாலிக்கும் மலையே திருமலையாகவும் பெயர் பெற்றன.

ஏழுமலைகளுக்கு அதிபதியாய்-உலக நாயகர்-ஏழுமலையானாகக் குடி கொண்ட இத்திருத்தலத்திற்குத் திருவேங்கடம் என்று பெயர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உள்ளது. பண்டைத்தமிழ் இலக்கியங்கள் எல்லாம் அவ்வாறே குறிப்பிட்டன.

இம்மலைக்கு வேங்கடம் என்னும் பெயர் ஏற்பட்டதற்கான காரணமாகக் கூறப்படும் செய்தி இது.

புரந்தரன் என்னும் அந்தணன் ஒழுக்கமில்லாதவனாக, குறைந்த ஒழுக்கமுடைய பெண் ஒருத்தியுடன் காமத்தில் உழன்றான். பின்

அப்பெண்ணால் துரத்தப் பெற்று நோய் வயப்பட்டு இம்மலை மீது ஏறி வந்த பொழுது இவனுடைய பாவமாகிய **கடம்**, மலைக்காற்றாலும், பெருமாள் திருவருளாலும் தீயினுள் வெந்து அழியும் பொருள் போல வெந்து அவன் உடல் பசும் பொன்னாக மாறியது எனவும், பாவமாகிய **கடம்வேம்** என்று வெந்ததால் **வேங்கடம்** என்ற பெயர் உண்டாயிற்று. எழுமலைகளையுமே வேங்கடமாகக் கருதுவர். ஏழுமலைகளையும் வைகுண்டத்திலிருந்து கொண்டு வந்ததாகவும், ஆதிசேடனின் வடிவமெனவும் கொள்வர்.

திருமலையப்பன் திருக்கோவில், திருச்சானூர் அலர்மேல் மங்கை கோவில் இரண்டினையும் தொன்டைமான் கட்டியதாக ஒரு வரலாறு கூறுகிறது. இங்குள்ள சுற்று மண்டபங்கள், யாகசாலை, கோபுரங்கள், தானியக் களஞ்சியம், கொடியேற்ற மண்டபம் ஆகியன தொண்டைமான் கட்டியதாகும். இங்குக் காணும் கல்வெட்டுகளில் தொண்டைமானின் திருப்பணிகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஏராளமான தமிழ், நகரிக் கல்வெட்டுகள் உள்ளன.

### *தொண்டைமான்*

தொண்டைமானின் பக்திச் சிறப்பிற்குச் சான்றாக இந்நிகழ்ச்சி கூறப்பெறுகிறது. தொண்டை மானைப் பகைவர்கள் போர்க்களத்தில் எதிர்த்து நின்றபோது போரில் தோல்வி ஏற்படக் கூடிய சூழ்நிலையில் வேங்கடவனை வேண்ட ஏழுமலையான் தனது சங்கு, சக்கரங்களையே அளித்தார். போரில் வெற்றி பெற்ற தொண்டைமான் அதைப் பெருமாளுக்கு மீண்டும் அளித்து அவை தனது கண்களுக்கு மட்டுமே தெரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பெருமாளும் அவ்வாறே அருள்புரிய இதேபோல் தொண்டைமானின் வாழ்க்கையில் பல முறைகள் அதிசயத்தக்க நிகழ்வுகளை வேங்கடவன் நிகழ்த்திக் காட்டினார். நூல்கள் பலவற்றிலும் தொண்டைமான் எனவும், தொண்டை மன்னன் எனவும் கூறப்பட்டுள்ளதேயன்றி மன்னனின் பெயர் குறிப்பிடவில்லை.

### *வைகானசம்*

எம்பெருமான் தாமே சுயம் புவாகச் சிலை வடிவில் இத்தலத்தில் பிரதிட்டையாகி உள்ளதாகவும் கூறுவர். எம்பெருமானின் திருஉருவம் வைகானச ஆகம முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

எம்பெருமான் மனதிலிருந்து பிறந்த வைகானச மகரிஷி வகுத்த முறைப்படி தெய்வம் பிரதிட்டை செய்யப்பட்டதால் இங்கு வழிபாடுகள் வைகானச ஆகம முறைப்படி நடைபெறுகின்றன. வைகானச முறை மாறாமல் உருவாக்கப்பெற்று வழிபாடுகள் நடைபெறும் திருத்தலம் இது.

## திருமலையில் எம்பெருமாள்

திருமலையில் எம்பெருமான் வந்ததைக் கூறும்புராண வரலாறு இது. உலகம் தோன்றித் திரேதாயுகம், துவாபரயுகம், கிருதயுகம் ஆகியவை மறைந்த பின் கலியுகம் பிறந்தது. கலியுகத்தில் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கியது. பஞ்ச மாபாதகங்கள் சர்வசாதாரணமாக நடமாடின.

கலிபுருடனின் கொடிய அராஜக ஆட்சியிலிருந்து பூவிலகமாகிய பூமிப்பிராட்டியாரை மீட்கவும்-உலக ஆன்மாக்களைக் கலியின் பிடியிலிருந்து விடுவிக்கவும் எம்பெருமாள் திருமலையின் மீது வந்து ஒரு பாம்புப் புற்றிற்குள் தங்கினார்.

சிவனும், பிரம்மனும் பசுவும் கன்றாக மாறினர். பெரிய பிராட்டியார் இடைப் பெண்ணாக மாறிப் பசுவையும் கன்றையும் சோழ மன்னனிடம் விலை பேசி விட்டு மறைந்தாள்.

சோழ மன்னரின் அரண்மனை மாடுகளை மேய்த்து வரும் இடையன், சிவபெருமானும், பிரம்ப தேவனுமாகிய பசுவையும் கன்றையும் மாடுகளோடு சேர்த்து, மேய்ச்சலுக்காக ஓட்டிக் கொண்டு திருமலைக் காடுகளுக்கு வந்தார். பசு மட்டும் ஒதுங்கி நாராயணன் தங்கி இருக்கும் பாம்புப் புற்றின் அருகில் சென்றது. புற்றினுள் நாராயணனின் வாயில் பாலை வெள்ளமாகப் பொழிந்து அவருடைய பசியைப் போக்கிக் கொண்டு வந்தது. பசு இவ்வாறு செய்ததைக் கண்டு பெருங்கோபம் கொண்ட இடையன் விறகு வெட்டும் கோடாலியைப் பசுவின் மீது எறிந்தார். அது நாராயணன் தலையின் பட்டுப் பரமாத்மாவின் புனிதக் குருதி சிந்தியது. இக்குருதியினால் பூவுலகில் வாழ்ந்த உயிர்கள் எல்லாம் புனிதம் பெற்றன. புற்றிலிருந்து வெளியில் வந்து இடையனுக்குத்தான் பெருமாள் முதலில் காட்சி கொடுத்தார்.

பின் பூமிப்பிராட்டியை ஆதியுகத்தில் மீட்டுக் காப்பாற்றிய தன் கூறாக விளங்கும் ஸ்ரீ வரா ஹ அவதார நாராயணனைச் சந்தித்தார்.

திருமலையைத் தனக்குச் சொந்தமாகத் தங்கு மிடமாகக் கொள்ள உரிமையைக் கேட்டபோது முக்காலமும் அவர் நின்றகோல சேவை தரப் போவதை உணர்ந்த ஆதிவராகர் அடியர்கள் தம்மையே முதலில் வணங்க வேண்டும் என்னும் நிபந்தனையை விதித்துத் திருமலையை நாராயணனுக்கு வழங்கினார்.

பத்மாவதியை மணந்து கொள்வதற்காக, எம்பெருமான் சீனிவாசன் குபேரனிடம் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்து வட்டிக்குக் கடன் பெற்றார். கடன் பத்திரத்தில் சிவ பெருமானும், பிரம்ம தேவனும் சாட்சிகளாகக் கையெழுத்திட்டனர். கலியுகம் முடியும் வரையிலும் தான் வட்டியை மட்டும் குபேரனுக்குச் செலுத்தி வருவதாகவும் கலியுக முடிவில் அசலைத் திருப்பித் தருவதாகவும், சீனிவாசன் ஒப்புக் கொண்டு குபேரனிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார். சீனிவாசப் பெருமாள் பத்மாவதியின் திருமண விழா நடைபெற்றது.

எம்பெருமாள் சீனிவாசன் கலியுக வரதனாய்த் திருமலையின் மீது திருவேங்கடநாதனாக நின்ற கோலத்தில் எழுந்தருளித் தன்னை நாடி வரும் பக்தர்களுக்குத் திருவருள் பாலித்து வருவதோடு பத்மாவதித் தாயார் திருச்சானூர் அலர்மேலு மங்காபுரத்தில் திருமாலவனின் அடியார்களுக்குச் செல்வங்களை வாரி வழங்குகிறார்.

எம்பெருமானைச் சேவித்து விட்டுத் தன்னிடம் வரும் பக்தர்களுக்கு அனைத்துச் செல்வங்களையும் தந்து அருள் செய்வதாகப் பத்மாவதித் தாயார் திருவேங்கட முடையானிடம் உறுதி தந்துள்ளார். பெருமாளும் தாம் பெற்ற கடனுக்கு வட்டியைச் செலுத்தி வருகிறார்.

கிருஷ்ணாவதாரத்தில் தன் தாய் யசோதைக்குக் காட்டத் தவறிய திருமணத் திருக்கோலத்தை இத்தலத்தில் சீனிவாச பத்மாவதி திருமணத்தை வகுள மாலிகையாகிய யசோதையிடம் காட்டி அவள் மனக் குறையையும் போக்கிய தலம் இதுவேயாகும்.

## ஒருமைப்பாடு

**திருப்பதி சர்வசமய தெய்வீக ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறது எனவும், நாராயணன், சிவபெருமான், வைணவி, ஆதிபராசக்தி, முருகப்பெருமான் ஆகியோரின் தத்துவங்களை விளக்கும் பொதுத்தலம் எனவும் கூறுவர். ஏழுமலையான் கருவறையில்**

மூலவரின் சிலையின் அமைப்பு முறையை ஆராய்ந்து இச்சிலா வடிவம் சிவன்-திருமாலின் கூட்டமைப்பில் அமைந்துள்ளதாகக் கூறுகின்றனர்.

ஏழுமலையான் பாம்புகளையும், நீள்சடையும் கொண்டு விளங்குவதால் சிவக்கூறுகள் இச்சிலையில் உள்ளன. மேலும் சிவனுக்குரியதான வில்வ இலை கொண்டு பெருமாளுக்கு அர்ச்சனை செய்யப்படுகிறது.

முதல் மூன்று ஆழ்வார்களுள் பொய்கை ஆழ்வார் சிவனையும், மாலையும் இணைத்துச் சங்கர நாராயணனாக, இவர்களின் வாகனங்களை காளையும், கருடனும் என்றும், இருப்பிடம் கயிலையும் கடலும் என்றும், தொழில் அழித்தலும் காத்தலும் என்றும், ஆயுதம் வேலும், என்றும் உருவம் தீயும் கார்வா எழும் என்ற பாடல் பாடியுள்ளார்.

அதிகாலை வேளையில் பொழுது புலரும் முன்பு எம்பெருமானைத் திருப்பள்ளி எழுச்சியாக வேங்கடசுவரசுப்ரபாதம் பாடிப்பள்ளி எழுப்பும் போது திருநீறு பூசிய அந்தணர்களே சுப்ரபாதம் பாடுகின்றனர். திருப்பதிக்கு ஸ்ரீ சைலம் என்னும் பெயரும் உண்டு. ஸ்ரீ சைலம் என்றால் சிவபெருமான் உறையும் மலை எனப் பொருளாகும்.

மூலவரின் சிலையின் தலையில் பிறைநிலவு உள்ளது. திருமலையிலுள்ள திருக்குளம் சுவாமி புஷ்கரணி என ஆனது என்பார். வள்ளியை வேட்டைக்குச் சென்ற வேட்டுவனாகி முருகப்பெருமான் மணம் புரிந்தது போலவே பத்மாவதியை யானையின் வழித் தொடர்பு கொண்டு ஏழுமலையான் மணம்புரிந்தார்.

முருகப்பெருமானுக்கு வள்ளி தெய்வ யானையாகிய இச்சா சக்தி, ஞானசக்தி விளங்குவது போல பத்மாவதியும், ஆதிலட்சுமியும் ஏழுமலையானுக்கு விளங்குகின்றனர்.

சிவபெருமான் ஆணையின் படியே முருகப் பெருமான் வேங்கட மலையின் புஷ்கரணியில் தவமியற்றியதாகவும், அவ்வாறு தவமியற்றிய வேளையில் பெருமாள் வராக மூர்த்தியாக வேங்கட மலையில் வதிந்ததாகவும் வாமன புராணம் கூறுகிறது.

திருவேங்கடத்துப் பெருமாள் வைஷ்ணவி ஆதி பராசக்தியின் கூற்றையும் கொண்டுள்ளார். பாலாஜி என்றால் பெருமானைக்

குறிப்பிடும் என்பது அனைவரும் அறிந்தது. 'பால' என்பது பெண்ணைக் குறிப்பது. தேவிபாகவதம்-இத்தல எம்பெருமானை, இவளே சக்தி எனவும், கலியுக தெய்வம் ஸ்ரீ வேங்கடடேசுவரி எனவும் கூறுகிறது. இத்திருக்கோயில் விமானம் சக்தி வடிவ அமைப்பில் அமைந்துள்ளது.

வியாழக்கிழமை தோறும் பராசக்தி மூலவருக்குள் தோற்றமாகி மஞ்சள், குங்கும அபிடேகத்தையும், ஸ்ரீ சூக்த மந்திரங்களின் வழிபாட்டினையும் பெறுகின்றார்.

முன்பு திருக்கோயியின் கோபுரத்தில் சக்தியின் வாகனமாகிய சிங்கங்கள் மட்டுமே விளங்கின. பின்னர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் கருடவாகனங்கள் கோபுரத்தில் இடம் பெற்றன.

இவ்வாறு பல்வகையான கருத்துக்களுக்குப் பெருமாள் இடம் அளித்தார். உடையவர் காலத்தில் எம்பெருமான் சங்கு சக்கரம் இல்லாமல் இருகரங்களுடன் காட்சி அளித்திருந்தார். அவரைத் திருமாலின் அம்சமே எனவும், தன் அடியவரான தொண்டைமான் சக்கரவர்த்தியை எதிரிகளிடமிருந்து காப்பாற்றி அருள் புரிந்து எளியவராக வந்ததால் சங்கு, சக்கரமின்றித் தோற்றமளித்தார் எனவும் வாதாடியுள்ளார்.

வில்வ இலைகளால் அர்ச்சனை நடைபெறுவதற்குப் பிரம்மாண்ட புராணத்தை ஆதாரம் காட்டிப் பெரிய பிராட்டியார் இலக்குமிக்கு வில்வ இலைகள் உரியவை என விளக்கியுள்ளார்.

வராக புராணத்தை ஆதாரம் காட்டி இத்தல புஷ்கரணி புனித வைகுண்டத்திலிருந்து வந்ததாகவும் சுவாமி புஷ்கரணி என்பதற்குப் புனிதமான புஷ்கரணி என்றுதான் பொருள்படும் என்றும் சுவாமி புஷ்கரணி என அழைக்கப் பெற்றதற்குக் காரணம் காட்டியுள்ளார். விஷ்ணு பாகவத்தைச் சடாமுடியுடன் இருக்கும் காரணத்திற்கு ஆதாரம் காட்டியுள்ளார்.

இத்தலம் சந்திர ஸ்தலமாதலால் சந்திரன் ஏழுமலையானின் திருமுடியில் இருப்பதாக எடுத்துரைத்துள்ளார்.

உடையவர் இராமானுஜருக்கும், பிற சமய வாதிகளுக்கும் இவ்வாறான எல்லா அம்சங்களும் இவ்விறைவன் பால் விளங்கியதால், யார் இவர் என்பதில் பலத்த விவாதம் எழுந்துள்ளது.

உடையவர் உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்பிக் கருவறையினுள் சிவனுக்குரிய ஆயுதங்களையும், பெருமாளுக்குரிய ஆயுதங்களையும் வைத்துத் திருக்கதவம் சாத்தி விட்டு மறுநாள் காண்பது எனவும், எதனை ஏற்றுக் கொள்கிறாரோ அத்தெய்வமாகக் கொள்ள முடிவு செய்தார். எனவே இராமானுஜர் அன்று இரவு ஆதிசேடனாக மாறிக் கருவறையினுள் சென்று மூலவரிடம் சென்று வழிபட்டு வேண்டியதின் பேரில் மூலவர் சங்கு, சக்கரங்களை ஏற்றுச் சங்கு சக்ரதாரியாக நின்றார் எனவும் வழி வழியாகச் சொல்லப்படுகிறது.

எப்படியிருப்பினும் இத்தலத்துப் பெருமாள் சிவன், மால், சக்தி, முருகன், திருமகள் என எல்லாமாக நின்ற ஒரே தெய்வம். கலியின் கொடுமையிலிருந்து அடிய வரைக் காத்து நிற்பதோடல்லாமல் வேண்டியவர் வேண்டியவாறு வரமளிக்கும், எண்ணிய எண்ணம் சித்திக்கும்படி அருள் பாலிக்கும் தெய்வம். அன்பர்களை அணைத்துக் கொள்ள முன்னர் சாய்ந்து நிற்கும் திருக்கோலம் மூலவரை அருகிலிருந்து பார்க்கும் போது உயரமாகத்தோன்றாத தோற்றம் அப்படியே பார்த்துக் கொண்டே பின்னால் செல்லச் செல்ல எடுப்பாக விசுவரூபம் காட்டும் திருத்தோற்றம் ஓர் அற்புதத் தோற்றம்.

சாதி, மதபேதங்களைக் கடந்தவர் என்று குறிப்பிட்டோமே இந்துமதக் கூறுகளை மட்டும் கூறிவிட்டு மதபேதம் கடந்தவர் என்பது எவ்வகையில் பொருத்தமாகலாம் என்று வினவக் கூடும்.

சுல்தானிடம் கணக்கெழுதும் பணியில் இருந்த கிருஷ்ணையன் என்பவன், தான் கணக்கு எழுதம் பெயரேட்டில் ஏழுமலையான் மந்திரங்களை எழுதி வைத்திருந்தான். சுல்தான் பெயரேட்டைப் பார்வையிட்ட போது, தொலைந்தோம் என்று அஞ்சி நடுங்கி எம்பெருமானை வேண்டியவாறே நின்றபோதும் அற்புதம் ஒன்று நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் நம் பெருமாள். ஏழுமலையானின் மந்திர நாமங்கள் புனிதமான குர் ஆனின் வேத மொழிகளாகச் சுல்தானுக்குத் தோன்றியிருக்கின்றன.

அதைப் போலவே திருப்பதி-திருமலை வழிபாட்டிற்குச் சென்று விட்டு லட்டுக்களுடன் வந்த கிருஷ்ணையனின் மடியைச் சுல்தான் சோதித்துப் பார்த்த பொழுது எம்பெருமாளுடைய பிரசாதங்கள் திருமலை-திருப்பதி பிரசாதங்களாக விளங்கியவை மெக்காவில்

அல்லாவிற்கு அலங்கரிக்கப் பயன்பட்ட வாசனை மிகு மல்லிகை மலர்களாகவும், வழிபாட்டில் வைத்து ஒ நப்படும் சர்க்கரையாகவும் மாறியிருக்கின்றன.

இவ்வாறு சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து ஒன்றாக ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குகிறார்.

இத்தலத்தில் புளிய மரம் பெருமாளுக்கும், சண்பகமரம் தாயாருக்கும் உகந்த மரங்களாகும்.

## *நந்தா விளக்கு*

இத்திருக்கோயில் தீர்த்தப் பிரசாதத்திற்கும், என்றும் எரியும் நந்தா விளக்கிற்கும் தனிச்சிறப்பு உண்டு. ஏழுமலையானைத் தினமும் இரவில் வந்து பிரம்மதேவன் வழிபட்டுச் செல்வதாக ஓர் ஐதீகம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதனால் இரவில் மூலவர் சந்நிதியில் கிண்ணங்களில் தீர்த்தத்தை மூடிவைக்கின்றனர். பிரம்மன் முதலியோரால் வழிப்பட்டதாகக் கருதப்படும் தீர்த்தம் காலையில் அடியவர்களுக்கு வழங்கப்பெறுகிறது.

அதைப்போலவே ஆதி பிரமன் திருமலைக்கு வந்து இரண்டு நந்தா விளக்குகளை ஏற்றி வைத்தார். எனவும் இப்போதும் அத்தீபங்கள் அணையாது எரிந்து கொண்டிருப்பதாகவும் நம்புகின்றனர்.

## *நித்திய கல்யாணப் பெருமாள்*

திருப்பதி வேங்கட கிருஷ்ணன் நித்திய கல்யாணப் பெருமாளாக இந்த வராகத் திருத்தலத்தில் விளங்குகின்றார். சீனிவாசப் பெருமாள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளில் திருச்சானூருக்குப் பத்மாவதித் தாயாரைக் காணச் சென்று விடுகிறாள் எனவும் வியாழக்கிழமைகளில் ஆதிபராசக்தி பெருமாளின் சிலைக்குள் பிரதிட்டையாகி நின்று திருவருள் புரிவதாகவும் நம்பப்படுகிறது. அன்று வழிபடுகையில் பெருமாளின் திருவருளுடன், ஆதிபராசக்தி வடிவத் திருவருளும் வந்து சேருவதால் வியாழக்கிழமைகளிலும், வெள்ளிக் கிழமைகளிலும் இப்பெருமானை வழிபடுவது தனிச்சிறப்பிற்குரியது என்பர்.

பெருமாள் திருமுகத்தில் பெரிய திரு மண் இடப்பட்டிருக்கும் காட்சியை வாரத்தில் வியாழனன்று மட்டும் காண இயலாது.

அன்றுதான் பெருமாள் கண்கொண்டு நம்மை நோக்குவதாக நம்பிக்கை. அந்தப் பெருமாளின் திருவிழிகள் சூரிய, சந்திரனைப் போல் பிரகாசிக்கும் விழிகள். இதனால்தான், ஆண்டாள் நாச்சியார் தம் திருப்பாவைப் பாசுரத்தில் அந்தக் கண்களால் பார்த்தால் போதும், நம் சாபம் எல்லாம் தீர்ந்து விடும் என்கிறார். ***'அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல்நோக்குதியேல் எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்'*** என்று பாடினார்.

இதற்கு ஏற்றவாறு வியாழக்கிழமைகளில் மூலவருக்குப் பட்டுப்புடவை சாத்தித் திருமேனியில் குங்குமக் குழம்பு பூசி, நெற்றியில் கீறலாக நாமத்தை இட்டுக் காட்சி தரச்செய்கிறார்கள். மலரால் பெருமாள் அலங்கரிக்கப்பட்டுச் சேவை சாதிப்பதால் 'பூலங்கி சேவை' என்று மலர் அலங்கார சேவை பெயர் பெறுகிறது.

வியாழக்கிழமைகளில் கிடைக்கும் விழிகளாகிய தரிசனத்திற்கு நேத்திர தரிசனம் என்று பெயர். 'பெருமாளே என்னைக் கண்கொண்டு பார்க்க மாட்டீரா' என்று ஏங்குபவர்கள் காணவேண்டிய தரிசன நாள். எல்லாநாளும் படியளக்கும் பெருமாள் படியளக்காமல் விட்டு விடுவாரா? இருப்பினும் அடியவர் நம்பிக்கை அது.

வெள்ளிக்கிழமைகளில் அதிகாலையில் நடைபெறும் திருமஞ்சனம் மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒன்று. இத்தரிசனத்திற்கு ஆயிரம் ரூபாய் கட்டணம் விதிக்கப்பெற்றிருக்கிறது. கி.பி. 2008 வரைகூட இத்தரிசனத்திற்குப் பெயர் பதிவு செய்யப்பெற்றுள்ளது என்றும், இடையில் இடமிருந்தால் இத்தரிசனம் கிடைக்கும் என்றும் கூறுகின்றனர். பெருமாளின் திருமுழுக்கை நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கிறது இதன் வாயிலாக.

இத்தரிசனச்சீட்டுப் பெற்றவர்கள் வைகுந்தம் வளாகத்திற்கு நான்கு மணிக்குள்ளாக வந்து விட வேண்டும். அதன் விமான பிரதட்சணப் பாதையில் உள்ள மண்டபத்தில் அமர்ந்திருக்க வேண்டும். பெயர்களை வரிசையாகப் பதிவு செய்த வரிசைக் கேற்ப அழைக்கின்றனர். முதலில் வஸ்திரங்களைச் சுமந்து செல்லப்பணம் கட்டியவர்கள் என்று வரிசையாகக் கையில் காலியான வெள்ளிச் செம்புடன் ஸ்நபன மண்டபம் அழைத்துச் செல்லப்பட்டதும் காலியான அந்த வெள்ளிச் செம்பைப் பெற்றுக் கொண்டு விடுகின்றனர். மூலவர்முன் இருந்து பங்காரு வாசல் வரை திருவிலன்

கோவில் உள்ளே கூட்டம் நிரம்பி வழிய அபிடேகம் நடைபெறும் காட்சி காணலாம். சுமார் ஒரு மணி நேரம் அபிடேகம் நடைபெறுகிறது. சுப்ரபாத சேவை முடிந்த பிறகு இச்சேவை நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை ஒரு நாள் மட்டுமே இச்சேவை.

இதையடுத்து நடைபெறுவது நிஜபாத சேவை என்பதாகும். இச்சேவையின் போது எம்பெருமானின் மலரடிகளைத் தங்க அணிகலன் கொண்டு மூடப்படாமல் இருப்பதைக் காணலாம். இச்சேவைக்கு நூறு ரூபாய் கட்டணம் வைத்துள்ளனர்.

## *சுப்ரபாரதம்*

மார்கழி மாதத்தில் மட்டும் சுப்ரபாதம் இத்திருக்கோயிலில் பாடப்படுவதில்லை. தினமும் அதிகாலையில் முதல் சேவை சுப்ரபாத சேவைதான். இராமபிரான் சீதையைப்பிரிந்து வருந்தியதைப் போல் தாயாரைப் பிரிந்து வருந்திய கண்ணபிரானை வேங்கட ராமனாகக் கருதித் திருப்பள்ளி எழுப்பும் முதல் சுலோகமான 'கோசலையின் மைந்தனரான உயர்வான ராமனே' என்னும் பொருள்படும் 'கௌசல்யாசுப்ராஜராமா' என்று தொடங்கும் சுப்ரபாதம் விசுவாமித்திரமுனிவர் இராம பிரானைத் தன்னுடன் இருக்கும் பொழுது துயில் ஏழுப்பியதாகும். இச்சுப்பிரபாதம் பாடுவோர் சைவ அடியார்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

## *பிரம்மோற்சவம்*

தினமும் திரு விழாக்கோலம்தான் என்றாலும் புரட்டாசி மாதம் நடைபெறும் ஒன்பது நாள் பிரம்மோற்சவம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அதனை பிரம்மனே நடந்தி வைப்பதாக நம்பிக்கை. பிரம்மோற்சவ வேளையில் வேங்கடவனைச் சேவிப்பவர்களின் அனைத்துப் பாவங்களும் தொலைகின்றன எனப் புராணங்கள் உறுதி கூறுகின்றன. காலையிலும் மாலையிலும் உற்சவர் புறப்பாடு, திருத்தேர்விழா, ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வாகனத்தில் உலா என்று மிக விமரிசையாக நடைபெறும் இவ்விழாவில் குறிப்பிடத் தகுந்த விழா ஐந்தாம் நாள் கருட சேவைதான்.

அன்று கூடும் பக்தர்களின் எண்ணிக்கைக்கு அளவு கிடையாது. தங்குவதற்கு இடம் கிடைப்பதிலிருந்து வாகனங்கள் செல்வது முதல் அவ்வளவு சிரமம் இருந்தாலும் அன்பர்கள் ஆர்வம், பக்தி அளவிட

முடியாது. மலைமேல் அடிமேல் அடியெடுத்து வைப்பது எனக் குறிப்பிடுவோமே அது போல் அடிமேல் அடியெடுத்துத்தான் வாகனங்கள் செல்லும். திருமலை வண்ண விளக்குகளால் எங்கும் அலங்காரத் தோற்றம் கொண்டு விளங்கும். பெருமானைப் பாடிவரும் கூட்டம், கோலாட்டம், கும்மி என்று வண்ணமயமான விழாவாக இவ்விழா காணவேண்டிய விழா. பெருமாளுக்கு அளிக்கப் பெற்ற குடைகளுடன் வரும் ஊர்வலம் எழில் மிக்கது.

## தீர்த்தம்

திருமலை ஒரு மிகப் பெரிய தீர்த்த சேத்ரம். புராண நூல்களில் இங்கு 108 தீர்த்தங்கள் உள்ளன என விவரிக்கக் காணலாம். அரூபமாகக் கண்ணால் காணப்பெறாத தீர்த்தங்களும் ஆண்டுக்கொருமுறை இங்கு வந்து கூடுகின்றன.

## சுவாமி புஷ்கரிணி

மிகவும் சிறப்பு வாய்ந்த தீர்த்தமிது. இதனைத் தீர்த்தங்களின் அரசி என்பர். ஆதிவராக மூர்த்தி இதன் அருகில் எழுந்தருளியுள்ளார். மார்கழி மாதம் வளர் பிறையில் துவாதசி நாளில் சூர்யோதயத்திற்கு ஆறு நாளிகை முன்பிருந்து சூர்யோதயத்திற்குப் பிறகும் இம்மலையில் உள்ள தீர்த்தங்கள் யாவும் இதில் கூடுகின்றன எனவும் இதில் நீராடுவோர் பூவுலகில் சிறப்புடன் வாழ்ந்து இறுதியில் இறைவன் திருவடியிலும் எப்போதும் வீற்றிருக்கும் பேறு பெறுவார் எனவும் கூறுவர்.

## ஆகாச கங்கை

தினமும் திருவேங்கடவனுக்கு இத்தீர்த்த அபிடேகமே நடைபெற்றது. திருமலை நம்பி கோவிலிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரம் உள்ள இத்தீர்த்தத்திலிருந்தே நீர் சுமந்து வந்தார். இத்தீர்த்தத்தில் சித்திரை மாதம் பௌர்ணமியன்று நீராடுதல் மிகச் சிறப்பு.

## பாபவிநாச தீர்த்தம்

இத்தீர்த்தம் இயற்கை எழில் கொஞ்சம் சூழ்நிலையில் அமைந்துள்ளது. மிக்க சுவையுடன் விளங்குகிறது. ஐப்பசி மாதம் வளர்பிறை சப்தமி திதியும் உத்திராட நட்சத்திரமும் கூடிய ஞாயிற்றுக்கிழமைகளில் இதில் சில தீர்த்தங்கள் கூடுகின்றன.

அன்றைய நாளில் இதில் நீராடுவோர் பெறற்கரிய ஞானம் பெற்றுப் பாவ விடுதலை பெறுவர்.

### *பாண்டு தீர்த்தம்*

வைகாசி மாதம் சுக்கில பட்ச துவாதசியுடன் கூடிய செவ்வாய்க் கிழமையில் தீர்த்தங்கள் பல இதில் கூடுவதால் இதில் அப்போது நீராடுவோர் அனைத்துப் பாவங்களினின்றும் விடுதலை பெறுவர்.

### *குமாரதாரிகை*

மாசி மக நாளில் அனைத்துத் தீர்த்தங்களும் வந்து கூடுவதால் மனதிற்கு மகிழ்ச்சியும் இளமை நலமும் கிட்டும் இதில் மூழ்குவோர் இராஜசூய யாகம் செய்த பயன் பெறுவர்.

### *தும்புரு தீர்த்தம்*

தும்புரு முனிவர் தவமியற்றிய இடத்திற்கு அருகிலிருப்பதால் பங்குனி மாதம் உத்தர நாளில் இதில் நீராடுவோர் பரமபதம் பெறுவர்.

### *இராமகிருஷ்ண தீர்த்தம்*

தைமாத பௌர்ணமியில் இதில் நீராடினால் இவ்வுலக, மறு உலகப் பேறுகள் வாய்க்கும்.

### *திருச்சானூர்*

திருமலையிலிருந்து இறங்கி வந்து திருச்சானூர் செல்லவேண்டும். அலமேலு மங்காபுரம் என்னும் பெயரும் உண்டு. இங்கு மூலவராக விளங்குபவர் தாயார். தாயாருக்கு இங்கு அலர்மேல் மங்கை, பத்மாவதி ஆகிய திருநாமங்கள் உள்ளன. தாயார் கிழக்கு நோக்கி அமர்ந்து அருள்பாலிக்கிறார்.

இத்திருக்கோவிலில் பத்ம சரோவரம் என்னும் தீர்த்தம் உள்ளது. திருமலை சென்று வந்த பக்தர்கள் அலர்மேலு மங்காபுரத்தில் பிராட்டியை வழிபட்டுச் சென்றால்தான் திருமலைப் பயணம் நிறைவடையும்.

இராமானுஜர் என்றவுடன் நினைவுக்கு வரும் திருத்தலங்களில் திருக்கோட்டியூர், திருவரங்கம், திருநாராயணபுரம் போலத்

திருப்பதியும் ஒன்றாகும். இராமானுஜர் தம் இளம் வயதில் இம்மலையைச் சேவிக்க வந்தவர் மலையடிவாரத்திலேயே நின்று கொண்டு மலையின் மேலே வேங்கடவன் இருப்பதால் மிதித்து நடந்துவர விருப்பம் இல்லை என்று தெரிவித்ததால் இவருடைய தாய் மாமன் திருமலை நம்பிகள் மலைமேலிருந்து தினமும் இறங்கி வந்து இராமாயணம் கற்பித்தார் என்பர்.

பிற்காலத்தே திருமாலே வேங்கடமலைக்கு வருமாறு இவரை அழைத்ததால் அவருடைய ஆக்ஞைப்படி மலைமீது வந்தார். இராமானுஜர் ஆதிசேடனாகையால் பெருமாள் திருவாசல் முன்பு நடந்து செல்ல மனம் விரும்பாதவராக இருந்தார் எனும் கூற்று பல இடங்களில் மெய்ப்பிக்கப் பெற்றுள்ளது.

இராமானுஜரின் தாய் மாமன் திருமலை நம்பி ஒரு முறை இராமானுஜர் திருமலை ஏறி வந்தபோது அவரை வரவேற்க எதிர் கொண்டு வந்தார். அப்போது இராமானுஜர் அவரிடம், 'அடியேனை அழைத்துச் செல்ல இவ்வளவு பெரியவரான நீங்கள் வரவேண்டுமா? யாராவது ஒரு சிறு பையனைக் கூட அனுப்பியிருக்கலாமே?' என்று உருக்கமாகக் கேட்டார். நம்பி அதற்கு உடையவரிடம் ''இத்திருமலையில் நான்தான் சிறுவன். என்னைவிடச் சிறுவன் இங்கு யாரும் இல்லை'' என்று மிகத் தன்னடக்கத்துடன் கூறினார்.


திருப்பதித் திருக்கோவில் அறப்பணிகளும், ஆன்மிகப் பணிகளும் சிறக்க ஆற்றி வரும் தொண்டுகள் எம்பெருமான் திருவருளால் சிறப்பாக நடந்து வருகின்றன. முதலில் கல்விப்பணியைக் குறிப்பிட வேண்டும். திருவேங்கடவன் பல்கலைக் கழகம் வரை கல்வியில் அடிமட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை அவரருளால் அருட்பணிகள் சிறக்கின்றன.

அருட்பணியாகப் பதிப்புத்துறை அரும்பணியாற்றி வருகிறது. ஆன்மிக நூல்களை வெளியிட்டு ஆன்மிகப் பணியாற்றி வருவதுடன், நூல்கள் வெளியிட உதவிடும் திட்டத்தின் கீழ் ஆன்மிக நூல்கள் வெளியிட நிதி உதவி அளித்து வருகிறது. நூலாசிரியர் பலரும் நன்றியோடு நினைத்துக் கொள்ளும் திருப்பணி இது. ஆண்டுதோறும் ஏராளமான நூல்களை நூலாசிரியர் பலரும் நிதி உதவிபெற்று வெளியிட்டு வருகின்றனர். இந்நூலாசிரியரே அப்பேறு பெற்றவர்களில் ஒருவர்.

இலவச உணவு வழங்கும் திட்டத்தின் படி அன்பர்கள் அளித்த நிதியுதவியின் பயனாக ஆலய தரிசனம் முடித்துவரும் ஆயிரமாயிரம் அன்பர்களுக்கும் மதிய உணவு, இரவு உணவு வழங்கப்பெறும் அருட்பணி நடைபெறுகிறது. வயிறாரச் சுவையான உணவு திருச்சானூரிலும் வழங்க வகை செய்துள்ளனர்.

ஆலயதரிசனம் முடிந்து வரும் பக்தர்களுக்கு இலவசமாகச் சிறிய லட்டு பிரசாதம் வழங்கப் பெறுகிறது பக்தர்கள் தங்குவதற்கு தர்மசத்திரம் ஏராளமாகக் கட்டப்பட்டுள்ளன. திருப்பதி லட்டு என்பது உலகம் முழுவதும் புகழ்பெற்றது. உற்பத்திச் செலவை விடக் குறைந்த விலையில் வழங்குவதைக் கடமையாகத் தொடர்ந்து செய்து வருவதைக் குறிப்பிட வேண்டும்.

திருப்பதி பிரசாதங்களுக்கே தனியான ஓர் உயர்ந்த சுவை உண்டு. திருப்பதி லட்டு, வடை, பொங்கல் ஆகியன தனிச்சுவை உடையன.



ஒன்பது

# 9. திருக்கண்ணங்குடி

## ஸ்ரீ தாமோதர நாராயணப் பெருமாள்

திருமால் மனம் மகிழ்ந்து தமிழ்நாட்டில் கண்ணன் அவதாரத்தில் எழுந்தருளியுள்ள ஐந்து கண்ணன் திருத்தலங்களில் நான்கு திருத்தலங்கள், சோழ நாட்டிலேயே அமைந்துள்ளன. ஐந்தாவது திருத்தலமான திருக்கோவிலூர் மட்டுமே நடு நாட்டில் அமைந்துள்ளது.

*'பஞ்ச கிருஷ்ணாரண்யத் தலங்கள்'* எனச் சிறப்பிக்கப்பெற்ற இத்திருத்தலத்துப் பெருமாளின் பெயர்களில் கிருஷ்ணனைக் காண வியலாது. நாராயணன் என்னும் திருப்பெயர் அமைந்திருப்பதே ஒரு விந்தை. திருக்கோவிலூரிலோ அவர் திரு நாமம் திருவிக்கிரமன்.

திருக்கண்ணன் குடி திருவாரூர்-நாகப்பட்டினம் வழித்தடத்தில் கீழ்வேளூர் என்னும் சிவத்தலத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூருக்கு மற்றொரு வழியாகவும் வரலாம். நாகை-திருவாரூர் வழியிலுள்ள ஆழியூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் சென்றும் திருக்கண்ணங்குடியை அடையலாம். திருவாரூரிலிருந்து தான் செல்ல வேண்டும். திருக்கண்ணங்குடிக்கே பேருந்துகள் செல்வதால் அங்குச் செல்வது ஒன்றும் கடினமில்லை. திருத்துறைப்பூண்டியிலிருந்தும் ஆழியூர் வழியாக நாகப்பட்டினத்திற்குப் பேருந்துகள் செல்கின்றன. புகைவண்டி நிலையம் கீழவேளூரே. இது திருவாரூர் நாகை வழித்தடத்தில் உள்ளது.

இங்குத் தங்குமிடங்கள், விடுதிகள் முதலிய வசதிகள் எல்லாம் கிடையாது. திருவாரூரில் தங்கி வரவேண்டும். அது இப்போது மாவட்டத் தலைநகராதலால் வசதிகள் நிறைந்து விளங்குகிறது.

## தலச்சிறப்பு

இத்திலத்தலத்திற்குப் ***பஞ்ச பத்ரா*** என்னும் பெயரை நான்முகன் சூட்டியுள்ளார். இங்கு ஆறு, காடு, ஆலயம், திருக்குளம் ஆகிய ஐந்து கூறுகளும் நிறைந்ததால் அவ்வாறு பெயரிட்டார். அவை காவிரி என்று ஆறு, கிருஷ்ணாரண்யம் எனும் வனம், கிருஷ்ண க்ஷேத்திரம் எனும் ஊர், திருக்கண்ணங்குடி எனும் ஆலயம், சிரவணபுஷ்கர்ணி எனும் திருக்குளம் ஆகும்.

கருடபுராணத்தில் இங்குள்ள திருக்குளம் இத்தலத்துடன் சிறப்பித்துக் கூறப்படுவதால் இத்திருத்தலத்திற்குப் ***'பௌராணிக க்ஷேத்திரம்'*** என்று பெயர்.

## பஞ்சநாராயணத் தலங்கள்

இத்திலத்தலத்தைச் சுற்றியுள்ள பெருமாள் திருத்தலங்களையும் இணைத்துப் பஞ்ச நாராயணத்தலங்கள் என்பர். தெற்கில் ஆபரணதாரி எனும் ஊரில் ***'அனந்த நாராயணப் பெருமாளும்,'*** தென்மேற்கில் பெரிய ஆலந்தூர் என்னும் ஊரில் ***'வரத நாராயணப் பெருமாளும்,'*** தென்மேற்கில் தேவூர் என்னும் ஊரில் ***'வேத நாராயணன்'*** என்னும் பெருமாளும், தென் மேற்கிலேயே கீவளூர் என்னும் ஊரில் ***'யாதவ நாராயணன்'*** என்னும் பெருமாளும், இத்திருத்தலத்தில் ***'தாமோதர நாராயணப் பெருமாளும்'*** அருள் பாலித்து வருவதால் ***'பஞ்ச நாராயணத் தலங்களில்'*** திருக்கண்ணங்குடியும் ஒரு திருத்தலமாயிற்று.

## தலவரலாறு

திருக்கண்ணங்குடியின் பழமைப் புராணச் சிறப்பை அறிய உதவுவது வடமொழியில் தோன்றிய கருடபுராணம் ஆகும். இக்கருட புராணத்தின் ஐந்தாவது இயலில் 320 பாடல்கள் இத்திருத்தலத்துப் பெருமையை எடுத்தியம்புகின்றன. நைமிசாரண்யத்தில் கூடியிருந்த முனிவர்களிடம் நாரதர் திருக்கண்ணங்குடியின் சிறப்புகளை எடுத்துக் கூறுகிறார்.

மாடரர், கௌதமர், பிருகு, சைத்தியர் ஆகிய நான்கு முனிவர்களும் நாரதரின் அறிவுரையின் பேரில் திருக்கண்ணங்குடி வந்தனர். அங்குச் சிரவணபுஷ்கர்ணியில் நீராடினர். திருமண் தரித்து, பித்ருக்களுக்குத்

தர்ப்பணம் செய்தல், காயத்ரி அஷ்டாட்சரம் ஓதுதல், ஓமகுண்டங்களை நாற்றிசையிலும் நிறுவுதல், வைதிக கர்மாக்களைச் செய்தல், பரம்பொருளைப் பணிந்து போற்றுதலைச் செய்தல் ஆகியவற்றை முடித்தவுடன், உலகியல் பற்றுக்களை விடுத்துத் தவமியற்றினர்.

மகிழ மரத்தடியில் தவமியற்றிய நால்வரின் உறுதிகண்டு மகிழ்ந்த நான் முகன் தோன்றி அவர்களுடைய விருப்பங்களைக் கேட்டபோது, ஸ்ரீமன் நாராயணனின் திருவடிப் பேறு பெற விழைந்ததைத் தெரிவித்தனர். நான்முகன் அவர்களிடம், தொடர்ந்து தவம் மேற்கொண்டால், எண்ணிய அவர்தம் எண்ணம் ஈடேறும் என ஆசிகள் வழங்கினார்.

திருமாலும், திருமகளும் அசுவமேத வேள்வி நிகழ்த்திட நான்முகனுக்கு அன்புக் கட்டளை இட்டதின்பேரில், புஷ்கர்ணியின் கரையில் விசுவகர்மா அமைத்த, எழில்மிகு யாக மண்டபத்தை மையமாகக் கொண்டு நான்முகன் அவ்வேள்வியை நிகழ்த்தினார்.

பிரம்மனின் தவத்தினால் மகிழ்வுற்ற திருமால் திருமகள், கருடன், விசுவக் சேனர் ஆகியோருடன் தோன்றினார். மாடரர், கௌதமர், பிருகு, சைத்யர் ஆகிய நான்கு முனிவர்களும் திருமாலின் இத்திருத்தோற்றம் கண்டனர். திருமால், திருமகளுடன் ''புண்ணிய விமானம்'' எனப்பட்ட விமானத்தில் காட்சியளித்தபோது வேதங்கள் நான்கும் சாமரங்கள் வீசின.

### *தாமோதர நாராயணன்*

விமானத்திலிருந்து இறங்கிய திருமாலின் வலக்கரத்தில் தாமரை மலர் ஒளிவீசியது. இடது கரம் இடுப்பில் இருந்தது. மற்றிருகரங்களில் சங்கு சக்கரம் காணப்பெற்றிருந்தன. இத்திருக்கோலத்தில் என்றும் இத்திருத்தலத்தில் நின்று அருள்பாலிக்க அன்பர் குழாம் வேண்டியது. அடியவர் அவாவினை நிறைவேற்றப் பங்குனித் திங்கள், அட்டமித் திதி, ரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய வெள்ளிக் கிழமையில் தாமோதர நாராயணன் எனும் திருப்பெயருடன் அர்ச்சாவதார வடிவில் பெருமாள் எழுந்தருளினார். நான்முகனும், நால் முனிவர்களும், பிறமுனிவர்களும் பங்குனி ரோகிணியில் பிரம்மோற்சவத்தைச் சீரும் சிறப்புடன் நிறைவேற்றினர்.

## *கண்ணன் பெயர் எப்படி?*

நாராயணன் தானே எழுந்தருளினாள்? கண்ணன் பெயரால் அல்லவா திருக்கண்ணங்குடி எனப் பெயர் விளங்குகிறது என ஐயம் எழலாம். இத்திருத்தலத்தில் வசிஷ்ட மகரிஷி கண்ணன் திருவுருவம் ஒன்றை வெண்ணையால் உருவாக்கினார். தமது பக்தியின் வலிமையால் அத்திருவுரு உருகி விடாமல் இருக்கச் செய்து வழிபட்டு வந்தார்.

கண்ணபெருமான் ஒருநாள் இடைச்சிறுவன் வடிவில் தோன்றி வெண்ணைய்க் கண்ணனை எடுத்து விழுங்கி விட்டான். வெகுண்ட வசிஷ்டரோ சிறுவனைத் துரத்தினர். அவர் கையில் சிக்குவானா அந்த மாயவண்ணன். ஓடியவன் மகிழ மரத்தடியில் சென்றான். அங்கு மாட்டிக்கொண்டு விட்டான். வசிட்டரித்து அல்ல. அங்குத் தவமியற்றிய முனிவர்களிடத்தில். பக்தி எனும் பற்றுக் கயிற்றால் அன்று யசோதா கட்டியதற்குப் பிறகு இன்று முனிவர்கள் பக்தியால் மீண்டும் கட்டிவிட்டனர். பிறகு எப்படித் தப்பிப்பான் அந்தப் பிருந்தாவன குமாரன்? திருக்கண்ணன் குடி என்னும் பெயர் விளங்க அங்கேயே நிலைத்துவிட்டான். கண்ணன் கட்டுண்டு நின்றமையால் கண்ணங்குடியாயிற்று. அர்ச்சை வடிவில் கண்ணன் நின்றமையால் கிருஷ்ண க்ஷேத்திரமாயிற்று.

## *தீர்த்தச் சிறப்பு*

இத்திருத்தலத்துத் திருக்குளத்திற்கு ***நித்திய புஷ்கர்ணி, சிரவணபுஷ்கர்ணி*** ஆகிய பெயர்கள் உள்ளன. இத்தீர்த்தச் சிறப்பினையும் கருட புராணம் எடுத்துக் கூறுகிறது. மனு என்னும் அரசனக்கு இப்புஷ்கர்ணிக் கரையில் திருமால் காட்சியளித்தார் எனவும், இதில் நீராடுவோர் உடல் நோய்கள்,மனக்கவலைகள் நீங்கப் பெறுவர் எனக் கூறுவர். மேலும் உலக வாழ்வில் உயர் பதவி, பொருட்செல்வம், அருட்செல்வம், மக்கட் செல்வம் ஆகியன கிட்டுமாம். சிரவணபுஷ்கர்ணியின் தெற்குக் கரையில் திருமால் வீற்றிருந்த கோலத்தில் ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோருடன் திருக்கோலம் கொண்டுள்ளார். இவரே இத்தலத்தின் ஆதிபெருமாளாவார்.

## திருக்கோயில்

இத்திருக்கோவில் கிழக்கு மட விளாகத்தின் நடுவில் ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் அமைந்துள்ளது. இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பரந்த திருமுற்றம் உள்ளது. அதன் தென்பகுதியில் திருமடைப்பள்ளி, பொருள் வைப்பறை ஆகியன உள்ளன. தெற்குச் சுற்றில் ஆழ்வார்களும், மணவாள மாமுனிகளும் உள்ளனர். கீழ்ச்சுற்றின் நடுவில் கொடிக்கம்பமும், பலிபீடமும் இடம பெற்றுள்ளன. தெற்குச் சுற்றில் பதினாறு கால் மண்டபம் உள்ளது. அந்த மண்டபத்தில் ஆஞ்சநேயருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. இம்மண்டபத்தில் சோபன படிகள் வழியாக மூலவரின் கருவறைக்குச் செல்லலாம்.

***சோபன மண்டபம்*** என மகா மண்டபத்தினை அழைப்பர். இதில் அழகிய ஓவிய வேலைப்பாடுகள் உள்ளன. இம்மண்டபத்தின் வடபுறத்தில் இராமபிரான், இலக்குவன், சீதைப்பிராட்டி, ஆஞ்சநேயர் ஆகியோரின் தனிச்சந்நிதிகள் உள்ளன. இத்திருவுருவங்கள் மூலவர்களாகவும், உற்சவர்களாகவும் இடம்பெற்றுள்ளன. வடபகுதியில் ஆண்டாள், கேசவன்,மாதவன், விசுவக்சேனர் ஆகிய சிலை வடிவங்களைக்காணலாம். இம்மண்டபத்திற்குக் காவலாக வண்ணச் சுதையாலமைந்துள்ள துவாரபாலகர்கள் காணப்படுகின்றனர். திருஉள் நாழிகைச் சுற்றில் ஒன்பது சிறிய பலி பீடங்கள் அமைந்துள்ளன.

## கருவறை

கருவறையில் மூலவரான ***லோக நாதப் பெருமான்***, நின்ற கோலத்தில் எழிற்கோலம் காட்டுகிறார். ஆயர் குலக் கொழுந்தான கோமள வண்ணனான இத்திருமாலின் திருப்பெயர் ***"ஸ்ரீ தாமோதர நாராயணன்"*** என்பதாகும். வலது கரம் அபயமுத்திரையில் அபயமளிக்கும் முகத்தான் அமைந்துள்ளது. இடதுகரம் இடுப்பில் ஊன்றியிருக்கக் காண்கிறோம். இப்பெருமானைச் சுபமும் அமைதியும் கொண்டவன் என்னும் பொருளில் ***'சாந்தோதிதம்'*** என அழைக்கின்றனர். சுபமான அறிகுறி என்னும் பொருளில் 'சுபாச்ரயம்' எனவும் விளிப்பதுண்டு. ***சியாமள மேனிப்பெருமாள்*** எனும் திருநாமமும் இவருக்குண்டு.

இவ்வாறு அழைப்பதற்கேற்ப இத்திருவுரு சுபமாகவும், அடியவர்க்கு எளிதில் 'ஆச்ரயணியமாகவும்' 'சாந்தி நிலவும் மிடுக்குடனும்' இருக்கும். கருடபுராணம் இப்பெருமானை

*''உற்பலா வதகே திவ்யே விமானே கமலா பத்மம்!*
*வந்தே மாதர முக்யைஸ்துவந்திதம் லோக நாயகம்''*

எனப் பெருமைப்படுத்துகிறது.

தாமோதர நாராயணப் பெருமாள் அருகே ஸ்ரீ தேவியும், பூ தேவியும் வெள்ளிக் கவசம் கொண்டு கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றனர். மூலவரின் ஒருபுறத்தில் கௌதம ரிஷியும் உகபரிசரவசு என்னும் அரசனும் காணப் பெறுகின்றனர். மற்றொரு புறம் பிருகு முனிவரையும், நான்முகனையும் காணலாம். அருகே ஸ்நாதபேரர், பலிபேரர், யாக நாராயணன், சக்கரத்தாழ்வார், ஆண்டாள் ஆகிய உற்சவ மூர்த்தங்கள் உள்ளனர்.

## *தாயார்*

பக்தியுலா மண்டபத்தின் மேல் பகுதியில் லோகநாயகித் தாயார் (உலகநாயகி) சந்நிதி உள்ளது. அமர்ந்த கோலத்தில் அன்னையின் திருஉரு அமைந்துள்ளது. கருவறையில் அரவிந்த நாயகியைக் காணலாம். அருளொளி வழங்கும் திருமுக மண்டலம் நகைமுகம் தாங்கி நம்மை ஆசீர்வதிக்கிறது. இப்பகுதியில் அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியன அமைந்துள்ளன.

வடக்குத் திருச்சுற்றிலுள்ள பரமபதவாசல் வைகுண்ட ஏகாதசியன்று மட்டும் திறக்கப்படுகிறது. வடகிழக்கு மூலையில் யாகசாலையும், தேவஸ்தான மண்டபமும் உள்ளன. கோதண்ட ராமர் சந்நிதிக்கு மேற்புறத்தில் வாகன மண்டபம் உள்ளது. ஆண்டாள் சந்நிதிக்கு மேற்கில் பள்ளியறை உள்ளது.

## *கருடாழ்வார்*

மகாமண்டபத்தின் தெற்கில், சுவாமி சந்நிதிக்கு எதிராகத் தங்கமுலாம் பூசப்பெற்ற உற்சவரான கருடன் இருக்கிறார். கருடாழ்வார் பொதுவாகக் கைகளைக் கூப்பியவாறு தோன்றுவதே வழக்கமான தோற்றம். ஆனால், இத்திருத்தலத்தில் உற்சவரோ வைகுண்டத்தில் தோன்றுவது போலக் கைகளை ஒன்றன்மேல் ஒன்றாகக் குறுக்கே மடக்கியவாறு கட்டிக்கொள்வதைப் போல

உருக்கொண்டுள்ளார். இப்பெருமானுக்குத் தினமும் வழிபாடு நடைபெறுகிறது.

## காயாமகிழ்

மேல் சுற்றில் 'காயா மகிழ்' எனச் சிறப்பிக்கப்படும் மகிழமரம் தல விருட்சமாக விளங்குகிறது. இராஜகோபுரத்தின் வெளிப்புறத்தில் இராமானுசரின் சந்நிதி உள்ளது.

## வழிபாடுகள்

இத்திருத்தலத்தில் நாள்தோறும் கால சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாம் காலம், அர்த்த ஜாமம் ஆகிய ஐந்து கால பூசையும் வைகானச ஆகமத்தின்படி நடைபெறுகின்றன. சித்திரை மாதம் பிரம்மோற்சவ விழா நடைபெறுகின்றது. இத்திருவிழாவில் சிரவண நட்சத்திரத்தன்று தேரோட்டம் நிகழும். ஏழாம் திருநாளன்று வேடுபறி, சூர்ணோற்சவம், பாஷ்யக்காரர் திருநட்சத்திரம் ஆகியன நடைபெறுகின்றன.

வைகாசியில் நம்மாழ்வார் வைசாகத் திருநாளும் ஆடிப்பூரமும், ஆவணியில் ஸ்ரீ ஜெயந்தியும், உறியடி உற்சவமும் நிகழும். புரட்டாசியில் கருட சேவை, நவராத்திரி, விஜயதசமி (அம்பு எய்தல்) ஆகியன நடைபெறும். ஐப்பசியில் மணவாள முனிகளின் பத்து நாள் உற்சவமும், கார்த்திகையில் தீபமும் நடைபெறும். மார்கழியில் திரு அத்யயன உற்சவமும், தை மாதத்தில் கனு விழாவும், மாசியில் மக உற்சவமும், பங்குனியில் உத்திரமும், ஸ்ரீ ராம நவமி விழாவும் கொண்டாடப் பெறுகின்றன.

## திருநீரணி விழா

இதன் பின்னர் வெள்ளைச் சாத்துப் படியைக் கொண்டு பெருமாள் புறப்படுவார். வெள்ளைச் சாத்துப்படி அல்லது திருநீரணி விழா என்னும் இவ்விழாவின்போது அனைத்து வைணவர்களும் திருநீறு பூசிக்கொள்வார்கள். இது மூன்றரை நாழிகைகள் மட்டுமே நடைபெறும். உபரிசரவசு எனும் மன்னனுக்காக நடத்தப்படும் இவ்விழாவில் பெருமாள் 'தியாகராஜர்' வேடம் தரிக்கிறார். பத்தி உலா மண்டபத்தை மும்முறை வலம் வந்த பின்னர் திருமங்கை ஆழ்வார் இயற்றிய 'சிறிய திருமடலை' ஓதுவர்.

விசேட நாட்களில் பெருமாள், தாயாருக்குத் திருமஞ்சனம் நடைபெறும். திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியினால் இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார் பாசுரங்களில் பின் இரண்டு அடிகளில் தலத்தைப் பற்றியும், முன் இரண்டு அடிகளில் எம்பெருமானைப் பற்றியும் பேசுகின்றார்.

குவளை மலர்கள், தாமரை மலர்கள், ஆம்பல் மலர்கள், செங்கழு நீர் மலர்கள், நெய்தல் மலர்கள் ஆகிய இம்மலர்களால் அழகு விளங்கப் பெற்ற கழனிகளால் சூழல் பெற்றது திருக்கண்ணங்குடி.

திருமங்கையாழ்வார் மதில் கட்டும் பணிக்குப் பொன்னின்றித் தவித்தார் என்பதற்கும், நாகைப் புத்த விகாரத்திலிருந்தே அப்பொன் பெற்றார் என்பதற்கும் பாடல் ஒன்று சான்றாகிறது. புத்தர் சிலையைக் களவாடினார் என்பதற்கு மாறுபாடாக இப்பாடல் கருத்து அமைகிறது.

நாகை புத்தர் சிலையைப் பார்த்து உனக்கு 'ஈயம், இரும்பு, மரம், பித்தளை, செம்பு ஆகியவற்றால் சிலை ஆகாதோ, பொன்னும் வேண்டுமோ?' என அறம் பாடினார் எனவும், அவ்வாறு பாடிய உடனேயே சிலையின் வடிவம் மட்டும் அவ்வாறேயிருக்கச் சுற்றி வேயப்பட்ட தங்கம் மட்டும் பிதுங்கி வந்துவிட்டதென இப்பாடல் வரிகள் காட்டுகின்றன.

*ஈயத்தா லாகாதோ இரும்பினா லாகாதோ*
*பூயத்தால் மிக்கதொரு பூகத்தாலாகாதோ*
*பித்தளை நற்செம்புகளாலா காதோ*
*மாயப் பொன்னும் வேண்டுமோ*
*மதித்துன்னைப் பண்ணுகைக்கோ*

திருமாலைப் பாடும் ஆழ்வார், திருமாலின் பதினோராவது அவதாரமெனக் கூறப் பெற்ற புத்தரையும் பாடிப் பொன் பெற்றுவிட்டார் போலும்.

இவ்வாறு கிடைத்த பொன்னை எடுத்துக் கொண்டுதான் திருமங்கையாழ்வார் திருக்கண்ணங்குடி வழியாகத் திருச்சிராப்பள்ளி நோக்கிச் சென்றார் என வரலாறு கூறும்.

திருமங்கையாழ்வார் வாழ்வில் நடைபெற்ற சில நிகழ்வுகள் திருக்கண்ணங்குடியில் நடைபெற்றதாகக் கூறப்பெறுகின்றன.

''தேரா வழக்கு திருக்கண்ணங்குடி'' ''தோளா வழக்கு'' ஆகிய பெயர்கள் இவ்வூருக்கு உண்டு. அதற்குக் காரணமானவர் திருமங்கையாழ்வாரே என்பர்.

## தேரா வழக்கு

திருவரங்கத்தில் திருமதில் திருப்பணிக்கு நாகப்பட்டினத்திலிருந்து பொன்னை எடுத்துக் கொண்டு திருக்கண்ணங்குடியை அடைந்தபோது மாலை நேரமாயிற்று. அவருடன் அவருடைய அமைச்சர் 'நீர்மேல் நடப்பான்' முதலான பலர் வந்தனர். பொன்னைக் கள்வர் இரவில் களவாடக் கூடும் என்பதால் அதனை வயல் ஒன்றில் புதைத்து வைத்தனர்.

மறுநாள் அந்த நிலச் சொந்தக்காரன் வயலில் நாற்று நட வயலை உழ வரும்போது வயலை உழுதால் புதைத்து வைத்துள்ள பொன் வெளிப்பட்டு விடுமே என எண்ணித் திருமங்கை ஒரு தந்திரம் செய்தார். அந்த நிலம் தமக்கே உரிமையானது எனவும் தன் இசைவில்லாமல் அதில் உழவு செய்யக் கூடாது என்றும் வாதாடினார்.

நிலத்திற்கு உரிமை கொண்டாடுவதற்குரிய ஆதாரம் உள்ளதா? என்ற ஊரார் கேட்க மறுநாள் தனது உரிமையை நிலை நாட்டும் சான்றை வெளிப்படுத்துவதாக ஆழ்வார் கூறிச் சமாளித்தார். அன்று இரவே பூமியைத் தோண்டிப் பொன்னை எடுத்துக்கொண்டு சென்று விட்டார். நிலம் பற்றிய வழக்கில் தீர்ப்புக்கு வழியின்றிப் போயிற்று. இதனால் ஆழ்வார் பொன்னைப் புதைத்த இடம்புளியடி வயல் என்று பெயர் பெற்றது. இன்றும் இங்குள்ளவர்கள் எந்த வழக்கு ஆரம்பித்தாலும் சாமான்யத்தின் முடிவதில்லை என்கின்றனர். இவ்வூரில் புளிய மரங்கள் சற்றே வேறுபட்ட நிலையில் தோற்றமளிக்கின்றன.

## ஊறாக் கிணறு

இதற்கிடையில் நிலத்திற்கு உரிமை கொண்டாடி வாதிட்ட பிறகு திருக்கண்ணங்குடி ஆலயத்தின் உள்ளே இருந்த மகிழ மரத்தடியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது மற்றொரு நிகழ்ச்சியும் நடைபெற்றதாகக் கூறுவர். அருகிலிருந்த கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த பெண்மணியிடம் பருகுவதற்கு நீர் கேட்டபோது, அப்பெண்மணி'' நிலத்தை உரிமை கொண்டாடியதுபோல,

நீர்ச்செம்பையும் உரிமை கொண்டாடுவீர் என்பதால் நீர் கொடுக்க முடியாது'' என்று மறுத்துவிட்டாளாம். இதனால் ஆழ்வார் அக்கிணற்றில் நீர் வற்றுமாறு சபித்துவிட்டாராம். இப்போதும் திருக்கோவிலினுள் உள்ள திருமடப்பள்ளிக் கிணற்றில் மட்டும் நல்ல நீர் உள்ளது.

## *காயா மகிழ்*

ஊராக்கிணறு எனச் சபித்துவிட்டு மிகுந்த பசிமயக்கத்தோடு மகிழமரத்தடியில் அயர்ந்து அமர்ந்த திருமங்கை ஆழ்வாருக்குத் திருமாலே தீர்த்தப் பிரசாதத்தோடு வந்து தட்டி எழுப்பினாராம். அவர் பசி மயக்கத்தோடு இருந்த திருமங்கைக்குத் தம்மிடம் இருந்த உணவைக் கொடுத்தாராம். பசி மயக்கத்தில் இருந்தவர் உணவுண்டு விட்டுப் பார்த்தால் உண்டிகொடுத்தோனைக் காணவில்லை.

திருக்கண்ணங்குடியை விட்டுச் செல்லும்போது தனக்குப் பசி தீர்த்தவன் யார் எனும் ஐயம் திருமங்கையின் நெஞ்சில் நிழலாட, நடுவழியில் இவரை ஒருவன் மறிக்க, யார்? என்று திருமங்கையாழ்வார் கேட்க, நான் 'தலையாரி' என அவன் சொல்ல அருகில் வந்து உற்றுநோக்கிய அவர் முன் சங்கு, சக்கரமும் தெரிந்துள்ளது. அவனிடம் உணவு அளித்தபோது தன்னை வழிப்போக்கன் என ஆழ்வார் கூறியதால் வழிப்போக்கனாகவே வந்து கண்ணன் காட்சி கொடுத்திருக்கிறான் என்று உணர்ந்தார் திருமங்கை.

ஆழ்வார் ஓய்வெடுத்த மகிழ மரம் இன்றும் பட்டுப் போகாமல் இருக்கிறது. ஆனால், இந்த மரத்து விதையை விதைத்தால் மறுபடியும் செடி தோன்றுவதில்லை. எனவே, அதற்குக் காயா மகிழ் எனவும், அவ்வூரில் உள்ள அக்கிணற்றுக்கு ஊராக் கிணறு எனவும் பெயர் உண்டாயிற்று.

தனது களைப்பைப் போக்க நிழல் அளித்த மகிழ மரத்தை நோக்கி காயா மகிழ மரமாக அதாவது பட்டுப் போகலாம் காய்ந்து போகாமல் பசுமையாக விளங்க வாழ்த்திவிட்டுச் சென்றாராம்.

**அந்தக் காயா மகிழ மரம் பசுமையாக விளங்கிப் புயலில் வீழ்ந்து விடவே புதிய மகிழ மரம் ஒன்றை அந்த இடத்தில் நட்டு வைத்துள்ளனர். அது இப்போது வளர்ந்து பசுமை திகழ விளங்குகிறது.**

கோவிலின் பின்புறத்தில் அம்மரம் இன்று திருமங்கையின் திருக்கண்ணங்குடித் தொடர்பிற்குச் சான்று காட்டும் சின்னமாகிறது. காயா மகிழம் என்பதோடு காய்க்காத மகிழமாகவும் விளங்குகிறது என்கின்றனர்.

திருமங்கை இத்தலத்துப் பெருமாளை

*''மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய் மூவடி நீரொடும் கொண்டு*
*பின்னுமேழுலகு நீரடியாகப் பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன்*
*அன்னமென் கமத்தனி மலர்ப்பீடத்தலை புனலிடைக்குடை நீழல்*
*செந்நெல்வுன் கவரியசைய வீற்றிருக்கும் திருக்கண்ணங்குடியில் நின்றானே''*

என்று பாடியுள்ளார். திருமங்கை யாழ்வார்.

*''வங்கமா முந்நீர் வரிநிறப்பெரிய*
*வாளர வின் அணை மேவி*
*சங்கமார் அங்கை தடமலர் உந்திச்*
*சாமமா மேனி என் தலைவன்''*

எனத் திருமாலின் நீலமேனியைப் புகழ்வதும் இத்தலத்தின்தான்.

இத்தலத்துப் பெருமாள் எப்படிப்பட்டவர் என அவருடைய அவதாரச் சிறப்பை அவர் வியந்து ஓதுகிறார். கஜேந்திரன் என்ற யானை முதலையால் பிடிக்கப்பட்டு வருந்தியபோது அம்முதலை துண்டாக அறும்படி திருவாழிப்படையை ஏவி யானையைக் காத்து அது அணிவிக்க நினைத்த தாமரை மலரை ஏற்றுக்கொண்டவன். மூவுலகங்களும் ஊழிக்கால வெள்ளத்தில் மூழ்கித் துன்புற்ற காலத்தில் பேருருவாகவும் ஒற்றைக் கொம்பு வாய்ந்த பெருமீனாகவும் திருவவதாரம் செய்து தன் ஒரு செதிலில் கடல் வெள்ளம் ஒடுங்கும்படி செய்த பெருமாள். முன்னர் மலைபோல் பெருத்த வடிவமும் வெளுத்த கோரைப் பற்களையும் நெருப்போடொத்த கண்களையும் கொண்டவராக உருவமாய்த் தோன்றி நிலமங்கையின் பிரிவுத் துயர் நீக்கியவர். இருபத்தொரு தலைமுறை யளவும் பூமியிலுள்ள அரசர்களின் மணிமுடி சிதறும்படிக் கொன்று குவித்து அவர்களுடைய குருதி வெள்ளத்தில் தீர்த்தமாடிக் கோபம் தணியப் பெற்ற பரசுராமனாக அவதரித்தவர். தேவர்களைத் துன்புறுத்திய இராவணனை முடித்துக் கட்டிய பெருமாள். பாண்டவர்கட்காகத் தூது சென்றபோது துரியோதனன் பொய்யான ஆசனமிட்டுக் கொல்ல

நினைத்தபோது பெரிய திருமேனியாய் மண்ணும் விண்ணும் ஒக்க திருமேனியுடையவனாய் வளர்ந்து அவன் திட்டத்தைச் சீர்குலைத்த பெம்மான். பார்த்தனுக்குச் சாரதியாய் நின்று மாபாரதம் முடித்தருளிய மாயவன்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

*கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்வனோ இன்ன மென்னை*
*வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ - தேனுகிலேன்*
*எண்ணங்குடியாய் இருந்தான் நின்றான் கிடந்தான்*
*கண்ணங்குடியான் கருத்து*

என நூற்றியெட்டுத் திரு அந்தாதியில் உரைத்துள்ள பெருமாள். மணவாள மாமுனிகள் இத்தலத்துப் பெருமானைச் சில காலம் வழிபட்டார். திருக்கண்ணங்குடிப்பிள்ளை, விளாஞ்சோலைப் பிள்ளை ஆகிய பண்டிதர்கள் திருப்பல்லாண்டு குறித்து மணவாள மாமுனிகளுக்கு விளக்குவதான ஓவியங்கள் மகாமண்டபத்தில் உள்ளன. கூரத்தாழ்வாரின் புதல்வர் பராசர பட்டரின் அலங்கார ஸ்லோகம் திருக்கண்ணங்குடியில் ஓதப் பெறுகிறது.



பத்து

# 10. திருக்கண்ண மங்கை

## பெரும்புறக்கடல்

## கணமங்கைக் கற்பகம்

*"கருத்தினால் வாக்கினால்*
*நான்மறையுங் காணா*
*ஒருத்தனை நீ நெஞ்சே!*
*உணரில்-பெருத்தமுகில்*
*வண்ணம் அம் கைக்கண்கால்*
*வனசம் திருவரங்கம்*
*கண்ணமங்கை ஊரென்று*
*காண்"*

எனத் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் போற்றிய திருத்தலம் திருக்கண்ண மங்கையாகும். திருமங்கையாழ்வார் மட்டுமே 15 பாடல்களால் மங்களாசாசனம் செய்துள்ளார். பெரிய திருமடலில் ஆழ்வார் 'கணமங்கைக் கற்பகம்' என்று திருநாமமிட்டு அழைத்தார். திருமங்கையாழ்வார் மட்டுமல்லாது, திருவரங்கத்து அமுதனார் இராமானுஜ நூற்றந்தாதியிலும், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தம் பாக்களிலும் இத்தலத்தைக் குறிப்பிடுகின்றனர்.

### திருக்கண்ணமங்கைத் திருத்தலம்

திருவாரூருக்கு மேற்கே ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருவாரூர் - கும்பகோணம் பேருந்தில் ஏறினால் இருபது நிமிடத்தில் கோயிலை அடையலாம். கோவிலுக்கு அருகில் பேருந்து நிற்கிறது. திருக்கண்ணங்குடிபோலவே இத்திருத்தலத்திலும் தங்கும் விடுதிகள் கிடையாது. திருவாரூரில் தங்கினால் இத்திருத்தலத்தைத் தரிசிக்கலாம்.

திருவாரூர்-கும்பகோணம் வழித்தடத்திலேயே உள்ளது. இத்திருத் தலத்திற்குப் பேருந்துகள் செல்கின்றன. திருச்சேறையிலிருந்து திருவாரூர் செல்லும் பாதையில் அமைந்துள்ள இத்திருத்தலம் திருமங்கையாழ்வாரால் பாடிக்கொண்டாடப் பெற்ற சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகும்.

பத்மபுராணம் 5 ஆவது காண்டத்தில் 81 முதல் 87 வரை உள்ள ஏழு இயல்களில் இத்தலபுராணம் பேசுகிறது.

## *திருமகள் மணம்*

திருமால் பாற்கடலைக் கடைந்தபோது இறுதியில் திருமகள் தோன்றினாள். திருமால் திருமகள் மீது பெரு விருப்புக் கொண்டார். திருமகளும் திருமாலைத் திருமணம் செய்து கொள்ள விழைந்தார். அவரை நேரில் காண வெட்கப்பட்டு இத்தலத்திற்கு வந்து பாற்கடலில் இருந்து வெளியேறிய தோற்றத்தினை மனத்தில் கொண்டு மாலைக் குறித்துச் சோழநாட்டில் அமைந்துள்ள ஆரண்யத்தில் தவமியற்றினார்.

தேவியின் தவம் கண்டு மகிழ்ந்த எம்பெருமாள் அவ்விடத்து வருகை புரிந்து கோயில் கொண்டார். அலைமகளை மணம் செய்ய விழைவதாக மடல் தீட்டி அதனைத் தம் மெய்க்காவலர் சேனை முதலியார் எனும் விசுவக் சேனர் வழி கொடுத்தனுப்பினார். தோழிகள் புடைசூழ இறைவன் திருக்கோயில் கொண்ட இத்திருத்தலம் போற்ற திருமகளைப் பிரான் மணந்து கொண்டார். திருமகளுடன் கோயில் எழுந்தருளினார். திருமால் தன்னுடைய பாற்கடலை விட்டுப் புறத்தே வந்து இங்கு எழுந்தருளியதால் ***'பெரும்புறக்கடல்'*** என்பதே இறைவன் திருப்பெயராயிற்று இதனை வடமொழியில் ***'ப்ருஹத் பஹில் ஸிந்துநாத்'*** என்பர்.

## *சப்தாமிர்தக்ஷேத்திரம்*

தலம், தீர்த்தம், மண்டபம், விமானம், நதி, நகரம், ஆரண்யம் எனும் ஏழு தனிச்சிறப்புகளைக் கொண்டிருத்தலால் இத்திருக்கோயில் 'சப்தாமிர்த க்ஷேத்திரம்' (ஏழு அமுதக் கோயில்) என்னும் பெயர் கொண்டு விளங்குகிறது. திருமகள் தவமியற்றியதால் ***'இலக்குமி வனம்'*** என்னும் திருப்பெயரும், திருமகளை மணம் செய்து கொண்டதால் ***கிருஷ்ணமங்கள க்ஷேத்திரம்*** என்றும் இதற்குப் பெயர்கள் உள்ளன. ***கிருஷ்ணாரண்யம்*** எனும் பகுதிக்குள்தான் இத்தலமும் அடங்குகிறது.

இத்திருத்தலத்தின் கீழ் வீதியில் திருத்தேரும் அதற்கான மண்டபமும் உள்ளன. அதனுடைய மேற்புறத்தில் ***தரிசனபுஷ்கரணி*** எனும் திருக்குளம் அமைந்துள்ளது. இது தரிசனத்துக்கு மட்டுமே உகந்தது. நீராடுவதற்கு உகந்தது அன்று என்பர். படிக்கட்டுகளுடன் பெரிய திருக்குளம் கோவில் முன் அழகுடன் விளங்குகிறது. திருக்குளத்தின் கரையில் கோயிலை நோக்கியவாறு ஆஞ்சநேயமூர்த்தி உள்ளார்.

### திருக்கோயில்

கோயில் முகப்பில் வண்ணம் தீட்டப் பெற்ற வாயில் உள்ளது. உள்ளே நுழைந்தவுடன் இடது புறத்தில் திருக்கோயில் அலுவலகமும் வலது புறத்தில் மண்டபமும் உள்ளன. திருக்கோயிலை அடுத்து இருப்பது பத்ரி வனம் என்ற காடு. திருக்கோயிலுக்கு வடபுறமும் தென்புறமும் காவிரி இரண்டாகப்பிரிந்து மாலையிடுவது போல் சிற்றோடைகளாகச் செல்கிறது. அவை ஓடம் போக்கி ஆறும், விருத்த கிரி ஆறெனப்படும் வெட்டாறுமாம்.

கம்பீரமான ஐந்து அடுக்குடைய இராஜ கோபுரம் நம்மை அடுத்து வரவேற்கிறது. இதனைக் கடந்து உள்ளே சென்றவுடன் கம்பீரத் தோற்றம் கொண்ட கருடாழ்வார் விளங்குகிறார்.

### மணவாள மாமுனிகள் சந்நிதி

கருடாழ்வாருக்குமுன் உள்ள திறந்தவெளியில் இடதுபுறமும், வலது புறமும் மண்டபங்கள் உள்ளன. இடதுபுறம் கண மங்கைக் கற்பகத்தைப் பாசுரங்களால் அர்ச்சித்த திருமங்கையாழ்வாரும், பிற ஆழ்வார்களும் உள்ள மண்டபம் உள்ளது.

வலதுபுறம் முதலில் திருக்கோயில் அலுவலகமும், அதையொட்டி மணவாள மாமுனிகள் திருச்சந்நிதிகர் உள்ளன. அங்கே திருமங்கை ஆழ்வாருடைய திவ்ய சௌந்தரியத்தில் ஈடுபட்டவராய் ''இப்புவியில் அரங்கேசற்கு ஈடளித்தான்'' என்னும் வாழித் திருநாமம் அருளிய மணவாள மாமுனிகள் தனிக்கோயில் கொண்டுள்ளார். இங்கு இக்கோயிலில் பாஞ்சராத்திர ஆகம வழிபாட்டு முறை நடைபெறுகிறது. தினமும் மணவாள மாமுனிகளுக்கு இரண்டு கால பூசை காலை மாலையில் நடைபெறுகிறது. ஐப்பசித் திருநட்சத்திரத்தன்று பத்து நாள்கள் மாமுனிகள் விழா

நடைபெறுகிறது. 25-6-67-இல் இவருடைய ஆலயத் திருப்பணி நடைபெற்றுள்ளது. இரவு எட்டு மணிக்கு அன்பர்களுக்குத் தினமும் மாமுனிகள் திருச்சந்நிதியில் தயிர்ச்சோறு அளிக்கப்படுகிறது.

## *பட்சிராஜன்*

அடுத்துப் பட்சிராஜன் என்னும் திருநாமத்துடன் கருடாழ்வார் சந்நிதி உள்ளது. பெருமாளை நோக்கியவாறு பட்சிராஜன் தோற்றமளிக்கிறார். இக்கருடாழ்வார் வரப்பிரசாதி. அன்பர்கள் வேண்டுதல்களை நிறைவேற்றி அருளுபவர் அவர். ஞாயிற்றுக்கிழமைகளில் இவருக்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. அவருடைய திருநட்சத்திரமான சுவாதியில் சிறப்பாகத் திருமஞ்சனம் நடைபெறும். அப்போது அமிர்தகலசம் என்னும் பிரசாதம் படைத்து அன்பர்களுக்கு வழங்குவர்.

## *அமிர்தகலசம்*

'அமிர்தகலசம்' இத்திருக்கோயில் பிரசாதம். இது திருப்பதி என்றவுடன் நினைவிற்கு வரும் லட்டுப் போல், திருக்கண்ண மங்கை என்றவுடன் நினைவிற்கு வருவது. வேண்டுதல் நிறைவேறும் அன்பர்கள் முன்னதாகத் தெரிவித்தால் பிரசாதம் செய்து, நைவேத்தியம் செய்து அளிப்பர். ஒரு சிறப்பான இப்பிரசாதம் நீண்ட பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவருவது. இனிப்பு, காரச் சுவையுடன் கூடிய இப்பிரசாதம் பெறும் அனுபவம் புதுமையான அனுபவம்.

## *பக்தவத்சலர்*

இரண்டாம் திருச்சுற்றின் மையத்தில் மூலவரின் கருவறை அமைந்துள்ளது. மூலவரின் திருப்பெயர் பக்தவத்சலப் பெருமாள். ***பத்தராவிப் பெருமாள்*** எனும் திருநாமமும் கொண்டு விளங்குகிறார் திரு நின்றவூர்ப் பெருமானின் திருநாமமும் இது தான்.

திருமங்கையாழ்வார் இத்தலத்தில் வந்து இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பாடித் துதிக்கையில் திருநின்றவூர்ப் பத்தராவில் பெருமாள் முன்பு திருக்கடல் மல்லையில் ஒரு பாடல் பெற்றது போதாதென்று மீண்டும் தாயாரால் நினைவூட்டப் பெற்றவராய், ஆழ்வாரெதிரில் வந்து காட்சியளிக்க ஆலிநாடர்

***'நின்றவூர் நித்திலத் தொத்தினை... கண்ணமங் கையுட் கண்டு கொண்டேனே'*** என்று பிரானையும் சேர்த்துத் துதித்தார்.

மூலவருடைய திரு உரு சுமார் 14 அடி உயரத்துடன் மிகவும் எடுப்பான தோற்றத்தில் விளங்குகிறது. மூலவரான பெருமாள் மிகப்பெரிய உருவத்துடன் கோயில் கொண்டுள்ள தலங்களுள் இதுவும் ஒன்று. இப்பெருமாளின் திருவருளினை இத்தலத்தில் பெற்ற மார்க்கண்டேயரும், வருணனும் கைகூப்பியபடி மண்டியிட்டவாறு எதிர் எதிராகக் காட்சியளிக்கின்றனர். சுவர்களில் முனிவர் திருஉருவங்கள் உள்ளன.

கி.பி. 1621 இல் மூலவரின் திருஉருவம் பிரதிட்டை செய்யப்பெற்றதைத் திருவுண்ணாழித் திருச்சுற்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு வாயிலாக அறியலாம்.

***பத்தராவி, பக்தவத்சலர்*** ஆகிய திருநாமங்களுக்கு நமக்கும் பொருள் விளங்குகிறது. பக்தர்+ஆவி= பத்தராவி. பக்தர்களின் பொருட்டு ஆவிபோல் விரைந்து வந்து அருள்பாலிப்பதால் பத்தராவியென்பது பளிச்சிடுகிறது. பக்தர்களை விட்டு நீங்காது எப்போதும் அருகிலேயே இருப்பதால் பக்தவத்சலர் என்னும் திருநாமம் பெற்றுள்ளார்.

மூலவரின் சந்நிதியின் உட்புறம் நான்கு கற்றூண்களால் தாங்கப்படும் அகலமான திருமண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தான் திருமகளைப் பெருமாள் மணங்கொண்டார் என்பர். இதனையடுத்த அர்த்தமண்டபத்தில் பன்னிரு ஆழ்வார்கள், திருக்கண்ணமங்கை ஆண்டான் ஆகியோரின் திருவிழாப் படிமங்கள் உள்ளன. இவர்களுக்கு மேல் இரு கரங்களுடன் விசுவக் சேனர் காட்சி தருகிறார்.

## *விசுவக்சேனர்*

இந்த விசுவக்சேனர் சிறப்புடையவர். பிற திருக்கோயில்களில் நான்கு கரங்களுடன் தோன்றும் விசுவக் சேனர் இக்கோயிலில் இருகைகளுடன் விளங்குகிறார். ஏன் இவ்வாறு தோன்றுகிறார்? தாம் நான்கு கரங்களுடன் தோன்றினால் திருமாலைக் காண வரும் திருமகள், தன்னையே திருமால் என எண்ணி விடுவாரோ எனும் எண்ணத்தினாலேதான் இருகரங்களுடன் விளங்குகிறாராம்.

திருக்கண்ணமங்கைத் திருக்கோயிலில் கருவறையில் பின்புறச் சுவர்களில் மூன்று புறங்களிலும் எண்ணற்ற எழில்மிகு சிற்பங்கள் அழகு கூட்டுகின்றன. காளியமர்த்தனர், இலக்குமி நரசிம்மன், வாமனர், பரசுராமர் இரணியனை அழிக்கும் நரசிம்மர், பலராமர், கோதண்டராமர், வேணுகோபாலர், நான்முகன், பரமபதநாதன், கஜேந்திரவரதர், பூவராகர், கலைமகள், நவநீதகிருட்டிணன் என ஏராளமான சிற்பத் திரு உருவங்களைக் காண்கிறோம்.

சங்கு, சக்கரம், கதை, கடகம், பத்மம் ஆகிய திருமாலின் பஞ்சாயுதங்களும் ஒருங்கே விளங்குகின்றன. கண்ணனின் விளையாடல்களை ஒவ்வொரு சிற்பமும் அதிநுட்பமாகக் காட்டுகின்றன. இச்சிற்பங்களிடையே இசைக்கும் கந்தர்வர்களின் சிறு சிற்பங்களும் காணலாம். பாம்பணை மேல் பாற்கடலில் வையத்து பரமன், சங்கு சக்கரம், திருமுடி கொண்டு எழில் பொங்க விளங்குகிறார்.

நான்கு புறச் சுவர்களிலும் திருமாலின் திருக்கல்யாணத் திருக்கோலம் காணவந்த வானவர்கள், தவமுனிகள் முதலானோருடைய திரு உருவங்களைக் காண்கிறோம். தாய்ப்பசுபோல அன்பர்களுக்குக் கருணையைப் பொழிபவர்.

### உற்சவர்

உற்சவரின் திருநாமம் ***பெரும்புறக்கடல், பக்தவத்சலர்*** ஆகியன. உற்சவர் அருகே திருமகளும், மண்மகளும், ஆண்டாளும், சந்தான கிருட்டிணனும் இடம் பிடித்துள்ளனர். பெரும் புறக்கடல், பத்தராவி எனும் இவ்விரு திருநாமங்களையும் திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தில்

பெரும் புறக்கடலை, அடல் ஏற்றினை
பெண்ணை ஆணை எண் ணில்முனிவர்க்கு அருள்
தரும் தவத்தை முத்தின் திரள்கோவையை
பத்தர் ஆவியை நித்திலத்தொத்தினை
அரும்பினை, அலரை, அடியேன் மனத்து
ஆசையை, அமுதம் பொதி இன் சுவைக்
கரும்பினை, கனியை, சென்றுநாடி-
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே

என்று எடுத்தாளக் காணலாம்.

## விமானம்

மூலவர் கருவறைமேல் உள்ள விமானத்திற்கு ***'உத்பலவிமானம்'*** என்று பெயர். தனது உடலைப்பொருட்டாகக் கருதாமல் பெருமாள் திருப்பணியில் ஈடுபடுவதால் வற்றி உலர்ந்த உடலையுடையவர்களை உத்பலர் என்ற குறிப்பிடுவர். அத்தகையவர்களுக்கு அருள் தரும் பெருமாள் எழுந்தருளியிருக்கும் விமானம் உத்பல விமானம் என்பர்.

## அபிடேகவல்லி - தேன்கூடு அதிசயம்

தாயார் சந்நிதியின் பின்புறமும் நான்கு தூண்கள் தாங்கும் சிறிய மண்டபம் ஒன்று உள்ளது. தாயார் பெருமாள் புறப்பாட்டு வேளைகளில் இம்மண்டபத்தில் தீபாராதனை கண்டு அருளுவர்.

பத்தராவிப் பெருமாள் சந்நிதிக்குச் சமமாகத் தாயார் சந்நிதி உள்ளது. தாயார் சந்நிதி வளைந்த கூடம் போன்ற அமைப்பில் உள்ளது. இதுபோல் நாகை மாவட்டத்தில் பல கோயில்கள் அமைந்துள்ளன. தாயார் சந்நிதியில் நுழைவில் வலது புறத்துச் சுவரில் விநாயகப் பெருமான் திருஉரு உள்ளது.

இச்சந்நிதியில் ஓர் அற்புதம் பன்னெடுங்காலமாக உள்ளது.

தாயார் அபிடேகவல்லி எனும் திருநாமம் கொண்டுள்ளார். தாயாரின் கருவறைமுன் வலதுபுறமும், இடதுபுறமும் உள்ள சுவர்களில் மாடம் ஒன்று உள்ளது. இம்மாடத்தினைச் சிறிய சிவப்புத் துணியிட்டுமூடியுள்ளனர். அம்மாடத்தினுள் தேன்கூடு ஒன்று பன்னெடுங்காலமாக உள்ளது. எப்போது கட்டப்பெற்ற தேன்கூடு என்று கணிக்கவியலாது. எத்தனையோ நூற்றாண்டுகளாக இருந்து வருவது அது. ஆறு மாதங்கள் ஒரு பக்கமும், அடுத்த ஆறு மாதம் மற்றொரு பக்கமும் தேனீக்கள் ரீங்காரமிடுகின்றன. இத்தேனீக்கள் எவரையும் கொட்டியது கிடையாது.

கணமங்கைத் திருமணக் கோலம் காண வந்த முனிவர்கள் எப்போதும் அத்திருமணக் கோலம் காண வேண்டுமெனத் தேனீக்களாக உருவெடுத்துக் கூடு கட்டி அதிலிருந்து கொண்டு தினமும் கண்டு மகிழ்கிறார்கள் என்பர். அபிடேகவல்லித் தாயாரைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு இசையொலி எழுப்பிக் கொண்டு வாழ்கின்றனர்.

இத்தேன் கூட்டிற்கு நாள்தோறும் பூசை நடைபெறுகிறது.

இத்தேனீக்களால் யாருக்கும் எவ்வித இடையூறும் இருப்பதில்லை.

கருடாழ்வாரின் சந்நிதிக்குத் தென் கிழக்கிலுள்ள மடைப் பள்ளியையடுத்துத் திருவுந்திக் காப்புமண்டபம் எனும் நான்கு கால் மண்டபம் உள்ளது. பஞ்சபர்வ புறப்பாடுகாலங்களில் இம் மண்டபத்தில் பெருமாளுக்கும் தாயாருக்கும் திருவுந்திக்காப்பு நடைபெறுவதுண்டு. மேற்கிலுள்ள அகலமான திருச்சுற்றில் அமைந்த பத்தியுலா மண்டபத்தில் தை அமாவாசை, மட்டையடி விழாக்களின் போது திருமாலும் தாயாரும் எழுந்தருளுவர்.

## சுடர்க்கொடி

மூலவரின் சந்நிதிக்கு வடபுறத்தில் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் தனிச்சந்நிதி கொண்டுள்ளார். ஆண்டாள் சந்நிதிக்கு அருகே தெற்கு நோக்கியவாறு பரமபதவாசல் அமைந்துள்ளது. வைகுண்ட ஏகாதசியுடன் தொடங்கும் இராப்பத்து விழாக்களின் போது பெருமாள் இவ்வாயில் வழியாகச் செண்பகத் திருச்சுற்றுக்கு எழுந்தருளுகிறார். தெற்கு நோக்கியவாறு நிகமாந்த தேசிகன், நவநீதகிருட்டிணன், கோதண்டராமன் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

இத்திருக்கோயில் தென்கலைக் கோயிலான போதிலும் இரண்டாம் திருச்சுற்றில் பெருமாளுக்கு இடதுபுறத்தே தேசிகன் சுவாமிகள் சந்நிதி உள்ளது. முதல் திருச்சுற்றில் மணவாள மாமுனிகளும், இரண்டாம் திருச்சுற்றில் தேசிகன் சுவாமிகளும் எனத் தனித் தனிச் சந்நிதிகளில் கண்ணபிரானின் கருணையமுதம் பருகி நிற்கின்றனர்.

புறப்பாடு நடைபெறுகிற உற்சவ காலங்களில் பெருமாள் தேசிகப் பெருமான் சந்நிதியில் சேவை சாதிக்கிறார்.

பெருமாள் வந்து நின்றதும் தாம்பூலம் வைத்து வடகலையினர் பெருமாளை எதிர்கொண்டழைக்கின்றனர். தீபாராதனை முடிந்ததும் பெருமாள் சடாரியுடன் பட்டாச்சாரியார் தேசிக சுவாமியின் சந்நிதியினுள் சென்று சடாரியைத் தேசிகனுக்குச் சாற்றி அருளுகிறார்.

வருடத்தில் விழா நாள் ஒன்றில் பெருமாள் தேசிகன் சந்நிதியில் எழுந்தருளி விழாக் காண்கிறார். விழாவினை அந்நாளில் வடகலையினர் நடத்துகின்றனர்.

வடகலையினர், தென்கலையினர் பிரச்சினைகள் ஏற்பட்டு உச்சநீதிமன்றம்வரை சென்று இவ்வுரிமையினைப் பெற்றதாக வடகலை அன்பர் தெரிவிக்கிறார்.

## தீர்த்தம்

நாள்முகனிடமிருந்து மது, கைடபர் எனும் இருஅசுரர்கள் நான்மறைகளை அபகரித்துச் சென்றனர். இதனால் துயருற்ற நான்முகன் திருப்பாற்கடலையடைந்தபோது திருமால், திருமகளை மணம் செய்து திருக்கண்ணமங்கையில் தங்கிவிட்டதாக ஆதிசேடன் தெரிவித்தான். திருக்கண்ணமங்கை சென்ற நான்முகன் தர்சன புஷ்கரணியின் கரையில் கடுந்தவமியற்றத் திருமால், அசரர்களிடமிருந்து நான்மறைகளை மீட்டு அவற்றை ஒப்படைத்தார் நான்மறைகளை நான்கு தூண்களாக நிறுத்திப் புஷ்கரணியின் மேற்புறத்தில் தானும் அமர்ந்தார். தன்னை வழிபட்ட பக்தன் நான்முகனிடம் திருமால் வாத்சல்யம் கொண்டதால் பக்தவத்சலர் எனப்பெயர் பெற்றார்.

வாமன வடிவெடுத்த திருமால் மாபலியிடம் மூன்றடி மண்ணைப் பெற்றார். நீரைத் தாரை வார்த்தளித்தபோது அந்நீர்த்துளிகள் வாமனரின் கட்டை விரலில் விழுந்தன. வாமனர் உலகளந்தானாய் உயர்ந்த போது பிரம்மாண்டம் உடைந்து அவருடைய கால் கட்டை விரலிலிருந்து நீர் பெருகியது. உலகை நீரில் மிதக்கச் செய்தபின் அந்நீர் திருமால் திருவடியடைந்தது. திருமாலின் திருவடி தோன்றி மீண்டும் அவர் திருவடிகளையே அடைந்ததால் 'விஷ்ணுபதி கங்கை' எனும் பெயர் உண்டாயிற்று. திருமால் திருக்கண்ணமங்கையில் கட்டை விரலைப் பதிப்பித்தபோது அப்பள்ளத்தில் தேங்கிய நீரே தர்சன புஷ்கர்ணியாயிற்று.

இந்நதிக்கரைதனில் கீழ்க்கரையில் சிவபெருமானும், தென்கரையில் நான்முகனும், மேற்குக் கரையில் பக்தவத்சலரும் வடகரையில் விநாயகரும், களத்தின் நடுவில் முருகப் பெருமானும் உள்ளனர் என்பர். வசிட்டர், வாமதேவர், ஜபாலி, காசியபர், பராசரர், வியாசர், விசுவாமித்திரர், அட்டவக்கிரர் ஆகிய முனிவர்கள் இப்புஷ்கர்ணியில் எண்திசைகளிலும் காவலர்களாக உள்ளனர் என்பர்.

இத்தீர்த்தத்தில் நீராடிய சந்திரனைப் பீடித்த குருதல்பம் எனும் மகாபாவம் நீங்கியது எனவும், விஷ்ணுபதி கங்கை எனும் இதன் சிறப்பை ஸ்கந்த புராணத்து ***ஆடகஷேத்திர மகாத்மியம்*** எடுத்தியம்புகியது.

## வழிபாடுகள்

இத்திருக்கோயிலில் ஆறுகால வழிபாடுகளான விசுவரூபம், திருவனந்தல், கால சந்தி, உச்சிக்காலம், சாயங்காலம், இரண்டாம் காலம், அர்த்தசாமம் ஆகியன நடை பெறுகின்றன. பாஞ்சராத்திர ஆகம முறைப்படி வழிபாடுகள் நடைபெறுகின்றன.

சாயங்கால வழிபாடான சாயரட்சைக்கு முன் ***'திருமாலை வடைத் தளிகை'*** என்னும் இடைக்கால வழிபாடும் நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவம் கொடியேற்றத்துடன் சிறப்புடன் நடைபெறுகிறது.

தமிழ்ப்புத்தாண்டு, வைகாசி வசந்த விழா, ஆடி ஏகாதசி, ஆடிப்பூரம், ஸ்ரீ ஜெயந்தி, உறியடி, புரட்டாசி பவித்ரோத்சவம், நிகமாந்த தேசிகன் உற்சவம், நவராத்திரி, விஜயதசமி, வேடுபறி, ஐப்பசி மணவாள மாமுனிகள் விழா, திருக்கார்த்திகை, மார்கழியில் பகல் பத்து, இராப்பத்து, போகி, தைப்பொங்கல், மட்டையடிவிழா ஆகிய விழாக்கள் இத்திருக்கோயிலின் பிற விழாக்கள்.

இவை தவிர மாதந்தோறும் பஞ்சபர்வங்களில் சுவாமி புறப்பாடும் உண்டு. ஆண்டுதோறும் நான்குமுறை கருடவாகனத்தில் பெருமாள் வலம் வருவார். தங்கமுலாம் பூசிய இக்கருடவாகனத்தை அளித்தவர் பிரபலநாடக ஆசிரியர் கன்னையா நாயுடு. யதீந்திரப்ரவணம் செட்டியார் என்பவர் அளித்த தங்கப்படிச்சட்டம், அதற்கேற்ற திருவாசி குறிப்பிடத்தக்கன. புன்னை மரவாகனம், சேஷவாகனம், குதிரை வாகனம் ஆகியன குறிப்பிடத்தக்கன. கொல்லங்கோடு அரசர் கொடிமரத்திற்கு உயர்வகைத் தேக்கு அளிக்க, சப்பா மகராணி கொடிமரத்திற்குச் செப்புத்தகடுகள் வேய்ந்துள்ளார். வடபாதிமங்கலம் ஜானகி அண்ணி என்பவர் திருவுண்ணாழியைப் புதுப்பித்துள்ளார். 1967க்குப்பின் 1997 வரை குடமுழுக்கு நடைபெறவில்லை. 1997-இல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

## திருக்கண்ண மங்கையாண்டான்

இத்திருக்கோவிலில் இடம்பெற்ற திருக்கண்ணமங்கை யாண்டானின் திருஉரு வரலாறு கூறும் திருஉரு. ''இறையருள் பெற விழைவோர் தமது சொந்தமுயற்சியைக் கைவிட்டு இறைவனே நம்மைக் காப்பாற்றுவான், என முழுமையாகத் தஞ்சமடைய வேண்டும்'' எனும் கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்த வரலாறு.

பாரதப்போருக்குமுன்னர், ''என் திருவடிகளைப் பற்றினால் உனக்குப் பாவங்களிலிருந்து விடுதலை அளிக்கிறேன்'' எனக் கீதாசாரியன் அருச்சுணனுக்கு அருளினார். இதே கருத்தைத் திருக்கண்ணமங்கையாண்டான் மூலம் உலகிற்கு உணர்த்தினார்'' எனப் பட்டர்பிரான் கருதிய திருக்கண்ணமங்கையாண்டானின் வரலாறு நினைந்து போற்றுதற்குரியது.

## இலட்சுமிநாத தாத்தாச்சாரியார்

வைணவ ஆசாரியர்களிடையே முதல்வராக விளங்கும் நாதமுனிகளுடைய சகோதரியின் புதல்வர் இலட்சுமி நாத தாத்தாச்சாரியர் என்பவர். திருக்கண்ணமங்கையில் அனைவரும் போற்றும் முதல்வராகச் செல்வராக வாழ்ந்தார். அவருக்குத் ***திருக்கண்ணமங்கை ஆண்டான்*** எனும் பெயர் வழங்கப் பெற்றது. அவர் பக்தவத்சலப் பெருமாளுக்குத் துளசிமாலைத் திருப்பணி செய்து வந்தார்.

ஒருநாள் இருவேடுவர்கள் தங்கள் வேட்டை நாய்களுடன் இவ்வூர் வழியே செல்ல நேரிட்ட போது காலணிகளைக் கழற்றிக் கோயிலுக்கு வெளியே வைத்து விட்டுக் கோவிலினுள் சென்றனர். இருநாய்களும் திடீரென்று ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டன. அவற்றுள் ஒன்று இறந்தது. தரிசனம் முடிந்து வெளியே வந்த வேடுவர்கள் தம்முள் நாயின் பொருட்டுச் சண்டையிட்டுக் கொண்டனர். விளைவு அவர்களிருவரும் உயிர் இழந்ததுடன் நாய்களும் இறந்தன. இக்காட்சியை அவ்வழியே வந்த திருக்கண்ணமங்கையாண்டான் கண்டார்.

''தங்களுடைய உரிமையாளர்களுக்குரிய காலணிகளைக் காக்கும் பணியில் உண்மையாக ஈடுபட்ட நாய்கள் இரண்டும் உயிர்விட்டன. தங்களுடைய நாய்களின் மேல் பரிவும் பாசமும் கொண்டு வேடுவர்களும் அவற்றின் பொருட்டுச் சச்சரவில் ஈடுபட்டுத் தங்களது உயிரைத் துறந்தனர். தன்னலம் நிறைந்த மனிதர்கள், தங்களிடம் அன்பு பூண்ட நாய்களின் பொருட்டுத் தங்கள் உயிரைத் துச்சமாக மதித்துப் போரிட்டு மடிகிறார்கள். தன்னலமற்ற இறைவன்மீது அன்பு செலுத்தும் அடியார்களைக் காப்பாற்ற இறைவன் எப்படியெல்லாம் அருள்புரிவாரோ'' என்னும் சிந்தனை அவருடைய மனத்தில் எழுந்தது.

தமது செல்வங்கள், பதவி ஆகியவற்றைத் துறந்து திருக்கண்ணமங்கையானைச் சரணடைந்தார் அவர் ஆலயத்தையே தம் இருப்பிடமாய்க் கொண்டார். நாய்களின் செயலால் தம் மனத்தினில் ஏற்பட்ட மாறுதலுக்கு நன்றியறிதலாக நாய் போலவே தவழ்ந்து சென்று நீராடியபின் இறைவனுக்குச் சேவை செய்தார். ஒரு நாள் ஆலயத்திற்கு இவர் சென்றபோது மறுநாள் முக்தியளிப்பதாகப் பெருமாள் அருளினார். ஊராருக்கும் இச்செய்தியினை அறிவித்தார். மறுநாள் நீராடியபின் சந்நிதியில் சென்று நிட்டையிலமர்ந்தார். கண்ணைப்பறிக்கும் ஒளிவீச அவர் இறைவனுடன் ஒன்றாய்க் கலந்ததை அங்குக் குழுமியிருந்த பக்தர் கூட்டம் கண்டது. இன்றும் ஆனிமாதம் திருவோண நட்சத்திரத்தை இவருடைய மகாநட்சத்திரமாகக் கொண்டாடுவர்.

## தல விருட்சம்

இத்தலத்தின் தலமரமாக விளங்குவது மகிழமரமாகும். கவி காளமேகம் இக்கண்ணபுரப் பெருமானை

*''நீல நெடுங்கடலோ நீலமணிக்குன்றமோ*
*கோலம் சுமந்தெழுந்த கொண்டலோ-நீல நிறக்*
*காயா மலரோ களங்கனியோ கணமங்கை*
*மாயா உனது வடிவு''*

எனப்பாடினார்.

வடலூர் வள்ளல்பெருமான் இத்திருத்தலத்துத் தாயார் அபிஷேக வல்லி மீது.

*''உலகம் புரக்கும் பெருமான்றன்*
*உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி*
*உவகையளிக்கும் பேரின்ப உருவே*
*எல்லாம் உடையாளே*
*திலகர் செறி வாணுதற் கரும்பே*
*தேனே, கனிந்த செங்கனியே*
*தெவிட்டாத அன்பர் உள்ளத்துள்ளே*
*தித்தித்தெழுமோர் தெள்ளமுதே*
*மலகஞ்சகத் தேர்கருளளித்த வாழ்வே*
*யென் கண்மணியே யென்*
*வருத்தந் தவிர்க்கவரும் குருவாம்*
*வடிவே ஞான மணி விளக்கே*

*சலசுந்தரம் போல் கருணை பொழி*
*தடங்கண் திருவேகண்ணமங்கை*
*தாயே சரண சரண மிது தருணங்*
*கருணை தருவாயே''*

எனப்பாடினார்.

திருமங்கையாழ்வார் திருக்கண்ணமங்கைப் பெருமாள் எப்படிப்பட்டவர் என்பதனைத் தம் பாசுரங்களில் எடுத்துக் கூறுகிறார். அவற்றில் சில. ''பக்தியோகத்திற்குத் தூண்டுபவன்; பரம பதம் அளிக்கவல்ல பிரபத்தி யோகத்திற்குத் ஏவுபவன்; அன்பு இல்லாதவர்க்குப் பொய்யன்; திருவாழியைத் திருக்கை யினுடையவன்; கடல் நிற வண்ணன்; எல்லாரிடம் உயர்வுடையவன்; ஆலிலையில் பள்ளி கொண்ட ஆசாரியன்; நேற்றைப் போதில் நுகரப் பெற்ற பொருள்போல் நெஞ்சை விட்ட கலாத யோக்யதையுடையவன். இன்று அனுபவிக்கப் பெறும் பொருள் போன்றவன்; மேலுள்ள காலமும் இப்படியே அனுபவிக்க உரியவன்; திங்கள் ஆண்டு இவற்றிக்கு நிர்வாககன்; கன்னற் கட்டி போன்றவன்; கருப்பஞ் சாறு போன்றவன்.''

''வேறுபுகலற்ற அடியேன் போல்வார் திறத்தில் காரணமில்லாமல் கருணை காட்டுபவன்; சிவனைத்தன் திருமேனியில் வைத்து அதனைத் தன் பேறாக உகந்திருக்கும் சீலகுணத்தாற் சிறந்தவன். எப்போதும் இத்திருக்குணத்தையே இயல்பாகவுடையவன்; பனிமா மதியம் தவடிப் பெற்ற ஆகாயமாக இருப்பவன்; பகலவனுக்கு அந்தர்மியாக இருப்பவன்; வடவேங்கடத்தின் கொடு முடியைத்தன் இருப்பிடமாகக் கொண்டவன்; தம்பால் விரும்பி விளங்கப் பெறுபவன்; போகம் அனுபவிப்பதற்கான பகல் இராப் பொழுதுகட்கு நாயகன்.''

''பேய்ச்சி முலையிலுள்ள நஞ்சினை அமுது செய்த சிறுக்கன்; தெள்ளியார் வழங்கப் பெறும் தேவன்; திருக்கோவலூரில் இடைகழியில் முதலாழ்வார்களால் நெருக்குண்ட இளங்குமரன் அந்தணர்களின் சிந்தையுள் புகுந்து அவர்களைத் தன் வழியே நியமித்துக் கொண்டிருப்பவன்; பிரகாசமே வடிவாகவுடையவன்; இத்தன்மைகளால் அடியேனை ஆட்படுத்திக் கொண்டவன்; எய்ப்பினில் வைப்பாக இருப்பவன்; பொன்னும் மணியும் போல் எல்லாராலும் விரும்பப் பெறுபவன்''

''நித்தியானந்தத்தால் காளைபோல் மிடுக்குடையவன்; இமயத் திருப்பிரிதியில் தன் இருப்பைக் காட்டி அடியேனை வயப்படுத்திக் கொண்டவன்; இம்மை மறுமைப் பயன்களை விரும்புவோர்க்கு அளிக்க வல்லவன்; தான் விரும்பும் மனிதர்களைப் பரமபதத்தில் கொண்டு வைக்க வல்லவன்; கையில் திருவாழியான்; வாளிருப்பதால் எதிரிகட்கு எமன் போன்றவன்; திருநின்றவூரில் முத்துத்திரள் போல் வடிவு கொண்டு எழுந்தருளியிருப்பவன்; நீலமணி மயமான மலை போன்ற வடிவுடையவன்; ஊற்றின்பத்தைத் தரும் தென்றல் போல் விரும்பத்தக்கவன் நீர்போல் உயிர் தரிப்பிற்கு ஏதுவானவன்.''

''நினைத்ததை நினைத்தவாறு செய்து தலைக்கட்டிக் கொள்ள வல்ல சாமர்த்தியன்; கேசியை அழித்துக் கேசவன் என்னும் திருநாமம் பெற்றவன்; ஒளிமிக்க அணிகலன் வைத்தற்குரிய செப்பு போன்றவன்; திருமகள் கேள்வன்; பவளத்தின் ஒளியை ஒத்திருப்பவன்; ஏழுலகங்கட்கும் நாயகன்; கால தத்துவன்; திருவாழி ஏந்திய திருக்கையன்; அந்தணர்களின் கல்விக்குப் பொருளாக இருப்பவன்;''

''எப்பொழுதும் முற்றிலும் மனநிறைவுடையவன்; திசைநான் முகனுக்குத் திருத்தகப்பன்; மூவரில் முதல்வன்; பேரொளி வீசும் திருமேனியையுடைவன்; மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் தலைவன்; சிவனைக் கூறுடம்பாகக் கொண்டவன்; அரி என்னும் திருநாம முடையவன்; எல்லாப் பொருள்களும் தன்னிடத்தில் பொருந்தும் படியான முழுமுதற் கருத்தர்.''

''கன்றினால் களியுதிர்த்த காளை; பூதனையின் முலை தீட்டிய நஞ்சுடன் அவருடைய உயிரையும் உண்டசிறுவன். இராவணனை மாய்த்த வீரன்; அன்பர்கட்கு ஆரா அமுதம் போன்றவன்; நச்சுவார் உச்சுமீது நிற்கும் நம்பி; கஞ்சனைக் காலனுலகிற்கனுப்பிய காளை.''

''இசைபோல் இனியன்; இசையில் சாரமானவன்; பாலினுள் நெய்போல் மறைந்திருக்கும் பான்மையன்; நித்திய விபூதிக்குநாதன்; பேரொளி வீசும் திருமேனியன்; வேள்வி சொரூபி; விளக்கொலி போன்ற சுயஒளியையுடையவர். பூமி போன்ற பொறுமையுடையவன்; மலை போல் அசைக்க ஒண்ணாதவன்; வேண்டுமிடங்களுக்கு வருவித்துக் கொள்ளவல்ல அலை நீரினைப் போன்றவன்; அடியவரிடத்துப் பேரவாக்கொண்டவன்; சிறந்த ஞானவான்; வைதிகர்கட்குக் கண் போன்றிருப்பவன்.''

**திருக்கண்ணமங்கைத் திருத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் அருளிய இக்கடைசிப் பாவினில் தாள் உரைத்த பத்துப் பாக்களைக் கற்றவர்கள் விண்ணவராகி மகிழ் வெய்துவர் என்று கூறுகிறார்.**

பதினொன்று

# 11. திருக்கண்ணபுரம்

## நீலமேகன்

*"கண்ணபுரம் செல்வேன்*
*கவலையெல்லாம் மறப்பேன்*
*கண்ணனின் சந்நிதியில்*
*எந்நேரமும் இருப்பேன்"*

இக்காலக் கவிஞரின் பாடல் சீர்காழியின் தேனிசையில் நம் உள்ளத்தை உருக்கித் திருக்கண்ணபுரம் செல்ல வேண்டும் எனும் நம் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

திருக்கண்ணபுரம் ஒரு சிற்றூர். திருவாரூரையும், மயிலாடு துறையையும் இணைக்கும் இரயில் பாதையில் நன்னிலத்திலிருந்து சுமார் ஒன்பது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து நன்னிலம் வந்தால் நகரப் பேருந்துமூலம் திருக்கண்ணபுரம் அடையலாம். நன்னிலம் - நாகூர்ப் பேருந்தில் ஏறித் திருப்புகலூரில் இறங்கி நடந்தால் சுமார் 1.5 கிலோ மீட்டர். சுற்றிலும் வயல்களும், செல்லும் பாதையில் தென்னை மரங்களும் ஊருக்கு அழகு சேர்க்கின்றன. கிராமச் சூழ்நிலை மாறாத இத்திருத்தலத்தில் கோயில் முன்னரே பேருந்துகள் நிற்கின்றன. முன்பெல்லாம் மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் நம்மைக் கொண்டு செல்லும். இப்போது பேருந்துகள் உள்ளன. திருவாரூரிலிருந்து நேரடியாகத் திருக்கண்ணபுரத்திற்குப் பேருந்துகள் உள்ளன. இத்திருத்தலம் செல்ல விழைவோர் மயிலாடுதுறையில் தங்கிச் செல்லுதல் எளிது. இவ்வூரில் தங்குமிட வசதிகள் எல்லாம் கிடையாது. திருவாரூரிலிருந்தும் இத்திருத்தலம் வரலாம். பேருந்துகள் அடிக்கடி இல்லை என்பதே குறை.

திருப்புகலூர் நாவுக்கரசர் முக்தி பெற்ற தலம். திருப்புகலூரில் தங்குவதற்கும் உணவு கொள்வதற்கும் விடுதிகள் இருப்பினும் மயிலாடுதுறையில் தங்கிச் சென்று வருவதே நல்லது. அல்லது திருவாரூரில் தங்கலாம்.

கண்ணபுரத்துப் பெருமானைக் குலசேகரப் பெருமாள், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர். திருமலை, திருவரங்கம், அழகர்கோவில் ஆகிய திருத்தலங்களை விட அதிகமான பாசுரங்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற திருத்தலம் இது. 128 பாசுரங்களால் ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர் எனில் இத்திருத்தலத்துச் சிறப்பு விளங்கும்.

இப்பெருமாளைப்பற்றி நம்மாழ்வார் 11 பாசுரங்கள் கொண்டு மங்களா சாசனம் செய்தார். குலசேகர ஆழ்வார் 10 பாசுரங்களிலும், ஆண்டாள் ஒரு பாசுரத்தாலும்,பெரியாழ்வார் ஒரு பாசுரத்தாலும் மங்களா சாசனம் செய்தனர். திருமங்கை யாழ்வார் 100 பாசுரங்களில் மங்களா சாசனம் செய்த சிறப்பும் உண்டு. நூறு பாசுரங்களில் கரையெடுத்த, எனத் தொடங்கும் அகத்துறைப்பாடல்கள் பத்தும் அருமையானவை.

திருமங்கை ஆழ்வார் ''கார்வானம் நின்ற திருக்கண்ணபுரம்'' ''கார்மலிகண்ணபுரம்'' ''கருமாமுகில் தோய் நெடுமாடக் கண்ணபுரம்'' என்று கூறி அடிக்கடி கறுத்த மேகங்கள் சூழ்ந்து மழை பெய்வதற்கு இங்குக் குறை இல்லை என்பதனைக் காட்டுகிறார். சோலையின் எழிலை ''காவளரும் கடி பொழில் சூழ் கண்ணபுரம்'' என எடுத்துக் காட்டுகிறார்.

திருமங்கையாழ்வாரே இந்த நீலமேகப் பெருமானின் பெருமைகளைப் பேச அதிக வாய்ப்புகள் பெற்றவர் எனலாம். பெரும்பாலும் குற்றெழுத்துக்களே நிரம்பப் பெற்றுச் சித்திரக் கவிகளாலும் ஒரு திரு மொழியைப் பாடியுள்ளார். நாயகி நிலையிலிருந்தும் பத்துப் பாசுரங்களைப் பாடி மகிழ்கிறார். அவற்றுள் ஒன்று

*விண்டமலரெல்லாம் ஊதி, நீ என் பெறுதி?*
*அண்ட முதல்வன் அமரர்கள் எல்லாரும்*
*கண்டு வணங்கும் கண்ணபுரத்து எம்பெருமான்*
*வண்டு நறுந் துழாய் வந்து ஊதாய் கோல்தும்பி*

''திறந்து கிடந்த வாசல் எல்லாம் திரியுமாப் போலே விண்ட மலர்கள் தோறும் நீ ஊதித் திரிவதனால் என்னபேறு பெறப் போகின்றாய்? அற்பமாயும், நிலையற்றது மாயும் உள்ள ஆறுகால பூசையும் தவறாமல் நடைபெற்று வருகிறது. இன்று மட்டுமல்ல திருமங்கை மன்னவர் காலத்திலும் விழாச் சிறப்பு மிக்க ஊராகவே விளங்கியிருக்கின்றது. அவர் ***''பெருகு சீர்க்கண்ணபுரம்''*** என்கிறார். எப்பொழுதும் இவ்வூரில் விழாக்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும், ஏராளமான வைணவர்கள் வந்து குழுமுவர். இதனை ஆழ்வார் ***''மணம் மலி விழவினொடு அடியவர் அளவிய கணம்''*** என்று கூறுவர். இந்த வைணவர்கள் சதா சுருதியோடு கூடிய அருமறைகளை ஓதியவாறு இருப்பர். நாள்தோறும் தழல் வளர்த்து வாழும் அந்தணர்களும் சாத்திரங்களைக் கற்ற வைதிகர்களும் வாழும் இடம் இது.

திருத்நெடுந்தாண்டகத்தில் திருத்தாயார் பேசுகின்ற பாசுரத்தின் முதல் இரண்டு வரிகள் இவை.

*''கன்று மேய்த்து இனிது உகந்த காளாய்! என்றும்,*
*கடி பொழில் சூழ் கணபுரத்து என் கனியே!''*

இவற்றிற்கு பட்டர் அருளிச் செய்ததொன்றுண்டு. ''கண்ணபிரான் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும் போது அவை கை தவறிப் போகையாலே அவற்றை மடக்கிப் பிடிக்கப் போன விடத்திலே விடாய் தீர விருப்பதொரு சோலையைக் கண்டு திருவாய்ப் பாடியாக நினைத்துப் புகுந்தான்; அப்பொழில் மயல் மிகு பொழிலாகையாலே கால் வாங்க மாட்டிற்றிலன், அது வாயிற்றுத் திருக்கண்ணபுரம்'' என்பாராம்.

மதுவையுடைய இம்மலர்களிலே ஊதித் திரிவதைவிட்டு, திருக்கண்ணபுரத்தில் சந்நிதி பண்ணிக் கொண்டிருக்கும் எம்பெருமானுடைய திருத்துழாய் மாலையிலே உன் சுற்றத்தாருடன் தங்கியிருந்த அங்குள்ள பரிமணத்தை இங்கும் கொணர்ந்து ஊதுவாகில் மிகுதியும் நிலையானதுமான மதுவைப் பருகலாம்'' என்கிறார்.

திருக்கண்ணபுரத்துப் பெருமாளைப் பாடிய நூறு பாசுரங்களுள தானான தன்மையில் பாடியவை ஐந்து பதிகங்கள்; பிராட்டியின் நிலையை ஏற்றுக் கொண்டு வேற்று வாயால் பேசியவை ஐந்து பதிகங்கள். இவற்றுள் தாய் நிலையில் நின்று பேசியவை இ''ண்டு திரு

மொழிகள். திருநெடுத் தாண்டகத்திலுள்ள ஒன்று தாய்ப்பாசுரம்; மற்றொன்று மகள் பாசுரம்.

தலை மகனைப் பிரிந்த தலை மகள் இறங்கிப் பேசுகின்றாள் ***"வரை எடுத்த பெருமானுக்கு இழந்தேன் என் வரி வளையே" "கரி வருவ மருப்பொசித்தாங்கு இழந்தேன் என் செறி வளையே"*** எனப் பெருமாளின் பெருமைகளைப் பேசக் காண்கிறோம். இவ்வாறே தாய் நிலையிலிருந்து கொண்டு தன் மகள் நிலையைப் பேசக் காண்கிறோம். அவள் பெருமாளின் திருத்தோள்களை, திருக்கரங்களை பற்றிப் பேசுவதோடு ***"தாராய தண்துளவ வண்டுழுத வளர மார்பன், போர் ஆனைக் கொம்பு ரசித்த புள்பாகன், பவளவாயன்"*** என்று போற்றுகிறார். இத்தலத்துப் பெருமாள் ***"பேராயிரமுடைய பேராளன்; ஏரார்கள மகர குண்டலநாதன், எண் தோளன்; நீரார் மழைமுகில், நீர் வரை"*** என்று பேசுகிறார்.

கண்ணபுரத்துப் பெருமாள் மீது திருக்கண்ணபுரக் கலம்பகம் ஒன்று டி.எஸ்.இராச கோபாலன் என்பவர் பாடியுள்ளார்.

வடமொழியில் ***"ஸ்ரீ மதஷ்டாட்சர மகா மந்திர சித்தி க்ஷேத்திரம்"*** என்பர். இதனைத் திருவரங்கத்தின் கீழை வீடு என்றும் கூறுவர். ***கண்ணபுரத்துக் கருமணி*** எனக் குலசேகர ஆழ்வார் இப்பெருமாளுக்குத் திருநாமம் சூட்டியுள்ளார்.

நம்மாழ்வார் 'அலை மோதும் மதிள் சூழ் திருக்கண்ணபுரம்' என்று திருவாய் மொழியில் பாடினார். ***"சமுத்திரம் அணித்தாகையாலே திரைகள் வந்து மோதா நின்றுள்ள மதிளாலே சூழப்பட்டிருந்துள்ள திருக்கண்ணபுரத்திலே"*** என விளக்கம் அளிக்கப் பெற்றுள்ளது. ஆனால் இன்று அவ்வாறு காண்பதற்கில்லை. நம்மாழ்வார் அப்படியானால் எவ்வாறு கூறினார். அவர் மட்டும்தானா?

திருமங்கையாழ்வாரும் ***"கலங்கல் முந்நீர்க் கண்ணபுரம்"*** என்று பேசுகிறார். மேலும் அவர்

*"வலம் மறுபடை உடை*
*மணிவளர் நிதிகுவைக்*
*கலம்மனு கண்ணபுரம்"*

என்றும் கூறுவதால் முற்காலத்தில் கடல் இவ்வூருக்கு அருகில் இருந்திருத்தல் கூடும் என்றும் நாளடைவில் அது ஒதுங்கிப் போயிருத்தல் கூடும் என்பதும் உணரலாம்.

இன்று கடல் சுமார் பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நீர் வளமும் நில வளமும் சிறக்க விளங்கும் இத்திருக் கோயில் பஞ்ச கிருஷ்ணத் தலங்களில் ஒன்று. ***கிருஷ்ணாரண்யம்*** எனவும் ***தண்டகாரண்யம்*** எனவும் இத்தலம் வழங்கப்படுகிறது.

இத்திருத்தலத்து மூலவர் பெயர் நீலமேகம். தாயார் பெயர் கண்ணபுரநாயகி. உற்சவருடைய பெயர் சௌரிராஜப் பெருமாள். இத்திருத்தலத்துத் தீர்த்தம் ***நித்ய புஷ்கரணி*** என்பதாகும்.

திருக்கண்ணபுரம் திருக்குளம் 135 மீட்டர் நீளம் அகலம் கொண்டது. சீரான படிக்கட்டுகள், கைப் பிடிச்சுவருடன், நீராழி மண்டபம் கொண்டு விளங்குகிறது. குளக்கரையின் மேலே ஆஞ்சநேயரின் சந்நிதி உள்ளது. இந்த ஆஞ்சநேயர் வரப்பிரசாதி என்று கூறுகின்றனர்.

இராஜகோபுரம் 28.5 மீட்டர் உயரமுடையதாக விளங்குகிறது. நீண்ட மதில்கள் இராஜகோபுரத்தை ஒட்டி அமைந்துள்ளன. கொடி மரம், பலி பீடம் கடந்து, மூலவரைத் தரிசிக்கும் முன் கருடாழ்வார், இராமர், ஆழ்வார்கள் ஆகியோரைத் தரிசிக்கிறோம்.

கருவறை முன் அகலமான மண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபத்தில்தான் எம்பெருமான் உற்சவர் அலங்கரிக்கப் பெற்றுத் தரிசனம் அளிக்கிறார்.

மூலவர் நீலமேகப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கிறார். அபயம் அளிக்கும் திருக்கரத்துக்குப் பதிலாக வரம் அளிக்கும். திருக்கையுடன் காட்சி தருகின்றார். அரங்கநாதனிடம் காணப் பெறுவதைப் போலவே இவர் கையிலும் 'பிரயோக சக்கரம்' காணப்பெறுகின்றது.

## *சௌரிராஜன்*

இப்பெருமானின் திருநாமம் சௌரி என்பது. சௌரி என்னும் இச் சொல்லுக்கு ***'யுகங்கள் தோறும் அவதாரம் எடுப்பவன்'*** என்பது பொருள். இத்திருத்தலம் 75 சதுர் யுகங்களைக் கொண்டது.

இவ்வாறு பொருள் இருப்பினும் சௌரிராஜன் என இம்மாமாயன் பெயர் கொண்ட சுவையான வரலாறு உள்ளது.

இப்பெருமாளைத் திருவாராதனை செய்து வந்த **சிரீதரன் எனும் அர்ச்சகர்** தாம் காதல் கொண்ட கன்னிக்குச் சூட்டிய மாலையையே

பெருமாளுக்கும் சூட்டினார். இரவிலே திடீரெனச் சோழ மன்னர் திருச் சந்நிதி வந்தார். பெருமாளுக்குச் சூட்டிய மாலையை அணிவித்து ஆலய மரியாதை அளித்தார். ஆனால் மன்னருக்கு அணிவித்த மாலையிலோ நீளமான தலைமுடி ஒன்று இருந்ததை மன்னர் கண்டார்.

சிரீதரனை அழைத்து அதைக் காட்டி 'எப்படி வந்தது' என மன்னர் காரணம் கேட்டார். மன்னருக்கு உண்மை தெரிந்தால் உயிர் போய்விடுமே என அஞ்சிய அர்ச்சகர் பெருமாளுக்கு முடி வளர்ந்துள்ளதாகச் சொல்லிச் சமாளிக்கப் பொய் சொன்னார்.

மன்னரும் அப்போது சென்று விட்டுப் பெருமாளுக்குத் தலையில் முடியுள்ளதா எனச் சோதிக்கக் காலையில் வருவதாகச் சொல்லிச் சென்றார். சிரீதரன் இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டு விட்டதை உணர்ந்தார். தவித்தார் என்ன செய்வது என அறியாமல்.

மறுநாள் காலையில் மன்னர் வந்து பெருமாளைச் சோதித்தபோது பெருமாள் தலையில் அர்ச்சகர் கூறியவாறு முடி வளர்ந்து நீண்டிருக்கக் கண்டார்.

அதன் பிறகும் மன்னருக்கு ஐயம் தெளியவில்லை. பெருமாள் திரு உருவில் காணப்படும் முடி உண்மையிலேயே வளர்ந்துள்ளதா? அல்லது ஒட்டி வைக்கப் பெற்றுள்ளதா? எனச் சோதித்து அறிய முடி ஒன்றினை இழுத்த போது அதனின்றும் தெரித்த குருதித் துளிகள் மன்னர் முகத்தில் தெறித்தன. தவறு உணர்ந்து மன்னர் வருந்தினார். அது முதல் கண்ணபுரத்துக் கற்பகம் சௌரிராஜாவானார்.

## மதில்சூழ்த் திருக்கண்ணபுரம்

திருவாய்மொழி ஒன்பதாம் பத்து பத்தாம் திருவாய் மொழியில் உள்ள பாசுரங்கள் 'மதில் சூழ்திருக்கண்ணபுரம்' என்று குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டினோம். இந்த மதில்களால் சௌரிராஜப் பெருமாள் நெற்றியில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் வியப்பாக இருக்கும். சௌரிராஜப் பெருமானின் நெற்றியில் வடு ஒன்று இருப்பதைக் காண்கிறோம். இது எவ்வாறு ஏற்பட்டது?

திருவரங்கத்தைப் போன்று கண்ணபுரத்திலும் திருமதில்கள் இருந்தன எனவும் சோழ மன்னன் ஒருவன் இம்மதில்களை இடித்து கோயில் மதிற்கற்களை அருகிலிருந்த மற்றொரு கோயிலுக்கு எடுத்துச் சென்றான் எனவும் அது கண்டு மனம் வருந்திய பெருமானின்

அடியவரான அரையர் ஒருவர் ''பொருவரை முன் போர் தொலைத்த பொன்னாழி மற்றொரு கை'' என்பது பொய்த்ததோ எனத் தம் கையில் உள்ள தாளத்தைப் பெருமானின் மீது விட்டெறிந்தார் எனவும், அடியவர் மனம் வருந்தியதையே பெரிதாகக் கருதிய பெருமாள் தன் பிரயோகச் சக்கரத்தையேவி அம்மன்னனை அழித்தார் என்றும் கூறப்படுகிறது. அரையர் எறிந்த தாளத்தினால் பெருமானின் நெற்றியில் வடு ஏற்பட்டது. இன்றும் அந்த வடு உள்ளது. அதனால்தான் இத்திருக்கோயிலுக்கு ஒரே ஒரு மதில் மட்டுமே உள்ளது.

இப்பெருமாள் விருத்திரன் எனும் தேவலோகம் அழித்த அரக்கனைக் கொன்று இந்திரனுக்கு மீண்டும் இந்திர போகம் அளித்த பெருமாள் என்றும் கூறுவர்.

### *கவி காளமேகம்*

இக்கண்ணபுரம் பெருமாள் கவிகாள மேகத்தைச் சோதித்த வரலாறு ஒன்று உள்ளது. காள மேகம் வைணவக் குடும்பத்தில் பிறந்து சைவராக மாறி விட்டார். இதனால் பெருமாளுக்கும் கோபம் ஏற்பட்டதாம். ஒரு நாள் மழைநாளில் காள மேகப்புலவர் பெருமாள் திருக்கோயிலினுள் மழைக்காக ஒதுங்கிய போது கோயில் கதவுகளை மூடிப் பெருமாள் காள மேகத்தை உள்ளே விடவில்லை.

உடனே அருள் மாரிப் பொழியும் கவி காளமேகம் கவிதை ஒன்றை இயற்றினார். பெருமாளை நோக்கி

*கண்ணபுரமருவே கடவுளினும் நீயதிகம்*
*உன்னிலுமோ நான் அதிகம் ஒன்று கேள் - முன்னமே*
*உன் பிறப்போ பத்தாம் உயர் சிவனுக் கொன்றுமாம்*
*என் பிறப்போ எண்ணத் தொலையாது*

என்று பாடியதும் கதவுகள் திறந்தனவாம். இப்பெருமாள் மறு பிறவியின்றி வீடு பேறு அளிக்கும் பெருமாள் ஆவார்.

### *நம்மாழ்வார்*

*அணியனாகும் தனதாளடந்தார்க்கெலாம்*
*பிணியும் சாரா பிறவி கெடுத்தாளும்*
*மணி பொனேய்ந்த மதிள் சூழ் திருக்கண்ணபுரம்*
*பணிமின் நாளும் பரமேட்டிதன் பாதமே*

என உரைக்கிறார். எனவே இக்கண்ணபுரத்துப் பெருமாள் பாதம் பணிவோர்க்கும் பிறவி கெடும். பிணியுஞ் சாராது என்று உறுதி கூறுகிறார்.

பத்தாம் திருவாய் மொழி ஒன்பதாம் பத்தின் ஒவ்வொரு பாடலிலும் 'மதிள் சூழ் கண்ணபுரம்' என ஏழு பாடல்களிலே கண்ணபுரத்து மதிளைப் போற்றியவர், மூன்றாம் பாடலிலே ***'வண்டு பாடும் பொழில் சூழ் திருக்கண்ணபுரத் தண்டவாணன்'*** எனவும், ஏழாம் பாசுரத்தில் ***'செய்யில் வாளையுகளுந் திருக்கண்ணபுரத்தையன்'*** எனவும் ஒன்பதாம் பாசுரத்தில் ***'தேதநாவர் விரும்புந் திருக்கண்ணபுரத்தாநியானை'*** என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''இப்படி நோவுபடுகிற இவரை ஈசுவரன் ஸமாஹிதராய் ஹர்ஷராய், 'ஸர்வேசுவரன் ஸர்வஸமாச் ரயிணீயனாய்க் கொண்டு திருக்கண்ணபுரத்திலே ஸந்நிதி பண்ணினான்; அவனை ஆர்சரயுங்கோன பக்தி பண்ணுங்கோன் அவ்வளவே கொண்டு அவன்றான் கைவிடான். ஆன பின்பு எல்லீரு மொக்க அவனை ஆச்ரமியுங்கோன்' என்று பரோபதேசத்தில் ப்ரவர்த்தராகிறார்'' என்று கூறப்பட்டுள்ளது.

## *எட்டெழுத்து*

இத்திருத்தலத்திற்கு ஏராளமான சிறப்புகள் உள்ளன. முக்தியளிக்கும் திருத்தலங்களான திருவேங்கடம், ஸ்ரீ முஷ்ணம், திருவரங்கம், தோத்தாத்ரி, சாளக்கிராமம், பத்ரிகாசிரமம், நைமி சாரண்யம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் எட்டெழுத்து மந்திரத்தின் ஒவ்வோர் எழுத்தாக இயங்கும் பெருமாள் இவ்விடத்தில் திரு எட்டெழுத்தின் முழு வடிவமாக இயங்குகிறார்.

இதனைப் பத்மபுராணத்தில் ஐந்தாம் காண்டம் 110வது இயல் 44, 45, 46 ஆம் ஸ்லோகங்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றன.

*ஸ்ரீ ரங்கம் வேங்கடாத் ரிஞ்ச முஷ்ணம் தோத பர்வம்*
*ஸாளக் கிராம புஷ்கரஞ்ச நரநாராயணச்ரமம்*
*நைமிசம் சேதி மேஸ்தா நா ந்யஷ் டெனமுக்தி பரதாநிவ*
*ரதேஷ் வஷ்டாசஷைர கை வர்ணுமூர்திர், வஸாம்யகம்*
*திஷ்டாமி க்ருஷ்ண சேஷத்ர புண்யஸ்வதக யோகத*
*அஷ்டாச் சரஸ்யை மந்தரஸ்ய சர்வாட்ச்சர மயந்தக்தா*
*தலம், வளம்,நதி, கடல், நகரம், தீர்த்தம், விமானம்*

ஆகியன கொண்ட சப்த ஷேத்திரங்களில்தான் அஷ்டாச்சர மந்திரம் சித்திக்கும் என்கின்றனர். பஞ்ச கிருஷ்ணத் தலங்களில் மூன்றாவது திருத்தலம் இது.

## *மும்மூர்த்தித் தலம் (எங்கும் காணாக் காட்சி)*

திருக்கண்ணபுரத்துப் பெருமாளை வழிபட்டால் மூன்று மூர்த்திகளையும் வழிபட்டபோது கிட்டும் பேறு கிடைக்கிறது என்று கூறுவர். ஏனெனில் இவ்விடத்தில் திருமால் மும்மூர்த்திகளாக அன்பர்களுக்குக் காட்சி அளிக்கிறார் என்பது சிறப்பு. வைகாசி மாத பிரம்மோற்சவத்தில் ஏழாம் நாளில் ''ஸ்திதிகாத்தருளும்'' நிலையில் திருமாலாகவும், இரவு தர்ப்ப நாளங்களால் கட்டப் பெற்றுத் தாமரை மலரின் மேல் சிருஷ்டி நிலையில் பிரம்மாவாகவும், அன்றே அதிகாலையில் மூன்றே முக்கால் மணிநேரமான ஒரு முகூர்த்த வேளையில் வதை செய்யும் ருத்ரனாகவும் அதாவது சிவபெருமானாகவும் காட்சியளிப்பது பெருமாள் கோயில் கொண்ட 108 திவ்ய தேசங்களில் எங்குமே காணவியலாது. கண்ணன் அவதாரத் தலங்கள் எனப்படும் பதினெட்டுத் திருத்தலங்களிலும் காண இயலாத ஒன்று.

## *நடையழகு*

''நீ கிடந்த அழகைத் திருவரங்கத்திலே கண்டேன். நின் நடையழகையும் காணவேண்டும்'' என்று விபீடணாழ்வார் கேட்க, ''கண்ணபுரத்தில் காட்டுவோம் வா''வென்ன அவருக்கு நடையழகு காட்டியதாகக் கூறப்படுகிறது. இதன் எதிரொலியாய் ஒவ்வோர் அமாவாசைப் போதிலும் உச்சிப் பொழுதில் உற்சவர் சௌரிராஜன் நடையழகு காட்டும் காட்சியைக் காணக் கொடுத்து வைக்க வேண்டும். இதனைக் **கைத்தலச் சேவை** என்பர். அரையர்கள் அசைத்துக் காட்டத் திருக்கண்ணபுரத்தில் மட்டும்தான், விபீடணனுக்கு மட்டுமல்லாது நமக்கும் அந்த நாரயணன் நடையழகு காட்டுகிறான்.

பெருமாள், தாயார் சந்நிதிகளை இணைப்பது பக்தி உலா மண்டபம். கண்ணபுர நாயகி அமர்ந்த திருக்கோலத்தவராய் அங்கு அருள் பாலிக்கிறாள். வெள்ளிக்கிழமை தோறும் தாயார் திருவீதி எழுந்தருளுவது நடைபெறுகிறது.

### கருடன் முக்தி

இத்திருத்தலத்தில் கருடன் மோட்சம் பெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. இத்தலத்திற்கு எதிரில் 32 கிலோ மீட்டர் அதாவது பழைய காலக் கணக்குப்படி 20 மைல் தொலைவில், (இரண்டு யோஜனை) மலை ஒன்று கடலுள் அமிழ்ந்துள்ளது. கருடனின் வடிவங் கொண்ட இம்மலை கருட மலை என அழைக்கப் பெறுகிறது. முன் பொருகால் இந்திரன் தனது வஜ்ராயுதத்தால மலைகளின் இறக்கைகளை வெட்ட இம்மலை மட்டும் கடலினுள் மூழ்கி இந்திரன் கண்களில் படாமல் தப்பித்து விட்டதாம். இதனால் ஆணவமடைந்த கருடன் ஆணவத்தோடு இங்குமங்கும் பறக்க, இத்தலத்தின் விமானத்தின் மீது பறக்க இத்தலத்துப் பாலகர்கள் இவன் நிழல் பற்றியிழுக்கக் கீழே விழுந்த கருடன் தன் தவறு உணர்ந்து கருட பர்வதத்தின் மீதமர்ந்து கண்ணபுரப் பெருமாளை வேண்டிக் கடுந்தவமியற்றி மோட்சம் பெற்றான் என்று கூறுவர்.

### கண்ணில் படா விமானம்

இத்திருத்தலத்து விமானம் **உத்பாலவதாக விமானம்** ஆகும். இவ்விமானத்திற்கும் ஒரு சிறப்பு உள்ளது. நாம் திருக்கோயிலை வலம் வருகையில் மற்றையத் திருத்தலங்களிளெல்லாம் விமான தரிசனம் என்று விமானத்தைத் தரிசித்து வருவோம். ஆனால் இத்திருக்கோயிலில் வலம் வருகையில் விமானம் நம் கண்ணில்படுவதில்லை.

### நான்கு தாயார்கள்

இத்தலத்து உற்சவர் நான்கு தாயார்களுடன் விளங்குகிறார். ஸ்ரீ தேவி, பூதேவி, ஆண்டாள், பதுமினி என்னும் மீனவப் பெண்மணி ஆகிய நால்வர். இந்தப் பதுமினி யார்?

வசு என்ற மன்னன் (உபரிசரவசு என்பது பெயர்) விசுவகர்மாவைக் கொண்டு திருக்கண்ணபுரம் கோயிலைக் கட்டுவித்தான். அவனுக்கு மகப்பேறு வாய்த்திடவில்லை. எனவே பரிவேள்வி நிகழ்த்தினான். இதனால் யாககுண்டலியிருந்து ஒரு புருஷன் தோன்றினான். அவன் இரண்டு மலர்களை வசுவிடம் அளித்தான். அவன் அளித்த செங்கழுநீர் மலர்களை முகந்த வசுவின் மனைவி சுந்தரி அழகிய பெண் மகவைப் பெற்றுப் பத்மினி (பதுமினி)

என்று பெயரிட்டழைக்க அப்பெண் சௌரிராஜனையே தான் மணவாளனாகக் கைப்பிடிக்க வேண்டுமென்று தவமியற்றிப் பெருமாளை வேண்டப் பெருமாளும் அவ்வாறே தம் நெஞ்சினில் பதுமினியைக் கொண்டார் எனப் பத்ம புராணம் கூறுகிறது.

### *மீனவர்*

இந்தப் பதுமினி வலையர் குலத்துப் பெண்மணி எனவும் நம்புகின்றனர். மாசி மகத்தன்று பௌர்ணமி நாளில் இப்பெருமாள் திருமலைராயன் பட்டினத்திற்குக் கடல் காணச் செல்வார். அப்போது கடற்கரையில் மீனவர்கள் அமைக்கும் சப்பரத்தில் கருட வாகனத்தில் எழுந்தருளுவார். இறைவனுக்கு ஏது இன வேறுபாடு? குலவேறுபாடு?

### *தீர்த்தச்சிறப்பு*

திருக்கோயில் முன் அமைந்துள்ள திருக்குளம் குறிப்பிட்டுக் கூறத்தக்கதாக இத்திருக்கோயிலின் முன் அமைந்து எழில் சேர்க்கிறது. கோயில் அழகு என்று கூறுவது போலக் குளம் அழகு என இத்திருக்கோயில் திருக் குளத்தினையும் குறிப்பிடலாம்.

இத்திருக்குளமும் புராணச் சிறப்புக் கொண்டு விளங்குகிறது. திருநெல்வேலித் தாமிரபரணிக்கும் இத்திருக்குளத்திற்கும் மட்டுமல்லாது, பாண்டியர் சோழர் தொடர்புக்கும் இத்திருக்குளம் சான்று பகர்கிறது.

பாண்டிய மன்னன் சித்த சரவசு என்பவன் மணலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்றும், அவன் தன் மகள் உத்தமை என்பவளுடன் தாமிரபரணியில் நீராட இறங்கும் போது வெள்ளம் பெருக்கெடுத்திட வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பெற்றுக் காணாமல் போய்விட்டனர். மனைவி, மக்கள், அமைச்சர்கள் திகைத்து நிற்கப் பாண்டியனின் அவைக்கு வருகை புரிந்த லோக சஞ்சாரியான அகத்தியரின் சீடர், அமைச்சர்களை நோக்கி, மன்னனும் அவன் மகள் உத்தமையும் பிரம்மலோகத்தில் இருக்கிறார்களென்று பின்வரும் நிகழ்வைச் சொன்னார்.

**கங்கை முதலான சகல தீர்த்தங்களும் தம்மிடம் பல வகைப்பட்ட மக்களும் நீராடித் தம் புண்ணியங் குறைந்து பாவம் பெருக்கெடுத்துவிட்டதெனவும் இம் மாசினைப் போக்க யாதேனும்**

வழி கூறுமென்று பிரம்மாவைக் கேட்டன. சகல பாவங்களையும் போக்கும் பெருமாள் எழுந்தருளியுள்ள கண்ணபுரத்தில் உள்ள, நித்யபுஷ்கரணியில் நீராடிக், கண்ண பெருமானைத் துதித்தால் எல்லாப் பாவங்களும் தீருமென்று பிரம்மா உரைத்தார். சகல தீர்த்தங்களும் இப்புஷ்கரணியில் புகுந்தன. அப்போது பொருனை நதியான தாமிரபரணியும் இந்தப் புஷ்கரணியில் புகுந்தது. அதனால் பூலோகத்தை அடைந்த பாண்டியனும் அவள் மகளும் இப்பெருமானை வழிபாடு செய்து நின்றனர். இவ்வரலாறு உணர்த்த சோழன், பாண்டியனை எதிர் கொண்டழைத்துத் தன் விருந்தினராய் ஏற்றார். இறுதியில் பாண்டியன் மகள் உத்தமையைத் தன் மகன் கசாங்கனுக்குத் திருமணம் செய்து வைத்ததாகக் கூறுவர்.

## *முனையதரன் பொங்கல்*

திருக்கண்ணபுரம் என்றவுடன் பெருமாள் நினைவுக்கு வருவது போல் திருக்கண்ணபுரத்துச் சிறப்புப் பிரசாதம் ***'முனையதரன் பொங்கல்'*** நினைவுக்கு வரும். இந்த முனையதரன் பொங்கலுக்குத் தனி வரலாறும், தனிச் சுவையும் உண்டு. இம்மாதிரிச் சுவையான பொங்கலை வேறு எங்கும் சாப்பிடமுடியாது.

சோழ மண்டலச் சதகம் என்னும் நூலின் 42 ஆவது பாடல் இந்த முனையதனரயன் பொங்கல் என்பது பற்றிக் கூறுகிறது.

*புனையும் குழலாள் பரிந்தளித்த*
*பொங்கல் அமுதும் பொறிக்கறியும்*
*அனைய சவுரிராசருக்கே*
*ஆம் என்று அமுத்தும் ஆதரவின்*
*முனையதரையன் பொங்கல் என்று*
*முகுந்தற்கு ஏறமுது கீர்த்தி*
*வளையும் பெருமை எப்போதும்*
*வழங்கும் சோழ மண்டலமே*

**திருக்கண்ணபுரத்தில்** வாழ்ந்த முனையதரையர் என்பவர் **பெருமாள் திருப்பணிகளைச் செய்து வந்தார். அவர் பெருமாளுக்குத் திருவாராதனம் செய்யாமல் ஒரு நாளும் உண்பதில்லை. அவ்வாறு இருக்கையில் அங்கும் பஞ்சம் ஏற்பட்டுத் திருவாராதனை செய்யக் கூட இயலாத நிலை ஏற்பட்டது. அவ்வாறிருக்கையில் வீட்டில் இருந்த பொங்கலை அவருடைய மனைவி இறைவனுக்கு மானசீகமாகப் படைத்து வழிபட்டாள். மறுநாள் திருக்கோயில் திறக்கையில்**

பொங்கல் மணம் வீசி முனையதரையர் வீடு வரை சிதறிக் கிடப்பதைக் கண்டனர். அடியார் பொருட்டு அப்பொங்கலைப் பெருமாள் ஏற்றுக் கொண்டதால் இன்றும் அர்த்த சாமத்தில் இப்பெருமானுக்குப் பொங்கல் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

*'பாலும் அரிசியும் பசும்பயறும்*
*பாகமாகவே விரவி*
*ஏலம் இழுதும் சருக்கரையும்*
*இட்டு உண்போதில் அன்னான்*
*சால மதுரம் என்ன அவை*
*சௌரிராஜனுக்கே தகும் என்றார்*
*பெருமாள் மேனி யெங்கும்*
*அப்பாகமே சிதறக்கண்டார்.*

இப்பொங்கல் இரண்டாங் கால நிவேதனமாக இரவு ஒன்பது மணிக்கு மேல் படைக்கப்படுவது. முன்னதாகச் சொல்லி வைத்து எவரும் பெறலாம். பழைய கால அளவு மாறாமல் கூட்டாமல் குறைக்காமல் இன்றும் தவறாமல் தினமும் படைத்து வருகின்றனர். அரிசி ஐந்து பங்கு, பாசிப்பயறு முழுப்பயறு ஐந்து பங்கு, இரண்டு பங்கு வெண்ணெய் உருக்கிய நெய் கலந்து உப்பிட்டுச் செய்யப்படும். இதில் மிளகு, சீரகம் என்று எதுவும் சேர்ப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இரவு நேரத்தில் சுடச் சுட அப்பிரசாதம் கிடைத்து உண்பது ஒரு தனிச் சுவையான அனுபவம்.

நம்மாழ்வாரின் இந்தப் பாசுரங்களை ஓதி வழிபடுவோம்.

*மாலை நண்ணித் தொழுமினோ வினை கெடக்*
*காலை மாலை கமலமரிட்டு நீர்*
*வேலைமோ தும்மதில் சூழ்திருக்கணபுரத்து*
*ஆலின்மே லல்மார்ந் தானடி யிணைகளே.*

*கள்ளவி ழும்மல ரிட்டுநீ ரிறைஞ்சுமின்*
*றள்ளிசே ரும்வயல் சூழ்கிடங் கின்புடை*
*வெள்ளியேய்ந் தமதில சூழ் திருக்கணபுரம்*
*உள்ளி நாளுந்தொழு தெழுமினோ தொண்டரே!*

*தொண்டர்! நுந் தந்துயர் போக நீ ரேகமாய்*
*விண்டுவா டாமல ரிட்டுநீ ரிறைஞ்சுமின்*
*வண்டுபா டும்பொழில் சூழ்திருக் கணபுரத்*
*தண்டவாணன் அமரர் பெருமானையே.*

மானை நோக் கிமடப் பிள்ளை தன் கேள் வனை
தேனைவா டாமலரிட்டு நீ ரிறைஞ்சுமின்
வானையுந் தும்மதில் சூழ்திருக்கணபுரம்
தான் நயந்த பெருமான் சரணாகுமே

சரணமாகுந்தன தாளடைந் தார்க் கெல்லாம்
மரணமா னால் வைகுந் தங்கொடுக் கும்பிரான்
அரணமைந் தமதில் சூழ்திருக் கணபுரத்
தரணியா ளன் தனதன்பர்க்கு அன்பாகுமே

அன்பனா குந்தன தாளடைந் தார்க்கெலாம்
செம்பொனா கத்தவு ணனுடல் கீண்டவன்
நன் பொறேய்ந் தமதிள் சூழ்திருக் கண்ணபுரத்
தன்பன் நாளுந்தன் மெய்யர்க்கு மெய்யனே

மெய்யனா கும்விரும் பித்தொழு வார்க்கெல்லாம்
பொய்யனா கும்புற மேதொழு வார்க்கெல்லாம்
செய்யில்வா ளையுக ளுந்திருக் கண்ணபுரத்
தையன் ஆ கத்தணைப் பார்கட் கணியனே

அணியனா குந்தன தாளடைந் தார்க்கெலாம்
பிணியுஞ்சா ராபிற விகெடுத் தாளும்
மணி பொனேய்ந் தமதிள் சூழ்திருக் கணபுரம்
பணிமின் நாளும்பர மேட்டிதன் பாதமே

பாதநாளும் பணியத் தணியும் பிணி
ஏதஞ்சா ராவெனக் கேலினி யென்குறை?
வேதநா வர்விரும் புந்திருக் கணபுரத்
தாதியா னை அடைந்த தார்க்கல்ல லில்லையே.

இல்லையல் லலெனக் கேலினி யென்குறை?
அல்லிமா தரம ருந்திரு மார்பினன்
கல்லிலேய்ந் தமதில் சூழ்திருக் கண்ணபுரம்
சொல்ல நாளுந் துயர் பாடுசா ராவே

பாருசா ராவினை பற்றற வேண்டுவீர்
மாடநீ டுகுரு கூர்ச்சட கோபன் சொல்
பாடலான தமிழாயிரத் துளிப் பத்தும்
பாடியாடிப் பணி மின்னவன்தாள்களே

பன்னிரெண்டு

# 12. திருக்கவித்தலம்

## கயேந்திரவரதன்

திருக்கவித்தலம் பஞ்ச கிருஷ்ணாரண்யத் தலங்களுள் ஒன்று. ஆனால் மிகவும் சிறிய ஒரே ஒரு திருச்சுற்றுடன் அமைந்துள்ள திருத்தலம். மற்ற நான்கு திருத்தலங்களைப் போலப் பெருமைகள், உயர்ந்த கோபுரங்கள் இல்லாமல் ஒரு கிராமப்புறத் தேவதை கோயில் போதிய பராமரிப்பு இன்றி இருந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது?

இத் திருக்கோயிலைக் காணக் கற்பனைகளுடன் சென்றால் ஏமாற்றமே மிஞ்சும். பஞ்ச கிருஷ்ணத் தலங்களில் ஒன்றைக் காணவேண்டும் என்னும் ஆவல் நிறைவேறுகிறது எனும் எண்ணத்துடனேயே செல்ல வேண்டும். கோவில் பட்டாச்சாரியார் எந்நேரமும் இருக்க மாட்டார். கோவிலைப் பார்த்தவுடன் இதுவா அத்துணைப் பெருமை பெற்றது? என வருந்தாமல் இருக்க வியலாது. இக்கோவில் தமிழக அரசியல் இயக்கத் தலைவரின் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருப்பது என்று கேள்வியுறும்போது இன்னும் வியக்கிறோம். அவ்வூரார்க்கேனும் இத்தலப் பெருமை தெரிந்துள்ளதா எனவும் ஐயுறவேண்டியுள்ளது.

*கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா, தீ*
*மாற்றமும் சாராவை கயறிந்தேன். ஆற்றங்*
*கரை கிடக்கும் கண்ணன் கடல் கிடக்கும், மாயன்*

என்றுரைத்த அந்த மாயவனைக் காணச் செல்லும் நாம் ஏமாற்றத்தின் விளிம்பிற்குச் சென்று விடுகிறோம்.

கவித்தலத்தில் பள்ளி கொண்ட இறைவனை **'ஆற்றங்கரைக் கிடக்கும் கண்ணன்'** என்று திருமழிசை ஆழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

திருக்கவித்தலம் தஞ்சை-பாபநாசம் தொடர் வண்டி நிலையத்திலிருந்து இரண்டுகல் தொலைவில் உள்ளது. கும்பகோணம். திருவையாறு பேருந்து செல்லும் வழியில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து நேரடியாகப் பேருந்துகள் கவித்தலம் செல்கின்றன. கவித்தலம் ஊர்க்கடை வீதிக்கு முந்தைய நிறுத்தத்தில் இறங்க வேண்டும். இறங்கி மேற்கு நோக்கிச் சிறிது தூரம் செல்லவேண்டும்.

அல்லது கடை வீதியில் இறங்கியவுடன் வடக்கு நோக்க மீண்டும் ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தொலைவு நடந்து ஒரு சிறிய பாதை வழியாகச் சென்றால் வீடுகளுக்கு மையத்தில் இத்திருக் கோயிலைக் காணலாம்.

கவியாகிய குரங்கிற்குக் கிடந்த கோல சேவை கிடைக்கப்பெற்றதால் கவித்தலம் ஆயிற்று. வடமொழியில் இதனைக் கபிஸ்தலம் என்று கூறுவர்.

108 திவ்ய தேசங்களில் யானை, குரங்கு ஆகிய இரண்டு விலங்கினங்களுக்கு எம்பெருமாள் காட்சி கொடுத்தது இந்த ஒரு திருத்தலத்தில்தான்.

## *மூலவர்*

மூலவருடைய திருநாமம் கஜேந்திர வரதன் என்பது புஜங்க சயனம் எனப் பெறும் கிழக்கே நோக்கிய முகத்துடன் கிடந்த கோலத்துடன் காண்கிறோம். இத்திருத்தலத்துப் பெருமாள் ஆஞ்சநேயருக்கும், கஜேந்திரனுக்கும் பிரத் யட்சம் ஆனவர்! ***'விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய் வெள்ளெயிறுறவதன் விடத்தினுக் கனுங்கி அழுங்கிய ஆனையினருந்துயர் கெடுத்த'*** பெருமாள் அவர். யானைக்கும் பெருமாள் அருளிய நிகழ்ச்சியைத் தொண்டரடிப் பொடியாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

## *தாயார்*

**இத்திருத்தலத்துத் தாயார் *ரமாமணவல்லி*** எனப் பெயர் பெற்ற ***பொற்றாமரையாள்***. **இத்திருக் கோயில் கருவறை விமானத்திற்கு கக நாக்ருதி விமானம் என்று வழங்குகிறது.** யானை பறித்துப் பூஜை செய்த **தாமரையை மறவாமல்பொற்றாமரையார் எனும் பெயருடையவராய் தாயார் விளங்கும் திருத்தம் இது. விஷ்ணு** புராணம் **இத்தலத்தைப் பற்றிக் கூறும் வரலாறு இது.**

முன்பு ஒரு பால் இந்திராஜும்னன் என்னும் மன்னன் மிகச் சிறந்த திருமால்பக்தனாக இருந்தான். திருமால் பக்தியில் ஈடுபட்டு அவன் பூசையில் ஒன்றியிருக்கும் போது இவ்வுலகம் மறந்த நிலையில் இருப்பான். அது போழ்து தம்மைக் காண்பதற்கு யார்வரினும் அவரைக் காண்பது மில்லை. அவர்களை ஒரு பொருட்டாகக் கருதுவதுமில்லை. இவ்விதம் பக்தியில் ஆழ்ந்திருந்த வேளையில் துர்வாச முனிவர் அவரைக் காண வந்தார். வெகு நாழிகை கழிந்தும் இந்திராஜும்னன் தனது பக்திக் குடிலைவிட்டு வெளிவந்த பாடில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த துர்வாசர் இறுதியில் குடிலுக்குள் நுழைந்து அம்மன்னன் முன்னிலையில் போய் நின்ற போது சற்றும் கண்திறந்து பாராது பக்தியிலேயே ஆழ்ந்திருந்தான். இதனால் சினங் கொண்ட முனிவர் உரத்த குரலில் மதம் பிடித்த யானையாகும்படி சாபமிட்டார்.

மன்னன் நிலைமையுணர்ந்து தன் தவறறிந்து மன்னிப்பும் சாப விமோசனமும் வேண்டினான். சினந்தணிந்த முனிவர்' யானையான போதிலும் திருமால் மீது பக்தி கொண்ட கஜேந்திரனாகத் திகழ்வாய் - ஒரு முதலை உன் காலைக் கவ்வித் திருமாலைக் கூவி அழைக்க மோட்சமும், சாப விமோசமும் உண்டாகு மென்றார்.

கூஹூ என்னும் அரக்கன் தண்ணீரில் மூழ்கிக் குளிப்போரின் காலைப்பிடித்து இழுத்துத் துன்புறுத்துதலைச் செய்து வந்தான். ஒரு நாள் அகத்தியர் குளித்துக் கொண்டிருக்கும் போது அவருடைய காலைக் கவ்விவினான். சினம் கொண்ட அகத்தியர் முதலையாகும்படி சபித்தார். அவன் சாப விமோசனம் வேண்டினான். 'கஜேந்திரன் என்னும் யானையின் காலைக் கவ்வும் காலம் வருகையில் திருமாலின் சக்ராயுதம் பட்டுச் சாப விமோசனம் உண்டாகுமென்றார்' முனிவர்.

திருக்கோயிலுக்குச் செல்லும் வழியில் திருக்குளம் ஒன்றுள்ளது. இதனைக் கபில தீர்த்தம் என்பர். இத்திருக்குளத்தில் இறங்கி கஜேந்திரனை, முதலை கவ்வ, யானை பிளிறக் கருட வாகனத்தில் வந்த திருமால் தம் சக்ராயுதத்தால் முதலையைக் கொன்று யானைக்கு மோட்சமளித்தார் எனக் கூறுவர். ஆனால் இத்திருக்குளம் செப்பனிடப் பெற்றுப் பழுது பார்க்க வேண்டிய ஒன்று. மீண்டும் சிறப்புப் பெறவேண்டும்.

பதிமூன்று

# திருக்கோவலூர்

## திரிவிக்கிரமன் உலகளந்த உத்தமன்

திருக்கோபாலனூர் எனப்படும் திருக்கோவலூர் தென் பெண்ணையாற்றங் கரையில் உள்ள திருத்தலம் ஆகும்.

*நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்*
*பாயும் பணிமறைத்த பண்பாளா - வாயில்*
*கடைகழியா வுள்புகா காமர் பூங்கோவல்*
*இடைகழியே பற்றியினி*

எனப் பொய்கை யாழ்வார் மங்களா சாசனம் செய்த திருத்தலம் ஆகும். விழுப்புரம்-காட்பாடி புகைவண்டிப் பாதையில் திருக்கோவலூர் புகை வண்டி நிலையம் உள்ளது. திருச்சியிலிருந்து வேலூர் வரும் பேருந்துகள் திருக்கோவலூர் வழியாகச் செல்கின்றன. கடலூரிலிருந்து பேருந்துகள் இவ்வூருக்குச் செல்கின்றன. திருக்கோவலூர் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து திருக்கோவலூருக்குப் பேருந்துகள் செல்கின்றன.

ஆடு, மாடுகளை மேய்க்கும் மேய்ப்பனாகிய ஆயராகிய நாராயணன் இங்கே அருள் பாலிக்கிறார். என்றும், பரமார்த்த தத்துவத்தை உலகிற்கு இத்தலம் விளக்கும் காரணத்தால் திருக் கோவலூர் எனும் சிறப்புப் பெயர் அமைத்தது. நடுநாட்டின் முதலாவது தலமாகையாலும் விண்ணுலகிற்கும், பாதாள லோகத்திற்கும் நடுவில் நின்றமையாலும் ***நடுநாட்டான்*** எனும் பெயர் வந்தது என்பர்.

திருக்கோவலூர் சங்க காலம் முதலே சிறப்புப் பெற்ற திருத்தலம் ஆகும். தீர்த்த யாத்திரைக்கு வந்த அருச்சுனன், தென் பெண்ணை ஆற்றில் நீராடிவிட்டுத் திருக்கோவலூர் திரிவிக்ரமப் பெருமாளை வழிபட்டதாக வில்லிபுத்தூராரின் வில்லி பாரதம் கூறுகிறது.

கடையேழு வள்ளல்களில் ஒருவரான மலையமான் திருமுடிக்காரி ஆண்ட ஊர் இது. அகப்பாடல்களில் திருக்கோவலூர், பெண்ணையாறு பற்றிய குறிப்புகள் உள்ளன. குறுந்தொகை மலையமானுக்குச் சொந்தமான பகுதி இவ்வூருக்கு அருகில் இருந்ததாகவும், அதற்கு 'முள்ளூர்க் கானம்' எனக் கூறுகிறது. மலையமான் முள்ளூர்ப் பொருநன் எனும் பெயரையும் பெற்றிருந்தான். அதியமான் நெடுமானஞ்சி திருக்கோவலூரைப் போரில் வென்றதைப் புறநானூறு கூறுகின்றது.

பாரி மகளிர் சங்கவை, அங்கவை ஆகியவர்களை அவன் மறைவிற்கு பின் கபிலர் தம் முயற்சியால் தெய்வீகன் என்பவன் மணந்து ஆண்ட ஊர். இத்தெய்வீகனின் மரபினில் தோன்றியவர்கள் மெய்ப்பொருள் நாயனார், நரசிங்க முனையரையர்கள் ஆவர்.

பாரி மகளிர் இருவரின் திருமணமும் முடிந்த பிறகு கபிலர் இத்திருக்கோவலூரில் பாறை ஒன்றின் மீது தீ வளர்த்து அதில் விழுந்து முக்தி பெற்ற கல் கபிலக்கல் எனப்படுகிறது.

பழையனூர் நீலி வரலாற்றில், பழி வாங்கும் வஞ்சக நோக்குடன் செட்டியைத் தொடர்ந்து வந்த பழையனூர் நீலிப் பேயின் போலிக் கண்ணீரை நம்பி ஏமாந்து அநீதி வழங்கிய குற்றத்தின் பொருட்டு வேளிர் 49 பேரும் தீ வளர்த்து மாய்ந்து தம் உயிர் நீத்துக் கொண்ட தலம் இது.

அவ்வைப் பெருமாட்டி தன்னை ஆதரித்த ஆயர் குலப் பெண்கள் மூவருக்கும் மூவேந்தர் முன்பு மணம் நடத்தியதாகவும் வரலாறு உள்ளது.

பஞ்ச கிருஷ்ணாரண்யத் திருத்தலங்களில் இதுவும் ஒன்று. கிருஷ்ண பிரான் நித்திய சாந்நித்யம் செய்தருளும் திருத்தலம் இது.

திருமங்கை யாழ்வார் 18 பாசுரங்களாலும், பொய்கை யாழ்வார் இரண்டு பாசுரங்களாலும், பூதத் தாழ்வார் ஒரு பாசுரத்தாலும் ஆக 21 பாசுரங்களாலும் மங்களா சாசனம் செய்துள்ளனர். மணவாள மாமுனிகளும் மங்களா சாசனம் செய்துள்ளார். முதன் முதலில் ஆழ்வார்களால் பாடப் பெற்ற திருத்தலம் இது.

பத்ம புராணம், பிரம்மாண்ட புராணம் ஆகியன இத்தலம் பற்றி விவரித்துப் பேசுகின்றன. எம்பெருமான் தமது வாமன அவதாரத்தை தம்மை வேண்டித் தவமிருந்த முனிவர்கட்காக மீண்டும் ஒருமுறை

காட்டிக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. வாமன திருவிக்ரம அவதாரத் தலம் என்று இது அழைக்கப் பெறுகிறது.

''மூன்று ஆழ்வார்களாகிய கரும்பாலையில் மூன்று உருளைகள் கரும்பைப் பிழிவதைப் போல, தீங்கரும்பான எம்பெருமானை நெருக்கி அவருடைய திருக்குணங்களாகிய ரசத்தைப் பருகுகிறார்கள்'' என ஆழ்வார் அனுபவித்ததைத் தேசிகர் வர்ணித்தார்.

வடமொழி நூல்கள் இத்திருத்தலத்தைக் கிருஷ்ணன் கோவில் என்றே குறிப்பிடுகின்றன. ***தட்சிண பினாகினி*** எனப்படும் தென் பெண்ணையாற்றங் கரையில் கோபாலன் எழுந்தருளிய இத் தலம் தொன்மையானது. பெருமாள் வாமன அவதாரம் எடுக்கும் முன்பே ***கிருஷ்ணன் கோவில்*** என்று முதன்மையாக வழங்கப்பெற்றது.

மகாராணிகளும், நாரதரும், கின்னரர்களும் இந்தக் கிருஷ்ண க்ஷேத்திரத்தில் தவமியற்றினரென்றும் தானும் இந்தத் திருத்தலத்தில் தவமியற்றியதாகக் கூறிய பிரம்மனும், மார்க்கண்டேயரின் தந்தையான மிருகண்டு முனிவர் எம்பெருமானின் வாமன அவதாரத்தைக் காண விரும்பித் தவமியற்றிய தலம் இதுதான் எனப் பத்மபுராணம் கூறுகிறது.

மிருகண்டு முனிவரின் வேண்டுகோளை ஏற்றுப் பரந்தாமன் திருவிக்கிரம அவதாரம் எடுத்த வரலாறு இது.

மாபலி மன்னன் தேவர்களைத் துன்புறுத்தி அவர்கட்குத் தொல்லை அளித்து வந்தான். அசுரர்களின் குருவான சுக்கிர பகவான் மாபலிக்குக் குருவாக விளங்கினார். மகப்பேறில்லாத ரிஷி தம்பதியரான கசியபர், அதிதி ஆகிய இருவரும் மகப்பேறு வேண்டித் திருமாலை நோக்கிப் புத்திர காமேஷ்டி யாகம் செய்து வந்தனர்.

மாபலியிடமிருந்து தங்களைக் காத்தருள வேண்டித் தேவர்கள் துதித்தனர். அவர்களுக்கு மகவாக அவதரித்து வாமன மூர்த்தியாக வளர்ந்து பிரமச்சர்யத்தை மேற்கொண்டார்.

பிரம்மச்சர்யம் மேற் கொண்டதும் பூமி தானம் பெறுவதற்காக மாபலி மன்னரிடம் வாமனர் வந்தார். மாபலி வாமனரை ஏளனத்துடன் வேண்டுவன கேட்கச் சொல்ல மூன்றடி மண் கேட்டார் குறுமுனி வடிவப் பெருமாள். மாபலியும் அதற்கு உடன்பட்டார்.

வந்திருக்கும் வாமனன் பெருமாளே என சுக்கிராச்சாரியர் உண்மையினை எடுத்துக் கூறித் தானம் அளிப்பதால் அவனுக்குத் தீமை ஏற்படும் என எடுத்துக் கூறிய போதும் கொடுத்த வாக்கை மறவாத குணம் படைத்த மாபலி தாரை வார்த்துக் கொடுக்க ஆயத்தமானான் சுக்கிரர் தடுக்க மேற்கொண்ட முயற்சியில் கண் ஒன்றை இழந்தார்.

மாவலி நீர் வார்த்துக் கொடுக்கத் தன் ஓரடியால் இந்த நிலவுலகு முழுவதையும் அளந்து மற்றோர் அடியினை விண்ணுயரத் தூக்கி விண்ணுலகம் முழுமையும் அளந்து, திருவிக்கிரம அவதாரியாய் மூன்றாவது அடிக்கு இடம் எங்கே? என்று கேட்டு நின்றார்.

வாமனனாய் வந்தவர் நெடிதுயர்ந்து திருவிக்ரம அவதாரங் காட்டி நிற்பதைக் கண்ட மாவலி மனம் பதைத்துத் தன் நிலையுணர்ந்து மன்னிப்பு வேண்டி மூன்றாவது அடியினைத் தன் தலையில் வைக்கச் செய்தான். மாவலியால் விண்ணுலகை நோக்கிய திருவடி பிரம்மனின் சத்திய லோகம் வரை சென்றது. பிரம்மன் அரிதான எம்பெருமானின் திருவடிப்பேறு கிட்டியதை எண்ணிக் கமண்டல நீரால் பாத பூஜை செய்ய அதனின்று தெறித்த நீர்த்துளிகளே கங்கையாகப் பெருகிய தென்பர்.

இவ்வாறு ஒரே நேரத்தில் வாமன, திருவிக்ரம அவதாரம் எடுத்த திருக்கோலம் குறித்து அறிந்த மிருகண்டு முனிவர் தாமும் இவ்விரு திருக்கோலங்களையும் ஒரு சேரக் காணப் பெருமாளின் திருவுள்ளம் சித்திக்க வேண்டிக் கடும் தவம் மேற்கொண்டார்.

திருவிக்கிரமத் திருக்கோலத்தைக் காண வேண்டுமாயின் கிருஷ்ணா பத்திரா நதிக்கரையில் கிருஷ்ண க்ஷேத்திரத்தில் கிருஷ்ணன் என்றும் பெயரில் பகவான் கோயில் கொண்டுள்ள இடமே தவம் செய்ய உகந்த இடம் எனப் பிரம்மன் வழி காட்டினார்.

அவ்வாறே கடும் தவம் இருந்தார். அப்போது தானம் செய்யக் கூட அன்னம் இல்லாத நிலைமையிருக்க ஒரு வயோதிக வடிவெடுத்து அன்னம் கேட்டு சோதித்தார். முனிவர் தன் மனைவியிடம் வந்த வயோதிகருக்கு அன்னம் அளிக்க ஏதாவது செய்ய வேண்டினார். கற்பிற் சிறந்த அப்பெண்மணி நாராயணனை நினைத்துப் பாத்திரத்தைக் கையிலெடுக்க அதில் அன்னம் நிரம்பி வழிந்தது.

அதை எடுத்துக் கொண்டு வரப் பகவான் சங்கு சக்ரதாரியாய் நின்றார். பணிந்த முனிவர் திருவிக்ரம அவதாரத்தைத் தமக்குக்

காட்டியருள வேண்டுமென வேண்டினார். அவ்வண்ணமே திருமால் அருள் பாலித்த திருத்தலம் இத்திருத்தலமான திருக் கோவலூராகும்.

மூன்று உலகங்களாலும் புகழ் பெற்றதாக விளங்குகிறது இத்தலம்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதல் தோற்றமே இத்தலத்தில்தான் ஆரம்பம் ஆகியது. முதல் மூன்று ஆழ்வார்கள் தமக்குள் சங்கமம் ஆகிய பின்பு - பரமாத்மாவின் பேரருளில் திளைத்து உலக மனித குலம் தழைக்க வைணவக் கோட்பாடுகளுக்கு வித்திட்ட திருத்தலம் இது.

## *மூவர் சந்திப்பு*

பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் திருக் கோவலூரில்தான் சந்தித்தார்கள். மூவரும் தனித்தனியே சென்று திருக் கோவலூரில் உள்ள திரிவிக்ரமப் பெருமாளை வழிபட்டார்கள். இருள் சூழ்ந்த வேளையில், வானம் இருட்டிக் கொண்டு மழை பொழிய, முதலில் ***பொய்கையாழ்வார்*** ஒரு வைணவருடைய இல்லத்திற்குச் சென்று தங்குவதற்கு இடம் கேட்க வீட்டின் வெளியே உள்ள இடை கழியை ஒதுக்கித் தந்தார். ஒருவர் மட்டும் கை கால்கள நீட்டிப் படுக்கக் கூடிய மிகக் குறுகலான இடம் அந்த இடை கழி

சற்று நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த ***பூதத்தாழ்வார்*** தமக்கும் தங்குவதற்கு இடம் கேட்க 'ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம்' எனக் கூறிய பொய்கையார் அவரை உள்ளே அழைத்துக் கொண்டார். சில வினாடிகளில் அவ்விடம் ***பேயாழ்வார்*** வந்து சேர்ந்தார். பேயாழ்வார்தானும் தங்கவியலுமா என்று கேட்க ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம் 'மூவர் நிற்கலாம்' எனக் கூறி அவரையுஞ் சேர்த்துக் கொள்ள இட நெருக்கடி தாளாது அவதியுற்ற அவ்வேளையில், நான்காவதாக மேலும் ஒருவர் வந்து மூவரையும் நெருக்குவது போன்ற உணர்வு உண்டாக, ஈதென்ன விந்தையென்று மூவரும் எம்பெருமாளை ஒருங்கே நினைக்க எம்பெருமாள் தம் திருமேனியை மூவருக்கும் காட்டி அருள் புரிந்தார்.

பொய்கையார்! 'இவ்வுலகமே அகல்விளக்கு! ஆழ்கடலெல்லாம் அதில் நெய்! கதிரவனே விளக்கிய திரி! உலக மக்களின் துன்பக் கடல் ஒழியட்டும்! என்று சக்கரப் படையானுக்குச் சொல்லால் மாலையைச் சூட்டுவேன்!' என்று பாடினார்.

***'வையம் தகளியாய் வார்கடலே நெய்யாக'*** எனப் பொய்கையார் மங்களா சாசனம் செய்தார்.

பூதத்தாழ்வார், பக்தர்களின் ***'அன்பே அகல் விளக்கு! பக்தர்களின் விருப்பமாகிய ஆசையே நெய்! உலகமெல்லாம் இன்பத்தில் திளைக்கட்டும்'*** என்று பாடினார்.

***'அன்பே தகளியாய்'*** எனத் தொடங்கி மங்களா சாசனம் செய்தார். பொய்கையார் உலகையே விளக்காக்கி ஏற்றிய ஒளியாலும் - பூதத்தாழ்வார் பக்தர்களின் இதயத்தையே விளக்காக்கி ஏற்றிய விளக்காலும் முழுமையான சேவை கிடைக்கவில்லை.

பேயாழ்வாருக்குப் பெருமாள் முதலில் காட்சி அளித்தார். அவரும் ***'திருக்கண்டேன்' 'பொன்மேனி கண்டேன்'*** எனப்பாடினார்.

பெருமாள் இம்மூவர் வாயிலாகத் தத்துவஞான விளக்கம் ஒன்றினை இத்திருத்தலத்தில் வழங்கியிருக்கிறார்.

பொய்கையார் சங்கின் அம்சம். இவ்வுலகமே எம்பெருமானுக்கே உடைமை எனப்பாடினார். எம்பெருமாள் மீது அந்தாதியாக நூறு பாடல்களை முதல் திரு அந்தாதியாகப் பாடி முடித்தார். பூதத் தாழ்வார், கதையின் அம்சம். 'கதை'யின் தலைப்பகுதி எப்பொழுதும் பரந்தாமனின் பாதங்களையே சேவித்துக் கொண்டிருக்கும். எனவே பரந்தாமனின் பாத மலர்கள் பக்தர்களின் இதயங்களில் வாசம் செய்வதைப் பிரத்யட்சமாகச் சேவித்துச் கொண்டிருக்கும் மகாபாக்கியம் கொண்டது 'கதை' என்னும் ஆயுதம். எனவே கதையின் அம்சமாகப் பிறந்த பூதத்தாழ்வார் பக்தர்களின் இதயமே உலகத்தையும் விடப் பரந்தாமனுக்குப் பெரியது என்னும் கருத்தில் பாடினார். இரண்டாம் திருவந்தாதியைப் பாடி முடித்தார்.

மூன்றாம் திருவந்தாதியாகப் பேயாழ்வார் நூறு பாடல்களைப் பாடிமுடித்தார். அஞ்ஞானமாகிய அறியாமையை பக்தர்களின் நெஞ்சிலிருந்து வெட்டி எறியும் தன்மை கொண்டது தான் திருமாலின் நாந்தக வாள். அந்த நாந்தகம் என்ற வாளின் அம்சமே பேயாழ்வார் ஆவார்.

### பக்தி வகை

தெய்வ பக்தியில் பல வகைகள் இருக்கின்றன. பயன் கருதும் சுய நலம் கொண்ட ***காமிய பக்தி,*** பயன் கருதாத உலகப் பொதுமை நலம்

நாடும் ***நிஷ்காமிய பக்தி*** என்று இரண்டு வகைகள் குறிப்பிடத் தகுந்தவை. உலக நன்மைகளையே நாடும். நிஷ்காமிய பக்தனிடம் நாராயணார் குடிகொள்வார்.

இத்திருத்தலத்தில் எம்பெருமான், உலகத் துன்பங்களை நீக்கி எல்லா உயிர்களும் இன்பமாய் வாழ யார் பாடுபடுகின்றார்களோ அந்த இதயங்களில்தான் எழுந்தருள் வார் எனும் தத்துவத்தை முதல் இரண்டு ஆழ்வார்களின் பக்தி அனுபவங்களில் மெய்ப்பித்தான். பேயாழ்வார் ஞானத்தின் முழுமையானஆத்ம பக்குவத்தில் எப்படிப்பட்ட அஞ்ஞானம் பக்தனுக்குத் தோன்றக் கூடாது எனும் தத்துவத்தைத் தம் திருவந்தாதி வாயிலாகக் காட்டினார்.

பக்தி மார்க்கத்தில் அஞ்ஞானக் களையானது இதய வயலில் படர விடக் கூடாது என்று பேயாழ்வார் காட்டினார். அஞ்ஞானக்களை எது? ஒருவனே நாயகன் என நாராயணன் வழிபாட்டை மேற்கொள்பவன் அஞ்ஞானி.

***சிவனையும் சிவ வழிபாட்டையும், சிவனடியார்களையும் இகழ்பவன் அஞ்ஞானி.***

***பக்திப் பகைமைகளைப் பரந்தாமர் இடம் கொண்ட தன் இதயத்தில் ஏற்படுத்திக் கொள்பவன் மிகப்பெரிய அஞ்ஞானி.***

இந்த அஞ்ஞானியின் அஞ்ஞானத்தைத்தான் பேயாழ்வார் வெட்டி வீழ்த்தித் தள்ளியுள்ளார்.

பேயாழ்வார் இந்த அஞ்ஞானத்தைத்தான், தன் மூன்றாவது திருவந்தாதியில் - சிவபெருமானுக்குரிய தாழ்சடையையும், சூலத்தையும், பாம்புகளாகிய அணிகலன்களையும் எம்பெருமான் மீது ஏற்றிப் பாடியதன் வாயிலாக அஞ்ஞான பக்தியை வெட்டி வீழ்த்தித் தள்ளினார். அதனால்தான் திருமால், திருமகள் சமேதராகப் பேயாழ்வார் முன் தோன்றினார்.

ஆகத் திருக் கோவலூர் சமத்துவ, சமரசத் தத்துவங்களை முதல் ஆழ்வார்கள் கூடி நின்று உருவாக்கிய ஊர். இவ்வூர், சைவமும் தழைத்த ஊர்.

## திருக்கோவில்

**திருக்கோவலூர் கோயில் கிழக்குக் கோபுரம் பதினோரு நிலைக் கோபுர மாகும். வடக்கில் கட்டைக் கோபுரம் உள்ளது. கிழக்கிலும்**

மேற்கிலும் முழுக் கோபுரங்கள் உள்ளன. தாயார் சந்நிதி முன் ஒரு கோபுரம் உள்ளது.

நுழைவாயிலின் வடபுரம் வேணுகோபாலர் சந்நிதி, கருடாழ்வார், பலி பீடம் உள்ளன.

வடக்கே ஒரு கட்டைக் கோபுரம் கிழக்கு மேற்கு வாயில்களில் இரண்டு கோபுரங்கள், பரமபத வாயிலில் ஒரு கோபுரம், தாயார் சந்நிதி எதிரே ஒரு கோபுரம், திருமங்கையாழ்வார் கோபுரம் என ஆறு கோபுரங்கள் உள்ளன.

## *மண்டபங்கள்*

இக்கோயிலில் மண்டபங்களுக்கும் குறைவில்லை. பதினாறு கால் மண்டபம், உறியடி மண்டபம், வசந்த மண்டபம், மகா மண்டபம், பௌர்ணமி மண்டபம், அரங்கநாதன் மண்டபம், ஊஞ்சல் மண்டபம், பூங்காவன மண்டபம் ஆகிய மண்டபங்கள் உள்ளன.

## *கருடன்*

உட்கோயில்கள் விமானங்களைக் கொண்டுள்ளன. பெரிய கோபுரத்தின் அருகில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. கோயிலில் எதிரில் மிகப்பெரிய கல்தூணில் கருடாழ்வார் காட்சிஅளிக்கிறார்.

## *தாயார்*

இடப்பக்கம் குமுதவல்லி நாச்சியார் சந்நிதி, ஆழ்வார்கள் சந்நிதி உள்ளன. தாயார் வலது புறத்தில் (பூங்கால் நாச்சியார்) தனிக்கோயில் கொண்டு கருவறையில் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். வட கீழ்ப்புறத்தில் சக்கரத் தாழ்வார் சந்நிதி உள்ளது.

## *நந்தவனம்*

திருச்சுற்றில் நந்தவனம் அமைந்திருக்கிறது. ஆஞ்சநேயர் சந்நிதியை அடுத்து இராமபிரான் கோயில் கொண்டுள்ளார். அதன் கீழ்ப்பகுதியில் வரதர் சந்நிதி உள்ளது. அடுத்துள்ள திருச் சுற்றில் வடபுறம் மணவாள மாமுனிகள் சந்நிதி உள்ளது. இடது புறம் துர்க்கையின் சந்நிதி உள்ளது. இத்தலத்துக் காவல் தெய்வம் துர்க்கையே ஆவார். இவரையே காவல் கன்னி என்பார் திருமங்கை யாழ்வார்.

திரு உண்ணாழியில் இலக்குமி நாராயணர், இலக்குமி நரசிம்மர், ஆண்டாள் நாச்சியார், உடையவர், விசுவக்சேனர் சந்நிதிகள் உள்ளன.

### மூலவர்

திருவிக்ரமன் என்னும் திருநாமம் கொண்ட பெருமாள் மூலவர் ஒரு காலைத் தரையில் ஊன்றி ஒரு காலை விண்ணை நோக்கித் தூக்கிய நிலை கிழக்குநோக்கி நின்ற திருக்கோலம் காட்டுகிறார். இடது கையில் இருக்கவேண்டிய சங்கு வலது கையிலும், வலது கையில் இருக்க வேண்டிய சங்கு இடது கையில் உள்ளன.

### இடைகழி ஆயன்

இப்பெருமாள் விராட புருடனாக இடது கையில் சக்கரம் வலது கையில் சங்கும் கொண்டு நீருண்ட மேகம் போன்ற திருமேனியுடன் மார்பில் ஸ்ரீ வத்ஸம், கண்டத்தில் கௌஸ்துபம், காதுகளில் மகர குண்டலம், வைஜயந்தி வன மாலையுடன் தேஜோமயமாய் ஒளிரும் புன்னகையுடன் சுற்றியும் பிரகலாதன், மகாபலி, சுக்ராச்சாரியார் தேவர்கள், யட்சகர்கள், சித்தர்கள், கருட விசுவக்சேனர் புடை சூழ ஸ்ரீதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கிறார். இடை கழியில் ஆழ்வார்களுக்கு இப்பெருமாள் காட்சி கொடுத்ததால் ***இடைகழி ஆயன்*** என்னும் பெயர் உண்டு.

### விழாக்கள்

பின்புறம் வாமனர் சந்நிதியும், திருமுன்பில் உற்சவர் திருமேனியும் உள்ளன. இத்திருக்கோயிலின் திரு உண்ணாழியில் அடுத்துத் திருச்சுற்றுகளில் நான்குமுறை வலம்வரவேண்டும் என்பது நியமம்.

இக்கோயில் விழாக்களில் சித்திரை மாத இராம நவமி, வைகாசி கருட சேவை, ஆடிப்பூரம், கண்ணன் பிறந்த நாள், உறியடித்திருவிழா, நவராத்திரி, கார்த்திகை தீபம், மார்கழி வைகுண்ட ஏகாதசி, அத்யயன உற்சவம், தைத்திங்கள் ஜீயர் உற்சவம், பங்குனிப் பெருவிழா எனப்பல விழாக்கள் நடைபெறுகின்றன.

திருக்கோவலூரிலே பெரிய கோவில் இது. பெரியபெருமாள்

சுவாமி தேசிகனால் இயற்றப்பட்ட ''தேஹளிசஸ் துதி'' இப்பெருமாளுக்கு அளிக்கப்பட பக்தி ரசம் ததும்பிய பாமாலை யாகும்.

## *துர்க்கை*

இத்திருத்தலத்தில் கண்ணன் உறைவதை யெண்ணிய துர்க்கை விந்திய மலையிலிருந்து புறப்பட்டுத் தானும் இவ்விடத்தே கோயில் கொண்டாள். இங்கே துர்க்காதேவிக்குக் கோவிலும் வழிபாடுகளும் உண்டு. இது மற்றெந்த திவ்ய தேசத்திற்கும் இல்லாச் சிறப்புக் கூறாகும் திருமங்கை யாழ்வார் இந்தத் துர்க்கையை கற்புடை மடக்கண்ணி காவல் பூண்ட கடி பொழில்' என்று புகழ்கிறார்.

தாயார் ***பூங்கோவல் நாச்சியார்***, ***புஷ்பவல்லித் தாயார்*** ஆகிய திருநாமளங்களுடனும், உற்சவத் தாயார் கஜலெட்சுமி என்னும் திருநாமத்துடனும் விளங்குகிறார். திருவிக்ரமப் பெருமாளின் உற்சவர் ***ஆயன், ஆயனார், கோவலன்*** ஆகிய திருப்பெயர்கள் கொண்டுள்ளார். உற்சவர் நின்ற, கிடந்த வீற்றிருந்த கோலத்தில் காட்சி கொடுக்கிறார்.

## *தீர்த்தங்கள்*

இத்திருத்தலத்தில் பெண்ணையாறு, கிருஷ்ண தீர்த்தம், சுக்ர தீர்த்தம், ஆகிய தீர்த்தங்கள் உள்ளன.

கிருஷ்ண புத்திரா நதிதான் இங்கு ஓடும் பெண்ணையாறாகும்.

## *விளைநிலம்*

இத்திருத்தலத்தை ஜீவாத் மாக்கள் கடைத்தேறவித்திட்ட விளை நிலம் என்பர். ஒரு ஜீவன் மிக முக்கியமாக அறிய வேண்டிய ரகசியங்களான திருமந்திரம், துவயம், சரமச் லோகார்த்தம் ஆகியவைகளை மூன்று பிரபந்தங்களாக முதல் மூன்று ஆழ்வார்கள் இத்தலத்து வெளியிட்டருளியமையால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

இத்தலத்தில் முதலில் பெருமாள் கொண்ட கோலம் கிருஷ்ண அவதாரமேயாகும். பின்னர் முனிவர் மிருகண்டுவிற்குத் திருவிக்ரம அவதாரத்தைக் காட்டினார். அவ்வாறு முதலில் கிருஷ்ண பகவானாகப் பகவான் எழுந்தருளியிருந்த சந்நிதி இத்திருக் கோவிலின் முன் பகுதியிலே அமைந்துள்ளது. இது ***ஆதி சன்னிதி***யாகும் என்பர். சாளக் கிராமத்திரு மேனியுடன் இவர் தோன்றக் காண்கிறோம்.

இத்திருத்தலத்தின் சிறப்புக்களில் ஒன்று இது. சுதை வடிவிலோ, கற்சிலா வடிவத்திலோ கருவறையில் மூலவர் திருத்தலங்களில் சேவை சாதிப்பது வழக்கம் ஆனால் இங்கே மூலவரின் வடிவம் மரத்தில் உள்ளது.

பூரியில் ஜெகந்நாதராக மரத்தில் வடிவம் காட்டும் கண்ணபிரான், தம் திருக்கோயில்களில் மரத்தில் அமைந்த மூலவராய் அடியார் மனங்குளிரக் காட்சி அளிப்பது இத்திருத்தலத்து மட்டுமே. இது வேறு எங்கும் தமிழ்த் திருநாட்டில் காணவியலா வடிவம்.



பதினான்கு

# 14. திருவழுந்தூர்

## திருவுக்கும் திருவான செல்வன் - ஆமருவியப்பன்

"கம்பன் பிறந்தவூர், காவிரி தங்குமூர்
கும்ப முனி சாபம் குலைந்தவூர் செம்பது மத்
தாதகத்து நான் முகனும் தாதையும் தேடிக் காணா
ஓதகத்தார் வாழும் அழுந்தூர்"

என்னும் சிறப்புப் பெற்ற தேரழுந்தூர், இராமனைப் பாடிய இராம காவியம் படைத்த கம்பன் பிறந்த ஊர். இத்திருத் தலத்திற்கும் ***கிருஷ்ணாரண்யம்*** எனப்பெயர் புராணங்களில் வழங்குகிறது.

தேரமுந்தூர் வரலாற்றுச் சிறப்புமிக்க பழமையான தமிழ்நாட்டு ஊர் என்பதற்குப் புறநானூறு சான்று பகர்கிறது. கரிகாற் பெருவளத்தானின் தலை நகரமாக விளங்கியிருந்துள்ளது. பதினொரு குறு நில மன்னரையும், சேர, பாண்டியரையும் ஒருங்கே முறியடிக்க அந்த ஆரவாரம் அழுந்தூரில் கொண்டாடப் பெற்றதாம். இச்செய்தியைப் புறநானூற்றுப் பாடல்கள் 65, 352, 395 ஆகியன விளக்குகின்றன. தமிழிலக்கியங்கள் அழுந்தை, அழுந்தூர், திருவழுந்தூர் ஆகிய பெயர்களைச் சூட்டுகின்றன.

திருவழுந்தூர்த் திவ்விய தேசத்தையும், இங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் 'அஞ்சனக்குன்றத்தையும் திருமங்கையாழ்வார் ஒருவர் மட்டிலுமே தம் திருப்பாசுரங்களால் மங்களா சாசனம் செய்துள்ளார். இத்திருப்பதியை மங்களா சாசனம் செய்யத் தொடங்கும் முதல் திருமொழியின் முதற் பாசுரத்திலேயே

***தந்தை காலில் பெரு விலங்கு***
***தாள் அவிழ நல்லிருட்கண்***

*வந்த எந்தை எம்பெருமானார்*
*மருவி நின்ற ஊர் போலும்*

எனத் தந்தை வசுதேவரின் விலங்கு இற்று விழும்படியாகக் கண்ணன் நடு நிசியில் அவதரித்த சிறப்பு இதற்கு உள்ளது என இனங்காட்டுகிறார்.

திருமங்கையாழ்வார் இத்தலத்துக் கண்ணபிரானை மங்களா சாசனம் செய்கையில் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர் மியாத்துவம், அர்ச்சை ஆகிய ஐந்து நிலைகளிலுமுள்ள எம்பெருமாள்களாகவும் கண்டு மகிழ்ந்து போற்றக் காணலாம்.

'பரனே... மாதவனே, மதுசூதா' எனவும், 'வெள்ளத்துள் ஓர் ஆலிலை மேல் மேவி' எனவும், 'உலகுண்ட ஒருவர்' எனவும் ***பரத்துவ நிலை*** எம்பெருமானைப் பாடுகின்றார்.

'ஒலி நீர் உலகங்கள் படைத்தாரை' என ***வியூகப்*** பெருமானைக் குறிப்பிடுகிறார்.

***விபவாவதாரங்களை*** எண்ணுகையில் நரசிம்மன், பரசுராமன், ஆதிவராகம், வாமன், திரிவிக்கிரமன், அயக்கிரீவன், இராமன், கிருஷ்ணன் எனும் பெருமாள்கள் தோன்றுவதை உரைக்கிறார். 'சிங்கம் அது ஆய் அவுணன் திறல் ஆகும் முன் கீண்டு' எனவும் ''சினம் மேவும் அடல் அரியின் உருவம் ஆகி, 'இரணியனது ஆகம் கீண்டு' எனவும். நரசிங்கப் பெருமாளைச் சுட்டுகிறார். வராகப் பெருமாளை 'ஆதிவராகம் முன் ஆனாய்' எனவும்

*'சிலம்பு முதல் கலன் அணிந்து ஓர் செங்கட்குன்றம் –*
*திகழ்ந்த தென திரு உருவம் பன்றி ஆகி*
*இலங்கு புவி மடந்தைதனை இடந்து புல்கி*
*எயிற்றிடை வைத்தருளிய எம்ஈசன்'*

எனவும் அனுபவிக்கின்றார்.

'பன்று கலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய் அருளிய எம்பரமன் காண்மின்'' என அயக்ரீவ மூர்த்தியைப் போற்றுகின்றார்.

**வாமன - திரிவிக்கிரமாவதாரத்தை,**

***''வானவர் தம் துயர் தீர வந்து தோன்றி***
***மாண் உருவாய் மூவடிமா வலியை வேண்டி***

*தான் அமர ஏழ் உலகும் அளந்த வெற்றி*
*தனிமுதல் சக்கரப்படை என் தலைவன் காண்மின்''*

எனப் பாடி மகிழ்கிறார்.

''கோவானார் மடியக் கொலை ஆர் மழுக் கொண்டருஞ் மூவாவானவன்'', எனப் பரசுராமனைப் பகர்கின்றார். இராமபிரான், இராவணனுடைய பத்துத் தலைகளையும், கைகளையும் அறுத்த செயல்களை அநுசந்திக்கின்றார். கண்ணனை நினைக்கும் போதுதான் பார்த்தனுக்குத் தேரேறிச் சாரதியானது, குன்றேந்தி மாரி தடுத்தது, கஞ்சனைக் காய்ந்தது, பூதனையிடம் முலையுண்டு அவனது உயிர் குடித்தது, தயிர் நெய் அமுது செய்தமையால் தாயால் ஆப்புண்டது, விடை ஏழை அடர்ந்தது, கும்பமிகு குவலயா பீடத்தைக் கொன்றது, குரவை கோத்தது, சகடாசூரனை உதைத்துக் கொன்றது ஆகிய வெற்றிச் செயல்கள் ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டினார்.

***அந்தர்யா மித்துவ*** எம்பெருமானைச் 'செவ்வாய் முறுவல் செய்தருளி, மாடு வந்து, என்மனம் புகுந்து நின்றார்' எனவும் 'அடியேன் மனம் புகுந்து என் நீலக் கண்கள் பனி மல்க நின்றார்' எனவும், 'என் நெஞ்சு நிறையக் கைகூப்பி நின்றார்' எனவும் பாடினார்.

***அர்ச்சாவ*** எம்பெருமான்களில் ஆமருவிஅப்பனைத் தவிர திருக்குடந்தைப் பெருமாள், நரையூர் நம்பி ஆகிய எம்பெருமான்களையும் அனுபவிக்கின்றார். இந்த ஐந்து நிலைகளாலும் வைணவத் தத்துவம் வெளிப்படுகிறது.

**இத்திருவழுந்தூர் மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் இருக்கிறது. இப்பாதையில் இத்திருத்தலம் இரண்டாவது புகை வண்டி நிலையம், மயிலாடுதுறையிலிருந்து பேருந்துகள் செல்கின்றன. புகைவண்டியில் வருவதாயின் திருவழுந்தூர் புகை வண்டி நிலையத்திலிருந்து நடந்து செல்லலாம். மயிலாடுதுறையில் தங்கும் வசதி உள்ளமையால் மயிலாடுதுறையிலேயே தங்கிடலாம்.**

**தேரழுந்தூர் என இத்திருத்தலத்திற்குப் பெயர் ஏற்பட்ட புராணச் செய்தி இது.**

**தேவகுரு பிரகஸ்பதியின் சீடனும், சேதி நாட்டு அரசனுமாகிய உபரி சரவசு இந்திரனை நோக்கித் தவம் செய்து, வான வீதியில்**

உருண்டு செல்லும் தேரைப் பெற்று வானத்தில் ஊர்ந்தான். ஒரு முறை மகிரிஷிகள் புலால் உணவைப் புசிக்கக் கூடாது என வேத விதிகள் இருக்கையில் - உபசரவசு ரிஷிகள் மாமிச உணவைப் புசிக்கலாம் என வாதாடினான். மற்றொரு முறை பிரகஸ்பதியைக் கொண்டுவேள்வி நிகழ்த்திய போது - உபரிசரவசுவிற்கு மட்டும் கண்ணில் தெரியும்படியும், மகரிஷிகள் கண்ணில் படாத படியும் பெருமாள் அவிர்பாகத்தை ஏற்றார். இவ்வாறு உபரிசரவசுவிற்கு மட்டும் தரிசனம் அளித்ததால் ரிஷிகள் சினம் கொண்டனர். இதே உபரிசுரவசு இந்திரயாகத்தில் யாகவ் பசுவைப்பற்றிய ஒரு தர்க்க வாதம் தேவர்களுக்கும் - ரிஷிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போது நடுவராக இருந்து ரிஷிகளுக்கு எதிராகத் தேவர்களின் சார்பாக முடிவைக் கூறியதால் கோபமடைந்த ரிஷிகள் உபரிசரவசுவின் வான ஊர்தியாகிய தேர் வானத்தில் இயங்காமல் பூமியில் அழுந்தச் சபித்து விட்டார். உபரிசரவசுவின் தேர்அழுந்தி எம்பெருமாள் முன்பாக வந்து கீழேதரையில் விழுந்தார். உபரிசுரவசு பின் வானத்தேர் அழுந்தப் பெற்றதால் தேரமுந்தூர் எனப் பெயர் பெற்றது. பிறகு எம் பெருமாளை நோக்கித் தவம் செய்ய எம்பெருமாள் கருடனை ஏவி மீண்டும் அவன் வானத்தில் ஊர்ந்திடத் தூக்கி விட்டும் பழைய வாழ்வை வரமாக தந்தார் என்பர்.

### *உபரிசரவசு*

உபரிசரவசு வரலாற்று நிகழ்ச்சி ஒன்று வேறு வகையாக உள்ளது.

உபரிசரவசு எனும் இவ்வானவனின் தேர் வான வீதியில் உருண்டோடும் இயல்பினது. இவன் வான வீதியில் சென்றபோது இவ்வூர்த் திருமால் திருக்கோயிலுக்கு நேராகச் சென்றது. இதனைப் பொறாத கருடாழ்வார் அத்தேரைக் கீழே இழுத்துப் பூமியில் அழுந்த வைத்துவிட்டார். பின்னர் உபரிசரவசு எம்பெருமானை வணங்கி மன்னிப்புப் பெற்றான். இதனாலும் திரு அழுந்தூர் எனத் திருப்பெயர் பெற்றது.

### *திருக்குளம்*

இத்திருக்கோயிலுக்கு முன்னர் ஒரு பெரிய திருக்குளம் உள்ளது. இதன் திருப் பெயர் *தர்சன புஷ்கரணி* என்பது. இத்திருக்குளத்தை வலம் வந்தால் முதலில் தென்படுவது ஊஞ்சல் மண்டபம் ஆகும்.

## கோபுரம்

இத்திருக்கோயிலின் இராஜகோபுரம் கம்பீரமானது. கோபுரத்தில் உட்புறத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பனும், கம்பனின் மனைவியர்களும் சிலைகளாக உள்ளனர். திருவழுந்தூரின் மேற்குப் பகுதியில் இப்பெருமாளின் திருக்கோயில் உள்ளது. இந்த இருப்பிடத்தை சுட்டிக் காட்டுவது போல் 'அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே' எனத் திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

## தேவாதிராஜன்

இத்திருத்தலத்து எம் பெருமானின் திருப் பெயர்கள் ஆமருவியப்பன் **தேவாதிராஜன்** என்பனவாகும். திருமங்கை யாழ்வார் ***'அன்றாவின் நறுநெய் அமர்ந்துண்ட அணி அழுந்தூர் நின்றானை'*** என மங்களா சாசனம் செய்கிறார். இத்தலத்து வடமொழியில் ***கோசகர்*** என்பர். ***கோசகன்*** என்பதன் தமிழாக்கமே ***ஆமருவியப்பன்*** என்பதாகும்.

அரசாட்சியைப் பெற்று அறநெறி தவறாது வாழ்பவன் தேவனாகி தெய்வ உலக சுக போகங்களை அடையலாம் எனும் தத்துவத்தை விளக்கவும், தேவனாவதற்கு ஆதி காரணமாக அரச தர்மத்தை விளக்கவும் தேவாதிராஜனாகவும் பெயர் பெற்றார்.

இத்திருக்கோயிலில் 11 சந்நிதிகள் உள்ளன. மூலவருடைய திருக்கோயில் விமானம் கருட விமானம் ஆகும்.

## பிரகலாதன்

பிரகலாதன் நரசிம்ம அவதாரத்தைக்கண்டு பயந்து பெருமானின் சார்ந்த சொரூபத்தைக் காட்ட வேண்டுமென்று வேண்டியபோது, சினம் தணிந்து சிங்கப் பெருமாள் தோன்றியும் கூடப் பிரகலாதனின் அச்சம் தணியாதிருக்க ஆமருவியப்பனாகக் காட்சி தந்தார். எனவேதான் இங்கு ***பிரகலாதனும்*** இடம் பெற்று வழிபடப் பெறுகிறார்.

## காவிரி சாபம்

அகத்திய முனிவர் காவிரித் தாயை அணுகித் தன்னை மணந்து கொள்ள விண்ணப்பிக்க, காவிரி மறுக்கவே அகத்தியர் கோபமடைந்து

காவிரியைக் குடத்திலடைத்துவிட்டார். அவ்வாறு அடைக்கப் பட்டிருந்த அக்குடத்தைச் சாய்க்கக் காவிரி வழிந்தோடியது. இதனால் மீண்டும் கோபமடைந்த முனிவர் காவிரியால் வளம் பெறும் பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் துன்புற்று வறுமையுறட்டும் எனச் சாபமிட்டார். இச்சாபத்தைப் போக்கத் தேரழுந்தூரின் தேவராஜனை வேண்டித் தவமிருந்து காவிரி தன் சாபம் போக்கிக் கொண்டாள் எனக் கூறப்பெறுகிறது.

## *மூலவர்*

மூலவர் தேவாதிராஜன் ஆமருவியப்பனாகப் பத்து அடி உயரத்தில் தன் இடது புறத்தில் கருடனையும், வலது புறத்தில் பிரகலாதனையும், மார்க்கண்டேயனையும், இடது கையில் ஊன்றிய கதாயுதத்துடன், காவிரி அன்னை மண்டியிட்டு வணங்கக் கிழக்கு முக மண்டலம் நோக்கி நின்ற கோல சேவை அளிக்கிறார்.

மூலவர் தலையில் தங்கக் கிரீடமும், கழுத்தில் தசாவதார உதர மாலையும், சகஸ்ர நாம மாலையும், தோளில் வாகு வலயமும், மார்பில் அலர்மேல் மங்கையும் வயிரத்தாலான திருநாமமும் கொண்டு விளங்குகிறார். மூலவர் மிக்க அழகு உடையவர்.

*திருவுக்கும் திருவாகிய செல்வா!*
*தெய்வத்துக் கரசே செய்ய கண்ணா!*
*உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே!*
*உலகு உண்டா ஒருவா! திருமார்பா!*

என ஆழ்வார் வழியில் அறைகூவி வழிபடத் தோன்றுகிறது.

## *உற்சவர்*

உற்சவரின் திருப்பெயர் தான் ஆமருவியப்பன். உற்சவரின் பின்புறம் பசு ஒன்று நின்று கொண்டிருக்கிறது. ஆண்டுக்கு இரண்டு மூன்றுமுறை திரு முழுக்குப் பெறுகின்றார். ஆமருவியப்பன் என்னும் பெயரில் பதி, பசு, பாச சித்தாந்தம் புதைந்துள்ளது என்பர்.

## *ஆநிரை காப்போன்*

தேவாதிதேவராஜன் ஆமருவியப்பனாக மாறிய வரலாறு இது. கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் பிருந்தாவன எல்லையில் தன்

தோழர்களுடன் ஆவினங்களை மேய்த்துக் கொண்டிருந்த வேளையில் நான்முகன் ஆநிரைகளைத் திருவழுந்தூருக்கு ஓட்டிச் சென்று விட்டான். இதை அறிந்த கண்ணன் புதிதாக ஓர் ஆநிரையை உருவாக்கி ஆயர்களிடம் அளித்து விட்டான். அவனுடைய வேலையை அறிந்து நான்முகன் தன் பிழை பொறுக்க வேண்டினார்.

நான்முகன் வேண்டுகோளை ஏற்றுத் திருவழுந்தூரில் ஆநிரையைக் காக்கும் கோவலனாக ஆமருவி அப்பனாக - அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவாக, அணி அழுந்தூர்நின்ற அம்மானாய், அழுந்தூரத் தன்னணியாக எழுந்தருளினான். இதனைக் காட்டவே உற்சவர் பின் பசு ஒன்றினை அமைத்தனர். இது விஷ்ணு புராணத்தில் காணப்பெறுகிறது.

### தாயார்

தாயார் **செங்கமலவல்லி** என்னும் திருநாமம் கொண்டு அருள் பாலிக்கிறார். மார்க்கண்டேயர் பெருமாளைச் சேவித்துத் திருவருட்பெயன் பெற்றார்.

### கருடாழ்வார்

எதிரே கூப்பிய கரங்களுடன் எம்பெருமானை வழிபட்டவாறு நின்று காட்சி தரும் கருடாழ்வார் இங்கு மட்டும் பெருமாளுக்குப் பக்கத்திலேயே இடம் பெற்றது ஏன்?

தேவேந்திரன் ஒரு சமயம் கருடனை அழைத்து, அவரிடம் வைரமுடி ஒன்றினையும், விமானம் ஒன்றினையும் அளித்து, அவைகள் எந்தப் பெருமாளுக்கு உகந்தவைகளோ அவ்வவ்வரிடம் சேர்ப்பிக்கும் படியாக வேண்டினார். அவ்வாறே கருடாழ்வார் சேர்ப்பிக்கும் படியாக திருநாராயணபுரத்தில் உள்ள செல்லப்பிள்ளை பெருமாளுக்கு வைர முடியினையும், தேவாதி தேவராஜனுக்கு, ஆமருவியப்பனுக்கு விமானத்தையும் அளித்தார். அதனால்தான் இத்திருக்கோயில் விமானம் கருட விமானம் எனப் பெயர் பெற்றது, கருடாழ்வாரையும் தம் பக்கத்தில் பெருமாள் இருக்கச்செய்தார்.

### கம்பன் மேடு

இத்திருக்கோயிலுக்கு ஒரு கிலோமீட்டர் தென் மேற்கில் 'கம்பன் வாழ்ந்த கம்பன் மேடு, உள்ளது. கம்பன் நினைவு விழா ஆண்டு தோறும் மிகச் சிறப்புடன் நடைபெறுகிறது.

மணவாள மாமுனிகளும் இவரை மங்களாசாசனம் செய்துள்ளார்.

திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் ''மெய்யடியாராய் வாழுங்கள் அறிவிலாப் பேய்களே செய்த வினையனைத்தும் தீரும். இறுதி நாளில் எம்பெருமான் தானே வழித் துணையாகி நற்கதி சேர்ப்பார்'' என்பதனை

அடியாராய் வாழ்மின்
அறிவிலாப் பேய்காள்
செடியார் வினையனைத்தும்
தீரும் - முடிவில்
செழுந்தூரத் தன்னெனினும்
செங்கண்மால் எங்கள்
அழுந்தூரத் தன்னணியன் ஆம்.

எனக் கூறக் காண்கிறோம்.

### புனர்வசு

இங்கு பங்குனிப் புனர்வசு நாள் எம்பெருமான் அழகுக் கோலம் காணவேண்டிய நாள். அன்று உற்சவரின் முழுமேனி அழகையும் காணலாம். பங்குனிப் புனர்வசு இராமபிரான் அவதரித்த நாள். அன்று ஆமருவியப்பனையே இராமனாக அலங்கரித்து ஊருக்குக் கிழக்கேயுள்ள வேதபுரி ஈசுவரர் கோயில் வரை திருவுலா வரச்செய்வர். இராம காதை பாடிய கம்பனுக்கு ஆமருவியப்பன் இராமனாகவே காட்சி அளித்தார் என்பர்.

பதினைந்து

# 15. திரு அரிமேய விண்ணகரம்

## குடமாடும் கூத்தன்

சீர்காழியிலிருந்து கிழக்கே திருநாங்கூர் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருநாங்கூருக்குச் சீர்காழியிலிருந்து நகரப் பேருந்துகள் செல்கின்றன. 108 திவ்ய தேசங்களில் திருக்காவளம்பாடி, திரு அரிமேய விண்ணகரம், திருவண்புருடோத்தமம், திருச்செம்பொன் செய்கோவில், திருமணி மாடக் கோவில், திருவைகுந்த விண்ணகரம் ஆகிய திவ்ய தேசங்களும் திருநாங்கூர் ஊருக்குள்ளேயேஉள்ளன. திருநாங்கூர் நெல்வயல்கள் சூழ்ந்த சிற்றூர் உணவு விடுதி, தங்குமிடம் ஏதும் கிடையாது. வெற்றிலை பாக்குக் கடைகள் மட்டுமே உள்ளன. கருடசேவை நாளில் கடைகள் முளைத்து மறையும். வேன்கள் கிடைக்கக் கூடும். கீழ வீதியிலிருக்கும், மதங்கீசுவரர் கோயிலுக்கு மேற்கே 1/4 கி.மீ. தொலைவில் இக் கோயில் உள்ளது. திவ்ய தேசங்களுள் விண்ணகரங்கள் மிகச் சிலவே. அவற்றில் திருநாங்கூரில் மட்டும் இரண்டு விண்ணகரங்கள் உள்ளன. அரி உறையும் கோயிலாதலால் அரிமேய விண்ணகரம் என்றும் அழைப்பர்.

இத்திருத்தலம் ***கூர் புரசங்காடு*** எனவும், ***பலாசவன சேத்திரம்*** எனவும், ***மதங்காச்சரமம்*** எனவும், ***நாகபுரி*** எனவும் பல பெயர்களில் வழங்கப்பெறுகின்றது. இத்திருநாங்கூர் பகுதிக்கு ***உபய காவேரி மத்திமம்*** என்னும் ஒரு பெயர் உள்ளது. தெற்கே காவேரிக்கும் வடக்கே மண்ணியாறுக்கும் இடைப்பட்ட இப்பகுதி உபய காவேரிமத்திமம் ஆகும்.

திருநாங்கூரிலேயே உள்ள ஆறு திவ்ய தேசங்களைத் தவிர சுமார் ஒன்று, இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தூரங்களில் திருநாங்கூரை ஒட்டிச் சுற்றி வேறு ஐந்து திவ்ய தேசங்கள் உள்ளன. அவற்றைத்

***திருநாங்கூர் பதினொரு திவ்ய தேசம்*** என வழங்குவர். திருநாங்கூரில் இவ்வாறு பதினோரு திவ்ய தேசங்கள் உண்டானமைக்குப் பத்மபுராணத்தில் கூறப்பெறும் செய்தி இது.

### *தட்சன்*

தன் தந்தை தட்சன் செய்த யாகத்திற்குக் கணவன் சொல்லை மீறிப் பார்வதி சென்று தட்சனுக்குப் புத்தி மதிகள் கூற அவன் சிவனை மேலும் இகழ்ந்தான். இதனால் கோபமுற்ற பார்வதி தட்சனைச் சபித்தாள். அவன் யாகத்தை அழித்துவிட்டு மீண்டும் சிவனிடம் வந்தாள், சிவன் ஏற்க மறுத்துக் கோபம் அடங்காமல் ருத்ர தாண்டவம் ஆடிய இடம் உபய காவேரியின் மையம் எனவும், அப்பொழுது சிவனின் தலையில் உள்ள சடாமுடி தரையில் பட்ட உடன் அதில் இருந்து ஒரு சிவன் தோன்றிக் கொடூர நடனம் ஆட, இவ்வாறு ஒவ்வொரு முறையும் சிவனுடைய தலைமுடி தரையில் பட, அதிலிருந்து ஒவ்வொரு சிவனாகத் தோன்றவே தேவர்களும், ரிஷிகளும் பேரழிவு வந்து விடுமோ என எண்ணி உலகைக் காக்குருமாறு திருமாலிடம் வேண்டப் பரமபதத்தில் இருந்து திருமால் புறப்பட்டார்.

இதற்குள் உபயகாவேரி மையத்தில் 11 சிவன்கள் (சிவரூபங்கள்) தோன்றிக் கொடும் தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தபோது பரமபதத்திலிருந்து எம்பெருமான் எழுந்தருளினார். நாராயணனைப் பரமபத நாதனாக கண்டதும் சிவன் தனது கொடூரமான தாண்டவத்தை நிறுத்தினார். 11 சிவன்கள் போல் 11 திருமால்கள் காட்சி அளிக்கவேண்டும் எனச் சிவன் வேண்டினார் மண்ணுலகில் அர்ச்சாவதார மூர்த்திகளாக உள்ள 10 பெருமாள்களையும் பரமபதநாதன் எண்ணிய உடனே இங்கு எழுந்தருளினர். பேராச்சரியம் கொண்ட சிவன் ஏதாதச மூர்த்தியாகக் காட்சி தர வேண்டும் என விண்ணப்பித்தார். அவ்வண்ணமே செய்வதாகவும் பெருமாள் அருள் பாலித்தார். 11 பெருமாள்கள் நின்ற இடந்தான் உபய காவேரி மையத்தில் அமைந்துள்ள இந்தத் திருநாங்கூர் 11 திருப்பதிகள் ஆகும். இதன் பின் பதினோரு சிவரூபங்களைத் திருமாலின் அவதார மூர்த்திகள் பதினொரு வரும் அழைத்து ஒவ்வொரு சிலைக்குள் ஒவ்வொரு சிவனாகச் செலுத்திப் பார்வதியையும் ஏற்றுக் கொள்ள வைத்ததாகக் கூறுவர்.

திருநாங் கூரிலேயே அமைந்துள்ள கண்ணன் திருத்தலங்களில் திரு அரிமேய விண்ண கரம் என்பது ஒன்று. ஹரி வந்து மேவியிருக்கும் விண்ணகரம் இதுதான் எனத் திருமங்கை கூறுகிறார். மாமறையோர் மாமலர்கள் தூவி அஞ்சலித்து அரியே சரணம் என வணங்கும் விண்ணகர் எனப் புகழ்கிறார் பெரிய திருமொழிப் பாசுரம் வாயிலாக.

*வஞ்சனையால் வந்தவதனுயிருண்டு வாய்த்த*
*தயிருண்டு வெண்ணையமுதுண்டு வலிமிக்க*
*கஞ்சனுயிரது வுண்டிவ்வுலகுண்ட காளை*
*கருதுமிடம் காவிரி சந்தகில் கனக முந்தி*
*மஞ்சுலவு பொழிலூடும் வயலூடும் வந்து*
*வளங் கொடுப்ப மாமறையோர் மாமலர்கள் தூவி*
*அஞ்சலித்தங் கரிசரணென் றிறைஞ்சு நாங்கூர்*
*அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே!*

11பெருமாள்களாக வந்தவர்களில் அரிமேய விண்ணகரத் திருப்பதியில் குடமாடும் கூத்தராக வந்த பெருமாளும் ஒருவர் சிவபெருமான் ஆடவல்லானாகிக் கூத்த பெருமாள் ஆனதைப் போல் இத்தலத்தில் குடக் கூத்தினை ஆடிக் **குடமாடுங்** கூத்தனாய்ப் பெயர் பெற்றுள்ளார்.

திருமங்கை ஆழ்வாரால் மட்டும் பத்துப் பாக்களில் மங்களாசாசனம் செய்விக்கப் பெற்ற கண்ண பெருமான் இவர்.

## அமைப்பு

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று மதில் ஆகியவற்றுடன் இத்திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையின் எதிர்ப்புறத்தில் கருடாழ்வார் மண்டபமும், பலி பீடமும் காணலாம்.

உபசனம், அதிட்டானம், சுவர், கூரை, கழுத்து, சிகரம் ஆகிய அமைப்புகளுடன் கருவறை அமைந்துள்ளது. அதிட்டானப் பகுதியிலுள்ள குமுதம் விருத்தகுமுதமாகவும், முப்பட்டைக் குமுதமாகவும் காணப்படுகிறது. கண்டம், பட்டிகை ஆகிய உறுப்புகளும் உள்ளன.

சுவர்ப்பகுதியில் இருமருங்கிலும் அரைத் தூண்கள் உள்ள தேவ கோட்டங்கள் உள்ளன.

அத்தூண்களில் திருமாலின் பல்வேறு உருவங்களை பிரஸ்தரப் பகுதியில் யாளிவரியினை அழகுற வடித்துள்ளனர். கிரீவப் பகுதியில் மேற்குப்புறத்தில் அரங்கநாதர் உருவமும், தெற்குப் புறத்தில் நரசிம்மர் உருவமும், வட புறத்தில் பள்ளிக்கொண்ட பெருமாள் உருவமும் சுதை வடிவில் உள்ளன.

## விமானம்

இக்கோயில் விமானமான ***உச்சருங்க விமானம்*** இரண்டு தளங்கள் கொண்டது. எட்டுக் கருங்கல் தூண்கள் அர்த்த மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. அர்த்த மண்டபத்தின் நீளம் 8.30 மீட்டர். அகலம் 8.10 மீட்டர் . இம்மண்டபம் நாயக்கர் காலத்தது. மகாமண்டபத்தின் நீளம் 9-10 மீட்டர். அகலம் 1.50 மீட்டர். அதனை 12 செங்கல்தூண்கள் தாங்கி நிற்கின்றன.

## மூலவர்

கருவறையில் குடமாடுங் கூத்தர் வலது காலைக் கீழே தொங்கவிட்டு, இடது காலை மடக்கி வைத்து அமர்ந்த நிலையில் இருக்கிறார். கீழ்ப்புறத்தில் குடம் உள்ளது. முன் வலது கரம் அபய முத்திரை காட்டும். இடது கரம் கதையைப் பற்றியுள்ளது. பின்னிருகரங்கள் சங்கு, சக்கரம் கொண்டுள்ளன. தலையில் கிரீட மகுடம், காதுகளில் பத்ர குண்டலங்களும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் உள்ளன.

## தாயார்

குடமாடுங் கூத்தரின் வலதுபுறம் ஸ்ரீதேவி அமர்ந்த நிலையில் வலதுகரம் தொங்கும் கரமாகவும், இடது கரத்தில் தாமரை மலர் கொண்டும் தோன்றுகிறாள். இடதுபுறம் ஸ்ரீதேவி வலது கரத்தில் தாமரையும், இடதுகரம் தொங்கும் படியாகவும் விளங்குகிறார். ஸ்ரீதேவி வடிவங்கள் கதையால் ஆனவை. ஆண்டுக்கொரு முறை தைலக் காப்பிடுவர். மூலவர் அனைவருமே சுதை வடிவினர்.

## உதங்கர்

உற்சவர் சதுர் புஜங்களுடனான கோபாலன். உதங்கமுனிவர் என்பவர் எம்பெருமானைக் குறித்துத் தவம் மேற்கொண்டு கோபாலனாகக் குன்று குடையாய் எடுத்த கோவர்த்தனப்

பெருமாளாகக் கண்டதாகக் கூறுவர். குன்று குடையாய் எடுத்த கோபாலன் இவர்.

இந்த உதங்கமுனிவர் பற்றிக் கூறப் பெறும் செய்திகள் இவை. உத்துங்க முனிவருக்கும் குணவதிக்கும் பிறந்தவரே உதங்க முனிவர். இம்முனிவரின் மனைவி பெயர் ***பிரபை*** என்பதாகும். ***விசாலக் கண்ணி*** என்னும் பெயருடையவளாய்ப் பிரபை திருக்கழுக் குன்றத்தில் தன்னை அலங்கரித்துக் கொண்டு காமம் மிகுந்தவளாய்க் காமுகர்களுடன் கூடிக் குலவி வாழ்ந்து வந்தாள்.

ஒரு நாள் ஒரு சைவ வேதியனை மயக்கி, அவனிடமிருந்த சிவலிங்கத்தைக் கவர்ந்து கொண்டு சிவ வழிபாடு செய்தாள். அதன் பலனாய்ப்பல பிறவிகளை எடுத்து இறுதியில் திருத மகரிஷியின் மகளாகப் பிறந்து உதங்க மகிரிஷியை மணந்தாள்.

உதங்க மகரிஷியும், பிரபையும் கங்கையில் தீர்த்த நீராடிய பொழுது ஒரு முதலை, பிரபையை இழுத்துக் கொண்டு போய் உண்டு விட்டது. பிரபையும் முக்தி எய்தினாள். மனைவியைப் பிரிந்த பெருந்துயரத்துடன் அரிமேய விண்ணகரமாகிய இத்தலத்திற்கு உதங்க முனிவர் வந்த பொழுது, குடமாடும் கூத்தன் வீற்றிருந்த கோலத்துடன் பிரத்தியட்ச மாகி அவரிடம் பிரபை முக்தி பெற்றாள் என்பதனை எடுத்துரைத்தார். இதன் வாயிலாக உதங்கரின் துயர் விலகியது. இவ்வாறு இத்தலத்தில் உதங்க முனிவர் எம்பெருமானின் பிரத்யட்ச தரிசனம் பெற்றுள்ளார்.

## கோவிந்தன்

திருமங்கையாழ்வார் இத்திருத்தலத்தை மங்களா சாசனம் செய்கையில் தம் பாடலில்.

*காமருசீர் முகில் வண்ணன் காலிகள் முன்*
*காப்பான் குன்றதனால் மழை தடுத்துக் குடமாடு*
*கூத்தன் குலவுமிடம்*

எனக் குன்றைக் குடையாய்ப் பிடித்ததைக் காட்டுகிறார். ஆதலால் இக்கோவிந்தன் குன்றத்தைக் குடையாய் எடுத்த கோவிந்தனே எனவும், இக்கோவிந்தனைக் குறிப்பிடும் சொல்லான குடமாடுங் கூத்தன் என்பது குடங்களையெடுத்து ஆடவல்ல கூத்தனல்லன் எனக் காட்டுகிறது என்பர்.

குடங்களெடுத் தேற விட்டுக் கூத்தாடுவது ***லீலா விநோதம்*** எனவும் குன்றத்தைக் குடையாய்க் கொண்டு காப்பது அவன் ***வாத்சல்யம்*** எனவும், அதாவது பகைவனுக்கு அருளும் பண்பாடுடையவன் எனவும் காட்டுகிறது என்பர்.

குன்றத்தைக் குடையாக எடுத்த கோபாலன், ஆவினங்களையும், கோபாலர்களையும் காத்த **கோவர்த்தன நாதன்**. வடபுலத்தில் கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்துக் காட்டிய கோபாலன் தென்புலத்தில் தமிழ்நாட்டில் அதனைக் காட்டிய திருக்கோலநாதன் இவர்.

### *கருட சேவை*

இங்கு நடைபெறும் கருட சேவை குறிப்பிடத்தக்க திருவிழாவாகும். இக் கருடசேவை தை மாதம் அமாவாசைக்கு மறுநாள் ஆண்டு தோறும் நடைபெறுகிறது. அது நடைபெறும் திருநாங்கூர் அரிமேய விண்ணகர் பெரிய பெருமாளும் சேர்ந்த பதினோரு திவ்ய தேசங்களில் இருந்து கருடாழ்வார் மேல் ஆரோகணித்து இங்கு வந்து காட்சி அளிக்கின்றனர்.

நாராயணப் பெருமாள், அண்ணன் பெருமாள், குடமாடும் கூத்தர், வைகுண்ட வாசன், அழகிய மணவாளன், கோபாலகிருஷ்ணன், பார்த்தசாரதி, இராமன் எனப் பதினோரு பெருமாள்களையும் ஒரு சேரத் தரிசிக்கும் அரிய வாய்ப்புக் கிடைக்கும். இப்பதினோரு பெருமாள்களில் நால்வர் கிருஷ்ணாவதார அம்சத்தவர்கள். அவர்கள் அண்ணன் பெருமாள், குடமாடும் கூத்தர், கோபாலகிருஷ்ணன், பார்த்தசாரதி ஆவர்.

இவ்வாறு கருட சேவையில் சேவிப்பது பதினோரு திவ்விய தேசங்களுக்குச் சென்று வந்ததற்கு ஒப்பாகும் பலன் உடையது. அது மட்டுமல்லாது ஆண்டுதோறும் இந்தப் பெருமாள்களை மங்களாசாசனம் செய்யத் திருமங்கையாழ்வார் இங்கு வருகிறார். மணிமாடக் கோவிலில் நாராயணப் பெருமாள் சன்னதியில் இந்தக் கருட சேவைத் திருவிழா நடைபெறுகிறது.


### *பரந்தாமன்*

அடியவர்களின் பகைவர்களை அழித்தல் பொருட்டு எம்பெருமான் இங்கு எழுந்தருளியிருப்பதாகவும், பகை நீக்கும்

பரந்தாமன் எனவும், பகைவர்களை வெல்ல நினைப்பவர்கள் இப்பெருமாளைத் தொழுது நின்றால் அருள் பாலிப்பான் எனவும் நம்புகின்றனர்.

கோடி தீர்த்தம், அம்ருத தீர்த்த ஆகியன இத்திருத்தலத் தீர்த்தங்கள் ஆகும்.

திருமங்கையாழ்வார் ***"அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே"*** என வாழ்த்தும் வாழ்த் தொலி கொண்டு வணங்குவோம். இப்பெருமானின் அடியவர்களாக "யோகம் செய்யும் முறையை உணர்த்தியவனும் ஞானத்தை அளிக்கக் கூடிய வனுமான சிவபெருமானும், விடாது நான் மறைகளை ஓதி அவற்றின் பொருளை உணர்பவனுமான நான்முகனும், உம்பர் நாயகனான இந்திரனும் இவனுக்கு அடியவர்களாவர். இப்படி அவனே அனைவர்க்கும் தலைவனாதலால், வேறு தெய்வங்களிடத்தில் சிறிதும் பற்று வைக்காமல் இவனையே நம்பியிருப்பின் நமக்குத் தவறாமல் நற்கதி வாய்க்கும்" என அவர்தம் நெஞ்சுக்கு மட்டுமல்லாமல், நமக்கும் அறிவுறுத்துகிறார்.



பதினாறு

# 16. திருக்காவளம்பாடி

## கண்ணன் கோபால கிருஷ்ணன்

ஆரவாரம் மிகுந்த ஆயர்பாடி, மதுராவில் அழகுத் திருக்கோலம் காட்டிய கண்ணபெருமான் எவ்வித வசதியும் அற்ற சிற்றூரில் கோயில் கொண்டு நிற்பது திருக்காவளம் பாடித் திருத்தலத்தில். இத்திருத்தலம் திருநாங்கூர்ப் பதினோரு திவ்யதேசங்களில் ஒன்று. சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் வழியில் உள்ளது. திருநாங்கூரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவு. திருநகரியிலிருந்தும் நடந்தே செல்லலாம். இத்தலம் துவாரகைக்குச் சமமானதெனக் கருதப்படுகிறது.

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி 4ஆம் பத்து ஆறாம் திருமங்கையாழ்வார் இக்கோயிலைப் பற்றிப் பாடிய பாடல்கள் திருமொழியில் காணப்படுகின்றன. பத்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். அவற்றிலொன்று இவ்வூரை நாங்கூரைச் சேர்ந்த காவளம்பாடி என்றே குறிப்பிடுகிறது.

*''ஏவிளங்கன்னிக்காகி இமையவர் கோனைச்செற்று*
*காவளம் கடிதிறத்துக் கற்பகம் கொண்டு போந்தாய்*
*பூவளம் பொழிகள் சூழ்ந்த புரந்தரன் செய்த நாங்கைக்*
*காவளம் பாடிமேய கண்ணனே! களைகணீயே''*

இத் திருக்கோயில் பற்றிப் பத்மபுராணத்தில் 90 சுலோகங்கள் உள்ளன.

கருவறை, இடைக்கட்டு, அர்த்தமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்று மதில் ஆகியன கொண்டு கிழக்கு நோக்கி இத்திருக்கோயில் அமைந்துள்ளது. கருவறையின் எதிர்ப்புறம் கருடாழ்வார் சந்நிதியும், பலிபீடமும் காணப்படுகின்றன.

## மூலவர்

கருவறையில் மூலவர் இராஜகோபாலன் நின்ற நிலையில் காணப்படுகிறார். வலது கையில் சாட்டையுள்ளது. இடதுகரம் பசுவின் மேல் கைவைத்த நிலையில் அமைந்துள்ளது. இராஜ கோபாலனின் அருகில் பாமா ருக்மணி உள்ளனர்.

## விமானம்

இக்கோயில் விமானம் ஏகதள விமானகும். விமானத்தின் தெற்குத் திசையில் யோக நரசிம்ம மூர்த்தியும், வடக்கில் வைகுந்த நாதரும், மேற்கில் திருமாலும், கீழ்த்திசையில் வராக மூர்த்தியும் சுதை வடிவில் உள்ளனர்.

## நிர்வாகம்

இக்கோயிலில் வேணுகோபாலன், ஸ்ரீதேவி, பூதேவியுடன் செப்புத் திருமேனிகள் உள்ளன. இக்கோயிலை இராமானுஜாச்சாரியார், இராகவாச்சாரியார் குடும்பத்தினர் நிருவகித்து வருகின்றனர்.

## பெயர் விளக்கம்

இங்குத் தங்கும் வசதி, எந்நேரமும் தரிசிக்கும் வசதி கிடையாது. தினமும் ஒரு வேளைதான் காலையில் பத்து மணிக்கு இப்பெருமாளுக்குப் பூசை நடைபெறுகிறது.

இத்திருக்கோயிலூருக்குத் திருக்காவளம் பாடி எனும் பெயர் ஏற்பட்டதற்குக் காரணங்களை இருவகையாகக் கூறுவர்.

கவளம் எனில் உருண்டை என்பது பொருள். எம்பெருமான் கண்ணனைத் தரிசிப்பதையே பக்தர்கள் பிரசாதமாகப் பெறுவதாலும், சிவ பெருமானுக்கும், ஏனையோருக்கும் சேவை தந்த கண்ணன், பக்தர்களின் பக்தி நிலையையே கவளமாக ஏற்றுக் கொள்வதால் இத்தலம் காவளம்பாடி ஆயிற்று.

கண்ணன் சத்திய பாமாவுடன் சேர்ந்து நரகாசுரனை அழித்தார். இந்திரன், வருணன் ஆகியோரிடமிருந்து நரகாசுரன்அபகரித்த பொருட்களை அவர்களுக்கே மீட்டுக் கொடுத்தார். வெகுநாளைக்குப் பின்பு இந்திரனின் தோட்டத்தில் உள்ள பாரிஜாத மலரைச் சத்திய பாமா கேட்க கண்ணன் இந்திரனிடம் அம்மலரைக் கேட்டார். இந்திரன் அளிக்க மறுத்தான். எனவே சினங் கொண்ட, கண்ணன் அவனோடு பொருது அவனுடைய காவளத்தை அழித்தார். பதினோரு

எம்பெருமான்களில் ஒருவராக துவாரகாவிலிருந்து வந்த கண்ணபிரான் (சிவனை ஒன்றாக்கி முடிந்த பின்) தான் இருக்க காவளம் போன்ற பொழிலைத் தேடினார். இந்தக் காவளம் பாடியில் நின்று விட்டார்.

துவாரகாபுரியிலிருந்து கண்ணபிரான் சத்திய பாமாவுடன் இங்கு வந்ததால் இது துவாரகைக்குச் சமமான திருத்தலம். எனினும் துவாரகை போல் சிறப்புடன் விளங்கவில்லை.

இத்திருக்கோயிலில் சேவை சாதிப்பவர் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் கோபால கிருஷ்ணன், கண்ணன் என்னும் திருநாமத்துடன் சேவை சாதிக்கிறார். தாயாரின் திருநாமம் மடவரல்நங்கை, செங்கமலவல்லி நாச்சியார். இரு தேவியர்களுடன் எம்பெருமாள் சேவை சாதிக்கிறார். ***'மடவரல் மங்கை தன்னை மார்பகத்திருத்தினானே'*** எனத் திருமங்கைத் தாயாரைப் பாடிப் பரவுகிறார்.

திருமங்கை மன்னவர் அவதரித்த திருக் குறையலூரில், நாள் தோறும் 1008 அடியவர்களுக்கு திருவாலி மங்கை சொற்கேட்டு ததீயாராதனம் நடத்திய மங்கை மடமும், இதற்கு மிக அருகில் அமைந்துள்ளன.

தை அமாவாசைக்கு மறுநாளில் திருநாங்கூரில் நடைபெறும் கருட சேவை வைபவத்திற்கு இத்தல எம் பெருமானும் இங்கிருந்து சென்று சேவை அளிக்கிறார்.

பரிபூரணத்துவம் அடைந்த சேனைத் தலைவருக்கும், உருத்திரனுக்கும் சேவை தந்ததால் இத்தல விமானம் சுயம்பு விமானமாய் அமைந்தது.

மற்றத் திருத்தலங்களில் பெருமாளுடன் உறையும் நாச்சியார் தனிச் சந்நிதி கொண்டு விளங்குவது போல் இங்கு தாயாருக்குத் தனிச்சந்நிதி இல்லை. இத்திருத்தல புட்கரணி தடமலர்ப் பொய்கையே. சேனைத் தலைவர், மண்ணுலகில் கிருஷ்ணாவதாரம் எடுத்த எம்பெருமாளின் சேவையை - ருக்மினி சத்திய பாமாக் களுடன் தரிசனம் செய்ய விரும்பி அச்சேவையைப் பெற்றிருக்கிறார். நாம் விரும்பினால் மட்டும் இப்பெருமாளைச் சேவித்திட முடியாது. பெருமானின் கருணை அர்ச்சகர் வடிவில் கிடைத்தால் மட்டுமே இயலும். ஒருவேளை பூஜை நடைபெறும் உரிய நேரத்தில் காலைப் போதில் மட்டுமே செல்லவேண்டும்.

பதினேழு

# 17. திருவெள்ளக்குளம் அண்ணன் கோவில்

## கண்ணன்

திருநாங்கூர்த் திருப்பதிகளில் பத்தாவதாக விளங்குவது திருவெள்ளக்குளம். இப்பதினோரு திருப்பதிகளில் எம்பெருமான் கிருஷ்ணாவதார அம்சத்தில் திரு அரிமேய விண்ணகரம், திருக்காவளம்பாடி, திருவெள்ளக்குளம் திருப்பார்த்தன் பள்ளி, ஆகியவற்றில் மட்டுமே சேவை தருகிறார்.

திருநாங்கூர்த் திருப்பதிகளில் பத்தாவது எனினும் முதலாவது இதனைத் தரிசிக்கலாம். ஏனெனில் இத்திருத்தலமே சீர்காழிக்கு அண்மையில் உள்ளது. சீர்காழியிலிருந்து மயிலாடுதுறை செல்லும் சாலையில் உள்ளது. சீர்காழியை விட்டுக் கடந்தவுடன் தெற்கில் ஆறு கிலோ மீட்டரில் ஒரு கிளைச் சாலையாக மண்சாலை செல்கிறது. அங்குத் ***'திருநாங்கூர், அண்ணன் கோயில்'*** என எழுதப்பெற்ற பலகையைக் காணலாம். நெடுஞ்சாலையிலிருந்து அண்ணன் கோயில் என வழங்கப்பெறும் இத்திருத்தலம் இரண்டு கிலோ மீட்டர் தொலைவு. நடந்துதான் செல்லுதல் வேண்டும். வாகனங்கள் இருந்தால் கோயில் வாயில் வரை செல்லலாம். சீர்காழியிலிருந்து பொறையார், காரைக்கால் நாகை செல்லும் பேருந்தில் செல்லலாம். எந்நேரமும் திருக்கோயில் திறந்திராது. நாம் சென்று சொல்லியனுப்பினாலே அர்ச்சகர் வந்து பெருமாளைத் தரிசனம் செய்து வைப்பார். திருநாங்கூருக்கு அருகில் அமைந்துள்ள இதற்குப் போக்குவரத்து வசதி குறைவு. இத்திருத்தலம் திருத் தேவனார்த் தொகைக்குமேல் திசையில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கில் சுமார் பத்துக் கிலோ மீட்டர் தொலைவிலும் வைத்தீசுவரன் கோயில் இரயில் நிலையத்திலிருந்து கீழ்த்திசையில் சுமார் பத்துக் கிலோ மீட்டர்

தொலைவிலும் உள்ளது. திவ்ய தேச தரிசனம் செய்பவர்கள் திருத்தேவனார்த் தொகையினைத் தரிசித்துப்பின் இத்திருத்தலம் வருவது நல்லது.

## திருக்குளப் பெயர்

இத்திருத்தலத்துத் தீர்த்தம் திருவெள்ளக்குளம் ஆகும். திருக்குளத்தின் பெயரே திவ்விய தேசத்திற்கும் வழங்குவது ஒரு சிறப்பு. 108 திவ்ய தேசங்களில் எம்பெருமான் திவ்யநாமமும், பிராட்டியார் திருநாமமும் இரு திவ்ய தேசங்களில் ஒன்றாய் அமைந்திருப்பன திருவேங்கட மலையிலும், திருவெள்ளக் குளத்திலும்தான்.

வெள்ளம் எனில் பாய்ந்து பெருகி வரும் தண்ணீர் என்பது பொருளாகும். குளம் எனில் ஒரே நீர், நிலையில் தேங்கிக் கிடப்பது என்பது பொருளாகும். வெள்ளமாயினும் குளமாயினும் இரண்டிலும் இருப்பது தண்ணீரே. அதைப் போலவே அண்ணன் பெருமாள் ஆனாலும் சரி, தம்பிப் பெருமாளானாலும் சரி, இருவருமேஒரே எம்பெருமான்தான் என்பது இத்திருத்தலத்தும் பெயர் அமைப்புத் தத்துவம் என்பர்.

வெள்ளம் என்னும் சொல்லிற்கு வெள்ளை எனும் வெண்மையின் இயல்பு உள்ளது. குளத்தின் நிறத்தில் நீலத்தின் இயல்பு உள்ளது. அண்ணன் பலராமனும், ஆதிமாலும் வெள்ளை நிறத்தவர்கள். தம்பி கண்ணனோ, நீல நிற வண்ணன். அண்ணனின் வெள்ளை நிறத்தையும், தம்பியின் நீல நிறத்தையும் வெள்ளக்குளம் திவ்ய தேசம் தன் பெயர் அமைப்பில் கொண்டுள்ளது.

## மங்களா சாசனம்

திருவெள்ளக் குளத்து எம்பெருமானைத் திருமங்கை யாழ்வார் மட்டுமே ஒரு திருமொழியால் மங்களா சாசனம் செய்துள்ளார். முதற் பாசுரத்திலேயே ***'திருவெள்ளக் குளத்து அண்ணா'*** என எம்பெருமானை விளிப்பதால் எம்பெருமாள் **அண்ணன் ஆகின்றார்.** அவர் எழுந்தருளியிருக்கும் கோயில் ***அண்ணன் கோயில்*** என ஆகிறது. இந்தக் கோயிலின் திருநாமம்மே திருக்குளத்தின் பெயராகவும் ஆகி விடுகின்றது.

வெள்ளக் குளத்தையும், அதனைச் சூழ்ந்த வயல்கள், சோலைகளைத் திருமங்கை ஆழ்வார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ***'தேனார் பொழில் சூழ் திருவெள்ளக்குளம், 'சோடார் பொழில்சூழ் திருவெள்ளக்குளம்', 'சேலார் வயல் சூழ் திருவெள்ளக்குளம்', 'சீரார் பொழில் சூழ் திருவெள்ளக்குளம்.'***

## தல புராணம்

இத்திருக்கோவிலின் தலபுராணம் சூரிய குலத்தில் பிறந்த துந்துமாறன் எனும் அரசனின் மகன் சுவேதன் என்பவன் பற்றிக் கூறுகிறது. தன் ஒன்பதாம் வயதில் மிருத்யு என்னும் தேவதையால் மரணம் ஏற்படும் என உணர்ந்தான்.

பிரம தேவன் ஒருமுறை உலகங்களைத் தன்னிடமிருந்து எழுந்த தீயால் அழித்தார். உலகை அழிக்கும் தீயைச் சிவபெருமான் தடுத்து நிறுத்த - அத்தீ முழுமையும் மிருத்யு என்னும் பெண் தேவதையின் வடிவத்தில் நின்றது. மிருத்யுவை உலகத்தை அழிக்குமாறு பிரமதேவன் மீண்டும் ஆணையிட்டார்.

ஆனால் உலகை அழிக்கும் பாவியாக மாட்டேன் என அழுது கொண்டே கொல்லாமையை வேண்டி மிருத்யு தவம் செய்தாள்.

பிரமன் அவள் முன்பு தோன்றி உயிர்களைக் கொல்ல ஆணையிட மிருத்யு பதில் பேசாமல் இருந்ததால், 'நீ ஆண்களிடம் ஆணாகவும், பெண்களிடம் பெண்ணாகவும் தோன்றுவாய்' என்றும், 'உன் கண்ணிலிருந்து பலநோய்கள் தோன்றக் கடவது' எனவும் பிரமன் சபித்து விட்டார்.

மிருத்யு, யமனிடம் இருக்கும் ஒரு தேவதை யாகி, உயிர்களை அழிப்பது தன் கடமை என்று தனக்கு விதித்த விதியை உணர்ந்து கடமையாற்றுவதில் பாவமில்லை என உயிர்களைக் கவர்ந்து மரணத்தை விளைவிப்பவளாகிப், பூமித்தாயின் பூமி பாரத்தைக் குறைக்க உறுதுணையாக அமைந்தாள்.

மிருத்யுவின் மரண பயத்திற்கு அஞ்சிய 'சுவேதன்' இத்தலத்திற்கு வந்து திருக்குளத்தில் நீராடிச் சூரிய குமாரரும், ஆயுள் மருந்து தந்து நோய் அகற்றுபவரும் ஆகிய மருத்துவ முனியின் ஆசிரமத்திற்குச் சென்று மருத்துவ ரிஷியிடம் உபதேசம் பெற்று இத்திருத்தலத்துத் திருக்குளத்தின் தென் கரையில் இருந்த வில்வமரத்தடியில் வடக்கு

முகமாக அமர்ந்து - மிருத்யுஞ்சய மந்திரத்தை உச்சரித்தான். உடனே எம்பெருமாள் நாராயணன் பிரசன்னமாகி *'மார்க்கண்டேயனைப் போல் நீயும் நிலையான ஆயுள் பெறுவாயாக'* என வரமளித்து அருளியதாகத் தலபுராணம் கூறுகின்றது. இத்திருத்தலத்துத் திருக்குளத்துத் தென் கரையில் வில்வம் அமைந்துள்ளது.

இத்திருத்தலத்து எம்பெருமானின் திருநாமங்கள் கண்ணன், நாராயணன், என்பதாகும். எம்பெருமான் கிழக்கே திருமுக மண்டல கொண்டு, நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். இத்திருக் கோவிலில் எம்பெருமானைச் சேவிக்கையில் திருவேங்கட முடையானைச் சேவிப்பது போலச் சுகானுபவம் பெறுகின்றனர்.

### விநாயகர்

சுவரில் நர்த்தன விநாயகர் சிற்பம் ஒன்று உள்ளது. ஒரு குடமுழுக்கின்போது குடம் உள்ளே செல்லாத நிலையில் ஒருவர் மேல் ஆவேசம் வந்து, இப்பிள்ளையார் இருந்த இடத்தைக் குறிப்பிட்டு, அவரைக் கோயிலில் கொண்டு வைத்தால்தான் குடம் புறப்படும் என்று சொல்ல, அவ்வாறே மேலைச் சாலையிலிருந்து கோயிலுக்கு எழுந்தருளியிருக்கிறார். இப்பிள்ளையார் மகா மண்டபத்தில் சேனை முதல்வர், நம்வாழ்வார், மணவாள மாமுனிகள் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன.

### பிரம்மோற்சவம்

இத்திருக்கோயில் பிரம்மோற்சவம் புரட்டாசி மாதம் நடைபெறுகிறது. அப்போது கருடசேவை, திருக்கல்யாணம், தெப்பம், தேர் முதலிய நடைபெறும். ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

சித்திரையில் தமிழ் வருடப் பிறப்பு, வைகாசியில் வசந்த விழா, ஆடியில் திருமஞ்சனம், ஆவணியில் ஸ்ரீ ஜெயந்தி, உறியடி, ஐப்பசியில் தீபாவளி, கார்த்திகையில் அகண்டபஜனை, அவதார உற்சவம், உதயகருட சேவை, மார்கழியில் வைகுண்ட ஏகாதசி, தை கருடசேவை, அத்யான விழா, பங்குனியில் காரடையான் நோன்பு ஆகியன குறிப்பிடத்தக்கன.

*இத்திருத்தலத்துத் தாயாரின் திருநாமம் பூவார் திருமகள் நாச்சியார்* என்பதாகும்.

இத்தலத்தையும் தென் திருப்பதி எனக் கூறுகின்றனர். திருமலை உறையும் திருவேங்கடநாதனுக்காக வேண்டிக் கொள்ளும் பக்தர்கள் தம் பிரார்த்தனைகளையும், இத்தலத்திலே செலுத்திச் சீனிவாச கல்யாண வைபவங்களையும் நடத்துகின்றார்கள்.

எம்பெருமாள் பத்மாவதி சமேத திருவேங்கடமுடையானின் கூறாகத், திருவெள்ளக்குளம் திவ்விய தேச பத்மாவதி சமேத சீனிவாசன் விளங்குகின்றார். இதனால் இவ்விரண்டு திவ்விய தேசங்களும் திருப்பதி திருமலையின் கூறுகளாகக் கருதப்பெற்றுத் திருமலைக்குச் செலுத்தவேண்டிய காணிக்கைகளை இத்தலங்களின் செலுத்துகின்றனர்.

பத்மாவதி சமேத திருவேங்கடமுடையான், அரசன் தொண்டைமானுக்குப் பிரத்தியட்ச சேவை தந்திருப்பதைப் போல, திருவெள்ளக்குளம் பத்மாவதி சமேத சீனிவாசனும் சுவேத ராஜனுக்கு காட்சி அளித்தார்.

திருவேங்கடமுடையான் அண்ணன் இராமபிரானின் அம்சமான வேங்கட இராமனாகவும் - தர்மத்தையும், உலக அமைதியையும் நிறுவிய தம்பி கண்ணனின் அம்சமான வேங்கட கிருஷ்ணனாகவும் விளங்குவதைப் போல், வெள்ளக்குளம் சீனிவாசனும் இராமவதார அம்சமாக அண்ணன் எனும் பெயரையும், கிருஷ்ணாவதார அம்சப் பெயராகிய கண்ணன் என்பதனையும் கொண்டு சேவை சாதிக்கிறார்.

இத்தல எம்பெருமாள் திருவேங்கட நாதனாகிய சீனிவாசனாகவும், கிருஷ்ணாவதார கண்ணனாகவும் சேவை தருவதோடு, மரணபயம் ஒழித்த தீர்க்காயுளாகிய வரம் தந்த வரதராசனாயும் விளங்கி - நின்ற கோல சேவையைத் தருகின்றார்.

இதனால் இத்தலத்தில் அனைத்து யுகங்களுக்கும் உரியவராக எம்பெருமான் விளங்குகின்றார். அதனால்தான் தத்துவமும், யோகமாயையும் இணைந்த பெயரால் இத்தல விமானம் தத்துவ யோக விமானம் என்னும் பெயர் பெற்றது.

அண்ணனாகவும், அண்ணனுக்குத் தம்பியான கண்ணனாகவும் - எம்பெருமாள் விளங்கும் இத்தலம், அண்ணன் கோவில் என்றும் பெயர் கொண்டிருப்பது ஒரு பெரும் சிறப்பு.

சீதையைப் பிரிந்து வாடிய இராமனைப் போல் இலக்குமிப் பிராட்டியாரைப் பிரித்து திருவேங்கடநாதன் திருமலையில் வேங்கட ராமனாய்ப் பரிதவித்து, பின்பு பத்மாவதித் தாயாரையும், பெரிய பிராட்டியாரையும் அடையப் பெற்று வேங்கட கிருஷ்ணனாய் மாறிய கலியுக வரதன் சீனிவாசப் பெருமாளின் பெயரையும் இரு அவதார இணைப்பு நாராயணனாகி இத்தல எம்பெருமாள் பெற்றிருப்பது இத்தலத்தின் மற்றொரு பெருஞ்சிறப்பாகும்.

திருவேங்கடம் பற்றிய திருமொழிகளில் 'கண்ணார் கடல் சூழ்' என்பது ஒரு திருமொழி, அதன் சாயலாகவே இத்திருமொழியும் திருமங்கையால் அருளிச் செய்யப்படுகிறது. இரண்டு திருமொழிகளின் தொடக்கமும் ஒன்றே போல்வன. திருவேங்கடம் பற்றிய திருமொழி 'கண்ணார் கடல் சூழ்' (1.101) என்றும் இத்திருமொழி 'கண்ணார் கடல் போல்' எனவும் தொடங்குகின்றன. பாசுரங்களின் நடைப்போக்கும் கருத்துப்போக்கும் ஒரு விதமாகவே இருக்கின்றன என்பர்.

*கண்ணாா கடல சூழ்லங்கை இறைவனறன்*
*திண்ணாகம் பிளக்கச் சரஞ்செல வுய்த்தாய்*
*விண்ணோன் தொழும் வேங் கட மாமலையே*
*அண்ணா, அடியேனிடரைக் களையாயே.*

என்று திருப்பதி வேங்கடவனை 'அண்ணா' என்றழைத்துத் தன் துன்பத்தைப் போக்குமாறு வேண்டுகிறார்.

திருவெள்ளக்குளத்துப் பெருமாளை வேண்டும் போது 'கண்ணார் கடல் போல்' என்ற சொற்றொடராலேயே மங்களா சாசனத்தை ஆரம்பித்து இம்பெருமாளையும் 'அண்ணா அடியேனிடரைக் களையாயே' என்கிறார்.

*கண்ணார் கடல் போல் திருமேனிகரியாய்*
*நண்ணார் முனை வென்றி கொள்வார் மன்னு நாங்கூர்*
*திண்ணார் மதில் சூழ் திருவெள்ளக் குளத்துள்*
*அண்ணா, அடியேனிடரைக் களையாயே.*

திருவேங்கட முடையானிடத்தில் தம் இடரைக்களைய வேண்டியது திருவெள்ளக்குளத்து சீனிவாசனால் நிறை வேறினமையால் அவருக்கு இவர் அண்ணாவார்.

திருமங்கையாழ்வார் முதலில் திருமலை வேங்கடவனை அண்ணா என்று விட்டு அதற்குப்பிறகு இப்பெருமாளை அண்ணா என்றதால் அவருக்கு இவர் அண்ணனானார். வேங்கடவனை அண்ணா என அழைத்த இவர் அதன் பின் தன் மங்களா சாசனம் முற்றிலும் வேறு எவரையும் அண்ணா என அழைக்கவேயில்லை. பிறகு இவரை மட்டுமே அண்ணா என்றதால் அந்த அண்ணாவுக்கு இவர் அண்ணனானார்.

அண்ணன் குடி கொண்ட கோவில் அண்ணன் கோவிலாதலால் திருவெள்ளக்குளத்திற்கு அண்ணன் கோவில் எனும் பெயர் உண்டாயிற்று. அண்ணன் கோவில் என்பதே முதன்மை பெற்று விளங்குகிறது.

நம்மாழ்வார் வேங்கடவனை 'அலர் மேல் மங்கையுறை மார்பா' என விளித்தது போல் திருமங்கை இப்பெருமானைப் 'பூவார் திருமாமகள் புல்கிய மார்பா' என் விளிக்கிறார். திருமங்கையாழ்வார் 'வேடார் திரு வேங்கட மேய விளக்கே' என விளித்து வேங்கடவனுக்கும் இவருக்கும் உள்ள தொடர்பை விரிவுபடுத்துகிறார்.

மேலும் வேங்கடவனை மங்களா சாசனம் செய்து முடிக்கையில் ***'கலியன் சொன்ன மாலை வல்லாராவர் வானவ ராகுவார் தாமே'*** என்று சொல்லி முடிப்பது போலே, வெள்ளக்குளத்துப் பெருமாளையும்' கலியன் சொன்ன மாலை வல்லவரென வல்லவர் வானவர் தாமே' என்று கூறி அவருக்கிவர் அண்ணா என்கின்றார்.

இத்திருத்தலத்தைத் தென் திருப்பதி என்பர். திருவெள்ளக் குளத்து எம் பெருமானிடம் திருமங்கையாழ்வார் வேண்டுவன இவை.

''திருவெள்ளக்குளத் தெம் பெருமானே' கடல் போன்ற திருமேனியை உடையனாயிருப்பது சம்சாரத்தில் கொதிப்படைந்து கிடக்கும் எம் போலியருடைய தாபங்களைத் தணிப்பதற்கல்லவா? அவ்வாறிருந்தும் அடியேனுடைய தாபங்களை இன்னமும் நீக்காதிருப்பது ஏன்? சர்வ ரட்சகன் என்பது விளங்கவல்லவா நீ திருத்துழாய் மாலையை அணிந்துள்ளாய்? நீ என்னிடரை நோக்கா தொழியில் துளவ மாலை அணிந்து பயனென்ன? போவோர் வருவோரெல்லாம் கையெடுத்து வணங்கும் படியாக எளியவனாக உள்ளாய். இந்திரன் பசிக் கோபத்தினால் ஏழுநாள்இடைவிடாது மழை பெய்வித்த போது குடையாகக் கோவர்த்தன மலையைக் கவித்துத்

திருவாய்ப் பாடியின் இடரை நீக்கினவல்லனோ நீ? குவலயாபீடம் என்னும் யானையின் கொம்புகளை முறித்தாய். ஒரு பிராட்டிக்காக அரிய பெரிய செயல்களைச் செய்தாய்; மலைகளைக் கொண்டு சேது அமைத்தாய். சங்கல்ப மாத்திரத்தாலேயே படைப்பு அழிப்புகளைச் செய்து தலைக்கட்டவல்லவன் நீ. ஆயினும் கையிலே கோல் கொண்டு கறவைகளின் பின்னே சென்று அவற்றை மேய்த்தாய். பூமியைப் பிரளயம் கொண்ட காலத்தில் வராக அவதாரம் எடுத்து அதனை இடந்து எடுத்தாய். நாராயணன் என்று பெயர் பெற்றுள்ளாய். உடலுக்கு நன்மை செய்ய வேண்டுவது உடலினாலான ஆன்மாவின் கடமையல்லவா? இப்படியெல்லாம் பலருக்குப் பல்வேறு விதமாக அருள் பாவித்த நீ அடியேனுக்குச் சிறிது அருள் செய்து துன்பங்களைப் போக்கலாகாதா?''!

என்று பாசுரங்கள் தோறும் வேண்டுகிறார்.


திருவெள்ளக்குளம் என்னும் பெயரைக் கேட்டவுடன் குமுதவல்லி என்னும் பெயரும் நினைவில் நிழலாடும். திருவெள்ளக்குளத்தில் மிகச் சிறந்ததொரு தாமரைப் பொய்கை இருந்தது. ஒரு சமயம் விண்ணுலக மங்கையர் அங்கு நீராடிச் சென்றபோது அவர்களும் திருமாமகள் என்பவள் தன் விருப்பப்படி தெய்வ வடிவைத் துறந்து மானிட உருக் கொணடு குமுத மலர் கொய்து நின்றாள். அனுட்டானத்திற்கு வந்த வைணவ மருத்துவர் அவளை யாரவள் என வினவிட அவள் தன்னுடன் வந்த மகளிர் தன்னை விட்டுப் போய் விட்டனர் எனவும் தன்னைப் பாதுகாக்கு மாறும் வேண்டினாள். அவருக்கு மக்கள் பேறு இல்லாமையால் அவளைத் தன் இல்லம் அழைத்துச் சென்று குமுத வல்லி என்னும் திருநாமமிட்டு வளர்த்து வந்தார்.

தக்க பருவமுற்றதும் மணமுடிக்க ஏற்ற மணவாளன் கிடைப்பான எனக் கவலையுடன் இருந்தார். அவருடைய இல்லம் வந்த திருமங்கை மன்னர் குமுத வல்லியைக் கண்டார். அவளை மணமுடித்துத் தர வேண்டினார். குமுத வல்லி பஞ்ச சமஸ்காரமுடைய வைணவர்க்கே வாழ்க்கைப்படுவேன் என்று கூறினாள். திருமங்கை நறையூர் நம்பியிடத்து அவற்றைப் பெற்றுத் திருவெள்ளக்குளம் திரும்பினார். ஆனால் குமுத வல்லி மீண்டும் ஒரு நிபந்தனையிட்டாள். ''ஓராண்டளவு நாள் தோறும் 1008 வைணவர்கட்குத் திருவமுது படைத்து அவர் பாததீர்த்தம், போனகம் செய்த சேஷத்தையும் உட்கொண்டாலன்றி'' தான் மணமாலை ஏற்கேன் என்றாள். அரசனும அவ்வாறே செய்து முடித்து ஓராண்டு கழிந்தபின் அவளை மணந்தார். ஒரு மங்கையினால் ஆழ்வாராக மாறினமையால் மங்கை

யாழ்வாராகித் **திருமங்கை ஆழ்வார்** ஆனார். இத்திருத்தலத்தில் குமுதவல்லியாரும் கோவில் கொண்டுள்ளார்.

மணவாள மாமுனிகட்கு இறைவன் காட்சி கொடுத்த திருத்தலம் இது. மணவாள முனிகள் எம்பெருமானைத் தேட, எம்பெருமான் மணவாள மாமுனியைத் தேட இருவரும் இங்குள்ள தடாகத்தே சந்தித்தனராம்.

திருவெள்ளக்குளம் மக்கட் பேரளிக்கும் திருத்தலம். திருமணம் நடைபெற வேண்டும் என விழைவோர் இங்கு வேண்டிக் கொண்டால் நிறைவேறும் என்பதும், ஆயுள் விருத்தி ஏற்படும் என்பதும், அடியவர் நம்பிக்கை.



பதினெட்டு

# 18. திருப்பார்த்தன் பள்ளி

## தாமரையாள் கேள்வன்

திருப்பார்த்தன் பள்ளி திருநாங்கூர்த் திருப்பதிகளுள் கடைசி - அதாவது பதினொன்றாவது ஆகும். சீர்காழி புகை வண்டி நிலையத்து இருந்து பத்துக் கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. திருநாங்கூரிலிருந்து இரண்டரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருவெண் காட்டிலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவுள்ளது. திருநாங்கூரிலிருந்து திருவெண்காட்டிலிருந்தும் நடந்து வரலாம். இவ்வூரும் மிகச் சிற்றூர் ஆகும்.

இத்தல வரலாற்றினைப் பற்றிப் பத்மபுராணம் பேசும் செய்திகள் இவை. பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான அருச்சுனன் இவ்விடத்திற்கு வந்த போது, அதிகமான நீர் வேட்கையுண்டாக இங்குத் தவமியற்றிய அகத்தியரிடம் குடிப்பதற்கு நீர் கேட்க, அகத்தியர் கமண்டலத்தில் பார்த்த போது அதில் நீரில்லை.

அகத்தியர் இது கண்ணபெருமானின் திருவிளையாடல் என்பதை அறிந்து அருச்சுனனிடம், ''அருச்சுனா, நீ எப்போதும், எந்த உதவி வேண்டுமாயினும் கண்ணபிரானையல்லவா அழைக்க வேண்டும்'' என்று உணர்த்தத் தன் தவறு உணர்ந்து உடனே கண்ணனை நினைக்கக் கண்ணன் அவ்விடத்தே வந்து அருச்சுனனிடம் கத்தி ஒன்றினை அளித்தான்.

அருச்சுனன் அக் கத்தியால் மண்ணைக் கிளறிப் பூமியைப் பிளக்க உடனே அங்குத் தூய கங்கை நீர் பெருகியது. தாகம்தீர்ந்த அருச்சுனன் இவ்விடம் கண்ணனால் ஞானம் பெற்றான்.

இத்திருக்கோயில் கண்ணனுக்கு உண்டான கோயிலானதால் ***பார்த்தன் பள்ளி***யாயிற்று. அருச்சுணன் சிற்பம் திருச்சுற்றில் அர்த்தமண்டபத்தில் தென் திசையில் அமைந்துள்ளது. அருச்சுணன் செவ்வக வடிவான பீடத்தின் மீது நின்ற நிலையில் உள்ளார் அருச்சுணனின் இடது பக்கத்தில் கத்தி உள்ளது. அருச்சுணன் அருகில் கிருஷ்ணன் சிற்பம் உள்ளது.

இத்திருத்தலத்தில் ஏகாதச உருத்திரர்களுக்கும், பார்த்தனுக்கும் வருணனுக்கும் எம்பெருமாள் தாமரையாள் கேள்வனான நின்ற கோலத்தில் சேவை தந்ததாக நம்பப் பெறுகிறது.

## மேற்குத் திசைநோக்கி

இத்தலத்து எம்பெருமான் கிழக்குத் திக்கு நோக்கிடாது மேற்குத் திக்கு நோக்கிச் சேவை சாதிக்கிறார். இதற்கும் ஒரு காரணம் உள்ளது. மழைக் கடவுளான வருணன் மேற்குத் திக்கிற்கு அதிபதி. எனவே எம்பெருமான் மேற்குத் திசை நோக்கிய நிலையில் சேவை சாதிக்கிறார். வருணன் கடுந்தவமியற்றித் தனக்குப் பார்த்தசாரதியாகச் சேவை சாதிக்க வேண்டியதாகக் கூறும்.

தேவகுரு பிரஹஸ்பதியின் மனைவியைக் கவர்ந்து சென்ற பிரம்மஹத்தி தோஷத்திற்கு வருணன் ஆளாகிக் கடலில் வீழ்ந்து விமோசனம் பெற்றவன். அருச்சுணனோடு, பார்த்தனுக்கும் எம்பெருமாள் சேவை சாதித்துள்ளார். இப்பெருமாள் இடையில் கத்தி வைத்துள்ளார்.

## மூலவர்

மூலவருடைய திருநாமம் ***தாமரையாள் கேள்வன்.*** மூலவர் மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் உள்ளார். இத்தல உற்சவரின் பெயர் ***பார்த்த சாரதி*** என்பதாகும். இத்தலத்திலேயே சங்கு, சக்கரம், கதை, வில், அம்பு கொண்டு கோலவல்லி இராமன் எனும் உற்சவ மூர்த்தி ஒருவரும் உள்ளார். ஆனால் இந்த உற்சவருக்குரிய மூலவர் சிறிது தொலைவில் தோப்பு ஒன்றினுள் தனிக் கோவில் கொண்டுள்ளார்.

## தாயார்

தாயாரின் திருநாமம் ***தாமரை நாயகி*** என்பது. பார்த்தசாரதிப் பெருமாளாய்த் திருவல்லிக்கேணியில் எழுந்தருளியுள்ள பெருமாள்

இரண்டு கைகளுடன் வீரம் ததும்பும் முகத்துடன் உள்ளார். ஆனால் இங்குள்ள பார்த்த சாரதிப் பெருமாளோ நான்கு கரத்தனாய் அமைதி தவழும் முகம் கொண்டு அருள் பாலிக்கிறார். இப்பெருமானுக்கு மீசை இல்லை.

திருமங்கையாழ்வார் 10 பாசுரங்களில் மங்களா சாசனம் செய்துள்ளார். பொய்கையாழ்வாரும் இவரை மங்களா சாசனம் செய்துள்ளதாகக் கருத இடம் உள்ளது. தாமரையாள் கேள்வன் என எம்பெருமானின் திருநாமத்தை அவர் குறிப்பிடக் காணலாம்.

*பெயருங் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ*
*உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்*
*தருமனையே நோக்கு மொண்டா மரையாள் கேள்வன்*
*ஒருவனையே நோக்கும் உணர்வு.*

ஆனால், 'தாமரையால் கேள்வன்' எனக் குறிப்பிட்ட பொய்கையார், பார்த்தன் பள்ளி என்னுத் திருத்தலப் பெயரைச் சுட்டவில்லையாதலால், மங்களா சாசனம் எனக் கொள்ளுதல் பொருத்தமில்லை என்பர். ஆனால் இந்தப் பிராட்டியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுவதால் இத்தலத்தைப் பொய்கை யாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளார் என்றே கொள்வர். இத்திருத்தலம் பற்றி 'யாக்ஞவல்ய ஸ்மிருதி'யும் குறிப்பிடுகிறது நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம் பந்தப் பெருமான்

*''செய்யருகே புனல்பாய பனைத்தோள்*
*பாகம் பாம்பணையான்''*

எனக் குறிப்பிடும் 'பாம்பணை' என்னும் சொற்றொடர் இத்தலத்தலத்தையே குறித்தது என்பர் பாம்பைப் படுக்கையாகக் கொண்ட திருமாலையே பாம்பணையான் என்ற சொல்லாய்க் குறித்ததாகக் கொள்வர் தசரதன் இங்கு வேள்வி நிகழ்த்தியதாகக் கூறுவர்.

கண்ணனிடமிருந்து பெற்ற கத்தியால் கீறித் தீர்த்தம் உண்டாக்கியதால் இத்திருத்தலத்துத் தீர்த்தம் **கட்க புஷ்கரணி** எனும் பெயர் பெறலாயிற்று. இத் தீர்த்தத்தைக் **கங்கா தீர்த்தம்** எனவும், ***விஷ்ணு பாததீர்த்தம்*** எனவும் அழைக்கின்றனர்.

இத்தலம் திருநாங்கூர் பதினொரு திருப்பதிகளில் பலாசவனச் க்ஷேத்திரம், புரசங்காடு என அழைக்கப் பெறும் பகுதியில் உள்ளது.

பலாசவனம் என்பதும் இத்தலம் உள்ள பகுதியோடு முடிந்து விடுகிறது.

இத்தலத்தில் எழுந்தருளிய இப்பெருமாள் குருஷேத்திரத்திலிருந்து வந்தவரென்றும், திருவல்லிக்கேணி அமுதன் பார்த்த சாரதிப் பெருமாளே இங்கு வந்ததாகவும் கொள்வர்.

## மூன்று தேவியர்

108 திவ்ய தேசங்களில் எதிலும் இங்குத் தவிர மூன்று தேவிமார்கள் புடை சூழ பெருமாள் வேறு எங்கும் இல்லை. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற கண்ணன் திருக்கோயில்கள் வேறு எதிலும் இத்தகைய தோற்றமில்லை.

மூலவர், உற்சவர் இருவருமே ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என மூன்று தேவியர்களுடன் காட்சி தருவது ஓர் அரிய காட்சியாகும். இவர் கண்ணபிரான் அல்லவா? அதனால்தான் போலும் என்றாலும் மற்றக் கண்ணன் கோயில்களில் அத்தகு சேவை சாதிக்கவில்லை.

திருநாங்கூரில் மணி மாடக் கோயில் என அழைக்கப்பெறும் நாராயணப் பெருமாள் சன்னதியில் இத்தலத்துப் பெருமாளும் ஆண்டுதோறும் நடைபெறும் கருட சேவைக்குச் சென்று திரும்புகிறார்.

தன்னையே தாயாகவும், மகளாகவும் பாவித்துக் கொண்டு, தன் மகள் பார்த்தன் பள்ளி எம்பெருமானைக் கண்டு, யானையின் கொம்பை முறித்த கண்ணனே யெனவும், குவளை மலர் போலவும், மேகம் போல வண்ணம் கொண்ட எனது மன்னனெனவும், யானையை ஒத்தவனெனவும், திருநாங்கூருக்கு அருகில் உள்ள பார்த்தன் பள்ளியில் உறைகின்ற தாமரையாள் கேள்வனெனவும் பாடி மயங்கிக் கொண்டேயிருக்கிறாள் எனப் பெரிய திரு மொழியில் மங்கை மன்னவர் திருமங்கையார் பாடியுள்ளார்.

*கவள யானைக் கொம்பொசித்த*
*கண்ணனென்றும் காமரு சீர்க்*
*குவளை மேக மன்னமேனி*
*கொண்ட கோ னென்னானையென்றும்*
*தவள மாட நீடு நாங்கைத்*
*தாமரையாா் கேள்வ னென்றும்*
*பவள வாயா ளென் மடந்தை*
*பார்த்தன் பள்ளி பாடுவாளே*

பத்தொன்பது

# 19. திருப்பாடகம்

## பாண்டவ தூதர்

கண்ணனைக் குழந்தையாய், மன்னனாய் மங்கையர் மனங் கவர்ந்தவனாய்க் கண்டோம். அந்தக் கண்ணன் பாண்டவ தூதனாய்த் துரியோதனாதியரிடம் தூது சென்றான்.

### *மல்லரை மாட்டிய*

சூடிக் கொடுத்த சுடர்கொடி, பாமாலை பாடிக் கொடுத்த பாவை எட்டாவது பாசுரத்தில்

*''மாவாய்ப் பிளந்தானை, மல்லரை மாட்டிய*
*தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்*
*ஆவா வென்றாராய்ந் தருளே லோ ரெம்பாவாய்''*

என அந்தத் தேவாதி தேவன் மல்லரை மாட்டிய வரலாற்றைக் கூறுகிறார். அந்த வரலாறு இது.

பஞ்ச பாண்டவர்களுக்குத் தூது செல்லக் கண்ணன் ஒப்புக் கொண்டதும், நம் வலையில் இக்கண்ணன் சிக்க மாட்டானா என ஏங்கிய துரியோதனன் இந்த அரிய வாய்ப்பைப் பெற்றான். மிகப்பெரிய சுரங்கம் அமைத்து அதனுள் பல மல்லர்களை ஒளித்து மேலே மூடி, அதன்மேல் ஆசனமிட்டுக் கண்ணனை அப்பீடத்தினுள் உட்கார வைத்து விட்டான். இதனை அறிந்து கொண்டான் எல்லாம் அறிந்த மாயக்காரன் மாயவன். விசுவரூபம் கொண்டு அமர்ந்தான். விளைவு மாட்டிக் கொண்ட மல்லர்கள் நசுங்கி மாண்டனர்.

பெரிய காஞ்சியில் பாடகமென்று பெயர் கொண்ட திருப்பாடகத்தில் இக்கண்ணனைச் சந்திக்கிறோம். காஞ்சீபுரம் சென்னையிலிருந்து 75 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

சென்னை-காஞ்சீபுரம் விரைவுப் பேருந்துகள். ஒன்றரை மணி நேரத்தில் காஞ்சியை அடையும். சென்னையிலிருந்து புகைவண்டி வழி உண்டு. செங்கற்பட்டு - அரக்கோணம் புகைவண்டிப் பாதை உள்ளது. பெரிய நகரம் இது. காஞ்சீபுரம் மாவட்டத்திற்குக் காஞ்சீபுரம் தலை நகரமாக விளங்குகிறது. பல திருத்தலங்கள் இதில் உள்ளன. சைவ, வைணவச் சிறப்பு மிக்க ஊர். கண்ணனை மட்டுமல்லாது அருளாளர் வரதரையும் இங்குத் தரிசிக்கலாம். காஞ்சியில் ஒன்பது திவ்ய தேசங்கள் உள்ளன.

பெருமாளின் நின்ற திருக் கோலத்தினைத் திருஊரகத்திலும், கிடந்த திருக்கோலத்தினைத் திருவெஃகாவிலும், இருந்த திருக் கோலத்தினைத் திருப்பாடகத்திலும் காஞ்சிபுரத்தில் காண்கின்றோம்.

திருமழிசை யாழ்வார்,

*நின்ற தெந்தை யூரகத்து இருந்த தெந்தை பாடகத்து*
*அன்று வெஃகனை கிடந்தது எண்ணிலாத முன்னெலாம்*
*அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்*
*நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுள்ளே*

என்று கூறுகிறார். அவர் இப்பாடல் வரியாகக் கூறுவன இவை.

''இத்தலங்கள் எல்லாம் நான் ஜென்மம் எடுப்பதற்கு முன்னரே எம்பெருமாள் அர்ச்சா ரூபியாக எழுந்தருளிய திருத்தலங்களாகும். எம்பெருமாள் அர்ச்சா வடிவில் இங்கு எழுந்து அருளிய காலங்களில் நான் பிறக்கவில்லை. இப்போது பிறந்து விட்டேன். இந்த மூன்று திருக்கோலங்களையும் என் நெஞ்சிலுள்ளேயே பெருமாளுக்கு அமைத்துக் கொண்டேன். அதனால் நான் இனி மறந்திலேன். அமர்ந்து, இருந்து கிடந்த, மூன்று திருக்கோலங்களும் என் நெஞ்சை விட்டு நீங்காதவை. எனவே இத்திருக்கோல எம்பெருமான்களை விட்டு எனது நினைவு அகலாது. இந்த எண்ணமான ஞானம் வருவதற்கு முன்பு பிறந்தும் நான் பிறவாதவனாக இருந்தேன். இந்த ஞானம் பிறந்த பின் நான் மறக்கவில்லை.

பாரதப் போர் முடிந்த பின்னர் வெகு நாட்களுக்குப் பின் ஜென்மே ஜெய மகராஜன், வைசம்பாயனர் என்னும் ரிஷியிடம் பாரதக் கதையைக் கேட்டு வந்தார். அப்போது, ஸ்ரீ கிருஷ்ணர் அஸ்தினாபுரத்தில் இருந்து தூது சென்ற போது எடுத்த மாபெரும் திருக்கோலத்தை மாபாரதம் கைசெய்த மாஉருவத்தைத் தானும் சேவிக்க வேண்டுமென ஆசைப்பட்டு அதற்கு வழி கேட்டார். சத்திய விரத க்ஷேத்ரமான காஞ்சிக்குச் சென்று அசுவமேத வேள்வி செய்தார்.

வேள்வியின் முடிவில் விரும்பிய திருக்கோலத்தைக் காணலாமென முனிவர்கள் கூற மன்னன் அவ்வாறே செய்தான்.

வேள்வியின் பயனாய்ப் பிரம்மாண்டமான கண்ணன் யாகவேள்வியில் தோன்றி மன்னருக்கும் ஹாரித முனிவருக்கும் காட்சி கொடுத்தார் எனப் புராண வரலாறு கூறுகிறது.

இத்திருத்தலத்தினைப் பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய நால்வரும் ஆறு பாசுரங்களில் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

பூதத்தார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய பாசுரங்களை ஏற்றதால் இத்திருக்கோயில் எட்டாம் நூற்றாண்டிலேயே புகழ் பெற்று விளங்கியது.

இத்திருக்கோயிலின் திருவாயிலை மூன்று நிலைகள் கொண்ட இராஜகோபுரம், அலங்கரிக்கிறது. கருவறைமேல் அமைந்துள்ள விமானம் ஐந்து கலசங்கள் கொண்ட அரியதொரு படைப்பு. இவ்விமானத்திற்கு பத்ர விமானம், வேதகோடி விமானம் எனும் பெயர்கள் உள.

குமுதம், பட்டிகை என்னும் அமைப்புகளால் அதிட்டானம் அமைந்துள்ளது. மேல் சுவர் பகுதியில் புதைத்தூண்கள் நிறுவி வெளிப்பகுதி யாளி, வரிமானம், உட்கையில் பூதவரி அலங்கரித்து விமானத்தின் புறப் பகுதியில் நரசிம்மர், பரம பதநாதன் விளங்க அழகுற விளங்குகிறது.

விசால உண்ணாழிகையில் இருப்பத்தைந்தடி ஓங்கி விசுவரூபம் கொண்டு அமர்ந்த திருக்கோலத்தில் எம்பெருமான் உள்ளார். 108 திவ்ய தேசங்களில் மட்டுமல்லாமல் இந்தியாவில் வேறெங்கும் இதுபோல் காண வியலாது. அப்பேருரு முன் ஆறடி உயரமுள்ள மானிடர்கள் குறளாய்க் கூனி விடவேண்டியது தான். எம்பெருமான் சுதை வடிவத்தினர். அவருடைய திருப்பாதங்களைத்தான் நாம் நன்றாகத் தரிசிக்க இயலும் எம்பெருமானைக் கழுத்து வலிக்க அண்ணாந்து நோக்கினால்தான் திருமேனி ஒரு வாறு புலப்படும்.

இரண்டு கரங்களே கொண்டு சங்கு, சக்கரம் ஏதுமில்லாமல் எம்பெருமான் அபய வரதனாகக் கைகாட்டும் காட்சி பரிபாலனக் கூற்றத்தை வலியுறுத்துகிறது பாண்டவ தூதனாகிய இப்பெருமாளைப் பாண்டவர்களுக்குச் சமாதானம் பேசத் தூதனாய்ச் சென்ற கோலத்தில்

ஒரு முறை தரிசனம் செய்தாலே போதும் அங்கேயே கட்டுண்டு நின்று விடுவோம்.

கண்ணனின் மணிமகுடம் விதானத்தைவிட உயர்த்திருப்பதால், தளம் கூம்பிக் குகை போல் வரிசை இடாமல் குறுகி மேலே மறைந்துள்ளது. பழைய காலங்களில் செய்தது போல் சிற்பங்களைச் சுவரில் பதிப்பது என்பதைப் போல் செய்யாது இங்கே சிற்பி தனியாக அமைத்துள்ளார்.

கருவறையின் அமைப்பை உற்று நோக்கினால் நிலவறையின் மொத்தப் பகுதியை அப்படியே பெயர்த்துத் தலைக்கு மேல் குவித்து வைத்தால் எப்படி இருக்குமோ அது போல் தோற்றமளிக்கிறது. மிகச்சிறிய அளவில் இச்சன்னதி அமைந்திருந்தாலும் கருவறையின் குவிந்த அமைப்பும் அதனடியில் பிரம்மாண்டமான திருக்கோலத்தில் எம்பெருமான் வீற்றிருப்பதும் பார்த்துப் பார்த்து வியந்தும் மகிழத்தக்கது.

எம்பெருமானின் நின்ற, அமர்ந்த, கிடந்த திருக்கோலங்கட்கு திருஊரகம், திருப்பாடகம், திருவெஃகா ஆகிய மூன்று திருத்தலங்களே ஒரு காலத்தில் புகழ் பெற்றிருந்த தெனச் சொல்வர். 108 திவ்ய தேசங்களில் நின்ற திருக்கோலத்திற்கு வேங்கட முடையானையும், அமர்ந்த திருக்கோலத்திற்குப் பத்ரிநாதனையும், கிடந்த திருக்கோலத்திற்கு அரங்கத்து எம்பெருமானையும் தனித்துவமாகக் கொள்ளலாமெனினும் ஆழ்வார்கள் நின்ற, கிடந்த, இருந்த திருக்கோலங்களுக்கு இம்மூன்று பதிகளையே மங்களாசாசனம் செய்துள்ளனர். எனக் கூறுவர்.

இதற்கு எடுத்துக் காட்டாகப் பொய்கை யாழ்வாரின் பொன்னுரைகளையும், பேயாழ்வார் பெருமொழிகளையும், திருமழிசையின் திருவாசங்களையும், நம்மாழ்வாரின் நன் மொழிகளையும் காட்டுவர்.

பொய்கையாழ்வார்,

*வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத*
*பூங்கிடங்கில் நீள் கோவல் பொன்னகரும் - நான் கிடத்தும்*
*நின்றான் இருந்தான், கிடந்தான், நடந்தானே*
*என்றால் கெடுமாம் இடர்.*

எனத்திருவெஃகாவைச் சுட்டுகிறார்.

பேயாழ்வார்.

*இசைந்த வரவமும் வெற்புங் - கடலும்*
*பசைந்தங்கு அமுது படுப்ப - அசைந்து*
*கடைந்த வருத்தமோ கச்சி வெஃகாவில்*
*கிடந்திருந்து நின்றதுவுமங்கு*

என உரைக்கையில் திருவெஃகாவைக் குறிப்பிடுகிறார்.

திருச்சந்த விருத்தத்தில் திருமழிசையார்

*குன்றிருந்த மாட நீடும் பாடகத்தும் ஊரகத்தும்*
*நின்றிருந்து வெஃகனைக் கிடந்ததென்ன நீர் மையே.*

எனக் கூறியிருப்பதில் ஊரகம், பாடகம், வெஃகாவையே காட்டுகிறார்.

நின்றவானும் அன்றியும் இருந்தவாறும் கிடந்த வாறும்

நினைப்பரியன ஒன்றலா உருவாய் அருவாய நின்மாயங்கள்

என நம்மாழ்வார் மங்களா சாசனத்திற்கு ஈடு வியாக்யானத்தில் 'திருவூரகத்தில் நின்ற படியும், திருப்பாடகத்திலே இருந்தபடியும், திருவெஃகாவிலே கிடந்த படி யு மாதல்' எனச் சுட்டுகிறது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நோக்குவார் ஆழ்வார்கள் காலத்தும் அதற்கு முன்னரும் எம்பெருமானின் மூன்று கோலங்களுக்கு இம்மூன்று தலங்களையே குறித்தனர் எனவும், இருந்த கோலத்திற்குத் திருப்பாடகத்தைக் குறித்தனர் எனவும் கூறுகின்றனர். பிற்காலத்தே இந்நிலைகள் மாறியிருக்கின்றன வெனில் அவை சிறப்புப் பெறத்தொடங்கியுள்ளன எனக் கொள்ளலாம்.

இவை மூன்றுமே காஞ்சித் திருத்தலத்துத் திவ்ய தேசங்கள். 108 திவ்ய தேசங்களில் திவ்ய தேசமான திருநீர் மலையில் மட்டுமே நின்ற, இருந்த, கிடந்த, நடந்த என்னும் நான்கு திருக்கோலங்களில் காட்சி தருகிறார்.

## யக்ஞரின் தோல்வி

எமக்கெல்லாம் தலைவர் என்னும் பொருள் படும் **எம்பெருமானார்** என்னும் சொல் உடையவர் இராமானுஜருக்கு உரியது. அதே போல் 'அருளாளர்' என்பது காஞ்சி அருளாளர் தேவராஜனைக் குறிக்கும். ஆனால் இவ்விரு சிறப்புப் பெயர்களும் கூடிய 'அருளாளன் எம்பெருமான்' என்றே நாமம் சாத்தப் பெற்றவர் யக்ஞமூர்த்தி ஆவார்

ஆந்திரப் பிரதேச நெல்லூர் மாவட்டத்தில் விஞ்சமூர் என்றும் சிறு கிராமத்தில் அவதரித்தவர் யக்ஞமூர்த்தி அவர் காசி மண்ணில் மாயவாதியாய் ஏகதண்டம் பூண்ட ஒரு துறவியானார். உடையவர் இராமானுஜர் பெருஞ்சிறப்புடன் விளங்குவதை அறிந்து அவருடன் வாதம் செய்ய எண்ணித் தெற்கு நோக்கி வந்தார் யக்ஞ மூர்த்தி. இராமானுஜரை வாதுக்கழைத்தார்.

யக்ஞமூர்த்தி 'தாம் தோற்றால் சமயம் மாறிவிடுவதாக' ஒப்புக் கொண்டார். உடையவர் 'கலைவாணியின் பாராட்டைப் பெற்ற ஸ்ரீ பாஷ்ய கைங்கர்யத்தையே நிறுத்தி விடுவதாகக்' கூறிவிட்டார். 18 நாள்கள் வாதம் நடைபெற்றது. 17 ஆவது நாள் இராமானுஜரையே திணறடிக்கும் வினாத்தொடுத்தாராம். மறுநாள் உத்தரம் செல்வோம் என விடைகொண்டுவிட்டார். பொழுது விடியும் வேளையில் வாதம் தொடங்க விருந்த வேளையில். இராமானுஜர் தாம் வழிபடும் அருள் வரதர் கமலமலர்ப் பாதங்களைச் சரணடைந்தார். அருளாளர் அவருக்கு வழி காட்டினார். ''ஆளவந்தார் எழுதிய மாயாவாத கண்டனத்தில் உமக்குப் பதில் உள்ளது'' என அருளினார். நம்பிக்கை துளிர்விட இராமானுஜர் வாதக் கூடம் வரும் வேளையில் எதிர்வந்த யக்ஞமூர்த்தி வாதினைத் தொடர விரும்பாமல், உடையவரிடம் உமக்கும் பெருமாளுக்கும் சற்றும் வேறுபாடு தெரியவில்லை என அருளாளரைப் பணிந்தார். ஞானசாரம், பிரமேயசாரம் என்னும் இரு நூல்களையும் எழுதிய யக்ஞமூர்த்தி, அருளாளர் திருவருளால் எம்பெருமானால் ஆட் கொள்ளப்பெற்றார். அதன்பிறகு அவர் 'அருளாளன் எம் பெருமானார்' என்னும் பெயர் பெற்றார். கார்த்திகைப் பரணியில் அவதரித்த இவருக்குத் தனிக்கோயில், விழாக்கள் உண்டு.


பழமைவாய்ந்த இத்திருக்கோயில் அதிட்டானச் சுவரிலுள்ள கல்வெட்டுகள் இராசாதிராசன் காலத்தவை. இம்மன்னவர் கல்யாண புரமும், கொல்லா புரமும் எறிந்து போர்க்களத்தில் யானை மேல் துஞ்சியவர். இவர் காலத்தே இக்கண்ணன் கோயிலில் விளக்குக் கொடைகள் ஏற்பட்டன.

பிள்ளைப் பெருமாளையங் கார் தம் நூற்றெட்டுத் திருவந்தாதியில்

*தவம் புரிந்த சேதனரைச் சந்திரன் ஆதித்தன்*
*சிவன் பிரம்மனிந்திரனா செய்கை - உவந்து*

*திருப்பாடக மருவுங் செங்கண்மால் தன்மார்*
*பிருப்பாடக உரையாலே.*

யார் என்ன பயன் கருதித் தவம் செய்யினும் அதன் பயனாகவே எம்பெருமான் அப்பயன் அருள்வான். சந்திரன், சூரியன், சிவன், பிரம்மன், இந்திரன் என அவரவர்களின் எண்ணங்கற்கேற்ப நியமித்து அவர்களின் தவத்திற்கு மகிழ்ந்து பயனளிக்கிறான். அத்தகையோர்தான் இந்தப் பாடகத்துள்ளார்கள் மணவாள மாமுனிகளும் இங்கு எழுந்தருளி மங்களாசாசனம் செய்துள்ளார். இத்திருக்கோயில் தீர்த்தம் மத்சய தீர்த்தம் ஆகும்.



இருபது

# 20. திரு அல்லிக்கேணி

## அமுதன் - பார்த்தசாரதிப் பெருமாள்

திருப்பதியில் வேங்கட கிருட்டிணனாகச் சங்கு சக்கரதாரியாகத் தரிசித்த பெருமாளைச் சென்னையில் திருவல்லிக்கேணியில் வேங்கட கிருஷ்ணனாக தேரோட்டி மகனாய்க் காண்கிறோம். இந்த அல்லிக்கேணி அமுதன் கோயில் சென்னை மாநகரில் திருவல்லிக்கேணியின் மையத்தில் அமைந்துள்ளது. 'மயிலைத் திருவல்லிக்கேணி' எனத் திருமங்கை ஆழ்வார் இதனைக் குறிப்பிடுவார்.

தேரோடும் நான்கு மாட வீதிகள், தெப்பக்குளம் என எழிலுடன் விளங்குகிறது. இத்திருக்கோயில் சென்னை எழும்பூர் புகைவண்டி நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்திலும், சென்னை கடற்கரையிலிருந்து ஒரு அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. பேருந்தில் வந்தால் விவேகானந்தர் இல்லம் நிறுத்தத்தில் இறங்கி நடந்து வரலாம். திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையிலிருந்தும் இத்திருக்கோயில் வரலாம். கோயில் வாயிலில் நகரப் பேருந்துகள் நிற்கா.

இத்திருக்கோயிலுக்குக் கிழக்கு வாயில், மேற்குவாயில் என இரு வாயில்கள் உள்ளன. மேற்கு வாயில் வழியாகச் சென்றும், கிழக்குவாயில் வழியாகச் சென்றும் தரிசிக்கலாம். மேற்கு வாயிலிலும் கிழக்கு வாயிலிலும் கொடிக்கம்பம் பலிபீடம் ஆகியன உள்ளன.

இத்திருத்தலத்தினைப் ***பிருந்தாரண்யஸ்தலம்*** எனவும், ***பஞ்ச வீரத்தலம்*** எனவும், பிருகு, அந்திரி, மரீசி, மார்க்கண்டர், சுமதி, ஜாபாலி, சப்த ரோமர் ஆகிய எழுவர் தவம் செய்த தல எனவும் கூறுவர். இத்திருக்கோயில் கிழக்குப் பகுதியில் மகா மரியாதை

மண்டப வாயில் உள்ளது. அதனை அடுத்து அமைந்து இருப்பது இராச கோபுரம்.

ஏறக்குறைய மயிலைக் கபாலீச்சுரமும் இத்திருக் கோயிலும் ஒரே நேர் கோட்டில் அமைந்துள்ளன.

கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள இத்தலத்தைப் பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூவர் மங்களா சாசனம் செய்துள்ளனர். பேயாழ்வார் ஒரு பாசுரத்தாலும், திருமங்கை பத்துப் பாசுரங்களாலும், திருமழிசை ஒரு பாசுரத்தாலும் ஆகப் பன்னிரண்டு பாசுரங்களாலும் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

இத்தலத்திலுள்ள திருக்குளத்தில் அல்லிமலர்கள் நிறைந்து காணப்பட்டமையால் அல்லிக்கேணி என்று பெயர் பெற்றது. அப்பெயரே ஊருக்கு நிலைத்துவிட்டது. இதைத்தவிர கைபிரணி, பிருந்தாவனம், துளசி வனம் ஆகிய பல பெயர்கள் உள்ளன.

## *திருச்சுற்று*

இராச கோபுரத்தைக் கடந்து கொடிக்கம்பம், பலிபீடம் ஆகியவற்றைக் கடந்து உள்ளே நுழைந்தால் முதல் திருச்சுற்று. இத்திருக்கோயிலுக்கு ஒரே ஒரு திருச்சுற்றுதான். இந்தத் திருச்சுற்றிலேயே ஐந்து சந்நிதிகள் உள்ளன.

ஐந்து மூர்த்திகள் ஒருங்கே எழுந்தருளியுள்ள திருத்தலம் இது.

ஐந்து சந்நிதிகள் இவை.

1. மூலவர் வேங்கட கிருட்டிணன் - ருக்மிணி பிராட்டி
2. மூலவர் அரங்கநாதர் - வேத வல்லித் தாயார்.
3. மூலவர் ஸ்ரீ ராமன் - சீதாப்பிராட்டி.
4. மூலவர் தேவராஜப் பெருமாள்.
5. மூலவர் அழகிய சிங்கர்

இந்த ஐந்து மூலவர்கள் தவிர வடமேற்குப் பக்கம் ஆண்டாளுக்குத் தனிச் சந்நிதி உண்டு. கொடிக் கம்பத்திற்கு வலது புறத்தே உள்ளது திருவாய் மொழி மண்டபம். அதில் கண்ணாடி அறை உள்ளது.

## *மூலவர்*

முதல் திருச்சுற்றில் கிழக்கே பார்த்தவடி மகா மண்டபம், அர்த்தண்டபம், அதன் பின் கருவறை உள்ளன.

கிழக்கு வாயில் வழியே நுழைந்தவுடன் மூலவர் வேங்கட கிருஷ்ணனைத் தரிசிக்கத் தனிவழி கம்பிக் கிராதிகள் வாயிலாக அமைக்கப்பட்டுள்ளது. சிறப்புத் தரிசனமும், தர்மதரிசனமும் உள்ளன.

கருவறைமுன் உள்ள மண்டபத்தில் மகா இடது புறம் உடையவர், மணவாள மாமுனிகள் சந்நிதிகள் காணலாம். மண்டபத்தில் இம் மகா திருக்கோயில் உண்டியல் உள்ளது. இம்மண்டபத்தில் தான் விழாக்கள் நடைபெறுகின்றன. இம்மண்டபத்தில் நின்றால் நேரே மூலவர் தெரிகிறார். கருவறையினுள் சென்று நின்றும் பெருமானைத் தரிசிக்கலாம்.

மூலவர் வேங்கட கிருஷ்ணன், ருக்மிணி பிராட்டியாருடன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கியவாறு சேவை சாதிக்கிறார். பெருமாள் மூலவர் வலது கையில் (சங்கு) பாஞ்ச சன்யம் ஏந்தி (சக்கரம் இன்றி) இடது கை திருவடியைக் காட்டுகின்ற தான முத்திரையோடு கிழக்கு முகமாக நின்று கொண்டிருக்கிறார். கையில் கோல் கொண்டு விளங்குகிறார்.

கருவறையிலேயே மூலவருடன் ருக்மிணி தேவியாரும், ஒருகையில் கலப்பை மற்றொருகையில் வரத முத்திரை கொண்ட பலராமரும், வலப்புறமும். இடப்புறம் தன் தம்பி சாத்யகி, பிள்ளை பிரத்யும்னர், பேரன் அநிருத்தன் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். கருவறையில் மூன்று தலைமுறை குடும்பம் சகிதமாகத் தன்னோடு தொடர்புடைய அண்ணன், தம்பி, மகன், பெயரன் ஆகிய மூன்று தலைமுறையினர்களுடன் சேவைதருவது ஒரு பெரும் சிறப்பு. 108 திவ்ய தேசங்களிலும் வளர்ந்த குல வழக்கப்படி பெரிய மீசையுடன் பெருமாள் எழுந்தருளியுள்ள திருத்தலம் இது ஒன்றுதான்

திருமலை வெங்கடேசனே வேங்கட கிருஷ்ணனாக எழுந்தருளியிருப்பதால் இரண்டாவது திருப்பதி என்றழைக்கின்றனர். அந்தத் திருவேங்கடமுடையானே இங்குச் சேவை தந்த காரணத்தால் வேங்கடகிருஷ்ணன் என்று மூலவர் திருநாமம் கொண்டு விளங்குகிறார். அந்த வரலாற்றைத் தல புராணம் இவ்வாறு கூறுகிறது.

பிருந்தம் எனில் துளசி. ஆரண்யம் எனில் காடு. எனவே பிருந்தாரண்யம் எனில் துளசி வனம் எனக் கொள்ளப் பெறுகிறது.

சுமதி என்னும் மன்னன் வேங்கட மலையில் சீனிவாசப் பெருமாளை வழிபட்டு அருச்சுனனுக்குத் தேரோட்டிய கண்ணனாகப்

பெருமாளைக் காண ஆசை கொண்டு தவத்திலிருக்க அப்போதே சீனிவாசன் அசரீரராய் ''நீ விரும்பிய தோற்றத்துடன் கைரவணி தீர்த்தமுடைய பிருந்தாரண்யத்தில் எழுந்தருளுவேன். அங்குச் சென்று தரிசிப்பாயாக'' எனக் கூற, சுமதியும் அவ்வாறு செய்தான். என்பது வரலாறு. ஆனால் இந்தப் பிருந்தாரண்யத்துக்கு எப்போது பெருமாள் அவ்விதம் வந்தாரென்னில் வேத வியாசருக்கு ஆத்திரேய முனிவர் என்றும் ஒரு சீடரிருந்தார். அவர்தம் குருவின் கட்டளைப்படி பிருந்தாரண்யத்திற்குத் தவம் செய்ய வந்தபோது அவரால் அளிக்கப்பெற்ற கண்ணனின் திவ்ய மங்கள விக்ரக மொன்றையும் கொண்டு வந்தார். அவ்விக்கிரகம் ஒரு கையில் சங்கினை ஏந்தியும், மறுகையில் தானமுத்திரையுடையதாகவும் இருந்தது.

பிருந்தாரண்யம் வந்த ஆத்திரேய முனிவர் அங்குச் சுமதி என்னும் முனிவரைக் கண்டு, (இவர் வேறு முனிவர்) மகிழ்ந்து தம் வருகையைக் கூற இருவரும் அப்பெருமாளை அங்கேயே பிரதிட்டை செய்து வழிபடலாயினர். வலப்புறம் ருக்மணியையும் இடப்புறம் சாத்யகியையும் நிறுவி வழிபட்டு அவ்விருவரும் மோட்ச உலகு பெற்றனர்.

இத்திருக் கோலத்தையே கண்டு வழிபாடுமாறு ஏழுமலையான் கட்டளையிட, சுமதி மன்னன் அவ்விதமே வழிபாடியியற்றினான். வேங்கடவனால் காட்டப்பட்டதால் **வேங்கட கிருட்டிணன்** என்னும் திருநாமமும் பெற்றார்.

## மூலவர் மூவர்

இந்த மூலவரைத் தரிசிக்க வலப்புறமாகச் செல்கையில் இரண்டு மூலவர்களைத் தரிசிக்கலாம். மூலவருக்கு இடப்புறம், நமக்கு வலப்புறம் ஸ்ரீராமன் சக்கரவர்த்தித் திருமகனாகத் தெற்கு நோக்கிய திருமுகத்துடன் சீதாப் பிராட்டியார், இலக்குவன், பரதன், சத்ருக்கன், அனுமானுடன் சேவை சாதிக்கிறார்.

இந்த இராமனுக்கு வலப்புறம் மூலவர் அரங்கநாதன் புஜங்க சயனம் கொண்டு கிழக்கு நோக்கிய திருமுகத்துடன் மனநாதன் என்னும் பெயரில் சேவை சாதிக்கிறார். திருமாலுடன் ஊடல் கொண்ட திருமகள் வைகுண்டத்தை விட்டுப்பிரிந்து இவ்விடத்தில் தவம் செய்து கொண்டிருந்த பிருகு மகரிஷியின் குடிசைக் கருகில் குழந்தையாய் உருவாகி நிற்க, வேதங்களில் கூறப்பெற்ற தேவ மகள் இவளே யென

உணர்ந்து வேத வல்லி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். பருவம் வந்ததும், அரங்கநாதனே இளவரசர் வடிவம் பூண்டு திருமகளை ஏற்றுக் கொண்டார். திருமகள் அரங்கநாதரைக் கண்டதும் இவரே மனநாதர், (என் கணவர், என்றுரைத்தால் மந்நாதர் என்னும் பெயரும் உண்டு. எனவே திருமணக் கோலத்திலான அரங்கநாதராக மந்நாதராக இத்தலத்து எழுந்தருளினார். என் நாயகன் என்ற பொருளை தெலுங்கில் மனநாதன் என்பர். மனநாதனே ஆதிமூர்த்தி என்பர்.

எம்பெருமான் திருவடிகளை வருடிய நிலையில் பூமாதேவியும் இலக்குமியும் உள்ளனர். கருவறைமுன் ஒட்டிய அர்த்த மண்டபத்தில் இராமபிரானும், திருவரங்கத்து எம்பெருமானும் உள்ள மண்டபத்தினுள் தென்பகுதியில் ஆழ்வார் பெருமக்களும், மணவாள மாமுனியும் செப்புச் சிலை வடிவில் நின்று எம்பெருமானைப் பாடிப் பரவிக் கொண் ருக்கின்றனர். திருக்கருவறையிலிருந்து வெளிவந்ததும் வ ப்புறம் கிழக்கே பார்த்தவாறு தனி மண்டபம். உயர்ந்த படிகளுடன் கொண்டுள்ளது.

## *தாயார்*

இம்ம ண்டபத்தின் மேல்புறம் கருவறை உள்ளது. அக்கருவறையில் வேதவல்லி நாச்சியார் என்னும் திருநாமம் கொண்டு பெரிய பிராட்டியார் விளங்குகிறார். தாயார் சந்நிதி எதிரே ஊஞ்சல் மண்டபம் உள்ளது.

## தேவப் பெருமாள்

வேதவல்லித் தாயார் சந்நிதியிலிருந்து வெளியில் தென்புறம் இறங்கியவுடன் இடது புறத்தில் தேவப்பெருமான் சந்நிதி உள்ளது. கருடன் மீது அமர்ந்த கோலத்தில் கிழக்குப் பார்த்து வரதர் சேவை சாதிக்கிறார்.

## *யோக நரசிமமர்*

வரதரை வலம் வந்த பின் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமியின் சன்னதியின் பின்புறம் மேற்கு நோக்கி அமைந்துள்ள அழகிய சிங்கர் சந்நிதி உள்ளது. பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பெருமாளாய் நரசிம்மர் மேற்கு நோக்கி வீற்றிருக்கக் காணலாம்.

இச்சன்னிதி மிகவும் புராதமானது. இச்சந்நிதியில் மூலவர் யோக நரசிம்மராகவும். உற்சவர் இரு தேவியருடன் கனிவும். அருளும்

காட்டும் அபய, அழைக்கும் முத்திரையுடன் எழுந்தருளியுள்ளார். அருள்மிகு நரசிம்மர் பிரம்மோற்சவத்தில் ஐந்தாம் நாள் உற்சவரும் மூலவரைப் போல் யோக நரம்சிம்மராகத் திருக்கோலம் தாங்கித் தரிசனம் தருகிறார். அப்பொழுது மூலவருக்கு முத்தங்கி சமப்பிப்பர். எட்டாம் திருநாள் காலை பல்லக்குப் புறப்பாட்டில் லட்சுமி நரசிம்மன் திருக்கோலம் தாங்கித் தரிசனம் தருவதும் கண் கொள்ளாக் காட்சியாகும்.

## ஆண்டாள்

யோக நரசிம்மர் சந்நிதியிலிருந்து இறங்கி வந்து வலது புறத்தில் திரும்பினால் பாவை நோன்பு நோற்ற ஆண்டாள் நாச்சியார் தனிச்சந்நிதி கொண்டு விளங்குகிறார். ஆண்டாளின் இடது புறச்சுவரில் ஆண்டாளின் பாசுரங்கள் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆண்டாள் எதிரே உள்ள நீண்ட மண்டபம் வழியாக வந்து கிழக்கு வாயிலுக்கு வந்து சேர்கிறோம். நரசிம்மரைத் தரிசித்து மேற்கு வாயிலில் வந்து அங்கு நின்று கொடிக்கம்பம், பெரிய திருவடியினை வணங்கி ஆண்டாள் சன்னிதிக்கு வந்து வாயிலில் நின்று மூலவரை மீண்டும் வீழ்ந்து வணங்கலாம்.

## விமானங்கள்

ஆனந்த விமானம், பிரணவ விமானம், புஷ்பக விமானம், சேஷவிமானம், தைலிக விமானம் என ஐந்து விமானங்கள் இத்திருக் கோயிலுக்கு உள்ளன.

## இறைவன் காட்சி

வைணவத் திருத்தலங்களில் முதன்மையானவை மூன்று திருத்தலங்கள். ஒன்று திருவேங்கடம். மற்றொன்று திருவரங்கம் மூன்றாவது ஸ்ரீ மத்வேதாந்த தேசிகன் குறிப்பிட்டாரே 'முத்திதரும்' நக ரேழில் முக்கியமாங் கச்சி எனும் காஞ்சி இம் மூன்று தலத்துப் பெருமாள்களான வேங்கடவன், திருவரங்கன், அருள்வரதன் ஆகிய மூவரும் முறையே சுமதிராஜன், பிருகுமகரிஷி, சப்த ரோமர் ஆகிய ரிஷிகளின் தவத்திற்குகந்து இங்குக் காட்சி தந்தார்கள்.

## இராமபிரான்

மூலவர் இராமபிரான், சக்கரவர்த்தித் திருமகள் இங்கு வந்து கோயில் கொண்ட வரலாறும் கூறப்படுகிறது. சதிபத முனிவர் பண்டார

மலையில் தவம் செய்து வந்தார் எனவும் ஹேலை எனும் தேவ கன்னி முனிவர் தவத்தைக் கலைத்தாள் எனவும் இருவரும் குழந்தையை விட்டுப் பிரிந்தனர் எனவும் குழந்தை கிடந்த மரத்திலிருந்த சொட்டுத் தேனைப் பருகி வளர்ந்து மதுமான் எனும் பெயர் பெற்றார் எனவும், மதுமானுக்குக் காட்சி தந்து ஆட் கொள்ள ஸ்ரீ ராமன் வந்தார் எனவும் அவர் மதுமான் தவத்திற்கு இசைந்து அவர் விரும்பிய வண்ணம் ராமனாக இத்தலத்து எழுந்தருளினார் எனவும் கூறுவர். சீதை, இலக்குவன், பரத சத்ருக்கனரும் பின் தொடர்ந்தனர் எனவும் கூறுவர்.

ஏழுமலையான் தொண்டைமானுக்குப் பார்த்த சாரதியாகச் சேவை தந்த தலம். இக்கோயில் முன் மண்டபம் தொண்டைமானால் கட்டப்பட்ட தென்பது திருமங்கை யாழ்வாரின் பாடலினால் வெளிப்படுகிறது.

*மன்றுதன் பொழிலும் வாவியும் மதிலும்*
*மாடமாளிகையும் மண்டபமும்*
*தென்னன் தொண்டையில் கோன் செய்த*
*நன் மயிலைத் திருவல்லிக்கேணி*

என்று குறிப்பிடுகிறார்.

திருமங்கையே, ***'பார்த்தன் தன் தேர்முன் நின்றானை' 'தெள்ளிய சிங்கமாகியத் தேவைத் திருவல்லிக்கேணி கண்டேன்'*** என்று பாடுகிறார். திருமழிசை ஆழ்வார் முதல் மூவரையும் சந்தித்த திருத்தலம் இது என்னும் சிறப்புக்குரியது.

அத்திரி முனிவரின் தவத்திற்கு மகிழ்ந்த திருமால் அவர் விருப்பப்படி நரசிம்ம மூர்த்தியாக இத்தலத்து எழுந்தருளினார். சப்த ரோமர் என்றும் ரிஷியின் தவத்திற்குகந்து கஜேந்திரவரதர் திருக்கோலத்தில் இங்குக் காட்சி தந்தார்.

இக்கோயிலின் எதிரே திருக்குளம் அமைந்துள்ளது. அதனைக் கைவிரணி அதாவது அல்லிக் கேணி என்பர்.

## தீர்த்தம்

இத்தீர்த்தத்தில் இந்திர, அக்கினி, மீன, விஷ்ணு, எனும் தீர்த்தங்கள் சூழ்ந்துள்ளதாய் ஐதீகம். கடலுக்கு மிக அருகில் இருந்தாலும் மீன்கள் இதில் வசிப்பதில்லை. திருமஞ்சனத்திற்கு இதுவே தீர்த்தம் எனினும் பல நேரங்களில் இத்திருக்குளம் வறண்டு காணப்படுகிறது.

இத்திருக்குளக்கரையில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. திருவல்லிக்கேணிக் குளத்தின் கிழக்குக் கரையில் அனுமன் எழுந்தருளியுள்ளார். அவரைப் பற்றி ஒரு வியப்பான செய்தி கூறப்பெறுகின்றது. ஒரு தலைமுறைக்கு முன் முதலில் அவர் மேற்குக் கரையில் குடியிருந்தாராம். அவரை வழிபடும் பக்தர்களைச் சிலர் ஏளனம் செய்தனராம். சக்தியுள்ள தெய்வம் என்பதெல்லாம் வெறும்புரளி என்றனராம். அனுமன் அன்றிரவே தம்முடைய சக்தியை எடுத்துக் காட்டக் கிழக்குக் கரையில் எழுந்தருளினராம். மறுநாள் காலையில் அதைக் கண்டு ஏளனம் செய்தோர் மனம்மாறி அவரை வழிபடத் தொடங்கினர்.

அனுமன் வடிவம் இப்பெருமாள் கோயிலில் பல வடிவங்களில் செதுக்கப்பெற்றுள்ளது. கோயிலில் பல்வேறு பகுதிகளிலும் கும்பிட்ட கைகளுடன் நிற்றல், சஞ்சீவி மலையைத் தூக்கித் தாவுதல், வாலினால் கல்லைக் கட்டியிழுத்தல், கையில் மலையைத் தூக்கி நிறுத்தல் நான்கு கைகளுடன் இருந்த நிலையில், எனப்பல வடிவங்களில் அனுமனைத் தரிசிக்கிறோம். அனுமன் தனித்திருக்கும் இக்கோலங்களேயன்றிப் பெருமானைத் தனது தோள்களில் சுமந்தவாறு உள்ள சிலை வடிவங்களும் உள்ளன. திருவாய் மொழி மண்டபத்தூணில் அமைந்துள்ள அனுமன் உருவம் தனிச்சந்நிதியாகவே சிறப்படைந்துள்ளது. இவர் சர்வ சக்தி படைத்தவர் எனவும், வரப்பிரசாதி எனவும் கூறுவர். மூலவர் இருக்குமிடத்து அருகில் உள்ள அர்த்த மண்டபத்தில் இராமபிரான் எதிரே சுவரை ஒட்டியவாறு ஆஞ்சநேயர் ஒருவர் உள்ளார். அவருடைய உருவம் அழகுத் திறமுடன் விளங்குகிறது.

## *உற்சவர்*

இத்தலத்து மூலவர் வேங்கட கிருஷ்ணன் எனினும், திருப்பதி திருவேங்கடவனே எனினும் உற்சவர் பார்த்த சாரதிப் பெருமாள், அருச்சுனனுக்குத் தேரோட்டிய, பார்த்தனுடைய சாரதி ஆவார்.

இந்த உற்சவரிடம் ஒரு தனிச்சிறப்பு உள்ளது. இப்பெருமாள் போர்க்களத்து எழுந்தவர் என்பதால், கண்ணன் அருச்சுனனுக்குச் சாரதியாய் இருந்து பீஷ்மர் விட்ட அம்புகளை அருச்சுனனுக்காக ஏற்றதைக் காண்பிக்க, இன்றைக்கும் பார்த்தசாரதிப் பெருமாள் - உற்சவர் திருமுக மண்டலத்தில் வடுக்களைக் காணலாம். உற்சவர்

பெயரிலேயே இத்திருத்தலமும் ***அருள் மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்*** என அழைக்கப் பெறுகின்றது.

இத்திருக்கோயிலில் வழிபாடுகள் வைகானச ஆகம முறைப்படி நடைபெறுகின்றன. ஆத்ரேய முனிவரால் வைகானச முறைப்படி பிரதிட்டை செய்யப்பட்டதால் வைகானச முறையைப் பின்பற்றுகின்றனர்.

## பாடியோர்

இத்திருக்கோயில் இறைவன் மீது தியாகப் பிரும்மம், முத்துசாமி தீட்சதர், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் பாடியுள்ளனர். பாரதியார் பாடிய கண்ணன் பாடல்கள் அனைத்தும் இப்பெருமாளைப் பற்றியன எனக் குறிப்பிடுவர்.

ஸ்ரீ ராமானுஜரின் திருந்தந்தை ஆதுரி கேசவாசாரியர் இத்தலத்திற்கு வந்து வேள்வி செய்து, அருள்மிகு பார்த்த சாரதியின் அருளாலேயே ஸ்ரீராமானுஜரைப் புத்திரராக அடைந்தார்.

ஆண்டு முழுவதும் இத்திருத்தலத்தில் திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன சித்திரையில் பார்த்த சாரதிப் பெருமாளுக்கும், ஆனி மாதம் நரசிம்மருக்கும் பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன

இத்திருத்தலத்தில் இரண்டு கொடித்தூண்கள் அமைந்துள்ளமை தனிச்சிறப்பு கிழக்கு வாயிலருகில் பார்த்த சாரதிப் பெருமாளுக்கும், மேற்கு வாயிலில் நரசிம்மருக்கும் கொடிக் கம்பங்கள் உள்ளன.

## விழாக்கள்

சித்திரை மாதம் வசந்த விழா, ஆனிமாதம் கோடை விழா, ஆவணி மாதம் பவித் ரோத்சவம், மார்கழி மாதம் அத்யயன உற்சவம், மாசி மாதம் தெப்பத்திருவிழா, முதலியன சிறப்பான விழாக்கள்.

வைகாசியில் அருள்மிகு கஜேந்திர வரதருக்கும், பங்குனி மாதம் அருள்மிகு அரங்கனுக்கும், இராமபிரானுக்கும், ஆடியில் ஆண்டாளுக்கும், புரட்டாசியில் வேதவல்லித் தாயாருக்கும் விழாக்கள் நடைபெறுகின்றன

சித்திரை மாதம் உடையவருக்கும், ஐப்பசியில் மணவாள மாமுனிகளுக்கும் பத்து நாட்கள் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன

இத்திருக்கோயில் விழாவான கைத்தல சேவை கண் கொள்ளாக் காட்சியாகும். மணவாள மாமுனிகள் சாற்று முறையின்போதும் அருள்மிகு பார்த்த சாரதிப் பெருமாள் கைத்தலத்திலேயே எழுந்தருளி மணவாள மாமுனிகளுக்குச் சேவை சாதிப்பது மிக அருமையான காட்சி.

மார்கழி மாதம் நடைபெறும் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா ஒரு தமிழ்த்திரு விழா. இத்திருவிழாவில் அருள்மிகு பார்த்தசாரதி உற்சவர் முன் ஆழ்வார்கள் வீற்றிருக்கத் தமிழ் வேதம் எனக் கருதப்படும். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைத் தென்னாசார்ய மரபின்படி 21 நாட்கள் சேவை செய்யப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீ மணவாள மாமுனிகள் சாற்றுமறை நாள்களில் உற்சவருக்கு வைர அங்கி சேவை சாத்திக்கப் பெறுகிறது.

இத்தலத்தில் உள்ள ஐந்து பெருமாள்களுக்கும் கருட சேவைகள் நடைபெறுன்றன. இவற்றுள் ஸ்ரீ ரங்கநாதருக்கு பங்குனி உத்திரத்தன்று கண்ணாடி கருட சேவை நடைபெறுகிறது.

மாசி மகத்தன்று பார்த்த சாரதிப் பெருமாள் கருட சேவையில் சமுத்திரக் கரைக்குச் சென்று சக்கரத் தாழ்வாருக்குத் திருமஞ்சனம் நடைபெற்றுத் தீர்த்த வாரி நடைபெறுகிறது.

தை மாதத்தில் பார்த்த சாரதிக்கு லட்சார்ச்சனையும், புரட்டாசி மாதத்தில் ஸ்ரீ வேதவல்லித் தாயாருக்கு லட்சார்ச்சனையும் நடைபெறுகின்றன.

ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் தை மாதத்தில் ஏதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திருவல்லிக்கேணியில் இருந்து பல்லக்கில் புறப்பட்டுச் சைதாப்பேட்டைக்கு அருகில் உள்ள ஈக்காட்டுத்தங்கல் அடைந்துத் திருமஞ்சனம் கண்டருளி மீண்டும் திருக்கோயில் எழுந்தருளுவார் இதற்குத் திரு ஊரல் உற்சவம் எனும் சிறப்புப் பெயர் உள்ளது.

அரங்கத்து எம்பெருமானுக்கும், அருள்மிகு வேத வல்லித் தாயாருக்கும் மாசி மாதம் சுக்ல துவாதசி நாளில் வெகு விமரிசையாகத் திருக்கல்யாண விழா நடைபெறுகிறது. புரட்டாசியில் தாயாருக்கு நவராத்திரி விழா நடைபெறுகிறது.

பங்குனி உத்திரத்தில் அரங்கநாதருக்கு ஐந்து நாள்கள் பல்லவ உற்சவம் நடைபெறும் அருள் மிகு இராமபிரானுக்கு ஸ்ரீ ராம்நவமி

விழா ஒன்பது நாட்கள் நடைபெறுகிறது. வரதராசப் பெருமாளுக்கு வைகாசி மாதம் பத்து நாட்களுக்கு விழா நடைபெறுகிறது.

ஆண்டாளுக்குத் திருவாடிப் பூர உற்சவம் பத்து நாட்களும், மார்கழி மாதம் நீராட்ட உற்சவம் ஒன்பது நாட்களும் நடைபெறும்.

திருவரங்கம் கண்ணன் கோவில்லன்று, எனவே அதனை ஒப்பிடக்கூடாது.

## திருமஞ்சனம்

திருப்பதிப் பெருமாளைப் போலவே மூலவருக்கும் வெள்ளிக்கிழமைகளில் திருமஞ்சனம் நடைபெறுவதுடன் திங்கட்கிழமைகளிலும் நடைபெறுகிறது.

நரசிம்மருக்குப் புதன், சனிக்கிழமைகளில் திருமஞ்சனம் நடைபெறுகிறது

வெள்ளிக்கிழமைகளில் தாயாருக்கும் இதர பெருமாளுக்கும் திருமஞ்சனம் செய்யப்படுகிறது.

இத்திருக்கோயில் சிறப்புச் சேவைகள் மிகக்குறிப்பிடத்தக்கன அவை வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீ மணவாள மாமுனிகள் சாற்று முறையின் போது மூலவர் பார்த்தசாரதிக்கு முத்தங்கி சேவை ஆகியன.

வைகுண்ட ஏகாதசிக்குப் பின் பத்து நாள்களுக்குப் பார்த்தசாரதி மூலவருக்குக் குளிர்கால அங்கியான கபாய் சமர்ப்பிக்கின்றனர்.

ஐந்து சன்னதிகளில் வெவ்வேறு திருநாமங்களில் எழுந்தருளும் பெருமாள்களுக்கும் தாயாருக்கும் ஆழ்வார்கள், ஆசாரியர்களுக்கும் பல்வகையான விழாக்கள் மேற்கொள்ளப்பெறுவதால் இத்திருக்கோயிலில் ஏறத்தாழ ஆண்டு முழுவதுமே திருநாட்கள்தாம்.

## இருதேரோட்டம்

திருக்கோயில்கள் எல்லாவற்றிலுமே ஆண்டுக்கு ஒருமுறை தேர்த் திருவிழா நடைபெறுவதே பொதுவான வழக்கம். ஆனால் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி, நரசிம்மசுவாமி ஆகிய இரு பெருமாள்களுக்கும் நடைபெறும் திருத்தேர் விழாக்கள் குறிப்பிடத்தக்கன. ஆண்டுக்கு இருமுறை தேரோடும் பெருமை பெற்றுள்ளது. இரு பிரம்மோற்சவங்களிலும் இருமுறை தேரோடுகின்றது.

இத்திருக்கோயிலில்ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமிக்கும், ஸ்ரீ நரசிம்ம சுவாமிக்கும் அணிவித்த பூணூல் நாள்தோறும் ஆலயத்தில் விற்கப்படுகிறது. இது போல் வேறு திருக்கோயில்களில் வழங்கப் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருக்கோயிலில் ஆறுகால பூஜை நடைபெறுகிறது.

காலை 5.50க்குத் திருமஞ்சனக் குடம் வருதல்

காலை 5.55க்குச் சுப்ரபாதம்

காலை 6.00க்கு விசுவரூபம்

காலை 6.15க்கு திரு வாராதனம்

காலை 8.00க்கு கால சந்தி தீர்த்தம்

காலை 11.00க்கு உச்சிக் கால பூஜை

காலை 12.00க்கு திருக்காப்புச் சேர்த்தல்

காலை 4 00க்குத் திருக்காப்பு நீக்குதல்

மாலை 6.00க்கு நித்யானு சந்தானம்

மாலை 7.30க்கு திருவாராதனம் (இராக்கால பூஜை)

இரவு 9.00க்கு அர்த்த ஜாமம் (சனிக்கிழமைகள், சிறப்புத் திருவிழா நாட்கள் தவிரப் பிறசாதாரண நாட்களில் மட்டும்)

திருப்பதி ஏழுமலையான் திருக்கோயில் லட்டு பிரசாதம் புகழ் பெற்று விளங்குவதுபோல் பெருமாளுக்குத் திருவமுது செய்யப்பெறும் பிரசாதங்கள் மிகச் சிறப்பானவை அதிலும் பார்த்தசாரதிப் பெருமாள் நிவேதனச் சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இப்பிரசாதம் நிவேதனத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன் பணம் செலுத்தி முன்பதிவு செய்ய வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள கண்ணன் திருக்கோயிலில் மிகச் சிறப்பு வாய்ந்த திருக்கோயிலாக எம்பெருமான் கோயில் விளங்கி வருகிறது.

பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் பிரசாதங்கள் எதற்கும் மிளகாயோ, கடலை எண்ணெயினையோ பயன்படுத்துவதில்லை. விவேகானந்தர் பாதம் பட்ட திருத்தலம் இது

இருபத்தொன்று

# 21. திருத்தொலைவில்லிமங்கலம்

## செந்தாமரைக்கண்ணன்
## (அரவிந்தலோசனன்)

தஞ்சை மாவட்டத்திலும், சுற்றிலும் உள்ள நவக்கிரகத் திருத்தலங்களைப் போலத் திருநெல்வேலி மாவட்டத்தில் நவதிருப்பதிகள் அல்லது ஆழ்வார் நவதிருப்பதிகள் என வழங்கும் ஒன்பது திருப்பதிகள் உள்ளன. அவை திருவைகுண்டம், திருவரகுணமங்கை, திருப்புளிங்குடி, திருத்தொலைவில்லி மங்கலம், திருக்குளந்தை, திருக்கோளூர், திருப்பேரை, திருக்குருகூர் ஆகிய எட்டுத் திருத்தலங்கள் ஆகும்

இவற்றைத் தரிசிக்க ஒவ்வொரு ஊருக்கும் பேருந்து ஏறிச் சென்று வருவது கடினம். வாடகைக் கார் அமர்த்திச் சென்று வந்தால் ஒரே நாளில் அனைத்துத்தலங்களையும் தரிசித்து விடலாம் சென்னையிலிருந்து தமிழ்நாடு அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாதம்இருமுறை சுற்றுலாப்பேருந்துகளை முதல், மூன்றாம் வெள்ளிக்கிழமைகளில் இயக்குகிறது. புதன்கிழமை விடிகாலையில் திரும்பி விடலாம் இதற்கு நபர் ஒருவருக்கு மூன்று நாள் தங்கும் வசதியுடன் கூடிய கட்டணம் வசூலிக்கிறது.

இந்த நவதிருப்பதிகளில் திருத்தொலைவில்லி மங்கலம் எனும் இரட்டைத் திருப்பதியும் ஒன்று. அதில் ஒன்றுதான் செந்தாமரைக் கண்ணன் அரவிந்த லோசனாய்க் கண்ணன் குடி கொண்ட கோயில்.

இத்திருத்தலம் நம்மாழ்வாரால் மட்டுமே மங்களா சாசனம் செய்யப்பெற்றுள்ளது.

இத்திருத்தலம் திருநெல்வேலி மாவட்டம் திருவைகுண்டம் பகுதியில் உள்ளது. திருநெல்வேலியிலிருந்துதான் செல்லவேண்டும். திருநெல்வேலி - திருச்செந்தூர் வழியில் திருவைகுண்டத்தை அடுத்த ஊர் ஆழ்வார் திருநகர். ஆழ்வார் திருநகர் வந்து செல்வது வேண்டும். திருக்குளத்தை எனும் நவ திருப்பதிகளில் ஒன்று ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ளது. திருக் குளந்தையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் மங்கலக் குறிச்சி எனும் ஊர் உள்ளது. அங்கிருந்து வாய்க்கால் கரை மேலே உள்ள பாதையில் நான்கு கிலோ மீட்டர் வந்து வாய்க்காலைக் கடந்தால் இவ்வூரை அடையலாம் ஆழ்வார் திருநகரியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் கிழக்கே வந்து தாமிர பரணி ஆற்றைக் கடந்தும் இத்திருத்தலத்தை அடையலாம். தென் திருப்பேரைக்கு அருகில் உள்ளது. தென் திருப்பேரை ஆழ்வார் திருநகரிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உள்ளது தென் திருப்பேரைக்கே.

கோவில் ஊரின் மையத்தில் இல்லாமல் அடர்ந்த காட்டில் உள்ளது. அருகிலும் வீடுகள் அதிகமில்லை. அருச்சகர்கள் வரும் நேரம் தெரிந்து கொண்டு சென்றுதான் தரிசிக்க வேண்டும்.

## இரட்டைத் திருப்பதிகள்

தொலைவில்லி மங்கலத்தில் உள்ள ஸ்ரீ நிவாசன் என்ற தேவப்பிரான் கோயிலும், செந்தாமரைக்கண்ணன் கோயிலும் இரட்டைத் திருப்பதிகள் என அழைக்கப்பெறுவன

நம்மாழ்வார் தொலைவில்லி மங்கலத்தை

***"நோக்கும் பக்கமெல்லாம் கரும் பொடு செந்நெலோங்கு செந்தாமரை வாய்க்கும் தண்பொரு நல்வடகரை வன் தொலைவில்லி மங்கலம்"*** என்றும், ***'துவளில் மாமணிமாடமோங்கு தொலைவில்லி மங்கலம்' 'குமுறு மோசை விடிவொலித் தொலைவில்லி மங்கலம்' 'கரை கொள் பைம் பொழில் தண் பணைத் தொலைவில்லி மங்கலம்' 'நிற்கும் நான் மறைவாணர் வாழ் தொலை வில்லி மங்கலம்' 'குழையும் வான் முகத் தேழையைத் தொலை வில்லி மங்கலம்' 'இருந்து வேதமும் வேள்வியும் திருமாமகளிரும் தாம் மலிந்திருந்து வாழ் பொருநல் வடகரை வரை தொலைவில்லி மங்கலம்'***

என்றெல்லாம் பதினோரு பாடல்கள் பாடிப் புகழ்கிறார்.

***அத்தி ரேய சுப்ரவர்*** எனும் முனி இத்தலத்தில் யாகசாலை ஏற்படுத்தி ரித்விக்குகளுடன் யாகசாலையைச் சோதித்த பொழுது அவ்விடத்தில் மிகவும் பிரகாசித்த தராசையும் வில்லையும் கண்டு ஆச்சரியப்பட்டு எடுத்த பொழுது தராசு ஒரு பெண்ணனாகவும் வில் ஒரு புருடனாகவும் குபேர சாபத்திலிருந்து விடுபட்டதால், இங்கே துலையும், வில்லும் முக்தி அடைந்த படியால் ***'துலை வில்லி மங்கலம்'*** என்று இத்திருத்தலத்திற்குப் பெயர் ஏற்பட்டது.

இத்திருத்தலத்துப் பெருமாளை மணவாள மாமுனிகள் மங்களா சாசனம் செய்துள்ளார்.

பிரம்மாண்ட புராணம் இத்தலத்தைப் பற்றிக் கூறுகிறது.

தேவப்பிரான் சன்னதியில் துலையும், வில்லும் சுவர்க்கம் எய்திய பின் இங்குப் பெரும் வேள்வி செய்து முடித்த சுப்ரவர் தினமும் அருகிலிருந்த பொய்கையிலிருந்து தூய்மையும், மணமும் பேரழகும் வாய்ந்த தாமரை மலர்களைக் கொய்து தேவப்பிரானுக்கு வழிபாடு செய்தார்.

பெருமாள், இம்முனிவர் மலர் பறிக்கும் அழகினையும், எங்கிருந்து கொண்டு வருகிறார் என்பதையும் அறிய அவர் பின் சென்றவர், அங்கேயே தாமிரபரணியில் வடகரையிலேயே நின்றார். இத்திருக்கோலம் கண்ட சுப்ரபர் மிகவும் வியந்து பின் தொடர்ந்ததின் காரணம் கேட்க அவர் வழங்கும் தாமரை மலர்கள் விரும்பியே நின்றதாகக் குறிப்பிட்டார்.

## *அரவிந்த லோசனன்*


தாமரை மலர்களை விரும்பி அங்கு நின்றதால் ***அரவிந்த லோசனன்*** எனும் திருநாமம் நிலைத்திடும் என்று பெருமாள் கூறினார். திருத்தொலைவில்லி மங்கலத்துத் தேவப்பிரானோடு தனக்கும் தாமரை மலர்களாலேயே வழிபடச் சொன்னார். எவன் தாமரை மலர்களால் தன்னை வழிபடுகிறானோ அவனுடைய அனைத்துப் பாவங்களையும் போக்குவதாகத் திருவாய் மலர்ந்த தருளினார்.

இத்தலத்து எம்பெருமாள் வீற்றிருந்த திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் அரவிந்த லோசனனாய், செந்தாமரைக் கண்ணனாய் விளங்குகிறார்.

இத்திருத்தலத்துத் தாயார் திருப்பெயர் கருந்தடக் கண்ணி நாச்சியார் என்பதாகும் தாமிரபரணி ஆறே முதன்மைத் தீர்த்தம். இத்திருத்தல விமானத்திற்குக் குமுத விமானம் என்று பெயர்.

இத்திருத்தலத்தைச் சேவிப்பதில் சிரமமுள்ளது எனினும் என்றாலும் தனிக்காட்டில் நின்ற எம்பெருமான் மீது நம்மாழ்வார் தனிக் கவனம் செலுத்தியிருக்கையில் நாமும் முயன்றால் தரிசிக்கலாம்.

இத்திருக்கோயில் யாரால் கட்டப்பெற்றது முதலான விவரங்கள் அறிய இயலவில்லை.



# இருபத்தியிரண்டு

# 22 திருவல்லிப் புத்தூர்

## ஆண்டாள் மணாளன் வடபத்திரசாயீ

*பெரிய பெருமாள்*
*பெரிய ஆழ்வார்*
*பெரிய தேர்*
*பெரிய கோபுரம்*

இப்படிப் பெருமைகள் பல பெற்றது ஸ்ரீ வில்லிபுத்தூர் அல்லது திருவில்லிப்புத்தூர். அவ்வூர்,

*கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்*
*சோதி மணிமாடம் தோன்று மூர் - நீதியார்*
*நல்ல பத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்*
*வில்லிபுத்தூர் வேதக் கோனூர்.*

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும் வேதமனைத்திற்கும் வித்தாகும். அவ்வூரைப் பட்டாபிரான் 'புதுவை நகர்' எனச்சுட்டி ***'வண்புது வைநகர்க் கோதை மலர்ப்பதங்கள் வாழியே'*** என வாழ்த்துகிறார்.

இவ்வூர் இன்றைய விருதுநகர் மாவட்டத்தில் இராஜ பாளையத்திற்குப் பதினோரு கல் அருகில் உள்ளது. புகை வண்டிகள் விருதுநகர், சிவகாசி வழியாக ஸ்ரீ வில்லிப்புத்தூரை அடைகின்றன. புகை வண்டிப் பாதையில் விருது நகரிலிருந்து 42 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. கொல்லம், செங்கோட்டை, தென்காசிக்கு விருதுநகர் வழியே செல்லும் புகை வண்டிகள் இவ்வூர் வழியே செல்கின்றன.

### வழி

மதுரையிலிருந்து தென்மேற்கில் எழுபது கிலோ மீட்டர் தூரம் சாலைவழியே பேருந்தில், காரில் செல்லலாம். இராஜபாளையம்,

சங்கரன் கோவில் பேருந்துகளும் இவ்வூர் வழியே செல்கின்றன. திருவில்லிப்புத்தூருக்கும் மதுரையிலிருந்து அடிக்கடி பேருந்துகள் இருக்கின்றன. சென்னையிலிருந்து கொல்லம் வண்டி மூலமோ அல்லது பேருந்து வழியாகவோ பத்து மணி நேரப் பயணத்தில் அடைந்து விடலாம். ஊர் பெரிய ஊர் ஆதலால் தங்கும் வசதிகள் உள்ளன. மதுரையிலிருந்து சென்று தரிசித்து விட்டு மூன்று மணி நேரத்திற்குள் மீண்டும் மதுரை திரும்பி விடலாம். மதுரையிலேயே தங்குவதும் வசதி. மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் திருமங்கலம், கல்லுப்பட்டி வழியே செல்ல வேண்டும்.

பேருந்துகள் திருமங்கலம் எல்லையில் மேற்கேதிரும்பிக் கல்லுப்பட்டி, கிருஷ்ணன் கோவில் வழியே ஸ்ரீ வில்லிப்புத்தூரை அடைகின்றன. நல்ல சாலைகள். பயணம் செய்வது கடினமில்லை. ஆலயத்திலும் கூட்ட நெரிசல் இராது. சுகமான நிம்மதியான தரிசனம் கிடைக்கும். மதியம் உணவை முடித்துப் புறப்பட்டால் மாலை ஏழு மணிக்குள் திரும்பி விடலாம். காலையில் புறப்பட்டால் மதிய உணவிற்கு மதுரை வந்து விடலாம். பேருந்து, காரில் செல்வதாயின் விருதுநகரோ, சிவகாசியோ செல்ல வேண்டியதில்லை. புகை வண்டிப் பாதை மட்டுமே விருதுநகர், சிவகாசி வழிச் செல்வதாகும்.

திருநெல்வேலியிலிருந்து வருவதாயின் சங்கரன் கோவில், இராஜபாளையம், வழியாக வில்லிப்புத்தூரை அடையலாம் திருவில்லிப்புத்தூர் வர்த்தக மையமாக விளங்குகிறது.

புகை வண்டி நிலையத்திலிருந்து கோவில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்து. பேருந்து நிலையத்திலிருந்து வெளியே வந்து கிழக்கு நோக்கிக் கடை வீதிகள் வழியே நடந்தால் அரை கிலோ மீட்டர் தூரத்தில் கோயிலை அடையலாம்.

## கோபுரம்

ஊருக்குள் நுழையும் போதே 2000 இல் குடமுழுக்கு நடைபெற்றத் திருக்கோவிலின் கோபுரம் நம்மை வரவேற்கிறது. தமிழக அரசின் இலட்சினையில் இடம் பெற்ற கோபுரம் எனும் சிறப்புப் பெற்ற கோபுரம் இது.

ஆண்டாள் திருக்கோயில் கிழக்குப் பார்த்த திருக்கோயில் கோபுரம் வாயிலின் முன் உள்ள வாயிலில் நுழைந்து அருள்மிகு ஆண்டாளையும், ஆண்டாளின் மணவாளன், 'மத்தளம் கொட்ட,

வரிசங்கம் நின்றூதக் கைத்தலம் பற்றிய மணவாளன் ரெங்க மன்னாரையும்' முதலில் தரிசித்துப் பின் பெரியாழ்வார் வழிபட்ட வடபத்திர சாயீயைத் தரிசிக்கலாம்.

நீண்ட வழியாகச் செல்லும் வாயில் மண்டபத்தின் இருபுறமும் கடைகள் உள்ளன. வாசனைத் திரவியங்கள், பால்கோவா, படங்கள் விற்கும் கடைகள் எனக் கடைகள் பல உள்ளன. ஆண்டாள் வாசனைப் பொடி என மணக்கும் வாசனைத் தூள் கடைகள் பல உள்ளன.

திருவில்லிப்புத்தூர் எம்பெருமான் வராக அவதாரம் எடுத்து இரணியனை வதைத்த தலமாதலால்இது **வராக ஷேத்திரம்** ஆகும். செண்பகவனமான இது மல்லி எனும் பெண் அரசி ஆண்டமையால் மல்லி நாடு என்று பெயர் பெற்றது.

இதனாலேயே ஆண்டாளைப் போற்றும் தனியனில்

''மருவாரும் திருமல்லி வளநாடு வாழியே''என்று உரைக்கக் காணலாம்.

மல்லியின் மகன்களில் வில்லி, கண்டன் எனும் இருவரில், கண்டன் புலியால் கொல்லப் படவே, வில்லியை எம்பெருமான் தோன்றி காட்டை அழித்து நாடாக்கி அந்தணர்களைக் குடியமர்த்தக்கனவினில் கட்டளையிட்டமையால் வில்லிப்புத்தூர் எனும் பெயர் ஏற்பட்டது. மல்லி நாட்டில் இருந்த வடவேஸ்வரபுரத்தைப் புதுப்பித்து வில்லிப்புத்தூர் ஏற்பட்டது. புத்தூர், புதுவை எனும் பெயர்களும் ஏற்பட்டன. இது தல வரலாறு.

இத்தலத்தில் கருடனின் கூறாகச் சுவாதித் திருநட்சத்திரத்தில் அவதரித்த பெரியாழ்வார், மலர் மாலை தொடுத்து வில்லிப்புத்தூர் வடபத்திர சாயிக்குச் சாத்தி வழிபட்டார். பாண்டியன் வல்லபனின் காலத்தில் மதுரை சென்றார். அப்போது அவருடைய திருநாமம் **விஷ்ணு சித்தர்**. பாண்டியனுக்கு வேத முடிவின் ஞானப் பொருளை விளக்கிப் பொற்கிழி பரிசு பெற்றார். பட்டர்பிரான் எனும் பட்டமும் பெற்று யானை மீது ஏறி நகர் உலாக் கண்ட சிறப்புடையவர் ஆனார்.

அப்பொற்கிழியால் கோவிலைப் புதுப்பித்துப் புதுமை செய்தார். எம்பெருமானுக்கே 'பல்லாண்டு' வாழ்த்தியவர் இவர். எம்பெருமானைக் கண்ணன் என்னும் குழந்தையாகப் பாவித்துக் கண்ணன் பிள்ளைத் தமிழை நாற்பத்து நான்கு திருமொழிகளில் நானூற்று அறுபத்து ஒரு பாசுரங்களில் உள்ளம் கரைந்துருகப்

பாடியுள்ளார். இவருடைய பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி.

திருவாடிப்பூரத்தில் துளசி வனத்தில் பூமிப்பிராட்டியாரின் அம்சமாய் ஆண்டாள் அவதரித்தார். ஆத்ம, பரமாத்மநாயகி, நாயக பாவத்தை உலகத்திற்கு உணர்த்த, பிராட்டியாரே ஆண்டாளாகப் பிறந்துள்ளார். தன் உடல் பொருள், ஆவி, அழகு, ஞானம் அவ்வளவையும் எம்பெருமானுக்கே அர்ப்பணித்தவள் ஆண்டாள். ''மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கிலேன் கண்டாய்'' என்று உறுதி கூறியவள். பாவைப்பாடல்களைப் பாடிக் கண்ணனைக் கைப்பிடிக்கக் கனவு கண்டவள். ஆண்டாள் திருவரங்கனை மணந்தாள்.

இத்திருத்தலத்திற்குப் பல சிறப்புக்கள் உள்ளன பன்னிரு ஆழ்வார்களில் ஒரே பெண்மணியான ஆண்டாள் அவதரித்த திருத்தலம். இரண்டு ஆழ்வார்களில் தந்தையும் மகளுமாய் அவதரித்தது இத்திருத்தலத்தில் தான். எம்பெருமானின் பல்வேறு கூறுகள் பன்னிரு ஆழ்வார்களாய் அவதார மெடுத்தன. பூமிப்பிராட்டியே ஆழ்வாராக அவதரித்த பேறும் இத் திருத்தலத்திற்குரியது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பாவைப் பாடல்களும், நாச்சியார் திருமொழியும் பிறந்த திருத்தலம் இத்திருத்தலம்.

இத்திருத்தலத்தினைப் பெரியாழ்வாரும், ஆண்டாளும் மங்களா சாசனம் செய்துள்ளார் பெரியாழ்வார் கண்ணனைத் தாயாக வாரியணைத்துக் கொஞ்சிய போது ஆண்டாள் கண்ணனைக் கணவனாக அடையக் கடுந்தவம் மேற்கொண்டார்.

## பந்தல் மண்டபம்

'சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாள்' திருக் கோவிலில் முதலில் இருப்பது **பந்தல் மண்டபம்.** சிறிது தூரம் சென்றால் இடப்புறத்தில் இலட்சுமி நரசிம்மரைத் தரிசிக்கிறோம். இடது புறம் கல்யாண மண்டபம் உள்ளது. இதனைக் கடந்தால் வெளித் திருச்சுற்று இவ்வெளிப் பிரகாரம் எனப்படும் திருச்சுற்றில் பொருட்கள் வைப்பு அறை, வாகன அறை என ஏராளமான அறைகள். இங்கு இராமபிரானுக்கும், சீநிவாசப் பெருமானுக்கும் தனித்தனியாகத் திருக்கோயில்கள் உள்ளன.

கொடிமரம் உள்ளது. இக்கொடிமரத்தை ஒட்டிய தூண்களில் எடுப்பான யாளிகள் சிற்பங்கள், வேறு பல சிற்பங்கள் உள்ளன. குடமுழுக்கின் போது மணலும், தூரிகையும் கொண்டு தூய்மை செய்திருப்பதால் புதிய சிற்பங்களைப் போல் ஒளி விடுகின்றன.

## அடுத்த திருச்சுற்று

அடுத்து உள்ள உள் திருச்சுற்றில் ***'மாதவிப் பந்தலின் மேல் பல் கால் குயிலினங்கள் கூவினகாண்'*** என்று ஆண்டாள் பாடிய மாதவிப் பந்தலை நினைவுறுத்தும் ***'மாதவிப் பந்தல்'*** உள்ளது.

இத்திருச்சுற்றினைச் சுற்றி நூற்றியெட்டுத் திவ்விய தேசத்து எம்பெருமான்களுடைய ஓவிய வடிவினைக் காணலாம். அழகிய ஓவியங்கள் பக்தி மணமும், அழகும், எழிலும் கூட்டுகின்றன.

## மணி மண்டபம்

மாதவிப் பந்தலையடுத்து ***மணிமண்டபமும்,*** அடுத்து ஆண்டாள் ***சுக்ரவாரக் குறடும்*** உள்ளன. ***தட்டொளிமண்டபம்*** எனப்படும் மண்டபத்தில் தட்டொளி எனப்படும் செப்புக் கண்ணாடியைக் காணலாம்.

## அர்த்த மண்டபம்

அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் தங்கச் சட்ட மிட்ட சப்பரத்தில் உற்சவர், ஆண்டாள் நாச்சியார், ஆகியோர் உள்ளனர். உற்சவ மூர்த்திகள் சிறிய திருஉருவாக அமையாது மூன்றடிக்கும் மேல் உயரமாக எழிலார்ந்த கம்பீரமான தோற்றத்துடன் முன்னர் உள்ளனர்.

## திருமஞ்சன மண்டபம்

அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தில் இடது புறம் **திருமஞ்சன மண்டபம்** எனும் சிறிய கல்மண்டபம் உள்ளது. அது போலவே உற்சவர் காட்சி தரும் மேடையும் அர்த்த மண்டபத்தின் எதிரில் உள்ளது.

## மூலவர்

கருவறையில் கிழக்கே திருமுகம் நோக்கிய நிலையில் ரெங்க மன்னார் சேவை சாதிக்கிறார். தாயார் ஆண்டாள் கோதா நாச்சியார் எனும் திருப்பெயருடன் விளங்குகிறார். மற்றைய ஆலயங்களில்

கருவறை முன் கரங்குவித்து நின்று காட்சி தரும் கருடாழ்வார். மூலவருக்கு அருகிலேயே இருப்பது சிறப்பு. ருக்மிணிப் பிராட்டியாரே கருவறையில் கருடாழ்வார் வடிவில் காட்சி அளிப்பதாக ஐதீகம்.

கருவறையில் காட்சி தரும் ரெங்க மன்னாரையும், ஆண்டாளையும் விட்டு விலக, அந்த எழில் தோற்றத்தை விட்டுப்பிரிய நம் மனம் இடம் தராது.

'ஸ்ரீ மாந் வேங்கடநாதார்ய கவிதார்க்கிககேசரி, வேதாந்தாசார்யர்' தேசிகப் பெருமானின் ஸ்ரீ கோதாஸ்துதியில் ஆழ்கின்ற போது நம் மனம் எல்லையில்லாப் பெருமகிழ்வு கொள்கிறது.

ஸ்ரீ விஷ்ணு சித்த குல நந்தந கல்ப வல்லீம்
ஸ்ரீ ரங்கராஜ ஹரி சந்த யோகநத் ருஸ்யாம்
ஸாஷாத் ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்
கோதா மதன்ய சரணம்: சரணம் பிரபத்யே''

எனக் கோதையைத் துதிக்கிறது.

### வடபத்திரசாயீ

வெளியே கருவறைமேல் உள்ள விமானம் ஸம்சன விமானம் ஆகும்.

ஆலய வாயிலில் வந்து கடைகளைக் கடந்தவுடன் இடது புறத்தில் உள்ள வடபத்திர சாயியின் சன்னதி அமைந்துள்ளது. வடபத்திர சாயியின் சந்நிதி எதிரேயும் நுழைவு வாயிலில் கோபுரம் ஒன்று உயர்ந்து காணப்பெறுகிறது.

இடது கைப்புறம் உள்ள வாயிலின் வடபுறத்தில் சாயியின் திருக்கோயில் வளாக வளைவு உள்ளது. அவ்வளைவின் வழியே சென்றால் இடது புறத்தில் வடகிழக்கில் ஆண்டாள் அவதரித்த நந்தவனத்தில் ஆண்டாளின் தனித்திரு உரு உள்ளது. நந்தவனத்தில் சிறிய மண்டபம் உள்ளது. இருபுறமும் மலர்ச்செடிகள் உள்ளன.

வெளியில் வந்து இடது புறம் வடபத்திர சாயி கோயிலினுள் நுழைகின்றோம். எதிரே நரசிம்மர் லட்சுமி நரசிம்மராக விளங்குகிறார். வடபத்திர சாயி ஆலயம் பெரியாழ்வார் காலத்துக்கு முன்பிருந்தே உள்ள திருக்கோயில். பெரியாழ்வார் தினமும் வழிபட்ட பிரான், மலர் தொடுத்து அவர் மனங்குளிரச் செய்த பிரான் இவர். இவரையே

மணாளனாக வரித்துக் கொள்வதை வாழ்வின் இலட்சியமாக ஆண்டாள் கொண்டாள்.

## இரு தளங்கள்

இப்பெருமாளைத் தரிசிக்க இரண்டு தளங்கள் ஏறிச் செல்ல வேண்டும். கீழ்த்தளத்தில் நரசிம்மரும், பன்னிரு ஆழ்வார்களும் தசாவதார எம்பெருமான்களும் உள்ளனர்.

கீழ்த்தளத்திலுள்ள போகப்படி வழியாகவே ஏறி மேல்தளம் செல்ல வேண்டும். அங்கு உள்ள கோபால விலாசக் கருவறையில் வடபத்திரசாயி இருக்கிறார்.

கருவறையில் எம்பெருமான் புஜங்கசயனமாகப் பாம்பணையில் பள்ளி கொண்டவராக வடபத்திர மரத்தின்மீது சாய்ந்து படுத்தவராக ஆதி சேடனுடனும் பெரிய பிராட்டி, பூமிப்பிராட்டியார்களுடனும், வில்லி, புத்தன் ஆகியோர்களுடனும் சூரியன், பிருகு, மகரிஷி, மார்க்கண்டேய மகரிஷிகளுடனும் கிழக்கு நோக்கிய நிலையில் சேவை தருகின்றார்.

பள்ளி கொள்ளும் பாம்பணையாகிய ஆதிசேடன், எம்பெருமானை வடபத்திர மரத்தின் கீழ், வடபத்திர சாயியாகத் தன் மீது பற்றுக் கொள்ளவைத்து விட்டு ஊழிக் காலத்தில் நீர் மீது மிதக்கும் ஆலிலைக் கண்ணனாக எம்பெருமானைக் கற்பனையில் சேவித்துக் கொண்டிருத்தல் இத்தலத்தில் பெருஞ் சிறப்பு.

பெரியாழ்வாரின் சந்நிதி வடபுறம் தெற்கு நோக்கிய நிலையில் உள்ளது. வடபத்திர சாயியின் திருத்தலக் கோவிலை ஜடாவர்ம திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் குலசேகர பாண்டியன் கட்டியுள்ளார். பின்னர் பாண்டிய மன்னர்களும் நாயக்க மன்னர்களும் இரண்டு கோவில்களையும் நிருவகித்தனர்.

ஆண்டாள் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றை மாவலி வாணாதிராயர் கட்டினார் எனக் கோவிலின் தெற்குச் சுவரில் உள்ள கல்வெட்டுக்கள் கூறும். மாவலி வாணாதிராயர் ***சுந்தரத் தோள நல்லூர்*** எனும் சொக்க குளந்தல் கிராமத்தை ஆண்டாளுக்கும், தாயாருக்கும் நிவந்தமாக வழங்கியுள்ளார். ஆண்டாள் நாச்சியாருக்குத் தலையணியாகச் சூடகம் கம்பர் வழங்கியுள்ளார்.

திருமலை நாயக்கர் திருப்பணிகள் பல செய்துள்ளார். கோவில் சுக்கிரவாரக் குறட்டில் உள்ள தூணில் திருமலை நாயக்கரின் சிலை உள்ளது.

### சூடிய மாலை

ஆழ்வார் திருநகரி, ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையைக் கண்ணபிரான் எம்பெருமான் சூடி மகிழ்ந்ததன் நினைவாக இன்றும் முதல் நாள் இரவு ஆண்டாளுக்கு சாத்தப்பட்ட மலர் மாலை வடபத்திர சாயியான பெருமாளுக்குத் தினமும் அணிவிக்கப்பெறுகிறது.

பெரியாழ்வார் தமது திருமாளிகையில் வைத்து வழிபட்ட லெட்சுமி நாராயணர் இங்குத் தனிக்கோவில் கொண்டு தரிசனமளிக்கிறார். ஆண்டாள் மலர்மாலை சூடி அழகு பார்த்த கண்ணாடிக் கிணறு சன்னதிக்கு அருகில் உள்ளது.

ஸ்ரீ தேவி, பூதேவி, நீளா தேவி ஆகிய மூவரும் ஆண்டாளாகக் காட்சியளிப்பது இங்குத்தான் பிற திருத்தலங்களின் பெருமாள் ஸ்ரீ தேவியுடனோ, பூ தேவியுடனோ அல்லது இருவருடனோ இருப்பார். இத்தலத்தில் பெருமாளுக்கு வலப்புறத்தே ஆண்டாளும், இடப்புறத்தே கருடாழ்வாரும் உள்ள அமைப்பு வேறெங்கும் இல்லை

ஆண்டாள் திருக்கோயிலில் திருமஞ்சனம் ஆகும் போது ஆண்டாளின் சன்னதிக்கு முன் காராம் பசு வந்து நின்றவுடன், காராம் பசுவைப் பார்த்து ஆண்டாள் கண் திறப்பதாக நம்புகின்றனர் தட்டொளி எனும் கண்ணாடி எதிரே உள்ளது. இதன் பின்னரே பிராட்டி சூடிய மாலையைப் பெருமாள் அணிந்து கொண்டு திருப்பள்ளி எழுச்சி நடைபெறுகிறது.

### சம்பிரதாயங்கள்

இத்திருக்கோயில் சம்பிரதாயங்கள் குறிப்பிடத்தக்கவை. பெரியாழ்வாருக்கு வாரிசு இல்லை. அவருடைய உடன் பிறப்பு ஆதிகேசவரின் அன்பு மகன் நாராயணதாசரின் வழி வந்தவர்கள் வேதப்பிரான்பட்டர் எனும் திருப்பெயருடன் பெரியாழ்வாரின் மரபினராய் இன்றும் திருக்கோயில் திருப்பணி செய்கிறார்கள். திருவிழாக்காலங்களில் ஆண்டாளுக்கும் ரெங்க மன்னாருக்கும் திருமஞ்சன நீராட்டு செய்கையில் கட்டியம் கூறும் உரிமை இவர்களுக்குண்டு.

பெரியாழ்வாரின் சந்ததியர் பெருமாள் திருக்கல்யாணத்தின் போது பரதேசம் செல்ல விருப்பதைத்தடுத்து மகளை மணங்கொள்ளப் பிரார்த்திக்க அவ்விதமே எம்பெருமான் ஏற்றுக் கொண்டதை ''திருவுள்ளம் பற்றித் திருவுள்ளம் ஆக்கினார்'' என அறிவிக்கிறார்கள். இந்நிகழ்ச்சி இன்றும் நடைபெறுகிறது.

### கருடசேவை

இத்திருக்கோயில் திருவிழாக்களில் மார்கழி மாதப் பாவைவிழாவும், ஆண்டாளின் அவதார தினமான ஆடிமாதம் பூரநட்சத்திரத்தன்று நடைபெறும் திருவாடிப் பூரத் திருவிழாவும், தேர்த்திருவிழாவும் குறிப்பிடத்தக்கன. அப்போது ஐந்து பெருமாள்களின் கருடசேவை விழா காணத்தக்கது.

திருவில்லிப்புத்தூருக்கு அருகில் உள்ள திருவண்ணாமலையின் ***வெங்கிடாசலபதிப் பெருமாள், திருத்தங்கல் பெருமாள் திருத்தங்காலப்பன், வடபத்ரசாயி, ரெங்க மன்னார், காட்டழகர் சுந்தரராஜன்*** ஆகிய ஐந்து பெருமாள்களின் கருடசேவை நடைபெறுகிறது

இங்குள்ள திருமுக்குள தீர்த்தம் மிகவும் புகழ் வாய்ந்தது. ***கால நேமி*** என்னும் கொடிய அரக்கனை எம்பெருமான் தன் சக்ராயுதத்தால் அழித்தார். ரத்தம் தோயச் சக்கரத்தாழ்வார் வந்து எம்பெருமானிடம் நின்றவுடன் சக்கரத்தைத் தூய்மைப்படுத்தக் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று நதிகளும் தமது தீர்த்தத்தை ஒரு குளத்தில் சொரிய, சக்கரம் இம்மூன்று நதிகளின் நீர் சேர்ந்ததால்தான் தூய்மை பெற்றது. ***திருமுக்குளம்*** என்னும் பெயர் உண்டாயிற்று என்பர்.

### திருவரங்கப் பயணம்

கோதை திருவில்லிப்புத்தூரைக் கோகுலமாகவும் அங்கே எழுந்தருளியுள்ள வடபத்திர சாயியைக் கண்ணனாகவும் தம் தோழிகளைக் கோபியராகவும் கற்பனை செய்து, தினமும் பாமாலை சூட்டி வந்த போது, அந்த இளங்கிளியாளை வளர்த்தெடுத்த பெரியாழ்வார் தம்மகளின் எண்ணம் ஈடேறுமா? என வியப்புற்று இருந்தார். அவர் கனவில் தோன்றிய பெருமாள் 'நின் திருமகளோடு நீவீர் அரங்கம் வரின் யாமாட் கொள்வோம்' என்றார்.

அவ்வாறு இருவரும் திருவரங்கம் புறப்பட்டனர். வல்லவ தேவ பாண்டியன் பல்லக்குப் பரிவாரங்கள் அளித்தார். தென்

திருக்காவிரியின் மையத்தில் வருகையிலேயே பல்லக்கில் வந்த கோதை, பல்லக்கிலிருந்து காணாமல் போனாள். அரங்கத்து ஆலயத்துள் சென்ற போது அங்கு அரங்கன் கோதையை ஆட் கொள்ள அவர் அருகில் எழுந்தருளியிருந்தார். ஆனந்தப் பிரவாகத்தில் ஆழ்வார் மூழ்கினார்.

அரங்கனடி பணிந்து தமக்கு மணக்கோலத்தினை மகளாய் வாழ்ந்திட்ட பிராட்டியுடன் வண் புதுவை நகரில் காட்டியருள வேண்டுமெனக் கேட்க அவ்வாறே எம்பெருமான் மணக்கோலத்தில் எழுந்தருளினார். கோதை பக்தியால் ஆண்டவளாதலால் ஆண்டாள் ஆனாள்.

## *பிரார்த்தனைத் தலம்*

கண்ணனுடன் ஆண்டாளாய்ப் பிராட்டியார் இணைந்து வாழ ஆசைப்பட்ட ஆண்டாளின் ஆசைக் கனவுகளை அப்பிரான் நிறைவேற்றியருளிய திருத்தலமாதலால் அன்பர் தம் பிரார்த்தனைகள் வேண்டி நின்றால் நிறைவேறும்.

## *விழாச் சிறப்பு*

இத்தலத்துத் திருவிழாக்களில் ஆண்டாளைக் கண்ணனாகவே அலங்கரித்து அழகு பார்க்கின்றனர். ஆண்டாளுக்குத் தான் எத்தனை வித அலங்காரங்கள். அதிலும் பெண்பிள்ளை ஆண்டாள் கையில் வெண்ணெய்த் தாழியுடன் காணும் அலங்காரம் எழில் கொஞ்சுகிறது.

ஆயர்பாடி பற்றியும், ஆயர்பாடியில் ஆய்ச்சியர் ஆழி மழைக் கண்ணனை அடையப் பாவை நோன்பினை நோற்றதையும் செவி வழிக்கேட்ட ஆண்டாள், தூமலர்த் தூவித் தொழுது வாயினால் பாடித் திருவில்லிப்புத்தூரை, ஆயர் பாடி ஆக்கினாள். பார்ப்பன குலத்து அவதரித்தவள் தன்னையும் தோழியர்களையும் இடையர் குலப் பெண்டிராய் சாதி மாற்றம் செய்து பாவித்தாள். வடபத்திர சாயியின் திருக்கோயிலைக் கண்ணன் வளர்ந்த, நந்த கோபனின் இல்லமாக்கினாள். வடபத்திர சாயியாகச் சயனித்திருக்கும் பெருமாளைக் கண்ணனாகப் பார்த்தாள்.

## *தனுர் மாதம்*

**தற்போது அருள் மிகு ஆண்டாள் உறையும் நாச்சியார் உறையும் திருக்கோயில் என்றழைக்கப்படும் இடமே, முன்பு பெரியாழ்வாரின்**

திருமாளிகையாக விளங்கியுள்ளளது. தனுர் மாதம் திருவில்லிப் புத்தூர் விழாக்கோலம் பூண்டுள்ள காட்சி காணத்தக்கது.

மார்கழியில் சாற்று மறையில் பக்தர்கள் ஆண்டாள். முன் இரண்டு வரிசையாக நிற்கிறார்கள். முன்னால் பதின்மூன்று தீர்த்தக்காரர்களும், அரையர்களும் ஆண்டாளையும், ரங்க மன்னரையும் திருப்பள்ளி யெழுச்சி பாடக் காத்திருப்பர். மற்றொருபக்கம் வேத பிரான்பட்டர்கள் நிற்பர்.

தொண்டரடிப் பொடியாழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் பாடித் திருப்பள்ளியெழுச்சியை அரையர்கள் பாடுகின்றனர். பெரியாழ் வாருக்கும், சுவாமிக்கும் திருமஞ்சன சேவை நடைபெறுகிறது. பூசணிக்காய் மசியலும், பாசிப்பருப்புப் பொங்கலும் சுவாமிக்கு நிவேதனம் ஆகிறது. கோஷ்டி சேவா காலம் முடிந்த பிறகு தீர்த்தம் ஸ்ரீ மந்நாத முனிகள் பரம்பரையில் வந்த அரையருக்கு வழங்கப்படுவதே மரபு. பின்னரே அடியவர்களுக்குத் தீர்த்தமும், பிரசாதமும் வழங்குவர்.

ஒரு நாளைக்கு ஒரு திருப்பாவையாக அதுவே ஒரு விழாப் போலப் பழையகாலங்களில் நடைபெற்றுள்ளது.

இப்போது மார்கழி மாதத்தில் 23 ஆம் நாள் அரையர்கள் வடபத்திர சாயிப் பெருமாள் முன்னால் திருப்பாவைப் பாசுரம் பாடித் துவக்குகின்றனர். ஆண்டாள் எப்படி பெருமாளைக் காதலனாகப் பாவித்துப் பாடினாரோ அதே மாதிரி, பாசுரத்தைப் பாடி அதற்குப் பொருள் சொல்லி, அதற்கேற்றாற் போல் அபிநயத்திலேயே அதை அரையர் நடித்துக் காட்டுவார் முதல் நாள் உற்சவத்தினைப் ***பிரியா விடை உற்சவம்*** என்கின்றனர். அதாவது பாவை நோன்பு நோற்க ஆண்டாள் விடை கேட்கிற மாதிரி அமைந்தது அது.

வைகுண்ட ஏகாதசிக்கு முந்திய பத்து நாள் விழாவினைப் ***பகல் பத்து விழா*** எனவும், ***திருமொழித் திருநாள்*** எனவும் அழைக்கின்றனர். அதன் பின்வரும் பத்து நாட்களை ***இராப்பத்து உற்சவம் - திருவாய்மொழித் திருநாள் உற்சவம்*** எனவும் கொண்டாடுகின்றனர். இந்த இராப்பத்து உற்சவத்தில் ஸ்ரீ ஆண்டாளின் எண்ணெய்க் காப்பு உற்சவம் காண வேண்டிய ஒன்று.

### எண்ணெய்க்காப்பு

**ஆண்டாள் எண்ணெய்க் காப்பிற்கு 61 வகை மூலிகைகள் அடங்கிய தைலத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்தத் தைலம் காய்ச்ச**

நாற்பது நாட்கள் ஆகுமாம். நல்லெண்ணெய், பசும்பால், நெல்லிக்காய், தாழம்பூ, இளநீர் ஆகியன எல்லாம் சேர்த்து இந்த எண்ணெயைக் காய்ச்சுகின்றனர். ஏழுபடி எண்ணெய்விட்டு இரண்டு பேர் நாற்பது நாட்கள் காய்ச்சுகிறார்கள். இதில் நாலுபடி தைலம் கிடைக்குமாம். இந்தத் தைலத்தையே உற்சவத்தின் எட்டு நாள்களும் ஆண்டாளுக்குச் சாத்துகின்றனர். இந்தத் தைலப் பிரசாதத்தைப் பக்தர்களுக்கு மார்கழி முடிந்த பின் தருகின்றனர். இது ஒரு நோய் தீர்க்கும் மருந்து என்று நம்புகின்றனர்.

பகல்பத்து விழாத் தொடக்க நாளில் ஆண்டாள் ஸ்ரீ ரங்க மன்னாரோடு பகல்பத்து மண்டபத்திற்குப் புறப்படுகிறாள். அன்று மாலை ஸ்ரீ ரங்கமன்னார் மாமனார் வீடான பெரியாழ்வார் மாளிகைக்கு வருவார். இதற்காகப் பெரியாழ்வார் வாழ்ந்த திருமாளிகை முன் பந்தல் போட்டு வாயிலில் பச்சைக் காய்கறிகளையும் பழங்களையும் பரப்பி வைக்கிறார்கள். ஸ்ரீ ரங்கமன்னார். மாமனாரின் மாளிகைக்கு எழுந்தருளிப் பச்சைக் காய்கறிகளையும், மாமனார் வழங்கும் சீதனப் பொருட்களையும் காண்பார். அவரை எதிர்கொண்டழைத்து மாலை மரியாதைகளுடன் திரட்டுப்பால், மணிப்பருப்பு ஆகிவயற்றை நிவேதனம் செய்கிறார்கள். இதன்பின் சுவாமி மண்டபம் திரும்புகிறார்.

அன்று இரவு பெரியாழ்வார் யானை வாகனத்தில் வெளியே நிற்க, கற்பூர ஆரத்தி காட்டும் போது திருக்கதவம் திறந்து கருடாரூடராய்ப் பெருமாள் சேவை சாதிக்கிறார். சுவாமி வெளியே வந்து பெரியாழ்வாருக்கு மாலை, பரிவட்டம் மரியாதை செய்து கையில் தாளத்தைக் கொடுக்கிறார். பெரியாழ்வார் சார்பில் பட்டர் தாளத்தைத் தட்டிய பின் பன்னிரண்டு ஆழ்வார்களோடு வீதி புறப்பாடு ஆகிப் பகல்பத்து மண்டபத்தில் திருவாராதனை ஆகிய பின், திருப்பல்லாண்டு வியாக்யானம், முதல் பாசுரம் ஆகியவற்றை அரையர் அபிநயத்தோடு விளக்குவார்.

ஆண்டாள் எண்ணெய்க்காப்பு எட்டு நாள் உற்சவத்தின் போதும் ஆண்டாள் கண்ணனாய், கள்ளழகராய், சுந்தரராஜனாய் ஒவ்வொரு நாளும் ஒரு திருக்கோலம் பூண்டு திருமுக்குளத்திற்குச் சென்று எண்ணெய்க் காப்பிட்டுக் கண்ணனை அடைய நோன்பு இருக்கும் நாட்கள் கண்ணுக்கு விருந்தானவை. மார்கழியில் நோன்பு நோற்ற ஆண்டாள், பங்குனியில் ஸ்ரீ ரங்கமன்னாரைக் கைத்தலம் பற்றுகிறாள்.

## அரையர் சேவை

அரையர்கள் இத்திருக்கோயிலில் ஏறக்குறைய 1400 ஆண்டுகளாக வழிவழியாக இந்தப் புராதனக் கலையைக் கட்டிக் காத்து வருகின்றனர். பெருமாள் தம் கிரீடத்தையும் மாலையையும், பட்டாடையையும் ஸ்ரீமந் நாத முனிகளிடம் கொடுத்து இதனைத் தொடங்கி வைத்தார் என நம்பப் பெறுகிறது.

அரையர்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் திருப்பாடல்களை இசையோடு கலந்து பாடி, அதற்கான பொருளை விரிவாக எடுத்துரைத்து வியாக்யானம் செய்து, பிறகு அதனைத் தெய்வீக நடன முத்திரைகளோடு ஆடியும் காட்டுவர். ஒரு சிறிய வண்டின் துடிதுடிப்பையும், அரசகுமாரி போல ஆண்டாள் வளர்ந்ததையும், ஆண்டாள் குறப்பெண்ணிடம் முத்துக் குறி கேட்டதையும் அரையர்கள் அபிநயத்தில் அழகு பொங்க நடித்துக் காட்டுவர்.

இந்த அரையர் பரம்பரை குறுகிப்போய் திருவரங்கம், ஆழ்வார் திருநகர், திருவில்லிப்புத்தூர் என மூன்று திருத்தலங்களிலேதான் காணப்பெறுகிறது. அரையர் கலையைப் பயிலப் பதினோரு ஆண்டுகள் ஆகுமாம்.

## ஆண்டாள் திருக்கரத்துக்கிளி

திருவில்லிப்புத்தூர் என்றவுடன் நினைவுக்கும் வருவது விஷ்ணுசித்தர் வளர்த்தெடுத்த இளங்கிளியாள் ஆண்டாள் மட்டுமல்லள் - அந்த ஆண்டாள் கையில் அனுதினம் அலங்கரித்து அவள் திருச்செவியில் அரங்கன் பெயர் கூறும் பச்சைக் கிளியும்தான். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திருஉருவிற்கு மேலும் அழகு சேர்ப்பது அவர் இடக் கரத்தில் எழிலோடு தோன்றும் பச்சைக் கிளியாகும்.

வருடம் 365 நாளும் ஆண்டாள் கையில் அமரத் தினமும் ஒரு பச்சைக் கிளியை ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்து வந்தவர் கட்டியங்காரரான **சீனிவாசன்** என்பவர். மாதுளம் பூ, கப்பக்கிழங்கு இலை, நந்தியாவட்டை இலை, வெள்ளை அரளி அரும்பு, சிவப்பு அரளி அரும்பு, நாக மல்லிப் பூ, வெள்ளை, சிவப்பு மலர்கள், காக்கைப் பொன் கொண்டு கிளியைத் தயார் செய்து வந்தார்.

இவருக்குப்பின் இவருடைய பரம்பரையினர் கிளியைச் செய்து வருவது போல, இவருடைய முன்னோர்களும் செய்தனர். ஆண்டாள் சேவைக்கு என அர்ப்பணித்த குடும்பம் இது.

இந்தக் கண்ணன் - ஆண்டாள் திருக் கோயில் கிளி கொஞ்சும் அழகை, விழாச் சிறப்பை, ஆலயச் சிற்ப அழகைக் காணப் பெற்றவர்களும், அரையர் சேவை கண்டு மகிழ்ச்சியனுபவம் பெற்றவர்களும் பெரும் பேறு பெற்றவர்கள்.

இதையெல்லாம் காணாமல் மானிடராய் வாழ்ந்து பயன் என்ன? ஆண்டாள் பரமாத்மாவுடன் ஜீவாத்மா இணையும் தத்துவத்தின் எடுத்துக்காட்டு. ஆண்டாள் உபநிடதச் சாரத்தை எளிய தமிழில் வழங்கிய உயர் பாவை. அந்த ஆண்டாளின் துதியைத் தேசிகப் பெருமான்.

*"இதி விகஸீ பக்தேருத்திதாம் வேங்கடேஸாத்*
*பஹு குண ரமணீயாம் பக்தி கோதாஸ்துதிம்ய:*
*சரண கமலஸேவாம் ஸாச் வதீமப்யுபைஷ்யத்"*

என முடிக்கிறார்.

2000 இல் குடமுழுக்குக் கண்ட இத்திருக்கோயில் தூய்மையாகவும், எழிலோடும் விளங்குகிறது.

## திருவேங்கடவன் சூடும் மாலை

ஆண்டு தோறும் புரட்டாசி மாதத்தில் ஆண்டாளின் மாலை ஆலய மரியாதைகளுடன் திருப்பதிக்கு எடுத்துச் செல்லப்படுகையில், அம்மாலையைத் தக்க மரியாதையுடன் ஏற்றுத் திருவேங்கடவனுக்குச் சாத்துகின்றனர். இந்த மாலை தவிரத் திருவேங்கடவனுக்கு வேறு எவர் அளிக்கும் மாலையும் அணிவிப்பதில்லை. அன்பர்களின் மலர் மாலை எதுவும் திருப்பதியில் ஏற்கப் பெறுவதில்லை என்பதும் நானூறு கல் பயணம் செய்து அடையும் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை அரங்கனைப் போல், திருவேங்கடத்தானும் அணிந்து மகிழ்கிறார்.

கிருஷ்ணாவதாரத்துடன் தொடர்புடைய ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற பதினெட்டாவது திருத்தலமும், கடைசித் திருத்தலமும் திருவில்லிப்புத்தூர் ஆகும்.

இவ்வூரில் கோவிந்தன் வாழ்வதாலோ என்னவோ பாலில் செய்யப் பெறும் பால்கோவாவிற்கு தனி ருசி திருவில்லிப்புத்தூர்ப் பால்கோவா சிறப்புடன் பேசப்படுகிறது. ஆண்டாளுக்கு அளிக்கப்படும் எண்ணெய்க் காப்பிற்கும் ஒரு தனிச்சிறப்பு உள்ளது.

## நவநீதகிருஷ்ணன் திருக்கோயில்

ஆண்டாள் திருக்கோயிலுக்கு அருகில் நவநீதகிருஷ்ணன் திருக்கோயில் ஒன்று உள்ளது. அத்திருக்கோயில் உற்சவரும் ஆண்டாள் திருக்கோயிலிலேயே இருந்து வருகிறார். பழமையான இக்கோயிலில் நவநீத கிருஷ்ணனாக வெண்ணெய்த் தாழிக் கண்ணனாய்க் காட்சி தருகிறார் பெருமாள்.

## கிருஷ்ணன் கோயில்

திருவில்லிப்புத்தூரிலிருந்து மதுரை செல்லும் சாலையில் ஒன்பது கிலோ மீட்டரில் உள்ள ஊரின் பெயரும் கிருஷ்ணன் கோவில். கோவிலின் பெயரால் ஊர் அழைக்கப்பெறும். இத்திருக்கோயிலில் குடி கொண்டிருப்பவர் வேணுகோபால சுவாமி. கையில் குழல் கொண்டு விளங்கும் கண்ணனாய் விளங்குகிறார்.

சாலை ஓரமே பேருந்துகள் நிற்குமிடத்துக்கு அருகிலேயே ஆலயம் அமைந்துள்ளது. சிறிய ஆலயம்தான் எனினும் வேணுகோபாலன் எழில் தோற்றம் மிக்கவர். இக்கோவிலின் தக்காராய் விளங்குபவர், ஆண்டாள் நாச்சியார் திருக்கோவிலின் தக்காரேயாவார்.

அருகிலுள்ள வலையப்பட்டி முதலான ஊர்களிலுள்ள பெருமக்கள் இத்திருக்கோயிலில் திருமணம் செய்து கொள்கின்றனர். திருமணக் காலங்களில் குழலூதும் இக்கண்ணன் கோவில் திருமண மேளச் சத்தங்களால் நிறைந்து காணப்பெறும்.

## வெங்கடாசலபதி

திருவில்லிப்புத்தூர் சென்று தரிசனம் பெறுபவர்கள் அருகில் மலை மீது அமர்ந்துள்ள வெங்கடாசல பதிப் பெருமானையும் தரிசிப்பர். சுமார் மூன்று கல் தொலைவில் உள்ள அத்திருத்தலத்திற்குத் திருவண்ணாமலை எனும் பெயர் விளங்கி வருவது ஒரு தனிச்சிறப்பு.

## காட்டழகர் கோயில்

மேற்குத் தொடர்ச்சி மலையில் எழில் கொஞ்சும் செண்பகத் தோப்புப் பகுதியில் உள்ள காட்டழகர் கோயில் என அழைக்கப்பெறும் சுந்தரராஜப் பெருமாள் கோயில் குறிப்பிடத்தக்கது. அங்குச் செல்ல வேண்டுமாயின் செண்பகத்தோப்பு பசுபதி நகர் வரையே ஊர்திகள்

செல்லும். அதன் பிறகு ஆறு கிலோ மீட்டர் மலைப்பாதையில் செல்ல வேண்டும். காட்டு யானைகள் வாழும் பகுதி இது.


இக்கோயில் மதுரை அழகர் கோயிலை நினைவுறுத்துகிறது. இக்கோவிலிலும் அழகர் கோவில் மலைமேல் உள்ள நூபுரகங்கையில் எப்போதும் தண்ணீர் வந்து கொண்டிருப்பது போல வருகிறது. இந்த நதி மூலம் காணவியலவில்லை. பெரிய தொட்டி ஒன்று ஐம்பது அடி அகலத்தில் அமைத்துள்ளார்.

ஆண்டு தோறும் சித்திரை முழு நிலவு நாளில் இங்கு நடைபெறும் திருவிழாவின் போது இத்திருத்தலத்தில் ஆறு கால வழிபாடு, பெருமாள் அலங்காரம் சிறப்பாக இருக்கும். இத்திருவிழாவின் போது பெருங்கூட்டம் வரும். புரட்டாசி மாதம் முதலான மாதங்களிலும், பிறமாதங்களிலும் வரும் முக்கியமான நாட்களிலும் கூட்டம் இருக்கும்.

திருவில்லிப்புத்தூர்க் கண்ணன் மீது காதல் கொண்ட ஆண்டாளின் பக்தி அடியவரின் பக்திக்கு எடுத்துக்காட்டு.

*கமலமுடன் வில்லிபுத்தூர் விளங்க வந்தாள் வாழியே*
*காரார் நந்துழாய் கானத்து அவதரித்தாள் வாழியே*
*விமலமாம் திருவாடிப் பூரத்தாள் வாழியே*
*விஷ்ணுசித்தர் வளர்த்தெடுத்த இளங்கிளியாள் வாழியே*
*அமல திருப்பாவை ஐயாறு அளித் தருள்வாள் வாழியே*
*ஆக நூற்றி நாற்பத்துமூன்று உரைத்தாள் வாழியே*
*ஆண்டாள் தம் இணையடிகள் அனவரதம் வாழியே*

என வாழ்த்துகையில், ஆண்டாளுடன் இணை பிரியா அண்ணல் கண்ணனையும் வாழ்த்தி வணங்குகிறோம்.



## இருபத்திமூன்று

# அபிமானத் திருத்தலங்கள்

## 23. மன்னார்குடி

### இராஜ கோபாலஸ்வாமி திருக்கோயில்

புகழ் பெற்ற கண்ணன் திருக்கோயில்களில் மன்னார்குடி இராஜகோபால் ஸ்வாமி திருக்கோயில் ஒன்றாகும். இது பழமையான கோயில் ஆயினும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்படாத திருக்கோயில். மன்னார்குடி இராசகோபாலனுக்குத் திருவாய் மொழியிலுள்ள சில பாசுரங்களை மணவாள மாமுனிகள் சமர்ப்பித்துள்ளார். (திருவரய் மொழி நான்காம் பத்து, ஆறாவது மொழி).

உன்னித்து மற்றொருதெய்வம் தொழாள் அவனையல்லால்
நும்மிச்சை சொல்லினும் தோள் குலைக்கப்படும் அன்னை மீர்'
மன்னப் பருமறை வானனை வண்துவராபதி
மன்னனை ஏத்துமின் ஏத்துமின் ஏத்துதலும் தொழுதாகுமே.

இத்திருக்கோயில் ஆழ்வார்கள் காலத்திற்குப் பின் எழுப்பப்பட்ட கோவில், ஆதலால் புராண அபிமானத் தலமென்பர். திருநீற்றுச் சோழன் எனப் பெயர் கொண்ட முதல் குலோத்துங்கனின் (1072-1122) ஆட்சியில் தோன்றிய கல்வெட்டு (கி.பி.1113) இக்கோயிலின் வரலாறு கொண்ட முதல் கல்வெட்டு ஆகும்.

மன்னார் குடித்திருத்தலம் நம் திருநாட்டின் பழமையான ஊர்களில் ஒன்று என்னும் சிறப்பினை இலக்கிங்களும் காட்டுகின்றன.

வியாசரின் பிரம்மாண்ட புராணம், உத்திர காண்டத் ?ல் எட்டு இயல்களில் செண்பகாரண்ய க்ஷேத்திரச் சிறப்பு ‹பிவரிக்கப்

பெறுகிறது. மகாபாரதத்தில் ஆரண்ய பருவம், 68 ஆம் இயல், தீர்த்த யாத்திரைச் சருக்கத்தில் மன்னார்குடி பற்றிய குறிப்பு உள்ளது.

தட்சிண துவாரகை மகாத்மியம் எனும் நூலிலும், அரிவம்சம்,சேஷதர்மம், ஸ்காந்த புராணம், ஸ்ரீ ரங்கபுராணம் ஆகியவற்றிலும் மன்னார்குடி பற்றிய குறிப்புகள் உள்ளன.

மணவாள மாமுனிகளின் கோபால விம்சதி, ராஜ கோபால மங்களம், கமலாஸ்துதி, ஆகியனவும், மகாதேசிகனில் கோபால விம்சதி, தியாகராஜ மகீயில் ராஜகோபால நவரத்தின மாளிகை, ராஜகோபால மகோத்சானுக்ர மாளிகை, ராஜகோபால சுப்ரபாதம், சிகாமணி மகாராஜா ஆகிய தியான சுலோகங்கள் ரங்கராஜம்மா எழுதிய மன்னார்தாச விலாசம், விஜய ராகவநாயக்கர், தெலுங்கு மொழியில் இயற்றிய ஹேமாம்ஜ நாயக சுயம்வரம், மராத்திய மன்னர் சாஹுஜியின் நூல்கள், தியாகப் பிரம்மம், முத்துச்சாமி தீட்சதர் பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

இக்கோயில் விஷ்ணு வர்த்தனன், இராஜ நாராயணன் எனும் சிறப்புப் பெயர்கள் கொண்ட முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் கட்டப்பெற்றுக் 'குலோத்துங்க சோழ விண்ணகரம்' எனப் பெயரிடப்பட்டது. முதற்குலோத்துங்கனே இக்கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம், மூன்றாம் கோபுரம் ஆகியவற்றைக் கட்டச் செய்தான்.

இத்திருக்கோயிலுக்கு 16 கோபுரங்கள் உள்ளன. திருவரங்கத்தை அடுத்து உயர்வான கோபுரம் இத்திருக்கோயில் கோபுரம் ஆகும்.

தஞ்சை நாயக்க மன்னர்களின் காலத்தில் (கி.பி. 1540-1675) மன்னார்குடி இராஜகோபால ஸ்வாமி கோயில் பெரிதும் பேணப் பெற்றது. கருவறையின் முன் மண்டபத்திலிருந்து துவங்கி அனைத்து மண்டபங்கள் சுற்றுக்கோயில்கள், மதில்கள், கோபுரங்கள் ஆகியன இவர்கள் காலத்தில் விரிவாகக் கட்டினர்.

அச்சுதப்ப நாயக்கரும் (1580-1600) அவரது மந்திரியான கோவிந்த தீட்சிதரும் இக்கோயிலின்பால் பெருத்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இரகுநாத நாயக்கர் (1600-34) காலத்தில் இராஜகோபால ஸ்வாமிக்கு மண்டபம் அமைத்தார். விஜயராகவ நாயக்கர் (1633-73) மன்னார்குடி இராஜ கோபாலனைத் தம் குலதய்வமாகப் போற்றினார். மன்னாருதாசன் என்னும் பெயர் கொண்டார். ஆலயத் தூண்களில் கோவிந்த தீட்சதர் இரகுநாத

நாயக்கருடன் மகாதானம், துலாதானம், பொற்குவியல் தானம் அளிப்பது ஆகியன செதுக்கப்பட்டுள்ளன.

மன்னார்குடி நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் அமைந்துள்ளது. தஞ்சை, குடந்தை முதலிய ஊர்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. தஞ்சையிலிருந்து 36 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து நேரடிப் பேருந்துகள் உள்ளன.

## மதிலழகு

***'மன்னார்குடி மதிலழகு'*** என்று புகழ்பெற்ற மதிலைக் கொண்டுள்ளது இத்திருக்கோயில்.

நீண்டுயர்ந்த மதிற் சுவர்களையும் நான்கு திக்குகளிலும், நெடிதுயர்ந்த கோபுரங்களையும் பெற்றுள்ள இக்கோயிலின் இராசகோபுரம் 45 மீட்டர் உயரமும் 14 அடுக்குகளும் கொண்டது.

இன்று **கோபால சமுத்திரம்** எனக் குறிப்பிடப் பெறும் நான்கு வீதிகள் முன்னர் ஆறாவது திருச்சுற்றாகவும், அதனைச் சுற்றியிருந்த ***பிரளய கால வீதி*** எனும் நான்கு வீதிகளும் ஏழாவது திருச்சுற்றாகவும் கணக்கிடப் பெற்றன. இன்று பிரளய கால வீதிகள் அழிந்து விட்டன. திருச்சுற்றுகளில் தென்னை மரங்கள் எழில் கூட்டுகின்றன.

## ஐந்து திருச்சுற்றுக்கள்

இத்திருக்கோயிலில் இன்று ஐந்து திருச்சுற்றுகள் உள்ளன. இக்கோயில் ஆறு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இக்கோயில் சிறிய, பெரிய திருவுண்ணாழி, சண்பகத் திருச்சுற்று, பெரிய கருடத் திருச்சுற்று, நாச்சியார் திருவீதி ஆகியன உள்ளன. நாச்சியார் வீதியில் தொடங்கி இறுதியில் சிறிய திரு உண்ணாழியை அடைகிறோம்.

கிழக்கிலுள்ள முதன்மை வாயிலில் 154 அடி உயரமுள்ள மிகப்பெரிய இராஜகோபுரம் உள்ளது. இக்கோயிலுக்கு வெளியே ஒரே கல்லாலான 54 அடி உயரமுள்ள அழகிய கருடத்தூண் உள்ளது. இதனைத் திருமங்கை மன்னன் பஞ்சு மூட்டைகளை அடுக்கி உயர்த்தி நிறுத்தியதாகக் கூறுவர்.

இதன் பீடத்திலும், இத்தூணை அடுத்துள்ள வல்லாள மகாராசன் மண்டபத் தூண்களிலும் நாயக்க மன்னர்களின் திருஉருவங்கள் இடம்

பெற்றுள்ளன. கருடத்தூணுக்கு வடக்கிலுள்ள தேர் திருவாரூருக்கு அடுத்த படியாக அதிகம் பெருமை பெற்றுள்ளது.

கருடத் தூணை அடுத்துள்ள 16 கால் மண்டபத்தில் முன்னர் விழாக் காலங்களில் பெருமாளுக்குத் திருவுந்திக் காப்பு நடைபெற்று வந்தது. இராஜ கோபுரத்தின் வாயிலிலுள்ளே தென்புறம் வீர ஆஞ்சநேயர் சன்னிதி உள்ளது.

## ஐந்தாம் திருச்சுற்று

ஐந்தாவது திருச்சுற்றான நாச்சியார் திருச்சுற்று செங்க மலத் தாயாரின் தேரோடும் வீதியாகும். இத்திருக் கோயில் தாயாரும் படிதாண்டாப் பத்தினியாவார். இந்தப் படிதாண்டாப்பத்தினிக்குத் தேரோட்டம் நிகழ்வது மன்னார்குடிக்கு உரிய தனிச் சிறப்பாகும். இத்திருச்சுற்றில் இருந்த தியாகராஜர் மண்டபத்தில் ஆண்டுக்கு ஒருமுறை தங்கி விழாவில் பங்கேற்பது வழக்கமாக இருந்தது. நாயக்கர் காலச் சிற்பங்களைப் பெற்றுள்ள மேலக் கோபுரம் வழியாகவே முன்பு தஞ்சை மன்னர்கள் கோயிலினுள் நுழைந்து வழிபடுவது வழக்கமாகும்.

## நான்காம் திருச்சுற்று

நான்காம் திருச்சுற்று காசித் திருச்சுற்று ஆகும். இதில் சித்திர வேலைப்பாடுகள் மிகுந்த சபை, ஆயிரக்கால் மண்டபம், பகல் பத்து, இராப்பத்து மண்டபங்கள், நந்தவனம் ஆகியன உள்ளன. நந்தவனத்தில் பலாமரம் உள்ளது. இம்மரப் பலாச்சுளை கொண்டு வைகாசி விசாகத்தின் போது'ஸஹகாரம்' எனும் இனிப்புச் செய்து படைப்பர்.

பதினாறுகால் திருமாமணி மண்டபத்தில் வைகுண்ட ஏகாதசியின் போது பெருமாள் எழுந்தருளுவார். கூரத்தாழ்வார், உடையவர், தேசிகர் ஆகியோர் சந்நிதிகள் இத்திருச்சுற்றில் உள்ளன.

## மூன்றாம் திருச்சுற்று

மூன்றாவது திருச்சுற்றைச் சண்பகத் திருச்சுற்று என்பர். இதில் ஆழ்வார்கள், மணவாள மாமுனிகள் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. இத்திருச்சுற்றின் தென் பகுதியில் தாயார் சந்நிதி உள்ளது. தாயார் சந்நிதிக்கு எதிரே இருப்பது பெரிய நிருத்த மண்டபம்.

இம்மண்டபத்தில் தான் தாயாருக்குப் பத்து நாள்கள் அத்யயன உற்சவம், ஏகசிம்மாசன உற்சவம், தை வெள்ளிக்கிழமைகளில் திருவோலக்கம் ஆகியன நடைபெறுகின்றன. ஏகசிம்மாசனம் என்பது தைமாதம் நடைபெறும் மட்டையடி விழா. விழா முடிந்து பெருமாளும், தாயாரும் ஒன்றாகக் காட்சியளிப்பர். இத்திருச்சுற்றிலேயே இராமர் சந்நிதி. பாதுகா மண்டபம், பரமபத வாயில், புன்னை மரம், வாத்ய மண்டபம், வல்லாள மகாராஜன் உத்தர மண்டபம், பேரருளாளர் சந்நிதி, சாளக்கிராம ஆஞ்சநேயர் சந்நிதி ஆகியன காணலாம்.

## இரண்டாம் திருச்சுற்று

கருடத் திருச்சுற்று என அழைக்கப் பெறுவது இரண்டாம் திருச்சுற்று இத்திருச்சுற்றில் நம்மை வரவேற்று அழைத்துச் செல்பவர்கள் வெண் கலத்தில் நிறுவப்பெற்ற மிடுக்கான துவார பாலக மூர்த்திகள். இவர்களை அடுத்து உள்ள மண்டபம் நிருத்த மண்டபம். இம்மண்டபத்தில் கருடாழ்வாரை உற்சவ மூர்த்தியுடன் சந்நிதியில் காணலாம். இத்திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் வேணுகோபாலன், லட்சுமி நரசிம்மன், அனந்த பத்மனாபன், லட்சுமி நாராயணன், கஜேந்திர வரதர், விசுவக்சேனர், சூத்ரவதி ஆகியோர் அருள் பாலிக்கின்றனர். தென் பகுதியில் பாதாள அறை உள்ளது என்பர்.

## முதல் திருச்சுற்று

முதல் திருச்சுற்றே திரு உண்ணாழித் திருச்சுற்று இதில் உள்ள தூண்கள் பித்தளைக் கவசம் கொண்டுள்ளன. திருவரங்கத்திற்கும், இத்திருக்கோயிலுக்கும் ஓர் ஒற்றுமையுள்ளது. திருவரங்கம் போலவே கருவறை விமானத்தின் கீழ் விநாயகப் பெருமானும், துர்க்கா தேவியும் இடம் பெற்றுள்ளனர். இத்திருச்சுற்றுச் சுவர்கள் தல வரலாற்றினை ஓவியமாகக் காட்டும்.

மகா மண்டப நுழைவாயிலில் 5.5 அடி உயரத்தில் இரு செப்புத் துவார பாலகர்கள் நிற்கக் காணலாம். மூலவர் **பரவாகு தேவர்**, கருவறையினுள் நின்ற கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் வாசுதேவப் பெருமானாய், சங்கு, சக்கரம் பூண்டு விளங்குகிறார். இருமருங்கிலும் ஸ்ரீ தேவித்தாயாரும், பூதேவித் தாயாரும் விளங்குகின்றனர்.

## இராஜகோபாலன்

இங்குள்ள உற்சவ மூர்த்தியின் திருஉருவம்தான் இராஜகோபாலன் திருஉருவம். பசுவிடம் சற்றே சாய்ந்த கோலத்தில் ஒற்றை ஆடையுடன் தோன்றுகிறார். ஒரு காதில் ஓலை, மற்றொரு காதில் குண்டலம் என வேறு பாடான காதணிகள் பூண்டு நிற்கிறான் நம் பரந்தாமன். அருகே பசு, ஒரு கையில் மும்மடிப்புள்ள சாட்டையுடன் கூடிய தங்கக் கோல். அருகே ருக்மணி. இடது கையைச் சத்யபாமாவின் தோளில் சாய்ந்தவாறு அழகுப் பேரொளியாய் எம்பெருமானின் உற்சவ மூர்த்தித் தோற்றம் சொல்லில் விளக்க வியலாத எழில் தோற்றம். அருகில் யாகமூர்த்தி, பலமூர்த்தி, ஸ்நான மூர்த்தி, சயனமூர்த்தி என நான்கு உருவங்கள்.

ஒரு காதில் குண்டலம், ஒரு காதில் ஓலைச்சுருள். ஓர் ஆடை அணிந்தது ஏன்? கோபியருடன் ஆடுகையில் அவர்களுடைய ஆடை அணிகலன்களை அணிந்தான். இவனுடைய குண்டலம் எந்தக் கோபியருடன் தங்கினவோ என்பர்.

## சந்தானகோபாலன்

கட்டை விரலைச் சுவைத்த படியுள்ள ஆதிசேடன் மேல் பள்ளி கொண்ட மற்றொரு எம்பெருமானும் ஓர் அழகிய படைப்பே. அவருடைய திருநாமம் சந்தான இராஜகோபாலன் ஆகும். இந்தச் சந்தான இராஜகோபாலன் அன்பர் கையில் தவழுபவன். மகப்பேறு கிட்டாதவர்கள் இப்பேரழகுப் பெரியோனை வேண்டி அவரை அர்ச்சகரிடமிருந்து பெற்றுத் தம் மடியில் வைத்துக் கொண்டால் மகப்பேறு கிட்டும் என்பது நம்பிக்கை.

## நவநீதகிருஷ்ணன்

பால சுவாமி என்பவர் வழிபட்ட வெள்ளிச் சிறு கருட வாகனத்துடன் கூடிய தங்க நவநீத கிருஷ்ணனும் இங்கு இருக்கின்றார். இராஜ கோபாலனின் எழிற்தோற்றம் எங்கும் காணவியலாப் பேரெழில் தோற்றம். இப்பெருமானுக்கு எத்தனை வகையாக அலங்காரம் செய்தாலும், அவனின் எழிற்தோற்றம் கண்ணை விட்டு அகலாது, கருத்தை விட்டு மறையாது.

இவ்வளவு எழிற்தோற்றம் வாய்ந்த பேரழகனை ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்யாது, பேரெழிலைப் புகழ்த்திருவைப் பாடாது

விட்டது ஏன்? என்பதற்குரிய காரணங்களையும் கூறுகின்றனர். அவையும் நம் முன்னவரின் யூகங்களேயாம்.

ஏனைய திவ்ய தேசங்களில் எம்பெருமான்களை ஒருவாறு அனுபவித்த ஆழ்வார்கள் மாயவன் இவர்தம் வடி வழகிகளில் மயங்கித் தம் தம் மெய், சிந்தை ஆகியன மறந்து, நீர்ச்சுழலிலே குமிழ் நீர் கொப்பளித்து அமுங்குவதைப் போல அமிழ்ந்து மயங்கி விட்டனர் என்பர். ஆவினைத் தொடர்ந்து வரும் கன்றினைப் போல் ஆழ்வார்களைப் பின் தொடர்ந்து அந்தந்த திவ்ய தேச எம்பெருமான்களின் திருவுருவத்திலே கலந்து காட்சியளித்ததால் பாடாது விட்டனர் எனவும் கூறுவர்.

முதற் குலோத்துங்கன் காலம் முதலே கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன எனினும் யுகங்கள் பல கண்டவர் இந்த எம்பெருமான் என்றே தல வரலாறு கூறுகிறது.

செங்கமல வல்லித் தாயார் என அழைக்கப் பெறும் தாயாரை வடமொழியில் ***ஹேமாம்ஜநாயகி, ரத்தாப்ஜநாயகி*** எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். வடக்குத் திருச்சுற்றில் தாயாருக்குத் தனிச்சந்நிதி உள்ளது. குடமேந்திய இரு யானைகள் இருபுறமும் நிற்கின்றன.

### தீர்த்தங்கள்

இப்பகுதியில் சுமார் பத்துப் புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. திருக்கோயிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தெற்கில் ***கோப்பிரளயம்*** எனும் ஓம குளம் உள்ளது. அதில் கோப் பிரளயர், கோவலர் எனும் இருமுனிவர்களும் நீராடி வழிபட்டுக் கண்ணனைக் காணும் பேறு பெற்றதாகக் கூறுவர்.

***பெரியகுளம்*** எனப்படும் ***ஹரித்ரா தீர்த்தம்*** 23 ஏக்கர் பரப்புடையது. இத்திருக்குளத்தில் ஆனி மாதத்தில் தெப்பத்திரு விழாச் சிறப்புடன் நடைபெறும். இதன் நடுவே கோயில் ஒன்று உள்ளது. இதில், ருக்குமணி, பாமாவுடன் வேணு கோபாலன் காட்சி தருகிறார்.

அருகிலுள்ள ***திருப்பாற்கடல்*** எனும் தீர்த்தத்தில் நீராடி வழிபட்ட பிருகு முனிவரின் விருப்பப்படியே இலக்குமி நாராயணராக எம்பெருமான் தோன்றினார் என்பர்.

பாம்பணியாற்றின் மேல்கரையிலுள்ள தீர்த்தம் ***கோபிநாத தீர்த்தமாகும்.*** இதனை இரட்டைக்குளம் என்பர். இதன் அருகே கண்ணன் எழுந்தருளியுள்ள திருக்கோயில் உள்ளது. இவை தவிர

**ருக்மணி தீர்த்தம், கிருஷ்ண தீர்த்தம், சக்கர தீர்த்தம், சங்கு தீர்த்தம், துர்வாச தீர்த்தம், பாம்பணி நதி** ஆகியவையும் தீர்த்தச் சிறப்புடையனவாகும்.

## திருவிழாக்கள்

பங்குனி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவமே பெரிய திருவிழாவாகும். இவ்விழாவின் போது கண்ணன் முனிவர்களுக்கு முன்னர் அருளிய முப்பத்திரண்டு கிருஷ்ணாவதாரக் காட்சிகள் நினைவு கூறப்படுகின்றன. ஆனித் தெப்பவிழா, ஆடிப்பூசம், ஆவணி பவித்ரோற்சவம், புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி கோலாட்ட விழா, மார்கழி அத்யயன விழா, தை அத்யயனஉற்சவம், மாசி டோலோற்சவம் ஆகிய விழாக்கள் குறிப்பிடத்தக்கன.

மார்கழி அத்யயன உற்சவம் 30 நாள்களும், பங்குனி பிரம்மோற்சவம் 18 நாள்களும், மாசி டோலோற்சவம் பத்து நாள்களும் நடைபெறுவன.

தை மாதத்தில் நடைபெறும் மட்டையடி எனப்படும் பிராண கலக விழா மிகவும் குறிப்பிடத்தக்கது. தாயார், பகவான் மீது ஊடல் கொள்ளும் விழா இது. இவ்விழாவின் போது வேலைப் பாடமைந்த ஊஞ்சலில் எழுந்தரும் காட்சி சிறப்பானது. அவ்வப்போது நடைபெறும் கருட சேவையும், அணிகலன் பல அணிந்து கண்ணன் குடத்துடன் பல்லக்கில் எழுந்தருளும் நவநீதத் திருக்கோலமும் காணத்தக்கன.

## நாள் வழிபாடு

இக்கோயிலில் நாள்தோறும் ஏழு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. அவை விசுவரூபம், திருவனந்தல், காலசந்தி, உச்சிக் காலம், நித்தியாநு சந்தானம், இராக்காலம், அர்த்தசாமம் ஆகியனவாகும்.

## வரலாறு கூறும் கோயில்

இக்கோயில் வரலாறு கூறும் கோயிலாகும். ஊஞ்சல் மண்டபத்தூண்களில் திரு நீறு அணிந்து கோவிந்த தீக்ஷிதரும், திருமண் அணிந்து நாயக்க மன்னர்களும் காணப்பெறுகின்றனர். இராஜகோபாலனின் பள்ளியறை முன்புள்ள தூணின் அடிப்பகுதியில் அச்சுதப்ப நாயக்கர், விஜய ராகவ நாயக்கர், அவருடைய மனைவி

செண்பக லட்சுமி ஆகியோர் வணங்கிய நிலையில் உள்ளனர். திருவிழாக் காலங்களில் இச்சிலைகளுக்கு முன்னர் உற்சவர்களை நிறுத்தி ***"அனைத்துலகு ஆண்ட அச்சுதவிஜயராகவ மன்னார்தாசனுக்கு அருளிப்பாடி"*** என ஸ்தானிகர்கள் பாடுவர்.

இக்கோயில் கல்வெட்டுக்களில் ***இராஜாதிராஜா விண்ணகரப் பெருமாள், குலோத்துங்க சோழ விண்ணகரத்து ஆழ்வார், வண்துவராபதி மன்னர்,*** என மூலவர் குறிப்பிடப் பெற்றுள்ளார். முதலாம் குலோத்துங்கன், இராஜராஜ தேவர், இராஜேந்திர சோழதேவர், கோனேரிண்மை கொண்டான் ஆகியோரின் கல்வெட்டுக்கள் இக்கோயிலிலிருந்து படியெடுக்கப் பெற்றுள்ளன.

திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ராஜாதி ராஜ விண்ணகர் எம்பெருமானுக்கு உரிய 12 மா நிலத்தை இறையிலியாக்கினான். அவ்வரசன் பிறந்த புரட்டாசி மூல நாளில் கோயிலில் விழா நடத்தும்படி கல்வெட்டு கூறுகிறது. இவ்வூர்ச்சபை பற்றிய நடவடிக்கைக் குறிப்புகளையும் இக் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. நிலதானம், பெருமானுக்கு அளிக்க வேண்டிய பிரசாதங்கள் பற்றியும் கல்வெட்டுகள் தகவல் கூறுகின்றன.

## அணிகலன்கள்

மன்னர்கள் பலரும் அணிகலன்கள் பல அளித்துள்ளனர். பழம் பெருமையான நகைகளைக் கொண்டு தங்கக்கிரீடம், (700 பவுன்) மூன்றுவடம் சங்கிலி, இரு காசு மாலைகள், முதலானவை செய்துள்ளனர். வேங்கடகிரி அரசர் பெருமாளுக்கு வக்ர கண்டிகையும், பதக்கமும் அளித்துள்ளார்.

## வாகனங்கள்

பஞ்சமுக அனுமான், குதிரை வாகனம், கோவர்த்தனகிரி, குருந்த வாகனம், இருதலை ஒருடல் பறவை ஆகியன குறிப்பிடத்தக்கன.

இத்திருக்கோயிலில் பெருமாளுக்கும், தாயாருக்கும் தேர்கள் உள்ளன. ஆங்கிலேயர் ஒருவர் தன் வயிற்று நோயைத் தீர்த்ததற்காகப் பெருமாளுக்கு நன்றிக் காணிக்கையாகத் தங்க முலாம் பூசிய குதிரை வாகனம் அளித்துள்ளார்.

# இருபத்திநான்கு

# 24. காட்டு மன்னார் கோயில்

## அருள்மிகு இராஜ கோபாலன்

## (ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார் அவதாரத் திருத்தலம்)

**கா**ட்டு மன்னார் கோவில் அல்லது காட்டு மன்னார்குடி என்னும் திருத்தலம் வைணவத்தல வரலாற்றில் குறிப்பிடத்தகு திருத்தலம். ஒவ்வொரு வைணவரும் மட்டுமல்லாமல் தமிழ் ஆர்வலர்கள், பக்தி இலக்கியம் போற்றுபவர்கள் செல்லவேண்டிய தரிசிக்க வேண்டிய புண்ணியத்திருத்தலம்

மன்னார்குடியில் கையில் சாட்டையுடனும், பசுவுடனும் கண்ணபிரான் இராஜகோபாலனாகத் தோற்றமளிப்பதுபோல இத்திருத்தலத்திலும் கையில் சாட்டையுடன் கானகத்துள் ஆவினம் மேய்ப்பவனாகப் பெருமாள் அழகிய தோற்றம் காட்டுகிறார். அப்படியே மன்னார்குடி இராஜ கோபாலனை உரித்து வைத்த திருத்தோற்றம், எழில்தோற்றம் கொண்டு விளங்குகிறார்.

ஆனால், இத்திருத்தலத்தினையும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யவில்லை என்பது வியப்புக்குரியது. பழமையான திருத்தலமும் சுமார் ஆயிரம் ஆண்டுக்காலப் பழமைக்குரியதும் ஆகும்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களை உலகிற்குக் காட்டிக் கொடுத்த-காட்டும் மன்னனார் - காட்டு மன்னனாய் எழுந்தருளியுள்ள திருத்தலம் இது. வீரநாராயணப் பெருமாளான பெருமாள் காட்டும் மன்னனார் என்று பெயர் பெற்ற திருத்தலம் இது. திவ்ய சூரிகளான ஆழ்வார்களையும் ஆழ்வார்களால் பாடப்பெற்ற திவ்ய

தேசங்களையும், திவ்யப் பிரபந்தங்களையும் உலகிற்குக் காட்டிக் கொடுத்த பெருமாள் காட்டும் மன்னனார் ஆவார். ***காட்டும் மன்னனார், காட்டு மன்னார்*** என ஆகியுள்ளார்.

எம்பெருமான் படைப்புத் தோறும் திவ்ய பிரபந்தத்தை வெளியிடுகிறார். சுவாமி அழகிய மணவாளப் பெருமாள் இதனைப் ''படைத்தான் கவி என்ற போதே இதுவும் யதார்பூர்வ கல்பனமாமே'' என ஆச்சார்ய ஹிருதய ஸ்ரீ சுக்தியில் தெரிவிக்கிறார். என்பது குறிப்பிடத்தக்கது.

காட்டு மன்னார் கோயிலில் எழுந்திருக்கும் பெருமாள் ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ள திவ்ய பிரபந்தங்களை ஸ்ரீமந் நாதமுனிகள் மூலமாக உலகுக்கு வெளிப்படுத்தியவர் எனும் தனிச்சிறப்புப் பெற்றவர். நாதமுனிகள் இல்லையெனில் நாலாயிரம் நம் கைக்குக் கிடைத்திருக்காது.

இப்பெருமான், வடநாட்டுப்பயணம் சென்றிருந்தபோது ''ஸ்ரீமந் நாதமுனிகளை ஊர் வரும்படி நியமித்தும் பின்பு நாதமுனிகள் நம்மாழ்வாரிடமிருந்து பெற்ற திவ்யப் பிரந்தங்களை அனுபவித்துக் கொண்டு ஆழ்வார் திருநகரியில் தங்கியிருந்த போது அவரை வீரநாராயண புரத்துக்கு வந்து தம்முன்னே ஒரு உருச்சொல்லும் என்று நியமித்தும் நாதமுனிகள் பாடக்கேட்டு மிகவும் உகந்து சம்சாரிகளை உஜ்ஜிவிக்க நாம் கரணகளேபரங்களைக் கொடுத்தும் சாஸ்திரங்களைத் தந்தும் நாமே வந்து பிறந்தும் கார்யமாகவில்லை. ஆழ்வார்கள் அருளிச் செயல்களாலேயே திருந்திற்று. இப்படிப்பட்ட பிரபந்தங்களை நீர் இயலும் இசையுமாக்கும்'' என்று நியமித்து வைத்தார் அர்ச்சாவதார எம்பெருமான் ஆழ்வார் என்பது வரலாறு.

இவ்வாறு நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களையும் காட்டிக் கொடுத்தவர் காட்டு மன்னனார் ஆவார். அதனைப் பரப்பிய ஸ்ரீமந் நாதமுனிகள், திருமிகு ஆளவந்தார் அவதரித்த அவதாரத் திருத்தலம் காட்டுமன்னார் கோயிலாகும்.

## இருப்பிடம்

**காட்டுமன்னார் கோயில் அல்லது காட்டு மன்னார் குடி சிதம்பரத்திற்குத் தென் மேற்கில் 16 கல் தொலைவில் உள்ளது. சிதம்பரத்திலிருந்து நகரப்பேருந்துகள் செல்கின்றன. ஒரு முக்கால்**

மணிநேரப் பயணம்தான். சேத்தியா தோப்பு முதலிய இடங்களிலிருந்தும் பேருந்துகள் செல்கின்றன. காட்டு மன்னார்குடிப் பேருந்து நிலையத்திலிருந்து தெற்கே நேரே சென்றால் அருகிலேயே ஆலயம் அமைந்துள்ளது. சுமார் அரைக்கிலோ மீட்டர் தூரத்திற்குள்தான் ஆலயம் உள்ளது. எளிதாக அடையலாம். சிதம்பரத்திலேயே தங்கிச் சென்று வரலாம். ஊர் ஓரளவு பெரிய ஊர். தங்கும் வசதிகள் கிடையாது. இவ்வூர் வீர நாராயணபுரம் எனப்படும்.

வீரவநல்லூர் எனவும் வழங்கப் பெறுகிறது. இத்திருத்தலத்துப் பெருமானின் திருக்கிகோயில் வீரநாராயணபுரத்திலே வடவாற்றுக்குக் கிழக்கிலும், வேதபுஷ்கரணி எனப்படும் பெரிய குளம் திருக்குளத்துக்கு மேற்கிலும், வடதிருக்காவேரி என வழங்கப்படும் எய்யலூர் கொள்ளிடத்து வடக்கிலும் வீராண ஏரிக்குத் (வீரநாராயண ஏரி) தெற்கிலும் அமைந்துள்ளது. பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே இருக்கிறது.

இந்த அமைவிடம் பற்றித் தலபுராண சுலோகம்,

*''காவேர்யாச்ச உத்தரேதீரே ஸரஸயச்சிமேதடே*
*வீரநாராயணோபாதி விமானே புண்ய நாமகே''*
*ஸரஸப் பச்சிமே பாகே விமானே புண்யநாமகே*
*வீரநாராயணோ நாம் நா வர்த்ததே*

என்று கூறுகிறது. சுற்றிலும் வயல்சூழ நீர் நிரம்பிய வாய்க்கால்கள் ஆறுகள் ஏரிகள் சூழத் திருவரங்கத் தீவுபோல் திருவரங்கமாகவே காட்சியளிக்கிறது. நான்கு பக்கங்களிலும் மாடவீதிகளிலும் தேரோடும் வீதிகளையும் கொண்டதாக இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

## வேறு பெயர்கள்

இத்திருத்தலத்திற்கு ஜில்லிகாவனம், மன்யுஷேத்திரம், மதங்க ஆசிரமம், வீரநாராயணபுரம், வீரநாராயண சதுர்வேதிமங்கலம், காட்டு மன்னார் குடி, காட்டு மன்னார் கோயில் ஆகிய பெயர்கள் உள்ளன.

இப்பெயர்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் பின்னணியில் பொருள் உள்ளது.

### ஜில்லிகாவனம்

ஜில்லிகை எனும் அரக்கி வாழ்ந்ததும் அவளுக்கு உடையதுமான ஸ்ரீ முஷ்ணம், காட்டு மன்னார் கோயில் ஆகிய இரண்டு பகுதிகளும் ஜில்லிகாவனம் என அழைக்கப்பெற்றன.

### மன்யு க்ஷேத்திரம்

பெரிய வேள்வியில் நாராயண மூர்த்தி இங்கு எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள் பாலித்ததால் இப்பெயர் என்பர்.

### மதங்காச்ரமம்

மதங்க முனிவர் என்பவர் அருள் பெற்றதாலும், அவர் வாழ்ந்த இடமாதலாலும் 'ரம்யே மதங்காச்ரமே' எனும் ஸ்தல புராண சுலோகத்தின் அடிப்படையில் மதங்காசிரமம் என வழங்கப் பெறுகிறது.

இந்த மதங்க முனிவர் காஞ்சியிலே வாழ்ந்த முனிவர். பிரம்மனின் வேள்வியின் போது இவர் வேதத்தைச் சொற்பிழையோடு கூறியதால் பிரம்மாவால் சபிக்கப்பெற்றார். சாபவிமோசனம் பெற அவர் ஸ்ரீமுஷ்ணம் வந்து சுயம்பு மூர்த்தியான பூவராகமூர்த்தியை வழிபட்டுச் சாபம் நீங்கத் தவம் செய்து அருள்பெற்றார். அவர் ஆணைப்படி, ஆக்னேய திக் பாகத்திலே உள்ள இவ்விடத்திலே வேத புஷ்கரணிக் கரையிலே தவம் செய்து வேண்டி நிற்கப் பெருமாள் திருவாழி, திருச்சங்குடன் மதங்க முனிவருக்குச் சேவை சாதித்தார். மதங்கரின் தவத்தைப் போற்றிச் சிறப்பித்து அதற்கு ஈடாக, யாது வேண்டும் என்று வினவ, மதங்கர் உம்மையே வணங்கித் துதித்து வழிபட்டு உய்ய வேண்டும் எனவேண்டினார். பெருமாளும் தனக்கு இடப்பக்கத்திலே திருச்சுற்றிலே இடமளித்தார். இதனால் அவர் பெயராலேயே மதங்காசிரமர் என்று அழைக்கப் பெற்றார்.

### வீரநாராயணபுரம்

**இப்பதியில் இறைவன் திருமகளோடும், நில மகளோடும் நாராயணனாகக் காட்சியளித்தார் இத்தலத்தில் மன்னனுக்குத் திருமகள் தாமரை மலரிலே கிடைத்தார். அப்பெண்ணுக்கு மரகதவல்லி எனப் பெயரிட்டு மணம் முடிக்கச் சுயம் வரம் நிகழ்த்தினார். திருமால்**

கருட வாகனத்தைக் குதிரையாக மாற்றிக் கொண்டு மன்னன் வடிவத்துடன் சுயம்வரம் மண்டபம் அடைந்தார். மரகதவல்லி அவர் கழுத்தில் மாலையிட்டார். மற்ற மன்னர்கள் இது கண்டு ஆத்திரமுற்றனர். அவர்கள் நாராயணனுடன் சண்டையிட்டனர். நாராயணன் வெற்றி கொண்டு வீரத்தைக்காட்டினார். மன்னன் வடிவில் வந்தவர் தாம் யார் எனக்காட்டிச் சேவை சாதித்தார். மன்னன் சாதாரணன் அல்லன் வீரநாராயணன் என்று கண்டனர். வீரநாராயணா எனப் பலமுறை கூவி அழைத்தனர். மரகதவல்லிக்குச் சீதனமாக வீரநாராயணபுரத்தை அமைத்து அழகு செய்து வீரநாராயண நல்லூர் எனும் ஊரையும், வீரநாராயண ஏரியையும் வெட்டுவித்தான். அன்று முதல் வீரநாராயணபுரம் என வழங்கி வருகிறது.

## வீரநாராயணசதுர்வேதி மங்கலம்

வீரநாராயணபுரத்து எல்லையிலேயே மன்னார்குடி வருவாய்க் கீழ் எல்லையிலே நாதமுனிகள் காலத்துக்கு முன்னும், பின்னும் சதுஸ்ஸஹஸ்ர நிலையம் என்னும் நாலாயிரம் குடும்பத்துக்கு குடியிருப்பு வாழ்க்கை வசதி அனைத்தும் வழங்கியதால் சதுர்வேதமங்கலம், சதுஸ்ஸஹஸ்ர நிலையம் என வழங்கி வருகிறது.

## காட்டு மன்னர் கோயில்

நாதமுனிகள் வீரநாராயண சதுர்வேத மங்கலத்திலே ஆனி அனுஷத்தில் அவதரித்தார். அவர் பெருமானைச் சேவித்து நித்ய கைங்கர்யம் செய்து வந்தார். அவர் வீடமதுரை சென்று பிவருந்தாவனத்திலிருந்தார். அங்கு இத்திருக்கோயில் பெருமாள் மன்னனார் அவருக்குச் சேவை சாதித்து அழைத்து வந்தார். அப்போது மேல்கோட்டை திருநாராயணபுரத்து சுவாமிகள் திருவாய்மொழி திருக்குடந்தை ஆராவமுது பாசுரம் சேவிக்கக் கேட்டு மகிழ்ந்தார். ஆழ்வார் திருநகரி சென்று நம்மாழ்வார் திருவருளால் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பெற்று அதனை உலகத்து மக்கள் உய்யும் வண்ணம் பிரதம ஆசாரியனாகக் காட்டினார். மன்னனார் மூலமாக உலகத்துக் காட்டியதால் காட்டும் மன்னனார் கோயில் என்று வழங்கிக் காட்டு மன்னார் கோயில் என்றாயிற்று. இது காட்டு மன்னர்குடியாயிற்று. காடு என்பதற்கும் இதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது அறிதல் வேண்டும். காட்டுகின்ற, காட்டும் மன்னார் கோயில் இது.

## புராணத்தலம்

இத்திருத்தலம் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டதோ அல்லது 108 திருப்பதிகளுள் ஒன்றோ அன்று. எனினும் புராணத்தலமாக விளங்குகிறது. இது ஆச்சார்யர் அவதரித்த சிறப்புமிகு தலமாகும். நாலாயிரப்பனுவல்கள் உலகுக்கும் காட்டிய திருத்தலம். நாதமுனிகள், மதங்க முனிவர் முதலானோர் திருவாராதனம் செய்த திருத்தலம். நாதமுனிகளே திருவாராதனம் செய்த சிறப்பு பெருஞ்சிறப்பாகும்.

## திருக்கோயிலின் அமைப்பு

இத்திருக்கோயில் ஒரே ஒரு திருச்சுற்றுடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நுழைவாயிலிலுள்ள கோபுரவழியாக ஆலயத்தினுள் நுழைந்ததும் வெற்றிடம் ஒன்று உள்ளது. வெற்றிடத்தை அடுத்து மரக்கொட்டகை உள்ளது. இந்த உயரமான கொட்டகையினுள் பலிபீடம், கொடிக்கம்பம் ஆகியன உள்ளன. இந்த மரக் கொட்டகையில் பெருமாளை நோக்கியவாறு கருடாழ்வார் திருச்சன்னிதி உள்ளது. கொட்டகையை அடுத்துள்ள மண்டபம் அகல வாக்கில் அமைந்துள்ளது. மண்டபவாயில் உயமானது.

## ஆறுபடிகள்

மண்டப வாயிலில் ஆறுபடிகள் உள்ளன. இந்த ஆறுபடிகளுக்குத் தனி மகத்துவம் உண்டு. விழாக்காலங்களில், இராப்பத்திலும், சேத்தியிலும், தாயார் விழாக்காலங்களிலும் ஒவ்வொரு படிக்கும் தளிகை அமுது செய்து ராகங்கள் எச்சரிக்கை பாடி நடனமாடி உள்ளே செல்வது இவ்வாலயத்தில் தனிச்சிறப்பாகும்.

இந்த ஆறாம்படிக்கு நீதிமன்றத்திற்கு உள்ள தனித் தகுதியும் உண்டு. இருவருக்கிடையே வழக்குகள் உள்ள நிலையில் ஆறாம்படியில் நின்று சத்தியம் செய்யச் சொல்வது மரபு. தவறு செய்தவர் அவ்வாறு சத்தியம் செய்ய அஞ்சுவர். அப்படியே பொய்ச்சத்தியம் செய்தாலும் அதன் விளைவை அனுபவிக்கத் தவறியதில்லை என உறுதியாக

## தும்பிக்கை ஆழ்வார்

ஆறாம்படி உள்ள மண்டபத்தில் சேனை முதலிகள் சன்னதியில் தும்பிக்கை ஆழ்வார் - ஆம் விநாயகப் பெருமாள்தான்.

எழுந்தருளியுள்ளார். இவருடைய அம்சம்தான் ஸ்ரீமன் நாதமுனிகள் எனவும், சேனை முதலிகளின் பரிவார தேவதைகளில் கஜாஸ்யர் எனும் அமைச்சராகவும் அழைக்கப்படுகிறார்.

### மணவாள மாமுனிகள்

ஸ்ரீமன் மணவாள மாமுனிகள் சன்னதியில் ஸ்ரீமன் மணவாள மாமுனிகளைச் சேவித்து அதற்கடுத்தாற்போல் சுவாமி எம்பெருமானரையும் ஸ்ரீபிள்ளை லோகாச்சாரியாரையும் சேவித்துச் சுவாமி எம்பெருமானாருக்குத் திருவமுது படைத்த அஷ்டதிக்கஜங்களுக்குள் ஒருவரான கிடாம்பிய ஆச்சானையும் சேவித்து, உள்ளே நுழையவும் நாதமுனிகளுக்குக் கீழ்ப்புறம் திருமங்கை ஆழ்வார் சன்னிதியில் ஆழ்வாரைச் சேவித்து, நாதமுனிகளைச் சேவித்துப் பெருமாளைச் சேவிக்க வேண்டும். இந்த அமைப்பிலேயே ஆலயம் அமைந்துள்ளது.

### நாதமுனிகள் மண்டபம்

ஸ்ரீமன் நாதமுனிகள் மண்டபம்தான் நாதமுனிகள் காலத்தில் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் மீண்டும் உலகத்துக்கு மன்னனார் முன் வெளியிட்ட மண்டபமாகும். தெற்கு வாயில் வழியாக ஸ்ரீஆளவந்தாரைச் சேவித்து வந்தால் தாயார் கிழக்கு முகம் நோக்கி அமைந்துள்ளார்.

### திருச்சுற்று

திருச்சுற்றில் வரும்போது தாயாருக்கு இடப்புறமாக வடபகுதியில் சூடிக்கொடுத்த சுடாக்கொடி, பாமாலை பாடிக்கொடுத்த பாலை ஆண்டாளின் திருச்சன்னிதி உள்ளது.

வடபுறத்தில் அரசர் காலத்தில் வேத, ஆகம, சாத்திர, திவ்ய பிரபந்தம் படித்த மாணவர்களுக்கு அன்னமளித்த அலங்கார மடைப்பள்ளி உள்ளது.

### ஆண்டாள், மதங்கமுனிவர்

ஆண்டாள் சந்நிதி முன்பு மதங்கமுனிவரின் சந்நிதி உள்ளது. இத்திருத்தலத்தின் தலவிருட்சமாக நந்தியாவட்டைச்செடி விளங்குகிறது.

## வடக்கு, தெற்கு வாயில்கள்

கீழ்ப்புறத்தில் வடக்கு வாயில் அருகில் பிரம்மோத்சவத்திற்குரிய யாக சாலையும், திருமடப்பள்ளிக்குரிய பொருள் வைப்பறையும் உள்ளன. தெற்குவாயில் அருகில் மடைப்பள்ளி, கிணறு, உட்புறம் பாத்திர அறை, களஞ்சியம் உள்ளன. மணவாள மாமுனிகள் சந்நிதிக்கு எதிரில் தென்பகுதியில் கண்ணாடி அறை உள்ளது.

## கருவறை

கருவறை கிழக்குநோக்கி உள்ளது. கருவறை நல்ல இயற்கைக் காற்றோட்ட வசதியுடன் சுவரில் துளையுடன் கூடிய ஒற்றைக் கல் சன்னல். அர்த்த மண்டபம் ஆறு கோண வடிவிலேயும், சதுரமாயும் கருங்கல் திருப்பணியாகவும் பண்டையத் திருப்பணியாகவும் தோற்றமளிக்கிறது.

அடுத்து இருபுறமும் இரு அறைகள் நல்ல பாதுகாப்புடன் கருவூல அறையாகக் காட்சியளிக்கின்றன.

## மூலவரும் உற்சவமூர்த்தங்களும்

மூலவரின் திருநாமம் ஸ்ரீ வீர நாராயணன். ஸ்ரீ தேவி, பூதேவி சமேதராக வீற்றிருக்கிறார். சிற்ப சாத்திரத்தில் கூறப் பெற்றவாறு சுதைப் பிம்பங்கள். மூலவருக்குத் திருமஞ்சனம் கிடையாது. தைலக்காப்பு சாத்துகின்றனர். இத் திருக்கோவில் கருவறைமுன் உள்ள துவாரபாலகரும் சுதை வடிவத்தினரே.

யோகநரசிம்மர், வராஹர், ஆண்டாள், சேனை முதல்வர், அனுமன், கருடன் முதலானோர் பழமைமிக்க மூர்த்தங்கள்.

நாதமுனிகள் திருமேனி சாளக்கிரமம் என்று சொல்லப்படும் வகையைச் சேர்ந்த பழமையான திருமேனி. நாதமுனிகளின் கீழே அவருடைய அடியவர்கள் சிலையில் வடிக்கப்பட்டுள்ளனர்.

நாதமுனிகளுக்கு எதிரே உள்ள ஆளவந்தார் திருமேனி 500 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பெற்றது. பிள்ளை லோகாச்சாரியார், எம்பெருமானார், கிடாம்பு ஆச்சான் ஆகியோர் மணவாள மாமுனிகள் ஆசாரியர்கள் காலத்தவர்.

கருவறை மேல் உள்ள விமானத்தில் தசாவதாரக் காட்சி, இந்திர தி துவார பாலகர்கள் முதலான பழமைப் படிமங்கள் உள்ளன.

***உற்சவர்கள்***

இத்திருக்கோவிலில் மூன்று உற்சவத் திருமேனிகளை உடையவராக வீர நாராயணப் பெருமாள் விளங்குகிறார். உற்சவர் ஒருவரின் பெயர் செண்பக மன்னனார். இவர் ஸ்ரீ தேவி, பூமிதேவி சமேதராக விளங்குகிறார். மற்றொரு உற்சவரின் பெயர் ஸ்ரீ அழகிய மன்னனார். இவரும் ஸ்ரீ தேவி, சமேதராகவே விளங்கக் காண்கிறோம்.

இவ்விரு பெருமாள் தவிரக் கண்ணபிரான் இங்கே இராஜ கோபாலனாக ஸ்ரீ ருக்மிணி, ஸ்ரீ சத்ய பாமா சமேதராய்க் காட்சியளிக்கிறார். கையில் சாட்டையுடன் கம்பீரமான தோற்றம். தலையில் அவர் அணிந்துள்ள பட்டுத் தலைப்பாகையும் மன்னார்குடி இராஜ கோபாலனுடையதைப் போலவே அமைந்துள்ளது.

இந்த இராஜகோபாலனின் எழில் தோற்றம் இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போன்ற தோற்றம். ஆயன் தோற்றத்தில் தோன்றும் அக்கண்ணபிரானை அவனுடைய அந்த அழகிய கன்னத்தை மெல்லக் கிள்ளிக் கொஞ்சலாம் போல் தோன்றுகிறது. காலடியில் பசு ஒன்று நிற்கிறது.

ஆலிலைக் கண்ணனைப் போல் இங்கே குழந்தைக் கண்ணனும் சிறிய வடிவில் இருக்கிறான். மகப்பேறு வேண்டுவோர் இக்கண்ணனை வாங்கி மடியில் கிடத்தினால் அப்பேறு பெறுவர் என்பது இங்கும் உள்ள நம்பிக்கை.

இத்திருக்கோவிலில் ஸ்ரீ ராமபிரான் சீதை, இலக்குவனுடன் உற்சவமூர்த்தியாய் விளங்குகிறார்.

தனிக்கோவிலில் செங்கமல நாச்சியார், ஆண்டாள், சேனை முதலியார், யாக பேரர், தீர்த்த பேரர், வேணுகோபாலன், நம்மாழ்வார், நாதமுனிகள், திருமங்கை ஆழ்வார், மதுரகவி ஆழ்வார், ஆளவந்தார் பிள்ளை லோகாச்சாரியார், கிடாம்பி ஆச்சான், உடையவர், மணவாள மாமுனிகள் ஆகியோரின் செப்புத் திருமேனிகள் உற்சவத் திருமேனிகளாக உள்ளனர்.

இராஜகோபாலன், ருக்மிணி, சத்யபாமா, அழகிய மன்னனார், யாகபேரர், தீர்த்தபேரர், சேனை முதல்வர் முதலியோர் திருஉருவங்கள் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை. செண்பக மன்னனார், ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோர் அக்காலத்திற்கும் முற்பட்டவர்கள்.

இப்பெருமாள் சந்நிதியில் வடபுறம் நம்மாழ்வாருக்கும், மதுரகவி ஆழ்வாருக்கும், நாதமுனிகளைப் போல் பெரிய திருமேனியுடன் தனியாக சன்னதி உள்ளது. தென்புறம் யோக நரசிம்மரும், வராக மூர்த்தியும் சந்நிதி கொண்டுள்ளனர்.

ஆலயத்தில் வெட்டவெளிக்கு வலப்புறம் இராமபிரான் சந்நிதி உள்ளது. இதனை வாகன மண்டபம் என்பர். திருவிழாக் காலங்களில் இறைவன் வாகனத்தில் திருக்கோலம் பூண்டு இந்த மண்டபத்தில் இருந்துதான் புறப்படுவது வழக்கம்.

### வேத புஷ்கரணி

இத்திருக்கோயில் திருக்குளத்திற்கு வேதபுஷ்கரணி என்று பெயர். இப்பெயர் ஏற்பட்ட விதம் இது. அரசன் வேதம் வல்லவர்களைக் கொண்டு மாணவர்களுக்கு வேதம் பயிற்றுவித்து வந்தபோது ஒரு மாணவன் வேத பாடசாலைப் பிரசாதத்தையும் அட்சதையும் தினமும் நடந்து சென்று அரசனிடம் அளிக்க வேண்டும். ஒரு நாள் மாணவன் சென்றபோது அரசன் இல்லை. எனவே அட்சதையை வைத்துவிட்டுத் திரும்பி விட்டான். மறு நாளும் அதே மாணவன் வரவேண்டும் என ஆணை பிறப்பித்தான். மாணவன் அடி பணிய மறுத்தான். ஆசிரியர் எனது கட்டளைக்கு அடிபணியாமல் இருப்பதால், நான் கற்றுக் கொடுத்த வித்தையை இக்குளத்தில் கக்கு எனச் சொல்ல அம்மாணவனும் அவ்வாறு செய்தான். இதனால் அக்குளம் வேதம் நிறைந்த புஷ்கரணி - வேத புஷ்கரணி என்றாயிற்று.

இத்திருக்குளத்திற்குச் சிறப்பு உள்ளது. மதங்கருக்குக் காட்சி அளித்த நாளில் இத்திருக்குளத்தில் மூழ்கி 108 தடவை பெருமாளை வலம் வந்தால் நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை. திருவிழாக் காலங்களில் திருமஞ்சனக் கூடம் தீர்த்தவாரி இத்திருக்குளத்தில் தான் நடைபெறும்.

### பாஞ்சராத்திரமுறை

இத்திருக்கோவிலில் பாஞ்சராத்ர ஆகம பாதசம்கிதை முறைப்படி திருவாராதனம் செய்கின்றனர். இங்குத் திருவரங்கம் பஞ்சாங்கத்தை ஒட்டியும், திருநட்சத்திரங்கள், அவதார விழாக்கள் நடைபெறும் தென் கலை மரபினை ஒட்டி நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார், மணவாள மாமுனிகள் கடைபிடித்த முறைப்படி நடைபெறுகிறது.

## திருவிழாக்கள்

பஞ்சபர்வ விழா, மாதாந்திரத் திருநட்சத்திர விழா, அவதார விழாக்கள், கல்யாண விழாக்கள், பெருவிழா, சிறப்பு விடையாற்றிவிழா, தீர்த்தவாரி முதலான திருவிழாக்கள் குறிப்பிடத்தக்கன.

பஞ்சபர்வ விழா : ஒவ்வொரு மாதத்திலும் மாதப் பிறப்பு, ஏகாதசி, பௌர்ணமி, அமாவாசை ஆகிய நாட்களில் அழகிய மன்னனாருக்குத் திருமஞ்சனம், புறப்பாடு, தளிகை, சேவை, சாற்றுமறை, கோஷ்டிவினியோகம் மாலை நடைபெறுகின்றன. இதுபோலத் தாயாரின் உற்சவ மூர்த்திக்கு வெள்ளிக்கிழமைகளில் கொடிக் கம்பத்தைச் சுற்றிப் புறப்பாடு நடைபெறும். இவ்விழாவின் போதும், பெருமாள் புறப்பாட்டின் போதும், மேளவாத்தியத்துடன் திவ்வியப் பிரபந்தம் பாடி வருகின்றனர். இந்தக் காலங்களில் பெரிய திருவிழாக்கள் வந்தால் தினம், விதிமுறைப் படியான விழாக்களில் அந்த மரபுப் படி நடைபெறுகிறது.

இத்திருக்கோவிலில் பெ்ளர்ணமியை மையமாகக் கொண்டு பௌர்ணமி மீதம் கொண்டு விழா நடத்துகின்றனர். சித்திரை முழு நிலவு, பங்குனி உத்திரமான முழுநிலவு அனைத்தும் அவ்வாறு கொண்டாடுகின்றனர்.

### மாதத் திருநட்சத்திர விழாக்கள்

| | | |
|---|---|---|
| கார்த்திகை | - | திருமங்கை ஆழ்வார் |
| ரோகிணி | - | பெரிய பெருமாள் கோபாலன் சந்தானகிருட்டிணன் |
| திருவாதிரை | - | உடையவர் |
| புனர்பூசம் | - | இராமர் |
| பூரம் | - | ஆண்டாள் |
| உத்திரம் | - | தாயார் |
| அஸ்தம் | - | கிடாம்பி ஆச்சாள் |
| சித்திரை | - | மதுரகவிகள் |

| | | |
|---|---|---|
| சுவாதி | - | நரசிம்மன் |
| விசாகம் | - | நம்மாழ்வார் |
| அனுஷம் | - | நாதமுனிகள் |
| மூலம் | - | மணவாள மாமுனிகள் |
| பூராடம் | - | சேனை முதலிகள் |
| உத்திராடம் | - | ஆளவந்தார் |
| திருவோணம் | - | செண்பக மன்னார், பிள்ளை லோகாச்சாரி |

## *மாதங்களில் விழாக்கள்*

சித்திரை மாதத்தில் வருடப்பிறப்பு. அழகிய மன்னனாருக்குத் திருமஞ்சனம் கண்டமுனி அலங்காரம் ஆனவுடன் புறப்பாடு கண்டருளி, பஞ்சாங்க வாசித்து, கோஷ்டி வினியோகம் நடைபெறுகிறது.

அட்சயதிதிய நாள் ஒரு புண்யகாலம் ஆகும். அந்நாளில் செண்பக மன்னனாருக்குத் திருமஞ்சனம் அலங்காரம் தளிகை சேவை, சாற்றுமுறை புறப்பாடு நடைபெறுகிறது.

சித்திரையில் செய்ய திருவாதிரை எனும் மணவாள மாமுனிகள் வாக்குப்படி காலை ஒவ்வொரு சன்னதியிலும் மங்களாசாசனம் செய்து பெருமாள் ஆழ்வார் ஆச்சாரியார் மரியாதை நடத்திப் பெரிய வீதி புறப்பாடு கண்டருளி திருமஞ்சனம் சேவை சாற்றுமுறை அழகிய மன்னனாருடன் நடைபெறுகிறது.

சித்திரை அமாவாசையில் எல்லைக்காளியும் வீர நாராயணனின் சகோதரியுமாகிய ஸ்ரீ வீரமா காளிக்குக் காப்புக்கட்டித் திருவிழா நடத்திப் பௌர்ணமியை 9ஆம் நாளாகக் கொண்டு முதல்நாள் கொடியேற்றி விழா தொடங்குகிறது. இவ்விழா சித்திரை பிரம்மோத்சவப் பெருவிழா ஆகும்.

கொடியேற்றுவிழா முதல்நாள் இரவு புற்று மண் கொணர்ந்து விழாத் தொடங்குகிறது. பிரம்மோத் சவத்தின் போது பானகம், வடை, பருப்பு, நீர்மோர் அமுதுசெய்விப்பதுடன் சித்திரான்னங்கள் வினியோகம் நடைபெறுகின்றன.

பிரம்மோத்சவத்தில் மாலை நடைபெறும் பேரீ தாடனம் என்னும் சிறப்பு நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. தவில் நாதஸ்வரம் இசைக் கருவிகளுக்கு வழிபாடு செய்து நீர்குதி, இந்திரன், அக்னி, யமன், வருணன், வாயு, குபேரன், ஈசானன் பிரம்மா முதலியவர்களுக்குத் தனித்தனியாக ராகங்கள் வாசித்து, திக்பந்தனம் செய்யும் நிகழ்ச்சி காணத்தகு காட்சி ஆகும். இதனுடைய தத்துவம் இசையில் திக்பாலகர்களைக் கட்டுப்படுத்துவது என்பதாகும். 10 நாட்களிலும் ஒவ்வொரு நாளும் அதற்குண்டான ராகங்களையும் இசை நிகழ்ச்சிகளையும் நடத்த வேண்டும் என்றும், பேரி என்ற தவில், நாதஸ்வரம் ஆகிய இசைக்கருவிகளுக்குச் சிறப்பு அளிப்பது இதன் நோக்கம். பின்னர் அழகிய மன்னனார் 8 நாட்கள் இரண்டு வேளைகளிலும் காலை பல்லக்கில் நாதமுனிகளுடனும் இரவில் வாகனத்தில் அலங்காரத்துடனம் காட்சி தருவார். சிம்மவாகனம், அன்னவாகனம், சேஷ சயனம், கருடசேவை பரமபதநாதன் சேவை, பெரியதிருவடி சேவை, அனுமந்த வாகனம் யானை வாகனம், ஆகியன ஆறு நாள்களில் நடைபெறுகிறது. ஏழாம் நாள் காலை புறப்பாடு கிடையாது. மாலை அழகிய மன்னனார், ஸ்ரீ தேவி பூதேவியுடன் மாலை மாற்றல் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. அன்றைய இரவு முத்துப் பல்லாக்கு, மின் விளக்கு அலங்காரம், சிறப்பு இசைக்கருவிகளின் கச்சேரியுடன் வீதிப்புறப்பாடு நடைபெறும். அதிகாலையில் சூரியபிரபை, சந்திரபிரபை புறப்பாடு நடைபெறுகிறது.

எட்டாம் நாள் காலை வெண்ணெய்த் தாழி அலங்காரத்துடன் புறப்பாடு நடைபெறும். இரவு பரிமேலழகியான் குதிரை வாகனத்தில் பெருமாள் புறப்பாடு நடைபெறுகிறது.

அன்று இரவில் திருமங்கை மன்னவர் எழுந்தருளி திருவேடு பறியும் பெரிய திருமொழி தொடக்கமும் நடைபெறுகிறது.

ஒன்பதாம் நாள் திருத்தேர் விழா நாள். காலை பெரிய பெருமாளுக்கும், அழகிய மன்னனாருக்கும், உபய நாச்சி மார்களுக்கும் நாதமுனிகளுக்கும் திருமஞ்சனம் ஆனபின் தேருக்கு எழுந்தருளுவர். திருமொழி சாத்துமுறை நடைபெறும். மாலை சித்ரா பௌர்ணமி தீர்த்தவாரி நடைபெறும். அன்று இரவு திருமஞ்சன சேவை சாற்றுமுறை நடைபெறுகிறது.

பதினோராம் நாள் நடைபெறும் விடையாற்றி விழா தெப்பத்திருவிழாவாகும். இராஜகோபால சுவாமி, ருக்மணி, சத்யபாமா, நாதமுனிகள் ஆகியோருக்கு விடையாற்றி உத்சவமாகத் திருமஞ்சனம், தளிகை, சேவை, சாத்துமறை, புறப்பாடு வேத புஷ்கரணியில் மின் விளக்குகள் அலங்காரத்துடன் மேள வாத்யத்துடன் தெப்ப விழா நடைபெறும். இத்தெப்பத்திருவிழா இந்த வட்டாரச் சிறப்பு மிக்கப் பெரிய திருவிழாவாகும். ஏராளமான மக்கள் திரண்டு வந்து கூடுவர்.

### வைகாசி

வைகாசி மாதத்தில் வைகாசி விசாகத்தை ஐந்தாவது நாளாகக் கொண்டு நம்மாழ்வாருக்கு ஐந்து நாள்கள் திருவிழா நடைபெறுகிறது. தினந்தோறும், திருமஞ்சனம், தளிகை சேவை, சாற்றுமுறை நடைபெறும். வைகாசி புனர்வசு அல்லது நவமியில் இராமபிரானுக்குத் திருக்கல்யாண விழா நடைபெறுகிறது.

### ஆனி

அனுஷத்தைப் பத்தாம் நாளாகக் கொண்டு நாதமுனிகள் அவதார விழா ஆகும். ஒன்பதாம் நாள் தீர்த்தவாரி நடைபெறும். பத்தாம்நாள் காலை அவதார விழா காலை நடைபெறும். ஆனி மூலம் ஈடு உத்சவம் சேவை சாற்றுமுறை சிறப்பான விழா ஆகும்.

### ஆடி

ஆடிப்பூரம் ஆண்டாள் அன்ன வாகனத்தில் அவதார விழா நடைபெறுகிறது. ஆளவந்தாரின் திரு அவதார உற்சவம் உத்திராடத்தைப் பத்தாம் நாளாகக் கொண்டு நடைபெறும். இத்திருவிழாவில் ஏகாதசி நாளில் மூலவர் அருள்மிகு வீர நாராயணப் பெருமாளுக்குச் சாம்பிராணித் தைலக் காப்புத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. அன்று இராஜகோபாலன் பாமா, ருக்மணி சமேதராகப் பெரிய வீதி புறப்பாடு நடைபெறும். இவ்விழா ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறுவதால் குறிப்பிடத்தக்கது. ஆடி வெள்ளிக்கிழமை விழாக்கள் நடைபெறுவதில் கடைசி வெள்ளி விழா குறிப்பிடத்தக்கது.

## ஆவணி

சோழர் காலத்தில் ஆவணி ரோகிணியில் 18 நாளும், பங்குனி ரோகிணியில் 18 நாளும் பெருவிழா நடைபெற்றதென அறிகிறோம். இப்போது இரு நாட்கள் மட்டுமே. ஆவணி மாதத்தில் ஸ்ரீ ஜெயந்தி விழா நடைபெறுகிறது. முதல் நாள் இராஜகோபாலன், பாமா, ருக்மணி ஆகியோருக்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. பீஜாதானம், செய்வது வெண்ணெய், சுக்கு, வெல்லம், நாவற்பழம் அமுது செய்வது, பெரியாழ்வார் திருமொழி சேவை நடைபெறும். மறுநாள் காலை உரியடிக் கண்ணனுக்குப் புறப்பாடு, செவ்வெண்ணெய் கொடுப்பது, மாலையில் திருமஞ்சனம், உறியடிவிழா, வழுக்கு மரம் ஏறுவது ஆகிய அழகிய விழாக்கள் காணத்தக்கன.

## புரட்டாசி

நவராத்திரி விழா பெருமாளுக்கும், அழகிய மன்னனாருக்கும் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூஜை நாளில் இராஜகோபால சுவாமிக்கும் உபய நாச்சியாருக்கும் திருமஞ்சனம். தனிக்கோவிலிலே செங்கமலத் தாயாருக்குத் திருமணம் மாலை மாற்றல் புறப்பாடு. ஆறாம்படியில் மண்டபத்தில் சேத்தி ஆண்டுக்கு ஒரு முறை ஆகும்.

பத்தாம் நாள் அழகிய மன்னனாருக்கு விஜயதசமி அம்பு விடும் விழா குதிரை வாகனத்தில் பெருமாள் புறப்படுவார்.

புரட்டாசி மாதத்துத் திருவோணத் திருநாளில் செண்பக மன்னனாருக்கு உதய கருட சேவை நடைபெற்ற பின்னர் திருமஞ்சனம் சேவை சாற்றுமறை நடைபெறுகிறது.

## ஐப்பசி

மூல நட்சத்திரத்தினைப் பத்தாவது நாளாகக் கொண்டு மணவாள மாமுனிகள் விழா சிறப்பாக நடைபெறும் பதினோராம் நாள் கந்தப் பொடி உற்சவம் நடைபெறுகிறது. பூராடத்தில் சேனை முதலிகள் திருநட்சத்திரத்தில் விழாவும், திருவோணத்தில் பிள்ளை லோகாசாரியார் விழாவும் சிறப்பாக நடைபெறும். தீபாவளியில் எல்லா மூர்த்தங்களுக்கும் திருமஞ்சனம், புத்தாடை அணிவித்தல் நடைபெறுகிறது.

### கார்த்திகை

கைசிக ஏகாதசியில் பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடைபெறும். கைசிகத் துவாதசி நாளில் பெருமாளைக் கிழக்குமுகமாக எழுந்தருளச் செய்து தீர்த்தகாரர் திருமாளிகைக்குச் சென்று சகல மேள வாத்தியம், கைத் தீவட்டி, குடை, சுருட்டி முதலானவைகளுடன் அழைத்து வந்து மரியாதைகள் செய்து கைசிக புராணம் படித்துத் திருக்குறுங்குடிப் பாசுரம் சேவித்து, சேவை சாற்றுமறை செய்து, மேற்படி தீர்த்தக் காரரைச் சகல சிறப்புகளுடன் திருமாளிகைக்குக் கொண்டுவிடுவர். திருக்கார்த்திகையில் திருமங்கை ஆழ்வார் சாற்றுமறை தீபத்திருநாளில் சொக்கப்பனை கட்டுதல். பெரிய வீதி புறப்பாடு, கிளை தீவட்டி போட்டுப் புறப்பாடு ஆகியனவும் நடைபெறும்.

### மார்கழி

தனுர்மாதம் எனப்படும் மார்கழியில் திருப்பள்ளியெழுச்சி நடைபெறும். பெருமாள் சன்னதியிலும், நாதமுனிகள் சன்னதியிலும் கோஷ்டி நடைபெறுகிறது.

மார்கழி மாதத்து அத்யயன உற்சவம், தனுர் வியதீபாதம் ஆகியன குறிப்பிடத்தக்கன. அமாவாசை நாளில் திருநெடுந்தாண்டகம் தொடக்கம். அன்றுமுதல் இருபத்தி இரண்டு நாள்களுக்குப் பகல்பத்து இராப்பத்து விழா நடைபெறும். வைகுண்ட ஏகாதசி நாளில் பரமபத வாயில் நடைபெறும். படி ஏற்ற சேவை நடைபெறும். 20 ஆம் நாள் நம்மாழ்வார் மோட்சம் நடைபெறும் திருவரங்கத்தில் இத்திருவிழாவை ஏற்படுத்தியவர் ஸ்ரீமன் நாதமுனிகளே. இவ்விழா மிகச் சிறப்புடன் நடைபெறும் தாயாருக்கும் இதேபோல் பத்து நாட்கள் திருது அத்யயன உத்சவம் நடைபெறும். இயல் சாத்து உற்சவம் 11 ஆம்நாள் நடைபெறும். மார்கழி இருபத்தியேழில் 'கூடாரவல்லி' எனும் திருப்பாவை நாள் ஆதலால் அந்நாளின் முதல் நாள் இராஜகோபால சுவாமிக்கும், சேத்தி உற்சவம் நடைபெறும்.மறுநாள் கூடாரவல்லி உற்சவம் நடைபெறும். மார்கழி மாத அமாவாசை நாளில் அனுமன் ஜெயந்தி விழா நடைபெறுகிறது.

மதங்க முனிவருக்கு இறைவன் காட்சியளித்த விழா நாளில் பெருமாள் குளக்கரைக்குச் சென்று தீர்த்தவாரி ஆகிப் பின்னர் பிரகாரம் சென்று மதங்கருக்குச் சேவை சாதித்துத் திருமஞ்சனம் சேவை சாற்றுமறை நடக்கும். போகியன்று ஆண்டாள் திருக்கல்யாண உத்சவ நடைபெறும். (ஸ்ரீ ராஜகோபாலன் ஆண்டாள்)

### தை மாதம்

தை மாதத்தில் பொங்கல் விழாக் கொண்டாடப்படுவது ஒரு சிறப்பு பொங்கல் பானை வைத்துப் பொங்கல் விழாக் கொண்டாடப்படுகிறது. இது போல் வேறு எங்கும் நடைபெறுவதில்லை.

கனுப்பொங்கலன்று ஆண்டாள் கனுப்பொடி வைப்பு, புறப்பாடு நடைபெறும்.

சங்கராந்தி நாள் மாலையில் பாரிவேட்டை குதிரை வாகனப் புறப்பாடு ஆண்டுக்கு ஒருமுறை உப்புக்காரத் தெருவழியாகச் சென்று மண்டகப்படி கண்டருளிப் பட்டுச் சாத்தி ''பொங்கலோ பொங்கல்'' ஒலி எழுப்பிக் கோவிலுக்குத் திரும்புவது மாடு மிரட்டும் விழா ஆகும்.

### கரிநாள் மட்டையடி

பெருமாள் காலை புறப்பாடு கண்டருளி மாலை மாற்றல் திருவந்திக் காப்பு, உடன் உள்ளே மணவாள மாமுனிகள் சன்னதியில் தீர்த்தகாரர் ஸ்தலபுராணம் வாசித்தல், பெருமாள் தாயார் திருமஞ்சனம் நடைபெறும். இந்த மட்டையடி விழா பங்குனி உத்திர நாளில் திருவரங்கத்தில் நடைபெறுகிறது. இங்குத் தை மாதத்தில் நடைபெறும் இதனைப் பிரண்ய கலக உற்சவம் என்பர். தை வெள்ளிக் கிழமைகளிலும் தாயாருக்கு ஆடி வெள்ளிக் கிழமைகள் போன்று சிறப்பாக நடைபெறும்.

தைப் பௌர்ணமி நாளான தைப்பூச நாளில் பெருமாள் வீர நாராயணர், உபய நாச்சிமார்களுடன் திருக்குளம் எழுந்தருளித் தீர்த்தம் சாதித்துத் திருபஞ்சனம் ஆனபின் சேவை சாதித்துப் புறப்பாடு, சாற்றுமறை ஆகியன நடைபெறும். தைக் கடை வெள்ளி தாயாருக்கு உகந்த சிறப்பு நாள்.

### மாசி

பௌர்ணமியில் தீர்த்தவாரி, முதல்நாள் இரவு ஐந்து பல்லக்குகளில் பெருமாள், உபய நாச்சியார், நாதமுனிகள், ஆளவந்தார், பல்லக்குகளில் கொள்ளிடத்துக்கு எழுந்தருளி தீர்த்தம் சாதித்தல். பெருமாள் மகத்துக்கு எழுந்தருளும் காட்சி வெகு விமரிசையாக நடைபெறும். ஒவ்வோர் எல்லையிலும் மக்கள் வரவேற்கும் காட்சி, திருப்பி அனுப்பும் காட்சி மிகச் சிறப்பானது. சாதி, மத, இன ஒற்றுமைக்கு இவ்விழா எடுத்துக்காட்டு. மகத்துக்குப் பெருமாள்

செல்லும் போதும், திரும்பி வரும்போதும், இருமருங்கிலும் செந்நெற்கதிர்கள், அசைய, மக்கள் 'அரே ரங்கம் அரே ரங்கம்' 'சபாஷ் ரங்கம், சபாஷ் ரங்கம்'' என ஆரவாரமாக முழக்குவர். மாசி மாத முழுநிலா நாளில் மக்கள் இறைவன் திருத்தோற்றம் கண்டு மகிழ்வர். ஆண்டுக்கு ஒரு நாள் நடைபெறும் விழா என்பதால் மக்கள் இதனை ஆவலுடன் எதிர்கொள்வர். வெற்றிலை, தேங்காய், பழத்துடன் இறைவனைக் கண்டு கண் குளிரத் தரிசிக்க ஆவலுடன் காத்து நிற்பர்.

மாசி மூலம் மணவாள மாமுனிகள் சிறப்புத் திருநட்சத்திரம்.

மாசி கிருஷ்ணபட்ச துவாதசியில் ஆச்சாரியர்களில் ஒருவருக்குத்தான் நினைவு நாள் கொண்டாடப்படுவதுதான் வழக்கம். மணவாள மாமுனிகளுக்குத் திருவரங்கத்துப் பெருமாள் தானே நினைவு நாள் கொண்டாடுவது தனிச் சிறப்பு. தொன்று தொட்டு இவ்விழா சிறப்புடன் நடைபெறுகிறது.

## பங்குனி

பங்குனி ரோகிணி கோபாலன் விழா 18 நாள்கள் முன்னர் நடைபெற்றதாகவும், இப்போது ஒரு நாள் நடைபெறுவதாகவும் அறிகிறோம். பங்குனி உத்திர நாள் தாயார் அவதார நாள். திருமஞ்சனம் சேவை சாற்றுமறை நடைபெறும். பெருமாளுக்கும் திருமஞ்சனம், சேவை, சாற்றுமறை, இரவு கருட சேவை ஆகியன நடைபெறும். பௌர்ணமி நாளான பங்குனி உத்திர நாளில் கருட சேவை காண்பது சிறப்பு.

## ஓவியங்கள்

சமீப காலத்தில் வரைந்த கீதோபதேசம் உடையவர் சன்னதியின் மேலே உள்ளது.

## கல்வெட்டுகள்

கருவறை விமானம் தென்புறம் வடபுறம் ஆகிய இரண்டு புரங்களிலும் பாலி எழுத்துக்களிலும் பண்டையத் தமிழ் எழுத்துக்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு ஆலய நிர்வாக நடைமுறைகளுக்கு மானியமாக அரசர்கள் வழங்கிய அறக்கொடைகளைக் குறிப்பதாக உள்ளது. சோழர்கள், நாயக்க் மன்னர்கள், விஜய நகர மன்னர்கள் இவ்வாலயத்திற்குக் கொடைகள் பல அளித்துள்ளனர்.

இருபத்தைந்து

# 25. மதுரை மதன கோபால் சுவாமி திருக்கோயில்

மதுரைத் திருநகரம் அன்னை மீனாட்சியாம் அங்கயற்கண்ணி அருளாட்சி புரியும் விழாக் கோலமுடைய நகரம். கோயில் நகரம், திருவிழா நகரம் என்னும் சிறப்புகள் பெற்ற இத்திருத்தலத்தில் சமயக் குரவர்களால் பாடப்பெற்ற, ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருத்தலங்கள் அபிமானத்தலங்கள் முதலியன பலவாகும். ஆழ்வார்களின் மங்களாசாசன மதுரைக் கூடலழகர் திருக்கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள அபிமானத் திருத்தலம் - பழம்பெருமை வாய்ந்த திருத்தலம் மதுரை அருள்மிகு மதன கோபால சுவாமி திருக்கோயில்.

## இருப்பிடம்

மதுரை நகரின் மையப்பகுதியில் இது அமைந்துள்ளது. இத் திருக்கோவில் மதுரை நகரப்பேருந்து நிலையமான பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கும் குறைவான தொலைவில் உள்ளது. அதுபோலவே புகைவண்டி நிலையதத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவே.

மதுரை நகரில் மேலமாசி வீதி எனும் திருவீதியில் தென்மேற்கில் கிழக்கு நோக்கியவாறு இத்திருக்கோயில் அமைந்துள்ளது. மேலமாசி வீதி வழி நகரப் பேருந்துகள் செல்வது இல்லை. எனவே நடந்தும் வரலாம், சைக்கிள் ரிக்ஷாவிலும் வரலாம். தெற்கும் மாசி வீதியிலிறங்கியும் வரலாம்.

இக்கோவிலும் சிறப்புப் பெற்ற கூடலழகர் கோயிலும், ஒரே நிருவாகத்தின்கீழ் இருந்து இன்று தனி நிருவாகத்துடன் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் பாண்டியர் காலம் முதலே இருந்து வந்துள்ள திருக்கோயில் என்ற போதிலும், நாயக்கமன்னர் காலச் சிற்பக் கட்டடக் கலையே இன்று பெரிதும் காணப்பெறுகிறது.

## ஆண்டாள் பிராட்டி

பெரியாழ்வார், ஆண்டாள் பிராட்டி ஆகியோரின் வாழ்வுடன் தொடர்புடையதாக இக்கோயிலின் வரலாறு கூறப்பெறுகிறது. பெரியாழ்வார் தம் திருமகளாய் அவதரித்த சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வடமதுரை, திருவேங்கடம், சோலைமலை, திருவரங்கம் முதலிய திருத்தலப் பெருமானின் பெருமைகள் கேட்டுப் பெருமாள் மீது காதல் கொண்டார்.

பெரியாழ்வார் தம் திருமகளுடன் இத்தலம் வந்தார் எனவும், பெருமாள் இருவருக்கும் இங்குச் சேவை சாதித்தார் எனவும் வழிவழியாகக் கூறப்பெறுகிறது.

இதன் நினைவாக இத்திருத்தலத்தில் ஆண்டாள் பெருமாட்டியின் அவதாரத் திருநாளில் ஆடிப்பூர நாளில் பெருமானுக்கும், ஆண்டாளுக்கும் மாலை மாற்று நிகழுகிறது. திருமணத்திற்கு முன் ஆண்டாள் பிராட்டியார் இத்தலத்தில் அருள்மிகு மதன கோபாலனைச் சந்தித்து மாலை மாற்றிக் கொண்டார் என்பர்.

## பிருந்தாவனம்

வடமதுரையில் பிருந்தாவனம் போல இத்திருக்கோவில் இன்று எழுந்துள்ள இடம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன் மலர்கள் நிறைந்த பூஞ்சோலையின் மையத்தில் 'கிருதமாலா' நதிக்கரையில் அமைந்திருந்தது. இன்றைக்கும் பெரியார் பேருந்து நிலையத்திற்குப் பின்புறம் கிருதமால் நதி பழம்பெருமை இழந்து கழிவு நீர்க் கால்வாயாகக் காலத்தின் கோலத்தில் விளங்குவதைக் காண்கிறோம்.

## பெயர்க்காரணம்

கண்ணபிரானின் திருப்பெயர்களில் மதன கோபாலன் என்பதும் ஒன்று. பாலகோபாலன் இராதை, கோபியருடன் திருவிளையாடல் நிகழ்த்திய வேளையில் கண்ணனுடைய அழகைக்கண்டு, பேரழகன் எனப் பெருமை கொண்டிருந்த மன்மதன் வெட்கமடைந்து தன் அழகிலும் சிறந்தவன் கண்ணன் என உணர்ந்து, கண்ணபெருமானின் திருவடிகளின் பெருமைதனை உணர்ந்து, கண்ணபெருமானின்

திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன் செருக்கு, ஆணவம் அழியப்பெற்றான். கண்ணன் மன்மதனுடைய அழகிலும் சிறந்து விளங்குவதால் மதன கோபாலன் என்று போற்றப்பெற்றார்.

## கோபுரம்

கிழக்கு நோக்கியுள்ள திருக்கோயிலின் வாயிலில் ஐந்து அடுக்குடைய கோபுரம் அமைந்துள்ளது. இக்கோபுர வாயிலின் மேல்புறத்தில் பாண்டியர்களின் சின்னமான இரட்டை மீன்கள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. மேலமாசி வீதியும், தெற்குமாசி வீதியும் சந்திக்கும் முனையில் சாலையிலிருந்து உள்வாங்கியவாறு 'காபுரம் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலை அடுத்து மிக அருகில் இம்மையில் நன்மை தருவார் திருக்கோயில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருக்கோயிலுக்கு வெளியிலும் உள்ளும் இருதிருச்சுற்றுகள் உள்ளன. கோவிலுக்குள் கோபுரவாயிலினுள் நுழைந்ததும் வெட்ட வெளி அமைப்பு உள்ளது. கோபுர வாயிலை அடுத்துத் திருமடப்பள்ளியும், தண்ணீர்க் குழாயும் உள்ளன.

தென்புறம் உள்ள மண்டபம் வசந்த மண்டபம் எனப்படுகிறது. இம்மண்டபத்தில் தான் திருக்கோயில் அலுவலகம் உள்ளது. வைகாசி மாதத்தில் வசந்தவிழா நடைபெறும். அப்போது இம்மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளி ஐந்து நாட்கள் சேவை சாதிக்கிறார்.

கோபுரத்தின் நேரே முன்மண்டபம் அமைந்துள்ளது. இம்முன்மண்டபத்தில் கொடிமரமும் பெரிய திருவடியாகக் கருடாழ்வாரும் உள்ளனர்.

இம்முன்மண்டபத்தை அடுத்து உள்ள மண்டபத்தில் இடதுபுறம்கண்ணாடி அறை அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் உடையவருடன் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் ஆகியோரின் உற்சவத் திருமேனிகள் உள்ளன. வெண்ணைத் தாழியுடன் சிறிய திருஉருவில் அமைந்துள்ள கண்ணனான வெண்ணெய்த் தாழிக் கண்ணனின் தோற்றம் எழில் வாய்ந்தது. உடையவர், நம்மாழ்வார், சேனை முதலி ஆகியோரும் சிலைவடிவில் அமைந்துள்ளனர்.

கருவறை இரண்டு அடுக்குகளாக உள்ளது. கருவறை நுழைவாயிலில் இரண்டு புறமும் துவார பாலகர்களின் திருஉருவங்களைக் காணலாம்.

## மூலவர்-ஸ்ரீவேணுகோபாலன்

கருவறையில் மூலவர் நின்ற கோலத்தில் பாமா, ருக்மிணி சமேதராகக் காட்சியளிக்கிறார். மூலவரின் திருநாமம் ஸ்ரீவேணுகோபாலன் என்பதாகும். சத்தியபாமாவும் ருக்மணியும் அருகில் நின்று அருள் பாலிக்கின்றனர்.

பெரியாழ்வார் 'இடவண்ணா இடத்தோளோடு சாய்த்து' என்னும் பாசுரத்தில் கண்ணனுடைய திருமேனி அழகை வர்ணிக்கிறார். அதே திருமேனி அழகுடன் சிலா வடிவத்தில் மதன கோபாலன் சேவை சாதிக்கின்றார். கல்வெட்டுகளில் பெருமாளுக்குத் திருத்துருத்தி மகாதேவர், ஏழுலக முழுதுடையான், அழகிய மணவாளன் ஆகிய பெயர்கள் காணப்பெறுகின்றன.இந்த மதன கோபாலரைக் காணுகையில் பெரியாழ்வாரின்,

*இடவணரை இடத் தோளொடு சாய்த்து*
*இருகை கூடப்புருவம் நெரிந்தேன்*
*குடவ யிறுபட வாய்கடை கூடக்*
*கோவிந்தன் குழல் கொடுதின போது,*
*மடமயில்களொடு மான் பிணைபோலே*
*மங்கை மார்கள் மலர்க்கூந்தலவிழ,*
*உடை நெகிழவோர் கையில் துகில்பற்றி*
*ஒல்தி யோடரிக் கணோட நின்றனரே.*

என்னும் பாசுர வரிகள் எதிரொலிக்கக் காண்கிறோம். ஆண்டாள் தன் பதினான்காம் பாசுரத்தில்

''சங்கொடு சக்கரமும் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணனைப் பாடேலோரெம் பாவாய்'' என்று பாடியது போல் இங்கு நின்ற கோலத்தில் அருள் பாலிக்கும் கண்ணபிரான் வேணுகோபாலனாய் இருகரங்களில் புல்லாங்குழலை ஏந்தியவாறு, மற்றைய இருகரங்களில் சங்கும், சக்கரமும் கொண்டு மதனகோபாலனாகவும், நாராயண னாகவும் தோற்றமளிக்கிறார். மல்லாண்டதிண் தோள் மணி வண்ணனாய் இங்கே பேரெழிலுடன் விளங்கும் மூலவர்முன் உற்சவத் திருமேனியைக் காண்கிறோம். பஞ்ச லோகத்தாலான மதன கோபாலன், ஸ்ரீதேவி, மனவல்லித்தாயார் ஆண்டாள் திருமேனிகள் உள்ளன.

உற்சவரின் திருநாமம் தான் மதன கோபாலன். உற்சவர் திருப்பெயராலேயே இத்திருக்கோயிலும் மதன கோபாலசுவாமி

திருக்கோயில் என அழைக்கப்பெறுகிறது. உற்சவரும் மதன கோபாலராய்ச் சங்கொடு சக்கரம் ஏந்தி நாராயண மூர்த்தியாய்ப் பாமா, ருக்மணியுடன் விளங்குகிறார்.

### தாயார்

இடது புறம் தென்புறத்தில் தாயார் தனிக் கோயில் கொண்டு விளங்குகிறார். தாயாரின் திருப்பெயர் ஸ்ரீ மதனமதுர வல்லித் தாயார் என்பதாகும். இப்போது மதன வல்லித்தாயார் என வழங்கக் காண்கிறோம். தாயார் சந்நிதிமுன் மண்டபம் ஒன்று உள்ளது. பக்கத்தில் கண்ணன் சந்நிதியும், பின்புறம் அனுமார் சந்நிதியும் உள்ளன. தாயார் சந்நிதிக்கு உடபுறமே பெருமாள் கோயில் உள்ளது.

### சிவன்-திருமால் தொடர்பு

இம்மையில் நன்மை தருவார் திருக்கோயிலுக்கும் இக்கோயிலுக்கும் தொடர்பு ஒன்று கூறப்பெறுகிறது. சிவபெருமான் கடுந்தவம் இயற்றியபோது அக்கினி வளர்ந்து எரிக்கத் தொடங்கியது. அது தேவலோகத்தளவு வளர்ந்த அக்கினி ஆயிற்று.

அக்கினியின் வெம்மை கண்டு அஞ்சிய தேவர்கள் திருமாலிடம் காக்கும்படி சரண் புகுந்தனர்.

திருமால் தேவர்களைக் காக்கத் திருவுள்ளம் இரங்கினார். வேணுகோபாலனாக எழுந்தருளினார் வேணு கானம் இசைத் தருளினார். அந்த வேணு கானத்தைக் கேட்டுச் சிவபெருமானின் உக்கிர தபசு குறைந்தது. பிறகு மீனாட்சியம்மையை மணம் புரிந்து தம்பதிகளாக வந்து வேணுகோபாலனைக் கண்டு சென்றனர் என்றும் கூறுவர்.

### இராமாயணம்

பெருமாள் கோயிலுக்கு வெளியிலுள்ள சுவர்களில் இராமாயணக் கதைகள் சிற்ப வடிவில் வடிக்கப்பெற்றுள்ளன.

பெருமாள் கோயிலுக்கு வடக்கில் ஆண்டாள் திருக்கோயில் தனியே அமைந்துள்ளது. வடகிழக்கில் ஒரு கிணறும், அரச மரமும் உள்ளன.

### பிள்ளையார்

வைணவத்திருக்கோயில்களில் ஒன்றிரண்டில் தும்பிக்கை ஆழ்வாராக விநாயகப் பெருமானைக் கண்டிருக்கிறோம். ஆனால்

இக்கண்ணன் கோயிலில் விநாயகர் அரச மரத்தடியில் அரசமரத்தடி விநாயகராகத் தோன்றுவது சிறப்பு. அரசமரத்துக்குப் பக்கத்தில் முனியாண்டி கோவில் கொண்டிருப்பது மற்றொரு சிறப்பு.

பிள்ளையார், அரசமரம், நவக்கிரகங்கள், முனியாண்டி என இத்திருக்கோயில் ஒரு வித்தியாசமான ஆனால் பாண்டியர், நாயக்கர் காலத்துப் பழமைக் கோவிலாய் சைவம், வைணவம் என்று பிரித்துப் பாராத நல்லியல்புடன் விளங்குகிறது.

### கதலிவனக்ஷேத்திரம்

இத்தலத்திற்குரிய ஸ்தல விருட்சமாக விளங்கி வருவது கதலி அதாவது வாழை மரம் ஆகும். எனவே இதனைக் கதலிவன க்ஷேத்திரம் என்பர்.

### விமானம்

கருவறையின் மேல் உள்ள விமானம் அஷ்டாங்க விமானம். விமானத்தில் பெருமாள் இருந்த, கிடந்தகோலத்தில் காட்சி தருகிறார் அஷ்டாங்க விமானத்தை உடைய முன்மண்டபத்தில் எப்போதும் அகண்ட தீப விளக்கு எரிகிறது. விமானத்தின் மேல்பக்கம் வைகுண்டநாதனின் வீற்றிருந்த கோலமும், அடியில் சயனக் கோலமும் காணலாம்.

### சிற்பங்கள்

கோயிலும், மண்டபங்களும், மூர்த்திகளும் அழகிய சிற்பங்களைக் கொண்டு திகழ்கின்றன. முன் மண்டபத்தில் யாளியின் உருவங்கள் அமைக்கப்பட்டுத் தூண்கள் எடுப்பாகவும் ஆலயத்தினுள் நுழைவோரை ஈர்க்கும் வகையிலும் காட்சிதரும் சிறப்புடையது.

### தலச்சிறப்புக்கள்

இத்திருத்தலத்தில் ஆண்டாள் மதனகோபாலரைச் சந்தித்துக் காதல் கொண்டதாகக் கூறுவர். சௌராட்டிர சமூகத்தவர்கள் இத்திருக் கோயிலின்பால் மிகுந்த ஈடுபாடுடையவர்களாக விளங்குகின்றனர். சௌராட்டிரர்கள் மூர்த்திகளுக்கு வேண்டிய ஆடைகள் வழங்கினர் என்று கூறுகின்றனர். கலை வல்லாராக விளங்க விழைவோர் இத்திருத்தலத்து வந்து இறையருள் பெற்றுச் செல்லுகின்றனர்.

## கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயில் புறச்சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் 1907-இல் நகல் எடுக்கப்பெற்றுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 502 முதல் 511 எண்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. திரு நந்தா விளக்கு எரிப்பதற்குத் தேவதானமாக நிலம், சாவாமூ வாப்பேராடுகள், பசுக்கள் ஆகியன கொடை வழங்கியுள்ளனர்.

## திருவிழாக்கள்

சித்திரை மாதம் வருடப்பிறப்பு நாளில் திருமஞ்சனம், தமிழ்ப்பஞ்சாங்கம் படித்தல், கோஷ்டி கானமும் நிகழும், ஒவ்வொரு மாதமும் ரோகிணி நாளில் வீதியுலா நடைபெறுகிறது. வைகாசியில் வசந்த விழா நடைபெறுகிறது. வைகாசிப் பௌர்ணமியில் பெருமாளுக்குச் சந்தனக்காப்பு அலங்காரம் நடைபெறும். ஆடியில் பூரநாளுக்குச்சிறப்பு உள்ளது. ஆடிமாதத்தில் ஆண்டாளுக்கும், தாயாருக்கும் திருமஞ்சனமும் அலங்காரமும் நடைபெறுகிறது. பூர நாளுக்கு முன் பத்து நாள்கள் ஆண்டாள் உலா நடைபெறுகிறது.

ஆவணியில் ஸ்ரீஜெயந்தி விழா மூன்று நாள்கள் நடைபெறுகிறது. அப்போது உறியடி நடைபெறுகிறது.

புரட்டாசியில் நவராத்திரி விழாவில் தாயார் சந்நிதி சேரமான் மண்டபத்தில் அம்மன் கொலு விருப்பார். விஜயதசமி நாளில் பெருமாள் குதிரைவாகனத்தில் புறப்பட்டு மேங்காட்டுப் பொட்டலுக்குச் சென்று அம்புபோடும் விழா நடைபெறும். புரட்டாசி பௌர்ணமி நாளிலும், கடைசி சனிக்கிழமையிலும் கருடசேவை நடைபெறுகிறது. கார்த்திகை மாதம் கார்த்திகை நாளில் பெருமாள் ராஜகோலத்துடன் புறப்படுவார். அப்போது சொக்கப்பானை கொளுத்தப்படும். மார்கழி மாதத்தில் தினந்தோறும் காலை ஐந்து மணிக்குத் தனுர்மாத பூஜை நடைபெறுகிறது. சந்நிதியில் திருப்பாவை சேவையும், கோஷ்டியும் ஆகும். பகல்பத்து, இராப்பத்து உற்சவர்களும் மகாமண்டபத்திலும், கல்யாண மண்டபத்திலும் நடைபெறுகின்றன. இந்த நாட்களில் பெருமாள் மட்டும் புறப்பட்டு வந்து காட்சி தருவார். வைகுண்ட ஏகாதசி நாளில் சொர்க்க வாசல் திறப்பு நடைபெறுகிறது.

மார்கழி 27 ஆம் நாள் கூடாரவல்லி நாளில் பெருமாளும் ஆண்டாளும் புறப்பட்டு மாலை மாற்று நடைபெறுகிறது.

தைமாதம் முதல் நாளில் பெருமாள் உபயநாச்சியாருடன் புறப்பட்டுச் சேவைதருவார்.

மாசி மாதத்தில் ஒருநாள் கருடசேவை நிகழ்கிறது. பங்குனி உத்திரநாளில் பெருமாள் தாயாருடன் புறப்பட்டுத் தாயார் சந்நிதியில் திருமஞ்சனம் காண்பார். பின்னர் திருக்கல்யாண விழா நடைபெறும்.

இத்திருக்கோயிலில் வைகானச ஆகம முறைப்படி தினமும் 3 காலங்களில் வழிபாடு நடைபெறகிறது. அவை, பிராதகால ஆராதனை, உச்சிக்காலம், சாயராட்சை ஆகும். இத்திருக்கோயிலில் தென்கலை சம்பிரதாய முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

## சக்கரத்தாழ்வார்

இத்திருக்கோயிலில் சக்கராத்தாழ்வார் சிறப்புடையவராகவும் வரப்பிரசாதியாகவும் விளங்குகிறார். சனிக்கிழமைகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அவருக்கு அர்ச்சனை செய்து அருள்பெறக் காண்கிறோம். இவரை வரப்பிரசாதி என அனுபவ அடிப்படையில் கூறுகின்றனர். 48 நாட்கள் தினமும் 12 முறை வலம் வந்து அர்ச்சனை செய்து வந்தால் எண்ணிய எண்ணியாங்கு நடைபெறும். சக்கரத்தாழ்வார் பீடத்தில் எட்டு நாதங்கள் உள்ளன. பீடத்தின் மேல் தாமரைப்பூ உள்ளது. இதன்மேல் இரண்டு சிங்கங்கள் உள்ளன. நாகாசனத்துடனும், பத்மாசனத்துடனும், சிம்மாசனத்தில் இருந்து சக்கரத்தாழ்வார் அருள் பாலிக்கிறார்.

அறுங்கோணத்தின் மையத்தில் அருள்மிகு சக்கரத்தாழ்வார் பதினாலு திருக்கரங்கள் ஏந்தி மூன்று கண்களுடன் ஜ்வாலா கேசத்துடன் விளங்கும் இவருடைய பின்புறம் யோக நரசிம்மர் இருக்கிறார்.

## அரசமர வழிபாடு

இத்திருக்கோயிலில் குறிப்பிடத்தகுந்தது அரசமர வழிபாடு. தினமும் அரச மரத்திற்கு வழிபாடு செய்கின்றன. அறுபது வயது நிறைந்த மணிவிழாத் தம்பதியர், மணிவிழாவின்போது சிறப்பான பூஜை செய்கின்றனர்.

### தர்மசபர்வதவர்த்தினி

கண்ணனின் பக்தியில் ஆழங்கால்பட்ட பக்தை தர்மச பர்வதவர்த்தினி என்பவருக்குக் கண்ணபிரான் காட்சி கொடுத்ததாகவும், அதனால் தன்னுடைய நிலத்தை மதன கோபால சுவாமி திருக்கோயிலுக்கு எழுதி வைத்திருக்கிறார் எனவும், அவருடைய பெயரில் கோவில் அது சொத்தாக விளங்குவதையும் அறிகிறோம்.

### நவக்கிரக சன்னிதி

ஆண்டாள் சன்னிதிக்கு முன்புறம் ஈசானபாகத்தில் நவக்கிரக சன்னிதி, விஷ்ணு துர்க்கை சன்னிதி ஆகியன உள்ளன. வைணவத் திருக்கோவில்களில் இதுபோல் நவக்கிரக சன்னிதியைக் கூடலழகர் திருக்கோவிலிலும் காண்கிறோம். அக்கோயிலுடன் இணைந்த திருக்கோயிலாய் நீண்ட காலம் இருந்த கோயில் இது என முன்னர்க்கண்டோம்.

### திருப்பணிகள்

இத்திருக்கோயில் பழமைமிக்கத் திருக்கோயிலாதலால் அவ்வப் போது திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன. 1942 ஆம் ஆண்டில் வசந்த மண்டபம் கட்டப் பெற்றுள்ளது.

9.6.1965 ஆம் ஆண்டு இத்திருக்கோயிலில் மாபெரும் குடமுழுக்கு விழா நடைபெற்றது. அதன்பின்னர் 29.5.1994 இல் ஸ்ரீமதன கோபாலசுவாமி ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா சம்ப்ரோஷணம் நடைபெற்றுள்ளது.

இத்திருக்கோயிலுடன் இணைந்து கிருஷ்ணராயர் தெப்பக் குளத்தெருவில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் உள்ளது.

1860 ஆம்ஆண்டுச் சட்டப்படி அரசு அமைத்த குழுவினாலும், அறநிலையச்சட்டம் வெளியான பின் அறநிலையத்துறை நியமித்த அறங்காவலர்களாலும், செயல் அலுவலர்களாலும் நிருவகிக்கப் பெற்று வருகிறது.

மதன கோபால சதகம் எனும் நூல் இக்கண்ணன் புகழ்பாடுகிறது.


### பிலடெல்பியா

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அதிகப்படியாக இத்திருக்கோயிலில் கேட்பாரற்றுக் கிடந்த 36 தூண்களை அமெரிக்க

நாட்டைச் சேர்ந்த கிப்சன் என்பவர் ஏலத்தில் எடுத்து அமெரிக்கா கொண்டுசென்று பிலெடெல்பியாவில் அவற்றைக் கொண்டு நம் ஊர்க்கோயில் மண்டபம் போலவே அமைத்திருக்கிறார். 1938 இல் அதனை அமெரிக்கக் கண்காட்சிக்கு வழங்கியிருக்கிறார். இத்திருக்கோயில் தூண்கள் இன்றும் அமெரிக்காவில் வாழ்பவர்களைக் கலை அழகில் வியக்க வைக்கின்றன.

கண்ணன் புகழ் மட்டுமல்லாது கண்ணனின் மதுரைத் திருக்கோயிலின் பெருமை கடல்கடந்து சிறந்து விளங்குகிறது என்பது கேட்பதற்கு இனிமையான செய்திதான். வேய்ங்குழல் கண்ணனின் நாதம் எங்கும் ஒலிக்கிறது.

*கொண்டல் மணிவண்ணனே கோ கனக ஆம்பலுயர்*
*கோவை செம்பவள வாயில்*
*கோதறு மணிக்குழலிசைத்த இன்னிசை யோர்ந்து*
*கோகிலஞ் சோர்ந்து வெட்க*
*கண்டு சர்க்கரை பாகு கன்னல்களிதேன் மதுகை*
*கைக்கு மிசை யமுத மழையால்*
*கானல் மிகு பாலை நிலம் முல்லை நிலமாகவே*
*கமுழிளந்தளிர்கள் நிறைய*
*பண்டைவெள்ளென்புமுயிர் பெற்று மகிழ்வெய்திடப்*
*பாறையங்கற்களுருக*
*பைங்குழல் இசைத்தருளினாய்*
*வண்டொலிகள் பெருகு மலர் பாலி பல நதியிலகும்*
*வண்பெரும் புவியின் நகர் வாழ்*
*மலர்களும் நிலமகளும் அருகணைய மருவி மகிழ்*
*மதன கோபால பரனே.*



# மதுரை நவனீத கிருஷ்ணன் கோயில்

**ம**துரையில் வடக்குமாசி வீதியில் எழுந்துள்ள நவனீத கிருஷ்ணன் கோயில் எடுப்பான தோற்றத்துடன் விளங்குகிறது.

மதுரை மக்களுக்கு கிருஷ்ணன் கோயில் என்றவுடனே நினைவிற்கு வருபவர் இந்தக் கண்ணன் தான்.

கோயிலில் திருவாயிலே ஒரு சிறிய குன்றின் மேல் ஏறுவதைப்போல உயரமான படிக்கட்டுகள், உயர்ந்த கோபுரம் ஆகியவற்றுடன் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் ஒரே ஒரு திருச்சுற்றுடன் அமைந்துள்ளது. கோவிலுக்கு வடக்கு நோக்கியவாறு ஒரு திருவாயிலும், கிழக்கு நோக்கியவாறு ஒரு திருவாயிலும் அமைந்துள்ளன.

வடக்குமாசி வீதியிலிருந்து நில மட்டத்திலிருந்தே மிக அதிக உயரம் நம்மை ஈர்க்கிறது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குட்பட்ட கோயிலான போதிலும், பழமையான கோயிலைப் போல் பழுப்புக் கற்களால் கட்டப் பெற்றுள்ளது. எழிலுடன் பழமைச் சிறப்புத் தோன்ற விளங்குகிறது.

உள்ளே கருவறையில் கம்பீரமான தோற்றத்துடன் கையில் புல்லாங்குழலுடன் விளங்குகிறார் மூலவர். கருவறையினுள்ளே கண்ணபிரானின் உற்சவத் திருமேனியுடன், ஆழ்வார் திருமேனிகளும் உள்ளன. திருக்கோயில் மிகத் தூய்மையாக உள்ளது. தூண்கள் பளிச் சென்று உள்ளன.

இத்திருக்கோயில் ஆயிரம் வீட்டு யாதவர் திருக்கோயில். இத்திருக்கோயில் கண்ணன் கோயில் எனினும், இதற்கு இராமசுவாமி நவனீதக் கிருஷ்ணன் கோயில் என்றே பெயர்.

இராமாயணச் சாவடி என்பது இத்திருக்கோயிலுக்கு அருகில் உள்ள இராமபிரான் கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கும்

இராமாயணச் சாவடிக்கும் ஓர் இணக்கமான பிணைப்பினைக் காண்கிறோம்.

இக்கண்ணன் திருக்கோயில் திருமணச் சிறப்பு வாய்ந்த கோயிலாகும். திருமணங்களில் மாப்பிள்ளை அழைப்பு முதலான விசேடங்கள் இத்திருக் கோயிலிருந்து நடைபெறுகின்றன.

மற்றையத் திருக்கோயில்கள் கண்ணன் திருக்கோயில்கள் ஆன போதிலும் திருமாலின் பிற திருத்தோற்றங்களான இராமபிரான், நரசிம்மமூர்த்தி, சங்கரத்தாழ்வார் முதலியன திருஉருவங்கள் இருக்கும். ஆனால் இத்திருக்கோயில் கண்ணன் திருக் கோயிலானமையால் கண்ணன் திரு உருவினை மட்டுமே கருவறையிலும், திருச்சுற்றிலும் காண்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்திரை முதல் பங்குனி வரை மாதந்தோறும் விழாக்கள் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் ஆவணி மாதம் கிருஷ்ண ஜெயந்தியை ஒட்டிய விழா நாட்கள் உறியடி, உற்சவர் மாசி வீதியில் உலா வருதல் என்று களை கட்டி நிற்கும்.

ஸ்ரீ ஜெயந்தியில் எட்டாம் நாள் நடைபெறம் புஷ்பப் பல்லாக்கு எனப்படும் பூப்பல்லாக்கு உலா காணவேண்டிய ஒன்று. இதுபோன்ற பெரிய பல்லக்கு அலங்காரம் இந்தியாவிலேயே எங்கும் காணவியலாத ஒன்று.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் திருக்கல்யாண இரவில் வரும் பூப்பல்லாக்கு, கள்ளழகர் பூப்பல்லாக்கு ஆகியனவற்றை விடச் சிறப்பும் அழகும் எழிலும் நிரம்பிய பல்லாக்கு இக்கண்ணபிரான் உலாவரும் பூப்பல்லாக்கு என்று மதுரை மக்கள் பாராட்டிக் கூறுகின்றன.

பங்குனி உத்தர நாளில் இக்கண்ணபிரான் திருக்கல்யாண விழா, கிருஷ்ண ஜெயந்தியின் போது நடைபெறும் கனுவிரட்டு விழாவும் குறிப்பிடத்தக்கவை.



இருபத்தாறு

# உடுப்பி

## 26 'அன்ன பிரும்மா' பால கிருஷ்ணன்

மதுராபுரியில் பிறந்த மாயக்கண்ணன்-கோகுலத்தில் கோபால கிருஷ்ணனாக விளங்கிய, குறையொன்றும் இல்லாத கோவிந்தன், அல்லிக்கேணியில் தேரோட்டியாகப், பார்த்த சாரதியாகவும், விளங்கியவன் பலத்திருத்தலங்களில் வேணுகோபாலனாகவும், குழலூதும் பிள்ளையாகவும் விளங்குகிறான். ஆனால் குழந்தையாகப் பாலகிருஷ்ணனாகப் புகழ் பெற்று விளங்குவது கன்னட நாட்டில் கர்நாடகத்தில் உடுபியில்.

### *கர்நாடக மாநிலத்தில்*

கர்நாடக மாநிலத்துக் கண்ணனின் இத்திருக்கோயில்-கேரள மாநிலத்தை ஒட்டி அமைந்துள்ளதால் இரு மாநிலத்தவர்களுக்கும் இட்ட தேவனாய் -இதய தெய்வமாய் விளங்குகிறான் மாயக் கண்ணன்.

### *அன்ன பிரும்மா*

திருமலையில் உறைகின்ற திருமாலைக் ***'கனக பிரும்மா'*** என்பர். பண்டரிபுரத்துப் பரந்தாமனை ***'நாதப் பிரும்ம'***மாக விளிக்கின்றனர். உடுபியில் கோயில் கொண்ட கோகுல வாசனை ***'அன்ன பிரும்மா'*** என்று அழைக்கின்றனர். தினமும் பசித்து வரும் மக்களுக்குப் பகலில் உணவளிக்கின்றான் இந்தப் பாலகிருஷ்ணன்.

### *உடுபியா? உடுபியா?*

நாம் 'உடுப்பி' என்று சொல்லியே பழகி விட்டோம். ஏனென்றால் நம் ஊரில் உடுப்பி ஓட்டல்கள் அவ்வளவு பிரசித்தம். ஆனால் சரியான

உச்சரிப்பு 'உடுபா' என்பதுதானாம். வடமொழியில் 'உடு' என்றால் நட்சத்திரம். 'பா' என்றால் தலைவர் என்று பொருள். உடுபா என்றால் நட்சத்திரங்களின் தலைவர் என்று பொருள். யார் அந்தத் தலைவர் எனில் சந்திரன் தான் அத்தலைவன். சந்திரன் ஈசுவரன் அருள் பெற்ற வரலாற்றின் அடிப்படையில் இப்பெயர் தோன்றியது. உடுபா என்பது உடுபியாகவும், உடுப்பியாகவும் மாறிவிட்டது.

## சந்திரன் பெற்ற சாப விடுதலை

சந்திரன் ஒருமுறை தட்சப் பிரஜாபதியால் சபிக்கப் பெற்றுச் சாப விடுதலை பெறச் சிவபெருமானை நோக்கித் தவமிகுந்ததன் பயனாய் ஈசுவரன் சந்திரனின் களங்கத்தைப் போக்கினார். ஈசுவரன் உடுபியில் சந்திர மௌலீசுவரர் என்னும் திருப்பெயருடன் உடுப்பி கிருஷ்ணனுக்கு எதிரே இருக்கிறார்.

## செல்லும் வழி

உடுப்பிக்கு நேரடியாக இரயில் வண்டி கிடையாது. தமிழ் நாட்டிலிருந்து செல்பவர்கள் மங்களூர் சென்று அங்கிருந்து பேருந்து மூலம் உடுப்பி செல்ல வேண்டும். மங்களூரிலிருந்து ஏராளமான பேருந்துகள் உடுப்பி செல்கின்றன. சுமார் ஒன்றரை மணி நேரப் பயணம். நல்ல சாலை. இருபுறமும் வயல்களும், ஓங்கி உயர்ந்த மரங்களும் மனதுக்கு மிக இனிய காட்சி. சுமார் 60 கிலோ மீட்டர். சென்னையிலிருந்து வெஸ்கோஸ்ட் விரைவு வண்டியில் சென்று, திரும்பும்போது அதே வெஸ்ட் கோஸ்ட் வண்டியில் திரும்பவேண்டும். மங்களூர் மெயிலில் புறப்பட்டால் மறுநாள் மதியம் மங்களூர் செல்லும். அன்றிரவு மூகாம்பிகை தரிசனத்தைக் கொல்லூரில் முடித்துத் தங்கி அதிகாலையில் உடுப்பி தரிசனம் முடித்து மதியம் மங்களூர் மெயிலில் புறப்படலாம். இதுவும் மூன்று நாட்கள். அல்லது இரவு உடுப்பியில் தங்கவேண்டும்.

பெங்களூரிலிருந்து வருவதாயிருந்தால் தர்மஸ்தலா, கொல்லூர், சுப்ரமண்யா முதலிய திருத்தலங்களைத் தரிசனம் செய்து விட்டு, சுப்ரமண்யா விலிருந்து, மங்களூர் வழியாக உடுப்பிக்குச் செல்லலாம். சுமார் 160 கி.மீட்டர் தொலைவு இருக்கும். பேருந்து செல்கிறது.

உடுப்பி பேருந்து நிலையத்திற்கு முன்னதாகவே இறங்கிக் கிழக்குப்புறமாகச் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றால்

பாலகிருஷ்ணனைத் தரிசிக்கலாம். கோவிலுக்கு அருகில் ஆட்டோ, கார் முதலிய ஊர்திகளில் செல்லலாம். உடுப்பி தரிசனம் முடித்து மூகாம்பிகை சென்று இரவே சென்னைக்கு இரயில் ஏறலாம் சென்னையிலிருந்து சென்று திரும்ப மூன்று நாள்கள் ஆகும். இங்கு மதியம் புறப்பட்டால் மறுநாள். காலை சென்றுவிடலாம். அங்கு இரவு புறப்பட்டால் சென்னைக்கு மறுநாள் மதியம் வரலாம்.

## ஸ்ரீ கிருஷ்ண மடம்

உடுப்பியில் பாலகிருஷ்ணன் குடி கொண்டிருப்பது உண்மையில் கோயில் அல்ல. அது மத்வாசாரியார் நிறுவிய ஸ்ரீ கிருஷ்ண மடமே ஆகும். உடுப்பிக்குத் தென் கிழக்கில் பத்துக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பாஜக க்ஷேத்திரத்தில் அவதரித்தவர், துவைத சமயத்தைத் தோற்று வித்தவர் ஸ்ரீ மத்வர். தம்முடைய மடத்தில் பாலகிருஷ்ண விக்ரகத்தைப் பிரதிட்டை செய்து வழிபாட்டு முறைகள், நடைபெறச் சீடர்களை, தனி மடங்களை உருவாக்கியுள்ளார்.

## ஸ்ரீ மத்வரின் சீடர்கள்

ஸ்ரீ மத்வரால் பிரதிட்டை செய்யப்பட்ட பாலகிருஷ்ணரை, மத்வரின் சீடர்கள் இன்றும் முறைமாறாமல் வழிபட்டு வருகின்றனர். அவர்கள் துறவிகள், பாலகிருஷ்ணனை அவர்களைத் தவிர வேறு யாரும் அலங்காரம் செய்வது, தொடுவது, அர்ச்சனை, ஆராதனை செய்வது கிடையாது.

ஸ்ரீ மத்வர் உருவாக்கிய எட்டு மடங்களில் உள்ள சீடர்கள் பார்யாய சுவாமிகள் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் இரண்டாண்டுகளுக்கு ஒருவராக ஸ்ரீ கிருஷ்ண மடத்தின் நிர்வாகத்தையும், அலங்கார, நைவேத்திய, வழிபாடுகளையும் செய்து வருகின்றனர்.

## தங்கும் வசதி

ஸ்ரீ கிருஷ்ண மடம் என்னும் பால கிருஷ்ணன் உறையும் திருக்கோவில் அல்லது திருத்தலம் ஊரின் மையத்துள் அமைந்துள்ளது. உடுப்பியில் ஏராளமான தங்கும் விடுதிகள் உள்ளன. நவீன வசதிகள், நல்ல உணவு வசதிகளுடன் அமைந்துள்ள பெரிய நகரம் அது. ஸ்ரீ கிருஷ்ண மடத்திலேயே 300 அறைகள் கொண்ட குளியல் வசதியுடன் கூடிய அறைகளுடைய தங்கும் விடுதி

மிகக்குறைந்த வாடகையில் கிடைக்கும். நேரடியாகப் போய்ப் பெற்றுக் கொள்ளலாம். இக்கோயில் தரிசனம் செய்து திரும்ப அதிக நேரமெல்லாம் ஆகாது.

## ஸ்ரீ மடத்தின் வாயில்

ஸ்ரீ கிருஷ்ண மடத்தின் மேற்குப்புறம் கோபுரத்துடன் கூடிய சிறிய நாலுகால் மண்டபம் ஒன்று உள்ளது. அங்குள்ள ஜன்னல் வழியாக வெளியில் நின்றும் ஸ்ரீ பாலகிருஷ்ணனைத் தரிசிக்கலாம். ஆனால் ஸ்ரீ கிருஷ்ண மடத்திற்குள் செல்ல வேண்டுமானால் தென்புறம் சென்று இரண்டு பக்கமும் விசாலமான திண்ணைகளோடு கூடிய முன் மண்டபத்தின் நுழைவு வழியாகச் செல்ல வேண்டும். அப்பாதை சிறிய சந்துப்பாதை. இந்த வாயிலின் மேல்புறம் காலணி விடும் இடம் உள்ளது.

## ஸ்ரீ மத்வ புஷ்கரணி

அந்தச் சிறிய பாதையில் சென்று வடக்கில் திரும்பினால் 'ஸ்ரீ மத்வ புஷ்கரணி' எனப்படும் திருக்குளம் நான்கு புறமும் படிகள் கொண்ட, நீராழி மண்டபமும், கரையையும், மண்டபத்தையும் இணைக்கும் கற்பாலத்துடன் கூடியதாக உள்ளது. இத்திருக்குளத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கங்கா தேவி எழுந்தருளுவதாக நம்பிக்கை. இந்தத் திருக்குளத்து நீரே கிருஷ்ண பகவானின் அபிடேக நீர்.

## கருவறையின் பின்புறம்

திருக்குளத்தில் இருந்து மேலே வந்து அதன் எதிரே உள்ள வாயிலில் நுழைந்தால், கிருஷ்ணன் கோயிலின் கருவறை மண்டபத்தின் பின்புறம் தெரியும். கருவறையின் மேற்குப் புறம் உள்ள கதவு மூடப்பட்டே இருக்கும். இடது புறம் செல்லவேண்டும்.

## கருவறை அமைப்பு

ஸ்ரீ பாலகிருஷ்ணன் உறைவது மிகச் சிறிய கருவறையில்தான். கருவறைக்குள் செல்ல வடக்கில் ஒரு வழியிருக்கிறது. வழிபாடு செய்யும் முறைகாரரான பர்யாய சுவாமிகள் எனும் தலைவரும், பூஜை, அனுஷ்டானங்களுக்கு அவருக்குத் துணை நிற்கின்ற வேண்டியவற்றை வழங்குகின்ற சிப்பந்திகளும் மட்டுமே செல்லும்

வழி அது. கருவறையின் கிழக்கு வாயில் ஒன்று இருக்கிறது. வருடத்திற்கு ஒருமுறை விஜய தசமி தினத்தன்றுதான் அதைத் திறப்பார்கள். கருவறையின் மேற்குப் புறத்தில் வாயிற்படி கிடையாது. அங்குள்ள ஜன்னல் வழியாகத்தான் சுவாமியைத் தரிசிக்க வேண்டும்.

## சென்ன கேசவா

கருவறையில் உள்ள பாலகிருஷ்ணனைத் தரிசிக்கும் முன் கருவறைக்குப் பின்புறமுள்ள சன்னதியில் நான்கு கரங்களுடன் கூடிய, கனக தாசருக்குக் காட்சி அளித்த சென்ன கேசவ சுவாமியைத் தரிசிக்கிறோம். சென்ன கேசவர் கைகளில் தாமரை, சங்கு, சக்கரம், கதை முதலியவற்றை ஏந்தியுள்ளார். அவருக்கு இருபுறமும் துவார பாலகர்கள் நிற்கின்றார்.

## கருவறைமுன்

கிழக்குப்பிரகாரத்தில் சென்ன கேசவ சுவாமியைத் தரிசித்து விட்டு இடப்புறமாகச் சென்றால் இரண்டு சிறிய அறைகளில் சுவாமியின் அணிகலன்கள், தங்கத் தொட்டில், தங்கப் பல்லாக்கு வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதையடுத்து வழுவழுப்பான கல்திண்ணை. அங்குள்ள தூண்களில் அழகிய ஓவியங்கள் உள்ளன.

## சந்திரசாலா

மேற்குப் பிரகாரத்திலிருந்து தான் நாம் சுவாமியை ஜன்னல் வழியாகத் தரிசிக்க இருக்கிறோம். அந்த மேற்குப் பிரகாரத்தில் உள்ள மண்டபத்திற்கு ***சந்திரசாலா மண்டபம்*** என்று பெயர். அதன் மேற்குச் சுவரில் தெய்வப் படங்கள், புராண ஓவியங்கள் காணலாம். இந்த மண்டபத்தின் நடுவில் கனக தாசர் ஜன்னல் உள்ளது. இதன் வழியாகத்தான் வெளியிலிருந்தும் சுவாமியைக் காணலாம். இம்மண்டபத்தின் இடப்புறத்தில் வடக்கு நோக்கிக் கருடாழ்வார் சன்னதியுள்ளது. அவருக்கு நேரே ஆஞ்சநேயர் இருக்கிறார்.

## நாலுதூண் மண்டபம்

மேற்குத் திருச்சுற்றில், சந்திரசாலா தாழ்வார மண்டபத்திற்கும், கருவறைக்கும் இடையில் ஒரு நாலுதூண் மண்டபம் இருக்கிறது. அதன் நான்கு தூண்களிலும் லட்சுமி, வராகர், பூவராகர், காளிங்கமர்த்தனன், விட்டல், பீமன் ஆஞ்சநேயர், வேத வியாசர்,

மத்வர், கருடர், விநாயகர், இராமர் பாலகிருஷ்ணன், லட்சுமி நரசிம்மர் முதலிய திருவுருவங்களைக் காணலாம்.

## ஸ்ரீ பால கிருஷ்ணனின் எழில்

கருவறையில் உள்ள அந்த பாலகிருஷ்ணனைக் காண்கிறோம். இந்தக் கண்ணனை மேற்குப் புறவாயிற்படி இல்லாத ஜன்னல் வழியாகத்தான் காணமுடியும். இந்தக் கிருஷ்ணனை நாள் முழுவதும் நகராமல் நின்று பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் பேராசை நமக்கு. ஏனென்றால், எழிலும், இளமையும் கொண்ட எழில் மிகு தோற்றம். ஸ்ரீ சுதர்சனச் சக்கரத்துடன் கூடிய சாளக்கிராம வடிவில் அருள் பாலிக்கிறான் ஆலிலையில் துயின்ற அந்த மாயவன்.

## விஸ்வகர்மா படைத்தவன்

இந்தப் பால கிருஷ்ணன் சாதாரண மானிடச் சிற்பி வடித்த வடிவத்தினன் அல்லன். தேவலோகச் சிற்பி விசுவகர்மா வடித்துத் தந்த வடிவத்தினன். பின் அழகுக்கும், எழில் தோற்றத்திற்கும் குறை இருக்குமா என்ன? அது மட்டுமல்லாது யுகங்கள் பல கடந்தவன் இந்தப் பாலக்கண்ணன். இந்தக் கண்ணன் முதன்முதலில் தோன்றியதே ஒரு சுவையான வரலாறு.

## ருக்மிணி தேவி வழிபட்ட கண்ணன்

இந்த கண்ணன் - கண்ண பிரானின் காதல் மனைவியான ருக்மிணி தேவி வழிபட்ட திருஉருவம்.

கண்ணனின் அன்னை தேவகி இளம் பருவத்தில் தன் மகன் ஆடிய விளையாட்டுக்களையும், குறும்புச் செயல்களையும் மீண்டும் கண்டு மகிழவேண்டும் என விரும்பினாள். அன்னையின் விருப்பத்தின் படி அந்தத் திருவிளையாடல்களை-சிறுபிள்ளைக் குறும்பு விளையாட்டை நடத்திக் காட்டினான். பாலகண்ணனாய்த் தன் பத்தாவின் விளையாடல்களை மறைவிலிருந்து பார்த்தாள் மனையாள் ருக்குமணி. தன் வழிபாட்டிற்கு அப்படியொரு இளம்பிள்ளைக் கண்ணன் சிலை வேண்டும் எனப் பிரார்த்தித்தாள்.

எனவே கண்ணன் தேவலோகச் சிற்பி விசுவகர்மாவை அத்தகைய பாலகிருஷ்ணனைப் படைக்கச் சொன்னார். வலக்கையில் மத்தும், இடக்கையில் கயிறையும் வைத்துக் கொண்டு குறும்புச் சிரிப்பும்,

குறுகுறுத்த விழியுடன் பொலிவு முகம் கொண்ட பாலகிருஷ்ணனைப் படைத்தளித்தார். ருக்மிணியிடம் அவன் வேண்டியபடி வழிபட அளித்தான் கிருஷ்ணன். கிருஷ்ணாவதாரத்தின் இறுதியில் அருச்சுணன் இந்தச் சிலையைத் துவாரகையிலுள்ள நந்தவனத்தில் ஒளித்து வைத்தான்.

## ஸ்ரீ மத்வரை அடைந்தான்

மத்துவரின் காலத்தில் சௌராட்டிர தேசத்திலிருந்து ஒரு பெரிய படகு புறப்பட்டது. அப்படகில் கோபிச் சந்தன உருண்டைகள் இருந்தன. அப்படகு உடுப்பிக்கு மூன்று கல் தொலைவில் உள்ள மால்பே என்ற இடத்தை நெருங்கியபோது, கடற்கரையில் இருந்த மத்வர் அக்கப்பலில் இருந்த கோபிச்சந்தன உருண்டைகளின் சிறப்பை உணர்ந்தார். அப்போது திடீரென்று புயல் வீச மத்வர் தம் தவ வலிமையால் புயலைத் தணித்தார். படகு உரிமையாளர் மத்வரிடம் அவருடைய உதவிக்கு நன்றியாகப் படகிலிருந்து இரண்டு கோபிச் சந்தன உருண்டைகளைப் பெற்றுகொள்ள வேண்டினார். அதில் இரண்டு பெரிய உருண்டையைப் பெற்றார்.

## கோபிசந்தன உருண்டைக்குள்

இரண்டு உருண்டைகளில் ஒன்றினை உடைத்த போது அதில் ஸ்ரீ பலராமன் சிலையும், மற்றொன்றில் பாலகிருஷ்ணனின் உருவச் சிலையும் இருந்தன. வட பண்டேச்வரரில் பலராமனைப் பிரதிஷ்டை செய்தார். பாலகிருஷ்ணனை உடுப்பியில் ஆலயம் எழுப்பி முறைப்படி வழிபாடு செய்தார்.

## நவக்கிரக கண்டி எனும் ஜன்னல்

மத்வரால் பிரதிட்டை செய்யப்பட்ட அந்த உடுப்பி கிருஷ்ணனின் வழிபாட்டினை மத்வரின் சீடர்கள் இன்றும் பின்பற்றி வருகிறார்கள். மத்வர் பயன்படுத்திய மர இருக்கை, மணி, அட்சயபாத்திரம் முதலியவை இன்றும் உள்ளன. ஸ்ரீ கிருஷ்ணனை இன்றும் மத்வரால் நிறுவப்பட்ட எட்டு மடங்களைச் சேர்ந்த சுவாமிகள் இரண்டாண்டுகளுக்கு ஒருவராக நிர்வகித்து வருகின்றனர். அவர்கள் செய்யும் பூஜைகளையும், கண்ணனையும் ஒன்பது துவாரங்கள் கொண்ட நவக்கிரக கண்டி எனப்படும். ஜன்னல் வழியாகவே தரிசிக்க வேண்டும். இந்தக் கண்ணனை நேரில் வாயில் திறந்து தரிசிக்க

இயலாது. ஜன்னல் வழியே தான் தரிசிக்க முடியும். இது இந்த ஆலயத்தின் மாறாப் பழக்கம். கருவறையில் இரண்டு அறைகள் உள்ளன. சிறிய அறையில்தான் நாம் கண்குளிரக் கண்டுகளிக்கும் அந்தப் பாலகிருஷ்ணனின் சிலை இருக்கிறது. வட புறமுள்ள பெரிய அறையில் வெள்ளித் தொட்டிலுடன் கூடிய மண்டபம் ஒன்று உள்ளது. தினமும் ஏகாந்த சேவை என்னும் சயனோற்சவம் எனினும் இரவுப் பூஜை இங்குத்தான் நடைபெறுகிறது.

## சிம்மாசன அறை

கருவறை மண்டபத்திற்குப் பின்னால் வடகிழக்குக் கோடியில் கிணறு இருக்கிறது. வலப்புறத்தில் சிம்மாசன அறை இருக்கிறது. அங்கு ஸ்ரீ கிருஷ்ண மடத்து சுவாமிகள் பூஜைசெய்யும் விக்ரகங்கள் உள்ளன. ஸ்ரீ மத்வர் தாம் பூஜித்த விக்ரகத்தை ஒவ்வொருவருக்கும் அளித்திருக்கிறார். ஸ்ரீ மத்வர் உருவாக்கிய எட்டு மடங்களும் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண மடத்தைச் சுற்றியே உள்ளன. அவை கணியூர், புத்திகே, சோதே, அத்மார், பாலிமார், பெஜாவர், கிருஷ்ணாபுர, சிரூர் ஆகும்.

## ஸ்ரீ மத்வர் வகுத்த முறையே

எப்படிப் பாலகிருஷ்ணனைப் பூஜிக்கவேண்டும், என்ன என்ன அலங்காரம் செய்ய வேண்டும், என்ன என்ன நைவேத்தியம் என்பன எல்லாம் ஸ்ரீ மத்வர் தாமே முறை வகுத்துச் சென்றுள்ளார். ஒவ்வொரு நாளும் பாலகிருஷ்ணனைப் பூஜிக்கும் சுவாமி ஒவ்வொரு பூஜைக்கும் முன்னர் குளிப்பார். தினமும் ஒன்பது முறை குளித்து வழிபாடுகளைச் செய்கிறார் என்றால் எவ்வளவு பக்தி சுத்தியுடன் இத்திருக்கோயிலில் வழிபாடுகள் நடைபெறுகின்றன என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

## ஸ்ரீ மடத்து நித்ய பூஜைகள்

இத்திருமடத்துப் பூஜைகள் அதிகாலை நான்கு மணிக்குத் தொடங்குகின்றன. ஏகாந்த சேவையுடன் நிறைவடைகின்றன.

அதிகாலை நான்கு மணிக்கு வாத்திய முழக்கங்கள் தொடங்குகின்றன. உற்சவமூர்த்தியைத் திருக்குளத்திற்கு எடுத்துச் சென்று திருமுழுக்கு நடைபெறுகிறது. காலை ஐந்து மணிக்கு முதல் பூஜையான ***'நிர்மால்ய விசாஜனம்'*** நடைபெறுகிறது. இப்பூஜையின்போது பகவானின் ஆடை அலங்காரம் அணிகலன்

களைந்து துளசி மாலையை அணிவிக்கின்றனர். அவல், தயிர், கடலை, இஞ்சி, வெல்லம் முதலியன பிரசாதங்கள். அதன்பின் அடுத்த பூஜை **உஷத்கால பூஜை.** மீண்டும் அபிஷேகம் துளசி, மலர்மாலைகள் சந்தன அலங்காரம் அன்னம், பால், தயிர் நைவேத்தியப் பொருட்கள்

அடுத்து நடைபெறும் **கோபூஜையின்** போது, அரிசியும், அரிசிப் பொரியும், வெல்லமும் நிவேதனமாகப் படைக்கப்பட்டு அவற்றைப் பசுக்களுக்கு வழங்குகின்றனர்.

சுவாமியின் பால ரூப அலங்காரம் களையப் பெற்றுத் தங்கக் காசுகளால் அபிடேகம் செய்யப் பெற்றுத் தீபாராதனை நடைபெறுகிறது. நெய், பால், தயிர், தேன், வெல்ல அபிடேகம் நடைபெறும். அதன் பின்னர் இளநீர் அபிடேகம் நடைபெறும்.

அதற்கடுத்து நடைபெறும் ***உத்வார்த்தன பூஜை***யின் போது பன்னீரால் பகவானை நீராட்டி மாவினால் தேய்த்து விடுகின்றார்கள். இளநீர், பால், வெண்ணெய் முதலியன நெய் வேத்தியங்கள். பின் வெள்ளி, தங்கக் கலசநீரால் அபிஷேகம் நடைபெறுகிறது. நைவேத்தியப் பிரசாதத்தை மத்வ சரோவரிலுள்ள மீன்களுக்கும், கருடனுக்கும் படைப்பர்.

கிருஷ்ணபிரானின் விக்ரகத்தை உலர்ந்த துணியால் மெல்லத்துடைத்து அலங்கரித்த பின்னர் அபிஷேக நீர் தீர்த்தப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. அன்னம், பாயசம், தோசை முதலிய நைவேத்தியங்கள் படைக்கப்பெற்று, ஆஞ்சநேய மூர்த்திக்கும் படைக்கின்றனர்.

அடுத்து நடைபெறும் ***அலங்கார பூஜை***யின் போது பட்டாலும், தங்க, வைர, மாலைகளால் அலங்கரிப்பர். இப்போதும் (அன்னம், தின்பண்டங்கள்) நைவேத்தியமாகப் படைக்கப்படுகின்றன. தசாவதாரக் கோலங்களும், இதர அலங்காரங்களும் செய்விக்கின்றனர். வெள்ளிக்கிழமையிலும், நவராத்திரியின் போதும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பெண் வடிவம் கொள்கிறார்.

அலங்கார பூஜைக்குப் பின் நடைபெறும் ***மகா பூஜை*** மிக முக்கியமான பூஜை. ஏனென்றால் மத்வாச்சாரிய சுவாமிகளே இதனை நடத்துவதாக நம்புகின்றனர். மகா பூஜைக்கு முன் நைவேத்தியங்கள் படைக்கப் பெற்று நடைபெறும் ஒரு சிறு பூஜை சனகாதி பூஜை எனப்படுகிறது.

மகா பூஜையின் போது பெரிய, பெரிய பாத்திரங்களில் அன்னம், பாயசம், தின்பண்டங்கள், சுவைமிக்கச் சிறப்பான பஞ்சகஜ்யம் முதலியவற்றை வைத்துவிட்டுக் கதவைத் தாளிட்டு விட்டு ஸ்ரீ கிருஷ்ணமடத்துச் சுவாமி வெளியே வந்து விடுவார். அப்போது மத்வாச்சாரியரே அவற்றைக் கிருஷ்ணமூர்த்திக்கு ஊட்டுவதாகவும் நம்பிக்கை. அதன்பின் சுவாமி உள்ளே சென்று தீபாராதனை செய்கிறார். மகா பூஜைக்குரிய வேட்டுச்சத்தங்கள் இரண்டு ஒலிக்கின்றன. மகா பூஜைக்குப் பிறகு அன்னதானம் நடைபெறுகிறது. 4.30 மணிக்கு மீண்டும் கோயில் கலகலக்கிறது, எப்போதும் கருவறை வாயில் மூடி ஜன்னல் வழியே பார்ப்பதால் கருவறை மூடப்பட்டிருப்பது என்பது இல்லை.

சரியாக இரவு ஏழு மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் ***சாமர சேவை*** நடைபெறுகிறது. அப்போது கருவறை முன்னுள்ள முக மண்டபத்தில் உற்சவரும், சாளக்கிராமங்கள் வைக்கப்படும். அரிசிப்பொரி, வெல்லம், தேங்காய், லாடு முதலியன நைவேத்தியப் பொருட்கள். மடத்து சுவாமி தங்கக்கைப்பிடியுடன் கூடிய இரு வெண்சாமரங்களைப் பகவானுக்குப் பவ்யமாக வீசுவதுதான் சாமர பூஜை ஆகும். சாமர பூஜையின் போது கருவறையைச் சுற்றி அகல்விளக்குகள் ஏற்றி அழகு சேர்க்கின்றனர்.

அதையடுத்து நடைபெறும் ***ரங்க பூஜை*** ஆஞ்சநேயமூர்த்தியின் சன்னதியில் நடைபெறுகிறது. வாழை இலை பரப்பி அதில் பஞ்ச கஜ்யம், எனும் பிரசாதம் படைக்கின்றனர். சாமர சேவைக்குப் பின் வெள்ளிப் பல்லக்கில் உற்சவமூர்த்தியை வைத்து இருமுறை கருவறையைச் சுற்றி வருகிறார்கள். திருவிழாக்காலங்களில் தங்கப்பல்லக்கில் பவனி வருவார். பல்லக்கில் ஒய்யாரமாக வலம் வந்த கிருஷ்ணன், பின்னர் மண்டபத்திலுள்ள வெள்ளித் தொட்டிலில் வந்து அமருகிறார். அங்கு அவருக்கு நைவேத்திய ஆராதனை முடிந்து கற்பூர ஆரத்தி காட்டப்படுகிறது.

கடைசி பூஜையாக ***ஏகாந்த சேவை*** நடைபெறுகிறது. கருவறையில் வெள்ளித் தொட்டிலினுள்ள பட்டு மெத்தையிலே கிருஷ்ணபிரானை எழுந்தருளுவிக்கின்றனர். பாகவதர் ஒருவர் தாலாட்டுப் பாடுகிறார். சுவாமியைத் தூங்க வைக்கச் சுவாமி தொட்டிலை ஆட்டுகிறார். இறுதியில் சங்கு முழங்க அன்றைய பூஜைகள் நிறைவு பெறுகின்றன.

## பர்யாய வைபவம்

உடுப்பியில் மிக, மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும், பெரிய அளவில் நடைபெறும் விழா என்று கூற வேண்டுமாயின் புது சுவாமியானவர் ஸ்ரீ கிருஷ்ண மடத்தின் பொறுப்பை ஏற்கும் பர்யாய வைபவம்தான். இந்த விழாக்காண ஏராளமான பக்தர்கள் வந்து கூடுவார்கள்.

இந்தப்பர்யாய வைபவம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜனவரி மாதம் பதினேழு, பதினெட்டாம் தேதிகளில் நடைபெறும். பர்யாயத்தை ஏற்கப் போகும் சுவாமிஜி, இரண்டு மாதங்களுக்கு முன்னரே தம் மடத்திலிருந்து புறப்பட்டுப் புண்ணிய தலங்களைத் தரிசித்து, புனித நீராடி, பர்யாய வைபவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு உடுப்பிக்குத் திரும்பிடுவார்.

அவ்வாறு வருகையில் ஊர் எல்லையில் வரவேற்பு அளிப்பர். ஏழு மடங்களைச் சேர்ந்த சுவாமிஜிகள் பதவிப் பொறுப்பை ஏற்க விருக்கும் சுவாமியைத் தங்கள் மடத்திற்கு அழைத்துச் சிறப்புச் செய்வார்கள். அன்பர்கள் இவ்விழாவிற்குப் பணம், அரிசி, காய்கறிகள் என்று ஏராளமாக அனுப்பி வைக்கின்றனர்.

பர்யாய சுவாமிகள், பர்யாய வைபவத்திற்கு முதல்நாள் இதர மடத்துச் சுவாமிகளை மறு நாள் விழாவிற்கு வருமாறு அழைப்பு விடுப்பார். பர்யாய வைபவத்திற்கு முதல் நாள் இரவே மறு நாள் நடைபெறும் அன்னதானத்திற்குக் காய்கறிகளை நறுக்கத் தொடங்குவார்கள் என்றால் இவ்விழாவின் சிறப்பை நன்கு உணரலாம்.

பர்யாய வைபவம் நடைபெறும் நாளில், பதவி ஏற்கும் சுவாமி தம்மடத்து இறைவருடன், மேளதாளத்துடன் ஜோருகட்டே என்னுமிடத்திலிருந்து புறப்படுவார். பதவியைவிட்டு விலகும் சுவாமியைத் தவிர மற்ற ஆறு சுவாமிகளும் கலந்து கொண்டு பல்லக்கில் பவனிவர ஊர்வலம் தொடங்கிடுகிறது.

பழைய சுவாமிகள் கிருஷ்ணமடத்தின் வாயிலில் இருந்து புதிய சுவாமிகளின் கையைப் பற்றித் திருக்குளத்திற்கு அழைத்துச் சென்று கால், கை தூய்மை செய்துபின், மடத்திற்குள் அழைத்துச் செல்கிறார்.

புதிய சுவாமிஜி மண்டப பூஜை செய்து ஆஞ்ச நேய மூர்த்தியைத் தொழுது சிம்மாசன அறையில் ஸ்ரீ மத்வ சிம்மாசனத்தில் அமருகிறார். அதன்பின் தர்பார்நடைபெறுகிறது.

புதிய சுவாமி மற்ற சுவாமிகளுக்கு மரியாதை செய்கிறார். அவர்களும் புதிய சுவாமிகளுக்குப் பாத காணிக்கை செய்வர்.

தர்பாருக்குப்பின் அனைவரும் பாலகிருஷ்ணப் பெருமாளின் கருவறைக்கு வந்த பின், பழைய சுவாமி வடபுறத்து நுழைவாயில் அருகில் உள்ள மத்வர் சிலை முன்பு புதிய சுவாமியிடம் கருவறையின் சாவியையும், அட்சய பாத்திரம் எனப்படும் வெள்ளிக் கரண்டியையும் கொடுப்பார்.

இவ்வாறு நடைபெறும் விழாச்சிறப்பு நேரில்காண வேண்டிய ஒன்று. இப்போது பர்யாய சுவாமிகளாக இருப்பவர் ஸ்ரீ விஸ்வதீர்த்த சுவாமி. இவர் உடுப்பி பெஜாவர் மடத்துத் தலைவராவார்.

## விறகுத் தேர்

பர்யாயத் திருவிழாவின் போது நடக்கும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி விறகுத்தேர் அமைக்கும் நிகழ்ச்சி இந்த விறகுத்தேர் இரண்டு வருடத்திற்கு உரியது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விறகுத் தேர் திருமடத்திற்குப் பின்புறமுள்ள கோசாலையின் பின்புறம் அமைக்கப்படுகிறது. இது கிருஷ்ண மடத்தின் அதிசயங்களில் ஒன்று.

விறகுக் கட்டைகளை மிக அழகு பொங்கக் கலைமணம் கமழும்படி அடுக்கி வைத்திருக்கின்றனர். இந்தத்தேரை எந்த மடத்துச் சுவாமிகள் பர்யாய வைபவத்தின் போது பொறுப்பேற்கிறாரோ அந்த மடத்தைச் சேர்ந்தவர்கள் தான் கட்டுகின்றனர். இந்தத் தேர் விறகுதான் கோயில் சமையலுக்குப் பயன்படுகிறது.

பர்யாயம் முடிந்து அடுத்து சுவாமிகள் பதவியேற்கும் முன்பே இதிலிருந்து விறகை எடுத்துத் தீர்த்து விடுவார்கள். அப்போதுதானே அடுத்த பர்யாய மடத்துத் தேர் உருவாக்கப்படும் இப்படிச் சம்பிரதாயங்கள் பல கொண்ட திருத்தலம் இத்தலம்.

## திருவிழாக்கள்

திருக்கோயில் திருவிழாக்களில் வெகு சிறப்பாகக் கொண்டாடப் படுவது சப்தோற்சவம் எனப்படும். ஜனவரி மாதத்தில்

கொண்டாடப்படும் திருவிழா ஆகும். மகா சங்கராந்திக்கு ஐந்துநாள்கள் முன்பே இவ்விழா தொடங்கி விடும். இவ்விழாவின் போது தெப்பத் திருவிழா, தேர்த்திருவிழா என ஊரே அமர்க்களப்படுகிறது.

மகர சங்கராந்தி நாளில் இரவு நடைபெறும் திருவிழா அனைத்திலும் சிறப்பானது. அன்று **பகவான் கிருஷ்ணன், அனந்தேசுவரர், சந்திர மௌலீசுவரர்** ஆகிய மூவரும் தனித் தனித் தேரில் பவனி வருவர்.

## சுவர்ணோற்சவம்

திருவிழாவின் கடைசி நாளன்று சுவர்ணோற்சவம் எனப்படும் தங்க மலர் கொண்டு அர்ச்சிக்கும், வழிபடும் காட்சி சிறப்பானது. கார்த்திகை மாதத்தில் இங்கு லட்சத் தீபத் திரு விழா காணவேண்டிய ஒன்று. ஆச்சாரியர் ஸ்ரீ மத்வர் மறைந்த பிப்ரவரி மாதத்தின் நினைவாகக் கொண்டாடப்படும் ஸ்ரீ மத்வ நவமி மூன்றாவது மிகமிக முக்கியமான திருவிழாவாகும்.

நவராத்திரி, தீபாவளி, கோகுலாஷ்டமி, இராமநவமி, நரசிம்ம சதுர்த்தி, விநாயகர் சதுர்த்தி ஆகியன குறிப்பிடத்தக்கன.

இப்படி விழாக்கோலம் கொண்ட பகவான் கிருஷ்ணன் நாம் இதுவரை கண்டவற்றிலிருந்து தாம் 'அன்ன பிரும்மா' என்பதை அத்தனை பூஜைகள் வாயிலாகவும் மெய்ப்பிக்கிறார்.

### மேழு

# 27. குருவாயூர்
## சின்னக் கண்ணன்

குருவாயூர் சின்னக் கண்ணன் கோயில் கேரள மாநிலத்தில் புகழ் பெற்ற திருக்கோயில். கேரள மாநிலத்துக் கண்ணன் திருக்கோயில்களில் மிகவும் குறிப்பிடத்தக்க திருத்தலம். ஆந்திராவின் புகழ்பெற்ற அருள்மிகு வெங்கடேசுவரப் பெருமாள் கோயிலைப் போல், கர்நாடக மாநிலத்தின் புகழ் பெற்ற உடுப்பிக் கண்ணன் திருக்கோயிலைப் போல், கேரளம் என்றவுடன் ஒருவர் நினைவில் நின்று நடமிடும் திருக்கோயில் குருவாயூரப்பன் திருக்கோயில் ஆகும்.

குருவாயூருக்கு நேரடியாகவே தமிழகத்தின் முதன்மை நகரங்களிலிருந்து தமிழக அரசுப் பேருந்துகள் உள்ளன. இரயில் வண்டிப் பயணம் எனில் சென்னை-திருவனந்தபுரம் வழியில் திருச்சூர் அமைந்திருப்பதால் ஏராளமான இரயில் வண்டிகள் உள்ளன. திருச்சூர் கோவையிலிருந்து 131 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருச்சூரிலிருந்து குருவாயூருக்கு 24 கிலோமீட்டர் தூரம். திருச்சூரிலிருந்து குருவாயூருக்குப் பேருந்துகள் உள்ளன. சென்னையிலிருந்து குருவாயூருக்கு 652 கிலோ மீட்டர் தூரம். இரயில் பயணம் எனில் குறைந்தது பன்னிரண்டு மணி நேரப் பயணம். பாலக்காடு, ஷோரனூர், திருச்சூர் எனக் கோவையைக் கடந்து திருச்சூர் அடையலாம். கோவையிலிருந்து குருவாயூருக்கு நான்கு மணி நேரப் பயணம். கோவையிலிருந்து பாலக்காடு, பட்டாம்பி குன்னங்குளம் வழியாகக் குருவாயூருக்குத் தமிழக அரசுப் பேருந்துகள் செல்கின்றன. திருச்சூர் செல்லும் பேருந்தில் சென்றும் குருவாயூர் அடையலாம். மதுரை, திருநெல்வேலி முதலிய

இடங்களிலிருந்தும் குருவாயூருக்குப் பேருந்துகள் செல்கின்றன. சுமார் நான்கு மணிநேரம் பயண நேரம். நடந்தே பேருந்து நிலையத்திலிருந்து கோயிலை அடையலாம். மிக அருகில் உள்ளது.

குருவாயூர் சிறிய ஊர்தான் எனினும் தங்கும் வசதிகள் உள்ளன. திருச்சூர் பெரிய ஊர் ஆதலால் அங்குத் தங்கிக் கொண்டும் செல்லலாம். சிறப்பு மிக்கக் கண்ணபிரானின் இத்திருக்கோயில் பழமைச்சிறப்பு வாய்ந்தது ஆயினும் ஆழ்வார்கள் எவரும் குருவாயூரப்பனை மங்களா சாசனம் செய்யாதது ஏன் என்பது புரியாத புதிராக விளங்குகிறது.

குருவாயூரில் சுவையான உணவு வழங்கும் உணவு விடுதிகள் இல்லை என்பது உணவுப் பிரியர்களின் மனக்குறை.

குருவாயூரப்பன் பெருமையைச், சிறப்புகளை உலகிற்குப் பறைசாற்றிய பக்திக் காவியம் நாராயணீயம் ஆகும். 16, 17 ஆம் நூற்றாண்டுகளில், 106 வயது வரை வாழ்ந்த வேம்பத்தூர் நாராயண பட்டதிரி என்பவரே இக்காவியத்தை இயற்றினார். நம்பூதிரி குலத்தில் தோன்றிய நாராயண பட்டதிரியின் பெருமையைப் பரப்பியதில் சிறப்பிடம் வகிப்பவர் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சதர் ஆவார்.

## குருவாயூரப்பன் வரலாறு

குருவாயூரப்பன் மகிமையை விளக்கிச் சொன்னவர் தாத்ரேய முனிவர் என்பவர் ஆவார்.

பரீட்சித் மகாராஜாவின் மகன் ஜனமே ஜயன் தன் தந்தை நாகர் தலைவனால் கொலையுண்டதற்காகப் பழி வாங்கும் பொருட்டுச் சர்ப்பயாகம் ஒன்று செய்தான். இதனால் ஆயிரக்கணக்கான பாம்புகள் மடிந்தன. அவை கொடுத்த சாபத்தினால் ஜனமே ஜயனைத்தொழு நோய் பிடித்தது. அதற்காக மருத்துவம் பல பார்த்தும் நோய் குணமாகாமல் தற்கொலை செய்துகொள்ளப் பரீட்சித் மகாராஜா முயன்றபோது அவர் எதிரே தாத்ரேய முனிவர் தோன்றி அவரின் மனவேதனையையும், உடல் நோயையும் கண்டு அவர் நலம் பெற வழி காட்டினார்.

குருவாயூருக்குச் சென்று எம்பெருமானை வழிபடச் சொல்லிக் குருவாயூரப்பன் மகிமையை விளக்கினார்.

குருவாயூர் திருக்கோயில் மூல விக்ரகம் நாராயண மூர்த்தியின் திவ்விய வடிவம் என்பதுடன் தாத்ரேயரே வழிபட்டதுமாகும்.

நாராயணமூர்த்தி தாம் வழிபட்ட தன் திரு உருவைப் பத்ம கல்பத்தின் தொடக்கத்தில் பிரும்ம தேவனுக்கு அளித்தார்.

பிரம்மதேவனிடம் கதபரும் அவருடைய மனைவியும் பிள்ளை வரம் வேண்டினர். வராக கல்பத்தின் தொடக்கத்தில் இதற்காக அவர்கள் தவமிருந்தபோது பிரும்மா அவர்கள் முன் தோன்றி நாராயணமூர்த்தியின் உருவச்சிலையை அவர்களிடம் அளித்து அவரை வழிபட்டு வரும்படி கூறினார். அவர்கள் அவ்வாறு செய்ததன் பயனாய்த் திருமாலே அவர்கள் முன் தோன்ற, அவர்கள் மகன் பிறக்கவேண்டுமென மும்முறை வேண்டத் திருமால், மூன்று பிறவிகளிலும் தாமே அவர்களுக்கு மகனாகப் பிறக்கப் போவதாகவும், மூன்று பிறவிகளிலும் அச்சிலை வடிவத்தைப் பூஜை செய்யும் பேறு பெறுவர் எனவும் வாழ்த்தி மறைந்தார்.

அவர்களுக்கு ***'பிருஸ்னி கர்ப்பன்'*** எனும் மகன் பிறந்தான் அதற்கு அடுத்த பிறவியில் இவர்கள் இருவரும் காச்யவராகவும், அதிதியாகவும் ஆயினர். அவர்களுக்கு மகனாக ***வாமனர்*** பிறந்தார். காச்யரும், அதிதியும் மறுபிறவியில் வசுதேவராகவும், தேவகியுமாயினர். இவர்களின் புதல்வனாகக் கண்ணபிரான் அவதரித்தார். கம்சனை வதம் செய்தபின் கண்ணன் துவாரகையில் குடியேறினார். துவாரகையில் கோயில் கட்டித் தங்கள் பெற்றோரின் மறைவிற்குப் பின் நாராயணனின் வடிவத்தைக் கண்ணபெருமாள் கிருஷ்ணாவதாரத்தில் வழிபட்டார்.

கிருஷ்ணாவதாரம் நிறைவடையும் வேளையில் பகவான் திருவைகுண்டம் திரும்பும் நேரம். சுவர்க்கோ ரோகன வேளையில் தமது முதன்மைச் சீடரான உத்தவரை அருகில் அழைத்து, அச்செய்தியைக் கூறினார். கிருஷ்ண பரமாத்மாவைப் பிரிந்து எவ்வாறு வாழ்வது என்று வருந்தினார்.

அப்போது கிருஷ்ண பெருமான் உத்தவரிடம் தாம் அச்சிலையில் வாழ்வதாகவும்,வெள்ளத்தில் சிறிது காலத்தில் துவாரகை மூழ்கி விடும் எனவும், அப்போது அவ்வுருவச் சிலையைப் பாதுகாத்துத் தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதியின் துணைக் கொண்டு தக்கதொரு தலத்தில் பிரதிட்டை செய்யுமாறும் சொன்னார்.

துவாரகையில் வெள்ளம் ஏற்பட்டது. அவ்வெள்ளத்தில் பகவான் கண்ணரின் சிலை அலைகளுக்கிடையே தத்தளித்தது. பிரகஸ்பதியும்

வாயுவும் விக்ரகத்தை எடுத்துக் கேரளாவினுள் நுழைந்தனர். அப்போது அவர்கள் பரசுராமனைச் சந்தித்தனர். அவர் அப்போதுதான் அந்தச் சிலையைத் தேடித் துவாரகைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

நாரதர், பரசுராமரிடம், துவாரகையிலிருந்து கிருஷ்ணன் பூஜித்து வந்த விக்ரகத்தைக் கொணர்ந்து கேரளத்தில் பிரதிட்டை செய்யும்படியும், அவரை வழிபட்டால் வாதநோய் முதலானவை நீங்கி விடும் எனவும் யோசனை கூறினார்.

அவ்வாறு புறப்பட்ட பரசுராமர் துவாரகை புறப்பட்டுக் கொண்டிருந்தவர், விக்ரகத்துடன் வந்த குருவையும், வாயுவையும் சந்தித்தார். அவர்களைத் தாமரை மலர்கள் நிறைந்த ஏரிக்கு அழைத்து வந்தார். இங்குச் சிவபெருமான், கிருஷ்ண பரமாத்மாவைக் குருவாயூரில் பிரதிட்டை செய்யும் படியும் தாம் மம்மியூருக்குச் செல்வதாகவும் குறிப்பிட்டார்.

குரு, வாயு இருவருடைய பெயரால் இத்திருத்தலம் 'குருவாயுபுரம்' என அழைக்கப்படும் என்றார். தத்தாத்ரேய முனிவரிடமிருந்து இப்புராண வரலாற்றைக் கேட்ட ஜனமேஜயன் குருவாயூருக்கு வந்து கண்ணனை வழிபட்டு, மம்மியூரிலும் சென்று சிவனை வழிபட்டார்.

இதனால் ஜனமே ஜயனுக்கு இருந்த நோய் நீங்கியது. அவர் முழுமையாக நலம் பெற்றார். இவ்வாறுதான் குருவாயூரில் கண்ணபிரான் குருவாயூரப்பனாக அவதரித்தார்.

குருவாயூரப்பன் திருத்தல வரலாறு நாரதபுராணத்தின் ஓர் உறுப்பான குருபாவனபுர மகாத்மியத்தில் மேலே கண்டவாறு குறிப்பிடப் பட்டிருப்பதிலிருந்து இத்திருத்தலத்தின் பழமையை அறியலாம்.

### நாராயண பட்டதிரி

குருவாயூரப்பன் பெருமை கூறும் நாராயணீயத்தை இயற்றியவர் நாராயண பட்டதிரி. பகவான் வியாசர் இயற்றிய ஸ்ரீ மத் பாகவதத்தின் 18,000 சுலோகங்களும், 1034 சுலோகங்களாக உருமாறி நூறு தசகங்களாக உருவாகியுள்ளன. குருவாயூரப்பனே ஒவ்வோர் அடியையும் பட்டதிரி பாடக் கேட்டுத் தலையை அசைத்து

ஆமோதித்தாராம். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கூறிவிட்டுக் கவிஞர் ''குருவாயூரப்பா! இப்படித்தான் இது நடைபெற்றதா?'' என வினவுவாராம். ''ஆமாம்! ஆமாம்'' என்று குருவாயூரப்பன் அதனை ஏற்றுக் கொண்ட பின்னரே அடுத்த வரிக்குச் செல்வாராம். நரசிம்மாவதாரத்தை எப்படி வருணித்து எழுதுவது என்று பட்டதிரி யோசித்து கொண்டிருந்தபோது தூண் ஒன்றிலிருந்து நரசிம்மமூர்த்தி வெளிப்பட்டு நடந்து காண்பிக்க அதனைக் காணும் பேறு பெற்றவர் பட்டதிரி.

## *நாராயணீயம்*

நாராயண பட்டதிரி நாராயணீயத்தை ஒரு நாளுக்கு ஒரு தசகம் என நூறு நாள்களில் எழுதி முடித்துள்ளார். பாகவதத்தில் உள்ள முதல் 9 காண்டங்களில் வரும் செய்திகளை நாராயணீயத்தின் முதல் 36 தசகங்களாக எழுதியிருக்கிறார். அதில் தசம காண்டத்தில்தான் கிருஷ்ணாவதாரத் திருக்கதை வருகிறது. கிருஷ்ணனின் வடிவழகைக் கண்டு களித்துத் தாம் கண்டதை அப்படியே தலைமுதல் அடிவரை வருணித்து எழுதியுள்ளார். கிருஷ்ணாவதாரத்தை நாராயண பட்டதிரி வருணித்துள்ளதைப் படித்தாலும் சொல்லக் கேட்டாலும் நம் உள்ளம் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் ஆழ்ந்திடும். ஏனெனில் கிருஷ்ணாவதாரமே பூர்ணாவதாரம் என்பர்.

## *நாராயண நாள்*

பட்டதிரி கார்த்திகை மாதத்தில் இருபத்தி எட்டாம் நாள் நாராயணீயத்தை நிறைவு செய்து குருவாயூரப்பன் திருவடிகளில் சமர்ப்பித்தார் என்பதால் அந்த நாளை 'நாரயணநாளா'கக் கொண்டாடுகின்றனர். பண்டிதர்களைக் கொண்டு நாராயணீய பாராயணத்திற்கு ஏற்பாடு செய்வது குருவாயூர் ஆலயத்தில் செலுத்தும் வேண்டுதல்களில் ஒன்றாகும். இந்த நாராயணீயம் நமக்கு நீண்ட ஆயுளையும் உடல் நலத்தையும் நிலையாக மகிழ்ச்சியையும் அளிக்கட்டும் என முடிப்பதால் அதனுடைய பாராயண ஏற்பாடு செய்பவர்கள் நோய் நீங்கி நலம் பெறுவர். பட்டதிரியின் வாத நோயைப் பகவான் குருவாயூரப்பன் நீக்கி நலம் பெறச் செய்திருக்கிறார்.

நாராயண பட்டதிரியின் நாராயணீயம் கண்ணபிரானின் அவதார லீலா விநோதங்களை அதிலும் குறிப்பாகக் கிருஷ்ணாவதார

லீலைகளை நெஞ்சுருக, மெய்சிலிர்க்க வருணித்துள்ளதைப் பயிலுவோர் எவரும் குருவாயூரப்பனைத் தரிசிக்க வேண்டும் எனும் ஆவலை அடக்கவியலாதவர்களாவர். குருவாயூரப்பன் கண் கண்ட தெய்வமாய் அன்பர் வேண்டுதல்களை நிறைவேற்றித் தரும் அருட்தெய்வமாய் விளங்குகிறார்.

## மக்கள் நடமாட்டம்

குருவாயூர் திருத்தலம் திருப்பதியைப் போல இருபத்து நான்குமணி நேரமும் மக்கள் நடமாட்டமும், கலகலப்பும் மிகுந்திருக்கும் திருத்தலம். ஆலயத்தின் நடைசாத்தப்பட்டாலும், ஆலயத்தின் உயிரோட்டம், பரபரப்பும், மக்களின் வெள்ளச் சிறப்பு அடங்காமல் துடிப்புடன் விளங்கும் ஒரு சிறப்பைக் காணலாம்.

## வாயில்கள்

குருவாயூர் ஆலயத்திற்குக் கிழக்குப்புறம் கோபுரத்துடன் கூடிய முதன்மை வாயில் உள்ளது. மேற்குப்புறமும் ஒரு கோபுர வாயில் உள்ளது. இவ்விரு வாயில்கள் தவிர, ஆலயத்தினுள் நுழையக் கிழக்கே பகவதி சந்நிதிக்குப் பின்புறம் ஒரு சிறு வழியுள்ளது. ருத்ர தீர்த்தக் குளத்தில் நீராடி விட்டு வருபவர்கள் நுழையும் சிறுவழியிது.

கோவிலுக்குட் செல்லாமலேயே கிழக்குக் கோபுர வாயிலிருந்து நாம் தரிசனம் செய்யலாம். கூட்டம் அதிகமானால் கொடி மரத்திலிருந்து தரிசிக்கலாம். கொடி மரத்தின் இரு புறங்களிலும் உயரமான விளக்குக் கம்பங்கள் உள்ளன. தென் புறத்தில் ஆலயத்தில் வேண்டுதல் நிறைவேற்றிக் கொள்ளுமிடம் உள்ளது. கொடி மரம் உள்ள மண்டபம் துவஜஸ்தம்ப மண்டபம் ஆகும். இம்மண்டபத்தில் பாகவதம், நாராயணீயம், முதலாக பக்திப் புராணங்களை வாசிக்க அடியவர் அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பர். இந்த ஒரு திருச்சுற்று அதை அடுத்து உள் திருச்சுற்று.

கொடிக்கம்பத்தை ஒட்டிய திருச்சுற்றில் கூத்தம்பலம், தர்மசாஸ்தா சந்நிதி, மேல் சந்தி தங்கும் விடுதி, பகவதியின் சந்நிதி, யானைப் பந்தல், ஆதிசங்கர பகவத்பாதாள் வந்திறங்கிய வடக்குத் திருச்சுற்று, ஆகியன உள்ளன. இத்திருக்கோவிலின் பழைமை நிலை மாறிக் கோயில் இப்போது புதுமை பெற்றுள்ளது. மேற்கு வாயில் வழியாக உள்ளே நுழைந்து இடது கைப்புறம் திரும்பினால் சமையல் கூடம்

உள்ளது. வடக்குப்புறம் மாடியுடன் கூடிய பகுதியில் உணவுக் கூடம் அமைந்துள்ளது. கீழே சேவைச் சீட்டுகள் வழங்குமிடங்கள் உள்ளன. அவ்விடத்தில் புதிதாக உயரமான மண்டபம் ஒன்று காங்கிரீட் தூண்கள் கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தூணிலும் சுதையால் ஆன வண்ணம் தீட்டப்பெற்ற உயரமான சிற்பங்கள் உள்ளன.

கிழக்குப் புறம் மண்டபம் கட்டும் பணி நடந்துகொண்டிருக்கிறது. ஆலயம் விரிவாகிக் கொண்டிருக்கிறது. வெளியே கிழக்கு வாயில் அருகே கலை நிகழ்ச்சிக்கூடம் அமைந்துள்ளது.

பழைய காலத்திய நாடகக் கலை போல் நடன நிகழ்ச்சிகள் பிரார்த்தனையின்படித் தொகை கட்டியவர்களுக்கு சேவைகள் நடைபெறுகின்றன. குழந்தை வேண்டுவோர், எதிரிகளை வெல்ல நினைப்போர், திருமணம் கைகூட விழைவோர், நலம் பெற விழைவோர் அதற்கெனக் குறிப்பிட்ட தொகை செலுத்தினால் அவற்றை ஆலயமே நடத்திக் காட்டுகிறது. சர்க்கரையும், நெய்யப்பமும், வாழைப் பழமும், இரட்டைப் பாயசமும், வெண்ணெயும், சந்தனமும் பிரசாதமாக விற்பனைக்குக் கிடைக்கின்றன.

கருவறை செல்லும் வழியில் இடதுபுறத்துத் திண்டில் நாராயண பட்டத்திரி அமர்ந்து நாராயணீயம் வாசித்த இடம் உள்ளது. பிரசாதங்கள் சிலவற்றிற்கு முதல் நாளே சீட்டு வாங்கி மறுநாள் மதியம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

உள் திருச்சுற்றில்தான் குருவாயூர் அப்பனின் கருவறை அமைந்துள்ளது. இத்திருச்சுற்றின் கிழக்குப் புறத்தில் மடைப்பள்ளியும் தென் மேற்கு மூலையில் விநாயகப் பெருமாள் சந்நிதியும் உள்ளன. மேற்குப்புறத்தில் கருவறைக்குப் பின்புறம் நேர் எதிரே ஸ்ரீ அனந்தசயனத் திருக்கோலத்தைக் கல்லில் வடித்துள்ளனர். முன்பு அங்கு அனந்த சயனப் பெருமாள் திருவடியை ஓவியத்தில் தான் கண்டோம். மேல்புறம் சந்தனம் அறைத்துக் கொண்டேயிருக்கின்றனர்.

வடக்குப்பகுதியில் வெளித் திருச்சுற்றுக்குச் செல்ல வழியொன்று உள்ளது. அவ்வழியில் **திருத்தம்** என்னும் இடம் உள்ளது. அந்த இடம் புனிதமான இடமாகக் கருதப்படுகிறது. வில்வமங்கல சுவாமி என்பவர் தியானம் செய்த அவ்விடத்தில் சுவாமிக்குக் கண்ணன் காட்சியளித்த இடம் அது என்று கூறுவர். இந்த இடத்தில் தான் தினமும் ஆலய வரவு செலவுக் கணக்குகளை வாரியார் வாசிக்கிறார்.

கருவறைக்கு வடகிழக்கே வருணதேவன் வழிபட்ட கிணறு இருக்கிறது. அதில் சிலர் காசுகளை வீசுவர். இத்திருக் கிணற்றிலிருந்துதான் நீரை எடுத்து குருவாயூரப்பன் திருமஞ்சனத்திற்குப் பயன்படுத்துகின்றனர். இக்கிணற்று நீர் சுவைமிக்கது. விரதம் இருப்பவர்கள் இந்நீரையே பருகுவர்.

இத்திருச்சுற்றை வலம் வந்து திருச்சந்நிதி வாயிலை அடையலாம். வாயிற் படிக்கு மேல் திருச்சந்நிதியின் முன் கஜராஜன் விருதுபெற்ற குருவாயூர் கேசவன் எனும் யானையின் தந்தங்கள் பொருத்தப்பட்டுள்ளன. உள்ளே குறுகிய பாதையில் மெல்ல, மெல்லச் செல்ல வேண்டும். அதன் இருபுறமும் திண்ணைகள் அமைந்துள்ளன. அடுத்து உள்ள மண்டபம் நமஸ்கார மண்டபம் ஆகும்.

நமஸ்கார மண்டபத்திலிருந்தும் அச்சின்னக்கண்ணனின் அழகுத் திருக்கோலம் காணலாம். நமஸ்கார மண்டபத்தில் அதிக நேரம் இருந்து விடமுடியாது. இங்குக் கூட்டம் நெருக்கித் தள்ளும். இருப்பினும் மெதுவாக நகர்ந்து கொண்டே முண்டியடிக்காது சென்றால் அருமையான, மனநிறைவான தரிசனம் பெறலாம்.

கருவறைக்கு மிக, மிக அருகில் கருவறைப் படிக்கட்டில் இருபுறங்களிலும் நின்று கண்ணபிரானைக் கண்டு தரிசித்துக் கண் பெற்ற பேறு பெறலாம். அருகில் காணும் போது, ஒரு பேரழகு ஜோதி வடிவினைக் காண்கிறோம். பார்க்கப் பார்க்கப் பரவசமான அத்திரு உருவினைக் கருவறையை வலம் வந்து எத்தனை முறைவேண்டுமானாலும் தரிசிக்கலாம். இங்குக் கிடைக்கும் எம்பெருமான் தரிசனம் எளியவர், வலியவர், ஏழை, பணக்காரர் என்று வேறு பாடில்லாமல் எல்லோரும் சமமாகக் காணும் தரிசனம் எவ்வளவு கூட்டமிருந்தாலும் எல்லாரும் மன நிறைவோடு தரிசித்து வரலாம் என்பதே சிறப்பு.

***'அம்போ நாராயணா! குருவாயூரப்பா'*** எனும் அன்பர் வாயிலிருந்த புறப்படும் அமுத மொழிகள் நம்மைப் பக்தி ரஸானுபவத்தில் திளைத்திட வைக்கின்றன. வருடத்தில் இருமுறை சூரிய பகவான் இறைவன் திருவடி தழுவி வணங்கும் வகையில் கருவறை அமைந்துள்ளது. திருச்சந்நிதிக்குக் குறுகிய வாயில், பெரிய பலிபீடம், கொடிமரம் இருந்தாலும் கோபுர வாயிலிலிருந்தே தரிசிக்கும் படி திருக்கோயில் அமைக்கப் பெற்றிருப்பது ஒரு சிறப்பு.

குருவாயூர் அப்பனைத் தரிசிக்கும் முன் மம்மியூர் சிவன் கோயிலுக்குச் சென்று தரிசித்துவிட்டு அதன் பின்னர் குருவாயூரப்பனைத் தரிசிக்க வேண்டும் எனவும் அப்போது தான் முழுப் பலன் எனவும் கூறுவர். மம்மியூர், சிவன் கோயில் குருவாயூரப்பன் திருக்கோவிலுக்கு இரண்டு கல் தொலைவில் உள்ளது.

மம்மியூர் கோயிலில் சிவபெருமான் லிங்க வடிவில் சக்தியோடு ஒன்று பட்ட நிலையில் தரிசனம் தருகிறார். அவ்வூர் அம்பிகாபுரம், நன்மையூர் என்று வழங்கப்பெறுகிறது. இங்குப் பார்வதி அன்னை கருவறைக்குப் பின்புறம் சங்கல்பமாக எழுந்தருளியிருக்கிறாள்.

குருவாயூரில் உள்ள கிருஷ்ணபரமாத்மா ஆராதித்து வந்த கிருஷ்ண விக்கிரகமே குருவாயூரில் உள்ளது எனவும், குருவாயூரில் திருக்கோயில் தோன்று முன் அவ்விடத்தில் சிவனும், சக்தியும் இருந்து வந்தனர். எனவும், அப்போது திருக்குளம் தாமரை மலர்கள் நிறைந்த ருத்ரதீர்த்தம் எனும் பெயர் கொண்ட பொய்கையாக விளங்கிற்று எனவும் கூறுவர். அவ்விடத்தில் நாராயணனுக்கு இடம் அளிக்கவே காத்திருப்பதாகச் சொல்லிச் சிவபெருமான் பார்வதியுடன் மம்மியூருக்கு எழுந்தருளுவதாகக் குறிப்பிட்டார் எனவும், ருத்ரகிணற்று நீரை விக்ரகத்தின் மீது தெளித்து மம்மியூர் குடி பெயர்த்தனராம்.

நாராயணனுக்காகத் தங்கள் இடத்தை விட்டுக் கொடுத்துச் சென்ற நன்றியின் பொருட்டு முதலில் மம்மியூர் சென்று வழிபட்டபின் குருவாயூர் வந்து வழிபடுவது வழக்கம். அவ்வாறு அங்குச் சென்று தொழுவதற்குப் பதிலாகக் குருவாயூரப்பன் திருக்கோயில் வடகிழக்கு மூலையில் திருக்குளத்தை ஒட்டியுள்ள பகவதி திருச்சந்நிதியை வலம் வருபவர்கள், மேற்குப்புறம் திரும்பிக் கை கூப்பித் தொழுது, மம்மியூர் சிவனை வழிபட்ட பின்னரே குருவாயூரப்பனை வழிபடுவர்.

பகவதிக்கு அரிசி, தேங்காய், அவல் ஆகிய இவற்றையே நைவேத்தியம் செய்கின்றனர். அன்னம் படைத்து வழிபடுவதில்லை. சுத்தமான துணியை எண்ணெயில் தோய்த்துத் தீபம் ஏற்றி வழி படுகின்றனர். இதற்கு அழல் எனப் பெயர்.

குருவாயூரப்பன் கோயிலில் தினமும் நடைபெறும் நிர்மால்ய, விசுவரூபதரிசனங்களே பெரும் சிறப்பு வாய்ந்தவை. இரண்டரை

மணிக்கெல்லாம் கோயில் குளத்தில் குளித்து நீராடிவிட்டு ஈர ஆடைகளுடன் நிர்மால்ய தரிசனத்திற்காகத் தினமும் பொறுமையுடன் அடியவர் தவங்கிடப்பர். முதல் நாளே வந்து காத்திருப்பவர்களும், இரவெல்லாம் வந்து சேரும் அன்பர்களும் பரபரப்புடன் நிர்மால்ய தரிசனம் காணக் காத்திருக்கும் காட்சி காணப் பரவசமான காட்சி. தூய்மையான பக்தியுணர்வு மிகுந்து நிலவும் அத்தகைய சூழல் மனதிற்கு நிம்மதி அளிப்பது.

சரியாக மூன்று மணி ஒலிக்கத் திருக் கதவுகள் திறக்கக் 'குருவாயூரப்பா' 'குருவாயூரப்பா' என்று எழும் குரலோசை பக்திப் பரவசத்தை ஊட்டுகிறது. எத்தனை ஆயிரம் பேரானாலும் அதிகாலையில் கருவறை திருவைகுண்டம் போல் தேஜோ மயமாய் ஜொலிக்கும் அருமையான தரிசனத்தைக் காண முடிந்தது.

முதல் நாள் இரவு சாத்தப்பட்ட சந்தனக் காப்புடன், அணிவிக்கப்பட்ட ஆடை அணிகலன்களுடன் சின்னக்கண்ணன் எழில் பொங்கச் சிரிப்புப் பூவை உதிர்க்கிறான்.

அதன் பின் அலங்காரம் கலைக்கப் பெற்றுத் திருமேனி எழிலுடன் விளங்க வாகைச் சாத்து எனப்படும் தைலாபிஷேகம் நடைபெறுகிறது. ஒரு வகையான மரப்பட்டையைஇடித்துத் தயாரிக்கப்படும். வாகைப் பொடியைப் போட்டு எண்ணெய் போகத் தேய்க்கிறார்கள். இதனையடுத்துச் சங்காபிஷேகம். அதன்பின் தங்கக் குடத்திலிருக்கும் பிரம்ம கலச மந்திரத்தினால் புனித மாக்கப்பெற்ற தீர்த்தத்தினால் குடமுழுக்குச் செய்விக்கின்றனர். இந்த அபிஷேக தீர்த்தமும், அபிஷேக எண்ணெயும் பல நோய்களைக் குணப்படுத்தும் சக்தி பெற்றவை.

அப்போது நைவேத்தியமாக அரிசிப் பொரி, பொடி செய்த சர்க்கரை, கதலிப்பழம் ஆகியவற்றைப் படைக்கின்றனர். குருவாயூரப்பன் கழுத்தில் மலர் மாலைகள் ஆடக், காதில் குண்டலங்கள் ஆடக், கஸ்தூரித் திலகமிட்டு, புல்லாங்குழலின் மெல்லிய இசையெழ, கையில் வெண்ணெயும், உரித்த வாழைப்பழத்தையும் வைத்துக் கோகுலத்துக் கோபால கிருஷ்ணனாகத் தரிசனம் அளிக்கிறார்.

சரியாக ஐந்து மணிக்குக் கணபதி ஹோமம் நடைபெறத் தொடங்கு கையில் அரை மணி நேரம் கோயிலைச் சாத்திப் பிரசன்ன பூஜையும்,

விழக்கால பூஜையும் நடைபெறுகின்றன. அஷ்டபதி கானத்துடன் கூட நாதசுவரமும் முழங்கும். நெய்ப்பாயசத்தை நைவேத்தியமாகப் படைக்கின்றனர். நடை திறக்கும் போது குருவாயூரப்பன் திரு முடியில் மயிற் பீலி அணிந்து, நெற்றியில் திலகமிட்டு, இடையில் மஞ்சள் பட்டணிந்து தரிசனமளிக்கிறார்.

6.30 மணிக்கு யானையின் மீதான சீவேலி ஆலயத்தை மூன்று முறை வலம் வருகிறது. முதல் வலத்தில் பரிவார தேவதைகளுக்கு மேல் சாந்தி அன்னபலியிடுகிறார்.

சீவேலியின் போது இசைக்கருவிகள் முன்னே ஒலிக்க யானையின் மீது பெருமானைக் கொண்டு செல்லும் போது தாளத்துடன் கண்ணனின் பெயரை உரக்கப் பாடிக் கொண்டு அன்பர்கள் வருவர். ஏழு மணிக்குள் சீவேலி முடிந்ததும் பால் அபிடேகம் நடைபெறுகிறது. பாலுடன் இளநீரும் பன்னீரும் கலந்த அபிடேகம் இது.

அடுத்து ஒன்பது வெள்ளிக் கலசங்களிலிருந்து மந்திர ஜபம் செய்யப் பெற்ற தீர்த்த அபிடேகம் நடைபெறுகிறது. இதனை **நவகாபிடேகம்** என்பர். இதன்பின் நடைபெறும் பந்தீரடி பூஜை எனப்படும் பூஜையை ஓதிக்கன்மார் எனும் வேதம் ஓதும் நம்பூதிரிகள் செய்கின்றனர். அன்னமும், சர்க்கரைப் பாயசமும் நைவேத்தியம் ஆகிறது.இப்பூஜை முடிந்த பின் பெருமாள் தரிசனம் நடைபெறுகிறது.

11.30 மணிக்கு நடைபெறுவது உச்சிக் கால பூஜை. இப்போதும் பால் பாயசமே நைவேத்திய மாகிறது. இப்பூசையின் போது கேரள மண்ணின் இசைக் கருவிகளான கெண்டை, மத்தளம், கொம்பு, குழல் ஆகியன ஒலிக்கின்றன. இதன் பின்னர் பன்னிரண்டு மணிவரை தரிசிக்கலாம். அதன்பின் நடை சாத்தப்பெறும். பலவகையான வழிபாடுகள், பிரசாதங்களுக்குப் பணம் செலுத்துகின்றார். எல்லாம் கட்டண மயம். மதியம் 12.30 மணிமுதல் 4.30 மணிவரை கருவறையின் திருக்கதவும் மூடியிருக்கும்.

மாலை ஐந்து மணிக்குத்தான் திருச்சந்நிதியின் திருக்கதவும் திறக்கப்பெறும். மாலை வரை கோயிலின் நடைசாத்தப் பெற்றிருக்கிறது. மாலை ஐந்து மணிக்குக் கதவு திறக்கப் பெற்றதும் சீவேலி நடைபெறும். சந்தியா வேளையில் தீபாராதனை நடைபெறுகையில் சங்கு, கிண் கிணி முழக்கம், மத்தள ஓசை, தாள ஒலிகள் மனதுக்கு இனிமை சேர்க்கும். அவ்வேளையில் தீபாராதனை நடைபெறுகிறது.

சந்தியா வேளையில் நடைபெறும் இவ்வழிபாடு மிகச் சிறப்பு வாய்ந்தது எனக் கூறுகின்றனர். ஏனென்றால் முப்பத்து முக்கோடி தேவர்களும் வந்து வழிபடுவதாக நம்பிக்கை. அப்போது குருவாயூரப்பன் சந்தனக் காப்புடன், மகரகுண்டலம், தலை கிரீடம், துளசி மாலை அணிந்து மிக எடுப்பான தோற்றத்துடன் விளங்குவார். இதன்பிறகு எட்டு மணிவரை திவ்வியமான இடை விடாத தரிசனம்.

எட்டு மணிக்கு அர்த்த ஜாம பூஜைக்கு இணையான ***அத்தாழ பூஜை*** தொடங்குகிறது. நெய் அப்பம், இலையடை, பால் பிரதமன் முதலியன நைவேத்திய மாகின்றன. அத்தாழ பூஜை முடிந்ததும் அத்தாழ சீவேலி நடைபெறும். எத்தனை முறைவேண்டுமானாலும் குருவாயூரப்பனைச் சுற்றிச் சுற்றி வந்து வரிசையில் நின்று சென்று தரிசிக்கலாம்.

## ***சுற்று விளக்கு, திருப்பலி***

குருவாயூரில் குறிப்பிடத்தக்கவை என்று சொல்ல வேண்டுமாயின் சீவேலியும், சுற்றுவிளக்கு ஏற்றலும் என்று குறிப்பிட வேண்டும். சீவேலியின் சிறப்பினைக் குருவாயூர் அன்றி வேறு எங்கும் காணவியலாது.

சீவேலியின் முதல் சுற்றின் போது சாந்தி பலிக்கற்களுக்கு அன்ன நைவேத்தியம் படைப்பது முதன்மையானது. சீவேலியில் முக்கிய கருத்து என்ன வென்றால் தன்னுடைய துணைத் தேவதைகளுக்கும், மெய்க் காப்பாளர்களுக்கும், பிற தெய்வங்களுக்கும் அன்ன பலியளிப்பதைப் பகவான்அருகிலிருந்தே கவனிக்கிறார் என்பதாகும். ஆலயத்தில் உள், வெளி, திருச்சுற்றுகளில் தரையில் இதற்கெனப் பலிக்கற்களைக் காணலாம்.

குருவாயூரில் கொடிக்கம்பம் முன்னால் இருக்கும் பெரிய பலிக்கல் அரிசேனனையும், துவஜாவா ஹனரையும் குறிப்பதாகும். குரு, வாயு ஆகிய இருவருடையனவாகும் வடகிழக்கில் க்ஷேத்திர பாலரின் பலிக்கற்கள் உள்ளன.

உள் திருச்சுற்றில் கருவறையில் இருபுறமும் சண்டன் பிரசண்டன், ஆனந்தானந்தர்களும், கருவறைமுன்னுள்ள படிக்கட்டுகளுக்குக் கீழே இந்திரனும், மண்டபத்தில் கருடனும், தென்கிழக்கு மூலையில் அக்னியும், தெற்கில் கணபதி, தட்சிணாமூர்த்தி, யமன், வீரபத்திரர், விக்னேசுவரர், ஐயப்பன், சப்த கன்னியர், தென்மேற்கில், கணபதி, அனந்தன்ன திருத்தி தேவன்,மேற்கில் அனந்த சயனன், வருணன்,

வடமேற்கு மூலையில் வாயு, துர்க்கை, சுப்ரமணியர், வடக்கில் சோமன், வைச்ரவணன், வடகிழக்கில் நிர்மால்ய தாரி, நிசமணன், பிரும்மா, கிணற்றில் வருண பகவன் ஆகியோர் இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் சீவேலியின் போது அன்னம் பலி வழங்குவர். வருணபகவான் இருப்பதால் கிணற்றினுள் பலி அளிப்பர்.

சீவேலியின் போது மூன்று யானைகளுடனோ, ஐந்து யானைகளோ ஊர்வலம் வரும் காட்சி காணக் காணத் தெவிட்டாத எழிற்காட்சி. அவ்வலத்தின் போது ஒரு பெருங் கூட்டம் பின் செல்லும். பஞ்ச வாத்யங்கள் முழக்கத்துடன் நெய், எண்ணெய், தீபங்கள் பொன்னொளி வீசும். அப்போது யானைகள் அசைந்து, அசைந்து வர, ஆங்காங்கே பலி வழங்குகின்ற போது கம்பீரமாய் அசைந்து கொண்டு நிற்க, அவற்றின் மீது அமர்ந்திருப்பவர்கள் எழுந்து நின்று ஒரே சீரோடு வெண்சாமரங்கள் வீசி, ஆலவட்டம் சுழற்றுவது பார்க்கப்பார்க்கப் பரவசமளிக்கும் திருக்கோலமாகும்.

சீவேலி முடிந்தபின், பூதப்பிரேத, பிசாசுகளின் தொல்லை களிலிருந்து விடுபட ஆலயத்தின் ***திருப்புகை*** காட்டுவர். திருப்புகை ஆன பிறகு பத்து மணிக்குத் திருச்சந்நிதி மூட அன்றைய நாள் வழிபாடு அத்துடன் நிறைவடைந்து விடுகிறது.

## *லட்ச தீபம்*

குருவாயூர் வழிபாடுகளில் குறிப்பிடத்தக்கது லட்சதீபம். எப்போதும் வேண்டுமானாலும் பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் உள் மதில் சுவரைச் சுற்றிலுமுள்ள நூற்றுக்கணக்கான அகல் விளக்குகளை இரவில் ஏற்றும் பிரார்த்தனையை அதற்குரிய கட்டணம் செலுத்தி நிறைவேற்றிக் கொள்ளலாம். பிரார்த்தனை செய்து கொண்டவரின் குடும்பத்தினர் முதலில் விளக்குகளை ஏற்றுகின்றனர். பின்னர் ஆலயம் வரும் அன்பர்கள் ஏற்றுகின்றனர். குருவாயூரப்பன் கோயிலில் நம் கையால் விளக்கு ஏற்றும் பேறு நமக்குக் கிடைக்க வேண்டும். அவ்வாறு விளக்கேற்றுவது பெரும்புண்ணியம் என்பர். இவ்விளக்கு ஏற்றப் பெற்ற நாளில் சீவேலி காண்பது ஒரு நல்ல அனுபவம்.

## *மண்டல காலம்*

குருவாயூர் கோயிலில் நித்திய உற்சவம்தான் என்றாலும், மண்டல காலமும், வைசாக விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்களாகும்.

மண்டல காலம் என்பது நவம்பர் மாதம் மத்தியில் தொடங்கி 41 நாட்கள் நீடிக்கிறது. மண்டல காலத்தில் பஞ்ச கவ்ய அபிஷேகம் நடைபெறுகிறது. கடைசி நாளில் களபம் எனும் சந்தன அபிஷேகம் நடைபெறும். இந்த விழா ஆண்டுக் கொருமுறை நடைபெறுவது. மண்டல காலத்தில் வரும் ஏகாதசி உற்சவம் சிறப்பானது. கார்த்திகை மாதத்தில் வரும் சுக்கிலபட்ச ஏகாதசியே குருவாயூர் ஏகாதசி எனச் சிறப்புடன் குறிப்பிடப் பெறும் ஏகாதசி ஆகும்.

ஏகாதசிக்குப் பதினெட்டு நாள்களுக்கு முன்னரே விழாக் களை கட்டிவிடுகிறது. தினமும் விளக்கு உண்டு. ஆலயத்தின் எல்லா விளக்குகளும், தீபஸ்தம்பங்களுக்கு ஏற்றப்பட்டு ஆலயமே ஒளி வெள்ளத்தில் தெப்பம் போல் மிதக்கும்.

## *ஏகாதசி*

'குருவாயூர் ஏகாதசி' க்கு என்ன சிறப்பு! ஏகாதசித் திருநாளன்று தான் நாரத மகரிஷியுடன் வானில் சென்று ஆதிசங்கர பகவத்பாதாள் குருவாயூர்க் கோயிலுக்கு வந்து நாற்பத்தோரு நாட்கள் தங்கி வழிபாட்டு முறைகளை வகுத்து அளித்துச் சென்றார் அந்தத் திருநாளில்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருச்சுணனுக்குக் கீதாவுபதேசம் செய்தருளினார் என்பது நம்பிக்கை.

அன்றுதான் கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்துக் கண்ணன் கோகுலத்தை வருணனின் சீற்றத்திலிருந்து காத்தான் என்றும் கூறுவர். இதனால் இந்திரன், காமதேனுவுடன் குருவாயூர், வருகை புரிந்து பகவானுக்கு விலை மதிப்பற்ற செல்வங்களை வழங்கி வழிபடுவதாகவும் நம்பிக்கை.

## *பிரம்மோற்சவம்*

இத்திருக்கோயிலில் மாசிமாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. அதற்குப் பூசநாளில் கொடியேற்றுகின்றனர். கொடியேற்ற நாளில் யானை ஓட்டம் நடைபெறுகிறது. கொடியேற்றிய பின்னர் கிழக்குக் கோபுரத்துக்கு நேரே தொலைவில் யானைகள் வரிசையாக நிறுத்தப் பெற்றுத் தொடங்கும் ஓட்டத்தில் எந்த யானை முதலில் கொடி மரத்தை அடைகிறதோ, அதனை பத்து நாள்கள் கோயிக்குள் வைத்துக் கொள்வர்.

## ஜென்மாஷ்டமி

கண்ணன் பிறந்த நாளான கோகுலாஷ்டமி எனப்படும். ஜென்மாஷ்டமி அன்று பக்தர்களுக்கு அப்பம் வழங்குகின்றனர்.

## விஷு

சித்திரை மாதம் முதல் நாள் விஷுக்கனி பார்த்தல் குருவாயூர் கோவிலில் ஒரு திருநாளாகும்.

## குசேலர் நாள்

மார்கழி மாதத்து முதல் புதன்கிழமை குசேலர் தினமாகக் கொண்டாடப்படுவதால் அன்று குருவாயூரப்பனுக்குப் பக்தர்கள் அவல் அளிக்கின்றனர். படிக்கணக்கில் அவல் அளிக்கின்றனர். பகவதி கோயிலில் நவராத்திரி விழா மூன்று கால வழிபாட்டுடன் சகஸ்ரநாம, நாராயணீய பாராயணங்களுடன் விசேஷமாக நடைபெறும்.

## பார்த்தசாரதி

குருவாயூர் திருத்தலத்தில் குறிப்பிடத்தகு சக்தி வாய்ந்த பார்த்தசாரதி திருக்கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலில் கண்ணபிரான் கீதாசாரியனாகப், பார்த்தசாரதியாய் அர்ச்சாரூபத்தில் திருக்கோயில் கொண்டுள்ளான்.

குருவாயூரப்பன் சந்நிதிக்கு நேர் வீதியில் ஓர் அரச மரமும், சுற்றியும் மேடையும், அதன் மீது ஒரு பெரும் கருடனும் இருப்பதைக் காணலாம். அங்கிருந்து வடக்கே சென்றால் சில அடிகள் தூரத்தில் இந்தப் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் உள்ளது. குருவாயூரப்பனைவிடச் சிறிய, இரண்டடி உயரம் கூட இல்லாதவர் ஆனால் எழில் கொஞ்சும் தோற்றத்துடன், அணிகலன்கள் அணிந்து காட்சி அளிக்கின்றார் இப்பெருமாள்.

மணி முடி அள்ளி முடிந்த முடியைப்போல் திகழ்கிறது. இரு தோள்களின் முடி நீண்டு தவழத் தாமரை மொட்டுக்கள் போன்ற குண்டலங்கள் அணிந்திருக்கிறார். கழுத்தைச் சுற்றி வகை வகையான மணி மாலைகள், தோள்வளைகள், கை வளையல்கள், மோதிரங்கள், மார்பில் பூனூல், இடுப்பில் ஒட்டியாணம், அரையில் பட்டு ஆடை, கால்களில் தண்டை, கொலுசுடன் விளங்கும் இப்பார்த்தசாரதி வலது

கரத்தில் சவுக்கும், இடது கையில் சங்கு பாஞ்சசன்யமும் கொண்டு விளங்குகிறார். இப்பார்த்தசாரதி பாலகனாய்க் காட்சி அளிக்கிறார்.

குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் கிருஷ்ணபரமாத்மா அருச்சுணனுக்கு விசுவ ரூபம் காட்டினார். அதை அறிந்த நாரத மகர்ஷி அந்த வடிவத்தைத் தம் கண்ணால் காண வேண்டும் என்று ஆசைப்பட்டார். எனவே ஸ்ரீ கிருஷ்ணனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். பரந்தாமன், நாரதரைக் குருவாயூர் சென்று இப்போது பார்த்தசாரதி திருக்கோயில் இருக்குமிடத்தில் அமர்ந்து தவம் செய்யப் பணித்தார். மகரிஷி நாரதர் அவ்வாறே செய்தார். அதன் பயனாகவே கண்ணபிரான் அங்குப் பார்த்த சாரதியாகத் தரிசனம் தந்து அருளினார். அந்தப் புனிதத் தலத்தில் மனித குலத்தின் நன்மைக்காக ஒரு விக்ரகப் பிரதிஷ்டை செய்வதென்று நாரதர் திருவுளம் கொண்டார்.

பல ஆண்டுகளுக்குப் பின் நாரதர், ஆதிசங்கர பகவத்பாதாளுடன் வானில் சென்று கொண்டிருந்தார். சீவேலி நடைபெற்ற வேளையில் ஆதிசங்கரர் மேலிருந்து விழப் பகவதி, நாரதருக்குப் பார்த்தசாரதி தரிசனம் கிடைத்த தலத்திற்கு அழைத்துச் செல்லும்படி நாரதரிடம் கூற அவ்வாறே அழைத்துச் சென்றார். ஆதிசங்கருக்கும் பார்த்தசாரதிப் பெருமாள் தரிசனம் கிடைத்தது. பின்னர், மகரிஷியின் கட்டளையின் பேரில், ஸ்ரீ ஆதிசங்கர பகவான் கங்கைக்குச் சென்று இந்தப் பார்த்தசாரதி விக்ரகத்தைக் கொணர்ந்து பிரதிட்டை செய்து கோயில் அமைத்தார். அங்குப் பூஜா நியமிங்களை வகுத்துத் தந்து, தாம் நிறுவிய 'நடுவில் மடம்' சாமியாரிடம் அதன் நிருவாகப் பொறுப்பை ஒப்படைத்து விட்டுத் தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

அருச்சுணன் விசுவரூப தரிசனம் கண்ட, கீதோப தேசம் பெற்ற ஏகாதசி நாளில் பார்த்தசாரதி கோயிலில் கீதைத் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் குருவாயூர் ஏகாதசியன்று அலங்கரிக்கப்பெற்ற யானைகள் பார்த்தசாரதி கோயில் வரை வந்து போகின்றன. அன்று பார்த்தசாரதி, அருச்சுணன் பதுமைகள் ஊர்வலம் வருகின்றன. இத்திருக்கோயிலில் ஆதிசங்கரர் திருஉருவினைப் பிரதிட்டை செய்துள்ளனர்.

### துலாபாரம்

குருவாயூர் திருத்தலத்தில் துலாபாரம் குறிப்பிடத்தக்கது. பழம், இளநீர், வெல்லம், சேனைக்கிழங்கு, கயிறு என அவரவர்கள்

பிரார்த்திக் கொண்டதைச் செலுத்துகிறார்கள். அவர்களே பொருள்களைக் கொண்டு வரலாம் அல்லது பணம் செலுத்தி அங்கேயே பெற்றும் செலுத்தலாம். நாம் உட்காரும் தட்டில் போய் பணம் வைக்க வேண்டும். நம் எடைக்குச் சரியான பொருளை வைத்து அதை அளிப்பர், கண்ணன் சிறுவனாதலால் எடைக்கு எடை குன்றி மணியை நிறுத்தி அதற்குரிய தொகையைச் செலுத்துகின்றனர்.

## திருமணம்

குருவாயூரில் திருமணம் செய்வது திருப்பதியில் மணம் செய்து கொள்வதைப் போன்றது. ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றன. கோயிலுக்குள் திருமணம் நடைபெறாது. கோயிலுக்கு வெளியே வாயிலில் மரத்தினால் உருவான ஒரு கல்யாண மண்டபம் இருக்கிறது. ஒரு சிறிய மேடைதான் மண்டபம். கிழக்குக் கோபுர வாயிலில் உள்ள அந்த சிறிய மேடையில் திருமணங்கள் நடக்கின்றன.

## சோறூனூ

இத்திருக்கோயிலில் திருமணத்திற்கு அடுத்தபடி நடைபெறுவது அன்னப்பிராசனம். குருவாயூரப்பன் பக்தர்கள் தமிழகத்தில் இருந்தாலும், வேறு எங்கு இருந்தாலும் தங்கள் குழந்தைகளுக்கு முதன் முதலில் சோறு ஊட்டும் நிகழ்ச்சியைக் குருவாயூரில் தான் செய்கின்றனர். இவ்வாறு சோறூட்டும் நிகழ்ச்சி 'சோறூனூ' என்று அழைக்கின்றனர். இந்தச் சோறூனூ பந்தாடி பூஜை, உச்சிக்கால பூஜை, அல்லது அத்தாழ பூஜைகளின் போது கொடி மரத்தினடியில் நிறைவேற்றப்பெறுகிறது. இதற்குத் திருக்கோயிலில் கட்டணம் செலுத்துகின்றனர். இதனை ஆலயப் புரோகிதர்கள் நடத்தி வைக்கின்றனர்.

கொடிமரத்தின் கிழக்கே குருவாயூரப்பனுக்கு நேரே இலையைப் போட்டு அன்னம் பாயசம் முதலியன வைத்துக், குழந்தைக்குத் தீர்த்தப் பிரசாதம் அளித்து அன்னப் பிராசனம் செய்து வைக்கின்றனர்.

## அடிமை கடத்தல்


சிலர் தங்கள் குழந்தைகளைப் பகவானுடைய பிள்ளைகளாகச் சங்கற்பம் செய்து கொண்டு ஆலயத்தில் கிடத்துவதற்கு 'அடிமை

கிடத்தல்' அல்லது 'நடைதள்ளுதல்' என்பர். குழந்தையை விட்டு விட்டு அவர்கள் சென்று விட்டுப் பிறகு வேறுயாரிடமாவது கூறிக் குழந்தையைக் கொண்டு வரச் செய்து, அதற்கென உரிய தொகையை உண்டியலில் செலுத்துகின்றனர்.

## ஆள்ரூபம்

வெள்ளி, தங்க உருக்கள் செய்து பகவானுக்குச் சமர்ப்பிப்பது 'ஆள்ரூபம் சமர்ப்பித்தல்' எனப்படுகிறது.

குருவாயூரப்பன் குழந்தை வடிவில்அருள்பாவிக்கும் கண்ணனின் திருஉருவம். 'குருவாயூருக்கு வாருங்கள், குழந்தை சிரிப்பதை பாருங்கள்' என்று நாம் கேட்டும் பாடல் வரிகள் அக்குழந்தை சிரிப்பதைக் காணுகையில் எதிரொலிக்கின்றன.



## இருபத்தியெட்டு

# 28 கேரள மாநிலக் கண்ணன் திருக்கோயில்கள்

**கே**ரளத்தில் புகழ் பெற்ற கண்ணன் திருக்கோயிலான அருள்மிகு குருவாயூரப்பன் திருக்கோயில் தவிர்த்து வேறு பல கண்ணன் திருக்கோயில்கள் கேரள மண்ணில் உள்ளன. அவற்றில் பழமையும் சிறப்பும் மிக்கச் சிலவற்றைக் காணலாம்.

### நெய்யாற்றங்கரை நவ நீதகிருஷ்ணன் திருக்கோயில்

கேரளத்தில் நாகர்கோயிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில், தமிழகத்திற்கு அருகில் உள்ள திருக்கோயில் இத்திருக்கோயில் ஆகும். இவ்வூருக்கும் திருவட்டாறுக்கும் சுமார் முப்பத்தைந்து கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. இத்திருக்கோயிலின் வாயிலில் கீதோபதேசக் காட்சி சுதை வடிவில் அமைக்கப் பெற்றுள்ளது. நவநீத கிருஷ்ணன் சிறிய திருமேனியாய் எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோயிலில் தல விருட்சமாகப் பலா மரம் விளங்குகிறது.

### அனந்த பத்மநாபசுவாமித் திருக்கோயிலில் கிருஷ்ணன் கோயில்

திருவனந்தபுரம் அனந்த பத்மநாப சுவாமி ஆலயத்தின் வெளித்திருச் சுற்றில் ஸ்ரீ கிருஷ்ணன் திருக்கோயில் உள்ளது. இது அனந்த பத்மநாப சுவாமி திருக்கோயிலை விடப் பழமையானது.

### திருப்பாப்பூர் நவநீத கிருஷ்ணன்

திருவனந்தபுரத்திலிருந்து கொல்லம் செல்லும் சாலையில் ஸ்ரீ கார்யம் சந்திப்பிலிருந்து கீழக் கூட்டம் செல்லும் பாதையில் நான்கு

கிலோ மீட்டர் சென்று திரும்பினால் உள்ள திருக்கோயில் திருப்பாப்பூர் மகாதேவர் கோயில் ஆகும். இங்குள்ள சிவன் கோயில் சந்நிதிக்கு மேற்கே நோக்கியுள்ள திருச்சந்நிதியில் நவநீதகிருஷ்ணன் எழுந்தருளியுள்ளார். சங்கு, சங்கரத்துடன் வலக்கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு இடக்கையை இடுப்பில் ஊன்றியிருக்கிறார். மிக அழகான வடிவுடைய கண்ணன்ஆவர்.

## அம்பலப்புழை கிருஷ்ணசுவாமி கோயில்

அரிப்பாடு, மன்னார் சாலை ஆகிய ஊர்களுக்கு அருகில் உள்ள அம்பலப்புழை கிருஷ்ண சுவாமி திருக்கோயிலில் அருள்பாலிப்பவர் நவநீதகிருஷ்ணன் ஆவார். ஆலயத்தில் சீவேலி நடைபெறுவது இடையின்றி நடைபெறுகிறது. அம்பலப்புழையில் நாலைந்து யானைகளுடன் நடைபெறும் சீவேலியாகும் அது. அம்பலப்புழை கண்ணன் திருக்கோயில் பாயசம் ரொம்பவும் சிறப்பானது. ஆலயத்தில் சுவாமி சந்நிதியிலிருந்து கிடைக்கும் பாயசம் தனிச்சுவையும், மகிழ்வும் அளிக்கத்தக்கது.

## திருவம்பாடி வேணுகோபாலன் திருக்கோயில்

ஆலப் புழையிலிருந்து அனந்த நாராயனபுரம் திருக்குளத்தில் இருந்து சங்கணாச்சேரி செல்லும் வழியில் ஒன்றரை கிலோ மீட்டர் சென்று வலப்புறம் சென்று திரும்பினால் அமைந்துள்ளது திருவம்பாடி கிருஷ்ணன் திருக்கோயில் ஆகும்.

## மாவேலிக்கரை கிருஷ்ணன் கோயில்

மாவேலிக்கரையில் நவநீத கிருஷ்ணன் கோயில் உள்ளது. இந்த நவநீத கிருஷ்ணன் இரண்டு கைகளிலும் வெண்ணெய் வைத்துக் கொண்டிருக்கிறார். இவரை உன்னிகிருஷ்ணன் அல்லது குட்டி கிருஷ்ணன் என்று அழைப்பர்.

## திருப்புணித்துறை சந்தான கோபாலகிருஷ்ணன்

சோற்றாணிக் கரையிலிருந்து எர்ணாகுளம் செல்லும வழியில் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருப்புணித்துறை. இங்கு ஸ்ரீ சந்தானகோபால கிருஷ்ணன் திருக்கோயில் கொண்டிருக்கிறார்.

திருப்புணித்துறை அந்நாளைய கொச்சி அரசின் தலைநகரம். கொச்சி அரசு மரபினரின் குல தெய்வம் ஆவார். இத்திருக்கோயிலின்

கிழக்கு வாயில் கோபும் வண்ணம் தீட்டம் பெற்று விளங்குகிறது. ஆலயத்தின் முன் உயரமான கேரளத்துக் கிளை விளக்கு உள்ளது.

கிழக்கு வாயில் வழியாக நுழைந்தால் முதலில் யானை மண்டபம், பலிக்கல் மண்டபம், வணங்கும் மண்டம் அனைத்தும் சிறப எழிலுடன் விளங்குகின்றன.

திருக்கோயிலில் தெற்குச் சுற்றிலும் நுழைவாயில் ஒன்று உள்ளது. அவ்வாயிலை அரசு குடும்பத்தினர் மட்டுமே பயன்படுத்தினர்.

திருவைகுண்டத்திலிருந்து சந்தான கோபாலகிருஷ்ணனின் (சிலையை) திடம்பை அருச்சுணன் தன் அம்பறாத்தூணியான பூணியில் எடுத்து வந்ததால் 'பூணித்துறை' என்னும் பெயர் தோன்றியது எனவும் திருப்பூணித்துறை என்பதே திருப் புணித்துறையாக மாறியது எனவும் கூறுவர்.

இத்திருக்கோயில் தலபுராணம் சந்தான கோபால கிருஷ்ணனை அருச்சுணனால் பிரதிட்டை செய்யப்பெற்றவர் எனக் கூறும்.

அவ்வூரில் வாழ்ந்த ஒருவருக்கு ஒன்பது பிள்ளைகள் பிறந்து ஒவ்வொன்றாக இறந்துவிட அவர் கண்ணபிரானை மகவு அளித்துக் காக்க வேண்டினார். கண்ண பிரான் அருகிலிருந்த அருச்சுணன் பத்தாவது குழந்தையைக் காக்க உடன்பட்டுத் தன் சரக் கூடத்தால் அக்குழந்தையை எமன் கவர்ந்து செல்லாமல் காப்பாற்றினார். பின்னர் கிருஷ்ணனுடன் வைகுண்டம் சென்று. திருமாலிடமிருந்து இருந்த குழந்தைகளை மீட்டு வந்து சேர்ப்பித்தபோது நாராயணமூர்த்தி அருச்சுணனிடம் தன் சிறிய திரு உரு ஒன்றினை அளித்தார். அந்தத் திரு உருவினை எடுத்து வந்து குழந்தைகள் கிடைக்கக் காரணமான கிருஷ்ணனைக் குழந்தைப் பேறு கிடைக்கப் பெறாதவர்கள் வழிபடுவதற்குப் பிரதிட்டை செய்தார். இத்தல புராணக் கதை கருவறையைச் சுற்றி தீட்டப்பெற்றுள்ளது.

சந்தான கிருஷ்ணனைப் பிரதிட்டை செய்யத் தகுந்த இடம் பார்த்து அளித்திட விநாயகப் பெருமானை அனுப்பி வைத்தார்களாம். ஒவ்வோர் இடமாகத் தேடி வந்த விநாயகப் பெருமாள் தகுந்த இடம் அதுவெனத் தேர்ந்து அமர்ந்து விட்டாராம். கணபதி அங்கேயே இருந்ததைக் கண்டு கோபம் கொண்ட அருச்சுணன் அவரைப்பிடித்துத் தள்ளியதாகவும், அதனால் கணபதி தென்புறம் நகர்ந்து தென் திசை நோக்கி அமர்ந்தார் எனவும் கூறுகின்றனர்.

அந்தக் கணபதி கருவறையின் தென்புறம் வீற்றிருக்கிறார். கருவறையிலுள்ள ஸ்ரீ சந்தான கிருஷ்ணன் நாகாசனத்தில் வீற்றிருக்கிறார். கருவறைக்குப் பின் புறமுள்ள ஒரு சிறு பலகணி வழியாகத் தரிசிக்கலாம்.

ஸ்ரீ சந்தான கோபால கிருஷ்ணனுக்கு நல்லெண்ணெய் விளக்கு ஏற்றுவதே சிறப்பாகும். அருச்சுணன் சுவாமியைப் பிரதிட்டை செய்கையில், அப்பகுதியில் நிறைய எள்ளுச் செடிகள் இருந்ததால் அதிலிருந்து எண்ணெய் எடுத்து விளக்கு ஏற்றினான் என்பர். இத்திருக்கோயில் விளக்கு மை சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

திருப்புணித்துறை மூலவர் விக்ரகம் புதுமையானதாக இருக்கிறது. நாகாசனத்தில் திருமால் திருக்கோலம் கொண்டு விளங்குகிறார். மேல் இருகரங்களில் சங்கு சக்கரம் ஏந்தியிருக்கிறார். வலது கீழ்க்கையில் பத்மம் உள்ளது. இடக்கையை ஊன்றியபடி வலக் காலைக் குத்திட்டு இடக்காலைத் தொங்கவிட்ட வாறு அமர்ந்திருக்கும் திருக்கோலம் காண்கிறோம். பின்னால் நாகம் வந்து தலையுடன் குடைபிடித்துள்ளது.

கணபதியைத் தேடி வந்த அருச்சுணன் கோபமடைந்து அவரைத் தென்புறம் நகர்த்தி வைத்ததைப் பார்த்த அனுமானுக்குச் சிரிப்பு தாங்கவில்லை யெனவும், அதை நினைவு படுத்தும் வகையில் திருவிழாநாட்களில் சீவேலி நடக்கும்போது கோடங்கி வேடமிட்டு அனுமானின் மரத்தலையை வைத்து விளையாடுவார்கள் எனவும், இந்த விளையாட்டைப் பார்த்தால் குழந்தைகளைப் பிடித்துள்ள குறைகள் விலகி விடும் எனவும் கூறுவர்.

அருச்சுணனால் வைகுண்டம் சென்று மீட்டு வந்த குழந்தைகளின் பரம்பரையினர் எனப்படும் புலியனூர் தந்திரிகளின் பரம்பரையினரே திருப்புணித்துறை ஆலயத்தில் வழிபாடுகள் நிகழ்த்துகின்றனர்.

திருப்புணித்துறையில் கார்த்திகை மாதத்திய திருவிழா குறிப்பிடத்தக்கது. இத்திருக்கோயிலில் கண்ணபிரான் வில்வ மங்கள சுவாமியார் என்பவருக்குத் திருக்கேட்டை நாளில் தரிசனம் அளித்தாராம். கண்ணன் பாலகிருஷ்ணனாக ஒரு யானை மீதிருந்து மற்றொரு யானைக்குத் தாவி விளையாடினாராம். இந்த நாளின் நினைவாக அந்த நாள் விழாவிற்குத் திருக்கேட்டைப் புறப்பாடு என்பர்.

அந்நாளில் திருச்சந்நிதியில் வைக்கப்பட்டுள்ள தங்கக் குடத்தில் பக்தர்கள் ஏராளமாகக் காணிக்கை செலுத்துகின்றனர்.

இங்கு மூலவரின் பெயர் சந்தான கிருஷ்ணன் என்றாலும் அங்குக் கோயில் கொண்டிருப்பவர் திருமாலே ஆவார். மூல விக்கிரமாகத் திருமாலே காணப்படுகிறார்.

சந்தான கோபால கிருஷ்ணனை 'பூர்ணத் நயீசர்' என அழைக்கின்றனர். பிரம்மா, திருமால், சிவன் ஆகிய மூவரும் ஒருங்கிணைந்த சக்தியாக மூல விக்ரகத்தில் எழுந்தருளியிருப்பதால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். இத்திருக்கோயிலில் கணபதி தவிர வேறு எந்தத் தெய்வச் சந்நிதியுமில்லை.

கோயிலின் கருவறை வட்டமாக அமைந்துள்ளது. கருவறையைச் சுற்றி வெளிப்புறத்தில் பித்தளையில் தெய்வ வடிவங்களையும், புராண நிகழ்ச்சிகளையும் வடித்து வைத்துள்ளனர். அவை காண்பதற்கு அழகானவை.

பெரிய வடிவில் அமைந்துள்ள மூல விக்ரகம் பஞ்ச லோகத்தால் ஆனது. இது முதலில் சரியாகப் பொருந்தவில்லை யெனவும் பின்னர் அதனைச் செய்தவர் இறைவனிடம் வேண்டிக் கொள்ள அதன் பின்னரே நிறைவடைந்தது எனவும், அப்போது அதனை உருவாக்கிய விக்ரகத்துடன் அவர் ஐக்கியமாகி விட்டார் எனவும் கூறுவர். அதனால் இப்பிம்பத்தின் கண்திறக்கப்படாமலே உள்ளது. ஒவ்வோரு ஆண்டும் ஆவணி மாதம் இந்த நாளை ***மூசாரிநாளாகக்*** கொண்டாடுகின்றனர்.

இந்த பிம்பம் செய்த பிறகு எஞ்சிய உலோகத்தைப் பட்டுத் துணியில் மூட்டையாகக் கட்டிச் சுவாமியின் தோளில் தொங்க விட்டிருக்கின்றனர். பட்டுத்துணி கிழிந்துவிட்டால் வேறொரு துணியில் கட்டி வைக்கின்றனர். எப்போதாவது உலோகத்தைப் பரிசோதனை செய்ய நேர்ந்தால் இது உதவியாக இருக்கும் என்பதால் இந்த ஏற்பாடு என்பர்.

முன்பு இத்திருக்கோயிலில் தீ விபத்து ஏற்பட்டுக் கோயில் மரவேலைப்பாடுகள் எரிந்து போயின. மூலவரைப் பெயர்த்துச் செல்ல இயலாமல் உற்சவரை மட்டும் பாதுகாத்துள்ளனர்.

### *கண்ணங்குளங்கரா கிருஷ்ணன்கோயில்*

கண்ணன்குளங்கரை கிருஷ்ணன் கோயில் பரூர் கொரிய பள்ளி பாதையில் உள்ளது. கேரளத்திலுள்ள புகழ் பெற்ற கிருஷ்ணன் கோயில்களில் இதுவும் ஒன்று சங்கு, சக்கரம், கதா, பத்மம்

ஆகியவற்றுடன் பகவான் எழுந்தருளியுள்ளார். குருவாயூருக்கு நேர்ந்து கொண்டவர்கள் இங்குப் பிரார்த்தனையைச் செலுத்தலாம்.

## வடக்குநாதர் கோயில் கண்ணன்

திருச்சூரில் வடக்கு நாதர் கோயிலில் கூத்தம்பலத்தருகில் கோர்சாலை கிருஷ்ணன் திருச்சந்நிதி உள்ளது. அங்குப் பார்த்தசாரதியாகக் கண்ணன் எழுந்தருளியிருக்கிறார். ஒரு கையில் சவுக்கும் மற்றொரு கையில் சங்கும் கொண்டதோற்றம் இவருடையது.

## திருவம்பாடிக் கண்ணன்

திருச்சூர் வடக்குநாதர் கோயிலின் வடபுறத்தில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் திருவம்பாடிக் கண்ணன் திருக்கோயில் உள்ளது. இங்கும் கண்ணன் தேரோட்டியாகப் பார்த்தசாரதியாகக் கையில் சங்கும், சாட்டையும் கொண்டு எழுந்தருளியிருக்கிறார். ஆயினும் அவரைப் பாலகிருஷ்ணனாகவே வழிபடுகின்றனர்.

கிருஷ்ணரின் கருவறையைச் சுற்றிச் சுவரின் வெளிப்புறத்தில் கிருஷ்ண லீலாச் சித்திரங்கள் தீட்டப் பெற்றுள்ளன. இந்த ஓவியங்களில் கண்ணனின் விளையாட்டுக் கோலம் அழகுற விளங்குகின்றது.

## காலடிக் கண்ணன்

சங்கரர் அவதரித்த திருத்தலமாம் காலடியில் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் ஒன்று உள்ளது. இக்கிருஷ்ண விக்ரகத்தை அமைத்துக் கொடுத்தவர் பகவத் பாதாள் எனவும், தன் அன்னையில் ஆராதனைக்காக அமைத்துக் கொடுத்தார் எனவும் கூறுவர் குருவாயூரப்பனைப் போன்ற தோற்றம் உடையவர் இவர்.

சங்கரர் தன் தாயின் பொருட்டுத் தேனினிய கிருஷ்ணாஷ்டகம் பாடினார்.

## கேரளத்தப்பன்

பாலக்காட்டிலிருந்து திருசூர் செல்லும் பாதையில் கொடுவாயூர் என்றும் ஊரில் மிகப் பழமையான கிருஷ்ணன் கோயில் உள்ளது. இக்கிருஷ்ணனுக்குக் கேரளத்தப்பன் என்று பெயர். ஆலயம் கொடுவாயூரிலிருந்து அரைகிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

## தொடு புழா கிருஷ்ணன்

எர்ணாகுளம் மாவட்டத்தில் மூவாட்டுப் புழா அருகில் உள்ள தொழுபுழா கிருஷ்ணன் கோயில் புகழ் பெற்ற கோயிலாகும். ஆதிசங்கரரின் நான்கு சீடர்களில் ஒருவரான தோடகாசாரியார் நிறுவிய வடக்கே மடத்தைச் சேர்ந்த நம்பூதிரித் துறவி ஒருவர் வட கேரளத்திலுள்ள தளி பரம்பாவிலிருந்து தொடுபுழாவில் வந்து தங்கியபோது ஆற்றங்கரையில் தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது சுவாமி பாலகிருஷ்ணனாக அவருக்குத் தரிசனம் தந்தார்.

துறவியைப் பார்த்துப் பசிக்கிறது என்ற பாலகிருஷ்ணனுக்கு, அந்த இடத்தில் விளக்கு ஏற்றி அரிசிச் சோற்றை நிவேதனமாகப் படைத்தார். அப்போது முதல் நைவேத்தியம் படைக்க வெங்கலத்தினாலான ஒரு பீடம் பயன்பட்டு வந்ததனை இன்றும் கருவறையில் காணலாம். இக்கோயில் நைவேத்தியம் ஆன பின்னரே நிர்மால்ய தரிசனம் அபிஷேகம், பூஜை எல்லாம் நடைபெறுகிறது.

இக்கோயில் ஸ்ரீ கிருஷ்ணன் பட்சி ஒன்றின் அலகைக் கிழிப்பது போல் ஓவியம் ஒன்று உள்ளது. குழந்தைகள் பட்சி தோஷம் நீங்குவதற்காகப் பிரார்த்தனை செய்து கொள்வதுடன், அதற்காகப் பட்சி போல் சிறு சிறு விக்ரகங்கள் செய்து போடுகின்றனர்.

## மீன்குளம் கிருஷ்ணன் கோயில்

காசர் கோட்டிற்கு அருகில் காஞ்சங் காட்டிலிருந்து வையனூர் முப்பத்து நான்கு கிலோ மீட்டர். அங்கிருந்து நெடுஞ்சாலையில் பன்னிரண்டு கல் சென்றால் 'பிலாத்ரா' எனும் இடம் வரும். அங்கிருந்து பதினாறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது மீன் குளம். பையனூரிலிருந்து ஒலயம்பாடி செல்லும் பேருந்துகள் மீன்குளம் செல்லுகின்றன.

ஆரவாரங்களற்ற இடத்தில், பேரெழில் பூத்துக் குலுங்கும் நந்தவனத்தில் கண்ணபிரான் கொலுவீற்றிருக்கிறார்.

இந்தக் கண்ணன் வில்வ மங்க சுவாமியாரால் பிரதிட்டை செய்யப் பெற்ற கண்ணன் ஆவார். வில்வ மங்கள சுவாமியாருக்கு, கண்ணன் பால லீலைகள் புரிந்த யமுனையின் கரையில் அவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தபோது நவநீதகிருஷ்ணன் தரிசனம் கொடுத்து மறைந்து விட்டாராம்.

அப்போது அலைகளின் மீது கண்ணை ப்பறிக்கும், ஒளியொன்று தோன்றிட அதில் ஈர்க்கப் பெற்று சுவாமி நதியில் மூழ்கி எழுந்த போது மூன்று அழகிய கிருஷ்ண விக்ரகங்கள் கிடைத்தனவாம். அவற்றை விக்கிரகங்களாகக் கருதாமல் பாலகிருஷ்ண மூர்த்தியாகவே நினைத்துப் பூரித்துப்போனார். 'பரசுராம தலத்திற்கு எங்களை எடுத்துச் செல்லுங்கள்' என்று தம்மைப் பார்த்து விக்ரகங்கள் கூறியது போல அவருக்கு ஓர் அசரீரி கேட்டதும் கேரளத்திற்கு வந்து சேர்ந்தார்.

பையனூர் சுப்பிரமணிய தலத்திலிருந்து சுமார் பத்து மைல் வடகிழக்கில் ஓரிடத்தில் இயற்கையமைதியின் திருக்கோலத்தைத் தரிசித்த வில்வமங்கல சுவாமியார் அவ்விடத்துக்கு அருகில் ஒரு கிருஷ்ண விக்ரகத்தைப் பிரதிட்டை செய்தார். கோயில் ஒன்று அமைத்தார். அக்கோயில் இரு திருச்சுற்றுகளுடன் விளங்குகிறது. கிழக்குத் திருச்சுற்றில் பலிபீடம் உள்ளது. கருவறை முன் நமஸ்கார மண்டபம் எனப்படும் மண்டபம் உள்ளது.

வில்வமங்க சுவாமியார் கிருஷ்ணனைப் பிரதிட்டை செய்துவிட்டுத் திருமுழுக்குச் செய்யத் திருக்குளம் இல்லையே என்று குறைபட்டுக் கொள்ளவே, கிருஷ்ண பகவானே பாறையின்மீது தன் காலை ஊன்றி, ஒரு சுற்றிச் சுற்றி ஒரு குளத்தை ஏற்படுத்தினார் என்கின்றனர். கோயிலுக்குத் தென்கிழக்கே வட்ட வடிவில் குளம் ஒன்று படிக்கட்டுகள் இல்லாமல் உள்ளது. இக்குளத்தின் கீழே கண்ணனின் திருவடி இருப்பதாகக் கூறுவர். குளத்தை உருவாக்கிய பகவானே, புதுவகை மீன்களையும் அக்குளத்தில் உண்டாக்கியதாக வழங்குகிறது.

மீன் குளம் கிருஷ்ணன் கோயிலில் மகரத் திருவோணத் தன்று பக்தர் கூட்டம் நிரம்பி வழியும், கல்யாணங்களும், குழந்தைகளுக்கு அன்னம் ஊட்டும் சடங்கும். இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. ஐந்தாவது கிலோ மீட்டரில் குட்டூர் எனும் ஊரில் ஒரு சிறு கிருஷ்ணன் கோயில் உள்ளது.

## செருகுன்னு ஸ்ரீ கிருஷ்ணன் கோயில்

**செருகுன்று அன்னபூரணி ஆலயத்தில் ஒரு மதிற் சுவருக்குள் இரண்டு தனித் தனிக் கோயில்கள் உள்ளன. தென்புறம் கிருஷ்ணன் கோயில், வடப்புறம் ஸ்ரீ அன்னபூரணியின் திருச் சந்நிதி உள்ளது. இந்த இரண்டுகோயில்களையும் சுவர் ஒன்று பிரித்தாலும், அன்ன பூரணி கோயிலிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலுக்குச் செல்ல அந்தத் தடுப்புச்**

சுவரிலேயே வழியுள்ளது. கிருஷ்ணன் கோயில் உள்ள பகுதியைக் கண்ணபுரம் கிராமம் என்றழைப்பர். அன்னபூரணி இருப்பது செருகுன்னு கிராமம்.

கிழக்குப்புறமுள்ள நுழைவாயிலின் வழியாக வெளித் திருச்சுற்றை அடைந்தால் பலிபீடமும், அதற்கு நேரே, கிழக்குப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணனின் திருச்சந்நிதியுமுள்ளது.

மூன்றடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் சங்கு, சக்கர, கதை, பத்மம் கொண்டு கண்ணபிரான் அருள் பாவிக்கிறார்.

கருவறை எதிரில் நமஸ்கார மண்டபம், அதன் உட்புரத்தில் சிற்பச் சிறப்புக்கள் ஏராளமாக உள்ளன. பாற்கடலைக் கடையும் காட்சி, ராட்சச்சன மோகினியிடம் கள்ளத்தனமாக அமிர்தம் பெறுவது ஆகியன எழிலுடன் கடைந்து செய்யப்பெற்றுள்ளன. கிருஷ்ணன் உயிர் பெற்று உலவுவது போன்ற தோற்றம். பின் திருச்சுற்றில் பின்புறச் சுவரில் வண்ண ஓவியங்களைக் காண்கிறோம்.

## திருச்சம்பரம் கிருஷ்ணன் கோயில்

தளிப்பரம்பா என்றும் ஊர் கண்ணனூர் நெடுஞ்சாலையில் பையனூரிலிருந்து இருபத்தோரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தளிப்பரம்பாவிலிருந்து இரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருச்சம்பரம் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் ஆகும்.

திருச்சம்பரம் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் திருச் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அதன் உள்ளே நுழைகையில் வாதில் மாடம் உள்ளது. தெற்கு உள் சுற்றில் மேற்குப் பார்த்துப்பகவதியும் வடக்குத் திருச்சுற்றில் விசுவக் சேனரும் எழுந்தருளியுள்ளனர்.

கருவறை மண்டபத்தில் அடித்தளம் கருங்கல் கட்டடம் அமைந்துள்ளது. அதற்கு மேல் வெட்டுக் கல் அமைப்பு உள்ளது. விமானம் இரு நிலைகளுடன் உள்ளது. விமானத்தைச் சுற்றிலும் கிருஷ்ண லீலை பொம்மைகள் உள்ளன.

ஸ்ரீ கிருஷ்ணன், கம்ச வதத்திற்குப் பிறகு இங்கே திருக்கோயில் கொண்டதாக நம்புகின்றனர். இடக்கையில் கதையும், வலது கையில் சக்கரமும் வைத்திருக்கிறார்.

திருச்சம்பரம் கிருஷ்ணனையும், செருகுன்னு அன்னபூரணி ஆலயத்தையும் தொடர்பு படுத்திக் கதை ஒன்று வழங்கி வருகிறது.

கிருஷ்ணன் மீது அன்னபூரணி பிரேமை கொள்ளக் கிருஷ்ணன் தன் சொத்துக்களையும் ஒவ்வொன்றாக இழந்துவிட்டாராம். கிருஷ்ணன் ஓட்டம் பிடித்து, பின்புறம் வழியாகத் திருச் சம்பரம் ஆலயத்தில் போய்ப் புகுந்து கொள்ளவே, அன்னபூரணி கிருஷ்ணனை இப்படிச் செய்யலாமா என்று மனம் வருந்திக் கேட்டதால் கிருஷ்ணன் விஷு உற்சவத்தின்போது செருகுன்னு கோயிலுக்கு மரியாதை அனுப்பி வைப்பதாக வாக்களித்தாராம். இன்றும் இரண்டாவது நாள் உற்சவத்திற்கு திருச்சம்பரம் ஆலயத்திலிருந்து யானைகளும் பிற மரியாதைகளும் செருகுன்னு ஆலயத்திற்கு அனுப்புகின்றனர்.

## கடலாயி கிருஷ்ணன் கோயில்

தளி பரம்பாவிலிருந்து கண்ணனூர் செல்லும் வழியில் பதினாறாவது கிலோ மீட்டரில் பாலியா பட்டணம் என்றும் ஊரிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கடலாயி கிருஷ்ணன் கோயில் உள்ளது.

மேற்குப் புறம் கோயில் நுழைவாயில் உள்ளது. குருவாயூர் போலத் திண்ணையுடன் கூடிய அழகான அமைப்பு. படிகள் ஏறிச் சென்று தரிசிக்க வேண்டும். கிழக்கு வடக்குப் புறங்களிலும் நுழை வாயிலும், சுற்றிலும் உயர்ந்த மதில் சுவருடன் கூடிய அமைப்பு, இக்கோயிலுக்கு நான்கு திருச்சுற்றுகள்.


சிறு வாயிற்படியாக நுழைந்து உள் திருச்சுற்றில் சென்றால் திருச்சுற்றைத் தூற்றித் திண்ணை உள்ளது. கருவறையில் இரண்டு கைகளிலும் வெண்ணெயை வைத்துக் கொண்டு பகவான் கண்ணன் தரிசனம் தருகிறார். இரண்டடி உயரமுள்ள வெகு அழகிய உருவம் அது. சீவேலி உற்சவ மூர்த்தியும் அழகுடன் விளங்குகிறது. மூன்று கால பூஜையும், மூன்று வேளையும் சீவேலி உண்டு.

கடலாயி கோயில் சந்நிதியில் அநேகமாகத் தினமும் திருமணங்கள் நடைபெறுகின்றன.

கோயிலுக்கு வெளியில் பெரிய குளம் உள்ளது. கிருஷ்ணன் கோயில் புதுமைக் கோலத்துடன் விளங்குகிறது.

இவ்வாறு கேரள மாநிலத்தில் தனித்தனியாக கண்ணன் கோயில்களும், சிவன் ஆலயங்களிலும் தனிச்சந்நிதிகளாகக் கண்ணன் கோயில்களான உள்ளன. திருமால் கோயில்களை, கிருஷ்ணன் கோயில் என்றே பல ஊர்களில் அழைக்கின்றனர்.

ஆனால் கிருஷ்ணாவதாரக் கோலத்துடன் கையில் வெண்ணெய் உருண்டை, கதையுடன் விளங்கும் கண்ணனைக் கேரள மண்ணில் காண்கின்றோம்.



## இருபத்தொன்பது

# 29. பூரி ஜெகந்நாதர்

## மலையான கண்ணன்

புருஷோத்தமபூரி, நீலசால், நீலகிரி, ஸ்ரீ ஷேத்ரா, சங்க ஷேத்திரா, புருஷோத்தமதாம், புருஷோத்தம் ஷேத்திரா, ஜெகநாதம் என்று பல பெயர்களில் வழங்கப்பெற்ற திருத்தலத்திற்கு இப்பொழுது பூரி என்னும் பெயர் வழங்குகிறது.

கண்ணன் திருக்கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிச்சிறப்பு உள்ளது. பூரி என்றவுடன் இந்திய மண்ணில் உள்ளவர்கள் மட்டுமல்லாது, இந்தியாவை நினைப்பவர்கள் நினைவில் நிழலாடுவது பூரி ஜெகநாதர் திருக்கோயில் தேர்த்திருவிழா.

அடுத்து நினைவில் நிழலாடுவது ஆதிசங்கர பகவத் பாதாள் என்னும் திருப்பெயர். அந்தப் பெருமுனிவரின் திருப்பாதங்கள் பட்ட புண்ணிய பூமி அது. ஆதிசங்கர மகான் நிறுவிய திருமடங்களில் பூரியும் ஒன்று.

அந்தப் பூரியில் கோயில் கொண்டுள்ள பகவான் பூரி ஜெகநாதர் கோயிலைத் தரிசனம் செய்யாமல் இந்தியாவில் எந்தத் திருத்தலத்திற்குப் புனிதப் பயணம் மேற்கொண்டு வந்தாலும் அவர்களுக்குப் புனித மோட்சம் கிடையாது, அவர்களின் புனிதப் பயணம் நிறைவடையாது என்பது பல்லாண்டு நம் மண்ணில் அழியாத நம்பிக்கை.

ஒரிசா மாநிலத்திலிருந்து உலகைக் கவர்ந்த பூரித் திருத்தலம், புவனேசுவரத்திலிருந்து 63 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கல்கத்தாவிலிருந்து கோரம்பூர் வழியாகப் பூரியை அடையப் புகை வண்டிகள் உள்ளன. கல்கத்தாவிற்கும் பூரிக்கும் 384 கிலோ மீட்டர்

தூரம் உள்ளது. சென்னையிலிருந்து கல்கத்தா சென்று, கல்கத்தாவைச் சுற்றிப் பார்த்துப் புவனேசுவரம் சென்று பூரி செல்லலாம். கல்கத்தாவிலிருந்து புவனேசுவரத்திற்கு இராஜதானி எக்ஸ்பிரஸ் வாரத்தில் இரண்டு நாள் திங்கள், வெள்ளிகளில் காலை புறப்பட்டு மாலை செல்கிறது. பேருந்து வாயிலாகவோ, புகைவண்டி வாயிலாகவோ பூரியை அடையலாம்.

பூரி புகழ் பெற்ற தலம் ஆதலால் தங்குமிடங்களுக்குப் பஞ்சமில்லை. சத்திரங்கள், தங்குமிடங்கள் உள்ளன.

ஒரிசா மாநிலத்தின் இதயத்துடிப்பாக விளங்குகிறது பூரி ஜெகநாதர் திருக்கோயில்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் முதலில் இந்தத் திருக்கோயிலை ஒரிசாவை ஆண்ட **இந்திரத்யும்னா** எனும் மாளவ அரசர் கட்டினார். இக்கோயில் கடல் கோளினால் அழிந்து விட்டது. பிறகு பத்தாம் நூற்றாண்டில் கடலில் அழிந்து போன இந்தக் கோயிலை 'யாத்தி கேசரி' எனும் அரசர் புதுப்பித்தார். கி.பி.1135-ல் கலிங்கத்தை ஆண்ட ஷோடக்காதேவ் எனும் அரசர் இத்திருக்கோயிலைப் புதுப்பித்தார்.

## *பரப்பு*

பூரி ஜெகந்நாதர் திருக்கோயில் 4,20,000 அடிச் சுற்றளவு உடையது. இத்திருக்கோயிலின் கோபுரம் கலிங்கத்துப் பாணியில் அமைக்கப்பெற்றுள்ளது. அந்தக் கோபுரத்தின் ஒவ்வோர் அடுக்குக் கற் சுவர்களும் நுண்ணிய கலை வேலைப்பாடுகள் உடையன. கோபுரத்தின் உயரம் 214 அடி 8 அங்குலம். ஓரிசாவிலேயே மிக உயரமான கோபுரம் இத்திருக்கோயில் கோபுரமேயாகும்.

இக்கோயிலுக்கு இரண்டு சுவர்கள் உள்ளன. அச்சுவர்களில் ஒன்று 202.69மீட்டர் நீளமும் 196.29 மீட்டர் அகலமும், ஆறு மீட்டர் உயரமும் உடையது. மற்றொரு சுவர் 128 மீட்டர் நீளமும், 96 மீட்டர் அகலமும் உள்ளது. இக்கோயிலுக்கு நான்கு வழிகள் உள்ளன. கிழக்குப்பக்கம் நுழைவாயிலுக்குச் சிங்க நுழைவாயில் எனவும், மேற்குப் பக்க வாயில் புலிவாயில் எனவும், தெற்குப் பக்க வாயில் குதிரை வாயில் எனவும், வடக்குப் பக்க வாயில் யானை வாயில் எனவும் அழைக்கப் பெறுகின்றன.

இக்கோயிலுக்குள் முதன்மை வழியான சிங்க நுழைவாயில் வழியாகத்தான் உள்ளே நுழைய வேண்டும். வாயிலின் இரு பக்கங்களிலும் மிகப் பிரம்மாண்டமான சிங்க உருவச்சிலைகள் இருக்கின்றன.

## *கண்ணன் உறவினர்*

பூரி ஜெகநாதர் திருக்கோயில் கண்ண பெருமானின் சொந்தக் குடும்பத்தவருடன் விளங்கும் கோயில். கண்ணனைப் பாமா, ருக்மணி சகிதம் கண்டு தரிசித்த நாம் கண்ண பெருமானை வித்தியாசமானவர்களுடன் தரிசிக்கிறோம்.

ஜெகந்நாதர்தான் பகவான் கண்ணபெருமான். இவருடைய சகோதரர் பாலபத்ரா. இவருடைய சகோதரி சுபத்ரா. ஆக இத்திருக்கோயிலில் ***ஜெகநாதர், பால பத்ரா, சுபத்ரா*** ஆகிய மூவரும் வழிபாட்டுக் குரிய இறை வடிவங்களாக விளங்குகின்றனர்.

எனினும் இந்தக் கோயிலில் 30 இடங்களில் முப்பது வகையான தெய்வங்களின் கோயில்கள் உள்ளன. அவற்றில் விமலா, இலக்குமி கோயில்கள் சிறப்புடையவை.

## *திருக்கோயில்*

இத்திருக்கோயில் இருந்த இடத்தில் மிக அதிசயமாக நீல நிறக் கற்களைக் கொண்ட மலையொன்று இருந்ததாகவும் அதனால் கண்ணபெருமானே இந்த மலையாக இருப்பதாக எண்ணி ஜெகநாதர் கோயிலை எழுப்பினார்.

மூலவர்கள் இத்திருக்கோயிலில் ஒரு வேறுபாடான தோற்றத்துடன் விளங்கக் காணலாம். அவர்கள் உருவத்தைக் காணுகையில் கதக்களி வேடமிட்ட உருவங்கள் போல், அல்லது பொருள் புரியா அரிதான நவீன ஓவியங்கள் போல் உருக் கொண்டு உள்ளனர்.

## *ஐந்து வேளை*

இத்திருக்கோயிலில் தினமும் ஐந்து வேளை வழிபாடு நடக்கிறது. ***கோபால வல்லப தூப், இராஜகோபாதூப், மத்தியான தூப், சந்தியா தூப், பாட சிங்கா தூப்*** என அந்த ஐந்து வேளை பூஜைகளையும் அழைக்கின்றனர். இந்த ஐந்து வேளை பூஜைகளைத் தவிர வியாழக்கிழமை, அமாவாசை, சங்கராந்தி, ஏகாதசி ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடுகளும் மிகச்சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

இரவு 10 மணிக்குத் தினமும் நடைபெறும் பூஜை ***பாடசிங்கன்தூப்*** பூஜையாகும். இப்பூஜையின் போது மூலவர்கள் மூவருக்கும் புதுப்புது மலர்கள், புதிய புதிய பட்டுத்துணிகளாலும் மிகச்சிறப்பாக அலங்கரிக்கின்றனர். அப்போது கீதையிலிருந்து கீதாவரிகளைப் படிப்பர்.

பிறகு இரவு 11.30 மணிக்கு விதவிதமான கேக், பாதாம்கீர், கஞ்சி அரிசிச்சோறு, தயிர் என நைவேத்தியம் நடைபெறுகிறது. பிறகு மூன்று கட்டில்களைக் கோயிலின் கருவறைக்குள் கொண்டு வந்து பூக்களால் அலங்கரிக்கின்றனர். இளநீர் நைவேத்தியம் செய்வர். இறைவனை உறங்க வைக்க இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஜெகநாதப்பெருமாள் அலங்காரப் பிரியர். எனவே ஒவ்வொரு நாளும் அழகு படுத்தியவாறே தோற்றமளிப்பார். பனாரஸ் பட்டு, காஞ்சிப் பட்டு, கைத்தறி நூலாடை, எல்லாவற்றையும் விதவிதமாக அணிவார்.

தினமும் இரவு 10 மணிக்கு மலர்களால் ஆன ஆடையினைக் குறிப்பிட்ட மாதங்களில் அணிந்து காட்சி தருவார். தாமரைப்பூவால் ஆடை அணிவதும் உண்டு. தேர்த்திருவிழாவில் ஒன்பதாம் நாளன்று தங்க நகைகளால் ***'சொர்ண வேஷா'*** எனும் ஆடையும், வைகாசிப் பவுர்ணமியன்று ***ஹதி அலங்கார்*** எனப்படும் யானை அலங்காரமும், கிருஷ்ண பலராம அலங்காரம், காளிங்கநர்த்தன அலங்காரம், பிரகலாதன் அலங்காரம், வன போஜன அலங்காரம், மோகினி அலங்காரம், நவரத்தின அலங்காரம், அரிஅரன் அலங்காரம், இரகுநாத அலங்காரம், கஜ மோட்ச அலங்காரம், லட்சுமி நரசிம்ம அலங்காரம், பரசுராம அவதார அலங்காரம் என ஆண்டு முழுவதும் பல்வேறு அலங்காரங்கள் செய்தனர்.

## விழாக்கள்

மிகவும் சிறப்பாக 62 விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. 'டோலோயா' எனப்படும் திருவிழாவின் போலி ஹோலிப்பண்டிகை கொண்டாடுவது போல் கலர்ப்பொடியால் அலங்காரம் செய்து கண்ணபெருமானை வெளியே கொண்டு வருவார்கள்.

தெப்பத்திருவிழா ஏப்ரல் மாதத்தில் நடைபெறுகிறது. இவ்விழா 2 1/4 நாள்கள் நடைபெறுகிறது. தெப்பத்திருவிழா மிக அழகான விழா.

சந்தனக் காப்பும் குறிப்பிடத்தக்கது. வைகாசி விசாக தினத்தில் புனித நதிகளிலிருந்து புனித நீர் கொண்டு வந்து திருமுழுக்கு நடைபெறும். இந்தத் திருமுழுக்கு நாளுக்கு ஒரு சிறப்பு உண்டு. அந்நாளில் கண்ண பெருமானைத் தொட்டு வணங்கலாம்.

ஒவ்வோர் ஆண்டும் ஜுன், ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் பெருமாளும், திருமகளும் ஜுவான் மண்டபத்திற்கு எழுந்தருளுவர். அப்போது நடனம், இசை நிகழ்ச்சிகள் என அமர்க்களப்படும். அப்போது அன்பர்களின் வேண்டுதல்கள் நிச்சயமாக நிறைவேறும் என்பது நம்பிக்கை.

### தேர்

பூரியில் நடைபெறும் விழாக்களிலே மிக, மிகக் குறிப்பிடத் தக்க விழா தேர்த்திருவிழா தான். இத்தேர்த்திருவிழா மற்றையத் தேர்த் திருவிழாவினின்றும் மாறுபட்ட ஒன்று. ஜெகநாதர் பிறந்ததாகச் சொல்லப்படும் குண்டிசஹாரா எனும் சிற்றூர் பூரியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது.

இவ்வூருக்கு ஜெகநாதர், பாலபத்ரா, சகோதரி சுபத்ரா ஆகிய மூவரும், அதாவது தங்கள் சொந்த மண்ணிற்குத் தனித்தனித் தேரில் சென்று ஏழு நாள்கள் அங்குத் தங்கிப் பிறகு திரும்பி வருவதாக ஐதீகம். அதன் பொருட்டு இவ்விழா நடைபெறுகிறது.

இந்தத் தேர்விழாவான இரத யாத்திரையை ***'குண்டிசயாத்ரா', 'கோசயாத்ரா' 'நவதினயாத்ரா' 'தசாவதார யாத்ரா'*** எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர்.

ஜெகநாதர் தேரை ***நந்தி கோஷா*** என்று அழைக்கின்றனர். அது 45 அடி உயரமும் 45 அடி சதுரமும் கொண்டது. இத்தேருக்குப் பதினாறு சக்கரங்கள் உள்ளன. ஒவ்வொரு சக்கரமும் ஏழு அடி விட்டம் கொண்டதாகும். சிவப்பு, மஞ்சள் துணிகள் மேலிருந்து கீழாக மூடப் பெற்றுக் காட்சியளிக்கும்.

பாலபத்ரா, தேர் ***'தலத்வாஜா'*** என அழைக்கப் பெறுகின்றது. இந்தத் தேர் 44 அடி உயரம் கொண்டது. 14 சக்கரங்களைக் கொண்டது. ஒவ்வொன்றும் 7 அடி விட்டம் உள்ளது. சிவப்பு நீல நிறதுணிகளால் தேர் அலங்கரிக்கப் பெற்றிருக்கும்.

சுபத்ரா தேருக்கு தர்பதலனா என்று அழைக்கப்படுகிறது. தேர் 43 அடி உயரம் உடையது. 12 சக்கரங்களைக் கொண்ட அதன் ஒவ்வொரு சக்கரமும் ஏழு அடி விட்டம் உடையது. இத்தேர் கறுப்பு, சிவப்பு நிறத்துணிகள் போர்த்தப் பெற்றிருக்கும். கறுப்பு நிறம் சக்தி, காளி தேவியைக் குறிப்பது.

ஒவ்வொரு தேரைச் சுற்றிலும் மரத்தால் ஆன ஒன்பது வகையான 'பார்சவ தேவாஸ்' என அழைக்கப் பெறும் குட்டி தேவதைகளும் ஊர்வலத்தின் போது அழைத்து வரப்படுகின்றன. ஒவ்வொரு தேரும் நான்கு மரக் குதிரைகளால் இழுப்பது போல வடிவமைக்கப் பெற்றுள்ளன. அவை ஒன்றும் பல்வேறு வண்ணங்களில் இருக்கும். ஜெகநாதர் குதிரை கறுப்பு நிறக் குதிரைகளும், பாலபத்ரா தேரை வெள்ளை நிறக் குதிரைகளும், சுபத்ரா தேரைப் பழுப்பு நிறக் குதிரைகளும் இழுத்துச் செல்லும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு தேருக்கும் ஒரு பொம்மைத் தேரோட்டியும் உண்டு.

இம்மூன்று தேரோட்டிப் பொம்மைகளும் ஜெகநாதர், பாலபத்ரா, சுபத்ரா தேர்களுடன் இணைக்கப் பெற்றுள்ளன. இவர்களை மதலி, தருகா, அருச்சுணர் என அழைப்பர். வைகாசிப் பவுர்ணமிக்கு மூன்றவது நாளில் அக்ஷய திருதிய தினத்தில் புனிதத் தீ வளர்த்துத் தேரை உருவாக்குவர். பூரி அரசர் அரண்மனை மூன்றும், பூரிகோயிலின் அலுவலகத்துக்கு எதிரிலேயும் இப்பணி நடக்கிறது. அப்போது அறுவடை தொடங்கும் நாட்களாக இருக்கும் மூன்று வார **சந்தன யாத்ரா** எனப்பெறும் சந்தன மர விழா தொடங்கும் நாளாக அமையும்.

உற்சவர்கள் இந்த நாளில் ஊர்வலமாக எடுத்து வரப்படுவர். தினமும் நரேந்திரா குளத்தில் படகுச் சவாரி உண்டு. பின்னர் குளத்தின் மையத்தில் உள்ள கோவிலில் இந்த உற்சவர்களுக்குப் புனித நீராட்டு நடைபெறும். சந்தன மர விழாக் குளியல் விழா எனவும் அழைக்கப் பெறும் முழு பௌர்ணமி நாளில்தான் இந்த விழா நடைபெறும். தங்கக் கிணற்றிலிருந்து 108 குடங்களில் புனித நீர் கொண்டு வரப்படும். இவ்விழாவின் இரண்டு வாரங்கள் பிணியிலிருந்து நலம் பெறப் புனிதச்சடங்குள் நடைபெறும்.

இரத யாத்திரை வழக்கமாக ஜூன் மாதங்களில் நடை பெற்ற போதிலும் சில ஆண்டுகள் ஜூலையில் நடைபெறும். முதல் தேராக

வருவது பாலபத்ரா தேர். இரண்டாவது வருவது சுபத்ராவின் தேர். இறுதியாக வருவது ஜெகநாதர் தேர் ஆகும்.

முன்பு ஆறு தேர்கள் ஓடின. இப்போது மூன்று தேர்கள் மட்டுமே ஓடுகின்றன. ஒன்பதாவது நாள் திரும்பும் நாளாகும். அந்நாளை ***பஹீதயாத்ரா*** எனச் சிறப்புடன் கொண்டாடுவர். ரத யாத்திரை முடிவில் விலை மதிப்பிலா வைர, வைடூரிய அணிகலன்களால் இறைவர்களை அலங்கரித்து ஆலயத்தில் வைப்பர். இக்காட்சி கண்ணுக்கு விருந்து.

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத் தொடக்கத்தில் பூரி கடற்கரை விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. கண்ணனின் புண்ணிய பூமிகளில் கலையழகு கூட்டும் பூரி பூமியும் ஒன்று.

முப்பது

# 30. கோபாலபுரம் ஸ்ரீ வேணுகோபால சுவாமி (சென்னை)

சென்னை நகரில் இருப்பவர்களுக்குக் கோபாலபுரம் என்றால் தெரியாமல் இருக்க முடியாது. பெசண்ட் சாலைக்கும், கத்தீட்ரல் சாலைக்கும் நடுவில் சோழா ஓட்டலுக்கு அருகில் கோபாலபுரம் உள்ளது. ஸ்ரீ வேணுகோபால சுவாமி திருக்கோயில் பல வகையிலும் வித்தியாசமான கோயில்.

கோவிலுக்கு எதிரிலேயே வாயிலிலேயே தி.மு.க. தலைவரின் இல்லம், கோவிலுக்கு வடபுறம் மத்திய அமைச்சர் இல்லம் என்று இருப்பினும் வழிபாடுகள், கச்சேரிகள், வேள்விகள் என்று எதுவும் குறைவின்றி நடைபெறும் இக்கோயில் சென்னை நகருக்கு ஒரு புதுமை.

பெசண்ட் சாலையில் இறங்கினால் கோபாலபுரம் நான்காவது தெருவில் நேர் எதிரே இத்திருக் கோயிலைக் காணலாம். அல்லது ஸ்டெல்லா மேரிக் கல்லூரி எதிரில் உள்ள தெரு வழியாகவும் அல்லது சோழ உணவு விடுதி எதிரேயும் வரலாம். பார்ப்பதற்கு வெளியில் இருந்து காணுகையில் சிறிய கோயிலைக் காணுவது போலத் தோன்றலாம். ஆனால் உள்ளே நீண்டு கொண்டு செல்லும்.

வாசலில் நின்று பார்த்தாலே வேணுகோபால சுவாமியில் எடுப்பான தோற்றம் தெரியும். இத்திருக்கோயில் இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் எழுந்த திருக்கோயிலாகும்

இத்திருக்கோயிலை நிறுவியவர்கள் கோபாலபுரம் இந்து சமயச் சங்கம் என்னும் பதிவு செய்யப் பெற்ற அமைப்பினர். கோபாலபுரம்

என்னும் புதிய குடியிருப்பு உருவானபோது இப்பகுதியில் இருந்தவர்கள் தங்கள் வழிபாட்டிற்குத் திருமயிலைக்கோ அல்லது திருவல்லிக்கேணிக்கோ செல்ல வேண்டியிருந்தது. அருகில் ஆலயம் ஏதும் இல்லை. எனவே தங்களுக்குள் சங்கம் ஒன்றை அமைத்து அறக்கட்டளையாக உருவாக்கி ஆலயம் ஒன்று அமைக்க முடிவு செய்தனர். எனவே 1927 ஜுன் மாதத்தின் முதல் நாள் ***கோபாலபுரம் இந்து சமயச் சங்கம்*** என்னும் பெயரில் சங்கங்களின் பதிவுச் சட்டப்படி பதிவு செய்ததுடன் அதே ஆண்டில் கோவில் கட்ட நிலம் வாங்கினர்.

இத்திருக்கோயில் மற்றையக் கோவில்களைப் போல் முழுக்க, முழுக்கச் சைவக் கோயிலாகவும் இல்லாமலும், வைணவக் கோயிலாகவும் அமையாமல் சைவ வைணவ இணக்கமுடைய சமய ஒருமைப்பாட்டுக் கோயிலாக விளங்குவது இதன் சிறப்பு.

இந்த இடத்தில் ஆலயம் அர்த்த மண்டபம், கருவறையுடன் கட்டப் பெற்று மே 1934 இல் நிறைவுற்று முதல் குடமுழுக்கும் நடைபெற்றது. இத்திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம் எப்படி அமைய வேண்டும் என ஆசி வழங்கித் திட்டமிட்டுக் கொடுத்தவர் காஞ்சித் திருமடத்தின் குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஆவார்.

பன்னிரண்டு ஆண்டுகள் அர்த்த மண்டபம், கருவறை மட்டுமே கொண்ட சிறிய கோவிலாய் விளங்கியது. 1948 இல் அர்த்த மண்டபத்தில் முன் மண்டபம் அமைக்கப் பெற்றதும், 1946 இல் ஆஞ்சநேய சுவாமிக்கும், 1948இல் நவக்கிரகங்களுக்கும் ஸ்தாபன பூஜைநடைபெற்றது.

இப்போது ஆலயத்தினுள் நுழைந்ததும் முன மணடபதத்ல வலது புறம் நவக்கிரகங்கள் அதை அடுத்து மேற்புறம் அன்னை காமாட்சி, லிங்க வடிவில் சிவபெருமான் அடுத்து ஆஞ்சநேயர் திரு உருவங்களைக் காணலாம்.

அர்த்த மண்டபத்தில் இடது புறம் உற்சவர் திரு உருவங்கள் உள்ளன. வலதுபுறம் விநாயகப் பெருமாள், அருள்மிகு வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் இராமபிரான் ஆகியோரைக் காணலாம்.

அர்த்த மண்டபத்தின் வெளியில் இருந்து பார்த்தாலே கருவறையில் உள்ள வேணுகோபால சுவாமியைத் தரிசிக்கலாம்.

கருவறையில் சதுர் புஜங்களுடன் வேணு கோபால சுவாமியின் எடுப்பான தோற்றம் நம்மை ஈர்க்கின்றது. கையில் புல்லங்குழலுடன் காணும் நமக்கு அந்த வேணுகோபாலனைத் தரிசிக்கையில் அப்பெருமானின் வேணுகானம் எதிரொலிப்பது போல் இருக்கும். கருவறை பளிச் சென்று தூய்மையாக விளங்குகின்றது.

கருவறையின் பின்புறத்தில் ஐயப்பனுக்கு ஆலயம் எழுப்பியுள்ளனர்.

1965இல் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1971இல் இராஜகோபுரம் எழுந்தது. 1972 டிசம்பர் பத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 1980ஆம் ஆண்டில் ஏகாம்பரேசுவரருக்கும் காமாட்சியம்மனுக்கும் குடமுழுக்கு விழா நடைபெற்றது. 1990இல் இரண்டாவது குடமுழுக்கு நடைபெற்றது.

இத்திருக்கோயிலின் இடம் வாங்கியதிலிருந்து கட்டடம் எழுப்பியது மட்டுமல்லாமல் தினசரி வழிபாடு, இசை நிகழ்ச்சிகளை வேள்விகள், திருவிழாக்கள் எல்லாம் பொது மக்களுடைய நன்கொடைகளினாலேயே நடைபெற்று வருகின்றன.

ஆண்டு தோறும் கிருஷ்ண ஜயந்தியின் போது சுதர்சன ஹோமம் நடைபெறுகிறது. விநாயகர் சதுர்த்தியின் போது கணபதி ஹோமம் நடைபெறுகிறது. இத்திருக்கோயில் லட்சார்ச்சனையும் நடைபெறுவதுண்டு. இராம நவமி, தமிழ்வருடப்பிறப்பு, நவராத்திரி, தீபாவளி, சிவராத்திரி ஆகியன சிறப்புடன் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு மாதமும் மாதம் இருமுறை பிரதோஷ விழாக்களை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். கிருஷ்ண ஜெயந்தியின் போது தினமும் அபிடேகமும், வெண்ணெய்க்காப்பும், மகா சுதர்சன ஹோமமும் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாலயம் வருபவர்கள் அனைவருக்கும் அர்ச்சனை செய்து தேங்காய், பழப்பிரசாதம் வழங்குகின்றனர். அர்ச்சனை முடிந்து பிரசாதம் பெறுகையில் அர்ச்சகரிடம் காணிக்கை செலுத்தலாம்.

தனுர் மாதம் எனப்படும் மார்கழியில் அதிகாலையில் ஐந்து மணியிலிருந்து ஆறரை மணிக்குள் தினமும் நடைபெறும் தனுர் மாத பூஜை தனிச் சிறப்பு வாய்ந்தது. ஆடவரும், மகளிரும் இருபுறமும் வரிசையாக அமர்ந்து நாராயணன் நாமாவளி கூற வேத விற்பன்னர் வேத தோஷங்கள் முழங்க அருமையான கண் கொள்ளாக்

காட்சியாகத் தீபாராதனை நடைபெறுகிறது. அப்போது கோவிலுக்கு வெளியே தெருவிலும் கூட இருபுறமும் ஒழுங்குடன் நின்று தரிசிக்கும் காட்சி மிகச் சிறப்பான காட்சி.

வைகுண்ட ஏகாதசி அன்று அரங்கநாதப் பெருமானை அலங்கரித்துச் சொர்க்க வாசல் திறப்பு நடைபெறுகிறது. ஆருத்ரா தரிசனத்தின் போது நடராசப் பெருமாள் திருச்சுற்றினுள் வலம் வருவார். கூடாரவல்லி நாள் எனப்படும் பாவையின் 27 ஆவது நாளன்றும், புத்தாண்டு அன்றும் சிறப்புடன் அலங்கரிக்கின்றனர். நிறை மணிக்காட்சி எனக் காய்கறிகள் பழங்களுடன் ஆலயம் அழகு படுத்தப் பெற்றிருக்கும். மகர ஜோதி நாளில் 1008 விளக்குத் திரு விழா நடைபெறுகிறது.

மார்கழி மாதம் காலையில் வழிபாடு முடிந்ததும் அன்பர்களுக்குத் தீர்த்தம், குங்குமம் உள்ளிட்ட பிரசாதங்கள் வரிசையாக ஒழுங்கு முறையுடன் வழங்கப்படும். காட்சி நேரில் காண வேண்டிய ஒன்று.

''கண்ணபுரம் செல்வீர் கவலையெல்லாம் மறப்பீர்'' என்பதற்குப் பதிலாகக் 'கோபாலபுரம் செல்வீர் கோபாலனைக் காண்பீர்' எனப் பாடலாம். அழகுக்கும் தூய்மைக்கும் எடுத்துக்காட்டான இத்திருக்கோவிலில் வழிபடுபவர்களுக்கு இரண்டு சிறப்புக்கள் கட்டாயம் நடைபெறுகின்றன.

வெளிநாடு செல்ல விசாக்கிடைக்காதவர்கள் இந்த வேணு கோபாலனை வேண்டினால் இக்கோபாலனின் அருள் வெள்ளத்தால் கிடைத்து விடுகிறது என்பது அனுபவ உண்மை. அதுபோலவே கூடாரவல்லி அன்று வந்து வேண்டிச் செல்பவர்களுக்கு, நீண்ட நாட்களாகத் தள்ளிப் போகும் மணவிழாவும் அந்தக் கண்ணபிரான் அருட்கடாட்சத்தால் அடுத்த ஆண்டிற்குள் நிறைவேறி விடுகிறது என்பது அநுபவ உண்மையாகும்.

கண்ணனுக்கு இந்த ஆண்டு தங்ககவசம் சாத்துகின்ற பேறு கிடைத்துள்ளது. அன்பர்களுக்கு வாரத்தில் இத்திருக்கோயிலில் பெண்டிருக்குச் சுலோகம் கற்கும் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

முப்பத்தொன்று

# 31 கண்ணன் கோவில் (பெங்களூர்)

## ஸ்ரீ ராதா கிருஷ்ணா சந்திரா ஆலயம்

**ந**வீன காலத்தில் எழுந்துள்ள கண்ணன் திருக்கோவில்களில் புகழ்பெற்று விளங்கும் ஆலயம் ஸ்ரீ ராதா கிருஷ்ணா சந்திரா ஆலயம் ஆகும். இது பெங்களூர் நகருக்குப் பெருமை சேர்ப்பனவற்றில் ஒன்றாகத் திகழ்கிறது. இராஜாஜி நகர்க் கார்ட் சாலையில் அமைதி நிலவும் சுற்றுப்புறச் சூழலில் அழகிய குன்றின்மீது அமைந்து பூங்கா நகருக்கு மேலும் அழகுக்கு அழகு கூட்டுகிறது.

இத்திருக்கோயில் ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் எழுந்துள்ளது. இத்திருக்கோயில் இந்தியச் சுற்றுலா மையங்களில் ஒன்றாக விளங்குகிறது. கர்நாடக அரசின் சுற்றுலாப் பேருந்துகள் மட்டுமல்லாது பிற மாநிலச் சுற்றுலாப் பேருந்துகளும் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்களை அழைத்து வருகின்றன.

இத்திருக்கோயிலை எண்ணியவுடன் நம் மனத்தில் தூய்மை எண்ணங்கள், சுற்றுப்புறத் தூய்மை நிழலாடுகின்றன. கோயிலில் எங்கும் தூய்மை.

கோயில் வாசலுக்கு வெகுதொலைவில் காலணிகளை நாம் கழற்றிவிட வேண்டும். கட்டணம் செலுத்தி டோக்கன் வாங்கி அதற்கென்று உள்ள பையில் போடவேண்டும். எண் வரிசைப்படிக் காலணிகளைத் தொங்கவிடுவதிலும் ஓர் ஒழுங்கு உள்ளது. காலணிகள் யார் கண்ணுக்கும் படுவதில்லை.அழுக்கு என்பதை எங்கும் காணவியலாது.

இத்திருக்கோயிலில் அதிகாலை நாலு மணிக்குத் தொடங்கி, மங்களாரத்தி, கீர்த்தனை, துளசி பூஜை, பிரகலாத நரசிம்மர் பூஜை, சீனிவாச கோவிந்தா சுப்ரபாத சேவை, சோடச நித்ய பூஜை, சிருங்கார தரிசனம் குரு பூஜை, தூ ஆரத்தி, சந்தியா ஆர்த்தி என்று இரவு 8.15 மணிவரை அடுக்கடுக்காக வழிபாடு நடக்கிறது.

அரே கிருஷ்ணா, அரே ராமா எனும் முழக்கம் அனைத்துத் திசைகளிலும் கேட்கிறது.

ஆலயத்திலுள்ள எல்லா இடங்களுக்கும் 'அரே கிருஷ்ணா' என்னும் பெயர் காணலாம். சமையலறையானாலும், குன்றானாலும் 'அரே கிருஷ்ணா' முன்னிலை வகிக்கும். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதும், தொலைபேசியில் அழைக்கும் போதும் அரே கிருஷ்ணாதான்.

நாள்தோறும் பத்தாயிரம் பேருக்குக் குறையாமல் ஆலய தரிசனம் செய்து 'அரே கிருஷ்ணா என்றே குறிப்பிடுகின்றனர்.

ஆலயம் வரும் அத்தனை பேருக்கும் கிருஷ்ண பிரசாதம் வழங்குகின்றனர். விசேட நாட்களில் திருவிழாக்காலங்களில் அறுசுவை உணவு அளிக்கின்றனர்.

குவளைபோல அழகான தொன்னையில் பிரசாதம் வழங்குகின்றனர். சாப்பிட்டு முடித்தவுடன் அவற்றைக் கொண்டு போய்ப் போடுவதற்குத் தொட்டி கட்டியிருக்கின்றனர். உடனுக்குடன் அவற்றை அகற்றி விடுகின்றனர்.


விழா நாட்களில் வாழையிலை போட்டு அறுவை சுவை உணவு அளிக்கின்றனர். தூய நெய், தூய காய்கறிகள், தூய எண்ணெயில் உணவு சமைக்கின்றனர். உண்டு முடிந்த இலையை நாம் கையோடு போடத் தொட்டிகள் பல கட்டி வைத்துள்ளனர். சாப்பிட்டு முடித்தவுடன் சிந்தியவற்றை விரைந்து துடைத்துவிடுகின்றனர். எனவே, இடம் தூய்மையாக விளங்குகிறது. ஒரே நேரத்தில் 30 ஆயிரம் பேருக்கு உணவு சமைக்கும் பிரம்மாண்டமான சமையற்கூடம் இருக்கிறது. அன்பர்கள் எடைக்கு எடை அரிசி, பருப்பு ஆலயத்தில் நடைபெறும் இத்திருப்பணிக்கு வழங்குகின்றனர். சாதாரண நாட்களில் சுமார் 10 ஆயிரம் பேர் பிரசாதம் பெறுகின்றனர். சனி, ஞாயிறுகளில் 25 பேருக்குப் பிரசாதம் வழங்கப் பெறுகின்றது.

நவராத்திரி, ஜன்மாஷ்டமி முதலான விழாக்காலங்களில் ஒரு லட்சம் பேர் பிரசாதம் பெறுகின்றனர்.

உணவு வழங்கும் மண்டபத்தில் ஒரே சமயத்தில் ஆயிரம் பேர் உட்கார்ந்து சாப்பிடலாம். இந்த ஆலயம் 'அரே கிருஷ்ணா' இயக்கத்தவர்களின் ஆலயம். இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர் கோபால் கவுரங்க தாசா. கடவுள் எல்லாருக்கும் தந்தையானவர். அவன் தன் பிள்ளைகள் பசித்திருக்கச் சகியான் என்று குறிப்பிடுகின்றனர்.

திருமண மண்டபம், சாமி வ்ாகனங்கள், பல்லக்குகள் இத்திருக்கோயிலில் நம் தமிழ்நாட்டுக் கும்பகோணம் கைவினைஞர் களின் கைவ்ண்ணத்தில் உருவாகியிருக்கின்றன.

பெங்களூர் சென்றால் கண்ணபெருமானின் இத்திருத்தலம் காணாத திரும்பினால் மனம் நிறைவு பெறாது.



முப்பத்தி யிரண்டு

# 32. பேளூர்

## சென்ன கேசவன்

கருநாடக மாநிலத்தில் புகழ்பெற்று விளங்கும் உடுப்பிக் கண்ணண் திருக்கோயிலைப் போல் கலைச்சிறப்பினால் உயர்ந்து விளங்கும் கண்ணன் திருக்கோயில் பேளூர் சென்ன கேசவர் திருக்கோயில். ஹொய்சாள மன்னர்களின் காலத்து எழுந்த உயரிய கலைக்கூடம். பக்தி அனுபவத்தில், கலை எழில் ஓங்கியிருப்பதில் உயர்ந்து விளங்குகிறது.

கருநாடகத்தின் வரலாற்றுடனும், பண்பாட்டுனும், பக்தி இயக்கத்தோடும், கலை உயர்வோடும் இரண்டறக் கலந்துள்ளது.

பேளூர் ஹசன் மாவட்டத்தில் உள்ளது. முடுகிரி வழியாகப் பேளூர் செல்லலாம். ஹசனுக்குப் புகை வண்டி செல்கிறது. ஒரு காலத்தில் வேலபுரி என இச்சிற்றூர் அழைக்கப்பெற்றது.

பேளூர் கருநாடகத்தின் மிக முதன்மையான சுற்றுலா மையமாகவும் விளங்குகிறது. கர்நாடக மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் போக்குவரத்துத் தொடர்பு உள்ளது.

பெங்களூரிலிருந்து பேளூர் நூற்றிருபத்திரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கசனிலிருந்து நாற்பது கிலோ மீட்டர். பேளூருக்குத் நாற்பது கிலோ மீட்டர். பேளூருக்குத் தொடர்ந்து பேருந்துகள் இருக்கின்றன.

தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் ஆகியன பேளூரில் இருந்தாலும், ஹசனில் சிறப்பான விடுதிகள் உள்ளதால், அங்குத் தங்கலாம்.

பகல் நேரத்தில் கருவறை மூடப்பட்டுள்ளது. சௌம்ய நாயகி, ரங்கநாயகி சந்நிதிகளும் திறந்திராது.

சிற்பக் கலையின் சிறப்பிடம் அனைவரும் காண வேண்டிய ஒன்று. அழகு யானைகள், குதிரைகள், சிம்மங்கள் வரிசை வரிசையாக எழிலுடன் விளங்குகின்றன. அணிகலன்கள், குறிப்பாகக் காதணிகள் தயாரிப்பவர்கள் இந்தச் சிற்பங்களிலிருந்து வடிவம் எடுக்கின்றனர். கொண்டை அமைப்புகள், கூந்தல் அலங்காரங்கள் குறிப்பிடத்தக்கன.

இத்திருக்கோயில் சக்தி இல்லையேல் சிவன் இல்லை என்னும் தத்துவத்தை எடுத்துக்காட்ட நங்கை போல நம் கேசவன் நிற்கக் காண்கிறோம்.

இத்திருக்கோவிலில் கல்லில் ஒரு சித்து விளையாட்டையே செய்திருக்கிறான். சிற்பி. இச்சிறபங்களின் நுட்பமான அழகுமிக்க வேலைப்பாடுகளை நாளெல்லாம் பார்த்துக் கொண்டு இருக்கலாம்.

இத்திருக்கோயிலை விஷ்ணுவர்த்தனன் என்னும் ஹொய்சாள மன்னர் கட்டினார். பஞ்ச நாராயண ஆலயங்களை அமைத்தவன் இந்த மன்னவன். அவற்றில் இதுவும் ஒன்று. இத்திருக்கோயிலுக்கு ஐந்து நிலை கொண்ட முதன்மைக் கோபுரம் உள்ளது.

திருக்கோயிலினுள் நுழைந்ததும் உயரமான கொடிக் கம்பம் எதிர் கொள்கிறது

அதை அடுத்துச் சந்நிதி நோக்கியவாறு கருட பகவான் சாந்த சொரூபியாக விளங்குகிறார். விரிந்த சிறகுகளும் கூப்பிய கரங்களுமாகத் தனித்த சிற்பமாகக் கருடனைக் கண்டதும் நம் விழிகள் விரிகின்றன. நெஞ்சில் முத்துப் பதிந்த ஆரம். சிரத்தில் பதக்கமும் முத்துக்களும் பதித்த கிரீடம். விரல்களில் வேலைப்பாட்டுடன் மோதிரங்கள் காணப் பெறுகின்றன.

சந்நிதியைச் சுற்றிலும் நட்சத்திர வடிவில் உயரமான மேடை. கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய மூன்று திக்குகளிலும் நுழைவாயில்கள் உள்ளன.

நட்சத்திர வடிவில் கருவறை மெருகேற்றப்பட்டுள்ளதுபோல் பளபளப்புடன் விதம் விதமான தூண்கள். மேற்கூரையின் உட்புறத்திலும் மனதைக் கவரும் சிற்பங்கள் உள்ளன. கருவறையில் உள்ளே கண்ணபிரானை நோக்குகிறோம்.

உயரமாகக் கம்பீரமாக எடுப்பான தோற்றத்துடன் நிற்கும் உருவம் கண்டு நம் உள்ளம் பூரிப்பு வெள்ளத்தில் மிதக்கிறது.

சரிகை பளபளக்கும் பட்டுப்புடவை, மூக்கில் மினுமினுக்கும் மூக்குத்தி. திருச்செவிகளில் அழகு கொஞ்சும் காதணிகள்.

எழிலில் சிறந்து விளங்கும் அத்திருவுருவம் சென்னைகேவன் இல்லை. பெண் உருவம் இருக்கிறது. ஆனால் சென்னக் கேசவியைப் பார்க்கிறோம். பெண் வடிவத்தில் கண்ணபிரான் தான் வீற்றிருக்கிறான். காரிகையாகத் தோற்றம் கொண்டு விளங்குகிறான்.

இவ்வாறு சென்ன கேசவன் பெண் வடிவில் தோற்றமளித்தது ஏன்?

தேவ, அசுரப்போரின் போது பாற்கடலைக் கடைந்த போது அமுதமும் வந்தது. அத்துடன் நஞ்சும் வந்தது. ஈசன் நஞ்சுண்டு நீலகண்டனான். அமுதத்தைத் தேவர்களுக்கு வழங்கிப் பரந்தாமன் அசுரர்களை ஏமாற்றினான். ஏமாற்றியது நங்கை வடிவமெடுத்து ஆம்! மோகினித் திருக்கோலம் கொண்டு. மோகினியின் பார்வை விருந்தில் சிக்கித் தவித்தனர். அதுபோலப் பஸ்மாசுரன் எரிந்து சாம்பலானான்.

வேலபுரியில் பசுமாசுரன் பொசுங்கிச் சாம்பலாக உதிர்ந்த தலத்தில் மோகினிக்கு ஒரு கோயில் எழுந்தது. 'அழகிய கேசவன்' எனப் பொருள்படும்படி அழைக்கப்பெற்றாலும் நாராயணன் கேசவன் - நங்கை வடிவில்தான் அலங்கரிக்கப்படுவதைக் காண்கிறோம்.

அழகின் உச்சமே மோகினியின் எழில் வடிவம் என்பதால் இத்திருக்கோயிலின் ஒவ்வொரு தூணும் அழகின் பீறடலாக அமைந்துள்ளது.

உயர்த்திய வலது திருக்கரத்தில் சங்கு இடது திருக்கரத்தில் சக்கரம். மற்றொரு வலது கரத்தில் தாமரை மலர். இடது திருக்கரத்தில் மண்ணில் பதித்த கதை. திருவடிகளில் மணிச் சதங்கைகள். இந்தக் கண்மன் - கண்ணம்மாளின் உயரம் ஒன்பதடி. திருவடிகளின் இருபுறமும் சிறுசிறு சிற்பங்களாக ஸ்ரீதேவி, பூதேவி.

சென்ன கேசவனுக்கு விஜயநாராயணா என்னும் பெயரும் உண்டு. சோழர்களை வெற்றி கொண்டதன் நினைவாக எழுப்பப்பட்டதால் சென்ன கேசவனுக்கு விஜய நாராயணன் கோயில் எழுப்பினர்.

மோகினி அலங்கார வடிவிளளான இக்கேசவனைச் சுற்றியுள்ள பிரவையில் தசாவதாரங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

சந்நிதியில் இருக்கும் ஒவ்வொரு தூணும் மற்றதிலிருந்து வேறுபட்டது.

இத்திருக்கோயில் ஹொய்சாள விஷ்ணுவர்த்தனன் காலத்தில் தொடங்கி மூன்று தலைமுறைச் சிற்பிகள் பணியாற்றி எழுப்பியுள்ளனர்.

இதை எழுப்பிய விஷ்ணுவர்த்தனின் மனைவியான அரசி சாந்தனாதேவி நடனத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றவள். இதை வெளிக்காட்டுவது போல் சந்நிதிக் கோயிலின் புரச்சுவரில் முப்பத்தெட்டு நடன நங்கைகளின் சிற்பங்கள் உள்ளன.

உள்ளே இன்னும் நான்கு நாட்டியச் சிற்பங்கள் உள்ளன. ஒவ்வொரு நாட்டிய முத்திரையும் குறிப்பிடத்தக்கன.

இங்குள்ள மூலவரின் திருப்பெயர் கேசவநாராயணன். கல்லாலான பீடத்தைச் சேர்த்துப் பதினைந்து அடி உயரமானவர். கருங்கல்லாலான அச்சிலையின் அழகு கொள்ளை அழகு.

அர்த்த மண்டப நுழைவாயிலிலும், கருவறை நுழை வாயிலிலும் சிற்ப வேலைப்பாடு நிறை சிறந்த கற்பலகைகள் உள்ளன. இருபுறமும் ஜெய, விஜயர் சிலைகள் நம்மைக் கவர்கின்றனர்.

நவரங்கம் எனும் மகாமண்டபம் பளிங்குச் சிற்பக்கூடம் ஆகும். கருங்கல்லை இழைத்து, இழைத்துக் கண்ணாடிபோலக் கல்லை மாற்றியிருக்கிறான் சிற்பி. கால் வழுக்கும் அளவிற்கு வழு வழுப்பு. நான்கு மூலைகளிலும் நடனப் பெண்டிர்.

நவரங்க மண்டபச் சித்திரத்தூண்கள் ஒவ்வொன்றும் ஒரு தனி அழகு. தனித்தனி அழகு. ஒன்றைப் போல் மற்றொன்று இராது. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாய்க் குடைந்து குடைந்து அழகைப் பளிச்சிடச் செய்துள்ளதை நேரில் கண்டாலே பயனளிக்கும்.

அங்குள்ள நரசிம்ம தூண் எனப்படும் தூண் மேலிருந்து அடிவரை சிற்ப நுணுக்க வேலைப்பாடுகளின் இருப்பிடம். அதன் சிற்பங்கள், தேவதைகள் உயிர் பெற்று ஆகமம் முழுவதும் அதில் அடங்க விளங்குகின்றன.

சென்ன கேசவர் ஆலயம் உயர்ந்த மேடையின் நடுவில் அமைந்துள்ளது. பரந்த திருச்சுற்றுக் கொண்டது. திருச்சுற்றில் சௌம்ய

நாயகித் தாயாருக்கும், ஆண்டாளுக்கும் தனித்தனிச் சன்னதிகள் உள்ளன. தென் புறத்தில் மற்றொரு கேசவர் சன்னதி உள்ளது. அச்சந்நிதி மண்டபத்தில் மகிசாசுர மர்த்தனி சிற்பம் அழகுடன் விளங்குகிறது.

தென் திருச்சுற்றில் வாகன மண்டபம், இராமபிரான் சந்நிதி உள்ளன. வடக்குத் திருச்சுற்றில் தாழ்வார மண்டபத்தில் பல மூர்த்தங்கள் சிதைந்த நிலையிலும் எழில் காட்டுகின்றன. வட கிழக்கில் திருக்குளம் உள்ளது. கோபுர வாயிலின் இடப்புறம் கிழக்குத் திருச்சுற்றில் உடையவர், தேசிகர், யோக நரசிம்மர், வேணுகோபாலன் ஆஞ்சநேயர் சந்நிதிகள் உள்ளன.

அதிசயத் தூண் ஒன்று இந்த ஆலய அமைப்பு நுணுக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. நாற்பது அடி உயரத்தில் ஒரு கற்கம்பம் பீடம் ஒன்றின்மேல் அமைக்கப்பெற்றுள்ளது. அடியில் குனிந்து பார்த்தால் கற்கம்பத்திற்கும், பீடத்திற்கும் இடையில் இடைவெளி உள்ளது. ஒரு பக்கமிருந்து பார்த்தால் மறுபக்கம் தெரிகிறது. பீடத்தோடு கம்பம் நிற்கிறது. ஒரு தாளை மடித்து நான்கு மூலைகளிலும் சொருகி வெளியே இழுக்கலாம். கம்பம் பீடத்தோடு ஒட்டாமல் எப்படி நிற்கிறது என்பது புரியாத புதிராய் உள்ளது.

கோயிலைச் சுற்றி வெளியில் பாகவத, இராமாயணக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இக்கோயிலின் முன் மண்டபத்தில் இடப்புறத் திண்ணையில் ஒரு கண்ணாடி அலமாரியில் ஷிமோகாவிற்கு அருகிலுள்ள பசவபட்டணர், சஸ்லே ஹள்ளிஎனும் ஊர் செருப்புத் தைப்பவர்கள் நாலடி நீளத்தில் இரண்டடி உயரத்தில் கேசவனுக்குச் செருப்புத் தைத்துக் காணிக்கையாகக் கொண்டு வந்து வைத்துள்ளனர்.

## *இச்செருப்பை எப்போது மாற்றுவார்கள்?*

பெருமாள் கனவில் வந்து ''என் செருப்புத் தேய்ந்து விட்டது. வேறு செருப்புத் தைத்துக் கொடுங்கள் என்று கேட்பாராம். அவர்கள் கிராமத்தில் ஒரு பொது இடத்தில் குங்குமத்தைப் பரப்புவார்களாம். அதில் பெருமாளின் பாதங்கள் பதியும் எனவும் அப்பாதம் எந்த அளவிற்கு இருக்கிறதோ அந்த அளவிற்குச் செருப்புத் தைத்துக் கொண்டு வந்து கோவிலில் வைப்பார்களாம். இவ்வாறு அறுபது

எழுபது ஆண்டுகளுக்கு முன் வைக்கப்பட்ட செருப்புகள் இன்றும் உள்ளன.

இச்செருப்புக்களைப் பெருமாள் அணிகிறாரா? பாபாபாபுதான் மலைக்கருகில் உள்ள லட்சுமி தேவியைக் காண இச்செருப்புகளை அணிந்து செல்கிறார். என்பது நம்பிக்கை.

இக் கோயிலில் சித்திரை மாதம் நடைபெறும். தேர்த்திருவிழாதான் பெரிய திருவிழா.

இந்த ரத விழாவில் மோகினியாக அலங்கரித்து மயக்கும் நடன அசைவுகளுடன் மோகன வண்ணன் ரத உலா வருவான். ரதம் பயணம் செய்து நிற்கும். இப்போதும் அங்கே பூமியைத் தோண்டினால் பஸ்மாசுரனின் சாம்பலின் அடையாளமாக வெண்மணல் வெளிப்படுகிறது என்று ஊரார் குறிப்பிடுகின்றனர்.

இக்கோயிலில் சென்ன கேசவன் சந்நிதிக்குத் தென்புறத்தில் அன்னை சௌம்ய நாயகியாகவும் எழுந்தருளியிருக்கிறாள். சௌம்யம் என்றால் சாந்தம். அழகு ஆகிய பொருளுண்டு. சாந்த சொரூபினியாக ஆடம்பரங்கள் அற்றவளாக அழகு மிளிர நிற்கிறாள் சௌம்ய நாயகி. ஆடம்பரம் இல்லாத பட்டுப் புடவை அளவான அணிகலன்கள் நான்கு திருக்கரங்கள். மேலே உள்ள இரு கரங்கள் பூத்த மலர்களை ஏந்தியிருக்கின்றன. கீழேயுள்ள திருக்கரங்களில் இடம் கரம் அன்னையின் திருவடிகளைக் காட்டுகிறது. அங்கே அடைகலமாகிறவர்களுக்கு அருள் மழை பொழியும் அபய ஹஸ்தமாக வலது கரம் விரிந்து ஆசீர்வதிக்கிறது.

சென்னை கேசவன் சந்நிதிக்கு வலதுபுறம் ரங்கநாயகி சந்நிதி உள்ளது. இவரை ஆண்டாள் எனவும் அழைக்கின்றன.

இத்திருக்கோயிலில் சென்ன கேவனின் கருவறை மீதோ, ரங்கநாயகி கருவறை மீதோ விமானம் ஏதும் கிடையாது. ஆனால் சௌம்ய நாயகியின் கருவறை மீது விமானம் அமைந்துள்ளது. ஹொய்சாள ராணி சாந்தனாதேவி இத்திருக்கோயிலை அமைத்துள்ளாள்.


ரங்கநாயகியின் கருவறையைச் சுற்றித் திறந்த வெளித் திருச்சுற்றில் நடந்தால் வடகிழக்கு மூலையில் திருக்குளம் ஒன்று கோயில் வளாகத்திலுள்ளே அமைந்துள்ளது. இத்திருக்குளத்திற்கு வாசுதேவ

புஷ்கரணி என்று பெயர். இத்திருக்குளம் குவிந்து இறங்கும் ஒரு மாபெரும் கிண்ணம் போல் அமைக்கப் பெற்றுள்ளது.

ஆழமான உறுதியான அடித்தளம் அமைந்த கோயில் இது. பூமிக்குள் போகப் போக நீரோட்டம் பெருகும் ஆழத்தில் கசியும் நீரெல்லாம் இந்தக் குளத்தில் சேர்ந்து விடுவதால் கோயிலின் அடித்தளத்திற்கு ஆபத்து இல்லாத வகையில் அமைக்கப் பெற்றிருப்பது இதன் சிறப்பு.

பேளூரில் பசுமாசுரன் எரிந்து சாம்பலானதால் இங்கே சூட்சம வடிவத்தில் நெருப்பு இருக்கிறது என்று கூறுகின்றனர்.

அதனால் இத்திருக்கோயிலில் திருமணங்கள் நடைபெறுகையில் புதிதாக ஹோமம் எதுவும் செய்வதில்லை. இந்த அக்கினியே சாட்சியாக அத்திருமணத்திற்கு விளங்குவதால் ஹோம அக்கினி கிடையாது.



# முப்பத்து மூன்று

# 33. பண்டரிபுரம்

*பாண்டுரங்கன் எனும் விட்டோபா*
*பண்டரிபுரமே வைகுண்டம்*
*அரி பாண்டுரங்கனே*
*பரப்பிரம்மம்*

என்று பஜனை கோஷ்டியினர் பாடிச் செல்வது பரந்தாமன் கண்ணபிரானை பாண்டுரங்கனும் அவன்தான். விட்டோபாவும் அவன்தான் விட்டலநாதனும் அவன்தான். விட் என்றால் செங்கல் என்று பொருள்.

இவ்வாறான பெயர்களில் கண்ணனை விளித்துப் பக்தி ரசம் பரவச் செய்தவர்கள் நாம தேவர், புரந்ததாசர் என்று பலராவர்.

மராட்டிய மாநிலத்தில் கண்ணன் குடி கொண்ட திருக்கோயில் பண்டரி புரத்தில் உள்ள விட்டலர் திருக்கோயில்.

கண்ணனின் நாம சங்கீர்த்தனம் என்றும் இடைவிடாது எதிரொலிக்கும் மண் அது.

பண்டரிபுரத்திற்குச் செல்லச் சென்னையிலிருந்து மும்பை செல்லும் புகை வண்டியில் ஏறிச் சோலாப்பூர் செல்ல வேண்டும். அங்கிருந்து தேசிய நெடுஞ்சாலையில் அறுபது கிலோ மீட்டர் பயணம் செய்தால் பண்டரிபுரம் அடையலாம். இரண்டுமணி நேரம் பேருந்துப் பயணம்.

இத்திருத்தலம் செல்லும் முன் பீமா நதியைக் கடக்க வேண்டும். அவ்வாறு கடக்கும்போதே பண்டரிபுரத்தின் எழில் காணலாம்.

பீமா நதி பிறை வடிவில் ஊரை வளைத்துக் கொண்டு செல்வதால் சந்திர பாகாநதி எனப் பெயர் பெற்றுள்ளது. நதிப்பாலத்தைக் கடந்து

ஊருக்குள் பேருந்து வந்து நிற்பதற்குள் பாண்டுரங்கனின் திருநாம பஜனைப் பாடல்கள் நம் காதுகளில் ஒலிக்கக் காண்கிறோம்.

பேருந்து நிலையத்தை விட்டு வெளியே வரும்போது ஆரஞ்சு வண்ணத்தில் அமர்ந்துள்ள ஆளுயரக் கணபதியைத் தரிசிக்கலாம்.

இவ்வூருக்குச் செல்ல மற்றொரு வழியும் உள்ளது. சென்னை மும்பை இரயிலில் சூர்துவாடி சந்திப்பை அடையவேண்டும். பின் சிறங் குறுகிய இரயில் பாதைப் பயணம் (நேரோகேஜ்) செய்து அடையலாம்.

இத்திருக்கோயிலில் கண்ணபிரான் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் செங்கல்லின் மீது நின்று விட்டோபா எனும் பெயரில் காட்சி தருகிறார் இரண்டு திருக்கரங்களை இடுப்பில் வைத்துக் கொண்டுள்ளான் பாகவதர்களுடன் பஜனை செய்யும் பாவனை போல் தோன்றுகிறது. ருக்மிணியும் அதே நாட்டிய பாவத்தில் ஆனால் கண்ணனுடன் அல்ல. இறைவியின் திருநாமம் ருக்மாபாய்

பண்டரிபுரம் பாண்டுரங்கனைப் பாடித் துதிப்போர்

*புண்டரீக நிஜபக்த காரண*
*புவனர் கோடி பவபய கரண*

என்று பாடுவர்.

புண்டலீகன் என்னும் பக்தன் தான் கண்ணனைச் செங்கல் மீது நிறக வைத்த கண்ண பக்தன். 'புண்டலிக்' என வடமொழியில் அழைக்கின்றனர் பாண்டுரங்கனைப் பண்டரி நாதனைச் செங்கல் மீது நிற்க வைத்தது ஏன்?

துவாரகையில் ஆட்சி செலுத்திய பரந்தாமனுக்கும், ருக்மிணி தேவிக்கும் ஒரு பால் பிணக்கு ஏற்பட்டது. ருக்மிணி தேவி பரந்தாமனைப் பிரிந்து பீமா நதிக்கரை வந்து சேர்ந்தாள். புண்டலீகன் என்னும் பக்தனின் குடிலுக்கு அருகில் அமர்ந்து தவமியற்றினாள். கண்ணன் அங்கு வந்தான். ருக்மிணியை அழைத்துக் கொண்டு புண்டலீகனின் குடிசைக்கு இருவரும், பரம்பொருளும், தாயாரும் சென்றனர். எவருக்கும் எளிதில் கிட்டாத அரிய பேறு ஆனால், புண்டலிகன் வந்தவர்களை அருகில் இருந்த செங்கல்லின் மீது ஏற்றி நிற்கச் சொல்லிவிட்டு, ''நான் என் பெற்றோருக்குப் பணிவிடைகள், கடமைகள் ஆற்றிக் கொண்டு இருக்கிறேன். அதனை முடித்து உம்மிடம் பேசுகிறேன்'' என்று சொல்லி விட்டான் அவன்

கட்டளைக்குப் பணிந்து பரந்தாமன் இன்றும் செங்கல்லின் மீது நின்று அருள் பாலிக்கிறான். என்பதால் விட்டோபா எனும் திருநாமம் பெற்றுள்ளான்.

பாண்டுரங்கனின் ஆலயத்திற்குப் பதினோரு வாயில்கள். பாண்டுரங்கனை வணங்கி அருள்பெறச் சந்திரபாகா நதியில் நீராடி மகாதுவாரம் எனும் முதன்மை வாயில் வழியே ஆலயத்துள் செல்ல வேண்டும்.

அக்கோயிலுக்குச் செல்லும் படியில் 'நாமதே ஸ்ரீ மகாராஜ் பாயாரி' எனும் நாமதேவரின் கழுத்து வரையிலான சிலை உள்ளது அந்தப் படியில் பக்தர்கள் கால் பதிக்காமல் கடந்து உள்ளே போக வேண்டும். ஏனெனில் அதில் நாமதேவரின் உடல் அடங்கியுள்ளதாம். நாமதேவருக்கு ஒரு விருப்பம். பக்தர்களின் பாததூளி பட வேண்டும் என்பது நாம தேவரின் விருப்பமாம். நாமதேவர் படியை மிதிக்காமல் மலர்தூவி வழிபட்டு உள்ளே செல்கின்றனர்.

எதிரே உள்ள சொக்கமேள மகாராஜ் என்பவரையும் வழிபட்டு ஆலயத்துக்குள் செல்ல வேண்டும். ஆலயத்திற்கு வெளியே நாம தேவர், தியானேசுவரர், துக்காராம் ஆகியோருக்குக் கோவில்கள் உள்ளன. இவர்கள் அனைவரும் பாண்டுரங்கனைப் பணிந்து போற்றிப்பாடித் துதித்தவர்கள்.

இந்தத் திருக்கோயிலில் எந்த இந்துவும் சாதி, இன வேறுபாடு இல்லாமல், கருவறையில் நுழைந்து கண்ணனின் திருப்பாதங்களில் தலையை வைத்து வணங்கலாம்.

இந்த ஆலயத்தில் உள்ள அறிவிப்பு ஒன்று இவ்வாறு அறிவிக்கிறது.

''பகவானை வழிப்படுவதற்கு மட்டுமே

இங்கு வாருங்கள்''

பகவானின் பாதங்களைத் தொட்டு வணங்கும் இவ்வழிப்பாட்டிற்குப் பாத ஸ்பரிச தரிசனம் என்பது பெயர்.

இத்திருக்கோயிலின் நடை இரவு ஒரு மணிக்குச் சாத்தப்படுகிறது அதன்பின் மீண்டும் அதிகாலை நாலரை மணிக்கு நிர்மால்ய தரிசனம் பொது மக்கள் வழிபாட்டிற்கு அவ்வப்போது ஒழுங்கு செய்கின்றனர் ஆறுமுறை வழிபடலாம்.

மகா பூஜை எனும் சிறப்பு வழிபாட்டிற்கு மட்டும் எல்லோரையும் அனுமதிப்பதில்லை. அது ஒரு சிறப்புத் தரிசனம். கட்டணம் செலுத்தி முன் ஏற்பாடு செய்து சென்று வழிபடலாம்.

கருடபகவான், தாத்தாத்ரேயர், கணபதி, சௌரங்கிதேவி, இராமேசுவரலிங்கம், காலனபரவர், காசி விசுவநாதர், சத்யபாமா, ராதிகா என்று ஒவ்வொருவருக்கும் தனிச் சந்நிதிகள் சனீசுவரருக்குச் சனிசங்கர் என ஆலயம் உள்ளது.

ருக்மிணி தேவி சந்நிதி பாண்டுரங்கன் ஆலயத்தினுள் அமைந்துள்ளது. இவருக்குத்தான் இங்குக் குங்கும அர்ச்சனை. ஆதிருக்மிணி தேவி கண்ணனிடம் கோபித்துக் கொண்டு திண்டர்வன் எனும் காட்டில் திண்டர்வன் எனும் அரக்கனை அழித்துக் கோயில் கொண்டுள்ளார் என்பர்.

சந்திரபாகா நதியில் நீராடி நாம தேவரை வழிபட்டு, அங்குள்ள கறுப்பு நிறத்துளை எடுத்துப் பிரசாதமாக அணிந்து கொண்டுதான் புண்டலீகனை வழிபடவேண்டும்.

கண்ணனைச் செங்கல் மீது நிற்க வைத்த புண்டலீகள் ஆலயம் சந்திரபாகா நதிக்கரையில் உள்ளது.

விட்டலனின் கோயிலுக்குள் 26 சிறிய கோயில்கள் உள்ளன.

ஆற்றங்கரையில் பாண்டுரங்கன் ஆலயத்தில் ஆமை வடிவச்சிற்பம் உள்ளது.

இங்குள்ள தீர்த்தங்கள் சந்திர பாகாநதி, கிருஷ்ண தீர்த்தம் ஆகும். நதியின் தென்கரையில் பாண்டுரங்க பக்தை சக்குபாய் கோவில் உள்ளது. படகில் செல்ல வேண்டும் சக்குபாய் மாவு அரைத்த இயந்திரம் உள்ளது. பண்டரிபுரத்தில் லட்டு பிரசாதம். புதன்கிழமை விட்டலனுக்கு உகந்த நாளாகும்.

